# தாய்வீடு

226

ISSN 2369-3657

THAIVEEDU | JANUARY | 2026

தாய்வீடு | ஜனவரி | 2026



மலையக மண்ணுடன் இரண்டறக் கலந்த
மலையக மக்களின் இருப்பும் அடையாளமும்
- வி. தேவராஜ்

மிரட்டல்களுக்கு உள்ளாகும் வெனிசுவெலா
- சிவா முருகுப்பிள்ளை

சுதந்திர இலங்கையின் முதலாவது சங்காரம்!
குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான
கொடக்கன் பிள்ளையின் வழக்கு!
- என். சரவணன்

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

## கார்மேகத்தினூடே ஓர் ஒளிக்கீற்று!

டித்வா சூறாவளி ஏற்படுத்திய அனர்த்தம் இலங்கையைத் திக்குமுக்காடச் செய்துள்ளது. 2004-ஆம் ஆண்டின் ஆழிப்பேரலையின் பின்னர் இலங்கை முகங்கொடுத்த பேரனர்த்தம் இதுவே. ஆழிப்பேரலையோ நாட்டின் கரையோரங்களையே தாக்கியது. ஆனால், டித்வா, நாட்டின் இருபத்தைந்து மாவட்டங்களிலும் சேதம் விளைவித்துள்ளது.

டித்வா சூறாவளியானது மாகாணம், மாவட்டம், பிரதேசம் என வேறுபாடு காட்டாது அழிவை விதைத்துச் சென்றுள்ள நிலையில், அந்த அழிவிலிருந்து மீள்வதற்கான உதவிப்பணிகளிலும் வேறுபாடுகள் இருக்கக் கூடாது. இதுபோன்ற இயற்கை அனர்த்தங்கள், பல்லினங்கள் வாழுகின்ற இலங்கை போன்ற நாடுகளிலே அனைத்துத் தரப்பு மக்களினதும் நோக்கங்களையும் முனைப்புகளையும் ஒரு புள்ளியில் இணைத்து, அவர்களுக்கிடையேயான பகைமைகளையும் முரண்பாடுகளையும் தற்காலிகமாகவேனும் களைந்து, நாட்டின் நலனை முன்னிறுத்தும் ஓர் ஒற்றுமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பங்களாக அமையலாம்.

ஆழிப்பேரலை இத்தகையதொரு சந்தர்ப்பத்தை இந்தோனேசியாவுக்கு வழங்கியது. அந்தச் சந்தர்ப்பத்தை, இந்தோனேசியா சரியாகப் பயன்படுத்தி, ஆச்சே மாநிலத்துடனான உள்நாட்டுப்போரில் விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு சமாதானத்தை எட்டியது. இன்று ஆச்சே மாநிலம் சிறப்புத் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட மாநிலமாக - அமைதியான இந்தோனேசியாவின் ஓர் அங்கமாக - முன்னேறிவருகிறது.

இதே ஆழிப்பேரலை, இதே சந்தர்ப்பத்தை இலங்கைக்கும் வழங்கியது. ஆனால் இலங்கையின் இனவாத அரசோ, அமைதிக்கான வாய்ப்பைத் தவறவிட்டு, ஆக்கிரமிப்புப் போரை முடுக்கிவிடுவதிலேயே குறியாக இருந்தது. அதன் பலன், இந்தோனேசியா இருபது ஆண்டுகால அமைதியை அனுபவிக்க, இலங்கை வரலாறு காணாத மானுட அவலத்தை அரங்கேற்றியது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் நோக்கும்போது, 'மீண்டும் ஒரு முறை டித்வா சூறாவளி வழங்கியுள்ள ஒன்றிணைவுக்கான வாய்ப்பை, இலங்கை சரியாகப் பயன்படுத்துமா?' என்ற ஐயம் எழுவதைக் குறைகூறமுடியாது.

ஆனால், சூறாவளிக்குப் பின்னான ஒரு மாதம் வரையிலான களநிலவரங்களை நோக்கும்போது சொற்பமேனும் நம்பிக்கை கொள்ளக்கூடிய சமிக்ஞைகளே புலப்படுகின்றன. அரசால் வழங்கப்படும் உதவிகள், கடந்த காலங்களைப் போலல்லாது, பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களையும் பாரபட்சமற்ற முறையிலே, நியாயமான அளவிலே சென்றடைவதாகவே அறியமுடிகிறது. தாய்வீடு இதழுக்கு இலங்கையிலிருந்து பங்களிக்கும் செயற்பாட்டாளர்களிடமும், தாய்வீடு பங்களிப்புச் செய்யும் இலங்கையின் உதவி அமைப்புகளிடமும் கேட்டறிந்த வரையிலே, உதவி வழங்கல்கள் பற்றி மக்களிடம் தீவிரமான விமர்சனங்கள் பெரும்பாலும் இல்லை என்பதை உணரமுடிகிறது. இதற்கு அர்த்தம் குறைகள் இல்லை என்பதல்ல; இனங்களுக்கிடையேயான பாரபட்சம் வெளிப்படையாக இல்லை என்பதே.

புலம்பெயர் தமிழ் மக்களால் திரட்டப்பட்டு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட உதவிகளின் வழங்கலிலும் இந்தப் பாரபட்சமின்மையைக் காணமுடிகிறது. மோசமான பாதிப்புகளுக்குள்ளான பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்டு, அப்பிரதேசங்களிலே மிகவும் வறுமைநிலையில் உள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, உதவிகள் அவர்களைச் சென்றடையும் வகையிலான பொறிமுறைகளை புலம்பெயர் மக்களிடமிருந்து பெறப்படும் உதவிகளைப் பகிர்ந்தளிப்பதற்குப் பொறுப்பானவர்கள் ஏற்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. இந்த வகையிலே புலம்பெயர் தமிழர்களின் உதவி தென்னிலங்கை மக்களையும் சென்றடைகிறது.

ஆழிப்பேரலை அழிவின்பின் உலகநாடுகள் இலங்கைக்கு உதவி வழங்க முன்வந்தபோது, 'இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட அந்த உதவிகளெவையும் தமிழ்ப் பகுதிகளைச் சென்றடையாது,' என்ற நியாயமான அங்கலாய்ப்பு தமிழ் மக்களிடையே எழுந்தது. அதன் பிரதிபலிப்பாக, புலம்பெயர் தமிழர்கள் தாம் வாழ்ந்த நாடுகளின் அரசுகளிடம், உதவிகளை இலங்கை அரசினூடாக வழங்கக்கூடாது எனக் கோரிக்கை வைத்தார்கள். அந்த நிலைமையை இப்போது பெரும்பாலும் பார்க்கமுடியவில்லை.

மேற்கூறியவையெல்லாம் அறிவியலை ஆதாரமாகக்கொண்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையிலானவை அல்ல. ஆங்காங்கே கேள்விப்பட்ட தகவல்களின் அடிப்படையிலான கருத்து மட்டுமே. இருந்தபோதும், அமிழ்த்தும் வெள்ளத்திலே மிதக்கும் ஒரு சிறு கட்டையை நம்பிக்கையுடன் பற்ற முனைவதுதானே மனித இயல்பு.

இதேவேளை, இனங்களுக்கிடையிலான இந்த நல்லெண்ணமும் நட்புறவும் நொடிப்பொழுதில் நாசமாகும் வகையிலே மீண்டும் பேரினவாதப் பேய்களின் கைகள் மேலோங்கலாம் என்ற அச்சமும் தவிர்க்கமுடியாதது. ஏனெனில், அதுவே சுதந்திர இலங்கையின் வரலாறு. பௌத்த-சிங்களவர் அல்லாத இலங்கை மக்களிடையே நிலவும் இந்த அச்சத்தைப் போக்குவதற்கான பெருவாய்ப்பு இலங்கையின் தற்போதைய அரசுக்கு டித்வா அனர்த்தத்தின் மூலம் கிட்டியிருக்கிறது.

'அரசு இந்த வாய்ப்பைத் தக்கவைக்குமா?' என்பதே இப்போதுள்ள கேள்வி.

# இம்மாதத் தாய்வீட்டில்...


கார்மேகத்தினூடே ஓர் ஒளிக்கீற்று! 3

மலையக மண்ணுடன் இரண்டறக் கலந்த
மலையக மக்களின் இருப்பும் அடையாளமும் 5
- வி. தேவராஜ்

டிட்வா பேரழிவும்
மலையகத்தின் மீள்கட்டுமானமும் 11
- அருள்கார்க்கி

மலையகத் தமிழர்களை வடக்கு நோக்கி
இழுத்தல் – தள்ளுதல்: ஏன்? எதற்கு? 15
- மல்லியப்புசந்தி திலகர்

பேரிடரின் மீதான பேரிடர்:
இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல் 17
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இயற்கை அனர்த்தமும்
பலாலி விமான நிலையமும் 29
- வே. விவேகானந்தன்

இலங்கை சமசமாசக் கட்சிக்கு 90 வயது
அரசியல் யாப்பு வரைவதில் சமசமாசக் கட்சி வகித்த பங்கு 32
- ஜயம்பதி விக்கிரமரத்தினா
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளையின
மேலாதிக்கமும் மானுட விரோதமும் 36
- ரூபன் சிவராஜா

மிரட்டல்களுக்கு உள்ளாகும் வெனிசுவெலா 42
- சிவா முருகுப்பிள்ளை

இந்திய தேசத்தில்
தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் 48
- நெல்லை ஜெயசிங்

இனம், அடையாளம், அதிகாரம் 52
- ரதன்

நீங்கள் மகிழ்ச்சியில் திளைத்திருக்கச்
சில வழிகள்... 58
- சுப்ரமணியம் ஜெயசீலன்

மனந்திறந்து பேச உதவும் ஒருவரே
நட்புசார் உதவியாளர்... 62
- சகாதேவன் சஜீபன்

புதிய கல்விச் சீர்திருத்தமும்
இலங்கையின் எதிர்காலமும் 64
- அகமட் பிஸ்தாமி

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே
அவமதிப்பு இல்லாத கோபம் 67
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தம் 2025 74
- த. சிவபாலு

ஆறு கட்டளைகள் 78
- குமார் புனிதவேல்

தெருவழிப் புதினங்கள் 80
- பஞ்சகல்யாணி

பனிக்கால வாகனப் பராமரிப்பு 82
- செந்தூரன் புனிதவேல்

உலகின் நாகரிக நகரம் மிலன் 84
- குரு அரவிந்தன்

வணிகத்தின் நிழலில்
திசைமாறும் இசையின் உலகம் 87
- அர்ச்சனா கஜவரன்

ஸ்ரீனிவாசன் என்ற கலைஞன் 90
- ஓவியர் ஜீவா

சியாமளா யோகேஸ்வரனின்
விடியல் சிறுகதைத் தொகுப்பு 93
- மாதவி உமாசுதசர்மா

மனித வாழ்வின் நம்பிக்கை சார்ந்த
வழமைகளின் கவிதைகள் 94
- ம. கருணாநிதி

‘அன்பின் வழியது உயிர்நிலை’
கதைத்தொகுப்பு – ஒரு பார்வை 98
- மைதிலி தயாநிதி

குழந்தை ம. சண்முகலிங்கத்தின்
இடுக்கண் வருங்கால்... 101
- யசோதரா சாந்தகுமார்

மொழியியலாளர் பேராசிரியர் சு. இராசாராம் அவர்களின்
‘நோம் சோம்ஸ்கி’ எனும் நூல் 104
- கந்தையா சண்முகலிங்கம்

ஊர்திரும்பல் – சிறுகதைத் தொகுதி
சமூக உளவியல் பார்வை 107
- சுல்பிகா இஸ்மாயில்

‘சாகித்ய ரத்னா’ தெளிவத்தை ஜோசப்:
மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் 112
- ஆரோக்கியம் பிரான்ஸிஸ்

‘முதல் மூவர்’ நூல் வெளியீட்டரங்கம் 114

சொல்லின் செல்வர் செல்லையா இராசதுரை
சர்ச்சைகளின் நிழலும் வரலாற்றின் நிஜமும் 116
- பிரசாத் சொக்கலிங்கம்

கலா: வலிகளற்ற உலகில்
அமைதியாகத் தூங்குங்கள்! 118
- மு. நித்தியானந்தன்

பேரறிஞர் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸின்
சமூகவியலும் தற்கால இயங்குநிலையும் 121
- இக்பால் அலி

எட்டுத் திக்கிலிருந்து ஏழு கதைகள் 125
- சு. வேணுகோபால்

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் 129
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

தமிழர் வணிகம் 132
- நடராசா சிறிரஞ்சன்

தமிழுக்கு அமுதென்று பெயர் 134
- சந்திரகௌரி சிவபாலன்

மின்சார நிழல் – Electric Shadow என்ற சொல்லே
ஒரு புதிய பின்நவீனச் சின்னமாகக் கருதப்படலாம் 138
- ஏ. நஸ்புள்ளாஹ்

சோழர்களின் கடல் ஆட்சி –
வரலாற்றின் சிறப்புப் பக்கம் 142
- ஜெயஸ்ரீ சதானந்தன்

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த
கலையாக காமன் கூத்து 146
- அருணாசலம் லெட்சுமணன்

வரலாற்றில் ‘ஊடல்’
திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 152
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

இனப்படுகொலையின் அரசியல்
பெயரிடப்படாத குற்றத்துக்குப் பெயரிடுதல்:
இலங்கையும் இனப்படுகொலையும் 155
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1948 சுதந்திர இலங்கையின் முதலாவது சங்காரம்!
குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான
கொடக்கன் பிள்ளையின் வழக்கு! 164
- என். சரவணன்

பாரதி வகித்த பாத்திரம் 172
- கிருங்கை சேதுபதி

ஈழத்துப் பெண்ணிலைவாதக்
கவிதைகளில் உவமை 177
- சி. ரமேஷ்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – 16 180
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கம்பனின் கருவூலம் திறந்து... 183
பகுதி 45
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை!
பெண் துயரப் பெருங்கதை – 11 188
- மா. சித்திவினாயகம்

கடைசி மனிதன்! 191
- கிறிஸ்டி நல்லரெத்தினம்

சாபமோட்சம் 192
- தேவகாந்தன்

பிப்போ 196
- மிருணாள் பாண்டே
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# மலையக மண்ணுடன் இரண்டறக் கலந்த மக்களின் இருப்பும் அடையாளமும்

வி. தேவராஜ்

### பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களை வேருடன் பிடுங்கி நடுவது சாத்தியமா?

டித்வா புயலின் அகோரத்தில் இருந்து இலங்கையும் மக்களும் மீள முடியாது தவித்துக்கொண்டிருக்கின்றனர். இலங்கையின் 20 வீதமான நிலத்தை மாத்திரமல்ல டித்வா புயல் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்துச் சென்றுள்ளது. இந்த அழிவுகளில் இருந்து இலங்கையும் மக்களும் மீண்டெழ எத்தனை காலம் எடுக்கும் என்பதை காலமும் அரசின் குறிப்பாக ஜனாதிபதி அநுராகுமார திசாநாயக்க அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளிலுமே தங்கியுள்ளது. இதற்கும் அப்பால் உயிரிழப்பு, சொத்தழிப்புகளுடன் இந்த மக்களின் வாழ்வாதாராம், மீள் கட்டமைப்பு, உளவியல் தாக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் நடைப் பிணங்களாக மலையக மக்கள் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட சிங்களக் கிராமங்களையும் அந்த மக்களையும் நோக்கி விரைந்து கொண்டிருக்கும் அரசும், அரச கட்டமைப்பும் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் நோக்கி முழுமையாக சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையும் மக்களும் அனர்த்தங்களில் இருந்து மீண்டெழ வழி தெரியாது தவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், மலையக மக்களின் இருப்பைக் கேள்வியுள்ளாக்கும் வகையிலான கருத்தாடல்கள் பெரும் பேசு பொருளாக பொது வெளியில் பேசப்படுகின்றது. இது, டித்வா புயலின் அழிவுகளைவிட மிக மோசமான அழிவையும் மலையக மக்களின் இருப்பையும் கேள்விக்குள்ளாக்கும்.

### வடக்குக் கிழக்கு உறவுகளுக்கு நன்றி:

மலையக மக்களை வடக்குக் கிழக்கில் குடியேற அழைக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் மலையக மக்கள் இரு கரம் கூப்பி நன்றி தெரிவிக்கின்றனர். டித்வாப் புயல் காரணமாக நிர்க்கதியான நிலையில் நிற்கின்ற மக்களை நோக்கி இரு கரம் நீட்டி அழைக்கும் உறவுகளுக்கும், நீங்கள் யாரும் அற்றவர்கள் அல்ல உங்களுக்காக நாம் இருக்கின்றோம் என்ற ஆத்மார்த்த உணர்வுடன் பாதிக்கப்பட்ட மலையக மக்களை நோக்கி நிவாரணங்களுடன் வந்து மலையக மக்களின் துயரில் பங்காளராக நின்ற அனைத்து வடக்குக் கிழக்கு உறவுகளுக்கு மாத்திரமல்ல தென்னிலங்கை சகோதரர்களுக்கும் மலையகம் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.



## நில உரிமை போராட்டத்திற்கு 90 வயது:

மலையக மக்கள் இரு நூற்றாண்டுகளாக இந்நாட்டில் காணி உரிமை மறுக்கப்பட்ட இனமாக இன்று வரை வாழ்ந்து வருகின்றனர் என்பது உண்மையே. மலையக மக்களின் நில உரிமைப் போராட்டம் என்பது புதிய ஆண்டான 2026 பிறக்கும் இப்பொழுது தனது 90-வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

1946-ஆம் ஆண்டு ஜூன் 21-ஆம் திகதி கேகாலை எட்டியாந்தோட்டை பகுதியில் அமைந்துள்ள உருளவள்ளி தோட்டத்தில் 400 ஏக்கர் குடியிருப்பு நிலங்கள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படுவதை எதிர்த்து இலங்கை இந்திய காங்கிரசின் தொழிற்சங்கத்தின் தலைமையில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் கேகாலை களனி பள்ளத்தாக்கு மற்றும் ஹட்டன் பகுதிகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் (125,000) தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினர்.

ஆனால் தொழிற்சங்கப் போராட்டங்களையும் மலையக அரசியல் தலைமைகளின் நகர்வுகளையும் மீறி அரசின் காணி கையகப்படுத்தும் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

## 1972–ஆம் ஆண்டின் நிலச் சீர்திருத்தச் சட்டம்:

தோட்டங்களில் குடியேற்றங்களையும் நிலம் கையகப்படுத்தலையும் விரைவுபடுத்தியது. 1977-ஆம் ஆண்டு மே 11-அம் திகதி டெவன் தோட்டத்தில் ஏழாயிரம் (7,000) ஏக்கர் காணி கையகப்படுத்தும் திட்டத்திற்கு எதிராக தொழிலாளர்களின் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. இந்தப் போராட்டத்தின் போது தோட்டத் தொழிலாளியான சிவனு லெட்சுமணன் என்ற இளைஞன் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சிவனு லெட்சுமணனின் தியாகத்துடன் தோட்ட நிலங்களை கையகப்படுத்தும் திட்டம் கைவிடப்பட்டது.

2000-ஆம் ஆண்டில் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்துக்கென வெளியேற்றப்பட இருந்த தொழிலாளர் குடும்பங்கள் தொடர் போராட்டங்கள் காரணமாக, மேற்படி திட்டத்தின் மீள் குடியேற்ற திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டனர்.

2014-ஆம் ஆண்டு பதுளை மாவட்டம் ஹப்புத்தளை பகுதியைச் சேர்ந்த மீரியபெத்தை மண் சரிவு அனர்த்தத்தைத் தொடர்ந்து மலையகத்தில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பான காணிகளை வழங்குமாறு நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்ததுடன், குரல் எழுப்பவும் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு மலையக மக்களின் காணி உரிமைப் போராட்டம் 90-வது ஆண்டினுள் நகர்ந்திருக்கும் இவ்வேளையில், காணி உரிமைப் போராட்டம் குறித்த விடயம் ஒரு திருப்பு முனையை எதிர் நோக்கி நிற்கின்றது. இவ்வேளையில் டித்வா புயல் மலையக மக்களின் காணி உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரச தரப்புக்கு வலியுறுத்தி நிற்கின்றது.

இந்த ஒரு பின்னணியில் மலையக மக்களை வடக்கு, கிழக்கில் குடியேற்றுவது தொடர்பான கருத்தாடல்கள் பெரும் பேசு பொருளாக்கப்பட்டுள்ளது.

## ‘மலையக மண்’
## மலையக மக்களின் இருப்புடன் கலந்துள்ளது:

‘மலையகம்’ இந்தியாவம்சாவளி மக்களின் இருப்புடன் சம்பந்தப்பட்டது. ‘மலையக மண்’; மலையக மக்களின் உயிருடனும் அவர்களின் மூச்சுடனும் வாழ்வுடனும் இரண்டறக் கலந்துள்ளது. இதற்கென இருநூறு வருடகாலத்தை மலையக மக்கள் தமது இரத்தத்தாலும் உழைப்பாலும் வியர்வையாலும் தமது உயிர்களையும் கொடையாக்கி அங்குலம் அங்குலமாக செதுக்கியே இன்றைய மலையகத்தைக் கட்டி எழுப்பியுள்ளனர்.

## தமிழக கிராமங்களை
## பெயர்த்து மலையகத்தில் பதித்துள்ளனர்:

தமிழகத்தில் இருந்து இந்த மக்கள் கிராமம் கிராமங்களாகவே இடம் பெயர்ந்துள்ளனர். அந்த வகையில் மலையகத்தின் குடிப் பரம்பலை நோக்கினால் தமிழகக் கிராமங்களை அப்படியே பெயர்த்து மலையகத்தில் பதித்துவிட்ட சமூக அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த அமைப்புத்தான் மலையக மக்களை தமது இந்திய தமிழ் அடையாளத்துடனான புதிய பரிணாமமாக மலையகம் உருவெடுக்கக் காரணமாக அமைந்துள்ளது.

துரதிஷ்டவசமாக காலி, மாத்தறை, தெணியாய போன்ற தெற்குப் பகுதிகளில் வாழ்கின்ற மலையக மக்கள் தமது அடையாளத்தை இழந்து வருகின்றனர் என்பது உண்மையே.

## வடக்குக் கிழக்கில் கரைந்து போய்விட்டனர்:

1958, 1977, 1981, 1983 என, தொடர் வன்செயல்களைத் தொடர்ந்து வடக்கு நோக்கி இடம் பெயர்ந்த சுமார் ஒரு இலட்சம் மக்கள் ‘கரைந்து போய் விட்டனர்’ என்று ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார். கிளிநொச்சியில் மலையக அடையாளத்தை சமூக அரசியல் ரீதியாக முன்னெடுக்க முயன்ற கிளிநொச்சி மணியம் (சுப்ரமணியம்) காணாமல் ஆக்கப்பட்டார் என்பது வரலாறு. மணியம் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே வேளையில், மட்டக்களப்பு மரப்பாலம் போன்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தவர்கள் இன்றும் மலையக அடையாளத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே மலையகத்தின் அனைத்து மக்களும் தமது அடையாளத்தை இழந்து வாழ விரும்புவார்கள் என்று கொள்வதற் கில்லை. இடம்பெயர்ந்த நிலையில் அடை யாளத்தை பேண முற்படின் சமூக முரண் பாடுகளே மேலோங்கும். இது தவிர்க்க முடியாததாகும்.

தற்போது மலையகத்துக்கென தனித்து வமான அரசியல் உள்ளது. இடப் பெயர் வினால் இந்த அரசியல் காணாமல் போய்விடும் என்ற அச்சம் மலையக மக்க ளிடம் உள்ளது. வடக்கு, கிழக்கு நோக்கி புலம் பெயர்ந்தவர்களின் மலையக சமூக அரசியல் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் தேய்ந்து போய் விட்டது என்பது இன்றைய வடக்குக் கிழக்கு அரசியலின் யதார்த்த மாகும். இந்தக் கருத்தியலின் அடிப்படை யில்தான் 'மலையக மக்கள் தமது அடை யாளத்தை பேண விரும்புகின்றார்களா? அல்லது வடக்கு, கிழக்கு நோக்கி இடம் பெயர விரும்புகின்றார்களா? என்பதைத் தெரிவு செய்து கொள்ள வேண்டுமென ஒரு அமைப்பு வெளிப்படையாகவே அறி வித்தல் விடுத்ததை இங்கு பதிவு செய்வது பொருத்தமானது.

இதற்கும் அப்பால் 1958, 1977, 1981, 1983 என தொடர்ச்சியாக இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு நோக்கி புலம் பெயர்ந்தவர்களில் ஒரு சிலர் வசதி படைத்தவர்களாக உள்ளனர் என்பது உண்மையே. ஆனால் பெரும்பாலானவர் களின் வாழ்வாதாரம் கேள்விக்குரியதாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

### விடுதலைப் போராட்டத்தில் ஒதுங்கி இருக்கவில்லை:

ஈழ விடுதலைப் போராட்டத்தின் போது வடக்கு, கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்த வர்கள் ஒதுங்கி இருக்கவில்லை. போராட் டத்தின் அங்கமாக மாறியதுடன் தமது உறவுகளை வித்தாக விதைத்துள்ளனர். கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு பகு திகளுக்கு இடம்பெயர்ந்த மலையக மக்கள், மாவீரர்களாகிப் போனவர்களின் படங்களை சுவர்களில் மாட்டி அழுது புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.

### பத்து இலட்சத்துக்கு மேற்பட்டவர் களின் புலப் பெயர்வு சாத்தியமா?

இலங்கையில் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மலையக மக்கள் வாழ்கின்றனர். இரு நூற்றாண்டுக்கு முன் கிராமம் கிராமமாக இலங்கை நோக்கி புலம் பெயர்ந்த ஒரு சமூகக் கூட்டத்தை மீண்டும் வேருடன் பிடுங்கி வடக்கு, கிழக்கில் குடி யேற்றுவது சாத்தியமா? என்பது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. மலையக மக்களுக்கு மலையக மண்ணில் காணி உரிமை இல்லை, அவர்கள் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடத் தப்படுகின்றனர் என்பதெல்லாம் உண்மையே. இதற்கும் அப்பால் இயற் கையின் சீற்றத்துக்கும், இன வன்செயல்க ளுக்கும் அடிக்கடி முகம் கொடுத்து உயிரி ழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் உள்ளா குகின்றனர் என்பதும் உண்மையே.

இத்தகைய இடர்பாடுகள், நெருக்கடிகள், இன ஒடுக்கு முறைகள் போன்றவற்றுக்கு மத்தியிலும் மலையக மக்கள் வாழும் பகு திகளில் பாடசாலைகள், மருந்தகங்கள் என அரச கட்டமைப்புகள் முழுமையாக இல்லாவிடினும் பகுதியளவில் செயற் பாட்டில் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### தேசியத் தலைவரும் மலையக மக்களும்:

1983-ஆம் ஆண்டு மைசூர் பல்கலைக்கழ கத்தில் எனது எம்.ஏ கற்கை நெறியில் முதலாம் ஆண்டினை நிறைவு செய்து இலங்கை திரும்பி, 1983 கலவரத்தில் பாதிக்கப்பட்டு உயிர்தப்பி, மீண்டும் மைசூர் திரும்பினேன். அவ்வேளையில் தேசியத் தலைவரின் அழைப்பின்பேரில் சென்னை சென்று அவரைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். 1977 கலவ ரத்தை நேரில் பார்த்தவன் என்ற வகையிலும் 1983 கலவரத்தில் உயிர் தப் பியவன் என்ற வகையிலும் அவருடனான சந்திப்பின் போது மலையக மக்களின் பாதுகாப்பு குறித்தே வினவினேன்.

வடக்குக் கிழக்கில் இடம்பெறும் ஈழப் போராட்டத்துடன் நேரடியாகச் சம்பந்தப் படாத மலையக மக்கள் பெரும் பாதிப்பினை எதிர் கொள்கின்றனர். 1977, 1983 இனக் கலவரங்கள் உதாரணங் களாக எம்முன் நிற்கின்றன. ஈழம் உருவா கினால் பத்து இலட்சம் மக்களின் நிலை என்ன? என்ற கேள்விக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் 'நாடுகள் பிரியும் போது அந்தந்த நாடுகளில் வாழும் மக்கள், அந்தந்த நாடுகளில் வாழ்வது ஏற்றுக் கொள்ளப் பட்ட நியதி' என்று பதில் அளித்தார்.



"
ஈழ விடுதலைப் போராட்டத்தின் போது வடக்கு, கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்தவர்கள் ஒதுங்கி இருக்கவில்லை. போராட்டத்தின் அங்கமாக மாறியதுடன் தமது உறவுகளை வித்தாக விதைத்துள்ளனர். கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மலையக மக்கள், மாவீரர்களாகிப் போனவர்களின் படங்களை சுவர்களில் மாட்டி அழுது புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.
"



> “ மலையகக் காணிகள் கண்டியரின் நிலம் என்று உரிமை கோரும் விடயம் காலம் காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. மலையக மக்களை வடக்குக் கிழக்கில் குடியேற்ற வேண்டுமென்ற கோசம் கண்டியர் நில உரிமை இயக்கங்களை வீரியம் பெற வைப்பதாக அமைந்துவிடும். ”

அவ்வாறான ஒரு நிலை உருவாகி மலையக மக்கள் தென் பகுதிகளில் வாழ முடியாத நிலை ஏற்பட்டு அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டு, இனப் படுகொலைக்குள்ளாக்கப்பட்டால் அந்த மக்களின் நிலை என்ன? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், ‘மலையக மக்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களும், நிலைமை கட்டு மீறும் பட்சத்தில் அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான திட்டங்களும் எம்மிடம் உள்ளன. அவ்வாறு இடம் பெயரும் மக்களை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள காணிகளில் குடியேற்றி அவர்களுக்கான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் திட்டங்களும் எம்மிடம் உள்ளன’ என்றும் குறிப்பிட்டார் என்பதை நான் இங்கு பதிவு செய்கின்றேன்.

இன்றைய நிலையில் மலையக மக்களை வாழ்வாதாரத்துடன் கூடிய திட்டங்களுடன் வடக்குக் கிழக்கில் குடியேற்ற தேசியத் தலைவர் போன்று உத்தரவாதங்களை வழங்கி நடைமுறைப்படுத்தக் கூடிய சக்தி படைத்த, நம்பிக்கைக்குரிய தலைமைகள் இருக்கின்றனவா ?.

அதேவேளையில் வடக்குக் கிழக்கில் இருந்து இரு கரம் நீட்டி அழைக்கும் நல் நெஞ்சங்களின் அழைப்பினை ஏற்று மலையகத்தில் இருந்து தனிப்பட்ட முறையில் வடக்கு, கிழக்கில் குடியேற விரும்பும் மலையக மக்களை எவரும் தடுத்து நிறுத்த முன் வரமாட்டார்கள்.

## தென் பகுதிகளில் சிங்களமய மாகும் மலையகத் தமிழர்கள்:

காலி, மாத்தறை, தெனியாய போன்ற தென் மாவட்டங்களில் உள்ள மலையகத் தமிழர்கள் தம்மை பெரும்பான்மை இனத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். கணேசன் அப்புகாமி, கந்தசாமி பண்டா என்று அடுத்த சந்ததியினரின் பெயர்கள் மாற்றம் பெறுகின்றன. இதைப் பற்றி அவர்களிடம் வினவினால் அடுத்த சந்ததியாவது பிரச்சினை இன்றி இருக்கும் என்று அப்பாவித்தனமாகக் கூறி தம்மைச் சமாதானப்படுத்திக் கொள்ளும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பெரும்பான்மை இனத்தவர்களின் பெயர்களைச் சூட்டத் தொடங்கியுள்ளனர்.

அதே வேளையில் தென் பகுதிகளில் போதிய தமிழ்ப் பாடசாலைகள் இல்லாத நிலையில் சிங்களப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்து சிங்கள மொழியில் கல்வி கற்க வைக்கின்றனர். அதாவது தமது எதிர்காலச் சந்ததியினரை சிங்கள மயமாக்கம் நோக்கி விரைவாக இழுத்துச் செல்கின்றனர். இந்த மக்களை வடக்கு, கிழக்கு நோக்கி புலம்பெயரத் தூண்டுவது பொருத்தமானதாக இருக்கும். நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்த மக்களை வடக்கு, கிழக்கில் குடியேற்றுவது குறித்து முன்மொழிந்ததை இங்கு பதிவிடுதல் பொருந்தும்.

## புலம் பெயர்ந்தவர்களின் காணிகளைக் கோருவது முறையாகாது:

மலையக மக்களை வடக்குக் கிழக்கில் குடியேற்றுவதற்கென புலம்பெயர் தமிழர்களின் காணிகளைக் கோருவது முறையாகாது. அதே வேளையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள அரச காணிகளில் குடியேற்றுவதாக இருந்தால்கூட அரச கட்டமைப்பு மற்றும் ஆட்சியாளரின் ஒத்துழைப்பு கிடைக்குமா என்பதும் கேள்விக்குறியே.

## கண்டியர்களின் நில உரிமை இயக்கங்களை வீரியம் பெற வைக்கும்:

இதற்கும் அப்பால் ‘மலையகக் காணிகள் கண்டியரின் நிலம்’ என்று உரிமை கோரும் விடயம் காலம் காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. மலையக மக்களை வடக்குக் கிழக்கில் குடியேற்ற வேண்டுமென்ற கோசம் கண்டியர் நில உரிமை இயக்கங்களை வீரியம் பெற வைப்பதாக அமைந்துவிடும்.

சரியான திட்டமிடல் இன்றி, தூர நோக்கற்ற நிலையில் முன்வைக்கப்படும் அரசியல் கோசங்களால் பாதிக்கப்படப் போவது மலையக மக்களே. இறுதியில் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து கைவிடப்பட்ட மக்களாக மலையக மக்களே நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படுவர்.

## ‘மலையகம் காப்போம்’ – வடக்கின் குரல்:

இது போன்ற நடைமுறை பிரச்சினைகள், சிக்கல்களைக் கருத்தில் எடுத்து, ‘மலையகம் காப்போம்’ என்ற உறவுக் கோசத்துடன் வடக்கில் இருந்து நேசக் கரம் நீட்ட உறவுகள் தயாராக இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்பதை, இங்கு பதிவு செய்தல் பொருத்தமானது.

## ஜனாதிபதிக்கு பெரும் பொறுப்புள்ளது:

இதற்கும் அப்பால் தற்போதைய 'டித்வா' புயல் அழிவுகள் மலையக மக்களை மாத்திரமல்ல, மலையகப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கா மற்றும் அவருடைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கும் உணர்த்தியுள்ளது.

அனர்த்தப் பகுதிகள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் 30 வீதமான நிலப்பகுதிகளில் 36 வீதமான மக்கள் வாழ்வதாக இலங்கை அரசின் அனர்த்த முகாமைத்தவ அறிக்கை குறிப்பிடுகின்றது. அதே வேளை, பதுளை மாவட்டத்தில் 28 வீதமான மக்கள் தற்போதைய வாழ்விடங்களில் வாழ முடியாதென உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. மொத்தத்தில் சிங்கள மக்களோ மலையகத் தமிழ் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ வாழ்கின்ற அவர்களின் வாழ்விடங்களில் இருந்து பாதுகாப்பான இடங்களுகளில் குடியமர்த்தப்படல் வேண்டுமென்பதை மேற்படி தகவல்கள் ஜனாதிபதி அநுராகுமார திசநாயக்கவுக்கும் அவரது அரசாங்கத்திற்கும் சிவப்பு எச்சரிக்கையாக விடுத்துள்ளது. அந்த வகையில் அனர்த்தப் பகுதிகளில் வாழ்கின்ற அனைத்து மக்களினதும் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அரசாங்கம் இந்த பொறுப்புக்களில் இருந்து இலகுவில் கடந்து போய்விட முடியாது.

## ஜனாதிபதியின் உறுதிமொழி:

டித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நுவரெலியாவில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களை சந்தித்த ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு வீடமைப்புக்கென காணிகள் இருக்கின்றவா என அதிகாரிகளிடம் வினவிய போது காணிகள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அதனை அடுத்து பாதிக்கப்பட்ட மக்களிடம், 'புதிய வீடுகளுக்குப் போகத் தயாராக இருங்கள்' என வாக்குறுதியும் நம்பிக்கையும் அளித்து விட்டுச் சென்றார். இதே வாக்குறுதியை மலையகத்தில் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கும் வழங்குவதும் அதனை நிறைவு செய்வதும் ஜனாதிபதிக்குள்ள தார்மீகக் கடமையும் பொறுப்புமாகும்.

மொத்தத்தில் மலையக மக்களின் 'இருப்பும், அடையாளமும்' அந்த 'மண்ணுடன்' இரண்டறக் கலந்துள்ளது! மலையக மண்ணில் இருந்து அந்த மக்களை வேருடன் பிடுங்கி இன்னொரு புலம்பெயர்வுக்கு உள்ளாக்குதல் என்பது பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மலையக மக்களை இன சங்காரத்திற்குள்ளாக்குவதாகவே அமையும். அத்துடன், இந்த மக்களை மீண்டும் இருநூற்றாண்டு கால பழைய நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

எனவே யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுவோம்.



Thevaraj.V@thaiveedu.com




Merry Christmas,
Happy New Year,
Happy Holidays
MARTIN MEDEIROS
Regional Councillor Wards 3 &4
City of Brampton
martin.medeiros@brampton.ca
905-874-2634

# டிட்வா பேரழிவும் மலையகத்தின் மீள்கட்டுமானமும்

## அருள்கார்க்கி




2025-ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று இலங்கையைத் தாக்கிய டிட்வா சூறாவளியைத் தொடர்ந்து, பேரழிவால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் சமூகத்தின் மீதான அரசாங்கத்தின் நிவாரணம் மற்றும் இழப்பீட்டுப் பொறிமுறைகளை, அவர்களின் வரலாற்று ரீதியிலான நிரந்தரமற்ற நில உரிமையுடைமைப் பின்னணியில் இருந்து விமர்சன ரீதியாக இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய்கிறது.

பாரம்பரியமாக, தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் 'லயன் அறைகளுக்கு' சட்டரீதியான ஆவணங்கள் இல்லாததால், அவர்களுக்கு வீட்டுரிமையை நிரூபிப்பதற்கான நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதன் விளைவாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களால் முழுமையான வீட்டுச் சேதத்திற்கான இழப்பீடு, மீள்குடியேற்ற மானியங்கள் மற்றும் கடன் திட்டங்கள் போன்ற அத்தியாவசிய உதவிகளை அணுகுவதில் தடைகள் ஏற்படுகின்றன. இந்தச் சவால், காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட இழப்புகளுக்கும், வரலாற்று ரீதியிலான சமூக-பொருளாதார ஒடுக்குமுறைக்கும் இடையே உள்ள ஆழமான தொடர்பைவெளிப்படுத்துகிறது. நிலையான மீட்சியை உறுதிசெய்ய, இழப்பீட்டுக் கொள்கையில் நிலஉரிமையுடைமைக்கான தகுதிக்கட்டுப்பாடுகளை உடனடியாகத் தளர்த்தவும், அனர்த்த முகாமைத்துவச் சட்டங்களில் சமூக நீதியைக் கொள்கை ரீதியாக ஒருங்கிணைக்கவும் இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

இலங்கை ஒரு வெப்பமண்டல தீவு நாடாக இருப்பதால், பருவ மழைகளின் தீவிரமான மாறுபாடுகளாலும், புவி வெப்பமடைதல் காரணமாக அதிகரிக்கும் தீவிரமான சூறாவளிகளின் அச்சுறுத்தலாலும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. 2025-ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று தாக்கிய டிட்வா சூறாவளியானது, ஒரு தசாப்தகாலத்திலேயே ஏற்பட்ட மிக மோசமான இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பலத்த மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்தியதுடன், சில பகுதிகளில் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் முந்நூற்று ஐம்பது மில்லிமீட்டருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியது. இந்தத் தீவிர காலநிலை விளைவாகப் பெரும் வெள்ளப்பெருக்கு, சாய்வுச்சரிவுகள் மற்றும் வீடுகள், உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவல்படி, 2025-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் நிலவரப்படி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். டிட்வா சூறாவயின் தாக்கம் பல சமூகங்களைப் பாதித்தாலும், சமூக-பொருளாதார ரீதியிலும், கட்டமைப்பு ரீதியிலும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மலையகத் தமிழ்ச் சமூகத்தின் மீதே அது மிகக் கடுமையான விளைவை ஏற்படுத்தியுள்ளது. நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை மற்றும் மாத்தளை போன்ற மாவட்டங்கள் அதிக நிலச்சரிவு அபாய எச்சரிக்கைகளின் கீழ் உள்ளன.

இந்தச் சமூகமானது காலனித்துவ காலத்தில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் வம்சாவளியாகும். இவர்கள் இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தபோதிலும், வரலாற்று ரீதியிலான சட்டங்கள் மற்றும் சமூக-பொருளாதார ஒடுக்குமுறையால் ஒதுக்கி வைக்கப்பட்டனர். இந்தச் சமூகத்தின் குடியிருப்பு அமைப்பான 'லயன் அறைகள்' தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமானவை என்பதால், தோட்டத் தொழிலாளர்கள் தலைமுறை தலைமுறையாக அங்கு வசித்தாலும், அவர்களுக்கு அந்த நிலத்தின் மீதோ அல்லது கட்டடத்தின் மீதோ சட்ட ரீதியான நிரந்தர உரிமையுடைமை இல்லை. இந்த நில உரிமையின்மைப் பிரச்சினை, சாதாரண காலங்களில் கடன் பெறுவதிலும், அத்தியாவசிய சேவைகளை அணுகுவதிலும் தடையாக இருப்பதோடு, டிட்வா போன்ற பேரழிவுக் காலங்களில் அரசாங்கத்தின் உதவிகளைப் பெறுவதற்கும் ஒரு பெரிய தடையாக உள்ளது. எனவே, அரசாங்கத்தின் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்திற்கான இழப்பீட்டுப் பொறிமுறைகள் யாவை என்றும், சட்டபூர்வ நில உரிமையுடைமைக்கான தேவை, மலையகத் தமிழ்க்குடும்பங்களால் இழப்பீடுகளை அணுகுவதில் எவ்வாறு ஒரு பெரிய நிர்வாகத் தடையாகச் செயற்படுகிறது என்றும், மேலும் இந்தச் சட்ட மற்றும் நடைமுறைத் தடைகள், மலையகச் சமூகத்திற்குச் சமமான மற்றும் நீடித்த மீட்சியை எவ்வாறு மறுக்கின்றன என்றும் இந்த ஆய்வுக் கட்டுரை கேள்விகளை மையப்படுத்துகிறது.

## காலநிலை நீதி மற்றும் கட்டமைப்பு பாதிப்பு:

இந்தப் பேரழிவின் விளைவுகளைப் புரிந்துகொள்ள, காலநிலை நீதி மற்றும் கட்டமைப்பு பாதிப்பு என்ற கருத்தியல் கட்டமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. காலநிலை நீதி என்பது, புவி வெப்பமயமாதலுக்குக் குறைந்த அளவில் பங்களித்த, ஆனால் அதன் விளைவுகளால் அதிக அளவில் பாதிக்கப்பட்ட விளிம்புநிலைக் குழுக்களுக்கு நிவாரணம் மற்றும் நீதியை வழங்குவதைக் கோருகிறது. மலையகச் சமூகத்தைப் பொறுத்தவரை, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தவிர்க்க முடியாத மற்றும் ஈடுசெய்ய முடியாத நிரந்தர இழப்புகளை இது குறிக்கிறது. தங்கள் வாழ்வாதாரத்தின் மீதான ஒற்றைச் சார்பு மற்றும் உரிமையின்மை காரணமாக, இது ஆழமான பொருளாதாரமற்ற இழப்புகளையும் உள்ளடக்கியது. இந்தப் பின்னணியில், பேரழிவின் பாதிப்பு என்பது புவியியல் ரீதியான அபாயங்களால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை; அது ஒரு சமூகத்தின் வரலாற்று ரீதியிலான சமூக-பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பாலும் தீர்மானிக்கப்படுகிறது என்ற கட்டமைப்பு பாதிப்பு கருத்தை ஆய்வு இணைக்கிறது. நாட்டின் மக்கள் தொகையில் இருபத்து மூன்று சதவீதத்தினர் ஏற்கனவே வறுமையில் வாழும் நிலையில், டிட்வா போன்ற சூறாவளிகள் இருக்கும் பாதிப்புகளை மேலும் அதிகரிக்கின்றன. வாழ்வாதார இழப்பு, செலவுகள் உயர்வு, மற்றும் சேவைத் தடைகள் போன்றவை குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைப் பாதிக்கின்றன. மலையகச் சமூகத்தைப் பொறுத்தவரை, குடியுரிமை மறுப்பு, குறைந்த ஊதியம் மற்றும் நில உரிமையுடைமையின்மை போன்ற கட்டமைப்பு அம்சங்களே, அவர்களை டிட்வா போன்ற பேரழிவுகளுக்கு மிகவும் ஆளாக்கியுள்ளன. எனவே, நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்திற்கான சவால்கள் இயற்கைப் பேரழிவின் விளைவுகள் அல்ல; அவை ஆளும் கட்டமைப்புகளின் கொள்கை ரீதியான குறைபாடுகளின் பிரதிபலிப்பாகும்.

## இழப்பீட்டுக் கொள்கைகளும் நடைமுறைகளும்:

டிட்வா சூறாவளியின் விளைவாக, இலங்கை அரசாங்கம் பொதுவாகப் பின்பற்றப்படும் பேரிடர் நிவாரண நடைமுறைகளின் அடிப்படையில், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலமாகப் பல திட்டங்களை அறிவித்துள்ளது. இந்த நிவாரணத்தின் படிநிலைகளில், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குத் தற்காலிக முகாம்களில் உடனடி நிவாரணம் வழங்குதல் மற்றும் உயிரிழப்புக்கான நிதி வழங்குதல் போன்றவை அடங்கும். மேலும், முழுமையாக அழிந்த வீடுகளுக்கு அதிகபட்ச தொகை (ரூ. 2.5 மில்லியன்) மற்றும் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்குக் குறைவான தொகையை வழங்கும். வீட்டுச் சேதத்திற்கான மானியமும் முக்கியமானதாகும். அத்துடன், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையின் பேரில், அபாயகரமான வலயங்களில் வசிப்பவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கான மீள்குடியேற்றத் திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குதான் மலையகத் தமிழ் சமூகம் ஒரு தவிர்க்க முடியாத சட்ட மற்றும் நடைமுறை சிக்கலை எதிர்கொள்கிறது, ஏனெனில், வீட்டுச் சேதத்திற்கான இழப்பீடு மற்றும் மீள்கட்டுமான மானியத்தைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பிரதேச செயலகங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய முக்கிய ஆவணங்களில், சேதமடைந்த வீட்டின் சட்டபூர்வ உரிமையாளர் என்பதை நிரூபிக்கும் ஆவணம் (வீட்டுப் பத்திரம் அல்லது நில உரிமைச் சான்றிதழ்) மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் நிவாரணக் கொள்கைகள் பெரும்பாலும், வீட்டு உரிமையுடைமையை அடிப்படையாகக் கொண்ட நிலையான குடியிருப்புகளை மையமாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறை, லயன் அறைகளில் வசிக்கும் மலையகத் தமிழ் சமூகத்தின் யதார்த்தத்திற்கு முற்றிலும் பொருந்தாதது. லயன் அறைகளில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு அந்த நிலத்தின் மீது சட்டபூர்வ உரிமை இல்லாததால், இழப்பீட்டு மானியத்தைப் பெறுவதற்கான முதன்மைத் தேவையாக உள்ள 'வீட்டுப் பத்திரத்தை' அவர்களால் சமர்ப்பிக்க முடியாது. இதனால், வீட்டுச் சேதத்திற்கான முழுமையான மானியத்தைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள், உரிமையாளர் ஆவணம் இல்லாத காரணத்தால், பிரதேச செயலக மட்டத்திலேயே நிராகரிக்கப்பட அல்லது காலவரையின்றி நிறுத்தி வைக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. சட்டபூர்வ உரிமையாளரான தோட்டக் கம்பனிகள், இந்த மானியங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொறுப்பை ஏற்க மறுக்கின்றன, அதேசமயம், தொழிலாளர்களும் விண்ணப்பிக்க முடியாது. இதனால், மீள்கட்டுமானப் பொறுப்பு யார் மீது சுமத்தப்படும் என்பதில் ஒரு சட்ட வெற்றிடம் உருவாகிறது. மேலும், இழப்பீட்டை நிவர்த்தி செய்வதில் காப்புறுதி ஒரு பாதுகாப்புக் கவசமாகச் செயற்பட வேண்டும் என்றபோதும், மலையகச் சமூகத்திற்குக் காப்புறுதிப் பாதுகாப்பும் மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிர்வாகச் செயல்முறைகளும் மலையகச் சமூகத்திற்குச் சவாலாகவே இருக்கின்றன. அடிப்படை ஆவணங்கள் இல்லாத நிலை மற்றும் நிர்வாகச் செயல்முறைகள் குறித்த தெளிவான தகவல் தமிழ் மொழியில் சென்றடையாத நிலை ஆகியவை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் குழப்பங்களை

ஏற்படுத்துகின்றன. இந்தச் சவால்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் குடும்பங்களை எந்தவொரு நிதி உதவியும் இன்றி, தங்கள் சொந்த நிதியிலேயே மீண்டு வர வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கி, அவர்களை ஆழமான வறுமைச் சுழற்சிக்குள் தள்ளுகிறது.

### சட்டத்தின் மீதான கேள்விகள்:

இலங்கையின் பேரிடர் முகாமைத்துவச் சட்டம் மற்றும் நிவாரணக் கொள்கைகள் ஆகியவை மத்தியதரவர்க்கத்தை மையமாகக் கொண்ட, நிலையான மற்றும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்புகளைக் கணக்கிற் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்களின் கீழ், இழப்பீடு மற்றும் மீள்கட்டுமான மானியத்தைப் பெறுவதற்குச் சொத்தின் சட்டபூர்வ உரிமையாளர் என்பதை நிரூபிக்கும் நிபந்தனை, மலையகத்தமிழ்ச் சமூகத்தை விலக்குவதற்கான ஒரு மறைமுகக் கருவியாகச் செயற்படுகிறது. தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் லயன் அறைகளில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தாலும், லயன் அறைகள் தோட்டக் கம்பனிகளின் பிரத்தியேகச் சொத்து என்பதால், அவர்கள் சட்டத்தின் பார்வையில் Occupants அல்லது 'குடியிருப்புதாரர்கள்' (Tenants) என்ற நிலையிலேயே கருதப்படுகின்றனர். இந்தச் சட்ட வரையறை, நிவாரணப் பொறிமுறைகளில் அவர்களுக்கு முழுமையான நிவாரணம் கிடைப்பதைத் தடுக்கிறது.

முக்கியமாக, தோட்டப் பகுதிகளில் நிலச் சீர்திருத்தம் மற்றும் வீட்டுத் திட்டங்கள் கடந்த காலங்களில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், இந்தச் சட்டபூர்வமான உரிமையுடைமைப் பிரச்சினை இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. அரசாங்கம் சில குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கியிருந்தாலும், அவை அனுமதிப் பத்திரங்கள் (Permit to Occupy) அல்லது தற்காலிக உரிமைகோரல் ஆவணங்களையே வழங்குகின்றன, முழுமையான காணி உறுதிப் பத்திரங்களை (Absolute Deeds) வழங்குவதில்லை. இந்த ஆவணங்கள், இழப்பீடுகளைக் கோருவதற்கு அல்லது வங்கிகளில் அடமானக் கடன் பெறுவதற்குத் தேவையான சட்ட வலிமையைப் பெற்றிருக்கவில்லை. எனவே, டிட்வா பேரழிவுக்குப் பிந்தைய இழப்பீட்டுக் கொள்கையானது, உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான மீட்சிக்கு உதவப் பயன்படுவதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் பழைய மற்றும் புதிய வீட்டுத்திட்டங்களில் உள்ள சட்டச் சிக்கல்களையும் குறைபாடுகளையும் வெளிப்படுத்தியுள்ளது. நிவாரணப் பணிகளை முன்னெடுக்கும் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், நடைமுறையில் உள்ள சட்டவிதி களின்படி வீட்டுரிமையை நிரூபிக்கும் ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்களை நிராகரிக்க அல்லது நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். இது அதிகாரிகளின் மட்டத்தில் ஒரு நிர்வாகச் சுமையையும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீவிரமான அநீதியையும் ஏற்படுத்துகிறது.

டிட்வா சூறாவளியைத் தொடர்ந்து, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அடையாளம் கண்ட அதிக அபாயமுள்ள பகுதிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நிரந்தரமாக மாற்றுவது இன்றியமையாத அவசரத் தேவையாகும். இந்தப் பேரழிவு, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் உள்ள நிலச்சரிவு அபாயமுள்ள லயன் அறைகளிலிருந்து குடும்பங்களை மாற்றுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை விரைவுபடுத்துகிறது. எவ்வாறாயினும், இந்த மீள்குடியேற்றத் திட்டங்களும் நில உரிமையுடைமைச் சிக்கலின் காரணமாகப் பல சவால்களை எதிர்கொள்கின்றன.

முதலாவதாக, மீள்குடியேற்றத் திட்டங்களுக்கான பாதுகாப்பான நிலத்தைக் கண்டுபிடிப்பது என்பது ஒரு பெரிய சவாலாகும். தோட்ட நிர்வாகத்திற்குச் சொந்தமான அல்லது வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களைப் பெறுவதற்குத் தோட்டக் கம்பனிகளுடனும், பிற அரசு நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த நீண்டகால நிர்வாகச்செயல்முறைகள் தேவைப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் நிலத்தின் உரிமையைக் கோர முடியாததால், இந்த அரசியல் மற்றும் நிர்வாகப் பேச்சுவார்த்தைகளில் தங்கள் கோரிக்கையை வலியுறுத்த அவர்களுக்குச் சட்டரீதியான அதிகாரம் இல்லை. இரண்டாவதாக, கடந்த கால மீள் குடியேற்றத் திட்டங்கள் கூட பெரும்பாலும் புதிய வீடுகளுக்கான முழுமையான நிலப் பத்திரங்களை வழங்கத்தவறிவிட்டன. இதனால், ஒரு குடும்பம் அபாயகரமான லயன்



> "தோட்டத் தொழிலாளர்கள் நிலத்தின் உரிமையைக் கோர முடியாததால், அரசியல் மற்றும் நிர்வாகப் பேச்சுவார்த்தைகளில் தங்கள் கோரிக்கையை வலியுறுத்த அவர்களுக்குச் சட்டரீதியான அதிகாரம் இல்லை"

அறையிலிருந்து பாதுகாப்பான புதிய குடி யிருப்புக்கு மாறியிருந்தாலும், அவர்களுக்குச் சட்டபூர்வமாக அந்த நிலத்தின் மீது உரிமை இல்லாத நிலை நீடிக்கிறது. இந்த உரிமை மறுப்பு, அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பல்வகைப்படுத்த, விவசாயம் அல்லது சிறு தொழில்கள் தொடங்கக் கடன் பெறுவதைத் தடுக்கிறது. மேலும், எதிர்காலத்தில் அந்தச் சொத்தை விற்கவோ சட்டரீதியான ஆவணங்களைப் பயன்படுத்தவோ இயலாமல் போகிறது. டிட்வா பேரழிவுக்குப் பிந்தைய நிரந்தர மீட்சிக்கான எந்தவொரு மீள்குடியேற்றத் திட்டமும், புதிய வீடுகளுக்கான சட்டபூர்வமான, தடையற்ற பூரண காணி உறுதிகளை (Absolute and Unencumbered Land Deeds) வழங்குவதை அடிப்படை நிபந்தனையாகக் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில், புதிய குடியிருப்பு ஒரு 'புதிய லயன் அறையாக' மட்டுமே மாறும். இது வேறொரு புவியியல் இடத்தில் வரலாற்று ரீதியான அநீதியைத் தொடரும்.

### பாலினமும் சமூகப் பாதிப்பும்:

டிட்வா சூறாவளியால் ஏற்பட்ட இழப்புகளின் தாக்கம் பாலின ரீதியிலும் வேறுபடுகிறது. மலையகத் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் அதிகளவில் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். பல குடும்பங்களில், ஆண்களே சட்டபூர்வ ஆவணங்களின் பெயரளவில் உரிமையாளர்களாகவோ குடியிருப்பாளர்களாகவோ கருதப்படுகின்றனர். கணவர் அல்லது தந்தை உயிரிழக்கும் பட்சத்தில், சட்டபூர்வமான வீட்டுரிமை இல்லாத பெண்கள், இழப்பீடு கோரும் செயல்முறையில் ஆவணப் பற்றாக்குறை மற்றும் நிர்வாக நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாமை போன்ற இரட்டைத்தடைகளை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக, பாதுகாப்பு மையங்களில் தற்காலிகமாக வசிக்கும் மலையகக் குடும்பங்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு எனப் பல சவால்களைஎதிர்கொள்கின்றனர். ஆவணங்களின்மை மற்றும் நிரந்தரமற்ற தன்மை காரணமாக, அவர்கள் இழப்பீட்டைப் பெறுவதில் தாமதம் ஏற்படுத்தி, மீண்டு வருவதற்கான காலத்தை நீடித்து, அவர்களின் சமூகப் பாதுகாப்பை மேலும் சீர்குலைக்கிறது.

### கொள்கை பரிந்துரைகள்:

டிட்வா சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்ட இழப்புகளைச் சமமாக நிவர்த்தி செய்வதற்கும், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் நீடித்த மீட்சியை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கை அரசாங்கமும் தொடர்புடைய நிறுவனங்களும் தங்கள் இழப்பீட்டுக் கொள்கைகளிலும் சட்டங்களிலும் பின்வரும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்,

நில உரிமையுடைமைக்கான தகுதியைத் தளர்த்துதல்: வீட்டுச் சேதமானியத்தைப் பெறுவதற்கு, வீட்டுரிமை ஆவணங்களுக்குப் பதிலாக, பிரதேச செயலகத்தால் உறுதிசெய்யப்பட்ட நீண்ட கால குடியிருப்புத் (Long-Term Occupancy) தகுதியை அங்கீகரிக்கும் ஒரு விசேட வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் உடனடியாக வெளியிட வேண்டும். ஒரு குடும்பம் லயன் அறையில் வாழ்ந்த காலத்தைக் கிராம உத்தியோகத்தர் மற்றும் தோட்ட நிர்வாகத்தின் சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

நிர்வாகச் செயல்முறைகளை உள்ளூர்மயமாக்கல் மற்றும் எளிமைப்படுத்துதல்: அனைத்து நிவாரண விண்ணப்பப்படிவங்கள், வழிகாட்டல்கள் மற்றும் சட்டத்தேவைகள் ஆகியவை தமிழ் மொழியில் தெளிவாகவும், எளிய நடையிலும் இருக்க வேண்டும். அடிப்படை ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு உதவுவதற்காக, நடமாடும் பதிவாளர் அலுவலகங்களை அமைத்து, ஆவணங்களைத் தயாரிக்கும் செயல்முறையை விரைவுபடுத்த வேண்டும். அத்துடன், இழப்பீடு தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறைகளில், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்க வேண்டும்.

முழுமையான உரிமையுடைமை உத்தரவாதம்: டிட்வா பேரழிவுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு மீள்குடியேற்றத் திட்டத்திலும், புதிய வீடுகளுக்கான சட்டபூர்வமான, தடையற்ற காணி உறுதிகளை வழங்குவதைக் கட்டாயமாக்க வேண்டும். இந்த உரிமையுடைமை, எதிர்கால காலநிலை அதிர்வுகளுக்கு எதிராக இந்தச் சமூகத்தின் மீள்திறனை அதிகரிக்க உதவும்.

தோட்ட நிலப் பிரச்சினைகளைத் தீர்த்தல்: அபாயகரமான பகுதிகளில் இருந்து மக்களை மாற்றுவதற்காக, தோட்டக் கம்பனிகளிடமிருந்து நிலங்களைப் பெறுவதற்கான நடைமுறைகளை விரைவுபடுத்த அரசாங்கம் சட்டரீதியான மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த நிலம், சமூகத்தின் வீட்டுத் தேவைகளுக்கு மட்டுமே பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

காப்புறுதியை கட்டாயமாக்குதல்: தோட்டத் தொழிலாளர்களின் லயன் அறைகளுக்கு அல்லது புதிய குடியிருப்புகளுக்கு, தோட்டக்கம்பனிகள் அல்லது அரசாங்கத்தின் கூட்டுக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் கூட்டு காப்புறுதிப் பாதுகாப்பை (Group Insurance Coverage) வழங்குவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

சர்வதேச காலநிலை நிதியை அணுகுதல்: இலங்கை அரசு, ஐ.நா. காலநிலை மாநாட்டின் இழப்பு மற்றும் சேதநிதியம் (Loss and Damage Fund) போன்ற சர்வதேசப் பொறிமுறைகளிலிருந்து நிதியுதவியைப் பெற விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெறப்படும் நிதியானது, வீட்டுரிமை இல்லாத விளிம்புநிலைக் குழுக்களின் வரலாற்று ரீதியிலான பாதிப்பை நிவர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

2025-இல் ஏற்பட்ட டிட்வா சூறாவளியானது, மலையகத் தமிழ் சமூகத்தின் மீது காலநிலை மாற்றம் கொண்டுள்ள உடனடி அச்சுறுத்தலை மட்டுமல்லாமல், அவர்களின் வரலாற்று ரீதியிலான நிரந்தரமற்ற வீட்டுரிமை அமைப்பின் தோல்வியையும் வெளிப்படுத்தியுள்ளது. இழப்பீட்டுக் கொள்கையில் நில உரிமையுடைமையைக் கட்டாயமாக்குவது, சமமான மீட்சிக்கு ஒரு நிர்வாக மற்றும் சட்டத்தடையாகச் செயற்படுகிறது. இந்தச் சமூகம் அனுபவித்த இழப்பு, காலநிலை மாற்றத்தின் நேரடி விளைவு மட்டுமல்ல; இது இலங்கையின் அரச கட்டமைப்பில் நீடித்து வரும் வரலாற்று அநீதியின் தொடர்ச்சி ஆகும். அரசாங்கமும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களும், உடனடியாகச் சட்ட மற்றும் நிர்வாகத் தகுதிக்கட்டுப்பாடுகளை நீக்கி, அவர்களுக்குப் பூரண நில உரிமையுடைமையுடன் கூடிய நீடித்த மீள்குடியேற்றத்தை வழங்குவதன் மூலம் மட்டுமே காலநிலை நீதியை நிலைநாட்ட முடியும். மலையகத் தமிழ்ச் சமூகத்திற்குச் சமமான நிவாரணத்தை உறுதிப்படுத்துவது என்பது வெறும் பேரிடர் முகாமைத்துவ நடவடிக்கை மட்டுமல்ல; இது தேசிய நீதியையும், மனித உரிமைகளையும் நிலைநிறுத்துவதற்கான ஒரு அடிப்படைப் பொறுப்பாகும்.



Arulkarki@thaiveedu.com

# மலையகத் தமிழர்களை வடக்கு நோக்கி இழுத்தல் - தள்ளுதல்: ஏன்? எதற்கு?

மல்லியப்பசந்தி திலகர்



மலையகத் தமிழர்களை வடக்கு நோக்கி அழைக்கும் மனிதாபிமான, அரசியல் அழைப்புகள் அண்மைக்கால மாகப் பேசு பொருளாகியுள்ளன. இலங்கையில் நடைபெற்ற 'டிட்வா' பேரனர்த்த சூழல் இந்த பேசுபொருளை விரிவாக்கி இருந் தாலும் அதற்கு முன்னரே இந்த அழைப்புகள் வரத் தொடங்கிவிட்டன.

முதலில் இந்த அழைப்புகள் மனிதாபிமான அழைப்புகளாக இருக்கும் பட்சத்தில் அதற்காக மலையகம் பெருமனதோடு நன்றி சொல்ல வேண்டும். முன்னைய காலத்தை விட மலையகம் குறித்த பார்வையும் நோக்கும் வடக்கு - கிழக்குத் தமிழர்களிடத்தில் மாறி வந்திருப்பது மகிழ்ச்சி தான்.

அதற்காக மலையகத் தமிழ் மக்கள் அனை வருக்கும் காணி களை வழங்கி வாழ்வளிக்கும் அளவுக்கு வடக்கில் மாற்றம் வந்து விட்டதா? அவர்களின் காணிப் பிரச்சினைகள் தீர்ந் துவிட்டனவா? வடக்கில் இராணுவத்தின் பிடியில் இருக்கும் காணிகளை விடுவிக்க அவர்களுக்கு முடிந்துள்ளதா? வடக்கில் 70-களில் இருந்து குடியேறி வாழும் மலையகத் தமிழர்களின் காணி உரிமை உறுதி செய்யப்பட்டுவிட்டதா? அவர்கள் வாழும் காணிப் பிரதேசங்கள் பொருளாதார வாய்ப்புகள் கொண்டனவா? வடபகுதியில் வாழும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கு உரிய காணி உரிமை உள்ளதா? இது போன்ற கேள்விகளை இந்த நேரத்தில் ஒரு புரிதலுக்காக எழுப்பிக்கொள்ள வேண்டியுள்ளது.

### மலையகத் தமிழரின் வடக்கு நோக்கிய நகர்வு:

இலங்கை சுதந்திரம் அடைந்ததும் இலங்கை வாழ் இந்தியர்களுக்கு இலங்கையில் நாடே இல்லை என்று சட்டம் நிறைவேற்றியது இலங்கை அரசு. பின்னர், மேட்டுக்குடி இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கிவிட்டு மலையகத் தமிழர் அடையாளம் பெற்ற இந்தியர்களை மட்டும் 'நாடற்றவர்' பட்டியலில் வைத்தது. பின்னர் இவர்களை நாடுகடத்த என இந்தியாவுடன் நேரு - கொத்தலாவல (1954), சிறிமா - சாஸ்த்திரி (1964), சிறிமா -இந்திரா (1974) என மூன்று ஒப்பந்தங்களைச் செய்தது இலங்கை அரசு. இந்த ஒப்பந்தங்களின் படி இந்தியா செல்ல ஒரு பகுதியினர் நிரப்பந்திக்கப்பட்டனர். அந்த அளவு ஐந்து இலட்சம் வரை ஆனது. அதுவரை மலையகம் கொண்டிருந்த மக்கள் பலத்தின் முதல் சரிவு இந்த நாடுகடத்தல் நடைமுறை யால் உருவானது. இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு மலையகத் தமிழர், நாடு கடத்தப்படாமல் இருந்திருந்தால் இன்று அவர்களே இலங்கையின் சனத்தொகையில் இரண்டாம் இடத் தைப் பெற்றிருப்பர்.

அடுத்த நிலையில், இந்தியா செல்லாமல் எஞ்சியோரில் ஒரு பகுதியினர், இலங்கைத் தமிழர்கள் அதிகம் வாழும் வடகிழக்கு பகுதியில் சென்று வாழலாம் எனத் தீர்மானம் எடுக்கும் சூழல் உருவாக்கப்பட்டது. இதற்கு ஏற்றாற்போல மலையகத் தமிழரை இலக்குவைத்து இன வன்முறைகளும் தெற்கில் நடந்தேறின. வடக்கில் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்ற காலம் அது. அவர்களுக்கு ஆட்பலம் தேவைப்பட்டது. குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு மக்கள் குடியிருப்பு தேவைப்பட்டது. இதனை உள்மனதிலும் மனிதாபிமானம் என்பதை வெளிமனதிலும் கொண்டு வடக்கு க்கு ஆள்கூட்டும் பணி ஆரம்பமானது. அதற்கு காந்தீயம் எனப் பெயர் வைக்கப்பட்டது. உண்மையில் அது 'தூசிப் படை' கட்டும் பணியே.

இப்படியாக, வடக்கு நோக்கிச் சென்றவர்களுள் பலர் தூசிப்ப-டையாக இலங்கை இராணுவத்திடம் சிக்கி மாண்டார்கள், ஈழப்போராட்டத்தில் சிக்குண்டு மாண்டவர்கள் போக, சுமார் ஒரு இலட்சம் அளவான மலையகத் தமிழர் இன்றும் வடக்கில் குறிப்பாக வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட ங்களில் வாழ்கின்றனர். ஆனால். சுமார் 6 ஆயிரம் அளவினரே தங்களை இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் எனப் பதிவு செய்து கொண்டுள்ளனர். ஏனையோர் இலங்கைத் தமிழர் எனப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

இப்படியாக வடக்குக்குச் சென்ற காரணத்தால் எண்ணிக்கையில் பலம் குறைந்த வர்களானார்கள் மலையகத் தமிழர்கள். அவர்களது அடையாளச் சிக்கல் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியது. இந்தியத் தமிழரா ? மலையகத் தமிழரா ? எனும் அந்த விவாதம் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, இப்போது இரண்டையும் சேர்த்து 'இலங்கைத் தமிழர் / மலையகத் தமிழர்' என இப்போது கணக்கிடப்பட்டு இலங்கையின் சனத் தொகையில் வெறும் 6 இலட்சம்தான் வாழ்வதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மலையகத் தமிழரின் சாத்தியமான எண்ணிக்கை 11 இலட்சத்துக்கும் உயர்வானது என்பதையும் தேசிய வீதாசாரம் 5%-க்கும் மேலானது என்பதையும் கடந்த டிசம்பர் மாத 'தாய்வீடு' இதழில் எனது கட்டுரை தெளிவு படுத்தியுள்ளது. இந்த நிலையில், வடக்கு நோக்கி இப்போது மலையகத் தமிழர்களை அழைப்பதோ அல்லது இழுப்பதோ அவர்களை எண்ணிக்கை அடிப்படையில் பாதிப்புக்குள்ளாக்கும்.

## இலங்கைத தமிழர் – மலையகத் தமிழர் அரசியல் புரிதல்:

இலங்கை சுதந்திரமடைந்த கையோடு இலங்கைக் குடியுரிமைப் பறிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் அதற்காகத் தொடர்ந்து போராடி 'இலங்கையே எங்கள் நாடு' எனச் சட்டரீதியாக வென்று காட்டியுள்ளனர். இந்தியாவில் அகதியாக வாழும் மலையகத் தமிழர், இலங்கை திரும்பி வந்தால் 2009-ஆம் ஆண்டு 6-ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தின் பிரகாரம், இலங்கைப் பிரஜை அந்தஸ்து பெறச் சட்ட ஏற்பாடு உண்டு.

இலங்கை சுதந்திரமடைந்த பிறகு 'தமிழரசு' நிறுவும் கட்சியைத் தோற்றுவித்த இலங்கைத் தமிழர் தரப்பு, பின்னாளில் தனித்தமிழீழக் கோரிக்கைவரை சென்றனர். மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தம் வரை நீண்ட அந்தப் போராட்டம் 2009-ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. எனவே, இலங்கையில் தமிழர்கள் நடத்திய இரண்டு நாட்டுரிமைப் போராட்டங்களும் 2009-ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது எனலாம்.

'இலங்கையில் வாழும் தமிழர்கள்' தமது சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகள் இரண்டினை முன்வைத்து சுதந்திர இலங்கையில் போராட்டம் நடத்தி உள்ளனர்.

- இலங்கையுடன் சேர்ந்து வாழ்தல் (இலங்கை பிரஜாவுரிமை) என்பது மலையகத் தமிழரின் அரசியல் நிலைப்பாடு.
- இலங்கையில் இருந்து பிரிந்து போவது இலங்கைத் தமிழர் அரசியல் நிலைப்பாடு.

இவை இரண்டும் இரு வேறுபட்ட திசை கொண்ட அரசியல் போராட்ட வடிவங்கள், என்பதை அரசியல் ரீதியாக புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது இரண்டு தமிழினங்களும் புதிய போராட்டத்தில் இருக்கிறார்கள்.

- இலங்கைத் தமிழர் - மீள் குடியேற்றம் (Resettlement).
- மலையகத் தமிழர் குடியேற்றம் (Settlement).

இலங்கைக் குடியுரிமை பெற்ற பின்னரே மலையகத் தமிழர் காணி உரிமை போராட்டத்தைக் கையில் எடுக்க முடியும். நாடே இல்லாத காலத்தில் காணி உரிமையைக் கேட்டுப் போராடுவது நடைமுறை யாதார்த்தமில்லை. எனவே, அந்தப் போராட்டத்தை இப்போது ஆரம்பித்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் தமது நாட்டுரிமைப் போராட்டத்துக்கு பரஸ்பரம் உதவிக்கொண்டுள்ளனர். இலங்கைத் தமிழர் தரப்பில் திம்பு கோட்பாட்டில் 'நாடற்ற தமிழருக்கு பிரஜாவுரிமை' எனும் கோரிக்கை மலையகத் தமிழருக்கு கைகொடுத்தது. அதே நேரம் ஈழப் போராட்டதுக்கு மலையகத் தமிழர்கள் உயிரையும் உணர்வையும் கொடுத்துள்ளனர். வடக்கில் இருந்து யுத்தத்தால் இடம்பெயர்ந்து வந்தவர்களை மேற்கத்தைய நாடுகளுக்கு முன்னமே தங்களோடு சேர்ந்து வாழ மலையகத்தவர்கள் சம்மதித்தனர். 2010-ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் ஒருவர் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகும் அளவுக்கு அது சென்றது. ஆனால், வடக்கில் இருக்கும் மலையகத் தமிழர் ஒருவர் அப்படியான அடைவினை அடையச் சாத்தியம் உள்ளதா என்பதை இங்கே எண்ணிப்பார்த்துக் கொள்ளவேண்டும். இப்போதும் கணிசமான இலங்கைத் தமிழர்கள் மலையகத்தில் வாழ்கின்றனர். அங்கே அவர்கள் சொந்தமாகக் காணிகளை வாங்கியுமுள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் இப்போது செய்ய வேண்டியது, மலையகத் தமிழரின் காணி உரிமை போராட்டத்தில் கைகோர்ப்பதுதான். அவர்கள் 200 வருடமாக வாழ்ந்த பூமியில் அவர்களை நிரந்தரமாக வாழ ஒத்துழைப்பதுதான். அதை விடுத்து வடக்கில் குடியேற அழைப்தோ அல்லது அங்கு போவதோ மலையகத் தமிழரின் போராட்டச் செறிவைக் குறைக்கும். ஏற்கனவே 5.2 சதவீதமாக உள்ள மலையகத் தமிழரை 2.8 சதவீதம் எனத் திரிபுபடுத்தும் திட்டம் நடந்து விட்டது. ஏட்டில் 'இலங்கைத் தமிழர்' எனப் பதியப்பட்ட 48 சதவீத மலையகத் தமிழர்களை நகர்த்தி வடக்குக்கு கொண்டு சென்று அங்கே 'தமிழ்த்தேசிய கணக்குக் காட்ட எண்ணுவது நல்லதல்ல'. அது இலங்கையில் இன்னுமொரு சகோதர தேசிய இனத்தைக் கூறுபோடும் கைங்கரியமாகவே முடியும்.

இப்போது மலையகத் தமிழர் தீவிரமாக முன்னெடுக்கும் காணி உரிமை போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதே வடகிழக்கு தமிழர்களின் நேர்மையான பணியாக வேண்டும். ஒரு சில மலையக அரசியல்வாதிகளின் கொள்கைத் தடுமாற்றக் கூற்றுகளை வரவேற்று, வடக்கில் இருந்து அரசியல் இழுப்புச் செய்வது அநாகரிகமானது.

அதே நேரம், இலங்கைத் தமிழர் இப்போது எதற்காகப் போராடுகிறார்கள் எனத் தெளிவுபடுத்தி, மலையகத் தமிழர் நிலையில் அதற்கான ஆதரவுத் தளத்தைப் பரஸ்பரம் தேடிக்கொள்ளலாம். அது தனிநாடா? சமஷ்டியா? மாகாணசபையா ? அல்லது வேறு ஏதுமா ? என்பதில் இன்னும் தெளிவு இல்லை. இவ்வாறு போராட்ட வடிவம் எதுவென எட்டப்படாத நிலையில், மலையகத் தமிழர்களையும் வடக்குக்கு அழைத்து அவர்களுக்கு எத்தகைய அரசியல் உரிமையைப் பெற்றுக்கொடுக்கப் போகின்றார்கள் என்பதே இப்போதைய கேள்வி.



thilagar@thaiveedu.com

## தொடக்கக் குறிப்புகள்:

டிட்வா சூறாவளி இலங்கையை நிலைகுலையச் செய்துள்ளது. கிட்டத்தட்ட முழு சமூகங்களும் சீர்குலைந்துள்ளன. வாழ்வாதாரங்கள் ஒரே இரவில் அழிக்கப்பட்டுள்ளன. முக்கியமான உள்கட்டமைப்பு சிதைந்துள்ளது. பல்லாயிரக்கணக்கானோர் புதிய பாதிப்புகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். டிட்வா இலங்கையின் நவீன வரலாற்றில் மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் ஒன்றாகும். மேலும் நாடு ஏற்கனவே பொருளாதார நெருக்கடி, சிக்கன நடவடிக்கைகள், பணவீக்கம் மற்றும் நிறுவன பலவீனத்தால் பலவீனமடைந்திருந்த நேரத்தில் இந்தப் பேரிடர் பேரழிவுகரமானது.

அத்தகைய பேரழிவிற்குப் பிறகு, இலங்கையர்களிடம் நியாயமான எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. மீட்பு செயல்முறை நியாயமானதாகவும், நீதியாகவும், எல்லோரையும் உள்ளடக்கியதாகவும், வெளிப்படையானதாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக, துன்பப்படும் மக்களின் வாழ்க்கை யதார்த்தங்களைப் புரிந்துகொள்பவர்களால் வழிநடத்தப்படும் என்பதே அந்த எதிர்பார்ப்பு. ஆனால், அரசாங்கம் ‘இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்’ நிதியத்திற்கான ஒரு மேலாண்மைக் குழுவை நியமித்துள்ளது, இதில் மூத்த அரசு அதிகாரிகளும் இலங்கையில் உள்ள பெருநிறுவனங்களின் தலைவர்களும் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். பேரிடர் பாதித்த சமூகங்களின் ஒரு பிரதிநிதி கூட இல்லை. பெண்கள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், அடிமட்ட சிவில் சமூகத்தினர், மனிதாபிமான அமைப்புகள் அல்லது உள்ளூர் அரசாங்க அமைப்புகளில் இருந்து ஒரு பிரதிநிதி கூட இக்குழுவில் இல்லை. இவர்களே களத்தில் முதலில் பதிலளித்தவர்கள். பல தசாப்தங்களாக பேரிடர் மேலாண்மை நிபுணத்துவம் பெற்ற கல்வியாளர்கள், நிபுணர்களுக்கு இக்குழுவில் இடம் இல்லை. தொழில்முறை அமைப்புகளிடமிருந்து ஒரு அடையாளக் குரல் கூட இல்லை.

இது தற்செயலானதல்ல. இது அரசாங்கத்தின் சிந்தனை முறையின் வெளிப்பாடு. ஒரு தேசிய சோகத்தை உயரடுக்கின் பிடிக்குள் சிக்கவைக்கும், அனைத்தையும் மேலிருந்து கீழ் நோக்கி வடிவமைக்க நினைக்கும், அனைத்தையும் பொது அவநம்பிக்கையின் மற்றொரு அத்தியாயமாக மாற்றும் ஒரு வடிவமைப்புக் குறைபாடு.

இந்தக் கட்டுரை, குழுவின் தற்போதைய அமைப்பு கொள்கையளவில் தவறானது, வடிவமைப்பில் குறைபாடுடையது மட்டுமல்ல, ஆபத்தானது. பெருநிறுவன செயற்பாட்டாளர்கள் ஏன் மீட்சியை வழிநடத்த முடியாது - மற்றும் கூடாது, தொழில்நுட்ப மையப்படுத்தல் ஏன் தோல்விக்கான ஒரு செய்முறையாகும் என்பதை விளக்க முயல்கிறது. மேலும், நீதி, கண்ணியம், வாழ் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கீழிருந்து மேல் நோக்கிய, சமூகத்தால் இயக்கப்படும் மாதிரி இலங்கைக்கு அவசரமாக ஏன் தேவைப்படுகிறது என்பதை நிரூபிக்க முயல்கிறது.

# பேரிடரின் மீதான பேரிடர்: இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

tg.theeban@gmail.com

பேரிடர் மீட்பு என்பது ஒரு நிர்வாக அறைத் திட்டம் அல்ல.

ஒரு பேரிடர் மீட்பு என்பது ஒரு நிறுவன நெருக்கடி அல்ல. அது ஒரு மனித நலத் திட்டம். வாழ்க்கையை மீண்டும் கட்டி யெழுப்புவதற்கு வளங்கள், விநியோகம் மற்றும் 'முகாமைத் துவத் திறன்' ஆகியவற்றை விட அதிகம் தேவைப்படுகிற ஒரு திட்டமாகும். பேரிடர் மீட்பு என்பது அடிப்படையில் கண்ணியம், சுயாட்சி, வாழ்வாதாரங்கள், வீடுகள், சமூக ஒற்றுமையை மீட்டெடுப்பது பற்றியது. இவை அனைத்தும் ஆழமான மனித, சமூக, உளவியல், மற்றும் கலாசார செயல் முறைகளாகும். நிறுவனத் தலைவர்கள், தங்கள் துறைகளில் எவ்வளவு சாதித்திருந்தாலும், இத்தகைய செயல்முறையை வழிநடத்த தேவையான இயல்பாக புரிதல் அவர்களிடம் இருக்காது. அவர்களின் முடிவெடுக்கும் கட்டமைப்புகள் இலாப ஊக்கத்தொகை, செலவுத் குறைப்புத் திறன், விரைவான விநியோகம் மற்றும் ஆபத்தைக் குறைத்தல் ஆகியவற்றால் வடிவமைக்கப்படுகின்றன. இவை அனைத் தும் ஒரு தனியார் நிறுவன சூழலில் பயனுள்ளதாக இருக் கும். ஆனால், சமத்துவம், உள்ளடக்கம், சமூக பாதிப்பு, மனவடு ஆகியவை மையமாக இருக்க வேண்டிய பேரிடர் மீட்புக்கு ஆழமாக போதுமானதாக இல்லை. இது தனிப்பட்ட நிறுவனத் தலைவர்களின் மீதான விமர்சனம் அல்ல. இது நிறுவனத் திறன்களுக்கும் பேரிடர் மீட்புத் தேவைகளுக்கும் இடையிலான உள்ளார்ந்த பொருத்தமின்மையின் மீதான விமர்சனமாகும்.

முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகள் (Key Performance Indicators), செலவுக் குறைப்பு மற்றும் செயற்றிறன் அளவீடு களை மையமாகக் கொண்ட ஒரு குழு நிர்வாக அறையில் (Board room) முடிவெடுக்கும் கலாசாரத்தை உடையோர், பின்வரும் கேள்விகளை எதிர்கொள்ள போதுமான அறி வையோ அனுபவத்தையோ கொண்டிருப்பதில்லை.

- படகுகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் சந்தை வாய்ப் புகளை இழந்த சிறுதொழில் மீனவர்களின் வாழ்வாதாரத் தைஎவ்வாறு மீட்டெடுப்பது?
- இப்போது தனியாக மறுகட்டமைப்புக்கு பணிகளின் முழுப் பொறுப்பையும் சுமக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான ஆதரவை எவ்வாறு முன்னுரிமைப் படுத்துவது?
- தோட்டத் தொழிலாளர்கள், குழந்தைகள் மற்றும் வலு வளரினர்களுக்கு சமமான வள ஒதுக்கீட்டை எவ்வாறு உறுதி செய்வது?
- மறுகட்டமைப்பு ஒப்பந்தங்களை ஒதுக்குவதில் ஊழல், ஆதரவு மற்றும் உயரடுக்கு பிடிப்பை எவ்வாறு தடுப்பது?
- ஏற்கனவே அரசால் கைவிடப்பட்டதாக உணரும் சமூகங் கள் மீதான நம்பிக்கையை எவ்வாறு மீண்டும் உருவாக் குவது?

இவை நீதியைப் பற்றிய கேள்விகளும், உயிருடன் இயங்கும் சமூக இயக்கங்களைப் பற்றிய கேள்விகளுமாகும். ஒரு நாட்டை நிறுவனக் கட்டமைப்புகளின் தர்க்கத்தால் மட்டுமே மீண்டும் கட்டியெழுப்பிவிட முடியாது. அது சமூக ஞானம், மக்களிடையே நிலவும் ஒற்றுமை மற்றும் ஜனநாயகப் பங் கேற்பு ஆகியவற்றின் ஊடாகவே அதை மீண்டும் கட்டி யெழுப்ப வேண்டும்.

## சமூகக் குரல்கள் இல்லாமை சிறிய குறையல்ல – அது ஒரு அபாயம்:

இலங்கையின் மீட்பு முயற்சியின் தலைமையிலிருந்து சமூகக் குரல்களைத் தவிர்ப்பது ஒரு சிறிய தவறு அல்ல. இது முழு மறுசீரமைப்பு செயல்முறையின் சட்டபூர்வமான தன்மை, செயற்றிறன் மற்றும் நீதியை அச்சுறுத்தும் ஒரு ஆழமான கட்டமைப்பு தோல்வியாகும். பேரிடர் மீட்பு என்பது உதவி களை விநியோகிப்பதில் அல்லது உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதில் உள்ள ஒரு தொழில்நுட்ப முயற்சி மட்டு மல்ல. இது ஒரு ஆழமான சமூக, அரசியல் செயல்முறை யாகும், இது மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்ந்த அனுபவங்களில் வேரூன்ற வேண்டும். இந்த சமூகங்களின் அர்த்தமுள்ள பங்கேற்பு இல்லாமல் ஒரு தேசிய மீட்பு பொறிமுறை வடிவமைக்கப்படும்போது, அது யதார்த்தத் திலிருந்து விலகி, தீர்ப்புக்கு ஆபத்தான முறையில் பாதிக் கப்படக்கூடியதாகிவிடும். சமூக பிரதிநிதித்துவம் இல்லாதது ஒரு நிர்வாக இடைவெளி அல்ல. அது அதன் மேல் கட் டமைக்கப்பட்ட அனைத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத் தும் ஒரு அடித்தளக் குறைபாடு ஆகும்.

ஒவ்வொரு பேரிடர் மீட்பு நடவடிக்கையும் ஒரு எளிய உண்மையிலிருந்து தொடங்குகிறது: முதலில் பதிலளிப் பவர்கள் எப்போதும் சமூகங்களே. டிட்வா சூறாவளிக்குப் பிறகு சில மணிநேரங்கள் மற்றும் நாட்களில், அண்டை வீட்டார், இளைஞர் குழுக்கள், மத நிறுவனங்கள், உள்ளூர் தன்னார்வலர்கள் மற்றும் முறைசாரா வலைப்பின்னல்கள் என்பன மிகவும் அவசரமான பணிகளை மேற்கொண்டன. சிக்கிய நபர்களை மீட்பது, உணவு விநியோகிப்பது, குப்பை களை அகற்றுவது, தற்காலிக தங்குமிடங்களை நிர்வகிப்பது மற்றும் அவர்கள் சேகரிக்கக்கூடிய வளங்களைப் பகிர்ந்து கொள்வது. இந்த உள்ளூர் செயற்பாட்டாளர்கள் தங்கள் சொந்த பிராந்தியங்களின் நிலப்பரப்பு, சமூக வலைப்பின் னல்கள், கலாசார விதிமுறைகள் மற்றும் பாதிப்புகள் பற்றிய விலைமதிப்பற்ற அறிவைக் கொண்டுள்ளனர். எந்தக் குடும் பங்கள் தனியாக வாழ்கின்றன, எந்தப் பகுதிகள் நிலச்சரிவு களுக்கு ஆளாகின்றன, எப்பகுதியில் பாதுகாப்பாகத் தங்க வைக்க முடியும், எந்த வீடுகளுக்கு அவசர ஆதரவு தேவை என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த நெருக்கமான அடிப்படை அறிவை எந்தத் தேசியக் குழுவும், அதன் உறுப் பினர்கள் எவ்வளவு தகுதி வாய்ந்தவர்களாக இருந்தாலும் கொண்டிருக்க முடியாது. முடிவெடுப்பதில் இருந்து இந்தக் குரல்களை விலக்குவது என்பது, கிடைக்கக்கூடிய மிகவும் துல்லியமான மற்றும் சூழல் சார்ந்த தகவல்களை நிராகரிப் பதாகும்.

இதன் விளைவுகள் தொலைநோக்குடையவை. சமூக உள் ளீடு இல்லாமல், மீட்பு முயற்சிகள் பொதுவானதாகவும், மேலிருந்து கீழாகவும், தவறாகவும் மாறும் அபாயம் உள்ளது. வீட்டுவசதி வடிவமைப்புகள் கலாசார நடைமுறைகளுக்கு பொருந்தாமல் போகலாம்; குடியிருப்பாளர்களை விட ஒப்பந்தக்காரர்களுக்கு பயனளிக்கும் இடங்களில் உள்கட்ட




மைப்பு திட்டங்கள் முன்னுரிமை அளிக்கப்படலாம்; வாழ்வாதார மறுசீரமைப்பு திட்டங்கள் உள்ளூர் பொருளாதாரங்களின் முறைசாரா அல்லது பருவகால தன்மையை கவனிக்காமல் போகலாம்; முக்கியமாக சமூக ஆதரவு திட்டங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை அடையத் தவறிவிடக்கூடும். இந்த தவறுகள் கற்பனையானவை அல்ல. இலங்கையின் கடந்தகால பேரழிவுகளில் அவை மீண்டும் மீண்டும் நடந்துள்ளன, அங்கு வெளிப்புறமாக வடிவமைக்கப்பட்ட தலையீடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை யதார்த்தங்களைப் பிரதிபலிக்காததால் அவை தோல்வியடைந்தன. சமூகங்கள் மேசையில் இல்லாதபோது, நல்ல நோக்கத்துடன் கூடிய கொள்கைகள் கூட அர்த்தமற்றதாகவோ அல்லது தீங்கு விளைவிப்பதாகவோ மாறக்கூடும்.

மேலும், சமூக அக்கறையுள்ள குரல்கள் விலக்கப்படுவது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை அளிக்கிறது. பேரிடருக்குப் பின்னர், நிதி அல்லது தளவாடங்களைப் போலவே மக்களின் நம்பிக்கையும் அவசியமான ஒரு வளம். இதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். நெருக்கடிக்குப் பிந்தைய சூழல்களில், நம்பிக்கை உடையக்கூடியது. பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கனவே அதிர்ச்சி, இடப்பெயர்ச்சி, இழப்புடன் போராடி வருகின்றனர். அவர்களின் ஈடுபாடு இல்லாமல் தங்கள் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகள் எடுக்கப்படுவதைக் காணும்போது, சந்தேகம் அதிகரிக்கிறது. மீட்புத் திட்டங்கள் பொது நலனுக்கான கூட்டு முயற்சிகளுக்குப் பதிலாக அரசியல் திட்டங்கள் அல்லது உயரடுக்கின் உந்துதல் நிகழ்ச்சி நிரல்களாகக் கருதப்படுகின்றன. இந்த நம்பிக்கையின்மை செயல்படுத்தலை மெதுவாக்குகிறது, வெறுப்பை வளர்க்கிறது, இல்லையெனில் வெற்றிபெறக்கூடிய முயற்சிகளுக்கு வெளிப்படையான எதிர்ப்பை கூட ஏற்படுத்தும். கேட்கப்படாத குரல்களை உடைய சமூகங்கள் மீட்பு செயல்முறையின் மீது உரிமையை உணராது. உரிமை இல்லாமல் மீட்பு என்பது உடையக்கூடியது, தற்காலிகமானது மற்றும் நீடிக்க முடியாதது.

சமூகக் குரல்கள் இல்லாதது நாட்டின் பொறுப்புணர்வை இழக்கச் செய்கிறது. வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணித்தல், முறைகேடுகளைக் கண்டறிதல் மற்றும் ஆதரவு மிகவும் தேவைப்படுபவர்களைச் சென்றடைவதை உறுதி செய்தல் போன்ற இயற்கையான கண்காணிப்புக் குழுக்களாகச் சமூகங்கள் செயல்படுகின்றன. அவர்கள் விலக்கப்படும்போது, பொறுப்புக்கூறலுக்கான இடம் சுருங்குகிறது, மேலும் ஊழல், தவறான ஒதுக்கீடு மற்றும் உயரடுக்கு பிடிப்புக்கான வாய்ப்புகள் விரிவடைகின்றன. பல ஆண்டுகளாக தவறான மேலாண்மை மற்றும் பொருளாதார நெருக்கடியால் அரசு நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை ஏற்கனவே பலவீனமடைந்துள்ள இலங்கை போன்ற சூழலில் இது மிகவும் ஆபத்தானது. பங்கேற்பு மேற்பார்வை இல்லாமல் ஒரு மீட்பு செயல்முறை கடந்த காலத் தவறுகளை மீண்டும் செய்வதையும் குடிமக்களின் உரிமையை பறிக்கும் உணர்வை ஆழமாக்கும் ஆபத்தில் ஆழ்த்துகிறது.

தலைமைத்துவ அமைப்பிலிருந்து சமூகக் குரல்களை விலக்கி வைப்பது வெறுமனே ஜனநாயக விரோதமானது மட்டுமல்ல, அது நடைமுறைக்கு மாறானது, திறமையற்றது மற்றும் எதிர்விளைவுகளை உருவாக்கக் கூடியது. மீட்பை திணிக்க முடியாது. அது இணைந்து உருவாக்கப்பட வேண்டும். சமூகங்கள் உதவியைப் பெறுபவர்களாகக் கருதப்படக்கூடாது, மாறாக நிறுவனம், நிபுணத்துவம் மற்றும் அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் முடிவுகளை வடிவமைக்கும் உரிமையுடன் கூட்டாளிகளாகக் கருதப்பட வேண்டும். இதை அங்கீகரிக்கத் தவறுவது மீட்பு முயற்சியை தொழில்நுட்ப ஆணவத்தின் ஒரு பயிற்சியாக மாற்றுகிறது, இது அதிகாரத்தை ஞானமாகவும், படிநிலையை செயற்திறனுக்காகவும் தவறாகப் புரிந்துகொள்கிறது.

டிட்வா சூறாவளிக்குப் பிறகான மீண்டெழல் என்பது, காலாவதியான, மேல்-கீழ் நிர்வாக மாதிரிகளிலிருந்து முறித்துக் கொள்ள இலங்கைக்கு ஒரு முக்கியமான வாய்ப்பை வழங்குகிறது. ஆனால், மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாடு எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்பப்படுகிறது என்பதில் குரல் மறுக்கப்பட்டால் இந்த வாய்ப்பு வீணாகிவிடும். அவர்கள் இல்லாதது வெறும் இடைவெளி அல்ல, இது முழு மீட்பு முயற்சியையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு அபாயகரமான குறைபாடு. சமூகங்கள் இல்லாமல் கட்டமைக்கப்பட்ட ஒரு செயல்முறை அவர்களுக்குச் சேவை செய்வதாகக் கூற முடியாது. மக்களுக்கு சேவை செய்யாத மீட்பு தொடங்குவதற்கு முன்பே தோல்வியடைந்துவிட்டது.

மேலிருந்து கீழாக முடிவெடுப்பது மோசமான கொள்கையையும் வள வீணடிப்பையும் உருவாக்குகிறது.

இலங்கையின் பேரிடருக்குப் பிந்தைய தலையீடுகளின் நீண்ட வரலாறு தொடர்ச்சியான ஒரு வடிவத்தைக் காட்டு

கிறது. முடிவுகள் அமைச்சுக்கள், நிர்வாக அறைகள் மற்றும் உயரடுக்கு குழுக்களுக்குள் மட்டுமே உயர்மட்டத்தில் எடுக்கப்படும்போது, அந்த முடிவுகள் பெரும்பாலும் கள யதார்த்தங்களைப் பிரதிபலிக்கத் தவறிவிடுகின்றன. இதன் விளைவாக பயனற்ற கொள்கைகள், மோசமான செயல்படுத்தல் மற்றும் கணிசமான வள விரயம் ஏற்படுகிறது. மேலிருந்து கீழாக முடிவெடுப்பது நிபுணத்துவம், அதிகாரம் மற்றும் நுண்ணறிவு ஒரு திசையில் - மையத்திலிருந்து வெளிப்புறமாகப் - பாய்கிறது என்று கருதுகிறது. இருப்பினும் பேரழிவுகள் எதிர்மாறாக வெளிப்படுத்துகின்றன. மிகவும் துல்லியமான அறிவு, தெளிவான முன்னுரிமைகள், மிகவும் நடைமுறை தீர்வுகள் கிட்டத்தட்ட எப்போதும் களத்தில் உள்ள மக்களிடமிருந்து வருகின்றன. உள்ளூர் சூழல்களிலிருந்து அகற்றப்பட்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் நிறுவனத் தலைவர்களிடையே மீட்பு முடிவுகள் மையப்படுத்தப்பட்டால், இதன் விளைவாக ஒரு மீட்பு செயல்முறை காகிதத்தில் திறமையானதாகத் தோன்றினாலும் நடைமுறையில் சரிந்துவிடும்.

மேலிருந்து கீழ்நோக்கிய அணுகுமுறைகளின் அடிப்படை சிக்கல்களில் ஒன்று, அவை அனுமானங்களை பெரிதும் நம்பியிருப்பதுதான். கொழும்பில் உள்ள அதிகாரிகள் வீட்டு வசதியை மீண்டும் கட்டியெழுப்புவதே முதன்மையான முன்னுரிமை என்று கருதலாம், உண்மையில், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதில் அதிக அக்கறை கொண்டிருக்கலாம். மீன்பிடி உபகரணங்களைச் சரிசெய்தல், விவசாய நிலங்களை மறுசீரமைத்தல் அல்லது உள்ளூர் பொருளாதாரங்களை நிலைநிறுத்தும் முறைசாரா சந்தைகளை மீட்டெடுப்பது போன்ற சமூக அளவிலான தலையீடுகளுக்கான அவசரத் தேவையைப் புறக்கணித்து, பெரிய அளவிலான உள்கட்டமைப்பு திட்டங்கள் முன்னேற்றத்தை நிரூபிக்க விரைவான வழி என்று நிறுவனத் தலைவர்கள் நினைக்கலாம். கட்டளையிடும் பதவிகளில் இருப்பவர்கள் பேரிடரில் இருந்து தப்பியவர்களின் அன்றாட வாழ்க்கையிலிருந்து துண்டிக்கப்படுவதால் இந்த பொருந்தாத தன்மைகள் எழுகின்றன. நிகழ்நேர உள்ளூர் உள்ளீடு இல்லாதது நல்ல நோக்கத்துடன் ஆனால் தவறாக வழிநடத்தப்பட்ட கொள்கைகளுக்கு வழி வகுக்கிறது.

> **“2004 சுனாமி உட்பட இலங்கையில் முந்தைய பேரழிவுகளுக்குப் பிறகு, ஏராளமான மறுசீரமைப்புத் திட்டங்கள் கலாசார அல்லது நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாததால் சமூகங்களால் கைவிடப்பட்டன. பல திட்டங்கள் மோசமாக நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வியடைந்தன. இன்னும் பல, மக்களால் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டன.”**

மேலிருந்து கீழாக மீட்சியைத் திட்டமிடுவது என்பது வெறும் தத்துவார்த்தப் பிரச்சனை மட்டுமல்ல. அவை செயற்பாட்டு ரீதியாகத் தவறானவை என்பதும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. 2004 சுனாமி உட்பட இலங்கையில் முந்தைய பேரழிவுகளுக்குப் பிறகு, ஏராளமான மறுசீரமைப்புத் திட்டங்கள் கலாசார அல்லது நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாததால் சமூகங்களால் கைவிடப்பட்டன. பல திட்டங்கள் மோசமாக நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வியடைந்தன. இன்னும் பல, மக்களால் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டன. மக்களின் சொந்த நிலங்கள் அல்லது வாழ்வாதாரங்களிலிருந்து வெகு தொலைவில் கட்டப்பட்டதால் முழு வீட்டுத் திட்டங்களும் காலியாக இருந்தன. மீன்பிடி அனுபவம் இல்லாத உள்நாட்டு சமூகங்களுக்கு படகுகள் விநியோகிக்கப்பட்டன. உள்ளூர் மண்ணுக்குப் பொருந்தாத விதைகள் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டு பயன்படுத்தப்படாமல் விடப்பட்டன. இந்த தோல்விகள் தற்செயலானவை அல்ல. அவை அடிமட்டத்தில் வாழும் யதார்த்தங்களை விட மேலே எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு சலுகை அளிக்கும் ஒரு மாதிரியின் நேரடி விளைவுகளாகும்.

மேலும், மேலிருந்து கீழாக முடிவெடுப்பது சமூகங்களுக்கு அதிக மதிப்பை வழங்குவதை விட அதிக தெரிவுநிலையை வழங்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அரச அதிகாரத்தில் உள்ளோரும் பெருநிறுவன உயரடுக்கினரும் பெரும்பாலும் பெரிய, குறியீட்டுத் திட்டங்களான பல மாடி வீட்டு வளாகங்கள், புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் அல்லது நவீனமயமாக்கப்பட்ட பொது இடங்களை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள். அவை நன்கொடையாளர்கள் மற்றும் ஊடகங்களுக்குக் காட்டப்படலாம். அத்தகைய திட்டங்களுக்கு தேவை இருந்தாலும், உள்ளூர் கிணறுகளைச் சரிசெய்தல், சமூக அரங்குகளை மீட்டெடுத்தல், சிறு வணிகங்களை வலுப்படுத்துதல் போன்ற குறைவான கவர்ச்சிகரமான ஆனால் மிகவும் அத்தியாவசியமான தேவைகளிலிருந்து கவனத்தையும் நிதியையும் அடிக்கடி திசை திருப்புகின்றன. முடிவெடுப்பது மையப்படுத்தப்பட்டதாக இருக்கும்போது, நீண்டகால மீட்புக்கு மிகவும் தேவையானதை விட, அரசியல் ரீதியாகவோ அல்லது பார்வை ரீதியாகவோ மிகவும் கவர்ச்சிகரமானதை நோக்கிய தர்க்கமாக மாறுகிறது. இது தவிர்க்க முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தத் தவறும் வளங்களை தவறாக ஒதுக்குவதற்கு வழிவகுக்கிறது.

மேலிருந்து கீழ் நோக்கித் திட்டமிடப்பட்ட கட்டமைப்புகளின் கீழ் ஊழல் அபாயங்களும் பெருகும். ஒரு சிறிய குழுவினரிடையே அதிகாரத்தை குவிப்பது தெளிவற்ற கொள்முதல் செயல்முறைகள், உயர்த்தப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அரசியல் ஆதரவுக்கு வளமான நிலத்தை உருவாக்குகிறது. சமூக கண்காணிப்பு அல்லது பங்கேற்பு மேற்பார்வை இல்லாமல், பலருக்குப் பயனளிக்கும் திட்டங்களுக்கு வளங்கள் திருப்பி விடப்படுவது எளிதாகிறது. இலங்கையின் நிர்வாகத்தில் பொதுமக்கள் இந்த முறையை மீண்டும் மீண்டும் கண்டிருக் கிறார்கள். அதிகாரம் குவிந்து மேற்பார்வை குறைவாக இருக்கும்போது, நிதி வீணாகி தவறாகப் பயன்படுத்தப் படுகிறது. தேசிய நிதி ஏற்கனவே பலவீனமாக இருக்கும் சூழலில், இத்தகைய இழப்புகள் துரதிர்ஷ்டவசமானவை மட்டுமல்ல. அவை பேரழிவை ஏற்படுத்துகின்றன.

மேலிருந்து கீழாக திட்டமிடுவது மீட்பு வேகத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மையப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் சிக்கலானவை. இவ்வகைப்பட்ட அதிகாரத்துவத்தை மாற்றியமைப்பதோ சீர்திருத்தவோ மிகவும் கால

மெடுக்கும் காரியம். இங்கு கோரிக்கைகள் நீண்ட ஒப்புதல் சங்கிலிகள் வழியாக நகர வேண்டும், மதிப்பீடுகள் பல அமைச்சரவைகள், திணைக்களங்கள்; மூலம் அனுப்பப்பட வேண்டும், மேலும் கொள்முதல் கடுமையான, நேரத்தை எடுத்துக்கொள்ளும் நடைமுறைகளைப் பின்பற்றுகிறது. இதற்கிடையில், தங்குமிடம், வருமான ஆதரவு, அத்தியா வசிய சேவைகளைப் பெறுவதில் சமூகங்கள் தாமதங் களைச் சந்திக்கின்றன. இதற்கு நேர்மாறாக, முடிவுகள் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்போது, மீட்பு மிகவும் சுறுசுறுப்பாகவும், பதிலளிக்கக்கூடியதாகவும், திறமையாகவும் இருக்கும். மேலிருந்து கீழாக அமைப்புகளின் விறைப்பு, பேரிடர் மீட்புக் குத் தேவையான அவசரத்திற்கு ஒரு தடையாக மாறும்.

இறுதியில், மேலிருந்து கீழாக முடிவெடுப்பது மோசமான கொள்கையை உருவாக்குகிறது, ஏனெனில், அது இடை வெளியை அடிப்படையாகக் கொண்டது. நெருக்கடியி லிருந்து இடைவெளி, பாதிக்கப்பட்ட சமூகங்களிலிருந்து இடைவெளி மற்றும் களத்தில் உள்ள சிக்கலான சமூக மற்றும் பொருளாதார யதார்த்தங்களிலிருந்தான இடைவெளி. இது சமூகங்களை மறுகட்டமைப்பில் கூட்டாளர்களாக இல்லாமல் செயலற்ற பெறுநர்களாகக் கருதுகிறது. இதன் விளைவாக பணம், நேரம் மற்றும் வாய்ப்பை வீணடிக்கும் ஒரு மீட்பு செயல்முறை அரங்கேறுகிறது. இது தணிக்க முயற் சிக்கும் துன்பங்களை அதிகரிக்கும் காரியத்தையே செய்கிறது.

டிட்வா சூறாவளிக்குப் பிறகு இலங்கை இந்த தவறுகளை மீண்டும் செய்ய முடியாது. களத் திற்கு வெகு தொலைவில் குளிரூட்டிய அறை களில் அமர்ந்தபடி முடிவெடுப்பவர்களால் வடி வமைக்கப்பட்ட ஒரு மீட்புத் திட்டம் தவிர்க்க முடியாமல் பேரழிவிற்குள்ளான சமூகங்களின் நுணுக்கமான தேவைகளைப் பார்க்கவோ, புரிந்து கொள்ளவோ அல்லது பதிலளிக்கவோ தவறி விடும். களத்தில் உள்ளவர்களுடன் நேரடியாக ஈடுபடும் ஒரு மாதிரி மட்டுமே - படிநிலைக்கு மேல் பங்கேற்பையும், உயரடுக்கு அனுமானங்களை விட உள்ளூர் அறிவையும் மதிக்கும் ஒரு மாதிரி மட்டுமே - நியாயமான, பயனுள்ள, கண்ணியமான மீட்சியை வழங்க முடியும். மேலிருந்து கீழாக முடிவெடுப்பதன் விளைவுகளை நாடு பல முறை கண்டிருக்கிறது, இப்போதும் அப்பாடங்களைப் புறக்கணிக்கிறது என்பது துன்பகரமானது.

## உயரடுக்குக் கைப்பற்றல் என்ற சாத்தியமான ஆபத்து:

பேரிடர் மீட்பு வளங்கள் ஒரு சிறிய, சக்திவாய்ந்த குழுவின் கைகளில் மையப்படுத்தப்படும் போதெல்லாம், அச்செயன் முறை உயரடுக்கின் கைப்பற்றலுக்கான (elite capture) ஆபத்தை அதிகரிக்கிறது. அரசியல் ஆதரவு வலைப் பின்னல்கள், தெளிவற்ற விநியோக அமைப்புகள், பலவீன மான பொது நம்பிக்கை ஆகியவற்றின் நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் சூழலில், இந்த ஆபத்து கற்பனை யானது அல்ல. இது கிட்டத்தட்ட தவிர்க்க முடியாதது. அரசியல் செல்வாக்கு, பொருளாதார அல்லது நிர்வாக செயற்பாட்டாளர்களின் முடிவுகளில் ஆதிக்கம் செலுத்தி, பொது வளங்களைத் தங்கள் சொந்த நலன்கள் அல்லது அவர்களின் வலைப்பின்னல்களின் நலன்களை நோக்கித் திருப்பும்போது உயரடுக்கின் கைப்பற்றல் என்பது நிகழ் கிறது. ஒரு மீட்புக் குழு சிவில் சமூகம், உள்ளூர் சமூகங்கள், சுயாதீன மேற்பார்வை அமைப்புகளின் எந்தவொரு எதிர் சமநிலை இருப்பும் இல்லாமல், மூத்த அரசு அதிகாரிகள் மற்றும் பெருநிறுவனத் தலைவர்களால் மட்டுமே உருவாக் கப்படும்போது, அவ்வமைப்பு கட்டமைப்பு ரீதியாக அத்த கைய கைப்பற்றலுக்கு ஆளாகிறது. பிரச்சினை தனிப்பட்ட ஒருமைப்பாடு பற்றியது அல்ல, ஆனால் நிறுவன வடிவமைப்பு பற்றி யது. அதிகாரமும் பணமும் ஒரு சிறிய வட்டத்தில் ஒன்றிணையும்போது, துஷ் பிரயோகம் எளிதாகிறது, பொறுப்புக் கூறல் கடினமாகிறது.

> **“மோதலுக்குப் பிந்தைய மறுசீரமைப்பு நிதிகள் முதல் சுனாமி வீட்டுவசதித் திட்டங்கள், பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் வரை, உயரடுக்கின் செல்வாக்கு பெரும்பாலும் அரசியல் ரீதியாக இணைக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்னுரிமை பெறுதல், மூடிய கதவுகளுக்குப் பின்னால் குறிப்பிடத்தக்க முடிவுகள் எடுக்கப்படுதல் போன்றவற்றுக்கு வழிவகுத்துள்ளது.”**

கடந்த கால நெருக்கடிகளின் போது இந்த இயக்கவியல் மீண்டும் மீண்டும் வெளிப்படுவதை இலங்கை கண்டுள் ளது. மோதலுக்குப் பிந்தைய மறுசீர மைப்பு நிதிகள் முதல் சுனாமி வீட்டு வசதித் திட்டங்கள், பெரிய அள விலான அபிவிருத்தித் திட்டங்கள் வரை, உயரடுக்கின் செல்வாக்கு





பெரும்பாலும் அரசியல் ரீதியாக இணைக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்னுரிமை பெறுதல், மூடிய கதவுகளுக்குப் பின்னால் குறிப்பிடத்தக்க முடிவுகள் எடுக்கப்படுதல் போன்ற வற்றுக்கு வழிவகுத்துள்ளது. இவை தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் அல்ல. ஆனால் மையப் படுத்தப்பட்ட நிர்வாகத்தின் முறையான பாதிப்புகளை வெளிப்படுத்தும் வடிவங்கள். சூறாவளி மீட்பு நிதிகளை வெளிப்படைத்தன்மை அல்லது சமூக பிரதிநிதித்துவம் இல்லாமல் அதே உயரடுக்கு வலைப்பின்னலின் கைகளில் வைப்பது, பொது வளங்களை மிகவும் தேவைப்படும் பாதிக் கப்பட்ட மக்களுக்குப் பதிலாக வணிக நலன்கள், அரசியல் கூட்டாளிகள், அதிகாரத்துவ முன்னுரிமைகளுக்கு பயனளிக் கும் திட்டங்களுக்கு வழிநடத்தக்கூடிய சூழலை உருவாக்கு கிறது. இத்தகைய தவறான பயன்பாடு பற்றிய கருத்து கூட பொதுமக்களின் நம்பிக்கைச் சிதைக்கக்கூடும். அரசின் மீதான பொது நம்பிக்கை பல ஆண்டுகளாக பலவீனமாக உள்ளது என்பதையும் மறந்துவிடலாகாது.

தற்போதைய குழுவின் வடிவமைப்பு இந்த ஆபத்தை தீவிரப் படுத்துகிறது. நிதியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள பெரு நிறுவனத் தலைவர்கள், மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள், ஆலோசனைப் பத்திரங்கள், உள்கட்டமைப்பு மேம்பாடு அல்லது விநியோக ஒப்பந்தங்கள் மூலம் லாபம் ஈட்டும் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தலாம். நோக்கங்கள் நல்லதாக இருந்தாலும் கூட, இது உள்ளார்ந்த நலன் மோதல்களை உருவாக்குகிறது. மறுசீரமைப்பு முடிவுகளால் பயனடையக்கூடியவர்களும் அந்த முடிவுகளை பாதிக்க நிலைநிறுத்தப்படும்போது, பொதுச்சேவைக்கும் தனியார் ஆதாயத்திற்கும் இடையிலான கோடுகள் ஆபத்தான முறை யில் மங்கலாகின்றன. சுயாதீன மேற்பார்வை வழி முறைகள், வெளிப்படையான கொள்முதல் நடைமுறைகள் மற்றும் சமூக ஆய்வு இல்லாமல், நீதியை விட இலாபத் தையும், பொருத்தத்தை விட வேகத்தையும், உண்மையான தாக் கத்தை விட தெரிவுநிலையை சலுகை செய்யும் முடிவு களுக்கும் இந்த அமைப்பு பாதிக்கப்படக்கூடியதாக மாறும்.

உயரடுக்குக் கைப்பற்றல் முன்னுரிமைகளையும் சிதைக் கிறது. உயர்மட்டக் குழுக்கள் - அவர்களின் சமூகப் பொருளாதார நிலைப்பாட்டின் காரணமாக - தங்கள் சொந்த நலன்களாலும் அவர்தம் கண்ணோட்டங்களால் வடிவமைக் கப்பட்ட ஒரு கண்ணாடியின் வழியாக அவர்கள் மீட்சியைப் பார்க்க முனைகிறார்கள். வணிக வாய்ப்புகள், அரசியல் தெரிவுநிலை அல்லது நன்கொடையாளர் எதிர்பார்ப்பு களுடன் இத்தகைய முயற்சிகள் ஒத்துப்போவதால் அவர்கள் பெரிய அளவிலான உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு அழுத் தம் கொடுக்கலாம். இந்தத் திட்டங்கள் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க நிதியை உறிஞ்சி, மிகவும் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களுக்கு வரையறுக்கப்பட்ட நன்மைகளை வழங்குகின்றன. இதற்கிடையில், சேதமடைந்த கிணறுகளை சரிசெய்தல், சிறு அளவிலான விவசாயிகளை ஆதரித்தல், மீன்பிடி உபகரணங்களை வழங்குதல், குழந்தை பராமரிப்பு வசதிகளை மீட்டெடுப்பது அல்லது சமூக மையங்களை மீண்டும் கட்டியெழுப்புதல் போன்ற சிறிய ஆனால் முக்கிய மான தலையீடுகள், உயர்மட்ட முயற்சிகளின் கவர்ச்சிக் குரியதாகவோ அல்லது வணிக மதிப்பு இல்லாததாலோ முன்னுரிமையற்றதாக மாறுகிறது. இதன் விளைவாக, அறிக்கைகளில் சுவாரஸ்யமாகத் தோன்றும் ஒரு மீட்சி ஏற்படுகிறது, ஆனால் பல சமூகங்களுக்கு தங்கள் வாழ்க் கையை மீண்டும் கட்டியெழுப்பத் தேவையான அத்தியாவ சியங்கள் இல்லாமல் போய்விடுகின்றன.

கூடுதலாக, உயரடுக்கினர் சார்ந்த செயல்முறைகள் தகவல் சமச்சீரற்ற தன்மையை உருவாக்குகின்றன. பாதிக்கப்பட்ட சமூகங்களிலிருந்து முடிவுகள் எடுக்கப்படும்போது, அந்த சமூகங்கள் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, முடிவுகளை கேள்வி கேட்க அல்லது அதிகாரிகளை பொறுப்புக்கூற வைக்க மட்டுப்படுத்தப்பட்ட திறனைக் கொண்டுள்ளன. இந்த ஆய்வு இல்லாதது திறமையின்மை, தவறான ஒதுக்கீடு மற்றும் அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு வளமான நிலத்தை வழங்குகிறது. இது உயரடுக்கினர் கதைகளை வடி வமைக் கவும், தரவுகளைக் கட்டுப்படுத்தவும், உள்ளூர் முன்னுரிமை களுடன் ஒத்துப்போகாத முடிவுகளை நியாயப் படுத்தவும் முடிகிறது, அதுவும் அவர்களுக்கு மிகவும் எளிதாக சாத்திய மாகிறது. சமூகங்கள் செயலில் உள்ள பங்குதாரர்களை விட செயலற்ற பார்வையாளர்களாக உள்ளவர்களே தீர் மானிக்கும் சக்தியாக மாறுகின்றர். மேலும் களத்தில் உள் ளோருக்கு அதிகாரம் அளிக்க வேண்டிய ஒரு செயல்பாட் டில் அவர்கள் ஓரங்கட்டப்படுவதை இந்த உயரடுக்கினர் சாத்தியமாக்கி நிலைநிறுத்துகின்றனர்.

டிட்வா சூறாவளிக்குப் பிறகு, பில்லியன் கணக்கான ரூபாய் உதவி, புனரமைப்பு ஒப்பந்தங்கள், மறுவாழ்வுத் திட்டங்கள் இந்த நிதியம் வழியாகப் பாய வாய்ப்புள்ள நிலையில், உயரடுக்கினரின் தீர்க்கமான பிடி சிக்கலானது. நெருக்கடி

யின் தருணங்களில், அவசரம் அதிகமாக இருக்கும்போது, மேற்பார்வை வழிமுறைகள் பாதிக்கப்படும்போது, உயரடுக் கினர் இதனைக் கைப்பற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தீவிரமடைகின்றன. முடிவெடுப்பதில் சிவில் சமூகத்தை உள்ளடக்குதல், வெளிப்படையான பட்ஜெட்டை உறுதி செய்தல், பங்கேற்பு மேற்பார்வை கட்ட மைப்புகளை நிறுவுதல், சுயாதீன தணிக்கை களைப் பராமரித்தல் போன்ற அவசியமான நட வடிக்கைகள் இல்லாமல், இந்த மீட்சி முயற்சிக் கான நிதியம், இலங்கையின் நீண்ட தவறான வள நிர்வாக வரலாற்றின் மற்றொரு அத்தியாயமாக எளிதாக மாறக்கூடும்.

உயரடுக்கு கைப்பற்றல் என்பது வெறும் பொரு ளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல. அது ஒரு நீதிப் பிரச்சினை. மீட்பு செயல்முறைகளில் சக்திவாய்ந் தவர்கள் ஆதிக்கம் செலுத்தும்போது, அவர் களின் முடிவுகள் யாருடைய வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புகிறார்கள், யார் பின்தங்கு கின்றனர் என்பதை வடிவமைக்கின்றன. சூறாவளி யால் அதிகம் பாதிக்கப்பட்ட சமூகங்கள் - விவ சாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், முறைசாரா தொழிலாளர்கள், பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், ஓரங்கட்டப்பட்ட கிராமப்புற குடும் பங்கள் - உயரடுக்கின் கட்டுப்பாட்டில் உள்ள செயல்முறைகளிலிருந்து பயனடைவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. அவர்கள் தங்கள் கவலைகளை வெளிப்படுத்தவோ அல்லது நியாயமற்ற விளைவுகளை சவால் செய்யவோ மிகக் குறைவான திறன் கொண்டவர்கள். உயரடுக்கு கைப்பற்றலுக்கு ஆளாகக் கூடிய மீட்பு நிதியமானது சமத்துவமின்மையை குணப் படுத்துவதற்குப் பதிலாக ஆழப்படுத்துகிறது, மேலும் அதைத் தணிப்பதற்குப் பதிலாக துன்பத்தை நீடிக்கிறது.

உயரடுக்கு கைப்பற்றலை உண்மையான மற்றும் தற் போதைய ஆபத்தாக அங்கீகரிப்பது அதைத் தடுப்பதற் கான முதல் படியாகும். தற்போதைய நிதியத்துக்கான குழு

> **“பேரிடரில் இருந்து தப்பியவர்களுக்குப் பணப் பரிமாற்றங்கள், உள அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கான ஆதரவு, கண்ணியமான வீட்டு வசதி, நிவாரணத்திற்கான சமமான அணுகல் மற்றும் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், பெண்களின் வாழ்வாதாரங்கள், சமூகப் பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றின் மறுசீரமைப்பு தேவை.”**

அதன் வடிவமைப்பிலேயே இத்தகைய அபாயம் உருவாகக் கார ணமாகியுள்ளது என்பதை இலங்கை ஒப்புக் கொள்ள வேண்டும். வெளிப்ப டைத்தன்மை, பங்கேற்பு, மற்றும் சுயா தீன கண்காணிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக முறை அடிப்படையாகவே மறுபரி சீலனை செய்யப்படாவிட்டால், பல தசாப்தங்களாக சமத்துவமான வளர்ச் சியைத் தடுப்பதாக இருந்த அதே நிர்வாகத் தோல்விகளை நாடு மீண்டும் மீண்டும் சந்திக்கும் அபாயம் உள்ளது. உயர டுக்கு ஆதிக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட ஒரு மீட்பு முயற்சி, சாலை களையும் கட்டிடங்க ளையும் மீண்டும் கட்டியெழுப்பக் கூடும்; ஆனால் அது நம்பிக்கை, நீதி, அதிகாரம் பகிரப்பட்டு, மக்கள் உள்ள டக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் பேச்சு வார்த்தைக் கிடமற்ற அடிப்படை அம்சமாக இருக் கும் போதே, அந்த அடித்தளங்கள் உண்மையில் அமைக்கப்பட முடியும்.

## பெருநிறுவனத் தலைமைத்துவம் பேரிடர் நீதியுடன் ஏன் பொருந்தவில்லை:

தேசிய மீட்பு முயற்சிகளில் நிறுவனத் தரப்பினருக்கு (corporate actors) ஒரு பங்கு இருப்பது மறுக்க முடியாத உண்மை யாகும். பொருளா தார ஆதரவு வழங்குதல் முதல் வளங் களைச் சேகரித்தல், உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல், மற்றும் பொது தனியார் கூட்டாண்மைகளில் பங் கேற்பது வரை பல தளங்களில் அவர்கள் பங்களிக்கின்றனர். ஆனால், இந்த பங்களிப்புகளை பேரிடர் மீட்பு செயல்முறையை வழிநடத்தத் தேவையான திறன், சட்டப் பூர்வ நியாயம் அல்லது நெறிமுறை அடித்தளமாக மாற்றிக் கொள்ள முடியாது. தனியார் துறையின் அடிப்படை



மதிப்புகள், ஊக்கத் தொகைகள், முடிவெடுக்கும் கட்டமைப்புகள் பேரிடரால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளுடன் ஒத்திசையாதவையாக இருப்பதால், பெருநிறுவனத் தலைமை பேரிடர் நீதியுடன் அடிப்படையிலேயே பொருந்தாததாக உள்ளது.

நிறுவனங்கள் மேற்கொள்ளும் முடிவுகள், செலவு - வருவாய் கணக்கீடுகள், செயல்திறன் அளவீடுகள், பங்குதாரர் பொறுப்புகள், மற்றும் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருமானம் (return on investment) என்ற தர்க்கங்களின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கொள்கைகள் நிறுவனங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால், பேரிடரால் சிதைந்த வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முழுமையாகப் போதுமானவை அல்ல. பேரிடரில் இருந்து தப்பியவர்களுக்குப் பணப் பரிமாற்றங்கள், உள அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கான ஆதரவு, கண்ணியமான வீட்டுவசதி, நிவாரணத்திற்கான சமமான அணுகல் மற்றும் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், பெண்களின் வாழ்வாதாரங்கள், சமூகப் பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றின் மறுசீரமைப்பு தேவை. இத்தகைய தலையீடுகள் பெரும்பாலும் உடனடி அல்லது வெளித்தெரியும் வருமானங்களை வழங்குவதில்லை. மேலும் அவை நிறுவன செயற்றிறன் குறிகாட்டிகளில் எளிதில் பொருந்துவதுமில்லை. ஒரு குடும்பம் சுமந்து நிற்கும் மனவடுவை எந்தவொரு கணக்கீட்டைக் கொண்டும் ஒருபோதும் ‘உகந்த தாக்க’ முடியாது. மேலும் ஒரு விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட பெண்ணின் வருமான இழப்பை காலாண்டு அறிக்கையில் வரைய முடியாது. பேரிடர் மீட்பின், நோக்கம் செயல்திறன் அல்ல. அது நீதி, கண்ணியம் மற்றும் வாழ்க்கையை மீட்டெடுப்பது. ஆனால் ஒரு நிறுவன உலகக் கண்ணோட்டம் இந்த விளைவுகளை முன்னுரிமைப்படுத்த வடிவமைக்கப்பட்டதல்ல.

அனுபவரீதியாகவும் ஆழமான பிளவு உள்ளது. அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட இந்த குழுவில் நியமிக்கப்பட்ட பல பெருநிறுவனத் தலைவர்கள், பேரிடர் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து வெகு தொலைவில் உள்ள சமூகப் பதவிகளை வகிக்கின்றனர். அவர்கள் வெயிலில் மணிக்கணக்கில் குடிநீருக்காக வரிசையில் நிற்க வேண்டியதில்லை. நிலச்சரிவில் தங்கள் வீட்டை இழக்கவில்லை. குடும்ப உறுப்பினர்களுடனான தொடர்பை இழந்த பிறகு அவர்கள் பல நாட்கள் பயத்தில் காத்திருக்கவில்லை. மேலும் ஒரு சூறாவளிக்குப் பிறகு ஒரே இரவில் அழிந்த வாழ்வாதாரங்களுக்குப் பிறகு தினக் கூலிப் பொருளாதாரத்தில் உயிர்வாழ்வது என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த பெருநிறுவனத் தலைவர்களுக்கான தூரம் ஒரு தார்மீக தோல்வி அல்ல, இது ஒரு கட்டமைப்பு தோல்வி. ஆனால் இந்த தூரம் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது. இந்தத் தூரமே முடிவுகளை வடிவமைக்கிறது. பாதிப்பு பற்றிய நேரடி அறிவு இல்லாமல், பெருநிறுவனத் தலைவர்கள் பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் அல்லது புதிய வீட்டுவசதிக் குடியேற்றங்கள் போன்ற ‘வெளித்தெரியும் மீட்பு முயற்சிகளுக்கு’ முன்னுரிமை அளிக்கிறார்கள், ஆதரவு தேவைப்படுபவர்களின் அடுக்கு ரீதியான, குறுக்குவெட்டும் தன்மையுள்ள பாதிப்புகளை புறக்கணிக்கிறார்கள். பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மலையகத் தொழிலாளர்கள், தனியாக வாழும் முதியவர்கள், புலம்பெயர்ந்தோர் சார்ந்த குடும்பங்கள், தேவைப்பாடுகள் உள்ளவர்கள் ஆகியோரின் பல்பரிமாணப் பாதிப்புகள் கணிப்பில் எடுக்கப்படாமல் போவதற்கான வாய்ப்புகள் அதிகம். பேரிடர் நீதிக்கு, நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விட, மக்கள் எவ்வாறு உயிர்வாழ்கிறார்கள் என்பது பற்றிய நெருக்கமான புரிதல் தேவைப்படுகிறது.

மீட்புத் திட்டமிடலில் பெருநிறுவன ஆதிக்கம், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மிக நெருக்கமானவர்களாகவும், பயனுள்ள நிவாரணத்திற்குத் தேவையான வலைப்பின்னல்கள், அவசியமான சட்டபூர்வத்தன்மை, சூழல் புரிதலைக் கொண்டவர்களாகவும் இருக்கும் சிவில் சமூகம், உள்ளூராட்சி மன்றங்களை ஒதுக்கி வைக்கும் அபாயத்தையும் கொண்டுள்ளது. பெருநிறுவனத் தலைவர்கள் முடிவெடுக்கும் உயர் மட்டத்தில் இருக்கும்போது அவர்கள் அடிமட்ட அம்சங்களைக் கணிப்பில் எடுக்கத் தவறுகிறார்கள். உதாரணமாக, சிறிய சமூக அடிப்படையிலான முயற்சிகள், பெண்களின் கூட்டு முயற்சிகள், கூட்டுறவுகள் என்பன ஓரங்கட்டப்படுகின்றன அல்லது கவனிப்புக்குள்ளாவதில்லை. இது உதவிகளை சமமாக விநியோகிப்பதற்கு அவசியமான தகவல்களின் நுணுக்கத்தையும் சமூக நம்பிக்கையையும் நேரடியாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. உலகளாவிய மனிதாபிமான செயற்பாடுகளில் இருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகள், சமூகங்கள் ஓரங்கட்டப்படும்போது, நிவாரணம் மெதுவாகவும், வீணாகவும், ஊழல் நிறைந்ததாகவும் மாறும் என்பதை தொடர்ந்து காட்டுகிறது. இலங்கையின் கடந்த கால அனுபமும் இதுதான் என்பதையும் இங்கு நினைவுபடுத்துவது பொருத்தம்.

> **“மீட்புத் திட்டமிடலில் பெருநிறுவன ஆதிக்கம், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மிக நெருக்கமானவர்களாகவும், பயனுள்ள நிவாரணத் திற்குத் தேவையான வலைப்பின்னல்கள், அவசியமான சட்டபூர்வத் தன்மை, சூழல் புரிதலைக் கொண்டவர்களாகவும் இருக்கும் சிவில் சமூகம், உள்ளூராட்சி மன்றங்களை ஒதுக்கி வைக்கும் அபாயத்தையும் கொண்டுள்ளது.”**

மிக முக்கியமாக, பெருநிறுவனத் தலைவர்கள் பொதுமக்களுக்குக் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அல்ல. அவர்களின் முதன்மை பொறுப்புக்கூறல் பங்குதாரர்கள், இயக்குநர் குழுக்கள், மற்றும் சந்தைகளுக்கே உரியது. தற்காலிக முகாம்களில் வசிக்கும் பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அல்ல. மீட்பு முடிவுகள் தவறாக நடந்தால், நிதி தவறாக ஒதுக்கப்பட்டால், அல்லது மறுகட்டமைப்புத் திட்டங்கள் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறினால், பெருநிறுவனத் தலைவர்கள் தங்கள் பதவிகளை இழக்கமாட்டார்கள் அல்லது தேர்தல் விளைவுகளை எதிர்கொள்ள மாட்டார்கள். பேரிடர் நீதிக்கு, உயிர் பிழைத்தவர்களுக்கு, பொதுமக்களுக்கு மற்றும் எதிர்கால சந்ததியினருக்குப்



பொறுப் புக்கூறல் என்பது பேரம் பேச முடியாதது. அந்தப் பேரிடர் நீதிக்கு கட்டமைப்புகள் தேவை. ஜனநாயகப் பொறுப்புக்கூறல் சங்கிலிக்கு வெளியே உள்ளவர்களிடம் தலைமையை ஒப்படைப்பது இந்த இணைப்பை உடைத்து, சோகத்திலிருந்து இலாபம் ஈட்டு வதற்கான பாதையைத் திறக்கிறது என்ற கருத்து வலு வடைய வழிசெய்கிறது.

இந்தக் காரணங்களுக்காக, பெருநிறுவனத் தலைமையும் பேரிடர் நீதியும் ஒன்றுடனொன்று ஒத்துப் போகாதவை மட்டுமல்ல. அவை கட்டமைப்பு ரீதியாக பொருந்தாதவை. பெருநிறுவனங்கள் ஆதரிக்க முடியும், அவர்கள் பங்களிக்க முடியும், அவர்கள் ஆலோசனை வழங்க முடியும், ஆனால் அவர்களால் வழிநடத்த முடியாது. பேரிடர் மீட்பு என்பது நீதி, சமத்துவம் மற்றும் சமூக அதிகாரமளித்தல் ஆகிய கொள்கைகளால் வழிநடத்தப்பட வேண்டும். இவை நிர்வாக அறைகளிலிருந்து அல்ல, ஆனால் களத்தில் இருந்து எழும் மதிப்புகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட வேண்டும். எல்லாவற்றையும் இழப்பதன் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு மீண்டும் கட்டியெழுப்ப என்ன தேவை என்பதைத் துல்லியமாக அறிந்த மக்களின் பங்கேற்பு, இந்தச் செயன்முறையில் அத்தியாவசியமானது.

## மக்களை மையமாகக் கொண்ட மீட்பு மாதிரி தேவை:

டிட்வா சூறாவளிக்குப் பிறகு இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமானால், மீட்பு செயல்முறை ஒரு உயரடுக்கால் இயக்கப்படும், மையப்படுத்தப்பட்ட மாதிரியிலிருந்து பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்க்கை, அறிவு மற்றும் முன்னுரிமைகளில் உறுதியாக வேரூன்றிய ஒன்றுக்கு மாற வேண்டும். மக்களை மையமாகக் கொண்ட மீட்பு மாதிரியானது, மீட்பு எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது, நிதியளிக்கப்படுகிறது, செயல்படுத்தப்படுகிறது என்பதில் மிகவும் பாதிக்கப்படும் மக்களுக்கு மிக முக்கியமான பங்களிப்பையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறது. இது வெறும் நல்லாட்சியின் கொள்கை மட்டுமல்ல. இது உலகளாவிய பேரிடர் சூழல்களில் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட ஒரு நடைமுறைத் தேவையாகும். திட்டமிடலிலும் மேற்பார்வையிலும் சமூகங்கள் முறையான பாத்திரங்களைக் கொண்டிருக்கும்போது, மீட்பு வேகமாகவும், நியாயமானதாகவும், நிலையானதாகவும் மாறும். அவை விலக்கப்படும்போது, மீட்பு துண்டிக்கப்பட்டு, அரசியல் மயமாக்கப்பட்டு, வீணடிக்கப்படும் வாய்ப்புள்ளது.

மக்களை மையமாகக் கொண்ட ஒரு உண்மையான மாதிரி, பாதிக்கப்பட்ட சமூகங்கள் ஈடுசெய்ய முடியாத நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளன என்பதை அங்கீகரிப்பதன் மூலம் தொடங்குகிறது. மீனவர்கள் கடலின் வடிவங்களையும், அவர்களின் வாழ்வாதாரம் எதிர்கொள்ளும் அபாயங்களையும் எந்த நிர்வாகக் குழுவையும் விட நன்றாக அறிவார்கள். பெரும்பாலும் நெரிசலான குடியிருப்புகளில் நிலையற்ற நிலத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் கட்டமைக்கப்பட்ட சூழலின் பாதிப்புகளைப் புரிந்துகொள்கிறார்கள். பெண்கள் குழுக்கள் நெருக்கடியில் சமூகங்களை ஒன்றாக வைத்திருக்கும் சமூக வலைப்பின்னல்கள் பற்றிய ஆழமான அறிவைக் கொண்டுள்ளன. அரசு இயந்திரங்கள் வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இளையோர் குழுக்கள், மத நிறுவனங்கள், உள்ளூர் தன்னார்வலர்கள் முதல் பதிலளிப்பவர்களாக இருந்தனர். மேலும் உள்ளூர் இயக்கவியல் பற்றிய அவர்களின் நுண்ணறிவு அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளைவிட மிகவும் வளமானது. கிராம அளவிலான குழுக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள், பிரதிநிதித்துவ சமூக அமைப்புகள் மூலம் இந்தக் குரல்களை இணைப்பது, சுருக்கமான அனுமானங்களை விட மக்களின் உண்மையான தேவைகளுடன் எதிரொலிக்கும் தலையீடுகளை வடிவமைப்பதற்கு அவசியம்.

தொழில்முறை நிபுணத்துவம் சமூக அறிவை பூர்த்தி செய்ய வேண்டும், அதை மாற்றக்கூடாது. இலங்கையில் பேரிடர் மேலாண்மை நிபுணர்கள், சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், நகர்ப்புற திட்டமிடுபவர்கள், சமூகக் கொள்கை ஆய்வாளர், காலநிலை இசைவாக்க நிபுணர்களுக்கு பஞ்சமில்லை. அவர்கள் சுயாதீனமான, சான்றுகள் அடிப்படையிலான வழி

காட்டுதலை வழங்க முடியும். மறுகட்டமைப்பு பாதுகாப்பு தரநிலைகள், காலநிலை கணிப்புகள், சுற்றுச்சூழல் பரி சீலனைகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய இந்த நிபுணர்கள் உதவ முடியும். ஆனால் அவர்களின் பங்கு ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பாக இருக்க வேண்டும், தொழில்நுட்ப உறுதிப்பாடு மற்றும் கலாசார பொருத்தம் இரண்டையும் மதிக்கும் தீர்வுகளை இணைந்து உருவாக்க சமூகங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். மேலிருந்து திணிக்கப்பட்ட நிபுணத்துவம் தோல் வியடையும். கூட்டாண்மையில் அடித்தளமாகக் கொண்ட நிபுணத்துவம் மீட்சியை மாற்றும்.

சிவில் சமூக அமைப்புகளும் பேரிடர் மீட்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை பெரும்பாலும் அரசுக்கும் பாதிக் கப்பட்ட மக்களுக்கும் இடையே மிகவும் நம்பகமான இடைத்தரகர்களாக இருக் கின்றன, சேவை, advocacy, சமூக ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் நீண்டகால உறவு களைக் கொண்டுள்ளன. பல தன்னார்வ தொண்டு நிறு வனங்கள் மனிதாபிமான பாலின உணர்திறன் நிரலாக்கம், வாழ்வாதார மறுசீரமைப்பு ஆகியவற் றில் விரிவான அனுப வத்தைக் கொண்டுள்ளன. அவற்றின் தொடர்பு வலைப் பின்னல்கள் கிராமப் புற, ஓரங்கட்டப்பட்ட சமூகங்களை ஆழமாகச் சென்றடைகின்றன, அவற்றை அரசாங்க தரப்பினர் அணுகச் சிரமப்படலாம். மக்களை மையமாகக் கொண்ட ஒரு மாதிரி இந்த அமைப்புகளை வலுப் படுத்துகிறது.

மக்களை மையமாகக் கொண்ட ஒரு மாதிரி செயல்பட, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். மீட்பு நிதிகள் பொது ஆய்வுக்கு திறந்த முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். திட்டத் தேர்வு, செலவு, கண்காணிப்புக்கான தெளிவான அளவுகோல்கள் என்பன அவசியம். பணம் எங்கு செல்கிறது, யார் பயனடைகிறார்கள், முடிவுகள் எவ்வாறு எடுக்கப்படு கின்றன என்பதை சமூகங்கள் கண்காணிக்க முடியும். இது ஊழலுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு மட்டுமல்ல, பொது மக்களின் நம்பிக்கை மோசமாக சிதைக்கப்பட்ட நேரத்தில் நிறுவனங்களில் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பு வதற்கான ஒரு முக்கிய அங்கமாகும். வெளிப்படைத்தன்மை இல்லாமல், நல்லெண்ண மீட்பு முயற்சிகள் கூட சந்தே கத்துடன் பார்க்கப்படும்.

மக்களை மையமாகக் கொண்ட மீட்புக்கு மிகவும் பயனுள்ள கருவிகளில் ஒன்று நேரடி பண உதவி. உலகளாவிய சான்றுகள் தொடர்ந்து காட்டுவது என்னவென்றால், பணப் பரிமாற்றங்கள் - வெளிப்படையாக நிர்வகிக்கப்படும் போது - குடும்பங்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்கு முன் னுரிமை அளிக்கவும், வாழ்வாதாரங்களை விரைவாக மீண்டும் கட்டியெழுப்பவும், ஒப்பந்ததாரர்களால் இயக்கப் படும் உதவியுடன் தொடர்புடைய திறமையின்மையையும் தவிர்க்கவும் உதவுகின்றன. பணமானது, தப்பிப்பிழைத்தவர் களின் கைகளில் நிறுவனத்தை மீண்டும் வைக்கிறது. இதனால் அவர்கள் தங்கள் சூழ்நிலைகள் பற்றிய நெருக்க மான அறிவின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க அனு

> **“பணப் பரிமாற்றங்கள் – வெளிப்படையாக நிர்வகிக்கப்படும் போது – குடும்பங்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும், வாழ்வாதாரங்களை விரைவாக மீண்டும் கட்டியெழுப்பவும், ஒப்பந்ததாரர்களால் இயக்கப்படும் உதவியுடன் தொடர்புடைய திறமையின்மையையும் தவிர்க்கவும் உதவுகின்றன.”**

மதிக்கிறது. இந்த அணுகுமுறை திறமையானது மட்டுமல்ல, கண்ணியமானதும் கூட. இது பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை, செயலற்ற பெறுநர்களாக அல்லாமல், திறமை யான செயற்பட் டாளர்களாக அங்கீகரிக்கிறது.

இறுதியாக, மக்களை மையமாகக் கொண்ட வடிவமாதிரிக்கு வலுவான, சுயாதீன மேற்பார்வை தேவைப்படுகிறது. பேரிடர் மீட்பு என்பது அரசியல் அதிகாரிகள் அல்லது உயரடுக்கு குழுக்களிடம் மட்டுமே ஒப்படைக்கப் பட முடியாது. ஆதரவு, மோதல், உயரடுக்கு பிடிப்பு ஆகியவற்றின் அபாயங்கள் மிக அதிகம். மேற்பார் வையில் தணிக்கையாளர் நாயகம், சிவில்-சமூக கண்காணிப்புக் குழுக் கள், சமூக பிரதிநிதிகள், மீட்பு முயற்சிகள் ஆகியன பொது நலனு டன் இணைந்திருப்பதை உறுதிசெய் யக்கூடிய சுயாதீன நிபுணர்கள் ஆகியோர் இருக்க வேண்டும். பொறுப்புக்கூறல் என்பது நிறுவனங் களுக்கும் குடிமக்களுக்கும் மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் பாய வேண்டும்.

சாராம்சத்தில், மக்களை மையமா கக் கொண்ட மீட்பு மாதிரி ஒரு கற்பனாவாத இலட்சியம் அல்ல. இது இலங்கையை உலகளாவிய சிறந்த நடைமுறையுடனும் ஜனநாயக நிர்வா கக் கொள்கைகளுடனும் இணைக் கும் ஒரு நிரூபிக்கப்பட்ட, நடைமுறை மற்றும் அவசியமான அணுகுமுறையாகும். நாடு ஒரு முக்கியமான தருணத்தில் நிற்கிறது. மீண்டும் மீண்டும் தோல்வியடைந்த மையப் படுத்தப்பட்ட, தொழில்நுட்ப கட்டமைப்புகள் மூலம் மீண்டும் கட்டியெழுப்ப அது தேர்வு செய்யலாம். அல்லது நீதி, சமூக அதிகாரமளித்தல் மற்றும் பகிரப்பட்ட பொறுப்பில் வேரூன் றிய ஒரு மாதிரியைத் தேர்வு செய்யலாம். பேரழிவைத் தாங்கியவர்கள் மீட்சியின் மையத்தில் வைக்கப்பட்டால் மட்டுமே இலங்கை இந்தப் பேரழிவிலிருந்து மீளும். அல்லாவிடின் இது நாட்டை நீண்ட காலமாக பின்னுக்குத் தள்ளிய தோல்விகளின் மறுநிகழ்வாக மாறும்.

## தாமதமாகும் முன் மறுபரிசீலனை செய்ய ஒரு அழைப்பு:

இலங்கை ஒரு தீர்க்கமான தருணத்தில் நிற்கிறது. டிட்வா சூறாவளி நாட்டின் பௌதீக ரீதியான பாதிப்புகளை அம்பலப்படுத்தியது மட்டுமல்லாமல், அதன் ஆழமாக வேரூன்றிய நிறுவன பலவீனங்களையும் வெளிப்படுத்தி யுள்ளது. பலவீனமான ஒருங்கிணைப்பு, மையப்படுத்தப்பட்ட அதிகார கட்டமைப்புகள், பலவீனமான பொறுப்புக்கூறல் அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை விட அரசியல் கணக்குகளால் வடிவமைக்கப்பட்ட பேரழிவுப் பதில்களின் நீண்ட வரலாறு. இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் நிதியத்திற்கான ஒரு உயரடுக்கு மேலாண் மைக் குழுவை உருவாக்குவது இந்த தோல்விகள் ஒவ்



வொன்றையும் மீண்டும் நிகழும் அபாயத்தை ஏற்படுத்து கிறது. நாம் இந்தப் பாதையில் தொடர்ந்தால், நெருக்கடி களை அடிக்கடி கொண்டு வரும் மகத்தான வாய்ப்பை நாடு வீணடிக்கக்கூடும்: உள்கட்டமைப்பு மட்டுமல்ல, அமைப்பு களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பும் இல்லா மல் போகும்.

இந்த சூழ்நிலையில், டிட்வாவுக்குப் பிறகு மீண்டும் கட்டி யெழுப்புவது என்பது வெறுமனே நிவாரணங்களை விநியோகிப்பது அல்லது புதிய கட்டமைப்புகளை உருவாக் குவது மட்டுமல்ல என்பதை இலங்கை அங்கீகரிக்க வேண் டும். அரசு தனது மக்களுடன் எவ்வாறு தொடர்பு கொள் கிறது என்பதை அடிப்படையில் மறுவடிவமைக்க இது ஒரு வாய்ப்பாகும். பேரழிவுகள் ஏற்படும்போது, அவை ஒரு சமூகத்தின் தவறுகளை வெளிப்படுத்துகின்றன. சமத்துவ மின்மை, ஓரங்கட்டப்படுதல், நிர்வாக தோல்விகள் மற்றும் கட்டமைப்புசார் கண்ணுக்குத் தெரியாத குறைகள் ஆகிய வற்றை. ஒரு நாடு பேரிடருக்கு எவ்வாறு பதிலளிக்கிறது என்பதே அதன் மதிப்புகளை வெளிப்படுத்துகிறது. அரசு குடிமக்களை மீட்பில் பங்காளிகளாக அன்றி, நிர்வகிக்கப்பட வேண்டியவர்களாகப் பார்க்கிறது என்பதைக் குறிக்கிறது. இதற்கு நேர்மாறாக, உள்ளடக்கிய, பங்கேற்பு மாதிரியானது, நாட்டின் மறுகட்டமைப்பின் கண்ணியம், நீதி மற்றும் பகிரப் பட்ட உரிமைக்கான உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

இந்த தருணம் சிந்தனையையும் தைரியத்தையும் கோரு கிறது. தற்போதைய குழுவின் வடிவமைப்பு குறைபாடு டையது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது தீமையால் நிகழ்ந்தது அல்ல, காலாவதியான சிந் தனையால் நிகழ்ந்தது என்ற புரிதலை அரசாங்கம் பெற வேண்டும். இலங்கையால் தங்கள் குரல்களைப் புறக்கணிக் கும் கட்டமைப்புகள் மூலம் ஒரு அதிர்ச்சியடைந்த மக்களை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. எல்லாவற்றையும் இழந்த மக்கள், அவற்றை உள்ளடக்கும் அளவுக்கு முக்கியமான தாகக் கருதாத ஒரு அமைப்பை நம்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. மீட்பு செயல்முறையின் சட்டபூர்வ மான தன்மை பிரதிநிதித்துவம், பங்கேற்பு மற்றும் வெளிப் படைத்தன்மையைப் பொறுத்தது. இந்த கூறுகள் இல்லாமல், பொது அவநம்பிக்கை ஆழமடையும், அரசியல் பதட்டங்கள் அதிகரிக்கக்கூடும், மேலும் மீட்பு முயற்சிகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக எதிர்ப்பை எதிர்கொள்ளும். காலம் நம் பக்கம் இல்லை. வாரங்கள் செல்லச் செல்ல, தற்காலிக தங்குமிடங்கள் அரை நிரந்தரமாக மாறும், வாழ்வாதாரங்கள் மோசமடையும், குழந்தைகள் பள்ளியில் பின்தங்குவார்கள், பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் வறு மையில் ஆழமாகச் சரியும். இன்று எடுக்கப்படும் முடிவுகள், வரும் ஆண்டுகளில் மில்லியன் கணக்கான உயிர்களின் பாதையை வடிவமைக்கும். தவறாக நிர்வகிக்கப்பட்ட மீட்பு - உயரடுக்கு நலன்களால் சிதைக்கப்பட்டு, உள்ளூர் யதார்த்தங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு, மோசமான மேற் பார்வையால் பலவீனமடைந்தது - பாதிக்கப்பட்ட சமூகங் களை மீண்டும் கட்டியெழுப்பத் தவறுவது மட்டுமல்லாமல், நீண்டகால பற்றாக்குறையையும் உறுதியற்ற தன்மையின் சுழற்சியையும் ஏற்படுத்தக்கூடும். இலங்கையால் அத்த கைய விளைவை ஏற்க முடியாது. செயலற்ற தன்மை அல் லது தவறான நம்பிக்கையின் விலை அளவிட முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது.

இதைத் தவிர்க்க, அரசாங்கம் மறுகட்டமைப்புக் குழுவின் அமைப்பு மற்றும் ஆணையை அவசரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். இது நியமிக்கப்பட்ட தனிநபர்கள் மீதான தாக்குதல் அல்ல, மாறாக கட்டமைப்பையே விமர்சிப்பதா கும். சமூகத் தலைவர்கள், உள்ளூர் அதிகாரிகள், மகளிர் அமைப்புகள், சிவில் சமூக நிபுணர்கள் மற்றும் சுயாதீன நிபுணர்களை இணைப்பது ஒரு விருப்பத்தேர்வு கூடுதல் அல்ல - இது அவசியம். சமூகங்களால் இணைந்து நடத் தப்படும் மீட்பு செயல்முறை மிகவும் வெளிப்படையான தாகவும், இரக்கமுள்ளதாகவும், திறமையானதாகவும் இருக் கும். உயரடுக்கினரால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு செயல்முறை உடையக்கூடியதாகவும், போட்டியிடக்கூடிய தாகவும், நிலைத்தன்மையற்றதாகவும் இருக்கும்.

இது பற்றாக்குறையாகிவிட்ட ஒரு நாட்டில் நம்பிக் கையை

மீண்டும் கட்டியெழுப்ப ஒரு அரிய வாய்ப்பு. பல வருட பொருளாதார சரிவு, அரசியல் கொந்தளிப்பு மற்றும் சமூக எழுச்சிக்குப் பிறகு, அரசு கற்றுக்கொள்ளவும், மாற்றவும், கேட்கவும் முடியும் என்பதை இலங்கையர்கள் பார்க்க வேண்டும். குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும், மக்களை மையமாகக் கொண்ட அமைப்பாக மீண்டும் அமைப்பது, அரசாங்கம் இந்த தருணத்தின் தீவிரத்தை புரிந்துகொள்கிறது மற்றும் குடிமக்களை - பெருநிறுவன நலன்களை அல்ல - மீட்சியின் மையத்தில் வைக்க தயாராக உள்ளது என்ற சக்திவாய்ந்த செய்தியை அனுப்பும்.

இலங்கை இப்போது ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. நாட்டை மீண்டும் மீண்டும் தோல்வியடையச் செய்த பழைய, மேலிருந்து கீழ் நோக்கிய நிர்வாக முறைமையையே பற்றிக்கொண்டு தொடரப்போகிறதா? அல்லது கூட்டாண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சமூகத் தலைமையைத் ஆகியவற்றில் வேரூன்றிய ஒரு புதிய முன்னுதாரணத்தைத் தழுவலாம். இது ஒரு தீர்க்கமான தருணம் - வாய்ப்பின் சாளரம் மூடுவதற்கு முன்பு ஜனநாயக உள்ளடக்கத்தின் கொள்கைகளை மறுபரிசீலனை செய்ய, மறுசீரமைக்க அவற்றுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க வேண்டிய நேரம் இது. ஜனநாயக விழுமியங்களின் கோட்பாடுகளை மீண்டும் ஒரு முறை சிந்தித்து, மறுசீரமைத்து, நேரம் இது மீட்சிக்கான பாதை அடிமட்டத்திலிருந்து கட்டமைக்கப்பட வேண்டும். முடிவெடுக்கும் அதிகாரத்தின் மையத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்க வேண்டுமே தவிர, அவர்கள் விளிம்புநிலைக்குத் தள்ளப்படக்கூடாது. இலங்கை இரண்டாவது பாதையைத் தேர்ந்தெடுத்தால், 'டிட்வா' சூறாவளியின் பிடியிலிருந்து மீண்டெழுவதோடு மட்டுமல்லாமல், முன்னைவிட வலுவான, அதிகத் தாங்குதிறன் கொண்ட, ஒன்றுபட்ட தேசமாகவும் உருவெடுக்கும். மாறாக, உரிய நடவடிக்கைகளை இப்போதே எடுக்கத் தவறினால், புயல் காற்று அடங்கி, வெள்ளம் வற்றிய பின்னரும்கூட அதன் மோசமான விளைவுகள் நீண்ட காலத்திற்கு எதிரொலித்துக் கொண்டே இருக்கும். மாற்றங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தருணம் இதுவே - காலம் கடந்துவிடும் முன் நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

> **“பேரழிவுகள் ஏற்படும்போது, அவை ஒரு சமூகத்தின் தவறுகளை வெளிப்படுத்துகின்றன. சமத்துவ மின்மை, ஓரங்கட்டப்படுதல், நிர்வாக தோல்விகள் மற்றும் கட்டமைப்புசார் கண்ணுக்குத் தெரியாத குறைகள் ஆகியவற்றை. ஒரு நாடு பேரிடருக்கு எவ்வாறு பதிலளிக்கிறது என்பதே அதன் மதிப்புகளை வெளிப்படுத்துகிறது.”**



meenilankco@thaiveedu.com

பேராசிரியர் எஸ். தனிநாயக அடிகளாரின்
கலாநிதிப் பட்ட ஆய்வேட்டின் தமிழாக்க நூல் அறிமுகம்

தலைமை
திரு. கலாநிதி க. இரகுபரன்
தலைவர் - அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை
[President - Sri Lanka Branch of Legitimate IATR]
முதுநிலை விரிவுரையாளர் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அறிமுகவுரைகள்
“தனிநாயகம் அடிகள்:
தமிழர் கல்வியின் தனித்துவமான மூலங்கள்”
திரு. வேலும்மயிலும் சேந்தன்
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

“சமயம்சாரா பண்டைத் தமிழரின் கல்வி மரபு:
தனிநாயக அடிகளாரின் ஆய்வுவெளிப்பாடு”
திரு. ச. சத்தியதேவன்
ஆய்வாளர் / தாய்வீடு இதழ்.

நிகழ்ச்சித் தொகுப்பு
திரு. அ. சிவஞானசீலன்
கலாசார அலுவலர், நெடுந்தீவு.

நன்றியுரை
திரு. விருபா குமரேசன்



பழந்தமிழ் இலக்கியங்களில்
கல்விச் சிந்தனைகள்

தமிழாக்கம்
முனைவர் ந. மனோகரன்

வெளியீடு
தொல்காப்பியர் ஆய்வு இருக்கை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தமிழ் நாடு

# இயற்கை அனர்த்தமும் பலாலி விமான நிலையமும்

– வே. விவேகானந்தன்

**2025** நவம்பர் மாத இறுதியில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் தீவிரம் யாரும் எதிர்பாராத ஒன்றாக நிகழ்ந்துவிட்டது. இச்சந்தர்ப்பத்தில், ஏற்கனவே வேறு காரணங்களுக்காக கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுத் தங்கியிருந்த இந்திய விமா தாங்கிக் கப்பல் நிவாரணப் பணிகளை ஆரம்பித்தது. அதன் மூலம் இந்தியா நிவாரணப் பணிகளை மேற்கொண்ட முதலாவது நாடு என்ற பெயரைத் தட்டிக் கொண்டது. இந்தியாவுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கும் பாகிஸ்தானும் உதவிக்கு வந்தது. இவ்வாறே ஒவ்வொரு நாடும் தம் பங்குக்கு உதவிகளை வழங்க, அமெரிக்கா விழித்துக்கொண்டது. அது தனது விமானப் படையைச் சேர்ந்த C-130 Hercules விமானத்தில் நிவாரணப் பொதிகளைக் கொண்டு நேரடியாக யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் (பலாலி விமான நிலையம்) வந்திறங்கியது. அதனையடுத்து யாழ். சர்வதேச விமான நிலையம் பேசு பொருளாக மாறியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பலாலி விமான நிலையத்தின் தோற்றம், வளர்ச்சி, யாழ். மக்களின் வாழ்க்கையில் அதன் வகிபாகம் என்பவற்றைப் பின்னோக்கிப் பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும் எனத் தோன்றுகிறது.

பலாலி விமான நிலையத்தின் தோற்றம், இரண்டாம் உலக மகா யுத்தத்துடன் ஆரம்பமாகிறது. அப்போது இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ நாடாக இருந்தது. உலக வரைபடத்தில், இலங்கையின் கேந்திர நிலைய முக்கியத்துவத்தினை நன்கு உணர்ந்து கொண்ட பிரித்தானிய அரசு, தனது காலனித்துவ ஆட்சியை, தென் பிராந்தியத்தில் தக்க வைத்துக் கொள்ள, பலம் வாய்ந்த கடல், ஆகாயப் படைகளைக் கட்டமைக்கத் திட்டமிட்டது. அவசர அவசரமாக பதினைந்து விமானத் தளங்களை இலங்கையில் அமைக்கத் தீர்மானித்த பிரித்தானிய அரசு, வடக்கேயும் ஒரு விமானத் தளத்தை அமைக்க முடிவு எடுத்தது.

விமானங்கள் ஏறி இறங்குவதற்கு வசதியான நிலங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. குறிப்பாக நீர்வேலி, கல்லுண்டாய் வெளி, வல்லை வெளி, கைதடி, புத்தூர், வளலாய் வெளி போன்ற பகுதிகள் பரிசோதனை செய்யப்பட்டு, இறுதியில் பலாலி பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்டது. அப்போது இலங்கை இராணுவத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி கோட்பிறே லெயிட்டன் (Godfrey Layton) இதனை உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே மிகவும் செழிப்பான செம்மண் வலயத்துள் பலாலிப் பிரதேசம் அமைந்துள்ளது. உப்புக் கலப்பற்ற, தூய தரைக்கீழ் நீர்வளத்தையும் தன்னகத்தே கொண்டது. இதன் வடக்கு தொடர்ச்சியான வெண்மணற் பரப்பைக் கொண்ட மயிலிட்டிக் கரையினையும், கடல் வளம் நிறைந்த மயிலிட்டி கடற் பரப்பினையும் அரவணைத்துள்ளது. இவ்வாறு நிலவளமும் கடல் வளமும் நிறைந்த பிரதேசத்தில் விமானப் படைத்தளம் அமைக்கப்படுவதனை அப்போது அங்கு வாழ்ந்த, விவசாயப் பொது மக்கள் விரும்பவில்லை. எனவே துணிவுடன் எதிர்த்துப் போராடினர். ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசின் முன், அவை அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் போல் பயனற்றுப் போயின.

பச்சைப் பசேல் எனக் காட்சியளித்த தோட்டக்காணிகள் கட்டாயத்தின் பேரில் சுவீகரிக்கப்பட்டன. குறிப்பாக விளாத்தியடி, தேளான்வெளி, குளக்கரை, வாருபனை, மல்லம்பாதி, வெள்ளுருவை, சுடுகட்டுவன் வன்னியங்காவெட்டி, காட்டுக்குடியிருப்பு, சகுனியாகிணத்தடி போன்ற குறிச்சிப் பெயர்களைக் கொண்ட, பதினைந்துக்கும் மேற்பட்ட விவசாயக் காணிகள் அரசினால் கையகப்படுத்தப்பட்டன. அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்விடங்களான



வீடுகள், குடிசைகள் மற்றும் வியாபார நிலையங்கள் யாவும் அழிக்கப்பட்டன. நிர்க்கதியான மக்கள் அயல் கிராமங்களான வயாவிளான், குரும்பசிட்டி, குப்பிளான், கட்டுவன் போன்ற இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். விமான ஓடுபாதை அமைக்கும் பகுதிக்குள் அகப்பட்ட, ஏழு கிணறுகள், தோட்டக் காணிகள், குடிமனைகள் என்பவற்றுக்கு மாத்திரம் நட்டஈடு வழங்கப்பட்டு அகற்றப்பட்டன.

போர்க்காலத்தில் மிக விரைவாக விமானப்படைத் தளத்தை அமைக்க வேண்டியிருந்தமையால் பெருந்தொகையான தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இவர்கள் கப்பல் மூலமாக காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து நடைபாதை வழியாக பலாலியைச் சென்றடைந்தனர். பிரித்தானிய அரசின் இச்செயலால் ஆத்திரமடைந்த உள்ளூர் மக்கள், கூலிக்கு வந்த இந்திய தொழிலாளர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர். அப்போராட்டமும் அடக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து வந்த தொழிலாளர்கள் வசாவிளான், வளலாய், பலாலி தெற்கு, குப்பிளான், நிலாவரை போன்ற இடங்களில் வெளியரும்பிக் காணப்பட்ட சுண்ணக் கற்பாறைகளைத் தோண்டி எடுத்துக் கொண்டு வந்து, விமான ஓடுபாதையை அமைப்பதில் இரவு பகலாக ஈடுபடுத்தப்பட்டனர். விமானப் படைத்தளத்தில் படையினருக்கான தங்குமிடங்கள், ஆயுதங்களை சேமித்து வைப்பதற்கான பண்டகசாலைகள் எனப் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. இதற்காக சுமார் ஒன்பது ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டன. படையினருக்குரிய வைத்தியசாலை காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததும் அந்த வைத்தியசாலை பொதுமக்களுக்கான வைத்தியசாலையாக மாறியது. தெல்லிப்பளையில் புதிய வைத்தியசாலை அமைக்கப்பட்டதும், காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை ‘பழைய வைத்தியசாலை’ என அழைக்கப்பட்டது. பின்னர் அப்பகுதியில் இலங்கை இராணுவத்தால் உல்லாச விடுதிகள் அமைக்கப்பட்டு இராணுவத்தின் உல்லாசபுரியாகக் காட்சியளித்தது.

பிரித்தானிய விமானப்படை பலாலி விமானத்தளத்தை உருவாக்கிய போது அதன் ஓடுபாதையின் நீளம் 3600 அடியாக இருந்தது. பின்னர் உள்நாட்டுப் போரின்போது புலிகளின் எறிகணைத் தாக்குதல்களில் இருந்து, ஓடுபாதையினையும் போர் விமானங்களையும் பாதுகாக்க, இலங்கை விமானப்படை பாரிய நிலப்பரப்பைக் கையகப்படுத்தி உயர் பாதுகாப்பு வலையமாக்கியதுடன், ஓடுபாதையினையும் 7562 அடி நீளத்துக்கு விஸ்தரித்தது. இது அப்போது இரத்மலானை விமானநிலைய ஓடுபாதையின் நீளத்தை விட 1548 அடி அதிகமானதாகும். இதனால் பருத்தித்துறையில் இருந்து மூளாய்க்குச் செல்லும் நெடுஞ்சாலை (பேரூந்து இல. 773) வயாவிளான் சந்திக்கும் கட்டுவன் சந்திக்கும் இடையே துண்டிக்கப்பட்டு உள்ளது. அதாவது நெடுஞ்சாலையை ஊடறுத்தே ஓடுபாதை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி தற்பொழுது பலாலி இராணுவ முகாமின் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளது. வயாவிளான் சந்திக்குக் கிழக்கே வாழும் மக்கள், தெல்லிப்பளை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டுமாயின், வயாவிளான் சந்தியிலிருந்து யாழ்-பலாலி வீதி வழியாக வயாவிளான் மத்திய கல்லூரி வரை தெற்கே சென்று, அப்பாடசாலைக்கு அருகே மேற்கு நோக்கிச் செல்லும் பொன்னையா வீதி வழியாகக் கட்டுவன் சந்தியை அடைந்து, அங்கிருந்து வைத்தியசாலைக்குச் செல்லவேண்டும்.

இவ்விடத்தில் இருந்த வீடுகள், விவசாய நிலங்கள், கிணறுகள், கர்ப்பிணித் தாய்மார் குழந்தைகள் மருத்துவ நிலையம் என்பன அடையாளம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் மக்களின் மீள்குடியேற்றம் என்பது சாத்தியமற்றதொன்றாகி விட்டது. அப்பிரதேசத்தில் வாழ்ந்த பெரும்பாலானோர், போர்க் காலத்தில் புலம்பெயர்ந்து கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளில், நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததும், பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே, பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 1947-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 10-ஆம் திகதி, டகோட்டா டிசி 3 ‘சீதாதேவி’ என்ற பெயர் கொண்ட முதலாவது விமானம், பதினாறு பிரயாணிகளுடன் இரத்மலானையில் இருந்து, பலாலி ஊடாக சென்னைக்குப் பறந்தது. மேலும் இதே ரக இரண்டு விமானங்கள் ‘விகாரமாகாதேவி’, ‘கனேத்ராதேவி’ என்ற பெயர்களில் சேவையில் ஈடுபட்டிருந்தன. சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழ் நாட்டின் திருச்சி, சென்னை ஆகிய நகரங்களுக்கும் உள்ளூரில் அனுராதபுரம், திரிகோணமலை, போன்ற நகரங்களுக்குமிடையே, பலாலியில் இருந்து விமான சேவை நடைபெற்றது.

1970-களின் மத்தியில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையியான போர் ஆரம்பித்ததும், 1976-ஆம் ஆண்டு பலாலி விமான

**‘போர்க்காலத்தில் மிக விரைவாக விமானப்படைத் தளத்தை அமைக்க வேண்டியிருந்தமையால் பெருந்தொகையான தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இவர்கள் கப்பல் மூலமாக காங்கேசன்துறைக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து நடைபாதை வழியாக பலாலியைச் சென்றடைந்தனர்.’**





நிலையத்தை விமானப்படை பொறுப்பேற்றது. அத்துடன் அது இராணுவ விமானப்படைத் தளமாக மாறியது. போர்க் காலத்திலே, 1996-ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பின்னர், லயன் எயர், மொனரா எயர் போன்ற விமான சேவை நிறுவங்கள், பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையே விமான சேவைகளை ஆரம்பித்தன. அரச விமானப் படையும் 'ஹெலி டுவர்ஸ்' என்ற பெயரில் விமான சேவையை நடத்தியது. இவை கொழும்பு வாழ் தமிழர்களும், புலம்பெயர் வாழ் தமிழர்களும் யாழ்ப்பாணம் போக உதவியாக இருந்தது. அனால் இந்த விமான சேவைகள், சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக இல்லாமையால், அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கை அரசு, உத்தியோக பூர்வமாகப் பயணிகள் விமான சேவையை, மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. அதனைத் தொடர்ந்து முகநூல்களிலும், இணையத்தளங்களிலும் 'ஐரோப்பியத் தமிழருக்கு மகிழ்ச்சியான செய்தி', 'தமிழ் மக்களுக்கு இனிப்பான செய்தி' என்றெல்லாம் பதிவுகள் இடம்பெற்றன. ஆனால் அப்படி எந்த ஒரு அதிசயமும் நடக்கவில்லை.

2025, நவம்பர் மாத இறுதியில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக அமெரிக்க இராணுவ விமானமான c-30 Hercules பலாலி விமான நிலையத்தில் தரை இறங்கியது. இதனைத் தொடர்ந்து கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் ஏன்? பயணிகள் விமானங்களைத் தரை இறக்கமுடியாதா? இந்தியாவின் சதி என்றெல்லாம் இணையத்தளங்களிலும், முகநூல்களிலும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இங்கு விமானங்களின் வேறுபட்ட தன்மைகள், ஓடுபாதையின் தன்மை, நீளம், விமான நிலையத்தின் வசதிகள் என்பன கவனிக்கப்பட வேண்டும். ஓர் இராணுவ விமானத்தை ஒரு பயணிகள் விமானத்துடன் ஒப்பிடமுடியாது. இராணுவ விமானங்கள் உட்பட அனைத்து இராணுவ வாகனங்களும் போர்க் காலத்தில் பயன்படுத்த, அதிக செலவில் உயர் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவனவாகும். அனால் பயணிகள் விமானங்கள் அப்படியல்ல.

பலாலியில் தரை இறங்கிய C-30 விமானம் தரை இறங்கி ஏற, அதன் பாரத்துக்கு ஏற்ப 0.9 Km முதல் 1.1 Km தூர ஓடுபாதை போதுமானதாகும். இதில் உள்ள Turboprop Engines, Reverse Thrust, Rugged Landing Gear போன்ற பல நுட்பங்கள் அவ்வாறு சிறிய ஓடுபாதையில் இறங்கி ஏற உதவி செய்கின்றன. போர்க் காலத்தில் இது ஓரளவு கடினமான தரவை நிலங்களிலும் இறங்கி ஏற வல்லது. இத்தகைய வசதிகள் பயணிகள் விமானங்களில் இல்லை. அத்துடன் உலகில் Turboprop Engine கொண்ட பெரிய அல்லது நடுத்தர அளவு பயணிகள் விமானங்கள் இல்லை. Turboprop Engine பெரிய விசிறிகளைக் கொண்டுள்ளதால் அந்த விமானங்களின் இறக்கைகள் விமானத்துக்கு மேலே இருக்கும். அப்படியானால் தான் இறக்கைகளில் பொருத்தப்படும் Engine விசிறிகள் நிலத்தில் முட்டாது. பெரிய மற்றும் நடுத்தர அளவு பயணிகள் விமானங்களில் Turbine Engine உள்ளது. இதற்குப்பெரிய விசிறிகள் இல்லை. தற்பொழுது பலாலிக்கு வந்து போகும் ATR- 72 சிறிய ரக பயணிகள் விமானங்கள் Turboprop Engine-களைக் கொண்டுள்ளதாலேயே அவற்றின் இறக்கைகள் விமானத்துக்கு மேலே உள்ளன.

ஓடுபாதையைப் பொறுத்தவரையில் Airbus 320 போன்ற ஒரு நடுத்தர Single-aisle பயணிகள் விமானத்துக்கு 1.8 Km முதல் 2.1 Km ஓடுபாதை தேவையாகும். அனால் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை ஏறக்குறைய 1.4 Km ஆகும். Airbus 380 விமானம் தரை இறங்க, அதன் இடத்துக்கும் காவும் பாரத்துக்கும் ஏற்ப 3.7 Km நீளமான ஓடுபாதை அவசியமாகும்.

இந்திய அரசு மூன்று கட்டங்களில் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டது. முதலாவது கட்டமாக 1400 மீட்டர் ஓடுபாதை சீரமைக்கப்பட்டு 2019-ஆம் ஆண்டு 16-ஆம் திகதி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என அதிகார பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக 2.3 Km ஆகவும் மூன்றாவது கட்டமாக 3.0 Km ஆகவும் சீரமைக்கப்பட இருந்த திட்டங்கள் சில பல காரணங்களால் தடைப்பட்டுள்ளன. எனவே தற்போதைய நிலையில் 48 ஆசனங்களைக் கொண்ட 1-ATR 42-320 ரக விமானங்களும், 70 அல்லது 72 ஆசனங்களைக் கொண்ட 18-ATR 72-600 விமானங்களுமே சேவையில் ஈடுபடும் வாய்ப்புகள் உள்ளன.

எனவே கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து விமான சேவைகள் நடைபெறும் அளவிற்குப், பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுமா? இல்லையா? என்பதனையும் இதனால் தமிழர்களுக்கு நன்மையா? தீமையா? என்பதனையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

.



vivekananthan.v@thaiveedu.com

# இலங்கை சமசமாசக் கட்சிக்கு 90 வயது



## அரசியல் யாப்பு வரைவதில் சமசமாசக் கட்சி வகித்த பங்கு



ஐயம்பதி விக்கிரமரத்தினா தமிழில்: மணி வேலுப்பிள்ளை




tg.theeban@gmail.com

படத்தில் இடமிருந்து வலமாக: **வி. காராளசிங்கம், பி.ஓ. விமலநாகா, விவியன் குணவர்த்தனா, எக்டர் அபயவர்த்தனா, லெஸ்லி குணவர்த்தனா, ஓஸ்மன் ஜயரத்தினா, கொல்வின் ஆர்.டி. சில்வா, என்.எஸ்.ஈ. பெரெரா, என்.எம். பெரெரா, பேர்னாட் சொய்சா.**

இலங்கை சமசமாசக் கட்சிக்கு 90 வயது. அரசியல்யாப்பு விடயத்தில் சமசமாசக் கட்சி கொண்ட நிலைப்பாடுகளை இக்கட்டுரை துலக்கி உரைக்கின்றது.

சமசமாசக் கட்சி இரண்டு தலையாய குறிக்கோள்களுடன் நிறுவப்பட்டது:

- இலங்கைக்கு முழுவிடுதலை ஈட்டிக்கொடுத்தல்
- ஒரு சமவுடைமைச் சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்

முதலாவது குறிக்கோள் இரண்டு கட்டங்களில் எய்தப்பட்டது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டங்களை மேற்கொண்டதன் மூலம் 1948-இல் அரைகுறை விடுதலை எய்தவும், 1972-இல் முழு விடுதலை எய்தவும் சமசமாசக் கட்சி நேரடியாக முன்நின்று உதவியது. இரண்டவது குறிக்கோள் எட்டாத தொலைவில் உள்ளது.

**குடியுரிமைச் சட்டம்:** விடுதலை பெற்று இரண்டாவது ஆண்டிலேயே மலையகத் தமிழ்மக்களுக்கு குடியுரிமை மறுக்கவும், அதன் விளைவாக அவர்களின் வாக்குரிமையைப் பறிக்கவும் டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. 1947-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், பிரித்தானியக் குடிமக்களாகக் கலந்துகொண்ட மலையகத் தமிழ் மக்கள் பலர் இடதுசாரிப் பக்கம் சாய்ந்து, குறிப்பாக

சமசமாசக் கட்சிக்கு வாக்களிதார்கள். அத்தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் 7 இருக்கைகளை வென்றெடுத்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த தொகுதிகளில், அவர்களின் ஆதரவுடன் இடதுசாரி வேட்பாளர்கள் பலர் வெற்றி பெற்றார்கள்.

காலப்போக்கில் இடதுசாரிகளின் அணிதிரள்வினால் தமக்கு ஆபத்து விளையப் போவதை இலங்கை முதலாளித்துவ வர்க்கம் உணர்ந்துகொண்டது. பல்லாயிரக் கணக்கான மலையகத் தமிழ் மக்களுக்கு குடியுரிமையை மறுக்கும் விதமாக குடியுரிமைச் சட்டத்தில் ‘குடி’ எனும் சொல் வரையறுக்கப்படுவதை முதலாளித்துவ வர்க்கம் உறுதிசெய்தது. அதன் பெறுபேறாக, மலையகத் தமிழ் மக்கள் தமது குடியுரிமையுடன் வாக்குரிமையையும் இழந்தார்கள். அப்பொழுது சமசமாசக் கட்சியின் தலைமையில் இடதுசாரிகளே அதை எதிர்த்து நின்றார்கள்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக விளங்கிய தமிழ் காங்கிரஸ் மேற்படி சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அதற்கு மாறான நிலைப்பாட்டை எடுத்தார். தமது உடன்பிறப்புகளாகிய மலையகத் தமிழ் மக்களை தமிழ்த் தலைவர்களால் காக்க முடியவில்லை. கொழும்பில் நிலைகொண்ட அரசாங்கத்தில் பங்கு வகிப்பதால் சிறுபான்மையோருக்கு நன்மை ஏற்படவில்லை என்றார் செல்வநாயகம்.

சிறுபான்மையோர் வாழும் பிரதேசங்களில் அவர்களுக்குத் தன்னரசு தேவை எனும் பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வாதிட்டார். அந்த அரசியல் நடைமுறையின் ஒரு விளைவே அவர் அமைத்த சமஷ்டிக் கட்சி. 1947-ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் காணப்பட்ட 29-ஆம் பிரிவின்படி, வேறு சமூகங்களுக்கு அல்லது சமயங்களுக்கு ஏற்படாத தடங்கல்களும் மட்டுப்பாடுகளும் எந்த ஒரு சமூகத்துக்கும் அல்லது சமயத்துக்கும் ஏற்படும் விதமாகச் சட்டம் இயற்றலாகாது என்றொரு பாதுகாப்பு இருந்தது.

எனினும், இலங்கை உச்ச நீதிமன்றமோ, அன்று இலங்கையின் அதியுச்ச மேன்முறையீட்டு நீதிமன்றமாக விளங்கிய பிரித்தானிய கோமறை மன்றமோ மலையகத் தமிழ் மக்களின் துயரைத் துடைக்கவில்ல.

**தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமத்துவமும் இனப்பிரச்சினையும்:** முன்னர் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமத்துவம் வழங்க இணங்கிய ஐக்கிய தேசியக் கட்சியும், இலங்கை சுதந்திரக் கட்சியும் 1955-இல் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, சிங்களம் மட்டும் ஆட்சிமொழி ஆக்கப்படுவதை ஆதரித்தன. சமசமாசக் கட்சியோ அதன் சமத்துவக் கொள்கையை உறுதியாகப் பற்றியிருந்தது. ஏற்கனவே பௌத்த குருமார் குழுமம் ஒன்று என். எம். பெரெராவைச் சந்தித்து, சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழியாக்க அவர் உடன்பட்டால், அவரைப் பிரதம மந்திரியாக்கத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தது. அந்த யோசனையை அவர் நிராகரித்தார்.

> **பல்லாயிரக் கணக்கான மலையகத் தமிழ் மக்களுக்கு குடியுரிமையை மறுக்கும் விதமாக குடியுரிமைச் சட்டத்தில் ‘குடி’ எனும் சொல் வரையறுக்கப்படுவதை முதலாளித்துவ வர்க்கம் உறுதிசெய்தது. அதன் பெறுபேறாக, மலையகத் தமிழ் மக்கள் தமது குடியுரிமையுடன் வாக்குரிமையையும் இழந்தார்கள்.**

**கொல்வின் ஆர்.டி. சில்வா விடுத்த ஒரு மொழி, இரு நாடுகள்:** ‘இரு மொழிகள், ஒரு நாடு’ எனும் பேர்போன எச்சரிக்கைக்கு நாடு செவிசாய்த்திருந்தால், பிரிவினைப் போராட்டத்தை தவிர்த்திருக்கலாம். இடதுசாரிகள் சந்தர்ப்பவாதிகளாக விளங்க மறுத்தபடியால், மக்களின் ஆதரவை இழந்தார்கள். 1956-இல் ஆட்சிமொழிச் சட்டமூல விவாதத்தில், சமசமாசக் கட்சியைச் சேர்ந்த பாணந்துறை அங்கத்தவர் விடுத்த எச்சரிக்கை இது:

‘இனக்கலவரங்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை மாத்திரம் நான் குறிப்பிடவில்லை. நாடு பிளவுபடக்கூடிய பேராபத்தும் உண்டு. குறிப்பாக இலங்கையின் வட, கீழ் மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்றார்கள் என்பதை நாங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தமக்குப் பாரதூரமான, ஈடுசெய்ய முடியாத அநீதி இழைக்கப்பட்டுள்ளதென அவர்கள் கருதினால், எஞ்சிய நாட்டிலிருந்து பிரிந்து செல்லவும் அவர்கள் தீர்மானிக்கக்கூடும். உண்மை என்னவெனில், ஏற்கனவே தமிழ்பேசும் மக்களுள் ஒரு பிரிவினர் வெளிப்படையாகவே பிரிவினையை முன்வைத்து வாதாடி வருகிறார்கள்.’

**1956–இல் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி ஆக்கப்பட்டது:** 1987-இல் இரு மொழிகளும் முறைப்படி ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது முரண்சுவை ததும்பும் இலங்கை வரலாறு!

**1972 குடியரசு யாப்பு:** 1972-இல் குடியரசு யாப்பை இயற்றுவதில் கொல்வின் மாபெரும் தொண்டாற்றினார். குடியரசு யாப்பின்படி பிரித்தானியாவுடன் கொண்ட அரசியல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. நாடாளுமன்ற முறைமை பேணப்பட்டது. அடிப்படை உரிமைகள் ஏற்கப்பட்டன. சமூகநீதியை ஆதரித்து நெறிப்படுத்தும் அரசநெறிகள் உள்வாங்கப்பட்டன. இவை புதிய யாப்பின் மூலம் எய்தப்பட்ட மேலதிக சாதனைகள்.

குடியரசு யாப்பில் குறைகளும் இருந்தன. அவற்றுக்கு கொல்வினில் மட்டும் பழிசுமத்தப்படுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கொல்வின் எழுதிய குறுநூல் ஒன்றில், குடியரசு யாப்பில் பௌத்த சமயத்துக்குக் கொடுக்கப்பட்ட இடம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்:

‘நான் சமயச்சார்பற்ற அரசில் நம்பிக்கை உடையவன். எனினும், யாப்பு வரையும் மன்றங்கள் யாப்புகளை வரையும்பொழுது, அவை யாப்பு அலுவல்கள் அமைச்சரால் வரையப்படுபவை அல்ல என்பது உங்களுக்குத் தெரியும் தானே!’ என்கிறார் கொல்வின்.

யாப்பு வரையும் மன்றத்துள் நிலவிய அதிகாரச் சமநிலையை யாப்பின் இறுதி வரைபு புலப்படுத்தியது என்று பொருள்படவே மேற்கண்டவாறு கொல்வின் எழுதியிருக்கின்றார். யாப்பு வரைவதில் துணை நின்றவன் என்ற வகையில், அடியேனது பட்டறிவு அதை உறுதிப்படுத்துகின்றது. யாப்பு வரைவோருக்கு ஒரு பங்குண்டு என்பது உண்மையே. அதேவேளை சர்ச்சைக்குரிய சங்கதிகள் பற்றிய இறுதி

வரைபு, சம்பந்தப்பட்ட அரசியலதிகார விசைகளிலேயே தங்கியுள்ளது; அவ்விசைகளின் பெறுபேறுகளையே அது புலப்படுத்துகின்றது.

பௌத்தம் பெரும்பான்மையோரின் சமயம் என்றபடியால், ‘அதற்குரிய இடம்’ கொடுக்கப்பட வேண்டும் என்று கொல்வின் முதன்முதல் இட்ட முன்மொழிவை யாப்பு வரையும் மன்றம் ஏற்றுக்கொண்டது உண்மையே. எனினும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில் கூடிய சமய உபகுழு, பௌத்த சமயத்துக்கு ‘அதிமுதன்மையான இடம்’ கொடுக்கப்பட வேண்டும் என்று மாற்றியது.

பிரதமரின் முன்னோர்களுள் ஒருவர் 1815-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கண்டிப் பொருத்தனையில் ஒப்பமிட்டதாகவும், அதில் பௌத்தம் மீறவொண்ணாத சமயம் என்று வெளிப்படுத்தப்பட்டதாகவும், பௌத்த சமயச் சடங்குகளையும், குருமாரையும், வழிபாட்டிடங்களையும் பேணிப் பாதுகாக்கப் பிரித்தானியர் உடன்பட்டதாகவும், இவையெல்லாம் பிரதமரின் கருத்தில் தாக்கம் செலுத்தியதாகவும் நம்பப்படுகிறது.

**“அரசியல் யாப்பின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தையே தமிழ் மக்கள் முதன்முதல் கோரினார்கள். பிரதேச தன்னரசைக் காட்டிலும், நடுவண் அரசுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில்தான் அவர்கள் முதற்கண் பெரிதும் விருப்பம் தெரிவித்தார்கள்.”**



1972-ஆம் ஆண்டில் குடியரசு யாப்பு வரைந்த குழுவில் அங்கம் வகித்த கலாநிதி நிகால் ஜயவிக்கிரமா எழுதியவாறு, கொல்வின் தயாரித்த முழுமுதல் வரைபில் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்று குறிப்பிடப்படவில்லை. அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவே இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்று குறிப்பிடப்பட வேண்டுமென முன்மொழிந்தார். முன்மொழியப்பட்ட யாப்பு ஓர் ஒற்றையாட்சிக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் அதே வேளை, ஒற்றையாட்சி யாப்புகளின் உருவங்கள் கணிசமானளவு வேறுபடக்கூடும்; ஆதலால் யாப்பில் நெகிழ்ச்சிக்கு இடம்கொடுக்க வேண்டும் என்பதே கொல்வின் கொண்ட கருத்து.

எனினும் ‘ஒற்றையாட்சி’ என்ற பதம் இறுதிவரைபில் இடம் பிடித்துக்கொண்டது. ‘நன்கு சிந்திக்காமல், அவசர அவசரமாக, முற்றிலும் அநாவசியமாக இடப்பட்ட ‘ஒற்றையாட்சி’ என்ற சோடனை காலப்போக்கில் தனிச்சிங்கள அரசு ஒன்றினை அமைக்கத் துடிக்கும் ஆட்களதும் குழுமங்களதும் அறைகூவலாக மாறியது’ என்கிறார் நிகால் ஜயவிக்கிரமா.

1972-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட யாப்பில் தமிழ், சிங்களம் இரண்டையும் ஆட்சிமொழிகளாக்கத் தவறியமை இடதுசாரிகளுக்கு நேர்ந்த தோல்வி என்பது உண்மையே. வட, கீழ் மாகாண நீதிமன்றுகளில் தமிழைப் பயன்படுத்த அனுமதித்தமை, நாட்டின் எந்த நீதிமன்றிலும் தமிழ் மொழிபெயர்ப்பை பெற்றுக்கொள்ளும் உரிமையை வழங்கியமை எல்லாம் சின்னஞ்சிறிய சாதனைகளாகும்.

**அதிகாரப் பரவலாக்கம்:** அரசியல் யாப்பின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தையே தமிழ் மக்கள் முதன்முதல் கோரினார்கள். பிரதேச தன்னரசைக் காட்டிலும், நடுவண் அரசுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில்தான் அவர்கள் முதற்கண் பெரிதும் விருப்பம் தெரிவித்தார்கள். அதனைக் கருத்தில் கொள்ளும்பொழுது, சமத்துவத்தின் மூலம் இன ஒற்றுமையை உறுதிப்படுத்த முடியுமென இடதுசாரிகள் நம்பியதில் வியப்பில்லை.

முரண்பாடு முற்றிய பிறகு, அதற்கான தீர்வு பிரதேச தன்னாட்சியே என்று உறுதிபட நம்பிய என்.எம். பெரெரா தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளில் இவ்வாறு எழுதியிருக்கின்றார்:

‘ஒரு தீயூழ் எனும்படியாக, சிங்கள-சார்புத் தரப்புகள் தள்ளாடிய வேளையில், இளந்தீவிரவாதிகள் தனியரசு கோருவதில் முன்னணிக்கு வந்தார்கள்... 20 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழினத்துக்கு நிறைவளித்திருக்கக்கூடிய எதுவும், 20 ஆண்டுகளுக்குப் பின்னர் போதுமானதாகாது. நலமான, இன ஒற்றுமையை மீண்டும் ஈட்ட வேண்டுமாயின், பிரதேச தன்னாட்சி என்றவகையில் பிற சலுகைகளும் வழங்கப்பட வேண்டியிருக்கும்.’

என்.எம். பெரெரா இறப்பதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரைகளில், அவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இறந்த பிறகு அவரைப் பின்பற்றியோர் பிரதேச தன்னரசுக்கான முன்மொழிவைத் தொடர்ந்து முன்வைத்தார்கள். 1983 ஆடி வேதனைகள் பட்டறியப்பட்ட பிறகு நிகழ்ந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் கொல்வின் பங்குபற்றினார்.



'இனப்பிரச்சினை என்பது இந்தச் சமூகத்துக்கும் அந்தச் சமூ கத்துக்கும் இடைப்பட்ட பிரச்சினை அல்ல, இது இலங்கைத் தேசிய அரசுப் பிரச்சினை' என்று முழங்கினார்.

இலங்கை ஒரே அரசுடன் கூடிய ஒரே நாடாக விளங்க வேண்டும் என்பதே சமசமாசக் கட்சியின் நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டை திரும்பவும் கொல்வின் வலியுறுத்தினார். அதேவேளை, தொடர்ச்சியான ஆள்புலத்தில் பெருந்தொ கையான தமிழ்மக்கள் வாழ்ந்து வருவதால், குறிப்பாக சமத் துவம், தேசியம், அரசாங்கம் என்பவற்றைப் பொறுத்தவரை நிறைவேற்றவேண்டிய நோக்கத்தை தற்போது அமைக்கப் பட்டுள்ள அரசு நிறைவேற்றவில்லை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இடதுசாரிகள் 13-ஆவது திருத்தத்தை கொள்கையளவில் ஆதரித்தார்கள். அதற்காக விஜய குமாரதுங்க உள்ள டங்கிய 200 இடதுசாரிகள் தம் இன்னுயிரை ஈந்தார்கள். அவர்களுள் 25 பேர் சமசமாசக் கட்சியினர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அனைத்துக் கட்சிப் பிரநிதிகள் குழு அமைக்கப்பட்டது. அதற்குச் சமசமாசக் கட்சி அமைச் சர் திஸ்ஸ விதாரணை தலைமை வகித்தார். பிளவுபடாத நாட்டினுள் பரந்துபட்ட அதிகாரப் பரவலாக்கத்தை அது முன்வைத்தது.

**நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல்:** என்.எம். பெரெரா உலகளாவிய நாடாளுமன்ற முறைமையை செவ்வனே தேர்ந்து தெளிந்தவர்; தலைசிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்; நடாளுமன்ற முறைமையை அவர் உறுதிபட ஆதரித்ததில் வியப்பில்லை. 1978-ஆம் ஆண்டில் புகுத்தப் பட்ட யாப்பினைக் குறித்து அவர் ஒரு கட்டுரைத் தொகுப் பினை வெளியிட்டார். இலங்கையில் நாடாளுமன்ற ஆட்சி முறைமை 40 ஆண்டுகளாக குறிப்பிடத்தக்களவு வெற்றிகர மாகச் செயற்பட்டது. மேல்நாட்டு அவதானிகளை அது வியக்க வைத்தது என்றெல்லாம் என்.எம். பெரெரா அதில் குறிப்பிட்டுள்ளார். இன்று நிறைவேற்று ஜனாதிபதி முறை மையை ஒழிக்க வேண்டுமென வாதாடுவோரின் கைந்நூலாக அது மாறியுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் எண்ணத்தை இடதுசாரிகள் இடைவிடாது, தளராது ஆதரித்து வந்தார்கள். சமசமாசக் கட்சி இந்த முயற்சிக்கு கணிசமானளவு துணைநின்றுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்து, மாகாணங்க ளுக்கும், மாவட்டங்களுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக் கும் அதிகாரங்களைப் பரவலாக்கி, எல்லாச் சமூகங்களுக் கும் ஆட்சியில் பங்கு வழங்கும் விதமாக ஒரு புதிய யாப் பினைப் புகுத்துவோம் என்று தேசிய மக்கள் சக்தி அதன் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தது. எனினும், அவ்வாக்குறுதிகளை நிறைவேற்றுவ தற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரியவில்லை. அவற்றை நிறைவேற்ற நெருக்குதல் கொடுப்பது இடதுசாரி களின் கடமை.

என்.எம். பெரெராவின் 120-ஆவது பிறந்தநாளை நினைவு கூரு முகமாக 2025 ஜூன் மாதம் வெளியிடப்பட்ட ஒரு கட்டு ரையில் அடியேன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறேன்:

'இடதுசாரித் தரப்பு சிதறுண்டு வலுவிழந்திருக்கலாம். ஆனா லும் கூட, ஓர் இடதுசாரித்துவ மாற்றுத்தரப்புக்கான பொருத் தப்பாடும் தேவைப்பாடும் இன்னமும் உண்டு. சமசமாசக் கட்சி மீளவும் ஒன்றுபட்ட கட்சியாக அதன் 90-ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட முடியுமானால், ஒன்றுபட்டு வலிமை மிகுந்த இடதுசாரித் தரப்புத் தோன்ற வழி பிறக்கும். என்.எம். பெரெராவையும், மற்றும் பிற முன்னோடி இடதுசாரி களையும் மாண்புறுத்துவதற்கு அத்தகைய மாற்றமே தலை சிறந்த வழி.'

இந்த விடயம் குறித்து ஓரளவு கலந்துரையாடப்பட்டமை ஊக் கமளிக்கின்றது. வெறுமனே சமசமாசக் கட்சியினதும், இடது சாரித் தரப்பினதும் வரலாற்றைப் பற்றிக் கலந்துரையாடுவது போதாது. செயற்பட வேண்டும். 'இடதுசாரிச் செயலர்கள் இல்லாத ஒரு முடிக்காகப் போராடுவதில் வல்லவர்கள்' என்று பேர்ணாட் சொய்சா உதிர்த்த வஞ்சப்புகழ்ச்சியைப் பொய்ப்பிப்பது இடதுசாரிகளின் கடமை.

Jayampathy Wickramaratne, LSSP @ 90: The Sama Samaja Role In Constitutional Issue, Colombo Telegraph, 2025-12-18,



mani.velupillai@thaiveedu.com

# அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளையின மேலாதிக்கமும் மானுட விரோதமும்

ரூபன் சிவராஜா

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு பேரினவாதியும் வெள்ளை மேலாதிக்க மனநிலை கொண்ட ஒருவரென்பதும் வெளிப்படுவது இது முதற்தடவையல்ல, இதற்கு முன்னரும் பல தடவைகள் நிரூபணமான ஒன்றுதான். ட்ரம்ப் பதவிக்காலத்தில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கைகள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வெளிநாட்டவர்களின் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அமுல்படுத்தினார். அவற்றின் பிரதிபலிப்பாகவே அவருடைய இனவெறி மற்றும் பாசிசக் கருத்துகளைப் பார்க்கவேண்டியுள்ளது.**

‘அவர்கள் வெறும் குப்பை. இந்த நாட்டுக்கு அவர்கள் எதனையும் பங்களிக்கவில்லை. அவர்கள் எமது நாட்டில் இருப்பதை நான் விரும்ப வில்லை.’

இந்தக் கருத்துகளை உதிர்த்தவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப்.

‘அந்த மாநிலத்தின் (Minnasota) பல பில்லியன் டொலர் நிதியை அவர்கள் விழுங்கிவிட்டனர். ஒவ்வொரு வருடமும் பில்லியன் கணக்கான நிதி அவர்களுக்காகச் செலவிடப்படுகின்றது. அவர்கள் வெறும் குப்பை. எமது நாட்டுக்கு அவர்கள் எந்தவித பங்களிப்பினையும் செய்யவில்லை. அவர்கள் எமது நாட்டில் இருப்பதை நான் விரும்பவில்லை. இதை நான் வெளிப்படையாகவே சொல்கிறேன். இது அரசியல் ரீதியாகத் தவறான கருத்து எனப் பலரும் சொல்லக்கூடும். நான் அதைப்பற்றிக் கவலைப்பட வில்லை.’

அமெரிக்கா வாழ் சோமாலிய குடியேற்றச் சமூகங்களை நோக்கி இந்த மானிட விரோத, இனவாதக் கருத்துகளை ட்ரம்ப் கூறினார். அதுவும் அர சாங்கக் கூட்டமொன்றில் இவ்வாறு கூறினார்.

இக்கட்டுரை அமெரிக்க குடியேற்ற சமூகங்கள் மற்றும் சிறுபான்மை யினர், குறிப்பாக சோமாலிய அமெரிக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பாகுபாடு குறித்து விவாதிக்கிறது. ட்ரம்ப் நிர்வாகத்தில் நாடு கடத்தல் (அகதிகளைத் திருப்பியனுப்புதல்), வெறுப்புப்பேச்சு, புறக்க ணிப்புகள் குடியேற்ற சமூகங்களுக்கு எதிரான அரசியல் நிலைப்பாடுகள் போன்ற தலைப்புகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சட்டங்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் குடியேற்ற சமூகங்கள் மீது எவ்வாறான பாதிப் புகளை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் விவரிக்கிறது. இனவாதச் சொல் லாடல்கள், பேச்சுகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறு மானிட விரோதப் போக்குகளை உருவாக்குகின்றன, சாதாரணமாக்குகின்றன என்பதையும் பிரதிபலிக்கிறது.



tg.theeban@gmail.com

## சோமாலிய சமூகத்திற்கு எதிராக ட்ரம்ப் நிர்வாகம்:

இன்றைய உலகின் ஆகப்பெரிய இன மேலாதிக்கவாதி யார் என்றால் எவ்வித தயக்கமும் சந்தேகமுமின்றிச் சொல்லக் கூடிய பெயர் டொனால்ட் ட்ரம்ப். ஒரு மக்கள் இனத்தினைக் குப்பை என்று ஓர் அவையிலே, அதுவும் நொடியில் உலக மெங்கும் கொண்டு சேர்க்கக்கூடிய ஊடக ஒலிவாங்கிகள், கமெராக்களின் முன்னிலையில் இவரால் சொல்ல முடிகின் றது. உலக ஒழுங்கின் தீர்மான சக்தியாக விளங்கக்கூடிய ஒரு நாட்டின் தலைவரால் இத்தகைய கருத்துகளைக் கூறிவிட்டுத் தொடர்ந்தும் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்க முடிகின்றதென் றால் இந்த உலகினதும் அதன் ஆட்சி முறைமையினதும் சட் டங்களினதும் மனித உரிமைகளினதும் பெறுமதியை அள விடமுடியும்.

அந்தக் கூட்டத்தில் ட்ரம்ப் மேலும் கூறியவை:

எமக்கு அவர்களின் உதவி அவசியமில்லை. எமது நாட்டினை நாம் மீளக் கட்டியெழுப்ப வேண்டும். எமது நாடு ஒரு திருப்பு முனைக் காலகட்டத்தில் இருக்கிறது.

நம்முடைய நாட்டிற்குள் குப்பைகளை ஏற்கும் போதெல்லாம் நாம் தவறான வழியில் செல்கிறோம். அவர்களுடைய நாடு மோசமானது, நாற்றம் வீசுகின்ற நாடு அது. வேறு நாடு களைப் பற்றியும் நான் அவ்வாறு கூறமுடியும் அவர்களுடைய நாடு மோசமானதாக இருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது என்றார்.

மட்டுமல்லாமல் மின்னசூடா மாநிலத்தைச் நேர்ந்த 43 வயது டைய சோமாலியப் பின்னணியைக் கொண்ட கொங்கிரஸ் அவை உறுப்பினர் இல்ஹான் ஓமர் (Ilhan Omar) அவர் களையும் பெயர் குறிப்பிட்டு 'ஒரு குப்பை' என்றார்.

இல்ஹான் ஓமர் ஜனநாயகக் கட்சி உறுப்பினராக, 2017-ஆம் ஆண்டு அமெரிக்க கொங்கிரஸ் அவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட முதலாவது சோமாலிய-அமெரிக்க பெண் உறுப்பினர். முதலாவது முஸ்லிம்-அமெரிக்க பெண்களில் ஒருவருமாவார். சோமாலியாவில் பிறந்த இவர் தனது குடும்பத்தினருடன் 1993-இல் தனது 13-வது வயதில் அமெரிக்காவுக்கு அகதி யாகப் புலம் பெயர்ந்தார். குடியேற்ற சமூகங்களின் உரிமை, கல்வி மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்கான பணிகள் மூலம் இவர் அறியப்படுகிறார். 2019-ஆம் ஆண்டு மின்னியா பொலிஸில் (Minnapolis) நடைபெற்ற தேர்தல் கூட்டமொன் றில் உரையாற்றும்போது சோமாலியர்கள் அந்த மாநிலத்திற் குடியேற ஏன் அனுமதிக்கப்பட்டனர் என்று ட்ரம்ப் கேள்வி எழுப்பியதோடு, இல்ஹான் ஓமர் இனை 'அவமானம்' என்றும் விளித்தார். ட்ரம்ப்பின் அண்மைய கருத்துகளை கண்டித் துள்ள இல்ஹான் ஓமர், சோமாலிய மக்களிற் பலர் அமெரிக்க தேசத்திற் தமக்கான வாழ்க்கையை கட்டியெழுப்பியுள்ளனர், அமெரிக்க சமூகத்தின் முக்கிய பகுதியாகவும் அவர்கள் உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

சோமாலியர்களுக்கு எதிரான ட்ரம்ப்பின் கூற்றுகள் துணை ஜனாதிபதி JD Vance உட்பட்ட வெள்ளை மாளிகையைச் சேர்ந்த பலரால் வரவேற்கப்பட்டது. ஜனநாயகவாதிகள் (ஜன நாயகக் கட்சி) மற்றும் மனித உரிமைக் காப்பாளர்கள் இதற் குக் கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளதோடு, அந்த உரை யின் ஆபத்து மற்றும் அதன் வெளிநாட்டவர் விரோதப் போக் குக் குறித்து எச்சரித்துமுள்ளனர்.

சிவில் உரிமை வழக்கறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ட்ரம்பின் இத்தகைய கருத்து வெளிப்பாடுகள் வெறுப்புரை கள், (hate speech), இழிவுரைகள் (humiliation) சாதாரண மாக்கலுக்கு உட்படுவதற்கும் அரசியல் ரீதியாக அனுமதிக் கப்படுவதற்கும் துணைசெய்கின்றன என விசனம் தெரிவித் துள்ளனர்.



> ***ஜனவரி 2025-இல் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றதை அடுத்து, சட்டவிரோத குடியேற்றவாசிகளை நாடுகடத்தும் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டது. இதில் தேசிய அவசர நிலை பிறப்பிப்பு, எல்லை பாதுகாப்புக்கு இராணுவத்தினரைக் குவித்தமை, குடிவரவு-சுங்கப் பிரிவின் கீழ் பெருமெண்ணிக்கையிலான கைது நடவடிக்கைகள் அடங்குகின்றன.***

## வெள்ளைப் பேரினவாதம்:

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு பேரினவாத வெள்ளை மேலாதிக்க மனநிலை கொண்ட ஒருவரென்பது வெளிப்படுவது இது முதல்தடவையல்ல இதற்கு முன்னரும் பல தடவைகள் நிரூபணமான ஒன்றுதான். இத்தகையவர் இன்னும் மூன்று ஆண்டுகள் பதவியில் இருக்கப் போகின்றார்.

உண்மையில் இது சோமாலியர்களுக்கு எதிரான தாக்குதல் மட்டும் என்பதல்ல. ட்ரம்ப் நிர்வாகம் வெளிநாட்டவர்களுக்கு எதிரான ஓர் அரசியலைக் கையிலெடுத்துள்ளது. அதன் ஓர் அங்கமே இது. குறிப்பாக கறுப்பின மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இது. ட்ரம்ப் முதன்முறையாக ஜனாதிபதியாகப் போட்டியிட்டபோது, முஸ்லிம்களின் குடிவரவை நிறுத்தப் போவதாகக் கூறித் தன் பிரச்சாரத்தைத் தொடங்கினார் என்பது நினைவூட்டத்தக்கது.

பராக் ஒபாமா அமெரிக்காவில் பிறக்கவில்லை என்ற இனவாதக் கருத்தினை முன்னிறுத்தி அமெரிக்க தேசிய அரசியலில் தன்னை முதன்முதலாக அறியச் செய்தவர் இந்த ட்ரம்ப் என்பது பலருக்கு நினைவிருக்கக்கூடும். ட்ரம்ப் பதவிக்காலத்தில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கைகள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வெளிநாட்டவர்களின் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அமுல்படுத்தினார். அவற்றின் பிரதிபலிப்பாகவே அவருடைய இனவெறி மற்றும் பாசிசக் கருத்துகளைப் பார்க்கவேண்டியுள்ளது.

ஹைய்திய (Haitian) குடியேற்ற சமூகத்தினர் செல்லப்பிராணிகளை உண்கிறார்கள் என்று தவறாக குற்றம் சாட்டியதோடு, ஹெய்தி மற்றும் ஆபிரிக்க நாடுகளை 'கழிப்பறை - shithole' நாடுகள் என்று விளித்தார். செல்லப்பிராணிகளை சாப்பிடுகிறார்கள் என்று ட்ரம்ப் தேசிய தொலைக்காட்சி விவாதத்தில் கூறிய பின், அந்தச் சமூகத்திற்கு எதிரான மிரட்டல்கள் அதிகரித்து, அவர்களின் வணிக நிறுவனங்கள் பல மூடப்பட்டன. பல ஹைத்திய சட்டபூர்வ குடியிருப்பாளர்கள் நகரை விட்டு வெளியேறிச் சென்றனர்.

## நாடுகடத்தல் கொள்கை:

ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா கடுமையான நாடுகடத்தல் (deportation) கொள்கையை அமுல்படுத்தத் தொடங்கியிருந்தது. கடந்த பல மாதங்களாக அமெரிக்காவிற் குடியேறிய மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளையும் பிரசாரங்களையும் தீவிராமாக மேற்கொண்டு வருகின்றது. ஜனவரி 2025-இல் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றதை அடுத்து, சட்டவிரோத குடியேற்றவாசிகளை நாடுகடத்தும் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டது. இதில் தேசிய அவசர நிலை பிறப்பிப்பு, எல்லை பாதுகாப்புக்கு இராணுவத்தினரைக் குவித்தமை, குடிவரவு-சுங்கப் பிரிவின் கீழ் பெருமெண்ணிக்கையிலான கைது நடவடிக்கைகள் அடங்குகின்றன.

3500-இற்கும் மேலான சட்டபூர்வ வதிவிட உரிமை இல்லாதவர்கள் கைது செய்யப்பட்டனர். விமானங்கள் மூலம் அவர்கள் சொந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். பல மாநிலங்கள், குறிப்பாக அதிகமான ஆவணமற்ற குடியேற்றவாசிகளைக் கொண்ட மாநிலங்கள், மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்தன. அதனால் மாநில நிர்வாகங்களுக்கும் கூட்டாட்சி நிர்வாகத்திற்குமிடையில் அரசியல் மற்றும் சட்டபூர்வ முரண்பாடுகள் உருவாகின. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்க நகரங்களில் பாரிய போராட்டங்கள் நடைபெற்றதோடு, குடியேற்றவாசிகளுக்கான உரிமைகளை வலியுறுத்தியும் ட்ரம்ப் நிர்வாகத்தின் கொள்கைக்கு எதிராக கோரிக்கைகளும் வலுப்பெற்றிருந்தன.

மெக்ஸிகோ, எல் சல்வடோர், இந்தியா, சீனா உள்ளிட்ட பல நாடுகள் அமெரிக்காவின் நாடுகடத்தல் கொள்கைக்கு பதிலளித்தன. சில நாடுகள் திருப்பியனுப்பும் நடவடிக்கைக்கு ஒத்துழைத்தன, ஏனையவை எதிர்ப்புத் தெரிவித்தன அல்லது நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தின. அமெரிக்க குடியேற்றக் கொள்கை நீண்ட காலமாகவே இனவாத சட்டங்கள் மற்றும் வெள்ளையல்லாதவர்களை விலக்கும் நடவடிக்கைகளை உள்ளடக்கியது. உதாரணமாக, 1790-இன் Naturalization Act 1882-இன் Chinese Exclusion Act 1924-இன் Johnson-Reed Act ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## சோமாலியச் சமூகம் மீதான விரோதப் போக்கும் பின்னணியும்:

சமீப நாட்களில், வோஷிங்டனில் இரண்டு தேசிய காவல் படை வீரர்கள் சுடப்பட்ட சம்பவத்தையடுத்து, ட்ரம்ப்பின் பேச்சில் இனவாதமும் குடியேற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளது. இந்தச் சூட்டுச் சம்பவத்திற் சந்தேகிக்கப்படும் குற்றவாளி, ஆப்கான் போரில் அமெரிக்க படையினருக்கு உதவிய காரணத்தால் அமெரிக்காவில் பாதுகாப்பு வழங்கப்பட்ட ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர். இந்தச் சம்பவத்தின் பின்னணியிலும் அதற்குப் பதிலடியாகவுமே ஐரோப்பா அல்லாத 19 நாடுகளிலிருந்து குடியேற்ற விண்ணப்பங்களை இடைநிறுத்துவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது. ஆப்கானியர்களுக்கு விசா அனுமதி வழங்குவதை ட்ரம்ப் நிர்வாகம் நிறுத்திவைத்துள்ளது.

இது விடயம் குறித்த ஊடகர்களின் கேள்விக்கே, சம்பந்தமில்லாத வகையில் சோமாலிய குடியேற்ற சமூகத்தினை நோக்கிய இனவாத வசைவுகளை ட்ரம்ப் வெளியிட்டார். மின்னசூட்டா மாநிலத்தினை அவர்கள் கையகப்படுத்திவிட்டனர் என்பதாகவும் கூறினார். ட்ரம்ப் நிர்வாகம் நீண்டகாலமாக நீல நகரங்கள் எனப்படும் லோஸ் ஏஞ்சலஸ், வோசிங்டன் டி.சி, சிக்காகோ, சர்லொத், நியூ ஓர்லீன்ஸ் (Los Angeles, Washington DC, Chicago, Charlotte, New Orleans) ஆகியனவற்றில் வெளிநாட்டவர்களைக் கைதுசெய்து வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்புதல் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. நீல நகரங்கள் (Blue cities) என்பது குடியரசுக்



கட்சிக்கு மாற்றான ஜனநாயகக் கட்சி ஆதரவு அதிகமுள்ள நகரங்களைக் குறிக்கிறது. அத்தோடு இந்நகரங்களில் புலனாய்வுத் துறையினரின் (Federal agents) பிரசன்னத்தினையும் விரிவுபடுத்தியிருந்தது.

மின்னசோட்டா மாநில அரசியலில் சோமாலியர்கள் முக்கியமானதொரு சக்தியாக மாறியுள்ளனர். மின்னசோட்டாவில் வாழும் சோமாலிய மக்களிற் பெரும்பான்மையினர் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள். அவர்களிற் பலர் சோமாலியாவின் உள்நாட்டுப் போரிலிருந்து தப்பி பாதுபாப்புத் தேடியவர்கள். சோமாலிய புகலிடக் கோரிக்கையாளர்களுக்காக தற்காலிக பாதுகாப்பு நிலையை முடிவுக்கு கொண்டு வந்துள்ளமைக்கு உள்ளூர் தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## விளைவுகளும் அச்சங்களும்:

ட்ரம்பின் இந்தக் கருத்துகளின் விளைவாக அரசியல் வன்முறை அதிகரிக்கும் என்ற அச்சம் நிலவுகின்றது. இருப்பினும் அமெரிக்க சோமாலியர்கள் சமூக ஊடகங்களில் நகைச்சுவை, அங்கதத் தன்மையுடன் இது விடயத்திற்கான எதிர்வினைகளை ஆற்றியுள்ளனர். செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கிய படங்கள் மற்றும் கேலிச்சித்திரங்கள் மூலம் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்திவருகின்றனர்.

அதே சமயம், ட்ரம்ப்-இன் இழிவுபடுத்தற் கருத்துகள் மினியாபொலிஸில் சோமாலிய வணிகர்களிடையே பெரும் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. தெருக்கள் வெறிச்சோடி, கடைகள் மூடப்பட்டுள்ளன என்ற தகவல்கள் வெளியாகியிருந்தன. ட்ரம்ப்-இன் கருத்துகள் சோமாலியாவிலும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளன. சோமாலிய அரசு பதிலளிக்க வேண்டும் என்று அங்குள்ள பொதுமக்கள் மற்றும் அரசியல் மட்டங்களிற் கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஆயினும் சோமாலிய அரசாங்கம் எதுவித எதிர் வினைகளையும் இதுவரை ஆற்றவில்லை.

அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கப் பிரிவு (Immigration and Customs Enforcement - ICE) மின்னசூட்டா மானிலத்தில் வதிவிட ஆவணங்களற்ற சோமாலியர்கள் மீது விசேட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. அமெரிக்காவில் சோமாலியச் சமூகம் அதிகம் வாழும் மாநிலம் இதுவாகும். 'Feeding Our Future' என்ற அமைப்புடனும் குழந்தைகளுக்கான கோவிட்-19 உணவுத் திட்டத்துடனும் தொடர்புடைய ஒரு பெரும் மோசடி வழக்கினை சோமாலிய சமூகத்திற்கு எதிரான கருவியாக ட்ரம்ப் நிர்வாகம் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டம் பெருந்தொற்றுக் காலத்தில் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான உணவுகளைக் குழந்தைகளுக்கு வழங்கியதாக பொய்க்கணக்குக் காட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்களில் பிரதான நபர் அமெரிக்க வெள்ளையினத்தவர், பலர் சோமாலியர்கள், பெரும்பாலோர் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள் எனப்படுகின்றது. மோசடி செய்யப்பட்ட தொகை 250 - 300 மில்லியன் டொலர் எனப்படுகின்றது. இந்த வழக்குகள் இன்னும் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன.

## குற்றச்சாட்டுகள்:

City Journal என்ற பாதுகாப்பு கென்சர்வேற்றிவ் பின்னணி கொண்ட செய்தி நிறுவனத்தின் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னர் ட்ரம்ப் நிர்வாகம் சோமாலியச் சமூகத்தினரை நோக்கிய விமர்சனங்களை அதிகரித்தது. மோசடி செய்யப்பட்ட அரசு திட்டங்களிலிருந்து வரிப்பண மோசடி செய்யப்பட்ட நிதி al-Shabab என்ற தீவிரவாத அமைப்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அச்செய்தி கூறியது. al-Shabab என்பது al-Qaida அமைப்பின் ஒரு கிளை எனப்படுகிறது. இது சோமாலியாவின் கிராமப் பகுதிகளை கட்டுப்படுத்துகிறது. தலைநகர் Mogadishu-இனைக் கைப்பற்றும் இலக்கினைக் கொண்டுள்ளது.

Al-Shabab (Harakat al-Shabab al-Mujahidin), இது கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள இஸ்லாமிய தீவிரவாத இயக்கம். 2012-இல் இந்த அமைப்பு al-Qaida வலைப்பின்னலுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியது. சோமாலியாவே இதன் பிரதான இயங்குதளம். ஆனால் இதன் கிளைகள் கென்யா, தன்சானியா மற்றும் எத்தியோப்பியாவிலும் உள்ளன. ஆனால் al-Shabab பயங்கரவாத அமைப்பிற்கு நிதி அனுப்புவதான குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்குரிய ஆதாரங்கள் இதுவரை போதியளவு கிடைக்கவில்லை. மோசடி வழக்குகளில் சோமாலிய சமூகம் சாட்டப்படுவதை உள்ளூர் சோமாலிய சமூகத் தலைவர்கள், மற்றும் மின்னசூட்டா ஆளுநர் Tim Walz, மின்னாபொலிஸ் மேயர் Jacob Frey போன்ற ஆதரவாளர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

> ஆளுமைக் கோளாறுடைய சமூக விரோத மனநிலையுடைய ஆட்சியாளர்கள் கைகளில் எமது தலைவிதியைத் தொடர்ந்து அனுமதித்தால் கொரோனா வைரசைவிட மிகப்பெரிய ஆபத்தினை மானிடம் எதிர்கொள்ள வேண்டிவரும்

## சட்ட நடவடிக்கை:

சோமாலிய சமூகத்தினைச் சேர்ந்த 70 வரையானவர்கள் அத் திட்டத்தை பயன்படுத்தி சொகுசுக் கார்களும் சொத்துகளும் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இவர்களில் 37 பேர் குற்றத்தினை ஒப்புக்கொண்டுள்ளனர். 5 பேருக்கு குற்ற வியல் வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத் தினைக் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கும் மையமாகச் சித்தரித்துவந்துள்ளார் ட்ரம்ப். அதனைக் காரணமாக முன் வைத்து, நாட்டில் சோமாலியப் பின்னணியைக் கொண்டவர்க ளுக்கான தற்காலிக பாதுகாப்பு நிலையை (Temporary Protected Status - TPS) முடிவுக்குக் கொண்டுவரும் அறிவிப் பினை விடுத்திருந்தார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் பயணத் தடைப் பட்டியலில் சோமாலியா இருந்தது. ஒபாமா நிர்வாகத்தின்போதும் அந்நாடு சார்ந்த பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. சோமாலிய உள்நாட்டுப் போரின் காரணமாக சோமாலியப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு முதன்முதலாக 1991-இல் தற்காலிக பாதுபாப்பு நிலை (TPS) வழங்கப்பட்டது. அந்நாட்டின் நீடித்த முரண்பாடுகள், ஸ்திரமின்மை காரணமாக அந்நிலை புதுப்பிக்கப்பட்டது.

ICE நடவடிக்கையை ட்ரம்ப் நிர்வாகத்தின் பிரசார நடவ டிக்கை என மின்னசூட்டா மாநில ஆளுநர் Tim Walz விளித் துள்ளார். அத்துடன் மின்னயா பொலிஸ் மற்றும் சென்ட்போல் நகர மேயர்கள் சோமாலிய சமூகத்திற்கு ஆதரவு தெரிவித் துள்ளதோடு அந்நகரங்களின் காவல்துறையினர் குடியேற்ற சமூகங்களுக்கெதிரான தேடுதல், கைது, திருப்பியனுப்பல் நடவடிக்கைகளிற் பங்கேற்க மாட்டார்கள் என்றும் கூறியுள் ளனர்.

மொழிப் பயன்பாட்டில் பொறுப்பும் கரிசனையும் அவசியம். இனவெறிச் சொல்லாடல்கள் ஆபத்துகளை விளைவிக்கக் கூடியவை. கடந்த ஒக்ரோபரில், குடியரசு கட்சி இளைஞர் தலைவர்களிடையே நடந்த குழு உரையாடல்களில் இன வெறி, வன்முறை பேச்சுகள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. இது அமெரிக்க அரசியலில் வெறுப்புப் பேச்சு சாதாரணமாகி விட்டமையை வெளிப்படுத்துகின்றது.

## ட்ரம்ப் – ஒரு சமூக விரோத பஃபூன்:

சமகால உலகம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் யாவும் நவ தாராளவாத கொள்கைகளினால் தீவிரமடைந்தவை. இந் நெருக்கடிகளின் முடிவு இரண்டு தெரிவுகளை விட்டுச்செல் லும். ஒன்றில் சர்வாதிகாரம் தீவிரமடைந்த மோசமான அரசு களை உருவாக்கும் அல்லது மானிட விழுமியங்களை அடிப் படையாகக் கொண்ட சமூக மீள்கட்டமைப்புக்கு வழிகோலும் என்று 2020-இல் கொரோனாப் பெருந்தொற்றின் தொடக் கத்தில் அறிஞரும் விமர்சகருமான Noam Chomsky ஒரு கருத்தினை வலியுறுத்தியமை நினைவிற்கு வருகின்றது.

ஆளுமைக் கோளாறுடைய சமூக விரோத மனநிலையுடைய ஆட்சியாளர்கள் கைகளில் எமது தலைவிதியைத் தொடர்ந்து அனுமதித்தால் கொரோனா வைரசைவிட மிகப்பெரிய ஆபத் தினை மானிடம் எதிர்கொள்ள வேண்டிவரும் எனவும் அவர் எச்சரித்திருந்தார்.

Chomsky ஓர் இடதுசாரிய தத்துவாசிரியர், சிந்தனையாளர், மொழியியல் அறிஞர், அரசியல் விமர்சகர் என உலகளாவிய கருத்தியல் தளத்தில் சோம்ஸ்கியின் எழுத்துகள், உரையா டல்கள், விமர்சனப் பங்களிப்புகள் பல்பரிமாணமுடையவை. அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மறறும் அதன் ஆக்கிர மிப்புப் போர்களைத் தொடர்ச்சியாக ஆய்வு ரீதியாக விமர் சித்து எழுதியும் உரையாற்றியும் வந்துள்ளார்.

Democracy in Europe Movement 2025 (DiEM25) எனும் அமைப்பின் இணை நிறுவுனர் Srecko Horvat (30.03.2020) அவருடன் மேற்கொண்ட உரையாடலில் இவற்றை சோம்ஸ்கி பகிர்ந்துகொண்டிருந்தார்.



டொனால்ட் ட்ரம்ப்-இனை ஒரு சமூகவிரோத பஃபூன் (sociopathic buffoon) என அந்த நேர்காணலில் சோம்ஸ்கி விளித்திருந்தார். இந்த முக்கியமான காலகட்டத்தில் ட்ரம்ப் தலைமையில் உலகம் இருப்பது துரதிர்ஷ்டவசமானது என்றும் சோம்ஸ்கி விமர்சித்திருந்தார்.

'கொரோனா வைரஸ் ஆபத்தானதுதான். வைரஸ் பரம்பலின் மருத்துவ நெருக்கடியும் அது ஏற்படுத்தும் விளைவுகளும் பாரதூரமானவை. ஆயினும் அவை தற்காலிகமானவை. ஆனபோதும், மனித குல வரலாற்றில் இதுவரை நிகழ்ந்த எந்தவொரு பேரழிவுகளிலும் பார்க்க மோசமான இரு பெரும் ஆபத்துகள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை உணர்ந்துகொள்ளுதல் அவசியமானது எனச் சுட்டிக்காட்டி யிருந்தார்.




நோர்வே போன்ற ஐரோப்பிய நாடொன்றில் இத்தகைய இனவெறிக் கருத்தினை ஓர் அரச தலைவர் கூறிவிட்டுச் சாதாரணமாகக் கடந்து சென்றிருக்க முடியாது. அரசியல், சட்டம், சமூக, ஊடகத் தளங்களில் அது பெரிய விவகாரமாக ஆகியிருக்கும். எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்திருக்கும். பதவி விலகல் கோரிக்கைகள் வரை சென்றிருக்கும். சமூக இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் கண்டனத்திற்கு அப்பாலான போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும். அமெரிக்கா இன்னும் இன-நிறவாத அரசாகவும் வெள்ளை ஆதிக்க மன நிலை மேலோங்கிய நிலையிலுமே இருக்கின்றது என்பதையே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் புரிந்துகொள்ள முடிகிறது.

### குடியேற்ற சமூகங்களைக் குற்றவாளிகளாகச் சித்தரித்தல்:

'அமெரிக்காவில் இனவெறி இனி மறைமொழியாக இல்லா மல், மனிதர்களை மனிதமற்றவர்களாக மாற்றுவதோடு, மனிதம் குறிவைக்கவும்படுகின்றது' என்று Black Voters Matter Fund எனும் அமைப்பின் இணை நிறுவனர் LaTosha Brown குறிப்பிட்டுள்ளார். இக்குழு புறக்கணிக்கப்பட்ட கறுப்பின சமூகங்கள் மத்தியில் வாக்களிப்பு விகிதத்தினை மேம் படுத்தும் பணியினை முன்னெடுக்கின்றது.

இனவெறி கருத்துகளுக்குரிய மேடையாக ஜனாதிபதிப் பதவியைப் பயன்படுத்துவது இந்த நவீன யுகத்தில் 'மிகவும் தனித்துவமானது' என்று அரசியல் அறிவியல் பேராசிரியரும் ஆய்வாளருமான Alvin Tillery கூறியுள்ளார். தனித்துவமென்று அவர் குறிப்பிட்டது எதிர்மறை அர்த்தத்திலானது. ட்ரம்பின் கருத்துகள் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான Richard Nixon, Ronald Reagan ஆகியோரின் மறைமுக இனவாத பேச்சுகளைவிடவும் தீவிரமானவையாக வெளிப்படுகின்றன. அந்த ஜனாதிபதிகள் பலமுறை இனவாதக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருக்கின்றனர். ஆனாலும் ட்ரம்பின் பேச்சுகள் அவர்களின் கூற்றுகளைவிடப் பல மடங்கு என்றும் பேராசிரியர் Tillery குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் ட்ரம்ப் போன்று இவ்வகை வெறுப்புமிகு இனவாதக் கருத்துகளை வெள்ளையினமல்லாத சமூகங்கள் அல்லது சிறுபான்மையினரைக் குறிவைக்கும் வகையில் பேசியதில்லை. இது மிகவும் ஆபத்தானது. பல வகைகளில், ட்ரம்ப் நிர்வாகத்தின் குடியேற்றக் கொள்கைகள், அவருடைய அரசியல் கருத்துகளைப் பிரதிபலிக்கின்றன. தென்னாபிரிக்காவின் வெள்ளை இனத்தவர்களைத் தவிர ஏனைய வெளிநாட்டவர்களின் குடியேற்றத்தினை (புகலிடக் கோரிக்கைகள்) முற்றிலும் தடுப்பதற்குரிய செயல்களை அவர் முடுக்கிவிட்டுள்ளார். தென்னாபிரிக்க வெள்ளை இனத்தவர்கள் 'வெள்ளை இன அழிப்பிற்கு' உட்பட்டுவருவதாகவும் தவறான சித்தரிப்புகளையும் அவர் மேற்கொண்டுள்ளதாகவும் Tillery கூறியுள்ளார்.

அமெரிக்க குடிவரவு அதிகாரிகள் நாடு முழுவதும் குடியேற்றச் சமூகங்கள் மீதான சோதனை நடவடிக்கைகளிற் கடுமையான முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இலத்தீன் அமெரிக்கர்கள் போன்று தோற்றமளிப்பவர்கள் அல்லது ஸ்பானிஷ் மொழி பேசுவோர் என்பதற்காகக்கூட கைது செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன.

குடியேற்ற சமூகங்களைக் குற்றவாளிகளாக்கி, எல்லா பிரச்சினைகளுக்கும் அவர்கள்தான் காரணம் என்று கூறுவது அடிப்படையில் ஒரு திசைதிருப்பலும் அரசாங்கத்தின் குறைபாடுகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் எளிதான வழி. அதனை ட்ரம்ப் கச்சிதமாகச் செய்கின்றார்.

### உசாத்துணை:


- Aljazeera | From Mogadishu to Minneapolis, Somalis reject Trump's bigoted remarks | Faisal Ali, Al Jazeera Staff | 04.12.2025
- CNN | After years of Trump's attacks on Somalis in Minnesota, ICE zeroes in on the Twin Cities | Emma Tucker | 03.12.2025
- The Gardian | Ilhan Omar says Trump made racist anti-Somali tirade because he 'knows he is failing' | Richard Luscombe | 05.12.2025
- The Gardian | Trump calls Somali immigrants 'garbage' as US reportedly targets Minnesota community | Rachel Leingang | 02.12.2025




rooban.s@thaiveedu.com




# மிரட்டல்களுக்கு உள்ளாகும் வெனிசுவெலா

**சிவா முருகுப்பிள்ளை**

ஒடுக்கப்படும், மேலாதிக்கத்திற்கு உள்ளாகும் எந்த மக்களும் தமது உரிமைக்காகப் போராடுவார்கள். சமூக நலன் என்பது அந்நாட்டின் அனைத்து மக்களுக்குத் தேவையான அடிப்படை விடயங்களைச் சமமாக கிடைக்கும் வகையில் அமைப்பதே சரியானதாக இருக்கும். நாட்டின் வளங்கள் ஒருசாரரின் கைகளில் மட்டும் தங்கியிராது அனைத்து மக்களின் சுபீட்சமான வாழ்விற்காக சமமாகப் பகிரப்படுதலே சரியானது. இதனை நோக்கிய ஓட்டத்தின் பாதையில் தான் வெனிசுவெலா ஏகாதிபத்திய சக்திகளுக்கும், உள்ளூரில் அவர்களுக்காகச் செயற்படும் சக்திகளுக்கும் எதிராகப் போராட வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில்தான் இந்தக் கட்டுரையைக் கட்டமைக்க முயலுகின்றேன்.

வெனிசுவெலா, தென் அமெரிக்காவின் வடக்கு பகுதியில், வடக்கு அத்திலாந்து சமுத்திரத்தின் கரீபியன் கடல் பகுதியில் அமைந்துள்ள நாடு. பூமத்திய ரேகையிற்கு வடக்காக அதற்கு அண்மையாக அமையும் ஒரு வெப்ப வலைய நாடு. மேலும் மேற்கில் கொலம்பியா (Colombia), தெற்கில் பிரேசில் (Brazil), வட-கிழக்கில் டிரினிடாட் (Trinidad) மற்றும் டொபாகோவா (Tobago), கிழக்கில் கயானா (Guyana) எனத் தரை வழி எல்லைகளைக் கொண்டுள்ளது.

வெனிசுவெலா மெஸ்டிசோ (Mestizo), ஐரோப்பிய வம்சாவழியினர் (European descendants) என இரு பெரிய இன குழுமங்களைக் கொண்டிருக்கின்றது. மெஸ்டிசோ இனக்குழுவினர் வெனிசுவெலாவின் பூர்வீக மக்கள். இவர்கள் ஐரோப்பிய வம்சாவளியைக் கலப்பாக கொண்டவர்கள். 50 சத விகிதத்திற்கு அதிகமானவர்களாக இவர்கள் உள்ளனர். மற்றையவர்கள் ஐரோப்பியர் எனப்படுவோர். இவர்கள் மக்கள் தொகையில் சுமார் 40-43 சத விகிதம் உள்ளனர். இவர்கள் ஸ்பானிஸ், இத்தாலியன், போர்த்துகீசியம் மற்றும் ஜேர்மன் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அதிகம் நகர் புறத்தில் வாழ்கின்றனர். மிகக் குறைந்தளவில் பிற இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்களும் வெனிசுவெலாவில் காணப்படுகின்றனர். ஆபிரிக்கக் குடிமக்கள் சுமார் 3 முதல் 4% காணப்படுகின்றனர். அடிமைப்படுத்தப்பட்டு ஆபிரிக்காவில் இருந்து வந்தவர்களே இவர்கள். யோருபா, இக்போ, கொங்கோ போன்ற பல்வேறு மேற்கு ஆபிரிக்க இனங்களின் வேர்களைக் கொண்டவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் தவிர, வெனிசுவெலாவில் மூத்த பூர்வீக மக்கள் (Amerindian) நாட்டின் மக்கள் தொகையில் தோராயமாக 2-3 சதவிகிதம் அளவிற்கு உள்ளனர். இவர்களின் மக்கள் தொகை, காலனித்துவ ஆட்சிக்காலத்தில் பரவிய கொடிய நோய்கள், அடிமைத்தனம் மற்றும் திட்டமிட்ட நில அபகரிப்பு போன்ற காரணங்களால் கணிசமாகக் குறைந்து போனது. வெனிசுவெலாவின் தனித்துவமான பகுதிகளில் பூர்வீக இனக் குழுக்களாக வாழ்பவர்களும் உண்டு. கொலம்பியா எல்லையோரப் பகுதிகளில் வையு (Wayuu) இனத்தவர்களும் கிரான் சபானா (Gran Sabana) பகுதிகளில் பெமோன் (Pemón) இனத்தைச் சேர்ந்தவர்களும் அமேசான் காடுகளில் யெகுவானா (Ye'kuana) இனமக்களும் சிறு சிறு இனக் குழுக்களாக வாழ்கின்றனர்.

வெனிசுவெலாவில் நாற்பது மொழிகள் பொதுவாகப் பேசப்படுகின்றன அல்லது பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பெரும்பாலான வெனிசுவெலா மக்களால் ஸ்பானிஸ் மொழியே பேசப்படுகிறது. 1999-ஆம் ஆண்டு வெனிசுவெலாவின் அரசியலமைப்பு ஸ்பானிஸ் மற்றும் வெனிசுவெலாவின் பழங்குடி மக்களால் பேசப்படும் மொழிகளை அதிகாரப்பூர்வ மொழிகளாக அங்கீகரித்தது.

tg.theeban@gmail.com

வெனிசுவெலாவில் கிறிஸ்தவம் ஆதிக்கம் செலுத்தும் மத மாகும். இதில் முதன்மையாக ரோமன் கத்தோலிக்க மதம் இருக்கின்றது. 2008-ஆம் ஆண்டில், வயது வந்தோரில் 95.2 சத விகிதம் பேர் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தனர். 2005-ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளி சேர்க்கை விகிதம் 91 சத விகிதம் ஆகவும், இடைநிலைப் பள்ளி சேர்க்கை விகிதம் 63 சத விகிதம் ஆகவும் இருந்தது.

வெனிசுவெலாவில் பல பல்கலைக்கழகங்கள் உள்ளன, அவற்றில் மிகவும் மதிப்புமிக்கவை 1721-இல் நிறுவப்பட்ட வெனிசுவெலாவின் மத்திய பல்கலைக்கழகம். ஜுலியா பல்கலைக்கழகம், ஆண்டிஸ் பல்கலைக்கழகம், சைமன் பொலிவர் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகம் ஆகும். இங்கு தற்போதும் பேஸ்பால் (Baseball) புகழ் பெற்ற விளையாட்டாக இருந்தாலும் அதன் அண்டைய நாடுகளிடையே இது அரிதாகி வருகின்றது. ஆனால் காற் பந்து மத்திய, தென் அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தும் விளையாட்டாகவும் இருக்கின்றது. இதனால் வெனிசுவெலா வும் காற்பந்தாட்டத்திற்குள் தன்னை அதிகம் இணைத்து வருகின்றது.

வெனிசுவெலா வழியாகப் பாயும் முக்கிய நதி ஒரினோகோ நதி (Orinoco River) ஆகும், இது தென் அமெரிக்காவின் 2140 கிலோ மீற்றர் நீளமான மற்றும் மிக முக்கியமான ஆறுகளில் ஒன்றாகும். இது நாட்டின் இயற்கை மற்றும் கலாச்சாரப் பொக்கிசமாக கருதப்படுகிறது. வெனிசுவெ லாவின் பெரும்பகுதியையும் அருகாக உள்ள கொலம்பியா மற்றும் பிரேசிலின் சில பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு பரந்த ஆற்றுப்படு கையை இது உருவாக்குகிறது,




வடகிழக்கு வெனிசுவெலாவில் உள்ள ஒரு பெரிய டெல்டா வழி யாக அத்திலாந்து சமுத்திரத்தில் பெருங்கடலில் கலக்கிறது. இது போக்குவரத்து பாதையாகவும் காணப்படுகின்றது. வளமான விவசா யம் மற்றும் பல்லுயிர் பெருக்கத்துக்கு உதவும் வகையில் ரியோ நீக்ரோ (Rio Negro), அபுரே நதி (Apure River), கரோனி நதி (Caroni River), காட்லாடம்போ நதி (Catatumbo River), மெட்டா நதி (Meta River), குயூனி நதி (Cuyuni River) என்ற நதிகளும் காணப்படுகின்றன.

தென் அமெரிக்காவில் பிரேசிலுக்குப் அடுத்து இரண்டாவது பெரிய நீர்மின்சாரத் திறனை வெனிசுவெலாவே கொண்டுள்ளது. நாட் டின் மின்சார விநியோகத்தில் பெரும்பகு தியை நீர் மின்சாரம் வழங்குகிறது, சமீபத்திய ஆண்டுகளில் இது 60 சத விகிதம் முதல் 80 சத விகிதம் வரை இருக்கின்றது. நாட்டின் நீர் மின்சாரம் முதன்மையாக குவாயானா பகுதியில் உள்ள கரோனி நதியில் உள்ள அணை கட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கடல்கடந்த தீவுகளை உள்ளடக்கிய கூட்டாட்சி அரசு அமைப்பைக் கொண்டுள்ள வெனிசுவெலா 23 மாநிலங் களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இலத்தீன் அமெரிக்கா வில் மிகவும் நகரமயமாக்கப்பட்ட நாடுகளில் வெனிசுவெ லாவும் ஒன்றாகும். வெனிசுவெலா மக்களில் பெரும்பாலோர் நாட்டின் வடக்கு மற்றும் தலைநகர் கராகஸில் (Caracas) வசிக்கின்றனர். கராகஸ், வடக்கு மலைப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள ஒரு வணிக மற்றும் கலாசார மையமாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நகரின் பழைய நகரத்தில் நிறுவப்பட்ட வெனிசுவெலாவின் தேசிய போர் வீரர்களின் நினைவிடத்தில் சுதந்திரத் தலைவர் சைமன் பொலிவர் (Simón Bolívar) அடக்கம் செய்யப்பட்டுள்ளார். 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோமானிய கட்டடக்கலையின் அடையாளமான கராகஸ் பெரிய தேவாலயம் (Caracas Cathedral) வெனிசுவெலாவில் உள்ளது.

உலகம் முழுவதும் காலனியாதிக்கத்திற்கு உட்பட்டுக் கொண்டிருந்த வேளையில் மத்திய, தென் அமெரிக்க நாடு களின் பெரும் பகுதி முழுவதும் ஸ்பானிஸ் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. 1522-ஆம் ஆண்டில், பழங்குடி மக்களின் எதிர்ப் பின் மத்தியில், வெனிசுவெலா பிரதேசம் காலனி ஆதிக் கத்திற்குட்பட்டது. ஆனால், மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தினால் 1811-ஆம் ஆண்டு வெனிசுவெலா சுதந் திரத்தை அடைந்தது. ஸ்பானியர் நாட்டை விட்டு வெளி யேறும்போது ஸ்பானிய மொழியையும் கத்தோலிக்க மதத் தையுமே விட்டுச் சென்றனர். இதற்கு பதிலாக அம்மக்களின் பூர்வீக தாய் மொழிகளையும் வழிபாட்டு முறைகளையும் அருகச் செய்துவிட்டுச் சென்றனர்.

'கிரான் கொலம்பியா என்பது 1819-1831 காலப் பகுதியில் சிமோன் போலிவார் தலைமை யில் உருவான அரசியல் ஒன்றியம் ஆகும்; இதில் இன்றைய கொலம் பியா, வெனிசுவெலா, எக்வடோர், பனாமா ஆகிய பகுதிகள் இணைந் திருந்தன. ஆனால் தொடர்ந்து வந்த காலங்களில் 1830-இல் முழு இறையாண்மை கொண்ட நாடாக வெனிசுவெலா கொலம்பியாவில் இருந்து பிரிந்தது. 19-ஆம் நூற்றாண்டில், வெனிசுவெலா அரசியல் கொந்தளிப்பு மற் றும் எதேச்சதிகாரத்தை அனுபவித்தது. 20-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பிராந்திய இராணுவ சர்வாதிகாரிகளின் ஆதிக்கத்திற்கு உட் படுத்தப்பட்டது. 1958 முதல், நாட்டில் தொடர்ச்சியான ஜனநாயக அரசாங்கங்கள் இருந்தன, ஆனாலும், பெரும்பாலான பிராந்தியங்கள் இராணுவ சர்வாதிகாரங் களால் ஆளப்பட்டன. 1980-கள் மற்றும் 1990-களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்குவாரங்கள் பெரிய அரசியல் நெருக் கடிகளுக்கும் பரவலான சமூக அமைதியின்மைக்கும் வழி வகுத்தன. அவற்றில் 1989-ஆம் ஆண்டு நடந்த மோசமான கராகசோ (Caracazo) கலவரங்கள், 1992-இல் நிகழ்ந்த இரண்டு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகள் மற்றும் 1993-இல் பொது நிதியை மோசடி செய்ததற்காக நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதியின் பதவி நீக்கம் ஆகியவை முக்கியமானவை யாகும்.

இதனைத் தொடர்ந்து 1998-இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது மக்கள் அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை யீனத்தை வெளிப்படுத்தினர். இது பொலிவேரியன் புரட்சிக்கான (Bolivarian Revolution) ஊக்கியாக அமைந்தது, வெனிசுவெலாவில் ஒரு சமூகப் புரட்சி ஏற்படுத்திய பொலிவேரியன் புரட்சி, புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த புரட்சியில் ஐந்தாவது குடியரசு இயக்கத்தின் நிறுவுநர் மற்றும் வெனிசுவெலாவின் ஐக்கிய சோசலிசக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய வெனிசுவெலா ஜனாதிபதி ஹ்யூகோ சாவேஸ் (Hugo Rafael Chávez Frías) மற்றும் அவரது வாரிசான தற்போதை ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ (Nicolás Maduro) ஆகியோரால் நடத்தப்பட்டது. வெனிசுவெலாவில் பொலிவேரியன் புரட்சி என்பது 1999-ஆம் ஆண்டு ஹ்யூகோ சாவேஸால் தொடங்கப்பட்ட ஒரு அரசியல் இயக்கம் மற்றும் தொடர்ச்சியான போராட்ட அமைப்பாகும். இதற்கு நாட்டின் சுதந்திர விடுதலைப் போராட்டத் தலைவர் சைமன் பொலிவரின் பெயர் சூட்டப்பட்டது. இது சமூக நலன், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் மக்கள் ஜனநாயகம் கொண்ட ஒரு சோசலிச அரசை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. புரட்சியின் வெற்றிக்குப் பின்னால் வெனிசுவெலாவிற்கு 1999-இல் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கினார். ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவரும் வெனிசுவெலா ஜனாதிபதியுமாகிய ஹ்யூகோ சாவேஸ் இது வரை காலமும் தனியார் வசம் அதிகம் இருந்த எண்ணை வளங்கள் அனைத்தையும் அரசுடமையாக்கினார். இதனால், கிடைத்த செல்வத்தை மக்களுக்கான சமூக நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தினார். இச்செயற்பாடுகள் நிலச் சீர்திருத்தம் மற்றும் தனியுடமையைத் தகர்த்தது. இதனால் அரச சொத்துகள் அதிகரித்தன. இது உள்ளூர் முதலாளிகள் வெளிநாட்டு முதலாளிகள் என்போரிடம் இருந்து குறிப்பிடத்தக்க எதிர்ப்பையும் சம்பாதித்து. இந்த வெளியூர் முதலாளிகள் அனேகர் அமெரிக்க முதலாளிகள் ஆவர். இந்த சமூக நலத் திட்டங்களும், அரசுடமையாக்கப்பட்ட நிலமையும் தான் அமெரிக்கா வெனிசுவெலாவிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு முக்கிய காரணங்களாயிற்று.

இதனால் வெனிசுவெலாவிற்கு எதிரான அமெரிக்காவின் எதிர்ப்பு வலுப்பெற்றது. பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் நெருக்கடிகளை அமெரிக்கா, வெனிசுவெலா நாட்டிற்கு ஏற்படுத்தியது. இந்த எதிர்ப்பில் அமெரிக்க நட்பு நாடுகள், நேட்டோ நாடுகள் என்பனவும் இணைந்து கொண்டன. கூடவே வெனிசுவெலாவில் செயற்படும் அமெரிக்க சார்பு எதிர் கட்சிகளைக் கொண்டு காலத்துக் காலம் நிழல் அரசு ஒன்றை அமெரிக்கா நிறுவியது. அமெரிக்க நாடுகள் இதனை அங்கிகரித்ததோடு நில்லாது அதற்கு நிதி உதவிகளை வழங்கி உள்நாட்டில் குழப்பங்களையும் ஏற்படுத்தி வந்தன. ஆனால், உலகில் உள்ள ஜனநாயக சோசலிச நாடுகள் வென்சுலாவிற்கு ஆதரவான தமது நிலைப்பாட்டில் இன்றும் உள்ளன. இதில் பல மத்திய, தென் அமெரிக்க நாடுகளுடன் கியூபாவும் முக்கிய பாத்திரத்தை வகித்து, துணையாக நின்றும் செயற்பட்டு வருகின்றது.



“ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவரும் வெனிசுவெலா ஜனாதிபதியுமாகிய ஹ்யூகோ சாவேஸ் இது வரை காலமும் தனியார் வசம் அதிகம் இருந்த எண்ணை வளங்கள் அனைத்தையும் அரசுடமையாக்கினார். இதனால், கிடைத்த செல்வத்தை மக்களுக்கான சமூக நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தினார். இச்செயற்பாடுகள் நிலச் சீர்திருத்தம் மற்றும் தனியுடமையைத் தகர்த்தது.”

வெனிசுவெலாவின் எண்ணையை வாங்கும் நாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் நாடுகளாக சீனா, இந்தியா போன்ற நாடுகள் இருந்து வருகின்றன. இவர்களின் கடற் போக்குவரத்து வெனிசுவெலாவிற்கு அண்மையாக இருக்கும் கரீபியன் கடல் சார்ந்தது. இந்த கடல் பிராந்தியம் அமெரிக்காவிற்கும் அண்மையாக அமைந்திருக்கும் கடல் பகுதி ஆகும். கூடவே பசுபிக் சமுத்திரம் அத்திலாந்து சமுத்திரத்தை இணைக்கும் பனாமா கால்வாயும் இப்பகுதியில் தான் அமைந்துள்ளது. சர்வதேச கடற்பகுதியாக இப்பகுதி அமைந்தாலும் அமெரிக்கா இந்த பகுதியில் தனது கண்காணிப்பில், கட்டுப்பாட்டில், மேலாதிகத்தில் வைத்திருக்கவே விரும்புகின்றது.

வெனிசுவெலா தனது நாட்டிற்கு ‘போதைப் பொருளைக் கடத்துகின்றது’ என்று கூறி, அமெரிக்கா வெனிசுவெலா மீது அதிக அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றது. பொய்க் குற்றச்சாட்டின் அடிப்படையில் அமெரிக்கா வெனிசுவெலாவின் கடல் வழிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றது. சீனாவும் ரஷ்யாவும் வெனிசுவெலாவிற்கு பொருளாதார ரீதியில் மட்டும் அல்ல இராணுவ ரீதியிலும் உதவி வருகின்றன. சோவியத்தின் அணு ஆயுதங்கள் கியூபாவில் பிரசன்னமாக இருப்பதாகக் கூறி கியூபாவிற்கு எதிராக அமெரிக்கா தாக்குதலை நடத்துவோம் என்று அச்சுறுத்தலை ஏற்படுத்தியதைப் போல், தற்போது வெனிசுவெலாவில் உள்ள சீன, ரஷ்யாவின் ஆயுதத் தளபாடங்களையும் அமெரிக்கா குறிவைக்க முயலுகின்றது. போதை வஸ்து அழிப்பு என்ற வகையில் அமெரிக்கா வெனிசுவெலா மீது கடல், தரை என்னும் அடிப்படையில் தாக்குதலை நடத்த விரும்புகின்றது. இதனால், வெனிசுவெலாவின் எண்ணை வர்த்தகத்தை தடுத்து, தொடர்ந்து உலக அரங்கில் எண்ணை வர்த்தகத்தில் அமெரிக்கா ஏகபோகமாக இருக்க முற்படுத்தல் என்பதை உறுதி செய்யவும் முயலுகின்றது.

அதற்கு இக்கடல் பிராந்தியத்தில் சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளின் நடமாட்டங்களை கண்காணிப்பதாகக் கூறிக் கொண்டு தனது காய்களை நகர்த்துவதற்கு அமெரிக்க முயலுகின்றது. கூடவே, வெனிசுவெலா மீது தரை வழித் தாக்குதலைச் செய்யப் போவதாகவும் அமெரிக்கா மிரட்டுகின்றது. அப்பிராந்தியத்தில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள கொதி நிலைக்கு முக்கிய காரணம் இதுவே ஆகும். இது அமெரிக்காவின் 'உலக பொலிஸ்காரராக' செயற்பட முற்படும் மேலாதிக்கத்தின் வெளிப்பாடுதான்.

அமெரிக்காவின் ஆதரவுடன், துணையுடன் உள்நாட்டில் ஏற்படும் நிழல் அரசுகளை எதிர் கொண்டு வெனிசுவெலா வெற்றி பெற்றும் வருகின்றது. இது போன்ற செயற்பாடுகள் இன்று வரை தற்போதைய மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவிற்கும், அதன் அரசிற்கும், வெனிசுவெலா மக்களுக்கும் எதிராகத் தொடர்கிறது. வெனிசுவெலா அரசு மக்களுக்கு வழங்கி வரும் சமூக நலச் செயற்பாடுகள் அமெரிக்கா போன்ற நாடுகளின் முதலாளித்துவக் கொள்கையிற்கு எதிரானது என்பதை இதற்கு காரணம் எனலாம்.

மக்கள் தமக்கான சமூக நல செயற்பாடுகளான கல்வி, மருத்துவம், வதிவிடம் என்பவற்றை வழங்க வேண்டும் என்றான குரல்களை அமெரிக்காவில் எழுப்பும் அளவிற்கு வெனிசுவெலாவின் செயற்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது முதலாளித்துவம் ஏகபோகமாக மாறிய சுரண்டல்களுக்கு ஆப்பு வைத்துவிடும் என்பதினாலே, சமூக நலன்களை முன்நிறுத்தும் அரசுகளுக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இப்படியான அரசுகளைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா பாவிக்கும் துப்பாக்கி இல்லாத யுத்தத்தின் முதல் வடிவம்தான் பொருளாதாரத் தடையாகும். ஒரு நாட்டில் சமான்ய மக்களின் வாழ்விற்கு தேவையான, ஆனால் தமது நாட்டில் கிடைக்காத பொருட்களை இறக்குமதி செய்தலைத் தடை செய்யும் நடவடிக்கையே பொருளாதாரத் தடையாகும். கூடவே தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல் என்பனவற்றிற்கும் தடை போட்டு பட்டினிச் சாவிற்கு அந்த நாட்டு மக்களை உட்படுத்தலாக இது அமையும். இதன் தொடர்ச்சியாக அந்நாடுகளில் பொருளாதார நலிவு ஏற்படும். இந்நிலையில் பட்டினி ஏற்படும் போது தெளிவற்ற நிலையில் உள்ள உள்ளூர் மக்களில் ஒரு பகுதியினர் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளை மேற்கொள்வர். இப்புரட்சிக்கான ஊக்குவிப்புகளை வெளியில் இருந்து கொண்டு மேலாதிக்க நாடுகள் செயற்படுத்துகின்றன.

> **“ஒரு நாட்டில் சமான்ய மக்களின் வாழ்விற்கு தேவையான, ஆனால் தமது நாட்டில் கிடைக்காத பொருட்களை இறக்குமதி செய்தலைத் தடை செய்யும் நடவடிக்கையே பொருளாதாரத் தடையாகும். கூடவே தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல் என்பனவற்றிற்கும் தடை போட்டு பட்டினிச் சாவிற்கு அந்த நாட்டு மக்களை உட்படுத்தலாக இது அமையும்.”**

இதன் தொடர்ச்சியாக அரசுகள் கவிழும் போது, தமக்கான பொம்மை அரசுகளை அங்கு நிறுவி, தமது சுரண்டல்களை மேற்கொள்ளும் கைங்கரியங்களை அரகேற்ற இந்த மேலாதிக்க சக்திகள் முயலும். அமெரிக்காவின் கடந்த கால செயற்பாடுகளுக்கு உதாரணங்களாக லிபியா, ஈராக், சிரியா எனப் பல நாடுகளைக் கூறமுடியும். கூடவே அமெரிக்காவின் விளை நிலங்களில் குறைந்த கூலியில் வேலை செய்வதற்கான வேலையாட்கள் இந்த நாடுகளில் இருந்து திரட்டப்படுவர். தமது நாட்டிற்குள் அனுமதிக்கும் 'அகதி' என்ற செயற்கை முறையின் ஒரு வடிவமாகவும் இது பரிணாமம் அடைந்து வருகின்றது. இந்த வேலை ஆட்கள் இல்லையேல் அமெரிக்காவின் விளை நிலங்களில் விளைச்சல் இல்லை என்பது இங்கு முக்கியமான விடயமாகும். இவ்வாறு வேலைக்கு செல்பவர்கள் தமது நாட்டு குடியுரிமையையும் இழந்து அமெரிக்க குடியுரிமையும் கிடைக்காது அவதியுறுவர். இவ்வாறு, பல தலைமுறைகள் கடந்து போகும் அவலமும் இன்று வரை தொடர்கின்றது.

இதனை எமது மலையக மக்களின் வாழ்வுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். எமது மலையக மக்கள் இந்த அமெரிக்க குடியுரிமையற்ற வேலையாட்களைவிட மேன்மையான நிலையை தற்போது அடைந்து வருகின்றனர் என்பது, எம் தேசத்தின் பண்பாடாகப் பார்க்கலாம். அமெரிக்காவின் இந்த மேலாண்மையை முறியடித்து எழுந்து நிற்கும் நாடாக கியூபா காணப்படுகின்றது. உலகில் பல நாடுகள் போராட்ட வாழ்வை கொண்டிருக்கின்றன. இவை பெரும்பாலும் மத்திய, தென் அமெரிக்க நாடுகளாக இருக்கின்றன.

அமெரிக்காவின் இந்த மிரட்டலுக்கு எந்த வகையிலும் மசியாது, புற்று நோயால் மரணமான சாவோஸ் வழியில் தற்போதைய ஜனாதிபதி மதுரா ஆட்சி நடத்தி வருகின்றார். ஆனாலும், ஏதோ ஒரு வழியில் பொருளாதாரத் தடை, உள்ளூரில் முதலாளித்து சிந்தனையுள்ளவர்களை கலகக் காரர்களாக மாற்றுகிறது. அமெரிக்கா இராணுவத்திற்குள்



ஊடுருவி தமது கைங்கரியங்களைக் கையாண்டு தொடர்ந் தும் குழப்பங்களை விளைவித்து வருகின்றது. இது போன்ற செயற்பாடுகள் சாவோஸ் என்ற வெனிசு வெலாவின் மிக பிரபல்யமான அதிபரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்து வேகம் எடுத்து வருகின்றது. வெனிசுவெலா எப்போதும் கியூபாவுடன் மிகவும் நெருக்க மான உறவுகளை கொண்டிருந் தது. கொண்டிருக்கின்றது.

பொருளாதார விடயங்களில் பண்டமாற்று அடிப்படையில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுகின்றன. இதனை உடைக்கும் விதமாக ஒரு கல்லில் இரு மாங்காய் என்ற வகையில் கியூபாவிற்கும், வெனிசுவெலாவிற்கும் பொருளா தாரத் தடையை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. இந்நாடுகளில் அமெரிக்கா ஜனநாயகத்தை நிறுத்துவதாகக் கூறிக் கொண்டு இரு நாடுகளிலும் கலகம் விளைவித்ததன் வெளிப் பாடுகள் நாம் அறிந்ததே. அமெரிக்காவின் இச்செயற் பாட்டினை உடைத்து கியூபா நிமிர்ந்து நின்றாலும் இதில் தற்போது சிறிது தளம்பலை அடைந்திருக்கும் நாடு வெனிசுவெலாதான்.

2008-இல் உலக சந்தையில் எண்ணெய் விலைகள் உயர்ந்த போது இதில் கிடைத்த பணத்தில் அரசாங்கத்தின் சமூக நலக் கொள்கைகள் நிறைவேற்றுதல், சமூகத்திற்கான நாட் டினைக் கட்டியெழுப்புதல் எனச் செலவினங்களைச் செய் தது. வெனிசுவெலாவின் புரட்சி அரசு ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் பொருளா தார சமத்துவமின்மை மற்றும் வறுமையைக் குறைத்தல் என்பனவற்றிற்கு இந்நிதிகளை அதிகம் பயன்படுத்தியது.

எண்ணை எற்றுமதிக்கு ஏற்படுத்தப்பட்ட தடை, எண்ணையின் செயற்கையான விலை வீழ்ச்சி என்பன, வெனிசு வெலாவில் தாக்கத்தை ஏற்படுத்தின. 2010-இல் ஏற்பட்ட வருமான குறைவு, வறுமையை வேகமாக அதிகரிக்கச் செய்தது. 2013 வெனிசுவெலா ஜனாதிபதித் தேர்தல் பரவலாக சர்ச்சைக்குரியதாக உலக அரங் கில் பிரசாரப்படுத்தப் பட்டது. இதற்கு ஆதரவாக உள்ளூர் கிளர்ச்சிகளுக்குரிய நிதி உதவிகளை அமெரிக்கா வழங்கி ஊக்கமும் அளித்தது. இந்தப் போராட்டம் இன்று வரை தொடர்கிறது. இதனால் வெனிசுவெலா இன்று நாடு தழுவிய நெருக்கடியை எதிர் கொள்கின்றது. இவை எல்லாவற்றிற்கும் பின்னால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வலுவான கரங்கள் இருந்து வருகின்றது

தன்னிடம் உள்ள முக்கிய பொருட்களான எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பு களால் வெனிசுவெலா ஆதிக்கம் செலுத்து கின்றது. இது அதன் ஏற்றுமதியில் பெரும்பகுதியைக் கொண்டுள்ளது. இதன் பொருளாதாரம் கோப்பி, சோளம், அரிசி, பழங்கள் போன்ற குறிப்பிடத்தக்க விவசாயப் பொருட்களையும், எஃகு, அலுமினியம், சிமென்ட் போன்ற உற்பத்திப் பொருட்களையும் உள்ளடக்கியது. முக்கிய விவசாய ஏற்றுமதிப் பொருட்களில் கோப்பி, மீன் மற்றும் பழங்களும் அடங்குகின்றன. அதே நேரத்தில், உள்நாட்டு பயிர்கள் கரும்பு, வாழைப்பழங்கள் மற்றும் கால்நடைப் பொருட்கள் (மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, பால்) ஆகிய ற்றுடன் சோளம் மற்றும் அரிசி போன்ற பிரதான உணவுகளில் கவனம் செலுத்தி வந்தது. அதனால் பொருளாதாரத்தால் மிகவும் செழிப்படைந்த நாடாக வெனிசு வெலா இருந்தது. வெனிசுவெலா உலகின் அதி கூடிய எண்ணை வளத்தைக் கொண்டிருக்கும் நாடு. இதற்கு அடுத்தாற்போல்த்தான் வளைகுடா நாடுகளின் சவூதி அரேபியா உள்ளது. இன்றுவரை மற்றைய எந்த இயற்கை வளங்களையும் விட எண்ணை வளம்தான் அதிக கவனிப்பை பெறும் பெறுமதி மிக்க வளமாக உலகில் பார்க்கப்படுகின்றது. ஆனால், வெனிசுவெலா நாட்டின் பணவீக்கம் 250 சதவிகிதம் என்றாக இருக்கும் இன்றைய நிலைக்கு காரணம் என்ன? தனது வளங்களைச் சரியாக பராமரிக்க கையாளத் தெரியாதா? என்ற கேள்விகள் இங்கு எழுந்து நின்றாலும், இதற்கு அப்பால் உள்ள உலக அரசியலே காரணமாக இருக்கின்றது.

ஒரு நாடு செல்வந்த நாடாக எந்த அளவில் உள்ளது என்பது, அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) அடிப்படையாக கொண்டே தீர்மானிக் கப்படுகின்றது.





அதுவும் அந்த GDP அமெரிக்க நாணயத்தின் அடிப்படையில்த்தான் கணிக்கப்படுகின்றது. உலகம் இன்று அமெரிக்க நாணயத்தைத்தான் நியம நாணயமாகக் கைக்கொள்கின்றது. உண்மையில் இதுவும் உலகத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள மேலாண்மைதான். இந்த இருவகையும் சரியானதா என்பது குறித்து கேள்விகளும் உள்ளன.

காரணம் முதலாவது ஒவ்வொரு நாடும் தனக்கான சொந்த நாணயத்தை வைத்திருக்கும் நிலையில் இந்த GDP-யும் அந்த நாணயத்தின் அடிப்படையில் கணிக்கப்படுவதே சரியான பார்வை. காரணம், அந்த நாட்டின் செலவினங்கள் - சிறப்பாக மக்களின் வாழ்க்கைச் செலவு அவர்களின் நாணயத்தின் அடிப்படையில்த்தான் பார்க்கப்படுகின்றது. வரவு செலவு என்பனவற்றை அடிப்படையாக வைத்துத்தான் ஒரு நாட்டின் செல்வத்தை நாம் கணக்கிடுவதே சரியானது ஆகும்.

இதற்கும் அப்பால் இன்னொரு விடயமும் இங்கு முக்கியம் ஆகின்றது. ஒரு நாட்டின் GDP-யை வைத்து மட்டும் அந்த நாட்டின் செல்வத்தை அளவிடுதல் என்ற முறையே பிழையான பார்வை. இந்த GDP எந்த அளவிற்கு அந்த நாட்டு மக்களின் கைகளில் சமமாக பகிர்ந்து இருக்கின்றது அல்லது பகிரப்படுகின்றது என்பதை வைத்துத்தான் அந்த நாடு வளமான நாடு, செல்வந்த நாடு என்று பார்ப்பதே சரியான அணுகு முறையாகும். ஆனால், மிகச் குறைந்த சதவிகித மக்களிடம் இந்த GDP இருக்கும் பட்சத்தில், அந்த நாட்டை வளமான நாடாக, வெறும் GDPஅளவை வைத்துப் கணிப்பது சரியான அணுகுமுறை அல்ல. இந்த பார்வைகளின் அடிப்படையில்த்தான் வெனிசுவெலாவின் பணவீக்கத்தை நாம் பார்த்தாக வேண்டும்.

> **“வெனிசுவெலா உலகின் அதி கூடிய எண்ணை வளத்தைக் கொண்டிருக்கும் நாடு. இதற்கு அடுத்தாற்போல்த்தான் வளைகுடா நாடுகளின் சவூதி அரேபியா உள்ளது. இன்றுவரை மற்றைய எந்த இயற்கை வளங்களையும்விட எண்ணை வளம்தான் அதிக கவனிப்பை பெறும் பெறுமதி மிக்க வளமாக உலகில் பார்க்கப்படுகின்றது.”**

வெனிசுவெலாவின் எண்ணை வளத்தை முழுவதுமாக அபகரிக்கும் செயற்பாட்டின் தொடர்ச்சிதான் பொருளாதாரத் தடை. இன்று வெனிசுவெலாவிற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு பிரதான காரணம் வெனிசுவெலாவில் செயற்படும் எதிர்கட்சிகளின் தலைவர் மரியா கொரினா மச்சாடோ (Marĺa Corina Machado) ஆவார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தொழில்துறை பொறியாளருமான இவருக்கு, ‘ஜன நாயகத்தை’ மேம்படுத்துவதற்காக அவர் செய்த பணிக்காக, 2025-ஆம் ஆண்டு ‘அமைதிக்கான நோபல் பரிசு’ வழங்கப்பட்டது. 2025-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு தனக்குத் தான் வழங்கப்பட வேண்டும் என்று வெளிப்படையாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் பொதுவெளியில் தாமாக வேண்டி நின்ற நிலையில்த்தான்... மரியா கொரினா மச்சாடோவிற்கு வழங்கப்பட்டது. நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டதும் அவர் வழங்கிய செவ்விகளில் இவ்வாறு அவர் குறிப்பிடுகின்றார்.

‘...வெனிசுவெலா மீதான ஜனாதிபதி ட்ரம்பின் உத்தியை முழு மையாக ஆதரிப்பதாகவும், ட்ரம்ப் அமைதிக்கான நோபல் பரிசுக்கு தகுதியானவர்...’ என்றும் கூறினார். கூடவே, ஒக்ரோ பர் 2025-இல் விருது அறிவிக்கப்பட்ட பின்னர் தனது ஆரம்ப அறிக்கையில், மச்சாடோ இந்தப் பரிசை ‘எங்கள் நோக்கத் திற்கான தீர்க்கமான ஆதரவிற்காக’ ஜனாதிபதி ட்ரம்பிற்கு அர்ப்பணித்தார். மேலும் அவர் கூறுகையில் ‘... வெனிசு வெலா மீது அதிகரித்த அழுத்தம், பிரச்சாரம், மற்றும் எண் ணெய் தாங்கிகளைக் கைப்பற்றுதல் போன்ற அமெரிக்க நிர்வாகத்தின் தீர்க்கமான நடவடிக்கைகள், வெனிசுவெலா அதிபர் மதுரோ ஆட்சியை ‘எப்போதும் இல்லாத அளவுக்குப் பலவீனப்படுத்தியுள்ளது’ என்று தெரிவித்தார். இவற்றை அவர் டிசம்பர் 2025 நடுப்பகுதியில், வெனிசுவெலாவிலிருந்து ‘துணிச்சலான..?’ தப்பித்தலுக்குப் பிறகு, நோர்வேயின் ஒஸ்லோவில் இருந்து தெரிவித்தார். இந்த நோபல் பரிசு, வெனிசுவெலா எதிர்கட்சித் தலைவரின் செவ்விகள், வெனிசுவெலாவின் இன்றைய நிலமைகளுக்கு பின்னால் இருப்பன வற்றை மிகத் தெளிவாக எடுத்தியம்பியும் உறுதிப்படுத்தியும் நிற்கின்றன.



James@thaiveedu.com



# இந்திய தேசத்தில் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம்

நெல்லை ஜெயசிங்

இந்திய மக்களாட்சித் தத்துவத்தில் ஆணிவேராக இருந்து வருபவர்கள் வாக்காளர்கள். வாக்காளர்கள் அளிக்கும் வாக்களிப்பு வாயிலாக ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த வாக்காளர்களின் நிலையோ இன்று இந்தியாவில் கேள்விக்குறியாகக் காணப்படுகிறது. வாக்காளர்களின் தகவல்களைச் சரிபார்க்கும் வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது, இந்தியாவில் காலத்திற்குக் காலம் நடைபெறுகின்ற வழக்கமான நடைமுறைதான். ஆனால் வாக்காளர் பட்டியலில் உள்ள ஒவ்வொருவரது தகவல்களையும் தீவிரமாகச் சரிபார்ப்பது இதுவே முதல் முறை எனக் கூறப்படுகிறது.

வாக்காளர் பட்டியலில் தீவிர திருத்தம் (Special Intensive Revision) எனும் இந்நடைமுறை தற்போது தமிழ் நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் இவ்வாறான திருத்தப் பணி இதற்கு முன் 8 முறை 1951 முதல் 2002 வரை நடைபெற்றுள்ளது தமிழ் நாட்டில் இதற்கு முன் 2002-2005-ஆம் ஆண்டுகளில் நடந்த நிலையில், தற்போது 2025-இல் தேர்தல் ஆணையம், இப்பணியை தமிழ் நாட்டில் தீவிரப்படுத்த முனைப்பு காட்டிவருகிறது.

இதற்கு முன், தேர்தலுக்கு முன்னதாக வீடு வீடாக வரும் தேர்தல் அலுவலர்கள், அப்போது இருப்பவர்களை, இறந்தவர்களை, இடம் மாறியவர்களை, புதிய வாக்காளர்களை, விசாரித்து கணக்கீட்டை மேற்கொள்வர். அவசியமான தகவல்களை, படிவங்களை பூர்த்தி செய்வதன் வாயிலாக பெறுகின்ற நடைமுறை எப்போதும் இருந்தது இல்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக தற்போது இந்திய தேர்தல் ஆணையம், தன்னிச்சையாக அதீத அவசரத்துடன், சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாத வினாத்தாளுடன், வாக்காளர் சேர்ப்பை நடத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதனால் இதுவரை வாக்களித்து வந்த வாக்காளர்கள் உட்பட அனைத்துத் தமிழக வாக்காளர்களும் நீக்கப்பட்ட நிலையல், புதிதாக அனைவரும் வாக்காளர்களாக விண்ணப்பிப்பதன் மூலம் மட்டுமே வாக்குரிமையைப் பெற முடியும் என தேர்தல் ஆணையம் கூறுகிறது. இதனால் பல வருடங்களாகத் தொடர்ந்து வாக்களித்து வந்தவர்களும்கூட வாக்குரிமையை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இச்செயல் ஆட்சியாளர்களே மக்களாட்சித் தத்துவத்தின் மீது நடத்தும் மறைமுகத் தாக்குதலாகும்.

இந்திய தேசத்தில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் குடியுரிமையும் வாக்குரிமையும் மிக மிக முக்கியம். இவ்விரண்டு உரிமைகள் மீதான ஆக்கிரமிப்பாக இன்றைய வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி இருப்பதாக எதிர்க் கட்சிகள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

தீவிர வாக்காளர் திருத்தம் பின்வரும் நோக்கங்களைக் கொண்டது என தேர்தல் ஆணையம் கூறிவருகிறது.

- இறந்து போனவர்களைக் கண்டறிந்து நீக்குதல்.
- ஒன்றுக்கு மேற்பட்ட முகவரிகளில் உள்ளவர்களின் பெயர்களை நீக்குதல்.
- வெளிநாட்டு வாக்காளர்களை அடையாளம் கண்டு நீக்குதல்.

இவ்வாறு இதன் நோக்கம் சரியானதாக இருந்த போதும் அதனை நடைமுறைப்படுத்துவதில், தகவல் சேகரிப்பதில் பெரும் பாரபட்சம், அநீதி இழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. பல்வேறு தவறுகள், குழறுபடிகள், அநீதிகள் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் போது நடைபெறும் என்பதற்கு நடந்து முடிந்த பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம், அதன் பின் நடந்த தேர்தல் ஆதாரமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

### பீகார் மாநிலத்தில் வாக்காளர் தீவிர திருத்த முறைகேடுகள்:

தேர்தல் ஆணையத்தின் பேராதரவுடன் வெளிப்படைத் தன்மை இல்லாமல் மக்களாட்சி மாண்புக்கு முரணாக பீகாரில் தேர்தல் சீர்திருத்தம் என்ற பெயரில் வாக்காளர் பட்டியல் முறைகேடாக மாற்றி அமைக்கப்பட்டதாக எதிர்க் கட்சிகள் ஆதாரத்துடன் தரவுகளை வெளியிட்டன.

- முதற்கட்டமாக 65 இலட்சம் பேர் நீக்கப்பட்டனர். இவர்களில் 22 இலட்சம் பேர் இறந்துவிட்டதாகக் கணக்குக் காட்டப் பட்டது. 36 இலட்சம் பேர் நிரந்தரமாக இடம் மாறி விட்டதாகக் கூறப்பட்டது. 7 இலட்சம் பேர் விருப்பம் இல்லை எனத் தெரி வித்தனராம். இந்நிலையில் வாக்காளர்களில் இறந்தவர்கள் எனக் கூறப்பட்டவர்களின் எண்ணிக்கை மாநில இறப்பு விகி தாசாரத்தை விட அதிகம் என கூறப்படுகிறது. மேலும் விடு பட்டோரின் பட்டியலை உச்ச நீதிமன்றம் கேட்கும் வரை வெளியிடாமல் தேர்தல் ஆணையம் மௌனமாக வைத்தி ருந்தமை கவனிக்கத் தக்கதாகும்.

- பீகாரில் 7.89 கோடி வாக்காளர்கள் இருந்து அது தீவிர வாக் காளர்கள் திருத்தத்தின் பின்னர் 7.24 கோடியாகக் குறைந் தது. பின்னர் புதிய வாக்காளர், காணாமல் போனவர்கள், மீண்டும் சேர்ப்பு என பலவிதமான கணக்கீட்டுக்குப் பின்னர் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றோர் 7.42 கோடி என முடிவாகியது. உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் பின்பே இவைகள் நடந்தன.

- தீவிர வாக்காளர்கள் திருத்தத்தின் போது பழங்குடியினர், தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மையினர் அதிக அளவில் நீக் கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. இதற்கு ஆதாரமாக இறுதிப் பட்டியலின் போது நீக்கப்பட்டவர்களில் 34 வீதம் பேர் இஸ்லாமியர்கள் எனக் கூறப்படுகிறது. பின்னர் நடந்த சட்ட சபைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் மிகப்பெரிய வெற்றிக்கு இவ்வாறான நீக்கம் பெரும் பங்கு வகித்ததாகக் கூறப்படுகிறது.

- சிலர் தங்களின் வாக்குரிமையை நிரூபிக்க பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், பணிச் சான்றிதழ் என பல தகுதிச் சான்றிதழ்களைப் பட்டியலிட்ட தேர்தல் ஆணையம், நாடெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் ஆதார் அட்டையை ஏற்க மறுத்து வந்தது. இறுதியில் உச்ச நீதிமன்றத்தின் கடும் கண்டிப்புக்குப் பின்னரே ஏற்றுக்கொண்டது.

- சட்ட விரோதமாக பெருமளவில் நாட்டிற்குள் வந்து, வாக்குரிமை பெறும் வெளிநாட்டினரை நீக்குவது பிரதானம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆனால் பீகாரில் நீக்கப்பட்ட வெளிநாட்டினர் 0.012 வீதம் மட்டுமே ஆவர். எனவே ஆட்சியாளர் களின் நோக்கம் அதுவல்ல எனத் தெரிகிறது.

- சைபர் (0) என்ற முகவரியுடன் 292048 பேரும், ஒரே வீட்டு முகவ ரியில் 230 பேரும், வாக்காளர் பட்டி யலில் இடம்பெற்றிருந்தனர் என்ப துடன் வளரப்புப் பிராணிகளின் படங் களும் பட்டியலில் இருந்ததாகக் கண் டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பீகாரில் அரங்கேறிய அவலங்கள் தமிழ் நாட்டிலும் மேற்கொள்ளப்பட்டு மக்களின் அடிப்படையான சனநாயக உரிமை பறிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் பொதுமக்க ளிடையே எழுந்துள்ளது. இது சனநாயகத்தை அழித்துவிடும்.

## தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தமும் தமிழ் நாடும்:

இந்தியா முழுவதும் தீவிர வாக்காளர் திருத்தப்பணியைத் தொடங்கியுள்ள இந்திய தேர்தல் ஆணையம், பீகாரைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலும் கடந்த நவம்பர் 4-ஆம் திகதி முதல் இப்பணியைத் தொடங்கி நடத்தி வருகிறது. இதனை நடத்தும் இந்திய தேர்தல் ஆணையம் சுயேச்சையான அமைப்பு எனக் கூறப்படுவதில் துளி அளவும் உண்மை இல்லை. அது 100 வீதம் ஆளும் பாஜக கட்சி சார்ந்தும், ஒரு தலைப்பட்சமாகவும், வெளிப்படைத்தன்மை இல்லாமலும் செயற்படும் ஒரு நிறுவனம் என்றே விமர்சிக்கப்படுகிறது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் வாயிலாக தமிழ் நாட்டில் தேசிய சனநாயகக் கூட்டணிக்கு சாதகமான நிலையை உரு வாக்குவதே இதன் நோக்கமாகும். இதனால் ஒட்டு மொத்த சனநாயகமும் சிதைவுக்கு உள்ளாகும். தேர்தல் சீர்திருத்தம் என்பது வாக்காளர்கள் அனைவரையும் உள்வாங்குவதாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே வாக்காளர்கள் நீக்கப்ப டுவதற்கான வாய்ப்பே அதிகரித்து வருகிறது. பீகார், அரியா னாவைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலும் வாக்காளர் நீக்கம் நடைபெறலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் 2023 ஒக்ரோபர் 27 காலப்பகுதியில் வாக்காளர் சரிபார்ப்பின் போது, 13,61,888 பேர் சேர்க்கப்பட்டதுடன், இறப்பு, இட மாற்றம், போலி, என்ற வகையில் 6,02,737 பேர் நீக்கப்பட்ட துடன் 3,23,997 வாக்காளர்களின் பதிவுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும் தமிழக தேர்தல் அதிகாரி அறி வித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதுவே இதுவரை நடைமு றையில் இருந்த வாக்காளர் திருத்த நடைமுறை. இதனை நேர்மையாக நிறைவேற்ற நியாயமான காலம் வழங்கப் பட்டது. ஆனால் தற்போதைய வாக்காளர் திருத்தப் பணி மிக அவசரகதியில், போதிய கால அவகாசம் தராமல் நடைபெற்று வருகிறது. மேலும் படிவம் வாயிலாக விண் ணப்பிக்கப் போதிய கால அவகாசம் இன்றி வாக்குரிமையை பலரும் இழக்க வேண்டிய நிலை உருவாகும். இதே போன்று பணி, மருத்துவம் போன்ற பல்வேறு காரணங்களால் வெளியில் இருப்போர் எனப் பலரும், குறுகிய கால அவகாசமே தரப்படுவதால் அவர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடும் நிலை உரு வாகும்.





மூன்று பகுதிகளாக கட்டமிடப்பட்டு கேட்கப்பட்டுள்ள வினாக்கள் இதுவரை இல்லாத வழக்கம் மட்டுமல்ல சிரமமானதும் கூட. 2002, 2005-ஆம் ஆண்டு வாக்களித்தோர் விபரம், பெற்றோரின் தகவல், அப்போதைய உறவினர் பெயர் விபரம், என கேட்கப்படும் கடந்த கால தகவல்களால் வாக்காளர் குழப்பமடைகின்றனர். வாக்காளர்கள் தங்களுடைய தகவல்கள் அனைத்தையும் தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். வாக்காளர்கள் தங்களை சுலபமாக பட்டியலில் சேரக்கும் வகையில் தேர்தல் ஆணையத்தின் செயற்பாடு இருக்க வேண்டுமேயன்றி நீக்கும் வகையில் இருக்கக்கூடாது.

தற்போதைய செயற்பாட்டால் வாக்குரிமை நிரூபிக்கும் பொறுப்பு அரசிடமிருந்து குடிமக்களுக்கு மாற்றப்படுகிறது. முன்பு அதிகாரி நேரில் வந்து சரி பார்ப்பார். இப்போது படிவத்துடன் அதிகாரிகளைத் தேடிப் போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் அரசின் பொறுப்பு மடை மாற்றப்படுகிறது. மேலும் படிவங்களைச் சேகரிக்கும் BLO (Booth Level Officer) எனப்படும் அலுவலர்கள் போதிய பயிற்சியும் விபரமும் அறியாதவர்களாக இருப்பதால் வாக்காளர்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இணைப்பில் அவசியப்பட்டால், சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் எவை என தேர்தல் ஆணையம் ஒரு பட்டியலை வெளியிட்டு, தமிழக மக்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது 13-வது அட்டவணையில் பீகாரில் நடந்து முடிந்த தீவிர வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால், தமிழக வாக்காளர் பட்டியலில் பெயரை இணைத்து வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளமை தமிழக வாக்காளர்களின் சனநாயக உரிமை மீதான தாக்குதல் ஆகும்.

13-வது அட்டவணை வாயிலாக தமிழகத்தில் பணிபுரியும் வட மாநில தொழிலாளர்கள் வாக்குரிமை பெறுவார்களாயின், பீகாரில் நீக்கப்பட்ட 60 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தமிழக தேர்தல் பிரதிநிதித்துவத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். சென்னை, கோவை, ஈரோடு, திருப்பூர், பகுதிகளில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். தேர்தல் ஆணையத்தின் ஆதரவுடன் இவர்களை வாக்காளர்களாக்கி, தமிழக தேர்தலில் பாஜக உள்ளடக்கிய தேசிய ஜனநாயக கூட்டணியை வெற்றிபெறச் செய்வதே இவர்களின் நோக்கமாகும். இது வெளிப்படையான சனநாயகத்தின் மீதான மறைமுக தாக்குதல் ஆகும். இது சனநாயக தேர்தல் முறையின் நம்பகத் தன்மையைச் சீர்குலைத்துவிடும். எனவே தேர்தல் ஆணையம் அரசியல் நோக்கங்களுக்காக இந்திய சனநாயகத்தின் மாண்பைச் சிதைத்துவிடக்கூடாது.

வாக்குரிமையைத் தக்கவைத்துக் கொள்ள ஒவ்வொரு வாக்காளரும் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது. பீகாரில் இலட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்ட தகவலால் தமிழகத்தில் வரவிருக்கும் இறுதி வாக்கா ளர் பட்டியலில் தங்கள் பெயர் இடம்பெறுமா என்ற பதட்டம், தமிழக வாக்காளர்களிடையே காணப்படுகிறது.

## வாக்குரிமையுடன் குடியுரிமையும் கேள்விக்குள்ளாகுமா?

வாக்குரிமையை நிரூபிக்க தேவைப்பட்டால், தேவையான கடந்த கால ஆவணங்களைக் கோருவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகார பலத்தின் வாயிலாக வாக்குரிமையைப் பறிகொடுத்து குடியுரிமையையும் இழக்க வேண்டி வருமோ என்ற அச்சம், சிறுபான்மை மற்றும் பழங்குடி மக்களிடையே எழுந்துள்ளது. பீகாரில் நீக்கப்பட்ட வாக்காளர்களில் பெரும்பகுதியினர் இஸ்லாமியர்கள் என்ற உண்மையை சுலபத்தில் மறந்துவிட முடியாது.

அசாமில் பலர் குடியுரிமையை இழந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் குடியுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு உண்டா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஆனால் தேர்தல் ஆணையம் தமக்கு உண்டு எனக் கூறி வருகிறது. இன்றைய தீவிர தேர்தல் சீர்திருத்தம் என்பது, வாக்குரிமையுடன் மட்டுமல்லாமல் குடியுரிமையுடன் இணைந்த பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது. 1993-ஆம் ஆண்டு வழக்கொன்றில் குடியுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம், தேர்தல் ஆணையத்திற்கு இல்லை என்று நீதிமன்றம் கூறி உள்ளமை கவனிக்கத் தக்கது. ஆனால் தேர்தல் ஆணையம் விடாப்பிடியாகத் தமக்கு அதிகாரம் உண்டெனக் கூறிவருவதுடன், ஆவணங்களைக் கேட்கவும் முனைப்புக் காட்டி வருகிறது. இதனால் வாக்குரிமையுடன், குடியுரிமையும் கேள்விக்குரியதாகி வருகிறது. ‘வாக்குரிமையைப் பறிக்க ஒரு வாக்காளர் பட்டியல்’ என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றில் NPR, NRC, சட்டத்தை அமுல்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை, நுழைமுக வழியாக அரசு பயன்படுத்த முனனைவதாக, பேராசிரியர் பொன்னுராஜ் அவர்கள் விமர்சனம் செய்துள்ளமை கவனிக்கத் தக்கதாகும்.

இதுவரை நடந்தேறிய மாநிலங்களின் தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியலை ஆராய்ந்து பார்த்தால், புறக்கணிக்கப்பட்ட சமூகங்களே அதிக பாதிப்புக்கு ஆட்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக பரம ஏழைகள், இடம் பெயரும் தொழிலாளர்கள், முதியவர்கள், கல்வி அறிவு குறைவானவர்கள், பழங்குடியினர், அடுத்த வேளை உணவுக்காகப் போராடிக்கொண்டு இருப்பவர்கள் போன்றவர்களைக் கூறலாம். எனவே அரசும், தேர்தல் ஆணையமும் வாக்காளர்களை எதிரி நாட்டவர்களாகக் கற்பனை செய்து, அவர்கள் மீது அதிக சுமையை சுமத்தாமல் சுதந்திர உணர்வுடன் வாக்களிக்கும் உரிமையை வழங்க முன் வர வேண்டும்.

வாக்காளர் திருத்தம் அவசியம் ஆனால் அது நேர்மையாக, நியாயமானதாக, அரசியல் சார்பற்றதாக, சனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதாக, இருக்க வேண்டும். அதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உறுதுணையாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அது இல்லை என்பதே உண்மை.



jeyasingh@thaiveedu.com


உங்கள்
கனவையும் கலையையும்
சுமந்தவர்களாக
எங்கள்
கண்ணீர்க் காணிக்கை!
ஓவியர் ரமணி
(சிவசுப்பிரமணியம்)
03.08.1942 - 29.12.2025
வாழ்த்து
29.12.2025

# இனம் அடையாளம் அதிகாரம்

ரதன்

செகன்ட் சன்ஸ் கனடா (Second Sons Canada) என்ற அமைப்பு 2024-இல் கனடாவில் தோற்றுவிக்கப்பட்டது. இதனை நிறுவியவர் முன்னால் கனடிய இராணுவ வீரர் ஜெரமி மக்கன்சி (Jeremy MacKenzie). இவ்வமைப்பை Diagolon எனவும் அழைப்பார்கள். இவ்வமைப்பானது ஐரோப்பிய வம் சாவளியைச் சேர்ந்த கனடியர்களின் பாரம்பரியப் பிறப் புரிமை, திட்டமிட்ட குடிவரவு கொள்கைகளின் மூலம் பறிக்கப் படுவதாக (birthright has been stolen) வாதிடுகிறது. மேலும், குடிவரவாளர்களின் வருகையால் வெள்ளை இனத்தவர்கள் சிறுபான்மையினராக மாற்றப்படுகிறார்கள் என்ற 'இடமாற்றக் கோட்பாட்டை' (Great Replacement Theory) இவர்கள் முதன்மையாக முன்வைக்கின்றனர். இவர்கள் பொதுவாக சீருடையில் காட்சியளிப்பார்கள். வெள்ளை முகமூடியுடன் கறுப்பு நிற மேல் அங்கி அணிவார்கள். All thy sons என்ற



வாசகம் பொறிக்கப்பட்டிருக்கும். வெகு வேகமாக இவ்வமைப்பு வளர்ந்துவருகின்றது. இவ்வமைப்பில், முன்னாள் 'நாசி'கள் உட்படப் பலர் இணைகின்றனர்.

ஓர் ஆடையோ, ரப்பர் முத்திரையிடப்பட்ட கடதாசித் துண்டோ அல்ல எங்கள் அடையாளம். அவற்றுக்கும் மேலானது. (Our identity is more than a costume or a rubber stamped piece of paper). 'எமது மக்கள், எமது வீடு, எமது எதிர்காலம்' போன்ற வாசகங்கள் இவர்களது இணையத் தளத்தில் உள்ளன. சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் கனடா நயகரா பூங்காவில் இவர்களது அணிவகுப்பு ஒன்று இடம்பெற்றுள் ளது. சில காலங்களுக்கு முன்னர் 1989-இன் இறுதிப் பகுதி யில் ரொறன்ரோவில் மற்றொரு நாசி அமைப்பு குடிவரவாளர் களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டது. இரவில் வேலைக்கு சென்று திரும்பிய மூன்று தமிழர்களும் இவர் களால் தாக்கப்பட்டனர். பின்னர் இவ்வமைப்பு முடக்கப்பட்டது.

அண்மைக் காலங்களில் வட-அமெரிக்காவில் இது போன்ற அமைப்புகள் அதிகளவு தோன்றுகின்றன. இவ்வமைப்புகள் குடிவரவாளர்களையே குறிவைத்து செயல்படுகின்றன. டொனால்ட் ட்ரம்ப்பின் வருகையின் பின்னர் இனவாதிகளின் செயல்பாடுகள் வட-அமெரிக்காவில் அதிகரித்துள்ளன. அமெரிக்காவில் இது வெளிப்படையாகவே நடைபெறுகின் றது. கனடாவில் இது மறைமுகமாக ஆனால், தீவிரமாக நடைபெறுகின்றது.

உண்மையில் இந்த இனவாதம் அண்மையில் தோன்றியதா? அல்லது இது நீண்ட காலமாகவுள்ளதா? இதன் வேர் எங் குள்ளது போன்ற கேள்விகள் உள்ளன.

கொலராடோ டென்வர் பல்கலைக்கழக பொது நிர்வாக கற்கை நெறி பேராசிரியர் Sheluyang Peng இரு முக்கிய கருதுகோள்களை முன்வைக்கின்றார். இவர், முதலாவது குடிவரவாளர்கள் ஒருவருக்கொருவர் தொகுதிகளிலிருந்து விலகி வாழ்கின்றனர். பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றத்திற்காக மட்டுமே தொடர்பு கொள்கின்றனர். இரண்டாவது வெள்ளை இனத்தவர்கள்; ஆசியர்கள், ஆபிரிக் கர்கள் குடியிருக்கும் பகுதிகளை விட்டு வெளியேறி தனித்த பகுதிகளில் வாழ்கின்றனர். கலாசாரத்துக்குப் பொருந்தாத தன்மையை ஒரு காரணமாக முன்வைக்கின்றனர். இத்தன் மையை வட-அமெரிக்காவில் எங்கும் காணக்கூடியதாக வுள்ளது.

குடிவரவாளர்களின் சமூகங்களுக்கிடையிலான இடைவெளி இயல்பானதா, அல்லது ஏற்படுத்தப்பட்டதா? என்ற கேள் விக்கு விடையை அணுகும்போது, உண்மை நிலைப்பாட் டைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். வடஅமெரிக்கா என்பது வெள்ளை இனத்தவர்களால் மூத்த குடிகள் ஒடுக்கப் பட்டு, அழிக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட பிரதேசம். அதனால், வெள்ளை இனத்தவர்கள் தங்களை ஒரு மேலாதிக்க சக்தி யாகக் கருதுகின்றார்கள். அதனால்த்தான் அவர்கள் குடி

tg.theeban@gmail.com



வரவாளர்கள் அதிகமாக வாழும் சமூகப் பிரதேசங்களில் வாழ்வதனைத் தவிர்க்கின்றனர்.

**இந்த மேலாதிக்க மனோபாவம் எவ்வாறு உருவாக்கப் பட்டது?**

காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து, ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டு மக்கள் வெள்ளை இனத்தவர்களிடம் 'white -adjacent' ஆக இல்லாமல் 'white - adjustment' (வெள்ளையருக்கு அருகில் இல்லாமல், அவர்களுக்கு இசைந்து அல்லது அவர்களுக்கு ஏற்ப) செய்து வாழ்ந்து வந்தார்கள். அது புலம் பெயர்ந்த நாடுகளிலும் தொடர்கின்றது. வெள்ளையியலின் முக்கியத்துவம் இப்போது புதிய தாராளமயம் அல்லது ஜனரஞ்சகத்தைப் போல கலாச்சார மற்றும் அரசியல் விவ காரங்களின் மைய இயக்கியாகத் தீவிரமாகப் பயன்படுத் தப்படுகிறது.

கோட்ஸ் (Cortés) கூறியது போல், 'வெள்ளை என்பது கற்பனையானதோ அல்லது குறியீட்டு ரீதியானதோ அல்ல. ஆனால் அது அதிகாரத்தின் மையக்கரு'. அது டிரம்ப் மட்டுமல்ல, பிரெக்ஸிட் உட்பட அட்லாண்டிக்கின் இருபுறமும் நடந்த நிகழ்வுகளில் வெள்ளையர் தன்மை சம்பந்தப்பட்டிருக் கிறது. நோர்வே, நியூசிலாந்து மற்றும் அமெரிக்காவில் நடந்த வெகுஜன துப்பாக்கிச் சூடுகள்; ஜார்ஜ் ஃபிலாய்ட் மற்றும் பிரியோனா டெய்லர் கொலைகள் (George Floyd and Breonna Taylor killings) அமெரிக்க தலைநகரில் ஜனவரி 6-ஆம் திகதி நடந்த கிளர்ச்சி என்பன சமூகத்தில் நீண்ட காலமாக இருந்த கட்டமைப்பு சார்ந்த இனவெறியையும் (systemic racism), போலீஸ் அதிகார துஷ்பிரயோகத்தையும், பொறுப்புக்கூறல் இல்லாமையையும் வெளிப்படுத்தி நிற் கின்றன.

இந்த நிஜ உலக சம்பவங்களுடன், கோட்ஸ், நெல் பெயிண் டர், ஜோர்டான் பீல், எரிக் பொனர், அவா டுவெர்னே, ஆடம் சர்வர், பார்பரா, கர்ன் பீல்ட்ஸ், கெவின் யங், டேவிட் ஒலுசோகா, நிகோல் ஹன்னா-ஜோன்ஸ், கோல்சன் வைட் ஹெட் மற்றும் கிளாடியா ராங்கின் (Coates ,Nell Irvin Painter, Jordan Peele, Eric Foner, Ava DuVernay, Adam Serwer, Barbara, Karen Fields, Kevin Young, David Olusoga, Nikole Hannah-Jones, Colson Whitehead and Claudia Rankine) போன்ற பலரால் - கடந்த 50 ஆண்டுகளில் வெள்ளை இன தன்மை குறித்த மிக முக்கியமான ஆய்வுகள் நடத்தப்பட் டுள்ளன. இவை மறுபரிசீலனையைத் தூண்டியுள்ளது.

சமகால சமூகத்தில் 'வெள்ளையர்' என்பது அடையாளத்தின் அர்த்தமுள்ள குறியீடாகக் கருதப்படுகிறது. ஒரு நூற்றாண் டுக்கு முன்னர், சமூகவியலாளரும் சமூக விமர்சகருமான WEB Du Bois (வெப் டு போயிஸ்), 'வெள்ளையர்களின் ஆன் மாக்கள் (The Souls of White Folk) என்ற தனது கட்டுரையில் வெள்ளையர் இன அடையாளத்தைப் பற்றிய மிகவும் ஊடுரு வக்கூடிய மற்றும் நீடித்த நுண்ணறிவுகளில் ஒன்றாக இன்னும் கருதப்படும் கருத்தை முன்மொழிந்தார்.

கடவுளின் அனைத்து சாயல்களிலும் வெண்மை மட்டுமே, வெளிப்படையாகவே மண்ணிறம், பழுப்பு நிறத்தை விடச் சிறந்தது' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு மதம் - வெள்ளையின் புதிய மதம் என்பதே அது ('of all the hues of God, whiteness alone is inherently and obviously better than brownness and tan'). அமெரிக்க நிற வெறியை எதிர்த்து கறுப்பின மக்களுக்காகப் போராடியவர் டு போயிஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது கருத்துகள் பெரும்பாலும், 'வெள்ளை என்பதனை மதமாக மாற்றி, வெள்ளையினத்தவர்கள் வழிபாட்டுக்குரியவர்களாக மாற்றப் பட்டுள்ளார்கள்' என்ற விமர்சனமாகவேயிருந்தன.

'இனம் ஒரு சமூகக் கட்டுமானம்' (sociological phenomenon) என்பது கருத்திழந்துவிட்டது. ஆனாலும், மனித வரலாற்றில் வெள்ளையர் என்பது ஒப்பீட்டளவில் மிகப் பெரிய விடயமாக மாற்றப்பட்டுள்ளது என்ற டு போயிஸின் கருத்துக்கு தற் பொழுது மீண்டும் வலு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'நவீன காலத்தில்த்தான் வெள்ளையின மக்கள் தங்களை ஆதிக்க வெள்ளை இனம் என்று நினைக்கத் தொடங்கினர்' என்று, டு போயிஸின் சொன்னது சரிதான் என்பதைப் பல வரலாற் றாசிரியர்கள் நிரூபித்தனர்.

வெள்ளை அடையாளம் - ஒரு தூய்மை மற்றும் நல்லொழுக் கத்தின் அடையாளமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. Mary Handlin, Edmund Morgan and Edward Rugemer போன்ற வரலாற்றாசிரியர்கள் வெள்ளை இன அடையாளத்தின் கண்டுபிடிப்பு ஆரம்பத்திலிருந்தே ஆப்பிரிக்கர்களின் அடி மைத்தனத்தை நியாயப்படுத்த வேண்டிய அவசியத்தால் தூண்டப்பட்டது எனக் கூறி, வரலாற்றாசிரியர் டு போஸால் முன்வைக்கப்பட்ட கருத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். வரலாற்றாய்வாளரும் ரினிடாட்-டுபாகோ நாட்டின் முதல் பிரதமருமான எரிக் வில்லியம்ஸ் 'அடிமைத்தனம் இனவெறி யால் பிறக்கவில்லை: மாறாக. இனவெறி அடிமைத்தனத்தின் விளைவாகும் ('slavery was not born of racism: rather, racism was the consequence of slavery) என்ற கருத்தை முன்வைக்கின்றார்.

## காலனித்துவ காலத்தில் வெள்ளையின அடையாளம்:

காலனித்துவ காலத்தில் வெள்ளையின அடையாளத்துடன் மதமும் இணைக்கப்பட்டது. மத அடையாளம் ஆங்கில

அடிமை வர்த்தகத்தின் வளர்ச்சிக்கும், இறுதியில் வெள்ளைத் தன்மையின் வளர்ச்சிக்கும் மிக முக்கியமானது. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கிந்திய தீவுகள் பலவற்றில் ஐரோப்பியர் (கிழக்கு) பலர் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்துவந்தார்கள். இவர்கள் வீட்டு வேலைக்காரர்களாகவே கருதப்பட்டனர். இவர்கள் கிறிஸ்தவ மதத்தை சார்ந்திருந் தமையால் இவர்கள் குற்றம் புரிந்தவர்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டாலும் அவர்கள் சிறையிலடைக்கப்படவில்லை. மாறாக, அதே பிரதேசங்களில் வாழ்ந்த ஆபிரிக்கர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். துன்புறுத்தப்பட்டனர். ஆபிரிக்கர் களை அடிமைகளாக வைத்திருப்பது சட்டபூர்வமாக்கப்பட் டது. அதேபோல், அவர்களைத் துன்புறுத்தலும் சட்டபூர்வ மாக்கப்பட்டது. பார்படோஸ் நாட்டின் வரலாற்றை மீண்டும் திரும்பிப் பார்த்தால் பிரிட்டனின் மிக மோசமான பக்கங்கள் வெளிப்படும். ஆபிரிக்கர்களின் வருகையானது கிழக்கு ஐரோப்பியர்களின் வேலை வாய்ப்பை பாதித்தது. குறைந்த வேதனம், அதிக கொடுமை, சிறைவாசம் என சகலதும் ஆபிரிக்கர்கள் மீது சுமத்தப்பட்டது. 1676-இல் பிரிட்டிஷ் வேர்ஜினாவில் நடைபெற்ற பேக்கன் கிளர்ச்சியில் ஐரோபியத் தொழிலாளர்களும், ஆபிரிக்கர்களும் இணைந்து கிளர்ச்சி யில் ஈடுபட்டனர். இதன் பின்னர், ஐரோப்பிய தொழிலாளர் களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட்டன. அதே சமயம், புதிதாக ஐரோப்பியர்களை வேலைக்கு வரவழைக்காமல், ஆபிரிக்கர்களை அடிமைகளாக இறக்குமதி செய்தனர். பின்னர், ஐரோப்பிய தொழிலாளர்கள் வெள்ளையர்கள் என்ற அடையாளத்தைப் பெற்றனர். ஏனெனில், ஆபிரிக்கர்களும் கிறிஸ்தவ மதத்தை தழுவினால் அவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இதனால் இந்நடவடிக்கை நிற அடையாளமாக உருப்பெற்றது.

1680-இல் பார்படோஸ் ஆபிரிக்கர்கள் மதம் மாறுவதற்கு எதிராக சட்டமியற்றியது. ஆபிரிக்கர்கள் கிறிஸ்தவர்களாக மாறி சலுகைகளைப் பெறுகின்றார்கள் அதை தடுக்கவேண் டும் என்பதற்காகவே இச்சட்டமியற்றப்பட்டது. வெள்ளை நிறம், தன்னை முதலாளித்துவம் அதற்குத் தேவையான உழைப்பைப் பாதுகாக்க அனுமதித்த ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக விரைவாக நிரூபித்தது - 'வெள்ளை' மற்றும் ஆப்பிரிக்க - வரலாற்றாசிரியர் தியோடர் ஆலன் கூறியது போல், 'தோட்ட முதலாளித்துவம் வேண்டுமென்றே ஏழை வெள்ளைகளுக்கும் சலுகைகள் வழங்கி உற்பத்தியின் முக்கிய பங்காளிகளாக அவர்களை மாற்றியது. ஆபிரிக்கர் கள் தொடர்ச்சியாக அடிமைகளாக இருப்பதற்கு இது ஒரு வழியாக அமைந்தது.

வெள்ளை என்ற கருத்தின் பொருளாதாரப் பயன்பாடு அதை உலகம் முழுவதும் வேகமாகப் பரப்ப உதவியது. அதை ஒரு மதம் என்று அழைப்பதில் தவறில்லை. ஏனென்றால், ஒரு மதத்தைப் போலவே அது மிகவும் நெருக்கமானது. பொது மக்கள் தொடங்கி உளவியல், சமூகவியல், அரசியல் அள விலும் செயல்பட்டது. ஒரு மதத்தைப் போலவே, அது உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாறியது. வெள்ளையர் என்று அழைக்கப்படும் மக்கள் குழு இயற்கையாகவே மற்ற அனைவரையும்விட உயர்ந்தவர்கள் என்பதனைத் தொடர்ந்து உறுதிப்படுத்திக்கொண்டிருந்தது.

சிறந்த தத்துவ ஆய்வாளரும் பிரிட்டனின் பழமைவாதக் கட்சி யின் உறுப்பினரும் முன்னாள் பிரித்தானிய பிரதமருமான Benjamin Disraeli-யின் கூற்று முக்கியமானது. 'இனம் வேறு பாட்டைக் குறிக்கிறது, வேறுபாடு மேன்மையைக் குறிக்கிறது, மேலும் மேன்மை ஆதிக்கத்திற்கு வழிவகுக்கிறது' (race implies difference, difference implies superiority, and superiority leads to predominance) என்ற வெள்ளையர்களின் கருத்து வெள்ளையர்களின் மேலாதிக்கக் கருத்துக்கு ஒத்த தாக இருந்தது.

Immanuel Kant மற்றொரு புத்திஜீவி; அறிவியலாசிரியர்; தத்துவ விஞ்ஞானி. இவர் முன்வைத்த கருத்துகள் வெள்ளை மேலாதிக்கத்தை மேலும் வலுப்படுத்தின 'மனிதநேயம்



> “ ***American Eugenics Movement என்பது 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் உருவான, சில இனங்கள், சமூகங்கள் மரபணு ரீதியாக தாழ்ந்தவை என்ற தவறான நம்பிக்கையை ‘அறிவியல்’ எனப் பெயரிட்டு சட்டங்களாக நடைமுறைப்படுத்திய மனிதாபிமான விரோத இயக்கமாகும்;*** ”

வெள்ளையர்களின் இனத்தில் அதன் மிகப்பெரிய பரிபூரணத்தில் உள்ளது’, ‘பூர்வீக அமெரிக்கர்களும் கறுப்பினத்தவர்களும் தங்களை ஆள முடியாது. எனவே, அடிமைகளாக மட்டுமே சேவை செய்கிறார்கள்’ 1802-இல் வெளியிடப்பட்ட இவரது இயற்பியல் - பௌதிகவியல் விரிவுரைகள் அடங்கிய தொகுப்பில் இக்கருத்துகள் உள்ளன.

காந்தியும் தனது ஆரம்பக் காலத்தில், அந்நேரத்தில் மேற்கத்தேய உலகில் ஆதிக்கம் செலுத்திய வெள்ளை இன மேலாதிக்கக் கருத்துகளை ஓர் அளவு ஏற்றுக்கொண்டிருந்தார். அந்தக் கருத்துப்படி, மனித இனங்கள் ‘அறிவியல்’ என்ற பெயரில் ஒரு இன வரிசைமுறையாக அமைக்கப்பட்டன. இந்த வரிசையின் உச்சியில் வெள்ளையினம் வைக்கப்பட்டது. அடித்தளத்தில், காட்டு மிராண்டித்தனமானவர்கள் என்றும், நிலையான கலாசாரம் உருவாக்கும் திறன் இல்லாதவர்கள் என்றும் பூர்வீக அமெரிக்கர்கள் கருதப்பட்டனர். அதற்கு மேலாக, ‘கறுப்பினத்தவர்’ என்போர் பயிற்சியளிக்கப்பட்டால் உழைப்பையும், அடிமைத்தனத்திற்குரிய ஒரு கலாச்சாரத்தையும் உருவாக்க முடியும் என வகைப்படுத்தப்பட்டனர். அதன் பின், ஆசியர்கள் (சீனரும் இந்தியரும்) கலை மற்றும் பண்பாட்டை உருவாக்கும் திறன் கொண்டவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், சுருக்கமான (abstract) சிந்தனை இல்லாததால் அறிவியலை உருவாக்க முடியாதவர்கள் எனப் பார்க்கப்பட்டனர். இறுதியாக, பகுத்தறிவும் தனிநபர் தன்னாட்சியும் கொண்ட மேம்பட்ட சமூகத்தை உருவாக்கக்கூடிய உந்துதலும் திறனும் உள்ளவர்கள் என்ற அடையாளத்துடன் வெள்ளையினம் உச்ச நிலைக்கு உயர்த்தப்பட்டது. இத்தகைய இன வரிசைச் சிந்தனை, தாராளவாத (liberal) திட்டங்களை காலனித்துவ மேலாதிக்கத்துக்கும் இன அடிமைத்தனத்துக்கும் நியாயமாக்கி, ‘முதிர்ச்சியற்ற’ மக்களுக்கு தந்தைவழி ஆட்சி அவசியம் என்ற கருத்தை நிலைநாட்ட உதவியது.

American Eugenics Movement என்பது 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் உருவான, சில இனங்கள், சமூகங்கள் மரபணு ரீதியாக தாழ்ந்தவை என்ற தவறான நம்பிக்கையை ‘அறிவியல்’ எனப் பெயரிட்டு சட்டங்களாக நடைமுறைப்படுத்திய மனிதாபிமான விரோத இயக்கமாகும்; இதன் மூலம் கருப்பின மக்கள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், குடியேறிகள் போன்றோர் குறிவைக்கப்பட்டு, கட்டாயப் பிள்ளை பெறாத நிலை, திருமணத் தடைகள், குடியேற்றக் கட்டுப்பாடுகள் போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, மேலும் இந்தச் சிந்தனை பின்னாளில் நாசி ஜெர்மனியின் இன அழிப்பு கொள்கைகளுக்கே முன்மாதிரியாகவும் அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தங்களைத் தாராளவாதிகளாகவும் முற்போக்குவாதிகளாகவும் கருதியவர்கள். தகுதியற்றவர்கள் என்று கருதிய நாடுகளில் இருந்து குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை ஆதரித்தனர். இனவாதிகள் உண்மையில் இனத்தை ஒரு சமூக கட்டமைப்பாகக் கருதுகின்றனர். ஏனென்றால், இனவாதிகள் தங்கள் சமூக அனுபவங்களின் மூலம் இனம் குறித்த தங்கள் கருத்துகளை உருவாக்குகிறார்கள். ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் இந்தோ-ஆரியர் என்று அழைக்கப்படும் ஒரு பொதுவான இனத்திலிருந்து தோன்றினர்’ என்றும் ‘தென்னாபிரிக்காவில் உள்ள வெள்ளையர் இனம் ஆதிக்கம் செலுத்தும் இனமாக இருக்க வேண்டும்’ என்றும் காந்தி வாதிட்டார். வெள்ளையினத்தவர்கள் உடற் கூற்றை (நிறம்) மையப்படுத்தி தங்களை மேலானவர்களாக கட்டமைத்துக்கொண்டார்கள். அதேபோல் மூளையை மையப்படுத்தியும் அதனை நிறுவினார்கள்.

1751-ஆம் ஆண்டு, Observations Concerning the Increase of Mankind என்ற கட்டுரையில் பெஞ்சமின் பிராங்க்ளின் கூறிய கருத்து நிறவெறியின் தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. ‘ஆங்கிலேயர்களும் சாக்சன்களும் மட்டுமே ஐரோப்பியர்கள். ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து, அவர்கள் தான் பூமியின் முகத்தில் உள்ள ‘வெள்ளை மக்களின்’ முக்கிய உடலை (principal Body of White People) உருவாக்குகிறார்கள்.’ (make the principal Body of White People on the Face of the Earth). பெஞ்சமின் ‘ஐரோப்பியர்’ என்ற அடையாளத்தை எல்லோருக்கும் தரவில்லை என்பதை இக்கருத்து தெளிவுபடுத்துகிறது. ‘வெள்ளை’ (White) என்ற சொல்லுக்கு இன அரசியல் அர்த்தம் தோல் நிறம் மட்டுமல்ல. அதிகாரம், தூய்மை, ஆட்சி செய்யும் தகுதி என்ற பொருளில் இங்கு பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் வெள்ளை அடையாளத்துடன் கிழக்கு ஐரோப்பியர்கள் இணைக்கப்படவில்லை. காலப்போக்கில், கலாசார ரீதியாக வெள்ளையர்களாகக் கருதப்படுபவர்களின் வரையறைக்குள் தெற்கு, கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள், ஐரிஷ் மற்றும் யூதர்கள்கூட இணைக்கப்பட்டார்கள்.

பின்னாட்களில் நிற வேறுபாட்டுக்கு எதிராக சட்டங்களியற்றப்பட்டன. ஆனாலும் color blind racism என்பது வேறொரு வகையில் வெள்ளையினத்தவர்களுக்கு சார்பாகமாறியது. பெரும் நிறுவனங்கள் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளன. இது தென் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்காவரையுள்ளது.

## நிறவாதம்–இனவாதம்:

1692-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பார்படோஸில் உள்ள காலனித்துவ சட்டமன்ற உறுப்பினர்கள், ‘இந்தத் தீவின் பல நீக்ரோக்கள் மற்றும் அடிமைகள் மிகவும் கொடூரமான இரத்தக்களரி மற்றும் கிளர்ச்சி, படுகொலை, அழிவு ஆகியவற்றை தொடர்ச்சியாக செய்து வருகின்றனர் என்று புகார் கூறினர். இவ்வாறான புகார்களின் அடிப்படையே ஆபிரிக்கர்களுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கச் செய்யவேண்டும் என்பதே இதன் தார்மீக நோக்கமாகும். அதுவே, நடைபெற்றுள்ளது. 1913-இல் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற வுட்ரோ வில்சன் ‘வெள்ளையினத்தவர்கள் சுய பாதுகாப்பின் உள்ளுணர்வால் தூண்டப்பட்டே

கறுப்பினத்தவர்களுக்கு எதிராக செயல்படுகின்றனர்' எனக் கூறினார்.

முதன்மை ஸ்தாபக தந்தையான வாஷிங்டன், வர்ஜீனியாவில் உள்ள தனது மவுண்ட் வெர்னான் தோட்டத்தில் அடிமை களை வைத்திருந்தார். அவர் முதல் ஜனாதிபதியாக ஆன போது பிலடெல்பியாவுக்கு குடிபெயர்ந்தார். அவ்வாறு செல லும்போது அவருடன் அடிமைகளையும் அழைத்துச் சென் றார். 1799-இல் அவர் இறந்த பிறகு, அவரது அடிமைகள் எவரும் விடுவிக்கவில்லை. ஆனால், அவர் தனது விருப்பப் படி தனது அடிமைகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். இவரைப் போலவே 1829-இல் பதவி யேற்றபோது ஜக்சன் என்பவரும் கறுப்பின அடிமைகளை வைத்திருந்தார்.

அமெரிக்காவின் மூன்றாவது குடியரசுத் தலைவர் தோமஸ் ஜெபர்சனும் அவரது அடிமையான சலி ஹெமிங்சும் கொண்ட உறவின் பயனால் ஆறு பிள்ளைகள் பிறந்தனர். ஜெபர்சன், சலி ஹெமிங்கைத் திருமணம் செய்யவில்லை.

1971-இல் கலிபோர்னியா ஆளுநராக இருந்த றொனால்ட் ரீகன் ஆப்ரிக்க நாடுகளின் பிரதிநிதிகளைப் பற்றி ரிச்சர்ட் நிக்சனுடன் தொலைபேசியில் பேசும்போது, 'அந்த ஆப்பி ரிக்க நாடுகளிலிருந்து வந்த அந்த அந்த குரங்குகளைப் பாருங்கள் (ஜனாதிபதி நிக்சன் சிரிக்கிறார்). அவர்கள் கால ணிகள் அணிவதற்கு இன்னும் சங்கடப்படுகிறார்கள் - ...to see those - those monkeys from those African countries [President Nixon laughs], damn them, they're still uncomfortable wearing shoes!. - எனக் கூறியதாகக் கருதப்படும் இக்கருத்து இற்றைவரை விமர்சிக்கப்படுகிறது.

1954- President Dwight D. Eisenhower அப்போதைய மேல் நீதிமன்ற நீதிபதியுடன் உரையாடும் பொழுது, 'தெற்கத்தியர் கள் மோசமானவர்கள் அல்ல. அவர்கள் தங்களது பெண் பிள்ளைகள் கறுப்பினப் பிள்ளைகளுடன் பாடசாலையில் ஒன்றாக இருப்பதனை விரும்பவில்லை' எனத் தெரிவித்து நிறவாத்தை ஆதரித்தார்.

ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் கறுப்பின மக்களை 'நாய்களைப்' போல வாழும் 'நீக்ரோ பாஸ்டர்டுகள்' என்று குறிப்பிட்டார். ஜனாதிபதி றொனால்ட் ரீகன் கறுப்பினப் பெண்களை 'welfare queens' என்று சித்திரித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கிளின்டன், ஒபாமா ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட முற்பட்ட போது 'சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்த நபர் எங்களுக்கு காபி வாங்கிக் கொண்டிருப் பார். இந்த நபர் எங்கள் பைகளை எடுத்துச் சென்றிருப்பார்' எனக் கூறியதாக என்.டி.ரிவி தெரிவித்துள்ளது.

நிக்சன் கறுப்பு இன மக்கள் குறித்து பின்வருமாறு தெரி வித்துள்ளார் 'அவர்களால் ஒரு நாட்டை ஆள முடியாது; மேலும், அவர்களால் நூறு ஆண்டுகளுக்கு முடியாது; ஒரு வேளை, ஆயிரம் ஆண்டுகளுக்கு கூட முடியாது' என்றும் கூறினார்.

'ஒரு இனமாகவும் பெருந்திரள் மக்கள் மத்தியில் அவர்கள் (நீக்ரோக்கள்) வெள்ளையர்களை விட முற்றிலும் தாழ்ந்த வர்கள் என்பதில் நான் உங்களுடன் முழுமையாக உடன் படுகிறேன்'. Theodore Roosevelt

வின்ஸ்டன் சர்ச்சில் (முன்னாள் இங்கிலாந்து பிரதமர்) இந்திய மக்களைப் பற்றி இழிவான கருத்துகளை வெளியிட் டார். இந்தியாவுக்கு ஆதிக்க அந்தஸ்து வழங்குவதை அவர் எதிர்த்தார்.

2015-இல் தனது ஜனாதிபதி பிரச்சாரத்தைத் தொடங்கிய போது, 'அமெரிக்காவிற்கு மெக்ஸிகன் குடியேறியவர்கள் போதைப்பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் வன்புணர்வாளர்கள்' என்று கூறினார்.

செப்டம்பர் 2009-இல் 'ஜனாதிபதி பராக் ஒபாமா மீது தீவிர மாகக் காட்டப்பட்ட விரோதத்தின் பெரும்பகுதி அவர் ஒரு கறுப்பின மனிதர் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது என்று நான் நினைக்கிறேன்' என்று ஜிம்மி கார்ட்டர் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதிகளின் நிறவெறி, இனவெறி கருத்து களைப் பற்றியும், செயல்பாடுகள் பற்றியும் எழுதிக் கொண்டே செல்லலாம். கனடாவில் குறிப்பாக பூர்வீக மக் களைத் தலைவர்கள் ஒடுக்கியுள்ளார்கள். கனடாவின் முதல் பிரதமர் உட்பட்ட பலர் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. ரைசன் பல்கலைக்கழகத்தின் பெயர் மாற்றப் பட்டுள்ளது. முதன் குடிகள் மீதான வன்முறைக் காரணியாக இருந்துள்ளார் என்ற குற்றச்சாட்டினை முன்வைத்தே பெயர் மாற்றப்பட்டது. றொறன்ரோவின் பிரதான வீதிகளில் ஒன்றான டன்டாஸ் வீதியின் பெயரும் மாற்றப்படவேண்டும் என்ற கோசம் உள்ளது. டன்டாசும் முதன் குடிகள் மீது வன்முறை களைப் பிரயோகித்தார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. ஆபிரிக்க நாடுகளின் காலனித்துவ தலைவர்கள் மீதும் நிறவெறி, இனவெறி குற்றச்சாட்டுகள் உள்ளன.

இனவெறியை இன்று மூன்று பிரதான கூறுகளாகப் பிரிக் கின்றனர். 'கட்டமைப்பு இனவெறி' (structural racism), 'குறியீட்டு இனவெறி', (symbolic racism), 'இனவெறி இல்லாத இனவெறி' (racism without racists), ஆகியவையே அவை. இவற்றைப் பற்றி பின்னர் தனியாக, விபரமாகப் பார்க்க வேண்டும்.

## நிறவெறி – இனவெறியின் அண்மைக் காலச் செயற்பாடுகள்:

டொனால்ட் ரம்ப்பில் தொடங்கி, ஐரோப்பியத் தலைவர்கள் உட்படப் பலரும் இன்று குடிவரவாளர்களுக்கு எதிராக செயல்படுகின்றனர். டொனால்ட் ட்ரம்ப் 2.0-இல் பல குடி வரவாளர்கள் சட்டத்துக்குப் புறம்பானவர்கள் என்ற பெயரில் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு வெளியேற்றப் படுகின்றார்கள். டென்மார்க்கிற்கு இன்று குடிவரவாளர்கள் செல்வது குறைந்துவிட்டது. அவர்களுடைய திட்டத்தை மற் றைய ஐரோப்பிய நாடுகளும் பின்பற்றலாம். தொழிலாளர்-களின் தேவைகள் குறையும்பொழுது, மேற்கத்திய அரசுகள் குடிவரவாளர்களுக்கு எதிராகச் செயல்படும். ஏற்கனவே, அமெரிக்காவில் 'றிபிளேஸ்மன்ட் தியறி' என்ற கோட்பாடு உள்ளது. இது ஆசிய, ஆபிரிக்க குடிவரவாளர்களுக்குப் பதிலாக வெள்ளை நிற ஐரோப்பியர்களை மாற்றீடு செய்வ தாகும். எனவே, இனிவரும் காலங்களில் மேற்கத்திய நாடு கள், ஆசியர்களுக்கும், ஆபிரிக்கர்களுக்கும் உரிய நாடு களாக இருக்கமாட்டாது. ஆபிரிக்க நாடுகளிலிருந்து குடி




பெயர்ந்தவர்களின் குற்றச் செயல்கள் பூதாகரமாக மாற்றப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றது. அண்மையில், அமெரிக்காவில் ஆபிரிக்க வம்சாவளியினரால் விசேட குழந்தைகளுக்கான 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மோசடி செய்யப்பட்டதாக பெரும்பான்மையினரின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. Jeffrey Edward Epstein-னுடன் இணைந்து செய்யப்பட்ட மோசடி விபரங்களை இதே ஊடகங்கள் வெளியிடத்தயங்குகின்றன. பெரும்பாலான ஊடகங்கள் வெள்ளையினத்தவரின் கைகளிலேயே உள்ளது. டொனால்ட் ட்ரம்ப்பினால் வெளியேற்றப்படுபவர்கள் குற்றம் செய்தவர்கள் என்ற பார்வையையே இவ்வூடகங்கள் வெளிப்படுத்துகின்றன. எனவே சிறுபான்மையினரின் எதிர்காலம் இங்கு கேள்விக்குறியாகவேயுள்ளது. ரிம் கோட்டன் போன்ற கனடிய நிறுவனங்கள் குறைந்த வேதனத்தில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்காக, வெளிநாட்டு வேலையாட்கள் தேவையென அரசிடம் பிரச்சாரம் செய்கின்றன. இங்கு கூட கிழக்கு ஐரோப்பியர்களே அதிகம் உள்வாங்கப்படுவார்கள்.

‘வெள்ளை இன அடையாளம் என்பது பொய்யானதும் அடக்குமுறையுடையதும் மட்டுமல்ல; அது பொய்யினாலும் ஒடுக்குமுறையினாலும் மட்டுமே கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும்.’ (Whiteness is not only false and oppressive, it is nothing but false and oppressive.)

நோயல் இக்னாடிவ் (Noel Ignatiev)-வைப் பொறுத்தவரை, ‘வெள்ளையர் மேலாதிக்கத்துடன் அடையாளம் காணப்பட்டதால், அதை மீட்டெடுக்க முடியும் என்று நினைப்பது முட்டாள்தனம்’ என்று கூறியதுடன், வெள்ளையர் இனம் இருக்கும் வரை இனவெறிக்கு எதிரான அனைத்து இயக்கங்களும் தோல்வியடையும்’ என்றார். அவர்களின் பார்வையில் ‘வெள்ளையர்’ என்று அழைக்கப்படுபவர்கள் - அவர்களைப் (வெள்ளையர்) போன்றவர்கள் - அந்த வெள்ளையர் இன அடையாளத்தையும் அதனுடன் வந்த இனச் சலுகைகளையும் வலுக்கட்டாயமாக நிராகரிப்பது அவசியம். Ta-Nehisi Coates வெள்ளையர் மேலாதிக்கம், அதன் அனைத்து கடுமையான மற்றும் புனிதமான சக்தியிலும் உள்ளது என்று (white supremacy, in all its truculent and sanctimonious power). இவை வெறும் கோட்பாடுகளே. ஆனால் ஆதிக்க சக்தியாக வெள்ளையினம் இருக்கும் வரை, அவர்களின் வன்முறைகளை வென்றெடுப்பது கடினம். அமெரிக்காவில் கடுமையான ஆபிரிக்க அமெரிக்கர்களின் போராட்டங்கள் நடைபெற்ற போதும் இன்று வரை ஆபிரிக்க அமெரிக்கர்கள் வறுமையாலும், கலாச்சாரத்திலும், சட்டத்திலும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டே வருகின்றார்கள்.

அமெரிக்காவில் உள்ள பல்வேறு இனக்குழுக்களின் வரலாறுகளை ‘பன்முக கலாச்சாரம்’ என்று பார்க்கக்கூடாது. மாறாக, ஒரு அமெரிக்க கதையின் இழைகளாகப் பார்க்க வேண்டும். இத்தகைய கலாச்சார தேசியவாதம் அமெரிக்காவை வெறுமனே உலகளாவிய சுதந்திரம் மற்றும் சுதந்திரம் பற்றிய தொடர்ச்சியான கோட்பாடுகளாகக் கருதவில்லை. அல்லது அமெரிக்காவை இனரீதியாக பிரத்தியேகமான வழியில் கட்டமைக்கவில்லை; அது குடிமை மற்றும் இன தேசிய வாதங்கள் இரண்டையும் நிராகரிக்கும். இது ஒரே நேரத்தில் மேலும் இயல்பான மற்றும் சுத்திகரிக்கப்பட்ட புரிதலுக்கு ஆதரவாக இருக்கும்.

மார்ட்டின் லூதர் கிங்கின் கூற்று இது ‘அமெரிக்கர்களின் தோலின் நிறமல்ல முக்கியமல்ல, அவர்களின் குணத்தின் உள்ளடக்கமே முக்கியம்’. (Martin Luther King Jr. told all Americans that it was not the color of one’s skin but the content of one’s character that mattered).

**அடிக்குறிப்பு:**

- ‘The Last Holdouts of American Meritocracy’, Tablet, June 6, 2023
- ‘Broadcasting a World of Whiteness,’ New York Times, April 25, 2012.
- www.theguardian.com/news/2021/apr/20



rathan@thaiveedu.com

# நீங்கள் மகிழ்ச்சியில் திளைத்திருக்கச் சில வழிகள்...

சுப்ரமணியம் ஜெயசீலன்

இந்த அகிலத்தில் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கவே அதிகம் ஆர்வம் காட்டுகின்றார்கள். யார்தான் சந்தோஷமாக இருக்க விரும்பமாட்டார்கள்? ஆனால் அன்றாடம் நாம் எதிர்கொள்ளும் சவால்கள், நாளாந்தப் பணிச்சுமை உள்ளிட்ட பல காரணிகளினால் மகிழ்ச்சி என்பது சற்று சவாலான விடயமாகின்றது. மகிழ்ச்சியாக இருப்பதற்கு நாம் பொழுதுபோக்கு அம்சங்களையும் வேறு பல விடயங்களையும் தெரிவு செய்து கொள்கின்றோம். எங்களுடைய மகிழ்ச்சி, துக்கம், விரக்தி போன்ற உணர்வுகள் அனைத்துமே ஹோர்மோன்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதுவே நிதர்சனம். எனவே நாம் இந்த ஹோர்மோன்களை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மனிதனின் மகிழ்ச்சியை நிர்ணயம் செய்யும் ஹோர்மோன்களை எவ்வாறு அதிகரித்துக் கொள்வது என்பது குறித்த ஊடாடலாக இந்தப் பத்தி அமையப்பெறுகின்றது.

மனித உடலின் இரசாயன தொடர்பாடல்களைச் செய்யும் பதார்த்தமாக ஹோர்மோன்களை நாம் அடையாளப்படுத்த முடியும். உடலில் காணப்படும் பல்வேறு சுரப்பிகள் மூலம் ஹோர்மோன்கள் எமது இரத்தத்தில் கலக்கின்றன. அந்த ஹோர்மோன்களின் தொழிற்பாடுகள் மூலம் எமது மனித உடலானது அதற்கு ஏற்ற வகையில் துலங்குகின்றது. இது உடலின் பல்வேறு செயல்களைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

உடலில் ஹோர்மோன்கள் பல்வேறு தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றன. வளர்ச்சி மேம்பாடு, மெட்டபாலிசம் அல்லது செரிமானம் மற்றும் சக்தி உற்பத்தி இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம், மனநிலை, உணர்ச்சிகள், இரத்தத்தில் சர்க்கரையின் கட்டுப்பாடு, இனப்பெருக்கம் மற்றும் பாலியல் சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்களுக்கு இந்த ஹோர்மோன்களின் தொழிற்பாடு மனித உடலுக்கு அத்தியாவசியமாகின்றது.

நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் மன அழுத்தத்தினால் கவலையுடன் இருப்பதற்கும் இந்த ஹோர்மோன்களின் தொழிற்பாடு பிரதான ஏதுவாகின்றது.

இவ்வாறு தொழிற்படும் ஹோர்மோன்களில் சில உங்களது மகிழ்ச்சியில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? இந்த ஹோர்மோன்கள் மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஹோர்மோன்களாகும். இந்த ஹோர்மோன்களின் மூலம் மனதுக்கு மகிழ்ச்சியும் களிப்பு உணர்வும் ஏற்படும், இதனால் இவற்றை மகிழ்ச்சி



ஹோர்மோன்கள் என அழைக்கின்றனர். ஹோர்மோன்கள் நரம்புகள் ஊடாக தொடர்பாடல் செய்யக்கூடியவை என அவார்ட் மருத்துவக் கல்லூரி விவரிக்கின்றது.

### மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஹார்மோன் எது?

எமது இதயத்தில் மகிழ்ச்சி ஏற்படுத்துவதற்குத் தாக்கம் செலுத்தக்கூடிய நான்கு ஹோர்மோன்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை தொடர்பில் சர்வதேச உளவியல் நிறுவனங்களினால் தெளிவுபடுத்தும் நோக்கில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

டோபமைன், செரோடோனின், ஆக்சிடோசின் மற்றும் என்டோபின் ஆகிய நான்கு ஹோர்மோன்களே மனிதனின் மகிழ்ச்சியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன என ஆய்வா ளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஒவ்வொரு ஹோர்மோன்களும் எமது மகிழ்ச்சியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பது குறித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உளவியல் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி காந்தி ஹெட்டிகொட தெளிவு படுத்துகின்றார்.

### டோபமைன் (Dopamine):

டோபமைன் என்ற ஹோர்மோனின் பிரதான பணியாக, மூளையில் ஊக்கப்படுத்தக்கூடிய தொழிற்பாடுகளை மேம் படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

ஏதேனும் ஒன்றை செய்வதற்கான இலக்கிற்காக தொழிற்பட வதற்கு ஏதுவாகும் அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது இந்த டோபமைனின் செயற்பாட்டினாலாகும்.

இந்த ஹோர்மோன் மூலம் எமக்கு ஒரு இலக்கிற்கு அல்லது ஏதேனும் ஒரு செயற்பாட்டிற்கு எம்மை ஒருமுகப்படுத்தக் கூடிய வல்லமை உண்டு. எந்த ஒரு விடயத்தைச் செய்வ தற்கும் எமக்குள் அபிப்பிராயம் முக்கியமானதாகும். இது ஓர் இலக்கு நோக்கித் தொழிற்படுவதற்கு உதவுகின்றது.

உணவு உட்கொள்ளல், முகம் கழுவுதல், வீடு கூட்டுதல் ஆகிய ஏதாவது ஒரு தொழிற்பாடு இந்த நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டதாகும். அந்தச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நீண்ட கால நோக்கங்கள் உதாரணமாக பட்டம் ஒன்றை பெற்றுக் கொள்ளுதல் அல்லது வாழ்க் கையில் ஏதேனும் ஒரு இலக்கை நோக்கிச் செல்லுதல் என் பனவற்றைக் கட்டுப்படுத்துதல் டோபமைன் என்ற ஹோர்மோனின் மூலம் ஆகும் என கலாநிதி காந்தி ஹெட்டிகொட தெரிவிக்கின்றார்.

இதன் மூலம் எமது உள்ளத்தில் மகிழ்ச்சி, திருப்தி மற்றும் ஆர்வமிகுதி போன்ற உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு டோபமைன் ஹோர்மோன் தாக்கம் செலுத்துகின்றது என அவர் குறிப்பிடுகின்றார்.

டோபமைன் அளவு குறையும் போது அதனை அதிகரித்துக் கொள்வதற்கு சிலர் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின் றனர். அவ்வாறு ஈடுபடும் போது ஓர் விடயத்திற்கு அடிமையாக நேரிடுகின்றது. மதுபானம், போதைப் பொருள் புகைபிடித்தல், கணினி - தொலைபேசி விளையாட்டுக்கள் போன்றவற்றிற்கு அடிமையாகுதல் நேருகின்றது.

#### ஏதேனும் ஒன்றிற்கு அடிமையாகாது இயற்கையாகவே எவ்வாறு டோபமைன் அளவினை அதிகரித்துக் கொள்வது ?

டோபமைனின் அளவை அதிகரித்துக் கொள்வதற்குப் பிழையான விடயங்களுக்கு அடிமையாக வேண்டிய அவசியம் இல்லை. சிறிய சிறிய இலக்குகளை உருவாக்கிக் கொள்ளவும் உதாரணமாக வீட்டின் முற்றத்தைக் கூட்டித் துப்புரவு செய்தல். இவ்வாறு இந்த இலக்கினை அடை யும்போது உங்களது உடலில் டோபமைனின் அளவு அதிக ரிக்கும் என பேராசிரியர் ஹெட்டிகொட குறிப்பிடுகின்றார்.

மன அழுத்தம் உடையவர்களுக்கு முதலில் முற்றத்தைக் கூட்டி சுத்தம் செய்யுமாறும், உணவு ஒன்றை சமைக்கு மாறும், தேநீர் ஒன்றை தயாரிக்குமாறும், விலங்கு ஒன்றுக்கு உணவு வழங்குமாறும், இசையை செவிமடுக்குமாறும் மருத் துவர்கள் ஆலோசனை வழங்குவார்கள்.

இவ்வாறான எந்த ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டாலும் டோபமைனின் அளவு அதிகரிக்கும், இவ்வாறு செய்வதன் மூலம் ஒரு இலக்கை நோக்கி செயற்படுவதற்கு ஓர் அபிப்பி ராயம் உருவாகும். மேலும் இந்த டோபமைனின் அளவு நல்ல உறக்கத்திற்கு வழி அமைக்கின்றது.

உடலில் டோபமைனின் அளவினை அதிகரித்துக் கொள்ளக் கூடிய உணவு வகைகளாக தானியங்கள், வாழைப்பழம், முட்டை மற்றும் பாலுணவு வகைகளைக் குறிப்பிடலாம்.

### செரோடோனின் (Serotonin):

இந்த ஹோர்மோன் மனிதனின் உளப்பாங்கினை திறமாகப் பேணிக் கொள்வதற்கு உதவுகின்றது. இந்த ஹோர்மோன் எமது உலக நிலையை திறமாகப் பேணுவதற்கும் நல்ல உறக்கத்திற்கும், எங்களது உணவு சுவையை, உணவு விருப்பத்தை போதுமான அளவில் வைத்துக் கொள்வ தற்கும், உணவு செரிமானத்திற்கும் பங்களிப்புச் செய் கின்றது.

நாம் மகிழ்ச்சியாக இருக்கின்றோம் என்ற உணர்வு செரோடோனின் என்ற ஹோர்மோனினால் ஏற்படுகின்றது. அதாவது மகிழ்ச்சி, மன அமைதி, ஏக்கம் இன்மை, அச்ச மின்மை போன்றவற்றை ஏற்படுத்தி மனதை அமைதிப்படுத் துவதற்கு இந்த ஹோர்மோன் அவசியமாகின்றது.

மன அழுத்தம், ஏக்கம் போன்ற நோய் நிலைமைகளுக்காக வழங்கப்படும் மருந்து வகைகளில் இந்த செரோடோனின் என்ற பதார்த்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பி டத்தக்கது. குறிப்பாக மன நோய்களினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு இந்த வகை மருந்துகள் வழங்கப்படுகின்றன.

இந்த மன நலனை அல்லது உள ஆரோக்கியத்தைச் சிறந்த முறையில் பேணிப் பாதுகாப்பதற்கு இந்த ஹோர்மோன் நமக்கு உறுதுணையாகின்றது. ஒருவர் மகிழ்ச்சியாகவும் புத் துணர்ச்சியுடனும் இருப்பதற்கு இந்த செரோடோனின் என்ற

ஹோர்மோனின் சாதகமான அளவு தேவைப்படுவதாகவும் கவலையாகவும் மனவிரக்தியுடனும் இருக்கும் ஒருவருடைய செரோடோனின் அளவு குறைவாகக் காணப்படும் என கலாநிதி ஹெட்டிகொட தெரிவிக்கின்றார்.

### உடலில் செரோடோனின் அளவை எவ்வாறு அதிகரித்துக் கொள்வது?

இந்த ஹோர்மோனை அதிகரித்துக்கொள்வதற்கு நாம் இந்த சாதாரண விடயங்களை மேற் கொண்டாலே போதுமானது. நன்றாக சூரிய ஒளி படும் வகையில் இருப்பதன் மூலமே இந்த ஹோர்மோனை அதிகரிக்கச் செய்யமுடியும். குறிப்பாக நாம் 10 முதல் 15 நிமிடங்கள் இயற்கை சூரிய ஒளியில் இருக்க வேண்டும், இதன் மூலம் செரோடோனின் அளவை அதிகரித்துக் கொள்ள முடியும். குறிப்பாக காலை வேளையில் விட்டமின் D-ஐ பெற்றுக்கொள்ள முடியும் என ஆய்வா ளர்கள் பரிந்துரைக்கின்றனர். விட்டமின் D-ஐ பெற்றுக் கொள்ளும் நபர்கள் மிகவும் புத்துணர்ச்சி யுடன் இருப்பார்கள்.

மேலும் சாதாரண உடற்பயிற்சிகளை மேற்கொள்ளும் போதும் செரோடோனின் அளவினை அதிக ரித்துக் கொள்ள முடியும். அதாவது நடனமாடுதல், வேகமாக நடத்தல், நீச்சல் போன்ற உடலியக்க செயற்பாடுகளின் மூலமும் இந்த ஹோர்மோனை அதிகரித்துக் கொள்ள முடியும்.

மேலும் நன்றி உணர்வுடன் இருக்கும் போதும் இந்த ஹோர்மோன் அதிக அளவில் சுரக்கும் என்பது விசேட அம்சமாகும். எங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள விடயங்கள் தொடர்பில் நன்றி உணர் வுடன் இருப்பது அத்தியாவசியமாகின்றது. இதன்போது நாம் எமக்குக் கிடைக்கும் விடையங்களை நன்றியுடன் நினைவுபடுத்துவது அத்தியாவசியமாகின்றது. நாம் நாள்தோறும் நாளின் நிறைவிலும் மகிழ்ச்சி அடையக்கூடிய அனைத்து விடயங்கள் குறித்துப் பதிவு செய்து கொள்ள முடியும்.

ருசியான உணவை சாப்பிட்டாலோ, மகிழ்ச்சி ஏற்படக்கூடிய விடயங்கள் நடந்தாலோ அல்லது அவற்றை எழுதிக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். எமக்கு நாளொன்றில் பலர் உதவி செய் கின்றனர் அவ்வாறான விடயங்களையும், நமக்குக் கிடைக்கப்பெற்ற உதவிகள் குறித்தும் பதிவே டொன்றில் எழுதிக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் ஊடாக எமது உடலில் செரோடோனின் அளவை அதிகரித்துக் கொள்ள முடியும்.

அம்மா சோறு சமைத்துக் கொடுக்கும் போது, மனைவி தேநீர் தரும் போது போன்ற சிறு சிறு விடயங் களில்கூட நன்றி பாராட்டுவதன் மூலம் நாம் மகிழ்ச்சி அடைய முடியும்.

### செரோடோனின் ஹோர்மோனை அதிகரிக்க கூடிய உணவு வகைகள்:

முட்டை, சீஸ், சோயா சார்ந்த உற்பத்திகள் மற்றும் தானியங்கள் என்பன செரோடோனின் ஹார்மோனை அதிகரிக்கக் கூடிய உணவுகளாக அடையாளப்படுத்த முடியும்.

### ஒக்சிடோசின் (Oxytocin):

ஒக்சிடோசின் ஹோர்மோனைக் காதல் அல்லது அன்பு ஹோர்மோன் என அடையாளப்படுத்த முடியும். காதல் என்பது ரொமான்டிக் ரீதியான காதலை மட்டும் குறிக்கவில்லை. அன்பு, பாசம், பந்தம், நட்பு போன்ற விடயங்கள் இந்த ஒக்சிடோசின் ஹோர்மோன் ஊடாகக் கிடைக்கப்பெறு கின்றது. இந்த ஒக்சிடோசின் ஹோர்மோன் மிகவும் தனித்துவமான ஹோர்மோனாகும். உலகில் சிசு ஒன்று பிறக்கும் போது ஓர் உயிரினமாகப் பிறந்து அதன் பின்னர் தாய்ப்பாலை உட்கொள்வதன் மூலம் அது மனிதராக மாற்றம் பெறுகின்றது. இதற்குப் பாலுடன் கிடைக்கப்பெறும் ஒக்சிடோசின் ஹோர்மோன் முக்கிய ஏதுவாகின்றது. அதாவது தாய்ப்பாலில் அதிக அளவில் ஒக்சிடோசின் காணப் படுகின்றது. குழந்தை ஒன்று காதல், அன்பு, பந்தம் போன்றவற்றை முதலில் கற்றுக் கொள்கின்றது. காதலைப் பெற்றுக் கொள்வதற்கும் காதல் செய்வதற்கும் இந்த ஒக்சிடோசின் தாக்கம் செலுத்து கின்றது. இந்த ஹோர்மோனை ஆய்வாளர்கள் பிணைப்பு ஹோர்மோன் என அடையாளப்படுத்து கின்றனர்.

சரியான ஸ்பரிசத்தின் ஊடாகவும் ஒக்சிடோசின் ஹோர்மோன் அளவு உயர்வடைகின்றது என உள வியலாளர்கள் தெரிவிக்கின்றனர். சமூக தொடர்புகளைப் பேணுவதற்கு இந்த ஹோர்மோன் முக்கிய மாகின்றது. இந்த ஹோர்மோன் குறைபாடு உடையவர்கள் தனித்து இருக்க முயற்சிப்பார்கள், ஏனை யவர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவர்களுக்கு ஏனையவர்களின் அன்பு தேவைப்படுவ தில்லை. நம்பிக்கை, பச்சாதாபம் என்பனவற்றை அதிகரிக்கவும் மன அழுத்தம், ஏக்கம் போன்ற வற்றைக் குறைத்துக் கொள்வதற்கும் இந்த ஹோர்மோன் வழியமைக்கின்றது. ஒக்சிடோசின் ஹோர்மோன் பாதுகாப்பான உணர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு முக்கியமாகின்றது.





### ஒக்சிடோசின் ஹோர்மோனை அதிகரித்துக் கொள்வது எவ்வாறு ?

ஒக்சிடோசின் ஹோர்மோனை அதிகரித்துக் கொள்வதற்கு இலகுவான வழி தொடுகையாகும், இந்த விடயத்தைப் பிழையாக விளங்கிக் கொள்ள வேண்டாம். மனிதர்கள் அல்லது விலங்குகளை ஸ்பரிசிக்கும் போது ஒக்சிடோசின் அளவு அதிகரிக்கிறது. சரியான தொடுகை அதாவது கட்டிப்பிடித்தல், கைலாகு செய்தல் ஊடாக இரண்டு உடல்களுக்கு இடையிலான அன்பு பரிமாறப்படுகின்றது. இதனை காமமாகப் பார்க்கக்கூடாது இதில் அன்பு காணப்படுகின்றது. இதனாலேயே பெற்றோர் பிள்ளைகளை கட்டிப்பிடிக்க வேண்டும், அவர்களை அரவணைக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இதே போன்று குடும்ப உறுப்பினர்களுடன், நண்பர்களுடன், சமூகத்துடன் நல்ல நேரத்தைக் கழிப்பது அத்தியாவசியமாகின்றது. செல்லப்பிராணிகளை வளர்ப்பதும் இதற்கு ஒரு நல்ல தீர்வாகும். எனினும் அந்த விலங்கு உங்களால் கொஞ்சிக் குலாவக்கூடிய வகையிலான ஒரு விலங்காக இருக்க வேண்டும்.

கருணையாக இருத்தல், ஏனையவர்களுக்கு உதவுதல் போன்ற காரணிகளும் உங்களது இந்த ஹோர்மோனை அதிகரிப்பதற்கு உதவுகின்றது.

### எண்டோபின் (Endorphins):

எமது உடலில் இயற்கையாகவே வலியைக் குறைப்பதற்கு உருவாக்கப்படும் ஹோர்மோனே எண்டோபின் எனப்படும் ஹோர்மோனாகும். உடல் ரீதியாக எமக்கு ஏற்படக்கூடிய வலியைக் குறைப்பதற்கு இந்த எண்டோபின் ஹோர்மோனினால் முடிகின்றது. இது உடல்ரீதியான வலிகளைக் குறைப்பதற்கு முக்கியமாகின்றது.

மன உளைச்சல், உடல் உபாதைகள் ஏற்பட்டால் அவற்றை குறைப்பதற்கு இந்த ஹோர்மோன் முக்கியமாகின்றது. எமது உளநிலையை உயர்த்துவதற்கும் உடல் வலிகளை குறைத்துக்கொள்வதற்கும் உதவுகின்றது. உதாரணமாகக் காயம் ஒன்று ஏற்பட்டால் அப்பொழுது உடலின் வலி மோசமாகக் காணப்படும், அந்த வலியைத் தாங்கிக் கொள்வதற்கு இந்த எண்டோபின் ஹார்மோன் முக்கியமாகின்றது.

### எண்டோபினை எவ்வாறு அதிகரிக்கலாம்?

இந்த ஹார்மோனை அதிகரித்துக் கொள்வதற்கு உடற்பயிற்சிகளையும் மேற்கொள்வது அவசியமாகின்றது. உடற்பயிற்சிகளைத் தொடர்ச்சியாகச் செய்யும் போது வலிகளைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி எம்மில் உருவாகின்றது.

உடற்பயிற்சியில் ஈடுபடுவோரின் எண்டோபின் அளவு அதிகரிக்கின்றது. மேலும் சத்தமிட்டு சிரிப்பதன் மூலம் எண்டோபின் ஹார்மோனை அதிகரித்துக் கொள்ள முடியும் என கலாநிதி காந்தி ஹெட்டிகொட தெரிவிக்கின்றார். இதனையே லாஃப் தெரப்பி என அழைப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.

சிரிக்கும் போது எங்களது முகத்தின் தசைகளில் மாற்றம் ஏற்படுவதாகவும் இந்த மாற்றத்தின் ஊடாக மூளைக்கு சமிக்ஞை செல்வதாகவும் அது நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு தயார் என்பதை உணர்த்துவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
டார்க் சாக்லேட், மிளகாய், உறைப்பான உணவு வகைகள் ஊடாக இந்த எண்டோபின் ஹார்மோன் அதிகரிக்கின்றது.

இந்த ஆய்வு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள உணவு வகைகள் உங்களுக்கு வெறும் நோய்களுக்குப் பாதகமாக அமையக்கூடும் எனவே அவ்வாறான நிலைமைகள் இருந்தால் மருத்துவரின் ஆலோசனையுடன் இந்த உணவு வகைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எனவே மனித உடலின் இரசாயன மாற்றங்கள் பற்றிய புரிதலுடன் மகிழ்ச்சியாய் இருக்கவும் எம்மைச் சுற்றியிருப்போரை சந்தோசத்தில் திளைக்கச் செய்யவும் முயற்சிப்போம்.



jeyaseelan.s@thaiveedu.com

சகாதேவன் சஜீபன்

# மனந்திறந்து பேச உதவும் ஒருவரே நட்புசார் உதவியாளர்...

மனநலச் சிக்கல்களை எதிர்கொள்ளும் பலருக்கு உளநல நிபுணர்களின் உதவி தேவைப்படும் போதிலும், பெரும்பாலானநேரங்களில் எதிர்பார்ப்பது, தங்களைப் புரிந்து கொண்டு நாம் சொல்வதைக் கேட்கக்கூடிய ஒருவர் மட்டுமே ஆவார். ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளைத் தாங்களே தைரியமாக எதிர்கொள்வதற்கான வலிமை இருந்தாலும், சில நேரங்களில் மற்றவரிடம் உதவி பெறுவதே அவசியமாகிறது. குறிப்பாக, தன்னால் முடியாத தருணங்களில், அதை உணர்ந்து மற்றவரிடம் உதவியை நாடுவதே உண்மையான பலமாகும். அந்தவகையில், நெருக்கமான நண்பர்கள், குடும்பத்தினர், ஆசிரியர்கள், சமூகசேவையாற்றுபவர், மதத்தலைவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள சமூகப்பணியாளர்கள் போன்றோர் நட்புசார் உதவியாளராக செயற்படமுடியும்.

நட்புசார் உதவியளித்தல் என்பது உளவியல் சிகிச்சை அல்ல, உணர்வுபூர்வமான ஆதரவைத்தரும் ஒரு உறவு நிலையாகும். பாதிக்கப்பட்ட நபரின் உரிமையும், பாதுகாப்பும் பாதிக்கப்படாதவாறு, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஒருவர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருக்கும்போது, அவரை அன்புடன் அணுகி, எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்காமல், நேர்மையாகப் பேசவேண்டும். இந்த உரை யாடல் ரகசியமாகவும், விமர்சனமின்றியும் இருக்கவேண்டும். அவர்களை வழிநடத்துதல் முக்கியம் என்றாலும், அந்த வழிநடத்தல் அழுத்தமற்றதும், அவர்களின் சம்மதத்துடன் நடைபெறும் முறையில் இருக்கவேண்டும். உண்மையான நட்பும் பரிவு நிறைந்த அணுகுமுறையும்தான் ஒருவருக்கு நம்பிக்கையையும் பாதுகாப்பினையும் அளிக்கக்கூடிய வலுவான ஆதரவாக அமையும்.

நட்புசார் உதவியாளரிடம் உதவி பெறுவோர் உடல், உள, நடத்தை தொடர்பான பல்வேறு அறிகுறிகளை வெளிப்படுத்தலாம். ஒருவரின் மனநிலை மற்றும் உணர்ச்சிநிலை பாதிக்கப்பட்டபோது, அது அவருடைய உடல் நலத்திலும், சிந்தனை முறைகளிலும், நடத்தைகளிலும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, உடல் சார்ந்த அறிகுறிகளில் உடல் வலி, களைப்பு, சோர்வு, எடை குறைவு போன்றவை காணப்படலாம். இதுபோன்ற உடல் பிரச்சினைகள் சில நேரங்களில் மன அழுத்தத்துடன் தொடர்புடையதல்லாமல் தோன்றினாலும், உண்மையில் உளநல பிரச்சினைகளால் ஏற்படும் தாக்கங்களாக இருக்க வாய்ப்பு உள்ளது. உணர்வு சார்ந்த அறிகுறிகள் பயம், சோகம், பதற்றம், குற்றவுணர்வு, எளிதில் அழுதல், தன்னம்பிக்கை குறைவு போன்ற உணர்ச்சிப் பிரச்சினைகளை உள்ளடக்கியவை. இவை ஒருவரின் மனநிலையை பாதிக்கக்கூடியதாக அமையலாம்.



tg.theeban@gmail.com



**"மாறிவரும் சமூகச்சூழலில் குழந்தைகள் உள்ளிட்ட பலர் உளவியல் சிக்கல்களை சந்திக்கிறார்கள். இதனால் மனநலம் பாதிப்பவர்கள் அதிகரித்து, கவனமின்மை, தற்கொலை எண்ணங்கள் போன்ற மோசமான நிலைகள் தோன்றுகின்றன."**

அறிகை அல்லது சிந்தனை மாற்றங்கள் எனும் போது தெளிவற்ற சிந்தனை, தற்கொலை எண்ணம், குழப்பமான மன நிலை, தன்னை குற்றவாளியாகக் கருதல் போன்றவற்றையும் குறிப்பிடலாம். நடத்தை சார்ந்த அறிகுறிகளில் ஆர்வமின்மை, சமூகத்திலிருந்து தனிமை பெறுதல், அடிக்கடி கோபம் கொள்ளல், தற்கொலை முயற்சி, பாடசாலை அல்லது பணியிடத்திற்கு செல்ல மறுத்தல், உணவு மற்றும் தூக்கத்தில் மாற்றம் போன்ற செயற்பாடுகளும் தோன்றலாம்.

இத்தகைய சூழ்நிலைகளை நாம் கவனித்து, பாதிக்கப்பட்ட நபர்களிடம் செவிமடுக்கவும், அவர்களிற்கு புரிந்துணர்வு புரிவதும், தேவையானபோது உளநல நிபுணர்களை தொடர்புகொள்ளுமாறு வழிநடத்துவதும் மிக முக்கியமாகும். ஆகவே, நட்புசார் உதவியாளர்கள் இவ்வாறு வெளிப்படும் உடல், உணர்வு, சிந்தனை மற்றும் நடத்தை சார்ந்த அறிகுறிகளைக் கவனித்து, அக்கறையுடன் அணுகி ஆதரவு வழங்க வேண்டும்.

நாம் அனைவரும் வாழ்வின் சவால்களை தனியாக எதிர்கொள்ளும் திறன் உடையவர்கள் என்ற நம்பிக்கையுடன் இருந்தாலும், சில சமயங்களில் மற்றவரிடம் உதவி பெறுவது அவசியமாகிறது. குறிப்பாக தீவிர மன அழுத்தம், மனச்சோர்வு அல்லது தீங்கு விளைவிக்கும் எண்ணங்கள் உள்ளவர்கள் உடனே உரிய உளவியல் சார்ந்த உதவியை நாட வேண்டும். புறக்கணிப்பு மற்றும் சமூக ஒதுங்கல் போன்றவை மனநல பாதிப்பை அதிகரிக்கக்கூடியவை என்பதால், பாதுகாப்பான ஆதரவு தரும் அமைப்புகளை உருவாக்கி, நட்புசார் உதவியாளர்கள் மூலம் ஆதரவு வழங்குதல் மிக அவசியம். இவ்வாறு மனநலம் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு நேர்மையான ஆதரவு வழங்குவதுதான் நட்புசார் உதவியாளர்களின் முக்கிய பணியாகும்.

நட்புசார் உதவியாளர் என்ன செய்யக்கூடாது என்று அறிவது அவசியம். முதலில், உளநலம் குறித்த உதவியை நாம் தருவோம் என்று கூறி, தவறான எதிர்பார்ப்புகளை உருவாக்கக் கூடாது. ஒருவரின் பிரச்சினைகளை நாமாகக் கேட்க முயற்சிக்கக் கூடாது, அவர்கள் பகிர விரும்பினால்தான் பேச அனுமதிக்க வேண்டும். பிறரின் சுதந்திரத்தை மதிக்க வேண்டும். அவர்களது கதைகளைவைத்து முடிவெடுக்க முயற்சிக்க கூடாது. 'நான் உங்களுக்காக அனைத்தும் செய்யமுடியும்' எனத் தவறான நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடாது. பொருத்தமற்ற வார்த்தைகள் அல்லது குறுக்கு விசாரணைகள் செய்வதைத் தவிர்க்கவேண்டும். 'நீங்கள் வறுமையில் இருக்கிறீர்கள்', 'சோகமாய் இருக்கிறீர்கள்', 'கஸ்டப்படுகிறீர்கள்' போன்ற மதிப்பீடுகள் செய்யக்கூடாது. மனம் திறந்து பேசவைப்பதற்காக நம்மிடம் நம்பிக்கைவைக்க அவர்களை வற்புறுத்தக் கூடாது. நாமே உளவளத்துணையாளராக மாறி ஆலோசனை வழங்கும் பொறுப்பை ஏற்கக் கூடாது. அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பது நம் வேலை அல்ல. தீர்வுகளை நாமே அளிக்க முயற்சிக்க கூடாது.

பெரும்பாலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்படையாகத் தெரியாமல், சாதாரண வாழ்க்கையில் இருந்தாலும், மனச்சோர்வு, பதற்றம், போதைப்பழக்கம், பாலுறவு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மாறிவரும் சமூகச்சூழலில் குழந்தைகள் உள்ளிட்ட பலர் உளவியல் சிக்கல்களை சந்திக்கிறார்கள். இதனால் மனநலம் பாதிப்பவர்கள் அதிகரித்து, கவனமின்மை, தற்கொலை எண்ணங்கள் போன்ற மோசமான நிலைகள் தோன்றுகின்றன. பேரழிவுகளுக்குப் பிறகு ஏற்படும் அதிர்ச்சி, கவலை, மனநிலையிலான மாற்றங்கள் குடும்ப உறவினர்களிலும் நண்பர்களிலும் தோன்றலாம். இத்தகைய நிலைகளில் உங்களுக்காக அக்கறையுடன் இருப்பவர்களை அணுகி மனம் திறந்து பேசுவது அவசியம். இதன் மூலம், நட்புசார் உதவியாளராக நாம் ஒருவரின் மனநல பாதிப்பில் இருந்து மீள நன்றாகக் கவனித்து, அவர்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவதே முதன்மையான பணியாகும். இத்தகைய புரிதல் மற்றும் ஆதரவு கொண்ட சமூக சூழலே மனநலத்தை மேம்படுத்தும் ஒரு பாதுகாப்பான இடமாக மாறும் என்பதில் ஐயமில்லை. எனவே, ஒவ்வொருவரும் ஒரு சிறந்த கேட்பவராகவும், ஆறுதலளிக்கக்கூடியவராகவும் உருவாக முனைந்தால், ஒரு மனநலம் வாழும் சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.



Sajeepan.S@thaiveedu.com



thanavishnu@gmail.com

# புதிய கல்விச் சீர்திருத்தமும் இலங்கையின் எதிர்காலமும்

**– அகமட் பிஸ்தாமி**

இலவசக் கல்வியையும் மருத்துவ சேவைகளையும் வழங்கிவரும் நாடுகளில் இலங்கைக்கு முக்கியமான இடமுண்டு. பாலர் பருவம் முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குவது இலங்கையின் சிறப்பம்சங்களில் ஒன்று. கட்டாயக் கல்வி நடைமுறையில் உள்ள தெற்காசிய நாடுகளில் இலங்கையும் ஒன்று.

அந்த வகையில் 2026-ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட உள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தைப் பொறுத்தளவில் (Transform education - transfer Sri Lanka)

கல்வி முறைமையில் வேரியல் மாற்றம் (root change) ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமாக ஒட்டுமொத்த இலங்கையையும் மாற்றுவதற்காக இத்திட்டம் வரையப்பட்டிருக்கின்றது.

மேற்படி திட்டம் 2024-ஆம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் எதிர்பாராத வகையில் பரவலடைந்த கொவிட்-19 தொற்று, இலங்கையில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு போன்ற காரணங்கள் இக்கலைத்திட்ட அமுலாக்கத்தைத் தள்ளிப்போட வைத்துள்ளது.

> **‘ உண்மையில் ஒரு நாட்டை தலைகீழாக கவிழ்க்கக்கூடிய கட்டமைப்பினைக் கல்வி கொண்டுள்ளது. இதற்கான களமாக பாடசாலைகள் விளங்குகின்றன. பாடசாலையில் வளங்கப்படுகின்ற கல்வி எத்தகையது என்பதனைக் கொண்டே நாட்டின் வளர்ச்சி தீர்மானிக்கப்படக் கூடியதாக உள்ளது. ’**

உண்மையில் ஒரு நாட்டை தலைகீழாக கவிழ்க்கக்கூடிய கட்டமைப்பினைக் கல்வி கொண்டுள்ளது. இதற்கான களமாக பாடசாலைகள் விளங்குகின்றன. பாடசாலையில் வளங்கப்படுகின்ற கல்வி எத்தகையது என்பதனைக் கொண்டே நாட்டின் வளர்ச்சி தீர்மானிக்கப்படக்கூடியதாக உள்ளது. குறிப்பாக இலங்கை போன்ற இலவசமாக வழங்கப்படுகின்ற கட்டாய கல்வி முறைமை உள்ள நாட்டிலே கல்வி முறைமைகளை, கல்வித் திட்டங்களை மாற்றுவதனூடாக மாணவர்களது அறிவு, திறன், சிந்தனை, எதிர்காலம் பற்றிய பார்வை போன்ற வற்றிலே பரந்து விரிந்த நீண்ட விளைவைத் தரக்கூடிய மாற்றங்களை உருவாக்கலாம் என்பது மறுக்க முடியாத உண்மை. அதுமட்டுமல்லாமல், எளிய துறை சார்ந்த நிபுணர்களால் உருவாக்க முடியாத மாற்றத்தை ஆசிரியர்களால் மிகச்சிறந்த வகுப்பறை முகாமைத்துவதிற்கூடாக ஏற்படுத்திவிட முடியும் என்பது உளவியல் சார்ந்த தத்துவார்த்த உண்மை.

உண்மையில் நவீன கல்வி குறித்தான பார்வைகளைப் பொறுத்தளவில் அது அறிவைத் திணிக்கின்ற, தகவல்களை மனனம் செய்கின்ற நிலையில் இருந்து விடுபட்டு மனித வாழ்வை ஒழுங்கமைத்து வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றைக் கட்டமைப்பதற்கான பணியையே செய்து வருகின்றது. ஒருவரிடம் நிரம்பி வழிகின்ற அறிவை வெறுமனே இன்னொருவருக்கு நகர்த்தி விடுகின்ற, கையளித்து விடுகின்ற பாரம்பரிய கல்வி முறைமைகள் நவீன கல்வியுலகிற்குப் பொருத்தமானதாக இல்லை. அதனைப் புதிய தலைமுறையினர் ஏற்றுக் கொள்ளவோ ஜீரணித்துக் கொள்ளவோ தயாராகவும் இல்லை.

புதிய தலைமுறையின் இயல்புகள், தேவைகள், ஆர்வங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு இந்த smart content based reform அமைந்திருப்பது சிறப்பானதாகும். கல்வி என்பது வாழ்க்கைக்குத் தயாராகின்ற அறிவுபூர்வமான திறன் சார்ந்ததொரு விருத்தி நிலை. அது உடல், அறிவு, ஆன்மா, சிந்தனை, மனவெழுச்சி, சமூக திறன்கள் தலைமைத்துவ ஆற்றல்கள் உட்பட அனைத்துத் துறை சார்ந்தும் பரிபூரண விருத்தியை உருவாக்க முற்படுவதோடு வாழ்வை எதிர்கொள்வதற்கான தயார் நிலையை வழங்கக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகிறது.

மனித வாழ்வை சீரமைக்கத் தேவைப்படுவதெல்லாம் உடன்பாடான சிந்தனைகள்தான். ஒருவனுக்குத் தேவையான ஊக்க சக்தியாக கல்வி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அவனுடைய எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும். கல்வி என்பது ஒருவன் சமூகத்தில் உடன்பட்டு வாழக்கூடிய அறிவையும் ஆற்றலையும் வழங்குவது. அத்தகைய கல்வி பரீட்சை என்ற அச்சமூட்டும் கலைத்திட்டத்தின் ஊடாக கற்போனுக்கு வாழ்நாள் பயத்தை ஏற்படுத்துகின்றது. இத்தகைய கலைத் திட்டத்தை இன்றைய மாணவ பரம்பரையினர் ஒருபோதும் விரும்புவதில்லை.

தத்தமது ஆசை அபிலாசைகள், எதிர்பார்ப்புகள், எத்தனிப்புகள், துறை சார்ந்த உள்ளார்ந்த விருப்புக்களுக்கு ஏற்றாற் போன்ற கலைத்திட்டத்தை, பாட நெறிகளை, பயிற்சிகளைத்தான் அவர்கள் பெற்றுக்கொள்ள ஆவலோடு காத்திருக்கின்றனர் என்பதனை இந்தப் புதிய கலைத்திட்டத்தின் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

அந்த வகையில்தான் கனிஷ்ட இடைநிலை வகுப்பான தரம் 6 முதல் மொடியுல் வடிவிலான கற்றல் முறைமைக்குப் பரிணாமம் பெறுவதாக இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தம் அமைகின்றது (Module based learning approach).

4.0 Education எனப்படும் உலகளாவிய கல்விசார் அணுகுமுறைத் தத்துவத்துக்கு மிக நெருக்கமான முறையில்தான் இந்தக் கலைத்திட்ட மறுசீரமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

21-ஆம் நூற்றாண்டு வேண்டி நிற்கின்ற Digital மயப்படுத்தப்பட்ட தலைமுறைக்கு உகந்தாற் போல் அவர்களிடம் சமகால உலகின் சவால்களை எதிர்கொள்ள, கடந்து செல்ல, சாதிக்கத் தேவைப்படுகின்ற சகல உடல் உள சிந்தனை மனவெழுச்சிசார் திறன்களையும் வெளிக்கொணர்வதோடு அவர்களுக்குள் புதைந்து கிடக்கும் ஆற்றல்கள், திறன்கள் போன்றவற்றையும் சமகால சவால்களை எதிர்கொள்வதற்குப் பயன்படுத்துவதற்குரிய களத்தை உருவாக்கிக் கொடுப்பதும் இப்புதிய கலைத்திட்ட மாற்றத்தின் பிரதான நோக்கமாகும்.



**“கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் ஆசிரியர் மாணவர் இடைவெளிகள் நிச்சயம் சீர் செய்யப்படும். இணைய வழியிலும் இணைய வெளியிலும் மாணவர்களை கையாளக் கூடிய ஆற்றல் திறன் மிக்க டிஜிட்டல் ஸ்மார்ட் ஆசிரியர்களால் மட்டுமே இந்த அல்பா ஜெனரேஷனைக் கையாள முடியும்.”**

பரீட்சை மையப்பட்ட மனக்கட்டமைப்பிலிருந்து (exam based mindset) முழுமையாக விடுபட்டு Smart content அடிப்படையிலான மொடியுல் வடிவங்கள் (module) உள்ளடக்கங்கள் (contents) மதிப்பீட்டு, கணிப்பீட்டு (evaluation and assessment) முறைகள் புள்ளி வழங்கல் முறைகள் போன்றவை உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

தவிரவும், இவற்றை முன்வைப்பதற்காக அவர்களுக்கு உகந்தாற் போல் கற்றல் கற்பித்தல் வளங்களை, முறைமைகளைக் கையாள்கின்ற திறன்களும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்ற நிலை காணப்படுகிறது.

குறிப்பாகக் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் ஆசிரியர் மாணவர் இடைவெளிகள் நிச்சியம் சீர் செய்யப்படும். இணைய வழியிலும் இணைய வெளியிலும் மாணவர்களை கையாளக் கூடிய ஆற்றல் திறன் மிக்க டிஜிட்டல் ஸ்மார்ட் ஆசிரியர்களால் மட்டுமே இந்த அல்பா ஜெனரேஷனைக் கையாள முடியும் என்பதற்குப் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பு நிச்சயம் வழியமைக்கும்.

மாணவர்களது உள்ளார்ந்த திறன்களுக்கு ஏற்ற கள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அந்தந்தத் துறைகளில் தமது கற்றலைத் தொடரவும் சாதனைகளை நிலைநாட்டவும் திறன்களுக்கு ஏற்றாற் போல் துறைகளைத் தெரிவு செய்து அதிலே காலூன்றவும் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவும் இக் கலைத்திட்டம் வழியமைக்கும்; மாத்திரமல்ல தத்தமது திறன்களுக்கு ஏற்ற தொழில்துறைகளைத் தேர்வு செய்து கொண்டு அதனை நோக்கி ஆர்வத்தோடு நகர்வதற்கும் இந்தக் கலைத்திட்டம் உதவி செய்யும்.

அவ்வாறே இலங்கைப்பிரஜை என்ற நிலையில் சிந்திப்பதை கடந்து நான் ஒரு சர்வதேச டிஜிடல் ஸ்மார்ட் பிரஜை (Digital smart citizen) என்ற பரந்துபட்ட அகன்ற பார்வையை ஒவ்வொரு மாணவருக்குள்ளும் உருவாக்கும். இது ஆரம்பத்திலேயே மாணவர்களது சிந்தனையை விசாரிக்கின்ற, கூட்டாகச் சிந்திப்பதற்குத் தூண்டுகின்ற தத்துவார்த்த ரீதியாக விடயங்களை அலசி ஆராய்ந்து தீர்வு காணத் தூண்டுவதாக அமைகிறது. மட்டுமன்றி, சர்வதேச பிரஜை ஒருவர் பெற்றிருக்க வேண்டிய International ethics and etiquette போன்றவைகளைப் பாடசாலைகளில் இருந்தே கற்றுக் கொள்ளவும் குழுவாக வேலை செய்யவும் அடுத்தவர்களைப் புரிந்து கொள்ளக்கூடிய, இணைந்து பணியாற்றக்கூடிய, விட்டுக் கொடுக்கக்கூடிய தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படக்கூடிய பண்புகளையும் விருத்தி செய்யும்.

மொத்தத்தில் இப்போதைய கலைத்திட்டம் நிச்சயம் இலங்கை பிரஜைகளின் மனக்கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதோடு சர்வதேச தரம் வாய்ந்த சாதனைகளை நிலைநாட்டுவதற்கும் இலங்கையை சர்வதேச தரம் கொண்ட கல்விப்புல பின்னணி உள்ள நாடாக உயர்த்துவதற்கும் துணை நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை.



bisthamy.ahamed@thaiveedu.com

# சிந்தனைக் களம்
## (இசை, நடனம்)

**இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்**
**Zoom ID: 827 7792 3815 Passcode: 838 866**



**சிறப்பு நிகழ்ச்சி : 9**

உரைப் பொருள்:
***'நாட்டிய மரபில் அடவுகள்'***

உரையாளர்:
**'கலைமாமணி' Dr. ஸ்ரீலதா வினோத்**
(Artistic director of Anthara Centre of Performing Arts.
Managing trustee and President of Prayathnam

17 ஜனவரி 2026 சனிக்கிழமை 8:00pm-10:00pm (கனடா-ரொறன்ரோ)
17 ஜனவரி 2026 சனிக்கிழமை 5:00pm-7:00pm(கலிபோர்னியா)

18 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை 6:30am - 8:30am (இலங்கை, இந்தியா)
18 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை 12:00am-2:00pm(சிட்னி)

9

# பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

# அவமதிப்பு இல்லாத கோபம்

- எஸ்.கே.விக்னேஸ்வரன்

"

***என் நண்பன் மீது***
***எனக்குக் கடுமையான கோபம்;***
***ஆயினும் அதைநான்***
***அவனிடம் சொன்னேன்,***
***என் கோபம் மறைந்து போனது!***
***என் எதிரியின் மீதும்***
***கடுங்கோபம் இருந்தது;***
***ஆயினும் அதைநான் சொல்லவேயில்லை,***
***என் கோபம் வளர்ந்து வந்தது!***

- வில்லியம் பிளேக் -

"



tg.theeban@gmail.com

**சீற்றத்தின் ஒலி:**

கோபத்தின் தன்மையை, அதன் அனைத்து நுணுக்கங்களை யும் வெளிப்படுத்த ஆங்கில மொழியில் (இது, தமிழ் உட்பட பொதுவாக எல்லா மொழிகளுக்கும் பொருந்தும்.-மொ-ர்) ஏராளமான வார்த்தைகள் பாவனையில் உள்ளன:

நாம் சங்கடமாக, அதிருப்தியாக, வெறுப்படைந்த, ஆத்திர மடைந்த, விரக்தியடைந்த, மோசமடைந்த, திகைத்துப்போன, மலைத்துப்போன, நம்பிக்கையிழந்த, எரிச்சலடைந்த, கோப மடைந்த, கொதிப்படைந்த, சீற்றம் கொண்ட விசரேறிய, சூடே றிய, வெறிகொண்ட என்று பலவகையான கோபங்கொண்ட நிலைகளைச் சந்தர்ப்பங்கருதிப் பயன்படுத்துகிறோம். கோபம் (அதன் தன்மையைப் பொறுத்து) நம் பார்வையை பல நிறங் களின் கோலமாக ஆக்கிவிடுகிறது: கோபத்தால் நாம் வெளிறியும், கோபத்தால் சிவந்தும், கறுத்தும் உருமாறு கிறோம். நாம் சிவப்பு நிறத்தைப் பார்க்கிறோம்; ஆனால் நம்மால் நேராகப் பார்க்க முடிவதில்லை; நம் கண்கள் பார் வையிழந்து, பார்வையற்றவர்களாகிவிடுகிறோம். கோபத் தால் கொந்தளிப்புடன் வாழ்கிறோம்; ஆத்திரப்படுகிறோம்; கண்கள் நெருப்பைக் கக்குகின்றன. கோபம் என்பது ஒரு மனப்பிறழ்வு நிலை: நாம் முகம் சுளிக்கிறோம், முகம் கறுக் கிறோம், கைமுட்டிகளைப் பிசைகிறோம், நாசித் துவாரங்கள் நடுங்குகின்றன, காதுகள் கூசுகின்றன, இரத்தம் கொதிக் கிறது, முழு உடலும் நடுங்குகிறது, உதடுகள் துடிக்கின்றன. கோபம் வரும்போது, நாம் நம்மைப் போலல்லாமல் ஆகிவிடு கிறோம்: கொதிக்கிறோம், புகைக்கிறோம், கசங்குகிறோம், வெயிலில் அலைகிறோம், வெடித்துச் சிதறுகிறோம். கொதிக்க வைக்கிறோம், தலைக்கு மேலாக அண்ணாந்து மேல் நோக்கி ஊதுகிறோம்; மூச்சில் அனல் பறக்கிறது. அடிக்கடி எமது கைப்பிடியைத் தவறவிடுகிறோம். கூரை யைத் தாக்குகிறோம், கூரையை உயர்த்துகிறோம், நெருப்பும் கோபமும் எங்கள் சுவாசமாகிறது; ஆவேசப்படுகிறோம், கூச் சலிடுகிறோம்; கொடூரமானவர்களாகிறோம்.

**கோபத்தை நோக்கிய அணுகுமுறைகள்:**

அன்றாட வாழ்க்கையின் முரண்பாடுகளில், கோபத்தைப் பற்றிய நமது அணுகுமுறையை விட ஆச்சரியமானது எதுவும் இல்லை. எங்களிடம் எவ்வளவோ வளமான கோபச் சொற்க ளஞ்சியம் உள்ளது. ஆனாலும் கோபத்தை அடக்க நாம் மிகவும் கடினமாக முயற்சி செய்கிறோம். அதைத் தொடர்ந்து தவறாகக் கையாளுவதன் மூலம், ஒரு முழுமையான, இயற் கையான உணர்ச்சி, அசாதாரணமான ஒன்றாகத் தோன் றும்படி செய்யப்பட்டுள்ளது. பல பெற்றோர்கள் கோபத்தை ஒழுக்கக்கேடானதாகக் கருதுகிறார்கள். குழந்தைப் பருவத்தி லிருந்தே, அவர்கள் கோபத்தை வெளிப்படுத்துவதற்காகக் குழந்தைகளை, குற்ற உணர்ச்சியடையச் செய்கிறார்கள். இதனால், கோபப்படுவது கெட்டது என்று குழந்தைகள் உறுதியாக நம்புகிறார்கள்.

தங்கள் குழந்தை கோபமாக இருக்கும்போது பெற்றோர்கள் என்ன சொல்கிறார்கள்? தாய்மார்கள் குழு ஒன்று இந்தக் கேள்வியைப் பற்றி விவாதித்தது. அவர்கள் தங்கள் குழந் தைப் பருவத்தை நினைவு கூர்ந்தனர். அத்துடன், அவர் களின் பெற்றோர் கொந்தளிப்பான உணர்ச்சிகளுக்கு - மனக் கசப்பு, கோபம், வெறுப்புணர்வு என்பவற்றுக்கு - எவ்வாறு எதிர்வினை ஆற்றினார்கள் என்பதை இப்படி விளக்கினர்:

**திருமதி.** A: என் தந்தை நான் கோபப்படுவதைத் தடை செய்தார். 'உன் அம்மா மேல கோபப்பட உனக்கு யார் உரிமை கொடுத்தது?. நீ யாரென்று நினைக்கிறாய்?' என்று அவர் கேட்டது இன்னமும் என் காதில் விழுகிறது.

**திருமதி.** B: என் அப்பா நல்லவர். நான் கோபப்படும் போதெல்லாம், நான் உண்மையில் கோபப்படவில்லை என்று அவர் எனக்கு விளக்கினார். 'நீ சோர்வாகவும் வருத்தமாகவும் இருக்க வேண்டும். அதனால்தான் நீ உன் சகோதரனிடம் மிகவும் இரக்கமற்றவனாக இருந்தாய். கொஞ்சம் ஓய்வெடு, நீ நன்றாக உணருவாய்.'

**திருமதி.** C: என் அம்மா என்னிடம் சொன்னார்: 'உனக்குள் இரண்டு பேர் இருக்கிறார்கள், ஒன்று தேவதை மற்றது ஒரு பிசாசு. நான் கோபப்படுகின்ற போதெல்லாம், 'உனக்குள் இருக்கும் பிசாசுதான் செயற்படுகிறது' என்று சொன்னார்.

**திருமதி.** D: நான் ஏதாவது மோசமான விஷயத்தைச் சொன்ன போதெல்லாம், என் அம்மா சொல்வார்: 'நல்ல குழந்தைகள் அப்படிப் பேச மாட்டார்கள். இத்தகைய உணர்வுகளுக்கு அப்பால் உயர்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.' இதன் பிறகு நான் இன்னும் மோசமாக உணர்ந்தேன்.

**திருமதி.** E: என் அம்மா கோபத்தின் எந்தவொரு அறிகுறிகளையும் விடாமல் அடக்கினார். கடுமையான வார்த்தைகளையும் அசிங்கமான காட்சிகளையும் அவர் வெறுத்தார். நான் ஒரு முறை என் சகோதரியிடம் அவளை வெறுக்கிறேன் என்று சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. என் அம்மா கிட்டத்தட்ட மயக்கமடைந்தார். அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று அவர் என்னை எச்சரித்தார். 'நீதான் ஒரு சகோதரி வேண்டும் என்று கேட்டாய்,' என்று அவர் சொன்னார்: 'இப்போது உனக்கு ஒரு சகோதரி இருப்பதால், நீ அவளுடன் அன்பாக இருக்க வேண்டும் - எப்போதும் தான்.' ஆனால் இன்றுவரை, நான் என் சகோதரியை வெறுக்கவே செய்கிறேன்.

**திருமதி.** F: நான் கோபமாக இருக்கும்போது, என் தந்தை என்னைக் கேலி செய்வார். 'கோபம், கோபம், கோபம்' என்று அவர் கூறுவார். அது என்னை மேலும் கோபப்படுத்தியது. பின்னர் அவர் என்னைத் தண்டிப்பார். நான் பல மணிநேரம் என்னுடைய அறையில் மிகுந்த துயரத்துடன், எல்லோரும் இறந்துவிடவேண்டுமென எண்ணிக் கொண்டு இருந்தேன்.

இந்த நினைவுகள் சோகமானவை. அவை நல்ல நோக்கங்களையும் துக்ககரமான விளைவுகளையும் கூறுகின்றன. இந்த நினைவுகூரல் கதைகளில் நமது அறிதலுக்கான படிப்பினை உள்ளது: பழைய உணர்வுகளை திரும்பப் பெற முடியாது. அவை நமது வாழ்க்கையை நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ தொடர்ந்து பாதிக்கத்தான் செய்கின்றன. கோப உணர்வுகளைப் பகுத்தறிவு மூலம் விளக்குதல், மறுத்தல், அச்சுறுத்துதல் அல்லது ஒழுக்கப்படுத்துதல் மூலம் நிவர்த்தி செய்ய முயல்தல் பயனற்றது. ஒருவரது கோப உணர்வுகள் அவர் தண்டிக்கப்படும்போது மறைந்துவிடுவதில்லை. கொந்தளிப்பான ஆற்றோட்டத்தைப்போல வலுவான உணர்ச்சிகள், நியாயப்படுத்தக் கூடியவையோ அல்லது அவை இல்லாத இடத்திலிருந்து அவைபற்றிப் பேசவோ முடியாது. அவற்றின் சக்தியை அடையாளம் கண்டு மதிக்க வேண்டும், மேலும் அவற்றின் கோபம் திசைதிருப்பப்பட்டு வழிநடத்தப்பட வேண்டும். இல்லையெனில் அதனால் நடப்பதெல்லாம் பேரழிவைச் சந்திப்பதாக மட்டுமே இருக்கும்.

## கோபம் இங்கேதான் இருக்க வேண்டும்:

நம்முடைய சொந்தக் கோபத்தைச் சமாளிப்பதற்கு, முதலில் கோபம் இருக்கத்தான் செய்தது என்பதை நாம் வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, கருணையுடன் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஐம்பது மில்லியன் அமெரிக்கப் பெற்றோர்களும் தவறாக இருக்க முடியாது. ஆயினும் அவர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகள் மீது கோபப்படுகிறார்கள். நமது கோபத்திற்கு ஒரு நோக்கம் உள்ளது; அது நமது அக்கறையைக் காட்டுகிறது. சில தருணங்களில் நாம் கோபப்படத் தவறுவது அன்பை அல்ல, அலட்சியத்தைக் குறிப்பதாகியும் விடுகிறது. நேசிப்பவர்கள் கோபத்தைத் தவிர்க்க முடியாது. ஆனால், நமது பதின்ம வயதினரது கோபத்தின் பெரு வெள்ளப்பெருக்கையும், வன்முறையின் வெள்ளப்பெருக்கையும் தாங்கிக்கொள்ள முடியும் என்பதல்ல இதன் அர்த்தம். 'போதும் போதும். என் சகிப்புத்தன்மைக்கும் ஒரு எல்லை இருக்கிறது' என்று கோபத்தோடு கூறுவதால் அவர்கள் பயனடையலாம் என்பதே அதன் அர்த்தம். நமது பதின்ம வயதினரிடம் அதிக பொறுமையாக இருக்காமல் இருப்பது நல்லது. நாம் உள்ளுக்குள் எரிச்சலடைய ஆரம்பித்து, வெளியில் தொடர்ந்து நல்லவர்களாக இருக்கும் போது, நாம் வெளிப்படுத்துவது பாசாங்குத்தனமே ஒழிய கருணை அல்ல. நமது எரிச்சலை மறைக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, அதை திறம்பட வெளிப்படுத்த முடியும்.

ஒரு தந்தை கூறினார்: 'நான் கோபப்படாமல் இருக்க முயற்சி செய்கிறேன். உள்ளுக்குள் நடுங்குகிறேன், ஆனால், என்னைக் கட்டுப்படுத்துகிறேன். என் கோபத்தைப் பற்றி எனக்குப் பயம் இருக்கிறது. நான் விட்டுக்கொடுத்தால் என் மகனுக்கு உண்மையிலேயே தீங்கு விளைவிக்கலாம்.' இத்தகைய கட்டுப்பாட்டை நீண்ட காலத்திற்கு வைத்திருக்க முடியாது. கோபம், ஒரு ஆழமாக உள்ளெடுக்கப்பட்ட மூச்சைப் போன்றது; காலவரையின்றி வைத்திருக்க முடியாதது. விரைவிலோ அல்லது சற்றுத் தாமதித்தோ, நாம் வெடிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம். நாம் கோபத்தை இழக்கும்போது, தற்காலிகமாக பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்கிறோம்; ஆபத்தானவர்களாக மாறுகிறோம். இதனால் தாக்குகிறோம் அல்லது அவமதிக்கிறோம். நாம் நேசிப்பவர்களிடம் விஷயங்களைச் சொல்கிறோம், செய்கிறோம். ஆனால் அதுவே ஒரு அந்நியர் என்று வரும்போது நாம் செய்யத் தயங்குகிறோம். சண்டை முடிந்ததும், நாம் குற்ற உணர்ச்சிக்கு உள்ளாகுகிறோம். ஒருபோதும் கோபத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்க மாட்டோம் என்று உறுதியாக இருக்கிறோம்; ஆனால் கோபம் விரைவில் மீண்டும் எங்களைத் தாக்கிவிடுகிறது. நாம் யாருடைய நலனுக்காக நம் வாழ்க்கையையும் அன்பையும் அர்ப்பணித்திருக்கிறோமோ அவர்கள் மீது மீண்டும் ஒருமுறை நாம் வசைபாடுவதை ஆரம்பித்துவிடுகிறோம்.

## கோபமாக இருப்பது எப்படி?

கோபத்தை முழுவதுமாக அடக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, பெற்றோர்கள் அதைப் பயனுள்ள வேறு வழிகளில் வெளிப்

படுத்தலாம். இந்த வெளிப்பாடு பெற்றோருக்கு சிறிது நிம்மதியையும், பதின்ம வயதினருக்குச் சில நுண்ணறிவையும் தருவதாகவும், அவர்களில் எவருக்கும் தீங்கு விளைவிக்காததாகவும் இருக்கவேண்டும். கோபத்தை வெளிப்படுத்துவதில், மனக்கசப்போ, பழிவாங்கும் உணர்வலைகளோ உருவாகுவதை நாம் உணர்வுபூர்வமாகத் தவிர்க்க வேண்டும். எமது தேவை நமது கருத்தை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பது மட்டுமே; பின்னர் புயலலைகள் தாமாகக் குறையட்டும்.

மன அழுத்தங்கள் ஏற்படும் நேரங்களைச் சமாளிக்க, கீழ் வரும் இந்த உண்மைகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும்:

- இயற்கையான நிகழ்வுகளின் போக்கில் பதின்ம வயதினர் எங்களை அசௌகரியப்படுத்துகின்ற, புறக்கணிக்கின்ற, எரிச்சலூட்டுகின்ற, கோபமேற்படுத்துகின்ற, வெறுப்பேற்படுத்துகின்ற, சினங்கொள்ள வைக்கின்ற நிலைகளுக்கு உள்ளாக்குவார்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுதல்.
- குற்ற உணர்வு, வருத்தம் அல்லது அவமானம் என்று எதுவும் இல்லாமலே இந்த உணர்வுகள் எல்லாவற்றுக்கும் நாங்கள் உரித்தானவர்கள்.
- ஒரு வரம்புக்குள் நம் உணர்வுகளை வெளிப்படுத்த நமக்கு உரிமை உண்டு. நாம் எவ்வளவு கோபமாக இருந்தாலும், பதின்ம வயதினரின் தனிப்பட்ட குணத்தையும், நடத்தைப் பண்புகளையும் அவமதிப்பதில்லை.

நம் கோபத்தைச் சமாளிக்க சில உறுதியான வழிகள் உள்ளன. எந்தவொரு எரிச்சலூட்டும் சூழ்நிலையிலும் முதல் படி, அது நம்மை எவ்வாறு பாதிக்கிறது என்பதை தெளிவாக விவரிப்பதுதான்; வேறு எதையும் சேர்க்கத் தேவையில்லை.

பதினைந்து வயது கேரி ஒரு தட்டில் தனது முட் கரண்டியை அடிக்கத் தொடங்கியபோது, அவரது தாயார், 'இந்தச் சத்தம் கேட்பது எனக்கு கஷ்டமாக இருக்கிறது' என்று கூறினார். கேரி மேலும் பலமுறை சத்தமாக அடித்துவிட்டு அதை நிறுத்தினான். தாய் தனது மகனுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லாததால் இந்த முறை பயனுள்ளதாக இருந்தது. அவள் தனது அசௌகரியத்தை விவரித்தாள், அவன் பதிலளிப்பான் என்று நம்பினாள். இந்த அணுகுமுறையை மிகவும் பொதுவான ஒன்றோடு ஒப்பிடுங்கள்.

'உனக்கு என்ன ஆச்சு? உனக்கு இதைவிட சிறந்த வேலை எதுவும் இல்லையா? சும்மா உட்கார முடியாதா? எனக்கு தலைவலி கொடுக்க வேண்டுமா? தயவுசெய்து இந்த நிமிஷமே உதை நிறுத்து!'

ஒரு குழந்தையின் செயலை நாணயத்தைக் கொடுத்து நிறுத்திவிட முடியாது என்பது இத்துடன் சேர்த்து நினைவில் கொள்ளப்பட வேண்டும். அவன் தன் தவறான நடத்தையை சிறிது காலம் தொடர வேண்டியது அவசியம். ஒருவன் தன் சொந்த விருப்பப்படி நிறுத்துவதற்கு நேரம் எடுக்கும். பின் வரும் சம்பவம் இந்தக் கருத்தை விளக்குகிறது:

பதினான்கு வயது கிதியோன் ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தனது வீட்டிற்கு அருகில் கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தான். பந்து விழும் சத்தம் கேட்டு அவரது தந்தை விழித்தெழுந்தார். அவர் கூறினார்: 'இன்று பத்து மணி வரை நான் தூங்க விரும்பினேன். பந்து என்னை எழுப்பிவிட்டது.'

'மன்னிக்கவும்' கிதியோன் கூறினான்.

அவன் பந்தை இரண்டு முறை துள்ளித் துள்ளி அடித்துவிட்டு வெளியேறினான். உத்தரவினால் அல்ல, தனது சொந்த விருப்பத்தின் பேரில்தான், அதை நிறுத்தியதாக கிதியோன் தனக்குத்தானே நிரூபித்துக் கொண்டான்.

நம் பதின்ம வயதினர் தமது எரிச்சலூட்டும் நடத்தையைத் தொடர்ந்தால் என்ன செய்வது? நமது குறுகிய எதிர்ப்புகளும் நீண்ட முகங்களும் நிவாரணம் தரவில்லை என்றால், நாம் நமது உணர்வுகளை சத்தமாகவும் வலுவாகவும் வெளிப்படுத்துகிறோம்.

'அது எரிச்சலூட்டுகிறது.'

'இது மிகவும் எரிச்சலூட்டுகிறது.'

'இது எனக்குக் கோபத்தை ஏற்படுத்துகிறது.'

'இது எனக்குச் சரியான கோபத்தை ஏற்படுத்துகிறது.'

இந்த அறிக்கைகளின் நோக்கம் நமது பதற்றத்தைக் குறைத்து, நமக்கு நாமே, அப்போதே அந்த நேரத்திலேயே சிறிது நிம்மதியைக் கொண்டுவருவதாகும். நமது சகிப்புத்தன்மையின் வரம்புகளை நாம் நெருங்கி வருகிறோம் என்பதற்கான எச்சரிக்கையாகவும் அவை செயற்படுகின்றன. பெரும்பாலும், நமது கோப உணர்வுகள் வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படும்போது மட்டுமே நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன.



## திடீர் கோபம்:

நம்முடைய சகிப்புத்தன்மையின் எல்லைக்கு அப்பால் நாம் தள்ளப்பட்டால் என்ன செய்வது? நம் கோபம் திடீரென வெடித்து, நாம் மிகவும் கோபமடைந்து, பாய்வதற்குத் தயாராக இருந்தால் என்ன செய்வது. இதுபோன்ற சமயங்களில்:

- நீங்கள் என்ன பார்க்கிறீர்கள் என்பதை விபரியுங்கள்.
- நீங்கள் என்ன உணர்கிறீர்கள் என்பதை விபரியுங்கள்.
- என்ன செய்ய வேண்டும் என்பதை விவரியுங்கள்.
- ஆனால், சம்பந்தப்பட்ட அந்த நபரைத் தாக்காதீர்கள்.

பதினைந்து வயது ரோலண்ட் குளித்துவிட்டு வந்தான். அப்போதுதான், ஈரமான தரையில் பல வெள்ளைத் துவாய்த் துண்டுகள் சிதறிக் கிடப்பதை அம்மா கண்டாள். அவள் கோபமடைந்து, தன் கோபத்தை வெளிப்படுத்தினாள்.

**அம்மா:** 'ஈரமான தரையில் நல்ல துண்டுகளைப் பார்க்கும்போது, எனக்கு கோபம் வருகிறது! இந்தத் துண்டுகள் தரையில் கிடக்க வேண்டியவை அல்ல! அவை எல்லாம் 'அலுமாரியில்' இருக்க வேண்டியவை.'

அவள் தன் கருத்தைச் சத்தமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருந்தாள். அவள் அவனை அவமானப்படுத்தவில்லை; தன் மகனை அவமானப்படுத்தியோ, குற்றம் குறையாகவோ தாக்கிப் பேசவில்லை.

மாறாக 'நீ என்ன - இப்படி ஒரு குப்பைத்தனம் கொண்டவனாக இருக்கிறாய்? உன் காதலி நீ எப்படி இருக்கிறாய் என்பதைப் பார்க்க வேண்டும் - நீ எவ்வளவு குப்பைத்தனமும் பொறுப்புமற்றவன் என்பதை...' என்று சொல்லி ஆரவாரம் தணிந்த பின்னால், அம்மா அவனிடம் மன்னிப்பு கேட்கும் அவமானகரமான நிலைமையிலிருந்து தன்னத் தவிர்த்துக் கொண்டாள்:

### 'அது என்னை எரிக்கிறது!'

பதினாறு வயது ஜிஞ்சர், இரவு உணவிற்கு அடிக்கடி தாமதமாக வருகிறான். இந்த முறை அவனது சாப்பாட்டுத்தட்டில் 'ஸ்ரேக்' இருந்தது, ஆனால் அவன் இன்னும் தன் அறையில் இருந்தான். கோபமடைந்த அம்மா அதை வெளிப்படையாக வெளிப்படுத்தினாள்: 'நான் உன்னை இரவு உணவிற்குக் கூப்பிட்ட போது நீ எனக்குப் பதில் தரவில்லை. அது என்னை எரிச்சலூட்டுகிறது. எனக்குள் கோபம் பொங்கி வருகிறது. நான் ஒரு நல்ல 'ஸ்ரேக்கைப் பொரித்தேன் என்று எனக்குள் சொல்லிக் கொள்கிறேன். நான் கொஞ்சம் பாராட்டுக்குத் தகுதியானவள், கோபப்படுவதற்கு அல்ல.' என்று சொன்னதும் ஜிஞ்சர் அவசரமாகக் கீழே வந்தான்.

அம்மாவின் கோபம் தணிந்தது. இரவு உணவு மேஜையில் உரையாடல் சுதந்திரமாக நடந்தது. யாரும் நொறுங்கவில்லை. எல்லோரும் 'ஸ்ரேக்கை' ரசித்துச் சாப்பிட்டார்கள்.

### 'இது என்னை ஒரு சங்கடமான நிலையில் வைக்கிறது.'

பதினேழு வயது கிரெக், பல் மருத்துவரிடம் தனக்கு ஒரு 'அப்பொயின்ட்மென்ட்' எடுத்துத் தரும்படி தாயாரிடம் கேட்டிருந்தான்.

ஆனால் அவன் அதை நினைவில் வைத்திருக்கவில்லை. அம்மா அதைப் பற்றி அறிந்ததும், கோபமடைந்தாள். அவள் வெளிப்படையாகவே அதைச் சொன்னாள்: 'நான் கோபமாக இருக்கிறேன். நீ என்னை உனக்காக ஒரு 'அப்பொயின்ட்மென்ட்' எடுக்கச் சொல்லிவிட்டு, அதை நினைவில் வைத்திருக்காமல், 'ரத்து' கூடச் செய்யாமல் இருந்திருக்கிறாய். அது என்னை ஒரு சங்கடமான நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.'

கிரெக் மன்னிப்பு கேட்டான். அந்தச் சந்திப்பு தனது நினைவிலிருந்து மறைந்து போய்விட்டதையிட்டு அவன் உண்மையிலேயே வருத்தப்பட்டான். பின்னர் அவனே பல் மருத்துவரை அழைத்து ஒரு சந்திப்பை மீண்டும் ஏற்படுத்தத் திட்டமிட்டான். இத்துடன் சம்பவம் முடிந்தது.

அம்மாவும் நிம்மதி அடைந்தாள், கிரெக் அதற்காக வருத்தப்பட்டான். யாரும் அவமானப்படுத்தப்பட்டதாகவோ அல்லது பேரழிவிற்கு ஆளானதாகவோ உணரவில்லை. தாய்க்கும் மகனுக்கும் இடையிலான தொடர்பும் துண்டிக்கப்படவில்லை.

### 'இது என் சந்தோசத்தைக் கெடுக்கிறது...!'

பதினான்கு வயது ஜோர்ஜ், வசிப்பறையில் நண்பர்களுடன் இருந்து அவர்களுடன் பொழுதைக் கழித்தான். அதன் பின்னர் அவர்கள் எல்லோருமாக அறையைச் சுத்தம் செய்யாமல் சென்றுவிட்டனர்.

அவர்களுடன் சென்ற அவன் திரும்பி வந்தபோது, அம்மா கூறினார்: 'நான் காகித அட்டைகள், சோடாப் போத்தல்கள் உருளைக்கிழங்குப் பொரியல்கள் தரையில் சிதறிக் கிடப்பதைப் பார்க்கும்போது, எனக்குள்ளே விரும்பத்தகாத உணர்வை ஏற்படுத்துகிறது. உண்மையில் அது எனக்குக் கோபத்தைத்தான் ஏற்படுத்துகிறது. விளையாடிய பிறகு அறையைச் சுத்தம் செய்ய வேண்டும்.'

'சரி அம்மா, கொஞ்சம் அமைதியாக இருங்கோ, எனக்கு விசயம் விளங்கிவிட்டது,'

சொல்லிவிட்டு ஜோர்ஜ் குப்பைகளைத் தானே சுத்தம் செய்யத் தொடங்கினான்.

### 'உனது எரிச்சலூட்டும் பழக்கவழக்கங்களால் நான் களைத்தே போனேன்!'

பதின்மூன்று வயது சாமுவேல், தன் அக்காவுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்தான். அவளைத் தொடர்ந்து அவமானப்படுத்திக் கொண்டிருந்தான். அம்மா அறைக்குள் நுழைந்து, 'உன்னுடை தொடர்ச்சியான குரோதம் கொட்டுகிற கடுமையான கூச்சல்களால் நான் சரியாக் களைச்சுப்போனன்' என்றார். சாமுவேலும் அவன் சகோதரியும் ஒருவரையொருவர் பார்த்து உரத்த தொனியில் வெடித்துச் சிரித்தனர். சண்டை முடிந்தது.

### 'எங்களுக்குச் சரியான கோபம், ஒருத்தருக்கும் நிம்மதி இல்லை'

பதினைந்து வயது ஜோசபின், பள்ளி நடனத்திலிருந்து நள்ளிரவுக்கு முன் வீடு திரும்புவதாக உறுதியளித்தாள். ஆனால் அவள் அதிகாலை 2 மணிக்குத்தான் திரும்பினாள்.

அவளுடைய பெற்றோர் பதட்டமாக இருந்தனர். அவர்கள் தங்கள் கோபம், கவலை ஏமாற்றத்தையெல்லாம் வாயில் வந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தினர். ஆனால் அவர்கள் அவளை துண்டு துண்டாக வெட்டவில்லை; அவர்கள் அவளுடைய பெயரை உச்சரிக்கவில்லை; அவளுடைய ஆளுமையை அவர்கள் தாக்கவில்லை; அவளுடைய குணத்தை அவமதிக்கக்கூட இல்லை. அவர்களின் வார்த்தை களின் மாதிரி இங்கே:

'நீ சரியான நேரத்தில் வராதபோது நாங்கள் உனக்கு ஏதா வது உயிராபத்து நடந்துவிட்டதோ என்று மிகவும் கவலைப் பட்டோம்.'

'எங்கள் மனதில் என்னவெல்லாம் தோன்றியது என்று உன் னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.'

'எங்களுக்குச் சரியான கோபம். மிகவும் அந்தரப்பட்டோம். எங்கள் எல்லோருக்கும் உனக்கு என்ன நடந்ததோ என்ற பயம், நள்ளிரவுக்கு முன் வீட்டிற்கு வருவேன் என்று நீ சொன்னபோது, பன்னிரண்டு மணிக்கு முன் நீ வந்துவிடுவாய் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். எங்களைத் திகைத்துப் போக வைப்பது ஒருவகையிலும் நியாயமானதல்லை. உனக்கு வருவதற்குத் தாமதமாகும் என்று தெரியவரும்போது எங்களுக்கு அழைப்பெடுத்துத் தெரியப்படுத்த வேணும்.'

'இப்போது எங்களுக்கு மிகவும் குழப்பமான மன உணர்வுகள் எழுகின்றன. நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று நாங்கள் நிம்மதியடைகிறோம், ஆனாலும் நீங்கள் மிகவும் தாமதமாக வந்ததையிட்டுக் கோபமாக இருக்கிறோம்.'

## அவமதிப்பை ஏற்படுத்தாத கோபம்!

அவமானத்தை ஏற்படுத்தாமல் கோபத்தை வெளிப்படுத் துவது ஒன்றும் எளிதானது அல்ல. இது எம்மிடமுள்ள இயற் கையான விருப்பங்களுக்கும், ஆழமாக வேரூன்றிய பழக்கங் களுக்கும் எதிரான ஒன்று. ஆனால், நாம் நேசிப்பவர்களுக் குத் தீங்கு விளைவிக்காமல் கோபத்தை வெளிப்படுத்த உதவும் ஒரு புதிய மொழியை கற்றுக்கொள்ளவும் முடியும். புதிய மொழியில் தேர்ச்சி பெற்ற பெற்றோர்கள், தங்கள் மீது அதிக கட்டுப்பாட்டைப் பெற்றவர்களாவர். அவர்கள் தங்கள் கோப உணர்ச்சியைத் திறம்படவும், உரத்தும் வெளிப்படுத் தும் திறன் கொண்டவர்களாக உணர்கிறார்கள். கோபமான பெற்றோர்கள் கோபத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்து வதை இந்த உதாரணங்கள் விளக்குகின்றன:

- **'அனுமதி இல்லாமல் 'பல்பொருள் அங்காடிகளில் கட்டணம் வசூலிக்கப்படாது.'**

இந்தச் சம்பவம் ஒரு தாயார் தனது பதின்ம வயது மகளுடன் ஏற்பட்ட கோபமான மோதலுக்குப் பிறகு அளித்த கருத்து:

'அவமானப்படுத்தாமல் கோபப்படுவது மிகவும் பயனுள்ள கருத்தாகும். இது ஒரு முதிர்ந்த வயதுக்கு வந்தவளாக எனது பங்கை வரையறுக்கிறது. இது நேரத்தையும் கோபத்தையும் மிச்சப்படுத்துகிறது. விரோதமான கருத்துகளில் ஈடுபடு வதற்கு வாழ்க்கையில் போதுமான நேரம் இல்லை என்ற முடிவுக்கு நான் வந்திருந்தேன். அவற்றால் வரும் சேதத்தைச் சரிசெய்ய அதிக நேரம் எடுக்கும் என்பதுடன் குற்ற உணர்ச் சியைச் சமாளிக்க அதிக சக்தியும் வேண்டும். கடினமான சூழ் நிலைகளைக் கையாள்வதில், நான் எனக்குள் உள்ள வழி முறைகளைக் கூறுகிறேன்: முக்கிய செய்தி என்ன? அதை நேரடியாகச் சொல்லுங்கள்!, என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவுபடுத்துங்கள், பிரச்சினைகளைக் குழப்ப வேண்டாம்.'

'இதோ ஒரு உதாரணம்: வார இறுதியில் வெளியே சென்ற பிறகு ஞாயிற்றுக்கிழமை இரவு நான் வீட்டிற்குள் நுழைந் தேன். என் பதினைந்து வயது மகள் குளோரியா, என்மீது பாய்ந்து இவ்வாறு சொன்னாள்:

'அம்மா! நான் வாங்கின உடுப்பை நீங்க பாக்குற வரைக்கும் பொறுத்திருங்க, ரொம்ப அழகாக இருக்கும்! உங்க கணக் கிலேயே அதற்கான பணத்தை எடுக்கப் பண்ணிவிட்டேன்'. என் மூளைக்குள் ஒரு தீப்பொறி மின்னூட்டம். 'உனக்கு ஒரு பயங்கரமான நரம்பும் இருக்கு', 'உனக்கு எங்கிருந்துதான் இப்பிடிப் பித்தம் பிடிக்குது!', 'நீ உன்னை யாரெண்டு நினைச்சுக் கொண்டு இருக்கிறாய்' போன்ற (வார்த்தைகள் ததும்பும்) எண்ணங்களால் என் மனம் நிரம்பி வழிந்தது. ஆனால், 'பல்பொருள் அங்காடிகளில் என் அனுமதி இல்லா மல் எனது (வங்கி அட்டையில்) காசெடுக்க முடியாது' என்று நான் சொன்னேன்!

குளோரியா (தற்காப்புத் தோரணையில்): ஆனால் நான் அதைத் திருடவில்லை - உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்?

அம்மா (முக்கிய செய்தியில் கவனம் செலுத்தியபடி): 'பல் பொருள் அங்காடிகளில் அனுமதி இல்லாமல் பணம் கழிக் கின்ற செயல் செய்யப்படக் கூடாது!'

'நான் என் படுக்கையறைக்குள் சென்று கதவை மூடினேன். அவள் வைத்திருந்த அந்த 'இறுதிச் சடங்குக்கான இளம் சிவப்புநீலம் கலந்த லவெண்டர் ஆடையை' அவளால் வைத் திருக்க முடியாது என்றும் அதை முயற்சிக்கப் போகிறாள் என்றும் அவளிடம் எப்படிச் சொல்வது என்று கண்டுபிடிக்க எனக்கு நேரம் தேவைப்பட்டது.

அது ஒரு சிறியளவு நீளமுள்ள திகிலூட்டும் சுருள் போன்று, 'பிளம் வெல்வெட்' துணியிலான ஆடை. எனக்கு அது ஒரு முகமூடி உடை போலவே இருந்தது. அவள் அதைப் பாடசா லைக்கு அணிந்துசெல்லத் திட்டமிட்டிருந்தாள். குளோரியா கதவைத் தட்டினாள்: 'தயவுசெய்து கதவைத் திறவுங்கோ அம்மா!. நீங்கள், நான் அதை உடுத்தியபின் எப்படி இருக் கிறது என்பதைப் பார்க்கும் வரை காத்திருங்கள். அது எனக்குச் சரியாகப் பொருந்துகிறது, நான் மிகவும் பெண்மை யாகவும் அற்புதமாகவும் இருக்கிறேன்'.

'நான் கதவைத் திறந்தேன். 'அந்த நிறம்' என்னை உறுத் தியது. எனக்குச் சோர்வாகவும் எரிச்சலாகவும் இருந்தது. ஆனால் அவள் கடந்த சனிக்கிழமையிலிருந்து எனக்காகக் காத்திருந்தாள் என்பதையும், அதைத் தள்ளிப்போடப் போவதில்லை என்பதையும் நான் அறிந்திருந்தேன்.

மீண்டும் நான் என் உற்சாகத்தையும், திறமையையும் பயன் படுத்திக்கொண்டு செயற்பட முடிவு செய்தேன்.

அவளுடைய ரசனை உணர்வை அச்சுறுத்தாமல், ஆடையை எப்படியாவது திருப்பிக் கொடுப்பதே என் செயல் என்று முடிவுசெய்தேன். பின்னர் அவளிடம் நான் சொன்னேன்: 'இந்த உடை மேல நீங்க ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டுறீங்கன்னு எனக்குப் புரியவில்லை, ஆனா அது பாடசாலைக்குப் பொருத்தமான ஒன்றல்ல, அதைவிட மிகவும் விலை கூடிய ஒன்று.'

'ஆனா அந்தக் கலர் அழகாக இல்லையா?' என்றாள் அவள். ஒரு தடவை என்னைச் சுற்றி ஒரு குறட்டைப் பிடித்து யாரோ முழுமையாக அமுக்கியது போல எனக்குத் தோன்றியது. நான் குனிந்து எச்சிலை விழுங்கிபடி, செய்தது அவளது நேர்மையின் மீதான ஒரு குத்து: 'சிலருக்கு அந்தக் கலர் பிடிக்கும்' ஆனால் அது எனக்குப் பிடிச்ச கலரும் இல்லை' என்று நான் சொன்னேன்.

'ஏன்' என்று திருப்பி (உரத்த குரலில்) தாக்கினாள். பின், 'உங்களுக்கு அந்த கலர் ரொம்பப் பிடிக்கும்.' என்று சொன்னாள்.

'அது துணிகளில் எனக்குப் பிடிச்ச கலர் இல்ல, என் ஓவியங்களில் அதைப் பயன்படுத்துறதுதான் எனக்குப் பிடிக்கும்' நான் பதிலளித்தேன்.

'இந்த நேரத்துல அவ என்னுடன் ஒரு தத்துவ விவாதத்துக்குத் தயாராக இருந்தா, ஆனால் நான் அதை முக்கிய விஷயத்துக்காக வைத்திருந்தேன். 'அந்த உடையை நீங்க எவ்வளவு விரும்புறீங்கன்னு எனக்கு விளங்குது. அதைத் திருப்பிக் கொடுக்கிறது உங்களுக்கு எளிதாக இருக்காதுதான். ஆனால் நாளைக்கு மதியநேரம் உங்களால் அதைச் செய்ய முடியுமா?'

'இல்லை, நான் அதை மாலையில்தான் செய்யவேண்டும்; அவள் மெதுவாகச் சொல்லி, அவசரமாக ஒரு 'குட் நைட்' சொல்லிட்டு அறையை விட்டு வெளியேறினாள்.

### ▸ 'அது எனக்குச் சங்கடத்தை ஏற்படுத்துது'

இந்தக் கதையை பதினாறு வயதுச் சிறுமியின் தாயொருவர் கூறினார்.

'என் மகள் அடிக்கடி என்னை ஏமாற்ற முனைகிறாள். அவள் எனக்கு எரிச்சலூட்டுகின்ற விஷயங்களை நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறாள். அப்படி அவள் சொன்ன ஒரு கருத்துக்குப் பிறகு, 'இந்த மாதிரியான பேச்சு எனக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகிறது' என்று நான் சொன்னேன். அடுத்தமுறை அவள் அப்படி ஏதாவது சொல்ல ஆரம்பித்துவிட்டு, பின் அதை நிறுத்தியவளாய், 'நான் மறந்துவிட்டேன், அம்மாவுக்கு இது பிடிக்காது' என்று சொன்னாள்.



### ▸ 'எங்கள் வீட்டில் பழிவாங்கலுக்கோ திருப்பித் தாக்குவதற்கோ இடமில்லை'

பதினைந்து வயது றோய், தன்னை அவமானப்படுத்தியதற்குப் பழிவாங்கும் நோக்குடன் தனது சகோதரனின் படுக்கையில் இருந்து மெத்தையைத் தள்ளிவிட்டார். தந்தை தலையிட்டார். கடுமையான குரலில் அவர் கூறினார்: 'எங்கள் வீட்டில் பழிவாங்குவதற்கோ பழிவாங்கும் நடவடிக்கைகளைச் செய்வதற்கோ இடமில்லை. அது எனது அடிப்படையான மதிப்புகளுக்கு எதிரானது.'

சிறுவர்கள் தங்கள் தந்தையை அவநம்பிக்கையுடன் பார்த்தார்கள். முடிவில்லாத வாக்குவாதமாக மாறக்கூடிய நிலைமைக்கான முற்றுப்புள்ளி, அல்லது முடிவாக அமைந்தது இது!.

## ஒரு கோபமான கடிதம்:

சில பெற்றோர்கள் தங்கள் கோபத்தை எழுதி வைப்பது உதவியாக இருப்பதாகக் கருதுகின்றனர். பின்வரும் கடிதம் எரிச்சல்களையும் எதிர்பார்ப்புகளையும் திறம்படத் தொடர்பு கொள்வதற்கு நல்ல எடுத்துக்காட்டு:

அன்புள்ள தெல்மா,

இதை நான் உங்களுக்கு கடிதமாக எழுத முடிவுசெய்ததற்கு ஒரு காரணம் உண்டு. ஏனென்றால் நான் சொல்ல வேண்டிய விஷயங்கள் என்னை மிகவும் கோபப்படுத்துகின்றன. நான் உங்களுடன் பேசும்போது, என் கோபத்தைக் காட்டாமல் நான் சொல்லவேண்டிய விடயத்தை உங்களுக்குச் சொல்ல முடிவதில்லை. நான் தேவையில்லாமல் காலையில் எழுந்திருப்பதை வெறுக்கிறேன். காலை வேளையில் சற்று அதிக நேரம் தூங்குவதற்காக ஆவலுடன் காத்திருந்த எனக்கு, இந்த வாரத்தில் அதற்கான வாய்ப்புக் கிடைத்த ஒரே காலைநேரம் இதுதான். எனது மேற்பார்வை இல்லாமலே என் பிள்ளைகளால் பாடசாலைக்குச் செல்ல முடிகிறது என்பதில் நான் எப்போதும் பெருமைப்படுகிறேன். ஆனால் இன்று காலையில் நடந்தது, நான் மகிழ்ச்சி அடைவதற்கான அல்லது பாராட்டப் படுவதற்கான ஒன்று அல்ல; உண்மையில், உதாரணமாகச் சொல்லப்படக் கூடிய செயல் என்பதற்கான எத்தகைய தன்மைகளையும் கொண்டதாக அது இருக்கவில்லை.

உங்களது படுக்கையறைக் கதவு எல்லா நேரங்களிலும் மூடி இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உங்கள் அறை இருக்கும் நேர்த்தியற்ற நிலை பிறர் பார்வைக்கு ஏற்றதாக இருப்பதில்லை. குறிப்பாக உங்கள் தட்டச்சுப்பொறி வைக்கப்பட்டிருந்த உறுதியற்ற

நிலையைக் கண்டு நான் மிகவும் வருத்தமடைந்தேன். அது ஒரு அவசியமான இயந்திரம் மட்டுமல்ல, மிக அவதானமான பராமரிப்புக்கு உரியதும் கூட. நேற்று இரவு நீங்கள் கற்றுக் கொண்டது போல, விழும்போது அவை உடைந்து விடும். ஆடை என்பதும் கூட எங்களைக் கவனிப்புக்கும் பாதுகாப் புக்கும் உரியதாக்கும் இன்னொரு பொருள்தான். சுருங் கிப்போன கந்தல்களாகத் தெரியும் உடைகள் கவர்ச்சிகரமா னதாக அல்லது அழகானதாக இருப்பதில்லை.

தயவுசெய்து  உங்கள் பதிலை எழுத்துவடிவில் தரவும்.

அன்பு, அம்மா

## மாற்றத்திற்கான செயல்முறை:

ஒருவர் தனது கோபத்தை வெளிப்படுத்துகின்ற வழமையான முறையை மாற்றிக்கொள்வது ஒன்றும் இலகுவான செயல் அல்ல. அதுபற்றிய புதிய புரிதல் மிகவும் கடினமாகவே இருக் கிறது. அது அவரது போராட்டம், முயற்சி, உறுதிப்பாடு என்ப வற்றை உள்ளடக்கியது. ஒரு தாய், தனது மாற்றத்திற்கான செயல்முறையின் பல்வேறுகட்ட நிலைகளை விவரித்துக் கூறிய விதம் இங்கே தரப்படுகிறது:

- நீங்கள் உங்கள் மகனையோ மகளையோ அவமதிக்கி றீர்கள். பிறகு அதைப் பற்றி நீங்கள் சிந்திக்கிறீர்கள். அது உங்களை கவலைக்குள்ளாகுகிறது.
- மீண்டும் நீங்களே சூடான கருத்துகளைச் (உங்களை அறியாமல்) சொல்வது உங்களுக்குக் கேட்கிறது. வார்த் தைகள் உங்களது வாயிலிருந்து வெளிவரும்போது, அதைக் கட்டுப்படுத்த வழியற்றவராக நீங்களே அதைக் கேட்கின்றீர்கள்.
- ஒரு அவமானகரமான கருத்தை நீங்கள் சொல்லப் போகி றீர்கள் என்பது உங்களுக்குத் தெரிகிறது. ஆனால், உங் களால் உங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உங்கள் சுயத்தின் மீது உண்மையான எரிச்சல் உங்களுக்கு ஏற்படு கிறது. நீங்கள் முன்னேறுவதற்கான ஒரு உறுதியான மன நிலையை உங்களுக்குள் உருவாக்குகிறீர்கள்.
- மீண்டுமொரு எரிச்சலூட்டும் சூழ்நிலை எழுகிறது. பழைய வழியைப் பயன்படுத்த முடியாது. புதிய வழியை எவ்வாறு பயன்படுத்துவது என்று உங்களுக்குத் தெரியவில்லை. பலவீனமானதும் விசித்திரமானதுமான உணர்வு உங்களிட மிருந்து வெளிப்படுகிறது.
- உங்கள் மீதே நீங்கள் எரிச்சலடைகிறீர்கள். உங்கள் நிலைமையை மீண்டும் நீங்கள் மறுபரிசீலனை செய்கி றீர்கள். நீங்கள் உங்களுக்குள், 'இப்படிச் சொல்லியிருக்க வேண்டும், அல்லது அப்படிச் சொல்லியிருக்கவேண்டும்' என்று அவற்றைப் பலமுறை மறுபரிசீலனை செய்கிறீர்கள்.
- உங்கள் புதிய அணுகுமுறையைப் பயன்படுத்தக்கூடிய வகையில் நெருக்கடி வருவதற்கு இப்போது நீங்கள் கிட் டத்தட்ட ஆர்வமாக உள்ளீர்கள். உங்களுக்கு விரைவில் வாய்ப்புக் கிடைக்கும். இந்தமுறை நீங்கள் தயாராக இருக் கிறீர்கள். உங்கள் மொழி புதியதாக இருந்தாலும், அதன் தொனி சரியானது. அனைவரும் ஆச்சரியப்படுகிறார்கள். ஆனாலும் இந்த அணுகுமுறை இன்னமும் உங்களில் முழுமையாக இல்லை.
- கோபத்தின் அனைத்து நுணுக்கங்களையும், அவமானம் அல்லது தாக்குதல் இல்லாமல் உறுதியுடனும் அதிகாரத் துடனும் வெளிப்படுத்தத் தொடங்குகிறீர்கள். இந்தப் புதிய அணுகுமுறை உங்கள் ஆளுமையின் ஒரு பகுதியாக மாறி வருகிறது. நீங்கள் அதை ஒரு இசைக்கலைஞரைப் போல வாசிக்கிறீர்கள்.
- மகிழ்ச்சி, குழந்தைகள் உங்கள் நடத்தையையும் உங்கள் வார்த்தைகளையும் பிரதிபலிக்கிறார்கள்.
- பாருங்கள், நீங்கள் வெறும் மனிதர்கள். நீங்கள் தவறு களைச் செய்கிறீர்கள். இந்த அணுகுமுறையைப் பயன் படுத்த உங்களுக்குத் தேவைப்படுவது, உங்களிடம் இதற் கென இயங்க இருக்கும் நேரத்தின் ஒரு பகுதி மட்டுமே. உங்களிடம் திறமை, நல்லெண்ணம் என்று எல்லாமே இருந்தபோதும், உங்களது முயற்சிகள் எவையும் வெற்றி பெறாதபோது, நீங்கள் உதவியற்றவராகவும் சோர்வடைந் தவராகவும் உணர்கின்ற, வேதனையான தருணங்கள் நிலவவே செய்யும்.
- ஆனால் நீங்கள் குணமடைவீர்கள். தொடர்ந்தும் பரி சோதனை செய்தும் பரீட்சித்தும் கற்றுக்கொள்வீர்கள். 'எந்த முறையும் முழுமையானது அல்ல, ஆனால் இதுதான் எனக்குக் கிடைத்த மிகச் சிறந்த முறை' என்று நீங்களே உங்களுக்குச் சொல்லிக் கொள்வீர்கள்.



(தொடரும்...)



vickneaswaran.sk@thaiveedu.com

■ த. சிவபாலு



# இலங்கையின்
## புதிய கல்விச் சீர்திருத்தம் ௨௦௨௫

ஒரு நாட்டின் கல்வி வரலாறு அதன் வளர்ச்சிப் படிகளை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இலங்கை வரலாற்றில் கல்விக்கான பங்களிப்பு முக்கியம் பெற்று வந்துள்ளமையைக் காணலாம். பௌத்த மதம் பரவுவதற்கு முன்னரே கல்விக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு குலக்கல்வியை ஊட்டி வந்துள்ளனர். அதன் பின்னர், ஆலயங்கள் கல்விக் களங்களாக மாறிச் செயற்பட்டன. பௌத்த மடாலயங்கள் கல்வியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. அவை மடாலயங்களில் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கான கல்வியைப் பௌத்த மதப் பஞ்சசீலக் கொள்கைசார்ந்து எழுத்தறிவோடு கற்பித்து வந்தன. தேவநம்பியதீசனின் வருகையோடு ஏற்படுத்தப்பட்ட பௌத்த மதப்பீடங்கள், படிப்படியாக கிராம மட்டங்களில் வேரூன்றி, விகாரைகளில் பௌத்த துறவிகளால் எழுத்தறிவித்தல் சமய நெறி, ஒழுக்க நெறி என்பன கற்பிக்கப்பட்டன. பௌத்த மதப்போதனை பாளி மொழியின் அடிப்படையில் காணப்பட்டமையால், மதப்பீடங்கள் பாளி மொழிக் கல்வியை மேற்கொண்டிருந்தன. எனினும், குழந்தைகளுக்குச் சிங்கள மொழியின் எழுத்து வரிவடிவங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன.



tg.theeban@gmail.com

இலங்கைக் கல்வி வரலாற்றில் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் கல்வியில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வி வரலாற்றில் பெரு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தங்கள் கொள்கைக்கேற்ப கல்விக் கொள்கைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருவது வழக்கமான ஒரு அரசியல் நடத்தையாகவே காணப்படுகின்றது. இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் கல்வியமைப்பில் ஏற்படுத்தப்பட்ட இம்மாற்றங்கள், கற்றல்-கற்பித்தல் முறைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களாகவே தொடர்ந்து வந்துள்ளன.

உலக நாடுகளில் அடிப்படைக் கல்விமுறைகளில் மிகத்துரிதமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தின் தாக்கம் கல்வித்துறையில் தவிர்க்க முடியாதபடி உள்வாங்கப்படுகின்றது. இதனடிப்படையில் கல்வி முறைமைகளிலும் கல்விக் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவது கண்கூடு. பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட கல்விமுறை இன்று உலக நாடுகளில் முன்வைக்கப்படுவது தவிர்க்கமுடியாதுள்ளது. இன்று தொழில் முயற்சிகளில் மட்டுமல்ல, கல்விக்கூடங்களிலும் செயற்கை நுண்ணறிவு (AI) உள்நுழைந்துவிட்டமை காலத்தின் தேவையாகும். எனவே, மாறிவரும் விஞ்ஞான தொழில்நுட்பத்திற்கேற்ப இலங்கையும் தனது நாட்டின் கல்விக்கொள்கையிலும், பாடவிதானத்திலும், கற்றல்-கற்பித்தல் முறைகளிலும் மாற்றம் செய்யவேண்டியுள்ளமை தவிர்க்கமுடியாதுள்ளது.

> **“இலங்கையின் கல்வி முறை, ஒரு காலத்தில் வளரும் நாடுகளில் முன்னேற்றத்தின் பெருமைக்குரிய அடையாளமாக இருந்தது, இப்போது அது பொருத்தமற்றதாகிவிட்டது, அது மிகக் கடினமானது. ‘நடைமுறையில் உள்ள கல்விமுறை 21-ஆம் நூற்றாண்டின் யதார்த்தத்துடன் ஒத்துப்போக முடியாதுள்ளது.”**

வளர்ந்து வரும் இலங்கை போன்ற சிறிய நாட்டிற்கு கல்வி யின் அடிப்படையில் மாற்றங்களைக் கொண்டுவருவது பெரும் நிதிச்சுமையாக உணரப்பட்டுள்ளது. ஆனால், இன்று ஐக்கிய நாடுகளின் கல்வி கலாசார விஞ்ஞான அமைப்பு நிதி யுதவியினை நல்குவதற்கு முன்வந்துள்ளமை பிரதம அமைச் சரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரணி அமரசூரியா விற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்காலத்திற்கான கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முனைந்து அதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட தொகுப்பை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் கல்வி முறை, ஒரு காலத்தில் வளரும் நாடு களில் முன்னேற்றத்தின் பெருமைக்குரிய அடையாளமாக இருந்தது, இப்போது அது பொருத்தமற்றதாகிவிட்டது, அது மிகக் கடினமானது. 'நடைமுறையில் உள்ள கல்விமுறை 21-ஆம் நூற்றாண்டின் யதார்த்தத்துடன் ஒத்துப்போக முடியா துள்ளது. பல தசாப்தங்களாக, சீர்திருத்தத்திற்கான வேண்டு தல்கள் கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் அக்கறை யுள்ள குடிமக்களால் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறா யினும், இன்று, அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் குழந்தைகளைத் தோல்வியடையச் செய்த ஒரு கல்வி அமைப்பை நவீனமயமாக்க கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு' எனக் கல்வி அமைச்சர் ஹரணி அமரசூரிய குறிப் பிட்டுள்ளார்.

'நடைமுறைக் கல்விப் பிரச்சினையின் மையத்தில் ஒரு பழைமையான பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறை உள் ளது. இது உண்மையான புரிதலை மனப்பாடம் செய்வதன் மூலம் கற்றலை வலியுறுத்துகிறது. தற்போதைய அமைப்பு மனப்பாடம் செய்தல் மூலமும் மட்டுப்படுத்தப்பட்ட தேர்வுக் கான வினாக்களை பயிற்சியளிப்பதன் மூலம் சிறப்பாக்கு கின்றது. இவை போன்ற நடவடிக்கைகள் கல்விசார் சிறப்பின் குறுகிய வடிவத்திற்கு மட்டுமே வெகுமதி அளிக்கின்றன. இந்த மாதிரியான கல்வி முறையின் கீழ் ஒரு சிறிய சதவீத உயர்தர மாணவர்கள் சிறப்பாகச் செயற்பட்டாலும், பெரும் பான்மையான மாணவர்கள் பின்னடைவைச் சந்திக்கின்றனர். அவர்களின் மாறுபட்ட திறமைகள் மற்றும் திறன்கள் பயன் படுத்தப்படாமல் மற்றும் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன. 'இந்தக் கல்வி சுரங்கப்பாதையைப் போன்றது. அதாவது ஒரு குறுகிய நோக்கைக் கொண்டது. இக்கல்விமுறை தொழில்ரீதி யாகவும் தனிப்பட்டரீதியிலும் நவீன வாழ்க்கையின் யதார்த் தங்களுக்குத் தகுதியற்ற, தலைமுறை மாணவர்களை விட் டுச் சென்றுள்ளது' எனக் கல்விச் சீர்திருத்தத்திற்கான முன் மொழிவை முன்னெடுத்த ஜனாதிபதி அனுர குமார திசநா யக்க குறிப்பிட்டள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது.

***"இந்தக் கல்வி சுரங்கப்பாதையைப் போன்றது. அதாவது ஒரு குறுகிய நோக்கைக் கொண்டது. இக்கல்விமுறை தொழில்ரீதியாகவும் தனிப்பட்டரீதியிலும் நவீன வாழ்க்கையின் யதார்த்தங்களுக்குத் தகுதியற்ற, தலைமுறை மாணவர்களை விட்டுச் சென்றுள்ளது."***

முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் உலகளாவிய கல்விப் போக்குகளைப் பிரதிபலிக்கின்றன, அவை விமர்சன சிந் தனை, படைப்பாற்றல், ஒத்துழைப்பு, எண்ணிம கல்வியறிவு மற்றும் உணர்ச்சி நுண்ணறிவை வலியுறுத்துகின்றன. இவை சுருக்கமான இலட்சியங்கள் அல்ல. அத்தியாவசிய வாழ்க் கைத் திறன்கள் அதிகரித்த சூழலில் விரைவான தொழில் நுட்ப மாற்றங்கள் நிகழ்ந்தேறிய வண்ணம் உள்ளன. பொரு ளாதார நிச்சயமற்ற தன்மை தொடர்ந்தும் காணப்படுகின்றது. ஆதலால் இன்றைய உலகில் குழந்தைகள் அறிவுடன் மட்டு மல்லாமல், அதை ஆக்கபூர்வமாகவும் உணர்ச்சிபூர்வமா கவும் பயன்படுத்துவதற்கான திறனைக் கல்வி கொண்டிருக்க வேண்டும். கல்வியானது பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவதற்கு மட்டும் அல்லாமல், தகுதியை அடைவதற்கும், குழுக்களுடன் இணைந்து பணியாற்றவும், தெளிவாகத் தொடர்பு கொள்ள வும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் வழிவகுப்பதாக அமைய வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொள்ளத்தக்க வகையில் கல்விச் சீர்திருத்தம் முன்வைக்கப்படவேண்டும்.

மேலும், இலங்கையின் தற்போதைய கல்வி முறையானது குழந்தைகளின் உளவியல் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிப்ப தாகவும் அமைந்துள்ளது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதரணதரப் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை போன்ற பரீட்சைகள் மாணவர்களின் வாழ்க்கையில் மிகச் சிறிய வயதிலிருந்தே ஆதிக்கம் செலுத் துகின்றன. தேர்வின் வெற்றி, செயற்றிறனில் இந்த ஒற்றைக் கவனம் கற்றலின் மகிழ்ச்சியையும், பல சமயங்களில் குழந் தைப் பருவத்தின் மகிழ்ச்சியையும் களவாடியுள்ளது என்னும் குற்றம் இன்று நடைமுறையில் உள்ள கல்வி முறையில் சுமத் தப்பட்டுள்ளது.

பாடவிதான விருத்தி (CURRICULUM DEVELOPMENT) வாழ் வில் சவால்களை வென்றெடுக்கக்கூடிய நற்குடிமக்களாக ஆக்குவதற்கான அடித்தளத்தை இடுவதற்கு வழிவகுக்கிறது. நிலையான தேசிய அபிவிருத்தியையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய குடிமக் களை உருவாக்குவதே இதன் பொதுவான நோக்கமாகும். பாடவிதான விருத்தியின் செல்நெறி, இலக்குக்களும் உள்டக் கமும், சீர்திருத்தங்களுக்கான வழிகாட்டுதல் கொள்கைகள்,





சீர்திருத்தத்திற்கான அடிப்படைத் தளம், பாடவிதானச் சீர்தி ருத்தங்கள், சீர்திருத்தங்களைச் செய்யவேண்டிய கால இடை வெளிகள், நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் என் பனவற்றின் அடிப்படையில் பாடத்திட்ட மாற்றத்திற்கான நகலை முன்னெடுத்துச் செல்வதற்கு கால நிர்ணயம் தீர்மா னிக்கப்பட்டு ஜீலை 11, 2025-இல் அதற்கான விவாதங்கள், கருத்தாடல்கள் கல்வி அமைச்சினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

பழைய கல்வித்திட்டத்தில் உள்ள பாடவிதானத்தில் சில அடிப்படை மாற்றங்களை மேற்கொள்ள கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. குறிப்பாக வரலாற்றுப் பாடத்தை அனைத்து மொழிகளுக்கும், மதத்தினருக்கும் ஒரே தன்மை யில் 'இலங்கையின் வரலாறு' என்பதற்கமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றது. சிங்கள வரலாறு, தமிழ் வரலாறு, இஸ்லாமிய வரலாறு என்னும் பேதங்களை அகற்றி இலங் கையர் வரலாறு என மாற்றப்பட வேண்டும் என்பதன் தார்ப் பரியத்தை உணர்ந்து கொண்டு செயற்படுத்தப்படுவதாக கல்வி அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அடித்தளமிடப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் பாடவிதான மறுசீர மைப்பும் விருத்தியும், வளவாளர் மற்றும் ஆசிரியப் பயிற் சிகள், நிருவாக ஆளணியினரின் மறுசீரமைப்பும் உட்கட்ட மைப்பு விருத்தியும், கணிப்பீடும் மதிப்பீடும், சமூக விழிப்பு ணர்வுக்கான முன்னெடுப்புக்கள் என ஐந்து முக்கியமான தூண்களாக முன்வைக்கப்பட்டுள்ளன:

பிரதம அமைச்சர் இக்கல்வித்திட்டம் பற்றிக் குறிப்பிடும் போது 'இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தமானது புதியதோர் பாடப்புத்தகத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமல்ல, ஒட்டு மொத்த கல்வி முறைமையையும் மாற்றி அமைக்கும் ஒரு செயற்றிட்டமாகும். இந்த முறைமைக்குள் நாம் கண்டறிந்த பல முக்கிய பிரச்சினைகள் உள்ளன. பரீட்சைகளை மைய மாகக் கொண்ட இக்கல்வி முறைமையினால் சிறார்கள் மீது ஏற்படும் அழுத்தம், அதனால் பெற்றோருக்கு ஏற்படும் அழுத்தம், இவ்வாறான போட்டியினால் உருவாகி இருக்கும் தீமையான சமூக விளைவுகள் போன்ற அனைத்துப் பிரச் சினைகளுக்கும் விடை காண நாம் இக்கல்விச் சீர்திருத் தத்தின் மூலம் முயற்சிக்கின்றோம்' என விளக்கமளித்தார்.

மேலும், பாடத்திட்டத் திருத்தம், பாட உள்ளடக்கம், கல்வி, பாடசாலைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத் துதல், ஆசிரியர் பயிற்சி, அணுகுமுறை, கல்வித் துறையில் தொழில்முறை விருத்தி, மதிப்பீட்டு முறைகளைச் சீர்திருத் துதல் மற்றும் கல்விக் கொள்கைகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. பாலர் பாடசாலைக் கல்வி விருத்தி, தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளில் கல்விச் சீர்திருத்தங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கல்விச் சீர்திருத்த வரைபில் 2026-ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இதனடிப்படையில் இந்த சீர்திருத்தம் 2026-இல் தரம் 1 மற்றும் தரம் 6 ஆகிய இரு வகுப்புகளிலும் ஆரம்பிக்கப்பட உள்ளது. தரம் ஒன்று மற்றும் தரம் ஆறிற்கான நூல்கள் அச்சடிக்கப்பட்டு பாடசாலைக ளுக்கு விநியோகத்திற்குத் தயாராகி உள்ளன. 2027-ஆம் ஆண்டு தரம் 2, தரம் 7-இற்கான சீர்திருத்தங்களும் 2028-ஆம் ஆண்டில் தரம் 3, தரம் 8, தரம் 10 இற்கான சீர்திருத்தங் களும் 2029-இல் தரம் 4, தரம் 9, தரம் 11-க்கான சீர்திருத்தங் களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. 2030-ஆம் ஆண்டு 2031-ஆம் ஆண்டு முறையே தரம் 5, தரம் 12, தரம் 13-க்கான கல்விச் சீர்த்திருத்தங்கள் அமையும். தரம் 1 முதல் 13 ஆம் வகுப்பு வரை கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்தி ருத்தங்கள் குறித்து தேசிய கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள் இவ்வடிப்படையில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

2025-ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் அடிப்படையில் ஆரம்பக் கல்வியின் பாடங்களில் (1-5 வரை) பெரிதளவில் மாற்ற மில்லை. சிங்களம் / தமிழ் (வாசிப்பு நூலும் செயல் நூலும்), ஆங்கிலம், இரண்டாம் தேசிய மொழி, கணிதம், சமயமும் விழுமியக் கல்வியும், அடிப்படை விஞ்ஞானமும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடும், ஒன்றிணைந்த அழகியல், சுகாதாரமும் உடற்கல்வியும், இணைப்பாட விதான செயற்பாடுகள் என ஆரம்ப பிரிவுகள் தற்போது உள்ளது போலவே முதன்மை நிலைகளைக் கொண்டிருக்கும்.

இடைநிலைக் கல்விப் பாடவிதானத்தில் பல்வேறு கல்விச் சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. தரம் 6 முதல் தரம் 9 வரை கட்டாய பாடங்கள் 15 என வரையறுக்கப்பட்டுள்ளது. இது தவிர மாணவரின் கற்றல் திறனை அதிகரிக்கும் வகையில் சிறப்பு மொடியுள்கள் (Modules) 3 இடம்பெறு கிறது. ஒவ்வொரு மாணவனும் தன் திறனுக்கு ஏற்ப கணிதம், விஞ்ஞானம், மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்) முதலான




சிறப்புப் பாடங்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்யலாம். இது தவிர இரண்டு தெரிவு மொடியுள்கள் உள்ளன. இதற்கு இரண்டு சிறப்பு புள்ளிகள் (credits) வழங்கப்படும். இரண்டு மொடியுள்களில் ஒன்று விளையாட்டு மற்றும் சங்கங்கள், கழ கங்களில் பங்குபற்றுதலுக்கான புள்ளியாக அமையும். இவ்வ கையில் ஒரு தவணைக்கு 35 மொடியுள்கள் மாணவருக்குரி யதாக அமையும். வருடத்துக்கு 105 மொடியுள்கள் மாணவ ருக்குரியதாக அமையும். க.பொ.த (சா/த) பரீட்சைக்கு வரலாறு கட்டாய பாடமில்லை. ஆனால் தெரிவுப் பாடமாகவும் அமைகிறது.

மேலும், பாடத்திட்டத் திருத்தம், பாட உள்ளடக்கம், கல்வி, பாடசாலைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத் துதல், ஆசிரியர் பயிற்சி, அணுகுமுறை, கல்வித் துறையில் தொழில்முறை விருத்தி, மதிப்பீட்டு முறைகளைச் சீர்திருத் துதல் மற்றும் கல்விக் கொள்கைகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் ஆராயப் பட்டு வருகின்றன. இதனைவிட பாட நேரத்தின் அளவும் அதி கரித்துக் காணப்படுகிறது. உத்தேச கல்வித் திட்டத்தின்படி 50 நிமிடங்களைக் கொண்டதாக ஒரு பாடம் அமையும். ஒரு நாளைக்கு 7 பாடங்கள் கற்பிக்கும் சூழலில் காலை 7.30 மணிக்கு பாடசாலை தொடங்கி பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை நிறைவடையும். இதனால், இன்றுள்ள நேர அளவிலும் பார்க்க 30 நிமிடங்கள் அதிகரிக்கப்படும் எனப்ப டுகின்றது. இதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறது. பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் போர்வையில் மாற்றத்தை எதிர்க்கும் பழைமைவாதக் குரல்கள், உரையாடல்கள், மற்றும் ஆலோசனைகள், முக்கி யமானவையாக அமைந்தாலும், எதிர்ப்பானது முன்னேற் றத்தைத் தடுக்க அனுமதிக்கக்கூடாது. வாழ்வை வளம்ப டுத்தும் கல்வி நிலை, சமூகத்துடன் இணைந்தே உருவாக் கப்பட வேண்டும்.

'கல்வியைச் சீர்திருத்துவது எளிதானது அல்ல. நிதி ரீதியாகவோ அல்லது சித்தாந்த ரீதியாகவோ அரசாங்கம் கல்வியின் மீது ஏகபோக உரிமையைக் கொண்டிருக்க வில்லை. கடந்த அரசாங்கம், அரசின் பொறுப்பை மேலும் சுருக்கி தனியார்மயமாக்கப்பட்ட மாதிரியை ஊக்குவிக்க முயன்றது. தேசிய மக்கள் சக்தியின் (NPP) நிலைப்பாடு வேறுபட்டதாகத் தோன்றினாலும், பொதுக் கல்வியைப் பாது காப்பது, தனியார் வழங்குநர்களை ஒழுங்குபடுத்துவது மற்றும் பள்ளிச் சேர்க்கையில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பி ரயோகங்களை நீக்குவது, ஆங்கிலம் மற்றும் முக்கிய பாடங் களுக்கு போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை வழங் குவது என அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

'சீர்திருத்தம் அவசரமானது மற்றும் அவசியமானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அதை ஒரு தேசிய திட்டமாக அணுக வேண்டும். சந்தை சார்ந்த மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த இலக்குகளை மட்டுமே கருத்தில் கொண்டு அதனை அணுகக்கூடாது. பாடத்திட்டங்களை மாற்றுவதற்கு மட்டுமல்லாமல், முழு கல்வி முறையையும் - அதன் மதிப் புகள், அதன் விநியோகம், அதன் நிறுவனங்கள் மற்றும் அதன் நோக்கத்தை - மாற்றுவதற்கு அரசாங்கம் அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைக்க வேண்டும். அத்தகைய கூட்டு, நன்கு பரிசீலிக்கப்பட்ட முயற்சி இல்லாமல், தற்போதைய சீர்திருத்தங்கள் மேற்பரப்பைக் கீறி, உண்மையான பிரச்சினைகளைத் தொடாமல் விட்டுவிடக் கூடும்.' என இக்கல்விச் சீர்திருத்தம் பற்றி பேராசிரியர் கலாநிதி அத்துலசிறி சமரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இன்று முக்கியமாக செயற்கை நுண்ணறிவு, சவால்களின் அடிப்படையிலான கல்வி, ஆசிரிய பற்றாக்குறை, உளநலன், மாணவர்களின் பங்களிப்பும் ஈடுபாடும், வேலைக்கான தயார்நிலை என்பனவற்றைக் உள்ளடக்கியதாகக் கல்வி அமையவேண்டும் என்பதே பெற்றோரினதும் கல்வியாளர்களி னதும் எதிர்பார்ப்பாகும். கல்வி மாணவர்களிடம் தன்வயமான நல்ல எண்ணப்பாங்கு, வேலைவாய்ப்பிற்கான உறுதி, பங்க ளிப்பு, பயனுள்ள இலக்கு, திட்டமிடல் என்பனவற்றை அடிப்ப டையாகக் கொண்ட கல்வியே முக்கியமானது என்பதும் கல் வியியலாளர்களின் கருத்தாகும்.



sivapalu@thaiveedu.com




# ஆறு கட்டளைகள்

– குமார் புனிதவேல்

சுந்தரம் மாமா மரித்தபோது அவருக்கு வயது 96. முதியோர் வசிக்கும் தொடர்மாடிக் கட்டடத்தின் உயர் மாடியில் தனியாகத்தான் வசித்து வந்தார். மரணச்சடங்குகள் முடிந்த பின் அங்கு அவர் விட்டுச் சென்றவற்றை Salvation Army அமைப்பிற்குக் கொடுக்கும் பொறுப்பு என்னிடம் விழுந்தது. அந்த Appartment சென்று பார்த்தவேளை எனக்குப் பெரும் ஆச்சரியமான அறிவுரை ஆறு இருந்தது. அவர் வதித்த இடத்தில் தனி அறைகள் இல்லை. ஒரு கரையில் மலசல அறை, அதைவிட ஒரு பெரும் அறை கொண்டதுதான் அவர் வசித்த அறையின் அமைப்பு. அந்த அறையில் ஒரு கரையில் சமையல், மறு கரையில் கட்டில், யாரும் வந்தால் இருக்க நாலு கதிரைகள். சமையற் கட்டில்தான் சாப்பாடு.

அந்த அறையின் சுவற்றில் ஒரு பெரும் அதிசயம் எனக்குக் காத்திருந்தது. ஆமாம் அது ஒரு படமோ அல்லது சிலையோ அல்ல. ஆறு வசனங்களைச் சுந்தரம் மாமா தன் கைப்பட எழுதி இருந்தார். அவை பெரும் சிக்கலான மருத்துவ அறிவுரையோ அல்லது விஞ்ஞானக் கண்டுபிடிப்போ அல்ல. அந்த இரகசிய வசனம் அவரது எண்பதாவது வயதில் அந்த சுவரில் சிவப்பு நிற Chalk கட்டியால் எழுதி இருந்தார். அந்த ஆறு வசனமும் நீங்கள் 60, 70 அல்லது 80 ஆக இருப்பினும் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் வழி தெரிந்தால் பயணம் சிறப்பாக அமையும் என்பதால்அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். வாருங்கள் ஒவ்வொனறாகப் பார்ப்போம்.

- **ஆறுதலாக நடவுங்கள், நாள்தோறும் நடவுங்கள்:**

கால்கள் வயது காரணமாக வலு இழக்கும் வேளையிலும் சுவரைப் பிடித்துக் கொண்டாயினும் நடப்பதை நிறுத்துவது தவறாகும். மாமா எப்போதும் காலையில் அத்தொடர்மாடிக் கட்டடத்தின் அருகில் நடப்பதைக் கண்டுள்ளேன். சில காலத்தின் பின் கைத்தடியுடன் நடப்பதையும் கண்டுள்ளேன். கடைசிக் காலத்தில் அவர் கட்டடத்திற்குள் ஒரு சில்லுப் பூட்டிய கைத்தடியுடனும் நடப்ப



துண்டு. அது அவருக்கு மட்டுமல்ல நடப்பவர் அனைவருக்கும் உயிர்ப்புடன் இருப்பதை உணர்த்தும்.

### ● கதைப்பதற்கு ஒருவராவது வைத்திருங்கள்:

எவ்வளவு உண்மையான விடயம். மனிதர்களான நாம் எல்லோரும் குரங்கிலிருந்து பரிணாம மாற்றம் ஏற்பட்டு வந்தவர்களே. நாம் கூட்டாக வாழும் தன்மை உடையவர்கள். எம்மில் யாரையாவது தண்டிக்க வேண்டுமானால் எம்மைத் தனிமைப்படுத்துவதுதான் தண்டனை. நாம் எம்மைத் தண்டிக்கலாமா, எனவே தொடர்புகளை வைத்திருப்பது மாமா சொன்னதுபோல் மிகவும் அவசியமானதே. அதிலும் வயது ஏற ஏற நண்பர்கள் குறைந்துகொண்டு போவார்கள். எனவே கட்டாயம் கதைப்பதற்கு நண்பர் ஒருவரையாவது வைத்திருப்பது அவசியம் என்பது சிறந்த அறிவுரை. நேராகச் சந்திக்க முடியாவிடினும் தொலைபேசியைப் பாவிக்கலாம் அல்லவா? எனவே சுந்தரம் மாமா சென்னது போல் கதைக்க ஒரு நண்பரை வைத்திருங்கள்.

### ● கடந்த காலத்தைப் பற்றி குறை சொல்லாதீர்கள்:

எல்லோரையும் போல் அவருக்கும் பல பின்னடைவுகள் வரத்தான் செய்தன. ஆனால் அவை அவரை ஆதிக்கம் செய்ய அவர் விடவில்லை. அந்த இழப்புகளைக் கவனம் செலுத்தாமல் மனதைத் தேற்றிக்கொண்டு இப்போ எப்படி மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதில் முழுக்கவனத்தையும் செலுத்தினார். அவர் பெரும்பாலும் சொல்லுவது உண்டு நேற்று என்பது செல்லாக் காசு நாளை என்பது உறுதிக் கடிதம் ஆனால் இன்று என்பது கையில் உள்ள பணம். இது எவ்வளவு உண்மை. கையில் உள்ள பணத்தைச் செலவு செய்து கொண்டு அடுத்த மந்திரத்தை பார்ப்போம்.

### ● ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒன்றை இன்னொருவருடன் பகிரவும்:

இதனைப் பார்க்கும் போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. சுந்தரம் மாமா என்னைக் காணும் வேளைகளில் டொபி, இனிப்பு, புத்தகம் இதில் ஏதாவது ஒன்றைத் தருவார். பெரும் பணக்காரர் அல்ல அவர். ஆனால், தன்னிடம் உள்ள ஏதாவதொன்றைப் பகிர்ந்து கொள்ளாவிட்டால் அவருக்கு விடியாது. உண்மையில் நாம் எங்களிடம் இருக்கும் ஒன்ற, குறைந்தபட்சம் எங்களிடமிருக்கும் புன்னகையையாவது நாம் மற்றவர்களுடன் பகிரும் போது அது எங்களுக்கும் அவர்களுக்குமிடையில் நெருக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாம் இந்த உலகில் வாழும் மகிழ்ச்சியான தருணங்களையும் எங்களுக்கு திரும்பத்தருகிறது.

### ● குற்ற உணர்வு இல்லாமல் ஓய்வெடுங்கள் உடம்பு வாழும் வேளையில் களைப்பு அடைவது இயல்பானதே:

எனவே மதிய வேளையில் சற்று ஓய்வு எடுக்கத் தயங்குவதில் தவறு இல்லை. மாமா இரவு துயில் கொள்வது போல் மதிய போசனத்திற்குப் பின் சிறு தூக்கம் கொள்வது அவர் உறவினர் அனைவருக்கும் தெரியும். குறிப்பாக வயது முதிரும் வேளையில் சிறுதூக்கம் போடுவது தவறில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இதனால்தான் அவர் 96 வயதுவரை வாழமுடிந்தது என்பேன்.

### ● விடியலைத் தந்த கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்:

இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது காலையில் எழுந்தவுடன் சிறிதுநேரம் கண்களை மூடிக்கொண்டு வாய்க்குள் முணுமுணுப்பார்.

பின் கண்களைத் திறந்தவுடன் என்னைப் பார்த்து புன்னகைத்து காலை வணக்கம் சொல்வார். அதற்கு நான் அவரிடம் திரும்பிக் கேட்டேன் ‘மாமா என்ன வாய்க்குள் முணுமுணுதீர்கள்’ என்று அதற்கு அவர் சொன்ன பதில், ‘ஒவ்வொரு சூரிய உதயமும் ஒரு புது நாளின் ஆரம்பம். அதற்கு நன்றி சொல்ல வேண்டும் அல்லவா? அதனால் தான் அந்தப் புதுநாளைத் தந்தவனுக்கு நன்றி சொல்கிறேன்’ என்றார்.

இன்று அவர் இல்லாது இருக்கலாம் ஆனால், அவர் எமக்கு வாழ வழி சொல்லியுள்ளார். அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். நீங்கள் 60, 70 அல்லது 80 வயதுடையவராக இருக்கலாம். ஆனால், அவர் விட்டுச் சென்றுள்ள இந்த வாசகங்கள் உங்களுக்கு உதவும் என நான் நம்புகிறேன். நீங்களும் இதைப் பின்பற்றிப் பயனடைய வேண்டும் என விரும்புகிறேன்.

வாழ்க நெடும் வாழ்க்கை.



kumar.punithavel@thaiveedu.com

# தெருவழிப் புதினங்கள்

■ பஞ்சகல்யாணி

**சி**ன்னக் காலத்தில தெரு என்று நினைச்சாலே வேலிகளும் அதில் வரிசையாப் பூவரசுகளும், வளைந்து தெருவிற்குப் பந்தலமைக்கும் அதன் கொப்புகளும், மஞ்சள் நிறப் பூக்களும்தான் ஞாபகம் வரும். அப்பப்போ மசுக்குட்டி (மயிர்க்கொட்டி)களும் மேலேயிருந்து கீழ இறங்கிக்கொண்டிருக்கும். தோட்டத்தில் அடுத்த பயிரேற்றும் போது பசளைக்காக இந்த மரமெல்லாம் மொட்டையடிக்கப் படும்.

காலம் செல்லச் செல்ல வேலிகள் மதில்களாகி மதிலில ஓட்டை போட்டுக் குளிக்கிற தண்ணி எல்லாம் றோட்டுக்கு வந்திச்சு. மதிலுக்கேன் தண்ணி?

முந்தி றோட்டு வழிய அடிசாராய் வாகனங்கள் போறேல்ல. தட்டிவான், மாட்டு வண்டில், சைக்கிள் இவைதான் அப்பப்ப போகும். சின்னப் பெடியள் சிட்டாகத் தெருவழிய ஓடித் திரிவினம். ஒளிச்சுப்பிடிச்சு விளையாட்டெல்லாம் ஒரு மதிலுக்கை முடங்காமல் பல வீடுகளைச் சேத்து நடக்கும். கண்டுபிடிக்கிறது பெரிய வேலைதான்.

எங்கட தெருவில முந்தி வீட்டுக்கொரு நாய் நிக்கேல்ல. ஒண்டோ ரண்டு நாய்தான் ஊரில கண்டதாக ஞாபகம். அதால, தெருவை நாய்கள் அசிங்கப்படுத்தேல்ல. போற வாறவையைத் துரத்திக்கொண்டும் போகேல்ல. குறுக்கை ஓடி விபத்தும் நடக்கேல்ல. ‘கடி நாய் கவனம்’ பலகையும் இல்லை.

இப்ப மாதிரி வெள்ளம் தெருவழிய தேங்கிக் குளம் அமைக் கிறேல்ல. மழை விடேக்க வெள்ளமெல்லாம் அப்படியே குளத்தை நோக்கி ஓடி மறைஞ்சுபோம். தெருவின் இரு கரையிலும் அலை அலையாய் மண் சேர்ந்திருக்கும். சிலர் அது தங்கட வீட்டு மண் என்று அள்ளி உள்ள போடுவினம்.

ஊரிலேயிருந்து வெளியால போகப் போகத் தெருக்காட் சிகள் வித்தியாசப்படும். சில ஊர்களில மக்கள் எப்பவுமே தெருக் கரையிலதான் கூடியிருப்பினம். சம்பாசனைகள், காட்ஸ் விளையாட்டு, குழந்தைகள் கக்கா இருக்கிறது எல்லாம் நடக்கும். சிலர் அனந்தசயனம் போலப் படுத்திருப்பினம். இது அன்றும் இன்றும்கூட அதே மாதிரி இருக்கிறதுதான் ஆச்சரியம்.



tg.theeban@gmail.com



சில இடங்களில மாடு ஆடுகள் நடுத் தெருவில உல்லாசமாப் படுத்திருந்து அசை போடுவினம். எந்தச் சத்தத்துக்கும் அவை குழம்பிறேல்ல. மனிசர்கள் கூட நடுத்தெருவில நிண்டு கதைப்பினம்; விலத்தாயினம். எங்கட ஊருக்க நாங்கள் எப்பிடியும் நிப்பம் எண்டுறது அவேன்ர நியாயம்.

தோட்டங்கள், வயல்கள் நிறைந்த கிராமத் தெருக்களூடா மோட்டார் சைக்கிளில போறது இனிமையான அனுபவம். பூனை குறுக்கால போனால் சகுனம் பிழை எண்டுறவை. அணில் போனால் நல்லதெண்டுவினம். ஆனால் இந்த அணில் ஒரு அவசரக் குடுக்கை. ஒரு முடிவை எடுக்கத் தெரியாமல் வாகனத்துக்குக் குறுக்க மறுக்கை ஓடி அடிக்கடி தெருவில செத்துக்கிடக்கும். ஓணான் பின் காலைத் தூக்கிக் கொண்டோடும். ஆபத்தெண்டால் அப்படியே நிண்டு தலையைத் தூக்கிப் பாக்கும். உடும்பு, பாட்டி கண்ணைக் கூசி வாசிக்குமாப் போல, தெருவில ஏதோ தேடுமாப் போல போகும். ஆனால் ஆபத்தெண்டால் ஓடி ஒளிச்சிடும். மாரி காலங்களில முதலைகள் தெருவிற்குக் குறுக்க படுத்திருக்கும்.

கௌதாரிகள் தெருவில் ஆட்களைக் கண்டால் கிடு கிடென்று சின்ன அடி வைத்து ஓடுவினம். நீர்க்கோழி நீண்ட கால்களால் எட்டி அடி வைத்து மறையும். செண்பகம்தான் அடிக்கடி தெருவிற் செத்துக்கிடக்கும். அதனால அருகிவரும் இனமாயும் போட்டுது.

மாரிகாலத்தில வெள்ள மதகுகளடியில நிண்டு தடியால குத்தி மீன்பிடிப்போரை நான் கண்டிருக்கிறன். மதகுகளில குந்தியிருந்து ஊர் நடப்புப் பேசுவோரும் உள்ளனர். மாரி தொடங்கேக்க வலசைப் பறவைகளான விதம் விதமான கொக்குகள் கண்கொள்ளாக் காட்சி.
கரண்ட் கம்பிகளில உல்லாசமாய் உட்கார்ந்திருக்கும் நீலப் பஞ்சுருட்டான், பச்சைப் பஞ்சுருட்டான், கரிக்குருவி, மீன் கொத்தி, பனங்காடை, செம்பருந்து, கரும்பருந்து, முகவெள்ளைப் பருந்து என்று பல பறவைகளைத் தரிசிக்கலாம்.

வயற்கரைத் தெருக்களெல்லாம் அறுவடை காலத்தில பொன்னாய் மின்னும். மணிப்புறா, மாடப்புறா, காகம், நெற்குருவி, கோழி எல்லாம் தெருவிற் காயும் அந்த நெல்லைப் பகிர்ந்து கொள்வினம். போக்குவரத்துக்கு இடைஞ்சலான அந்த நெற்கள் உயிர்களையும் குடித்துள்ளன. சில தெருக்களில் கொப்பறாகூடக் காயும்.

மண் கடத்தற்காரர்கள் பொலிஸாரைக் கண்டவுடன மண்ணைத் தூவியபடி செல்ல தெருவெல்லாம் வெண் கம்பளம் விரித்துக் காணப்படும். அதில வாகனம் ஓடுறது சிரமம். இந்தக் காலத்தில தெருக்கரையிலுள்ள மரங்க ளெல்லாம் மனிதர்களின் புண்ணியத்தில் பம்பஸ் கட்டியுள்ளன. ஆனாலும் மண்ணிற நிறத்தில் பனம் பூக்களும் மஞ்சள் நிறத்தில் ஆலம் விதைகளும், வாகைப் பூக்களும் ஊதா நிற நாவற்பழங்களும் சிவப்பு நிறத்தில் உதிர்ந்த புளியம் இலைகளும் தெருவை அலங்கரிக்கக் கண்டுள்ளேன். அத்துடன் துப்பாக்கி முனையில் தெருவில் வீழ்ந்து கிடந்த ‘உயிர்ப் பூக்களையும்’ நான் என் காலத்திற் கண்டுள்ளேன்.



Panchakalyany@thaiveedu.com

# பனிக்கால வாகனப் பராமரிப்பு

–செந்தூரன் புனிதவேல்



thanavishnu@gmail.com

பனிக்காலத்தில் வாகனம் செலுத்துவதும் பராமரிப்பதுவும் தனிக் கலையாகும். குளிர் மிகுதியால் நீர் கட்டியாகி இருக்கும் வேளையில் வாகனத்தை அவதானமாகச் செலுத்துவதுடன் அதனைத் தக்கமுறையில் பராமரிப்பதுவும் மிகவும் முக்கியமாகும். இங்கு குறிப்பாக வாகனத்தைப் பராமரிக்கும் முறைபற்றிக் கவனிப்போம்.

- பனிக்கால டயர்களை வாகனங்களுக்கு மாற்ற வேண்டும்.

பொதுவாகப் பாவிக்கும் டயர்களைவிட பனிக்கால டயர்கள் மென்மையான இறப்பர்களால் அமைக்கப்பட்டிருக்கும். அது குளிர் கூடும் வேளைகளிலும் விறைத்து இறுக்கப்படாது இருப்பதுடன் அவை ஆழமான அமைப்புடன் இருப்பதனால் பனி பொழியும் வேளையிலும் கட்டியாக இருக்கும் வேளையிலும் வழுக்கிக் கொண்டு செல்லாமல் நிற்பதற்கு உதவும். அது வாகனத்தைச் செலுத்துவதற்கு அனுசரணையாகவும் இருக்கும். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் சில.

- டயர்கள் மாற்றும் வேளையில் நான்கு டயர்களையும் ஒரே நேரத்தில் மாற்றுவது அவசியம். அவைகள் ஒரே அளவு சமச்சீராக இயங்குவதனால் விபத்துகளைத் தவிர்க்கும்.
- டயர்களில் காற்று அழுத்தங்களைக் கவனிப்பது மிக அவசியம். ஒவ்வொரு ஐந்து பாகை வெப்ப நிலை குறையும் வேளையிலும் காற்று அழுத்தம் ஒரு P.S.I-யினால் குறையும்.
- டயர்களில் உள்ள வெட்டுகள் (Tread) குறைந்தது 4 மில்லி மீட்டராக இருப்பது அவசியமாகும்.

டொரன்டோவில் பனிக்கால டயர்கள் பாவிக்க வேண்டும் எனும் நிபந்தனை இல்லையாயினும் காப்புறுதி அமைப்புகள் பனிக்கால டயர்கள் பாவிப்பவர்களுக்கு விலைக் கழிவு தருவது வழக்கமாகும்.

- வாகனங்களில் பாவிக்கும் திரவங்களைக் கவனிப்பதுடன் மாற்றவும் வேண்டி வரலாம். குறிப்பாக கீழ்கண்டவற்றைக் கவனிக்கவும்.

- எஞ்சின் எண்ணெய் செயற்கை எண்ணெய் இதனை சின்தடிக் எண்ணெய் என்பர். இதுவே குளிர்காலத்திற்கு சிறந்ததாகும். குளிர் காலத்தில் இந்த எண்ணெய் வாகனங்களை இயக்குவதற்கு அனுசரணையாய் இருக்கும்.
- வாகன வெப்ப தணிப்புத் திரவம் தகுந்ததாய் கடும் குளிரில் கட்டியாய் மாறாததாய் இருப்பதவசியம். மிகக் குளிரில் வெளியில் நிறுத்தி வைக்கப்படும் வாகனத்தில் நீர் கசிவு (Leak) ஏற்பட சந்தர்ப்பம் உள்ளதைக் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியம்.
- முன் கண்ணாடி கழுவும் திரவம் குளிர் காலத்திற்குத் தகுந்ததாய் இருப்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். முன்னால் பாதை தெளிவாக தெரிவது மிக அவசியமாகும்.
- பிரேக்கிற்குப் பாவிக்கும் திரவம் (Brake oil) பழையதாக அல்லது பழுதுபட்டு இருப்பின் ஆபத்தாகும். எனவே குளிர்கால ஆரம்பத்தில் கவனித்து அதைத் தேவையானால் மாற்றி புது திரவத்தை நிரப்பவும்.

- மூன்றாவது முக்கிய விடயம் மின்கலம் அல்லது பட்டரியாகும். குறிப்பாக வெளியில் வெப்பம் - 18ºC ஆக இருக்கும் வேளையில் மின்கலம் 40% மட்டுமே செயலாற்று திறன் உடையதாக இருக்கும்.

மேலும் இணைப்புகள் ஒழுங்காக இருக்கிறதா அல்லது துருப் பிடித்து இருக்கிறதா எனக் கவனிக்கத் தவறாதீர்கள்.

- வாகனத்தின் உள்பக்கத்தை வெப்பமாக வைத்திருப்பதுடன் கண்ணாடிகளில் நீர் படியாது இருப்பது மிகவும் அவசி யமானது. அதற்குத் தக்கமுறையில் பழுது பார்த்து வைப்பதுடன், வாகனத்தில் பனி சுரண்டுவதற்கான Snow Scraper இருப்பதுடன் பனித்தூரிகை அதாவது Snow Brush ஆகியன வைத்திருப்பது மிக அவசியம்.

வாகனத்தில் அவசர தேவைக்காக ஓர் அவசர பாவனைப்பை அதாவது Emergency Kit வைத்திருப்பது மிக அவசியமாகும். அதில் இருக்க வேண்டியவை.

- பூஸ்டர் கேபிள் (Booster Cabel) அல்லது ஜம்ப்ங்டாட்டர் (Jump Starter)
- டார்ச்லைட் - மேலதிக பட்டரிகளுடன்
- கம்பளி கையுறை மற்றும் குளிர் தாங்கும் உடை
- பனிக்கட்டி சுரண்டி, பனித்தூரிகை
- பழுதாகாத உணவும் தண்ணீர்ப் போத்தலும்
- சின்ன சவள் (Small Shovel)
- அவசர சிகிச்சை மருந்து (First Aid Kit)

இவ்வளவு நேரமும் வாகனத்தில் செய்ய வேண்டியதைக் கவனித்தோம். ஆனால் அதனிலும் முக்கியமானது ஒன்று உண்டு அதுதான் சாரதி. அவர் அவசரப்படாமல் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தினால் பனிக்காலத்தை இடர் இல்லாமல் கழிக்கலாம்.

துன்பமில்லா பனிக்காலத்திற்கு வாழ்த்தி இக்கட்டுரையை முடிக்கிறேன்.



senthuran.p@thaiveedu.com


# ஜனவரி 02,

**வெள்ளிக்கிழமை**
**மாலை 6 மணி**

அண்ணாமலைப் பல்கலைக்கழக ரொறன்ரோ வளாகம்
Unit 101-1240, Ellesmere Road
Scarborough, ONT
Midland / Ellesmere



# உலகின் நாகரிக நகரம் மிலன்

– குரு அரவிந்தன்

வடக்கு இத்தாலியில் உள்ள லோம்பார்டியன் பிராந்தியத்தின் தலைநகரமாக மிலன் இருக்கின்றது. இது இத்தாலியின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாகும். இதன் நிலப்பரப்பைக் கணக்கிட்டால், இத்தாலியின் மிகப்பெரிய நகரமாக மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியத்தில் நான்காவது பெரிய நகரமாகவும் மிலன் இருக்கின்றது.

தட்டையான நிலஅமைப்பைக் கொண்ட மிலன் நகரம் போ என்று அழைக்கப்படும் பள்ளத்தாக்கின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. தெற்கே போ நதிக்கும் ஆல்ப்ஸின் அடிவாரத்திற்கும் இடையில் உள்ளது. வடக்குப் பக்கத்தில் கோமோ ஏரி, மாகியோர் ஏரி மற்றும் லுகானோ ஏரி போன்றவற்றைக் கொண்டது. மிலன் நகரத்திற்கு மேற்கே டிசினோ நதி மற்றும் கிழக்கே அட்டா ஆகியன இருக்கின்றன. அதி உயரமான இடம் கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரத்தில் உள்ளது. மிலன் மூன்று பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்டிருப்பதால் அதன் புவியியல் அமைப்பு காரணமாக, ஐரோப்பாவில் மிகக் குறைந்த காற்றின் தாக்கம் உள்ள நகரங்களில் ஒன்றாக இருக்கின்றது.

இத்தாலியில் உள்ள இருபது பிராந்தியங்களில் ஒன்றான லோம்பார்டியின் தலைநகராக மிலன் உள்ளது. லோம்பார்டி இத்தாலியின் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியாகும், பத்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றனர், இது மொத்தத்தில் இத்தாலியின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஆறில் ஒரு பங்கு. இது இப்போது ஐந்து ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 80 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பிராந்திய கவுன்சிலால் நிர்வகிக்கப்படுகிறது. மிலன் நகரத்தில் இரண்டு விமான நிலையங்கள் இருக்கின்றன. வடமேற்கில் உள்ள மால்ப்பென்ஸாவில் சர்வதேச விமான நிலையமும் கிழக்கே சிறிய லினேட் விமான நிலையமும் இருக்கின்றன.

இத்தாலியில் உள்ள இந்த மிலன் நகரம் பொ.ஆ.மு. 590-களில் செல்டிக் பழங்குடியினரால் நிறுவப்பட்டதாக வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. செல்டிக் மொழியைப் பேசியவர்களை செல்டிக் என்று அழைத்தார்கள். இவர்கள் ஐரோப்பா மற்றும் இந்தோ அனடோலியா மக்களாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. மிகப்பெரிய செல்டிக் சரணாலயம் ஒன்று இங்கே இருந்ததாகவும் தொடக்கத்தில் மத வழிபாட்டிடமாகவும் அதன் பின் இராணுவ மையமாகவும் விளங்கியதாகவும்




thanavishnu@gmail.com



தெரிகின்றது. இந்த நகரம் பொ.ஆ.மு 222-களில் உரோமானியர்களால் கைப்பற்றப்பட்டது. உரோமானியர்கள் இந்த நகரத்தின் பெயரை 'மெடியோலனம்' என மாற்றி மேற்கு உரோமானியப் பேரரசின் தலைநகராக பிரகடனம் செய்தனர்.

1796-ஆம் ஆண்டு நெப்போலியன் இத்தாலி மீது படையெடுத்ததைத் தொடர்ந்து மிலன் நகரம் சிசல்பைன் குடியரசின் தலைநகராக அறிவிக்கப்பட்டது. அதன் பின் அவர் மிலனை இத்தாலிய இராச்சியத்தின் தலைநகராக அறிவித்து கதீட்ரலில் இத்தாலியின் மன்னராகத் தன்னை முடிசூட்டிக் கொண்டார். நெப்போலியனின் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்ததும் வியன்னா காங்கிரஸ் 1815-ஆம் ஆண்டு லோம்பார்டி மற்றும் மிலனை ஆஸ்திரிய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது.

1859-ஆம் ஆண்டு சோல்பெரினோ போரில், பிரான்சும் இத்தாலியும் இணைந்து ஆஸ்திரிய இராணுவத்தைத் தோற்கடித்ததால், மிலன் மற்றும் லோம்பார்டியின் மீதமுள்ள பகுதிகள் பீட்மாண்ட் சார்டினியாவில் இணைக்கப்பட்டன. இதன்பின் மற்ற அனைத்து இத்தாலிய மாநிலங்களையும் ஒன்றாக இணைத்து, 1861-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் திகதி அன்று இப்போதுள்ள இத்தாலிய இராச்சியம் உருவாக்கப்பட்டது.

இன்று மிலன் நகரம் இத்தாலியின் பொருளாதார தலைநகராகவும், தொழில், கலை மற்றும் சுற்றுலாத் துறையின் முக்கிய சர்வதேச மையமாகவும் கருதப்படுகிறது. சர்வதேச இணைப்பின் அடிப்படையில், 500 ஐரோப்பா நிறுவனங்கள் உட்பட ஏராளமான தேசிய நிறுவனங்களின் தலைமையகங்கள் இங்கே இருக்கின்றன. நியூயோர்க், லண்டன், பாரிஸ் போல மிலன் நகரமும் முக்கிய சர்வதேச சுற்றுலாத் தலமாகவும் நாகரிக கலாசார நகரமாகவும் மக்களால் அதிகம் பார்வையிடப்படும் நகரங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்த வரையில் ரோம் நகரத்திற்கு அடுத்தபடியாக இத்தாலியில் இரண்டாவது இடத்திலும், ஐரோப்பாவில் ஐந்தாவது இடத்திலும், உலகில் பதினாறாவது இடத்திலும் உள்ளது. உலகப் புகழ் பெற்ற லியோனார்டோ டாவின்சியின் முக்கிய படைப்புகளைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன்றும் இங்கே உள்ளது.

நவநாகரிக ஆடை அணிகளின் பிரபல நகரமாக மிலன் இருக்கிறது. மிலன் பாஸன் வீக் மற்றும் மிலன் தளபாடக் காட்சி போன்ற பல புகழ் பெற்ற சர்வதேச காட்சி நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள் இங்கே வருடந்தோறும் நடைபெறுகின்றன. 2023-ஆம் ஆண்டு மிலன் நகரில் நடத்தப்பட்ட நவநாகரிக உடை அணியும் காட்சியில் பாலியல் நோய் பரவல் சார்ந்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் சுமார் 2 இலட்சம் சிகப்புநிற ஆணுறைகள் குவிக்கப்பட்டு அதற்கு மத்தியில் 'பாஸன்சோ' ஒன்று நடத்திக் காட்டப்பட்டது. இதில் பங்குபற்றிய பெண்கள் அதற்கு முன்னால் அழகுநடை நடந்து பார்வையாளர்களின் கவனத்தைத் திருப்பியிருந்தனர்.

இந்த நகரம் பல விலை உயர்ந்த சொகுசு ஹோட்டல்களையும் கொண்டிருக்கின்றது. இரண்டு தடவைகள் 1906-ஆம் ஆண்டும் மற்றும் 2015-ஆம் ஆண்டும் 'யுனிவர்சல் எக்ஸ்போ' காட்சிகளை நடத்தியது. விளையாட்டுத் துறையிலும் ஐரோப்பாவின் மிகவும் வெற்றிகரமான இரண்டு கால்பந்து அணிகளான 'ஏசி மிலன்' மற்றும் 'இன்டர் மிலன்' குழுவினரைக் கொண்டது. ஐரோப்பாவின் முக்கிய கூடைப்பந்து அணிகளில் ஒன்றான ஒலிம்பியா மிலனே குழுவினரின் இடமும் மிலனேயாகும். 2026-ஆம் ஆண்டில் அதாவது அடுத்த ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் மற்றும் பராவொலிம்பிக் விளையாட்டுகளை முதன்முறையாக இங்கு நடத்த இருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற போது, உரோமர் கைப்பற்றிய இடங்களில் எல்லாம் அம்பித் தியேட்டரைக் காணமுடிந்தது. அதேபோல மிலனிலும் ஒரு அம்பித்தியேட்டர் இருந்ததற்கான அடையாளங்கள் இப்பொழுதும் இருக்கின்றன. உரோமானிய அம்பித்தியேட்டரில் உரோமானிய இத்தாலியில் மூன்றாவது பெரிய அம்பித் தியேட்டராக இது இருக்கிறது. 1629-ஆம் ஆண்டு மிலனில் ஏற்பட்ட பிளேக் தொற்று நோய் காரணமாகப் பலர் மரணித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரலாற்றில் ஹிட்லரைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லையோ, அதேபோல அக்காலத்தில் இருந்த பாசிச சர்வாதிகாரியான பெனிட்டோ முசோலினி பற்றித் தெரியாதவர்களும் இருக்கமுடியாது. இவர் மிலனில்தான் தனது அரசியல் மற்றும் பத்திரிகை வாழ்க்கையை கட்டியெழுப்பினார், மேலும் அவரது பாசிச ஆதரவாளர்கள் முதன்முறையாக மிலன் நகரத்தின் பியாஸ்ஸா சான் செபோல்க்ரோவில்தான் தமது பேரணியை நடத்தினார்கள்.

இத்தாலிய கட்டடக்கலை வரலாற்றில் மிலன் மிக முக்கியமான மையங்களில் ஒன்றாக இருந்து வருகிறது, கலை இலக்கிய வரலாற்றின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளது, மேலும் பல நவீன கலை இயக்கங்களின் ஆரம்ப



இடமாகவும் இருந்து வருகிறது. மிலன் நகரத்தில் பார்க்க வேண்டிய சில இடங்கள் இருக்கின்றன. சுற்றுலாப் பயணி களின் ரசனைக்கு ஏற்றபடி அவர்கள் விரும்பிய இடங்க ளுக்குச் சென்று பார்க்கலாம். வரலாற்றுப் புகழ்பெற்ற இடங் களும் சில இருக்கின்றன. அதில் சிலவற்றை இங்கே தரு கின்றேன். நீங்கள் மிலனில் தங்கியிருக்கும் நாட்களைப் பொறுத்து முக்கியமான இடங்களைத் தெரிவு செய்யலாம்.

மிலன் கதீட்ரல், சாண்டா மரியா டெல்லே கிரேசி தேவாலயம், கிராண்ட் கேலரியா விட்டோரியோ இமானுவேல், காஸ் டெல்லோ ஸ்போர்செஸ்கோ, சாண்ட் அம்ப்ரோஜியோ, லியோனார்டோ டா வின்சி தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம், மிலன் தொல்பொருள் அருங்காட்சி யகம், லா ஸ்கலா ஓபரா, ஏசி மிலன் சான் சிரோ ஸ்டேடியம், பார்கோ செம்பியோன், பசிலிக்கா டி சான் லோரென்சோ, டோரே பிராங்கா போன்ற சில இடங்களை உங்கள் விருப்பத் திற்கு ஏற்ப சென்று பார்க்கலாம்.

அனேகமான சுற்றுலாப் பயணிகள் விரும்பிச் செல்லும் இடமாக கலரியா விட்டோரியோ இமானுவேல்-11 என்ற கண்ணாடிக் கூரை கொண்ட பெரிய அங்காடி ஒன்று இங்கே இருக்கிறது. விலையுயர்ந்த பொருட்களைக் கொண்ட கடை கள், மதுசாலைகள், உணவகங்கள் போன்றவை இங்கே இருக் கின்றன. 1867-ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த அங்காடி டுமோமோ மற்றும் லா ஸ்காலாவின் சதுரங்கங்களை இணைக் கிறது. மொடலிங் செய்யும் அழகிய பெண்கள் விலையுயர்ந்த பொருட்கள் விற்பனையாகும் இந்த அங்காடிக்கு அடிக்கடி வருவதால், அவர்களைப் புகைப்படம் எடுக்க ஊடகவிய லாளர் கூட்டம் கமெராவுடன் பரபரப்பாகத் தயாராகக் காத்து நிற்பதை எல்லா வாசல்களிலும் பார்க்கமுடியும்.

மிலன் கதீட்ரல் தேவாலயத்தைக் கட்டுவதற்கு 1386-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நிறைவடையாமல் சுமார் ஐந்து நூற்றாண்டு காலம் இழுக்கப்பட்டு 1985-ஆம் ஆண்டுதான் ஓரளவு கட்டி முடிக்கப்பட்டது. மிலன் கதீட்ரல் தேவாலயம் உலகின் வேறு எந்தக் கட்டடத்தையும் விட அதிக சிலைகளைக் கொண்டுள்ளது. சுமார் 3,159 சிலைகளும், படங் களும் இங்கு இடம்பெற்றிருக்கின்றன. அவற்றில் 2,245 படங் கள் கட்டடத்தின் வெளிப்புறத்தில் காணப்படுகின்றன. கதீட் ரலின் மிகவும் பிரபலமான உருவச்சிலையான லிட்டில் மடோனா, 3,900 தங்க இலைகளால் மூடப்பட்ட மிக உயரமான கோபுரத்தின் மேல் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை யில் அறையப்பட்டதாகக் கூறப்படும் ஓர் ஆணியும் கதீட்ரலில் உள்ளதாக அங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உங்களுக்கு நேரமும் ஆர்வமும் இருந்தால், சாண்டா மரியா டெல்லி கிரேஸி பசிலிக்காவில் உள்ள ‘கடைசி விருந்து’ என்ற பிரபலமான ஓவியத்தைச் சென்று பார்க்கலாம். லியனாடோ டாவின்சியின் மிகவும் பிரபலமான இந்த ஓவியம் சாப்பாட்டு அறையில் எவ்வாறு இருக்கிறது என்பதையும் பார்க்கலாம். காரணம் இந்தக் கட்டடம் 1943-ஆம் ஆண்டு குண்டுவீசித் தாக்கப்பட்ட போதிலும், இந்தச் சுவரோவியம் சில பாதிப்புக் களுடன் தப்பியிருந்தது.

பண்டைய ரோமானிய நகரத்தின் சில எச்சங்கள் மட்டுமே இப்பொழுது இங்கே உள்ளன, குறிப்பாக நன்கு பாதுகாக்கப் பட்ட கொலோன் டி சான் லோரென்சோ. நகர வாயில்களில் கட்டப்பட்ட பெரிய பசிலிக்காக்களில் சாண்ட் அம்ப்ரோ ஜியோ, ப்ரோலோவில் உள்ள சான் நசாரோ, சான் சிம்பிளி சியானோ மற்றும் சாண்ட்யூஸ்டோர்ஜியோ போன்றவை இன்னும் இடிபாடுகளுக்கு நடுவே காட்சிதருகின்றன.

19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அமைதி வளைவை அதன் தோற்றத்தை மிலனின் ரோமானிய சுவர்களின் வாயிலில் காணக்கூடியதாக இருக்கின்றது. லோம்பார்டியில் உள்ள நியோகிளாசிக்கல் கட்டடக் கலையின் சிறந்த எடுத்துக்காட்டு களில் ஒன்றான மிலனின் ராயல் வில்லா இருக்கிறது. காஸ்டெல்லோ ஸ்ஃபோர்செஸ்கோ கோட்டை இங்குள்ள ஒரு வரலாற்று முக்கியம் வாய்ந்த கோட்டையாக இருக்கிறது.

நாகரிகத்தில் முன்னிற்கும் ஒரு நகரத்தையும், வரலாற்றுச் சின் னங்களைக் கொண்ட நகரத்தையும் ஒன்றாகப் பார்க்க விரும் கிறவர்களுக்கு மிலன் சிறந்ததொரு நகரமாகும்.

**உசாத்துணை:**

- https://en.wikipedia.org/wiki/Milan



kuruaravindan@thaiveedu.com

# வணிகத்தின் நிழலில் திசைமாறும் இசையின் உலகும்

அர்ச்சனா கஜவரன்

மனிதன் உருவாக்கிய கலை வடிவங்களில் மிக நுண்மையானதும் ஆழமானதுமாக விளங்குவது இசையாகும். மனித உணர்வுகளின் அற்புத மொழியே இசை. காலம் கடந்தும் கலாசாரம் மாறியும் மனதை நெகிழச் செய்யும் அற்புத சக்தி இது. மனிதனின் உள்ளுணர்வை, ஆன்மாவை ஒன்றிணைக்கும் கலை இதுவே. ஆனால் இசை என்பது காலத்தோடு மாறும் கலை வடிவமாகும். இன்று அந்தக் கலையுலகம் புதிய திசை நோக்கி நகர்கிறது.

> **மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவும், இறை வழிபாடு மற்றும் சமூகம் கொண்டிருந்த பண்பாட்டு ஒற்றுமையை வெளிப்படுத்தவும் இசை துணைபுரிந்தது. பாரம்பரிய காலம் முதல் இசை ஒரு கலை வடிவமாகவும், ஆன்மீக அனுபவமாகவும், சமூக மற்றும் கலாசார அடையாளமாகவும் இருந்து வருகின்றது.**

இசை எனும் சொல் ‘இணைதல்’ என்ற பொருளிலிருந்து வந்தது. இது ஒலி, மனம், ஆன்மா என்பவை ஒன்றாக இணையும் நிலையாகும். முன்னொரு காலத்தில் இசை ஒரு தியானம், ஒரு வழிபாடு எனக் கருதப்பட்டது. சங்ககாலப் பாடல்களில் இசையின் புனிதத் தன்மை அழகாக வெளிப்படும். யாழ், முழவு, பறை போன்ற இசைக்கருவிகள் மக்களின் வாழ்வியலுடன் ஒன்றி இருந்தன. மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவும், இறை வழிபாடு மற்றும் சமூகம் கொண்டிருந்த பண்பாட்டு ஒற்றுமையை வெளிப்படுத்தவும் இசை துணைபுரிந்தது. பாரம்பரிய காலம் முதல் இசை ஒரு கலை வடிவமாகவும், ஆன்மீக அனுபவமாகவும், சமூக மற்றும் கலாசார அடையாளமாகவும் இருந்து வருகின்றது.

காலப்போக்கில் புதிய சிந்தனைகள் இசையின் நோக்கத்தை மாற்றியமைத்தன. தமிழிசையில் தொடங்கி, சாஸ்திரிய இசை, மேலைத்தேய இசை, மெல்லிசை, திரையிசை எனப் பல பரிணாமங்களை இசை அடைந்துள்ளது. ஆனால் இன்றைய நவீன சூழலில் குறிப்பாக 21-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் காலகட்டத்தில் நவீன தொழினுட்ப வளர்ச்சிகள், வணிகமயமாக்கல் மற்றும் மனநிலை போன்றன இசையின்

tg.theeban@gmail.com






தன்மையை மாற்றி வருகின்றன. இதனால் 'இசை ஒரு தற்காலிக நுகர்வுப் பொருளாக மாறுகிறதா' எனும் கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது.

இன்றைய சூழலில் திரையிசை என்பது சமூகத்தில் பாரிய செல்வாக்குச் செலுத்தும் ஒரு களமாக விளங்குகிறது. ஆரம்ப காலங்களில் கர்நாடக இசை, திரைப்பட இசை, மெல்லிசை ஆகியவை தனித்துவமான பாணி, உணர்ச்சி ஆழம், கவித்துவம் மற்றும் மெட்டின் தரத்தால் சிறந்து விளங்கின. ஆனால் இன்றைய தற்கால இசை தொழினுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்து அதன் வடிவம் மாறி விட்டது. 70 தொடக்கம் 90-களில் இசை பெரும்பாலும் உணர்வின் வெளிப்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. இசையமைப்பாளர், பாடகர், பாடலாசிரியர் அனைவரும் கலைக்காகக் கலை என்ற உணர்வோடு படைத்தனர். எம். எஸ். விஸ்வநாதன், இளையராஜா, போன்றோரின் பாடல்கள் இயற்கை, ஆன்மீகம் மற்றும் உணர்வுகளை அழகாகப் பிரதிபலிக்கும் மெட்டமைப்புகளாக இருந்தன. இது திரையிசையின் பொற்காலமாகத் திகழ்ந்தது. அதே சமயம் கர்நாடக இசை அக்காலத்தில் கலைக்கூடங்கள், வானொலி நிகழ்ச்சிகள், திருவையாறு ஆராதனை எனப் பரவலாக வளர்ந்து வந்தது. தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்ஷிதர் தொடங்கி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, டி.கே. பட்டம்மாள் வரை கர்நாடக இசையை இறை பணியாகவே கருதினர். அக்கால இசையமைப்பாளர்கள் கர்நாடக சங்கீத ராகங்களை அடிப்படையாகக் கொண்டு மெட்டுக்களை அமைத்தனர். ராக சங்கீதத்தின் அடிப்படைப் பாணிகளைப் பயன்படுத்தி திரையிசைக்குச் சுவை சேர்த்தனர். அவை கேட்பவர் மனதை மட்டுமல்ல இசையின் மீதான ஆர்வத்தையும் தூண்டின. இசை உருவாக்கம் முழுமையாக நேரடி வாசிப்புகள் மற்றும் மனிதத் திறனை அடிப்படையாகக் கொண்டமைந்தன. வாத்தியக் குழுவினர், ஒலிப்பதிவு ஆகியன இசைக்கு இயற்கையான ஒலித்தன்மையை வழங்கின. அத்துடன் கவித்துவம் மிக்க பாடல் வரிகளும் இசையின் தரத்தை உயர்த்தின. இப்பாடல்கள் இன்றுளவும் மனதில் நிற்கக்கூடிய புத்துணர்வான அனுபவத்தைத் தருவது அவற்றின் இசை மற்றும் பாடல் வரிகளின் தரமேயாகும். ஏ.ஆர். ரகுமானின் தொழினுட்பத்துடன் கூடிய மெட்டமைப்புகளில் கூட இசையின் ஜீவன் குன்றாமல் பல புதிய இசையனுபவங்களைப் பெறமுடிந்தது. ஆனால் தற்காலப் பாடல்களில் பல சோதனை முயற்சிகள் இருந்தாலும் அவை குறுகிய கால நினைவுகளாகவே தங்கி விடுகின்றன. இதனால் 'நிலைத்தன்மை' எனும் கருத்து இன்றைய இசைக்கு சவாலாகியுள்ளது.

இன்றைய இசையில் தொழினுட்பம் பெரும் பங்காற்றுகின்றது. வேகத்தையும் நவீன மெட்டுக்களையும் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. ஒரு பாடல் உருவாக சில மணி நேரங்களே போதுமானது. ஒலிக்கலவை, டிஜிட்டல் எடிட்டிங், பின்னணி ஒலிகள் போன்றவை இசையின் உருவை மாற்றி விட்டன. இதனால் புதுமையும் இலகுத் தன்மையும் ஏற்பட்டாலும், இசைக்கும் ரசனைக்குமான நெருக்கம் குறைந்து வருவதைக் காணமுடிகிறது. டிஜிட்டல் முறையிலான இசைக் கருவிகளின் பயன்பாடு auto tuning போன்ற தொழினுட்பங்கள் இசையின் இயல்பை மாற்றியுள்ளன. இதனால் உணர்ச்சியாழம் குன்றி, பிடிக்கிறதா, பிடிக்கவில்லையா என்ற நுகர்வுக்கோணமே மையமாக உள்ளது.

Casset, வானொலி, நேரடி இசை நிகழ்ச்சிகளில் மாத்திரம் இசைப்பாடல்களைக் கேட்டு லயித்தபோது அதற்கான ஆர்வமும் ரசிக்கும் இயல்பும் அதிகம் இருந்தது. இன்று spotify streaming என எந்நேரமும் கேட்கக் கூடிய வசதிகள் வாய்த்த போதிலும் சில நாட்களில் சலிப்புத்தன்மை உருவாவதைக் காணமுடிகிறது. இன்றைய இசை நிகழ்ச்சிகள் கூட பொழுதுபோக்கு, வணிகம், சமூக ஊடகப் பிரபல்யத்தன்மை என்பவற்றை நோக்கமாகக் கொண்டே நிகழ்த்தப்படுவதால் இசைக்கான முக்கியத்துவம் இரண்டாம் பட்சமாகவே உள்ளது. மேலும் இலக்கியச் செறிவும் கருத்தாழமும் மிக்க வரிகளைக் கொண்ட பாடல்களைத் தற்காலத்தில் கேட்பது என்பது அரிதான விடயமாக உள்ளது. புதிய சொற்கள், ஆங்கில மொழிக்கலப்பு மற்றும் வட்டார மொழிகளின் பயன்பாடு என்பன அதிகம். இவை இத்தலைமுறையின் வாழ்வியலைப் பிரதிபலித்தாலும் பாடலின் பொருள் குறுகிய வட்டத்திலேயே சுழல்வதைக் காணலாம். இதுவும் பாடல்களின் தரம் குறைவடைவதற்கு முக்கிய காரணியாக உள்ளது.

இன்றைய இசைச்சூழல் என்பது, நுகர்வோர் மனநிலைக்கு ஏற்ப உருவாகும் ஒலிப்பதிவுகளின் தளமாகிவிட்டது. இசையின் அடிப்படை நோக்கம் என்பது கலையனுபவம் என்பதைத் தாண்டி வியாபார நோக்கத்திற்கான தளமாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. இன்றைய பரவலான நுகர்வுக் கலாசாரத்திலிருந்து இசைக்கலையும் தப்பிவிட முடியவில்லை. டிஜிட்டல் தளங்களின் வளர்ச்சி இசையின் பரிணாமத்தில் புதிய புரட்சிகளை ஏற்படுத்தியுள்ளன. YouTube, Instagram, spotify, apple music என இசையை மக்கள் மனதில் இலகுவாக நிலை நிறுத்தும் வழிமுறைகளினால் இன்றைய இசையமைப்பாளர்கள் சந்தையை நோக்காகக் கொண்டு உருவாக்கக் கூடிய YouTube, Instagram, spotify, apple music-ஐ மிக அதிகமாக சார்ந்துள்ளனர்.

> **“இசை ஒரு சந்தைப் பொருளாக மாறும் போது அதன் கலை நுட்பம், தரம் ஆகியவை மெதுவாக மறைந்துவிடும். வியா பார நோக்குடன் பாடல்களை இசையமைப்பதால் கலைஞர்கள் தங்களது உண்மையான படைப்பாற்றலை வெளிப்படுத்தாது ‘சந்தையின் எதிர்பார்ப்புகள்’ எனும் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள்.”**

இத்தளங்கள் சில வினாடிகள் மட்டுமே காணொலியைப் பரிமாற்றும் தொழினுட்பத்தைக் கொண்டமைந்ததால் குறிப்பிட்ட பகுதிக்கான மெட்டை (trending tune) மாத்திரம் சிறப்பாக இசையமைத்தால் போதுமென்றான சூழல் இசையமைப்பாளர்களுக்கு வாய்த்துள்ளமையால் ஒரு பாடல் இன்று பிரபல்யமானால் சில நாட்களில் அது மறக்கப்படுகின்றது. பாடலின் இசை நுட்பம் கவித்துவம், கலைஞரின் உழைப்பு என்பன மழுங்கடிக்கப்படுகின்றன. இன்றைய விரைவான காலச் சூழலிலே இசை ரசிகர்களும் அதனையே விரும்புவதுடன் பெரும்பாலனவர்களும் இவ்வாறான ரசனைக்குத் திணிக்கப்படுகின்றனர். இன்று பெரும்பாலானோர் பாடல்களை முழுமையாகக் கேட்பதில்லை. ஒரு சிறு பகுதியை அதாவது catchy tune lines-ஐ மாத்திரம் அனுபவிக்கின்றனர்.

இத்தன்மையே இசையை ஒரு தற்காலிக நுகர்வுப் பொருளாக மாற்றியுள்ளது. ஒரு பாடல் பிரபல்யமடையும் வாய்ப்பே அதன் வெற்றியின் அளவுகோலாக அமைகிறது. இதனால் இசையின் தரம் குறைவடைந்து அதற்குப் பதிலாக மக்களின் நுகர்வுக்குத் தக்க இசையமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த மாற்றம் இசையை ஓர் அனுபவ கலையிலிருந்து தற்காலிக மகிழ்ச்சிப் பொருளாக மாற்றிவிட்டது. இசை வெளியீடுகள், விளம்பரங்கள், சமூக ஊடகப் பிரச்சாரங்கள் ஆகியவை மேலும் இசையை வணிகத் தளமாக மாற்றுகின்றன. சில பாடல்கள் பிரபல்யமாகும் ஆனால் அவற்றின் உள்ளடக்கம் சில நிமிட வேடிக்கையாகவே இருக்கிறது.

இந்நுகர்வுப் போக்கின் மத்தியிலும் பாரம்பரிய இசை வடிவங்கள் குறிப்பாக கர்நாடக இசை ஒரு தனித்தன்மையுடன் திகழ்கிறது. இந்த வேகமான நுகர்வு உலகத்திற்கு எதிராக நிலைத்து நிற்பது இதுவே. கர்நாடக இசை இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர் கொண்ட பாரம்பரிய இசையாகும். இராக, தாள, பாவம் ஒரு சேர உள்நிலை அனுபவத்தை அளிக்கக்கூடியது. தியாகராஜர் பாடிய ‘நாத தனுமனிஷம்’ என்ற கீர்த்தனை, இசையின் தெய்வீகத் தன்மையை உணர்த்தும் சிறந்த உதாரணம். அதாவது மனிதனின் உண்மையான ஆனந்தம் வெளிப்புறப் பொருட்களிலல்ல, இசையின் நாதம் எனும் தெய்வீக சக்தியை உணர்வதில்தான் இருக்கிறது என்கிறார். கர்நாடக மற்றும் சாஸ்திரிய சங்கீதத்தில் ஒவ்வொரு ராகமும் தாளமும் மனதின் ஆழத்தில் வெளிப்படும் சிந்தனை, தியானம் மற்றும் பக்தி உணர்வுகளால் நிரம்பியது. இதனால் இது நிலையான கலை வடிவமாக உள்ளது. ஒரு கச்சேரியில் ஒருவரின் முழு ஆலாபனையைக் கேட்பது என்பது ஒரு தியான அனுபவம் போன்றது. இராக, தாள ஒழுங்குகளும் அதற்கான வரன்முறைகளும் தலைமுறைகள் கடந்தும் மாறவில்லை. இன்றும் தனது நிலைத்தன்மையைப் பேணிக் கொண்டு வருவதனால் நுகர்வுக் கலாசாரத்தில் சிக்கிக் கொள்ளாமல் தனித்தன்மையைப் பேணி நிற்கின்றது.

இருப்பினும் இன்று இதன் பரவல் சற்றுக் குறைந்த அளவில் உள்ளது. ஏனெனில், ஒன்று இன்றைய தலைமுறைக்கு இதன் கடினமான பயிற்சி முறையைப் பின்பற்றுவதில் குன்றிய ஆர்வமும் அத்துடன் கவரக்கூடிய இலகுவில் நுகரக்கூடிய இசை வடிவங்களின் நாட்டம் அதிகரித்துள்ளமையாகும். இருப்பினும் தொழினுட்பத்தை முழுமையாகவும் சாடுதல் முறையாகாது. பல கர்நாடக இசைக் கலைஞர்கள் தங்கள் இசைக் கச்சேரிகளை இன்று youTube போன்ற தளங்களினூடாகவே உலகறியச் செய்கின்றனர். நிகழ்நிலைக் கற்றல் மூலம் கர்நாடக இசையை யாவரும் கற்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இதுவே தொழினுட்ப வளர்ச்சியின் நன்மை எனக் கருதலாம்.

மேலும் சில புதுமை மிக்க கலைஞர்கள் சாஸ்திரிய இசையையும் நவீன இசையையும் இணைத்து fusion இசை வடிவங்களை உருவாக்குவதனூடாக இசையின் புதிய பரிமாணத்தை உருவாக்குகின்றனர். ஒவ்வொரு தலைமுறையினரும் தங்கள் கலை வடிவங்களை மீண்டும் மீண்டும் வரையறுக்கின்றனர். ஆகவே கர்நாடக இசையைப் புதுமையாக அணுகி அதன் நிலைத் தன்மைக்கு அடித்தளம் அமைப்பதுடன் பாரம்பரிய இசையின் தனித்துவம் சிதைக்கப்படாது படைப்புக்களை உருவாக்க வேண்டும். தொழினுட்பத்தின் வாயிலாக இசை மக்களிடையே விரைவாகப் பரவுவதால் பல புதிய கலைஞர்களுக்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதனுடன் சேர்ந்து வணிகத்தின் நிழலே இன்று கலைக்கு உரிமை கோருகின்றது.

இசை ஒரு சந்தைப் பொருளாக மாறும் போது அதன் கலை நுட்பம், தரம் ஆகியவை மெதுவாக மறைந்துவிடும். வியாபார நோக்குடன் பாடல்களை இசையமைப்பதால் கலைஞர்கள் தங்களது உண்மையான படைப்பாற்றலை வெளிப்படுத்தாது ‘சந்தையின் எதிர்பார்ப்புகள்’ எனும் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள். இதனால் அழகியலில் மந்தநிலை உருவாகின்றது. உண்மையான கலையனுபவத்தைத் தேடுவோர்க்கு ஏமாற்றமே அமைகிறது. எனவே இசைக்கலையின் எதிர்காலம் எம்மிடமே உள்ளது. அதை நாம் தற்காலிக நுகர்வுப் பொருளாக மாற்ற முயல்கிறோமா அல்லது நிதானமாக அதன் அழகியலை அனுபவிக்க விரும்புகிறோமா? என்பதை முடிவு செய்தல் அவசியமானதொன்று. இசைத்துறையில் சிறந்த படைப்புகளை வழங்க, பாரம்பரிய இசை பற்றிய சரியான பயிற்சி முறையும் நவீன தொழினுட்பத்தில் இசையை வினைத்திறனாகக் கையாள்வதற்கான விழிப்புணர்வுகளும் தற்கால இசையாளர்களுக்கு மிகவும் அவசியமாக உள்ளது. கலைஞர்களும் இசையமைப்பாளர்களும் வணிக நோக்கங்களுக்கு மட்டுமல்லாமல் ரசிகர்களின் உணர்வைத் தொடும் தரமான இசையை உருவாக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இசையின் அடிப்படை நோக்கம் என்பது மனித உணர்வுகளைக் கலை வடிவில் வெளிப்படுத்துவதே. இதைக் காக்கும் பொறுப்பு கலைஞர்களுக்கும் ரசிகர்களுக்கும் சமமாகும். உண்மையான இசையனுபவம் நுகர்வைத் தாண்டி மனிதனின் உள்ளார்ந்த ஒலியுடன் இணைக்கும் தருணங்களிலேயே பிறக்கிறது. ஆகவே ஒரு பாடலை நாம் கேட்பதல்ல அதை உணர்வதே உண்மையான இசையனுபவம்.



Archana@thaiveedu.com

# ஸ்ரீனிவாசன் என்ற கலைஞன்

■ ஓவியர் ஜீவா




ஸ்ரீனிவாசன் மறைந்தார் என்ற செய்தி கேட்டுத் துயரத்தில் ஆழ்ந்துவிட்டேன். எப்பேர்ப்பட்ட கலைஞன் என்று மனம் அரற்றியது. நான் நேரில் சந்திக்க விரும்பிய இரண்டு கலைஞர்களில் ஒருவர் ஸ்ரீனிவாசன். இன்னொருவர் சத்யஜித் ராய். காலை நடைப்பயிற்சியின்போது ஒரு நாள் கோவையில் ஸ்ரீனிவாசனைக் கண்டேன். பரவசமடைந்து அவர் அருகில் சென்று ஏதோ உளறினேன். சிரித்துக் கொண்டே கடந்து சென்றுவிட்டார்.

மலையாளப் படங்களின் ரசிகனான நான் எழுபதுகளில் பார்த்த படங்களில் ஸ்ரீனிவாசன் சிறிய வேடங்களில் வரு வதைப் பார்த்திருக்கிறேன். பி.ஏ. பக்கர் என்ற புதிய அலை இயக்குநரின் 'மணிமுழக்கம்', 'சங்ககானம்', கே.ஜி. ஜார்ஜின் 'மண்ணு' போன்ற திரைப்படங்களில் கண்களில் பட்டார். எண்பதுகளில் சிறிய வேடங்களில் ஆரம்பித்து பின் முக்கிய வேடங்களுக்கு முன்னேறினார். ஐ.வி. சசியின் 'ஈநாடு' படத் தில் கல்லூரி மாணவராகவும், 'இனியெங்கிலும்' படத்தில் அரசியல்வாதியாகவும் பார்த்திருக்கிறேன். கே.ஜி. ஜார்ஜ் படங்களில் சிறிய வேடமாயினும் பளிச்சென்று தெரிவார். 'யவனிகா'வில் நாடகக் கம்பெனிக் கணக்காளராகவும், 'பஞ் சவடிப் பாலம்' படத்தில் பிச்சைக்காரனாகவும் நடித்திருந்தார்.

திரைப்படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுத ஆரம்பித் தபோது மேலும் புகழ் பெறத் தொடங்கினார். அப்போது வளர்ந்து வந்த இயக்குநர்களான பிரியதர்சன, சத்யன் அந் திக்காடு போன்றவர்களின் படங்களுக்கு கதை, திரைக் கதை வசனம் எழுதி அவற்றில் நடிக்கவும் செய்தார்.

பிரியதர்சனுக்கு ஆரம்பத்தில் எழுதிய படங்கள் பெரும் பாலும் அசட்டு நகைச்சுவையாக இருக்கும். 'போயிங் போயிங்' ஒரு நல்ல உதாரணம். சத்யன் அந்திக்காடுக்கு எழுதியவை சமூக உணர்வுடன் நகைச்சுவை மிளிரும் வண்ணம் இருக்கும். பொதுவாக மலையாளத் திரையுல கத்தில் திரைக்கதை ஆசிரியர்களுக்கு மரியாதை அதிகம். அவர்களை உரிய முறையில் இயக்குநர்கள் பயன்படுத்து வார்கள். தாமோதரன் மாஸ்டர், தோப்பில் பாசி, பி. பாஸ் கரன், எஸ்.என். சுவாமி, எம்.டி. வாசுதேவன் நாயர், பத்ம ராஜன், லோகிததாஸ், ரகுநாத் பலேரி, ராபி மெக்கார்டியன், ரஞ்சித், கல்லூர் டென்னிஸ், கொச்சின் ஹனீபா, பாலச் சந்திர மேனன், அஞ்சலி மேனன், ரகுநாத் பலேரி, சிறிகு மாரன் தம்பி என்று பலர் பரபரப்பாக இயங்கிக்கொண்டி ருந்த மலையாளத் திரையுலகில் ஸ்ரீனிவாசனின் இடம் நன்கு அடித்தளமிட்டு நிலைத்து நின்றது.

எனக்குப் பிடித்த சில ஸ்ரீனிவாசன் திரைப்படங்களை இங்கு குறிப்பிடவேண்டும். இவரது நிறைய திரைக்கதைகள் தமிழிலும் பயன்படுத்தப்பட்டவை. சத்யன் அந்திக்காடு இயக்கிய காந்திநகர் செகண்ட் ஸ்ட்ரீட் (தமிழில் அண்ணாநகர் முதல் வீதி) திரைப்படத்தில் நாயகன் மோகன்லால் வேலையில்லாமல் அலைந்து, அவரது நண்பனின் அறிவுரையின் பேரில் ஒரு நேப்பாளி கூர்க்கா வேடம் புனைந்து ஒரு காலனியில் காவலாளி ஆகிவிடுவார். அவர் படும் பாடுகளை நகைச்சுவை கலந்து எழுதியிருப்பார் ஸ்ரீனிவாசன்.

பிரியதர்சன் இயக்கிய 'மழை பெய்யுன்னு, மத்தளம் கொட்டுன்னு' படத்தில் ஸ்ரீனிவாசன், அமெரிக்காவில் படித்த திமிர் பிடித்த வாலிபனாக வருவார். மாதவன் என்ற தன் பெயரை எம்.ஏ. தவன் என்று மாற்றி வைத்துக்கொண்டு, அவர்கள் வீட்டில் டிரைவராக இருக்கும் தன் பள்ளித்தோழன் மோகன்லாலை எப்போதும் அவமதித்துக்கொண்டே இருப்பார். தனக்குப் பெண் பார்க்கச் செல்லும்போது, மாறுவேடத்தில் சென்றால் பெண்ணைப் பற்றி முழுதும் தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்து தான் டிரைவராகவும், டிரைவரை முதலாளியாகவும் ஆள் மாறாட்டம் செய்து செல்வார்கள். வெடிச்சிரிப்பு நிறைந்த இந்தத் திரைப்படம் பெரும் வெற்றி பெற்றது.

அந்திக்காடு இயக்கிய 'சன்மனசுள்ளவர்க்கு சமாதானம்' (தமிழில் 'இல்லம்') வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கும் வீட்டு சொந்தக்காரர்களுக்கும் நடக்கும் சட்டப் போராட்டம் மற்றும் உரிமைப் போராட்டம் குறித்த திரைப்படம். இதில் வீட்டு உரிமையாளராக மோகன்லாலும், போலீஸ் அதிகாரியாக ஸ்ரீனிவாசனும் நடிப்பார்கள். ஸ்ரீனிவாசனுக்கு நகைச்சுவை மிளிரும் ஒரு பாடல் கூட இந்தப் படத்தில் இருந்தது! இதே இயக்குநரின் 'டி.பி. பாலகோபாலன் எம்.ஏ.' நடுத்தரக் குடும்பத்தை சேர்ந்த வாலிபன் ஒருவனது கனவுகள் மற்றும் முயற்சிகள் குறித்து எழுதப்பட்ட திரைப்படம்.

அந்திக்காடு - மோகன்லால் - ஸ்ரீனிவாசன் கூட்டணியின் மிகப் பெரும் வெற்றிப் படம் 'நாடோடிக்காற்று' (தமிழில் 'கதாநாயகன்'). இயக்குநர்கள் சித்திக் லால் எழுதிய கதைக்கு ஸ்ரீனிவாசன் திரைக்கதை அமைத்து வசனம் எழுதிய படம். ஒரு நிறுவனத்தில் கடைநிலை ஊழியர்களாகப் பணிபுரியும் இரு வாலிபர்கள் வேலை பறிபோனவுடன், பல சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வியடைந்து கள்ளத்தோணியில் துபாய் செல்ல முயற்சி செய்கிறார்கள். இவர்களை ஏற்றிச் செல்பவன், சென்னையில் இறக்கிவிட்டு இதுதான் துபாய் என்று சொல்லிச் செல்கிறான். பிறகு நடக்கும் சம்பவங்கள் எல்லாம் பிரமாதமாக இருக்கும். இருவரும் காவல் துறையில் பணியில் சேரும் அளவுக்கு செல்வார்கள். நாடோடிக்காற்று படத்தின் இரண்டாம் பாகம் 'பட்டினப்பிரவேசம்' அந்திக்காடு இயக்கத்தில் வெளியானது. மூன்றாம் பாகமான 'அக்கரெ அக்கரெ அக்கரெ' பிரியதர்சன் இயக்கத்தில் வெளியானது. மலையாளத் திரையுலகில் மோகன்லாலும் ஸ்ரீனிவாசனும் ஏற்று நடித்த வேடங்களின் பெயர்களான தாசனும் விஜயனும் சாகாவரம் பெற்றவையாக திகழ்கின்றன.

'முகுந்தேட்டா, சுமித்ரா விளிக்கின்னு' (தமிழில் பூமனம் என்று நினைக்கிறேன்) என்ற திரைப்படம் ஆமை முயல் கதையை அடிப்படையாக கொண்டது. இந்தியில் வெளியான 'கதா' என்ற படத்தைத் தழுவியது. ஸ்ரீனிவாசன் இதில் கேரளத்துக்குரிய பாத்திரங்களைப் படைத்தார், கதை சென்னையில் நடந்தபோதும்... அப்பாவியாக மோகன்லாலும் மோசடிப் பேர்வழியாக ஸ்ரீனியும் நடித்திருந்தனர்.

பிரியதர்சன் இயக்கிய 'வெள்ளானைகளுடே நாடு' (இந்தியில் கட்டா மீட்டா) இன்னொரு வெற்றிப்படம். இதன் கதையை ஸ்ரீனிவாசன், பிரியனிடம் விவரித்தபோது, இயக்குநருக்கு நம்பிக்கையே வரவில்லையாம். அரசு அலுவலக ஒப்பந்த பணி கான்ட்ராக்டர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புள்ள சட்டவிதிகள் குறித்து படமெடுத்தால் மக்கள் எப்படிப் பார்ப்பார்கள் என்று கவலைப்பட்டாராம். ஆனால் இவர் ஒவ்வொரு நாள் படப்பிடிப்பிற்கு எழுதிக்கொண்டு வந்த வசனங்களையும் காட்சி விவரிப்புகளையும் கேட்ட படப்பிடிப்புக் குழுவினர் விழுந்து விழுந்து சிரித்தார்களாம். ஒரு பஞ்சாயத்தில் டெண்டர் எடுத்திருக்கும் காண்ட்ராக்டர் ஒருவர் படும் பாடுகளையும், அரசு அலுவலக ஊழல்களையும் அழகாக நகைச்சுவையாக சித்திரித்த திரைப்படம் இது. ஒரு காட்சியில் பழுதாகிப்போன ரோடு ரோலரை அங்கிருந்து நகர்த்திச் செல்ல ஒரு யானையை வாடகைக்கு அமர்த்தி அதை இழுக்க வைக்க, அதைத் தொடரும் சம்பவங்கள் நகைச்சுவையாகவும், ஹீரோவுக்கு சோகமாகவும் நடைபெறும்.

மோகன்லால் - அந்திக்காடு - ஸ்ரீனிவாசன் கூட்டணியில் வெளியான இன்னொரு வெற்றிப்படம் 'வரவேழ்ப்பு'. ஊருக்கே வராமல் நீண்ட காலமாக வளைகுடா நாட்டில் பணி புரிந்து ஊர் திரும்பியிருக்கும் வீட்டின் கடைசித் தம்பியை அவனுடைய இரண்டு அண்ணன் அண்ணிகளும் மேலும் சுரண்ட முயற்சிக்கின்றனர். ஓட்டல் நடத்தும் ஓர் அண்ணன், இவனை ஓட்டல் தொழிலுக்கு இழுக்கிறான். இன்னொரு சகோதரன் தான் நடத்தும் அப்காரி பிஸினஸுக்கு (சாராய விற்பனை) முதல் போட சொல்கிறான். இருவரின் பேச்சையும் கேட்காமல் ஒரு ரூட்டில் ஓடிக்கொண்டிருக்கும் பஸ் ஒன்றை விலைக்கு வாங்கி புதிய தொழில் தொடங்குகிறான். இந்த பஸ் தொழில் அவனுக்குப் பல படிப்பினைகள் தருகிறது. பணியாட்கள் துரோகம், அரசு அதிகாரிகளின் கண்டிப்பு, தொழிலாளர் சங்கத் தலைவர்களின் அராஜகம் என்று பல விஷயங்களை அனுபவித்து விட்டு மீண்டும் அயலகம் கிளம்பும் முடிவுக்கு தள்ளப்படும் நிலை. இந்த அவல நகைச்சுவை ஸ்ரீனிவாசனுக்கே உரியது.

இயக்குநர் கமல் இயக்கிய 'பாவம் பாவம் ராஜகுமாரன்' (தமிழில் கோபுர வாசலிலே),







நான்கு தனிப்பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள் கொண்ட குழுவில் எப்படி மூன்று பேர் ஒரு வனை ஏமாளியாக்கி சுகிக்கின்றனர் என்பதுதான் கதை. நாயகனாக ஸ்ரீனிவாசன் நடித்திருந்தார். சத்யன் அந்திக்காடு இயக்கிய 'தலையணை மந்திரம்' கூட்டுக்குடும்பத்தில் ஒரு மருமகள் ஏற்படுத்தும் விளைவுகளை நகைச்சுவையுடன் அலசிய படம். கொஞ்சம் சீரியஸ் படமும் கூட.

சத்யன் அந்திக்காடு இயக்கிய இன்னொரு திரைப்படம் 'சந்தேஷம்' (தமிழில் வீட்டைப் பார் நாட்டைப் பார்). பணி ஓய்வு பெற்று வீடு திரும்பும் ஒரு ரயில்வே அதிகாரி தன் இரண்டு மகன்களும் உருப்படாமல் அரசியல் பித்துப் பிடித்து திரிவதை பார்த்து வருத்தப்படுகிறார். சட்டம் படித்த மூத்த மகன், கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிர உறுப்பினர். வழக்குரைஞர் தொழிலை செய்யாமல் கட்சி அலுவலகத்தில் பருப்பு வடையும், தேநீரும், தோல்விக்கான காரணங்கள் குறித்த விவாதமுமாக நேரத்தை கழிப்பவன். இளையவனோ காங்கிரஸ் கட்சி உறுப்பினர். இருவருக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் சண்டை தகராறு. எல்லா பொருளாதார சுமையையும் தந்தையே சுமக்க வேண்டியிருக்கிறது. கேரளத்தின் லும்பன் அரசியலை இவ்வளவு பட்டவர்த்தனமாக ஒரு அங்கதச் சுவையுடன் ஸ்ரீனிவாசனைத் தவிர யாரும் எழுதமுடியாது. இந்தப் படத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெறும் உரையாடல்கள் அவ்வளவு அற்புதமானவை. ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் ஆக இருந்த அனுபவம் ஸ்ரீனிவாசனை அவ்வளவு யதார்த்தமாக எழுத வைத்தது. மலையாளத்தில் இருந்த கம்யூனிஸ்ட் கொடியும் காங்கிரஸ் கொடியும் தமிழில் வந்தபோது மஞ்சள் கொடி, நீலக் கொடி என்று மாறிப்போனதுதான் தமிழ் மண்ணின் அரசியல் முதிர்ச்சி!

சுற்றுச் சூழல் இலாகாவின் வேடிக்கையான விதிகள் சுயதொழில் செய்யும் வாலிபன் ஒருவனை சோதிப்பதை 'மிதுனம்' திரைப்படத்தில் அருமையாகச் சித்தரித்திருந்தார். 'அழகிய ராவணன்', 'அயாள் கத எழுதுகையானு', 'ஒரு மருவத்தூர் கனவு', 'உதயனாணு தாரம்' (தமிழில் வெள்ளித்திரை), 'கத பறையும்போள்' (தமிழில் குசேலன்), 'ஞான் பிரகாசன்' என்று இன்னும் ஏராளமான திரைப்படங்களுக்கு திரைக்கதை எழுதியிருக்கிறார். ஸ்ரீனிவாசன் திரைப்படங்களில் வரும் பாத்திரங்கள் நாம் அன்றாடம் காணும் சாதாரண மனிதர்கள்தான். பால்காரர், பொற்கொல்லர், ஜோதிடர், தையல்காரர், துணை நடிகர், குமாஸ்தா, டிரைவர், கண்டக்டர், போக்குவரத்து அதிகாரி, வெட்டி ஆபீசர், மெக்கானிக், மாட்டுத் தரகர், கிராமத்துத் திருடன், கோவில் பூசாரி என்று கதாபாத்திரங்களை உயிர்ப்புடன் உலவ விடுவார்.

ஒரு நடிகராக ஏராளமான திரைப்படங்களில் நகைச்சுவையை நல்கிய ஸ்ரீனிவாசன், அரவிந்தன் போன்ற மாபெரும் இயக்குநர்களின் திரைப்படங்களிலும் நடித்தவர். 'சிதம்பரம்' படத்தில் ஸ்மிதா பாட்டிலின் கணவராக, முனியாண்டி என்ற தமிழனாக ஒரு சீரியஸ் வேடத்தில் நடித்திருந்தார்.

ஏராளமான திரைப்படங்களுக்குத் திரைக்கதை எழுதிய ஸ்ரீனிவாசன், இரண்டு அருமையான திரைப்படங்களையும் இயக்கியிருக்கிறார். 'வடக்குநோக்கியந்திரம்' படத்தில் (தமிழில் திண்டுக்கல் சாரதி) ஒரு அச்சக உரிமையாளராக வருவார். தன்னை விட அழகிய பெண்ணை மணமுடித்த பின், தாழ்வு மனப்பான்மையால் சந்தேகப்பேய் ஆட்டுவிக்க மனம் பிறழும் அளவுக்குச் சென்றுவிடும் கதாபாத்திரம். 'சிந்தாவிஷ்டயாய சியாமளா' (தமிழில் சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி) படத்தில் எப்போதும் பிசினஸ் திட்டங்களை தீட்டிக்கொண்டு ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு பள்ளி ஆசிரியர் பாத்திரம். மனைவி மக்களைப் பற்றி கவலையில்லை. குடியும் நண்பர்களுடன் கும்மாளமும் வேறு. இவரை திருத்த சபரிமலைக்கு அனுப்பி வைக்கிறார்கள். திரும்பி வந்தவர் முழுமையான சாமியார் ஆகிவிட, இவரை மீண்டும் சாதாரண மனிதனாக்க உறவினர்கள் படும் பாட்டைப் பற்றிய திரைப்படம்.

ஸ்ரீனிவாசனின் இரண்டு வாரிசுகளும் திரைப்படங்களில் இப்போது புகழ் பெற்று வருகிறார்கள். வினித் ஸ்ரீனிவாசன் பாடகர், திரைக்கதையாசிரியர், நடிகர், இயக்குநர் என்று பல அவதாரங்களை எடுத்திருக்கிறார். தியான் ஸ்ரீனிவாசன் நிறையத் திரைப்படங்களில் பரபரப்பாக இயங்கி வரும் நடிகர்.

மலையாளத் திரையுலக வரலாற்றில் ஸ்ரீனிவாசனுக்கு எப்போதும் ஒரு ஒப்பற்ற இடம் உண்டு.



jeeva@thaiveedu.com

# நூல் அறிமுகம்

## சியாமளா யோகேஸ்வரனின்

# விடியல்

## சிறுகதைத் தொகுப்பு

### மாதவி உமாசுதசர்மா

புலம்பெயர் எழுத்தாளர்களில் தொடர்ந்தும் உணர்வு ரீதியான கதைகளின் மூலமாகத் தன்னை அடையாளப்படுத் திக்கொண்டிருப்பவர் எழுத்தாளர் சியாமளா யோகேஸ்வரன். எழுத்தில் தனக்கென தனிப்பாணி கொண்டிருக்கும் சியா மளா யோகேஸ்வரனின் நூல்களான இதயராகம், கானல்நீர் ஆகிய இரண்டு நாவல்களையும், விடியல் என்ற சிறுகதைத் தொகுப்பையும் 'எங்கட புத்தகங்கள்' வெளியீடு செய்துள் ளது. எங்கட புத்தகங்கள் அமைப்பின் நான்கு ஆண்டுகால வெளியீட்டுப் பயணத்தில் இது 12-ஆவது நூல் என்பதும் குறிப்பிடத்தக்க விடயம். எங்கட புத்தகங்கள் அமைப்பினால் வெளியீடு செய்யப்படும் நூல்கள் ஏதோ ஒருவகையில் வாச கர்களின் மனதில் நீங்கா இடம்பிடிப்பவையாகவும், தற்கால ஈழத்து இலக்கியத்தின்பால் ஒரு நம்பிக்கையைத் தரும் வகையிலும் அமைந்திருப்பது மறுக்கமுடியாத உண்மை.

அந்தவகையில் எனக்குள்ளும் ஒருவித நம்பிக்கையுடனே 'விடியல்' சிறுகதைத் தொகுப்பை வாசித்தேன். எழுத் தாளர், அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், தாய் நிலம் மீதும், மொழி மீதும் கொண்ட தீராக் காதலால் 12 சிறுகதைகளை ஒரு தொகுப்பாக 'புலம்பெயர் உறவு நிலை சிக்கல்களை' மையமாகக்கொண்டு எழுதியுள்ளார்.




பெரும்பாலும் எல்லா மனிதர்களிலும் ஏதோ ஒருவித கதை ஒளிந்துகொண்டுதான் இருக்கின்றது. அதேபோல மனிதர் களை கருப்பு, வெள்ளை கோடுகளுக்குள் நிச்ச யமாக அடக்கிவிட முடியாது. இடையில் சாம்பல் / Grey நிறத்தினுள்தான் பெரும்பாலும் மனிதர்கள் சந்தர்ப்பவ சத்தால் அடக்கப்படுகின்றார்கள். இங்கே எழுதப்படிருக் கின்ற எல்லாக் கதை களும் ஒருவித Grey shade மனிதர் களையும், அவர்களின் சூழ்நிலைகள் எவ்வாறு அவர்களை மாற்றுகின்றது என்பதும் கதையாக்கப்பட்டிருக்கின்றமை சிறப்பு.

இத்தொகுப்பில் எல்லாக் கதைகளும் தற்கால அவுஸ்திரே லியா நாட்டை நமக்கு கண்முன் காட்டும் வகையில் உள் ளன. கதைகளினூடே அந்த நாட்டு கலாசாரம், பண்பாட்டு மாற்றங்கள், புலம் நிலம் இடையேயான வேறுபாடுகள், புலம் பெயர்வின் அடுத்த தலைமுறை எதிர்நோக்கும் கலாசார சிக் கல்கள், மனித உணர்வு நிலைகள், உறவுகள், சட்டங்கள் என சாதாரண கதைகளாக ஆரம்பித்து கதாபாத்திரங் களோடு நம்மையும் ஒன்றச் செய்கின்றார். ஆனால் சில கதைகளின் முடிவுகள் முடிவுகளாக இல்லை, அவை வாச கர்களின் சிந்தனைக்குத் தீனியாக விடப்படுகின்றன. எளி மையான மொழி நடையும், கதாபாத்திரத் தேர்வும் நிச்சயம் நமக்கு வாசிப்பின் வேகத்தை அதிகரிக்க துணைபுரியும்.

அறுவடைகள் கதையில் வரும் 'ஆனந்தன்', கதாபாத்திரம் சமூகத்தில் பலருக்கு ஒரு படிப்பினை. இக்கதையின் சாராம் சமாகஆனந்தனின் மனசாட்சி இவ்வாறு பேசும் இடம் கவனிக் கத்தக்கது, 'உயிருடன் இருந்தபோது மனைவியை ஒரு ஜட மாகத்தானே மதித்திருக்கிறாய் என்ற உண்மை பிடரியில் அடித்தது, அவள் அன்பையும், பரிவையும் துச்சமாக மதித்த தற்கான பலாபலனை தாராளமாகவே அறுவடைசெய்யத் தொடங்கியிருந்தான்'

கொஞ்சம் வித்தியாசமான மற்றும் அழுத்தமில்லாத கதை யாக 'எம்வீட்டு கறுப்பழகி' கதை அமைந்திருந்தது. மனிதர் களின் தனிமையைப் போக்கவும், பிரதிபலன் பாரா நட்பை நாடவும் ஏற்றவை செல்லப்பிராணிகள். அந்தவகையில் இந் தக் கதாபாத்திரங்களின் வர்ணனை, மச்சி, பிறவுணி, கறுப் பழகி என்ற பெயர் தெரிவு, அவற்றின் குணநலன்களை விப ரிக்கும் முறை என அனைத்துமே அட்டகாசம். நிச்சயம் யாராவது கார்ட்டூன் கதையாக மாற்ற முயற்சிக்கலாம்.

சாதாரணமாக குடும்பங்களில் நடக்கும் மாமியார், மருமகள் சண்டையில் இருவரும் போட்டி போடுவதையே கதையிலும், தொடர் நாடகங்களிலும் பார்த்திருப்போம். ஆனால் சற்று வித்தியாசமாக பிரச்சினையை விடுத்து தீர்வை நோக்கிய தேடலில் மகனும், தாயும் எவ்வாறு தம்மை மாற்றிக் கொள் கின்றார்கள் என்பதை நடைமுறைக்குப் பொருத்தமாக 'நதி களின் பாதையில்' கதை பேசுகின்றது.

மனிதம் இன்னும் மரணிக்கவில்லை, மயக்கமென்ன, தலை யணைக் கனவுகள் ஆகிய கதைகளில் புலம்பெயர்வின் பின் அடுத்த தலைமுறை எதிர்நோக்கும் கலா சார சிக்கல்கள், அவர்களை கையாளத் தெரியாமல் தவிக் கும் பெற்றோர்கள். இளமைத் துடிப்பில் செய்யும் தவறுகளால் எதிர்காலத்தை சிக் கலாக்கும் பிள்ளைகள், ஏனைய யதார்த்த வாழ்வை கண்முன் காட்டும் கதாபாத்தி ரங்களாக அமைகின்றன.

விடியலின் வடிவம் கதை, தீரணியக் குழந்தை மதுவும், அவளின் மரணத்தினால் துவண்டு போன தாயின் வலியுமாக நீள்கின்றது. விடியலைத் தேடி கதை நவீன தலைமு றையின் திருமண வாழ்க்கைச் சிக்கலும், உளவியலும் கலந்த கதையாக உள்ளது. உண்மையில் இத்தொகுப்பு தேர்ந்த சிறு கதைகளை உள்ளடக்கிய நூல், ஆனால் ஒரே தடவையில் வாசிக்கும்போது நிச்ச யம் வாசகர்களுக்கு மன அழுத்தத்தையும், அயர்ச்சியையும் ஏற்படுத்தும். இக்கதைகள் பெரும்பாலும் வாழ்வியல் யதார்த் தத்தையும், எதிர்மறை சூழ்நிலைகளையும் கருப்பொரு ளாகக் கொண்டு எழுதப்படிருக்கின்றமையால் தொடர்ச் சியாக வாசிக்காமல், சிறிது இடைவேளை எடுத்து வாசிப்பது பொருத்தமாக இருக்கும். சியாமளா யோகேஸ்வரன் மற்றும் எங்கட புத்தகங்கள் குழுவினருக்கு வாழ்த்து. தொடர்ந்தும் இவ்வாறான படைப்புகள் வெளிவரட்டும்.

mathavi.u@thaiveedu.com





# மனித வாழ்வின் நம்பிக்கை சார்ந்த வழமைகளின் கவிதைகள்

**ம. கருணாநிதி**

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைப் பேராசிரியரும் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் இயக்குநருமான கலாநிதி சி. ஜெயசங்கர், அறிவு என்பது பல்கலைக்கழகங்களுக்கு அப்பாற்பட்டு கிராமிய வாழ்வியலில் பொதிந்துள்ளது என்ற கருத்தியலோடு இயங்கி வருகிறார். நவீன அறிவியலுக்கு ஈடான வழமை உள்ளூர் பாரம்பரிய அறிவில் இருப்பதை அடையாளப்படுத்தி வரும் இவர், அவற்றை நாட்டார் வழக்காறுகளாகவும் தொன்மை சார் தொழில்நுட்பமாகவும் முன்னிறுத்துகிறார். மக்களின் நிகழ்த்துதல்சார் பண்பாட்டில் அக்கறை கொண்டு, அவர்களுடனான நேரடித் தொடர்பின் ஊடாக நாட்டார் கலைகளை மீளுருவாக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார். அத்துடன், தனது ‘மூன்றாவது கண்’ இதழ் மற்றும் உள்ளூர் அறிவுத்திறன் மேம்பாட்டுக்குழு மூலம் கலைஞர்களை அடையாளப்படுத்துவதோடு, பொருளாதாரத்தில் பின்தங்கிய விளிம்புநிலைச் சிறுவர்களின் கல்வி மற்றும் அறிவு வளர்ச்சிக்காகவும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகிறார்.

மேலும், கலைவழியான வாழ்வின் வாதைகளை மறந்து, விடுதலையையும் சமூக முன்னேற்றத்தையும் முன்வைக்கவேண்டிய தேவையை உணர்ந்து பல முன்னெடுப்புகளைக் கூட்டுச்செயற்பாடாய் சி. ஜெயசங்கர் அவர்கள் செய்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். சமகாலத்திற்குத் தேவை யான கருத்தியலைக் கூத்துகளின் வழியாக முன்வைப்பதும், மறுவுருவாக்கம் செய்வதும், கூத்துக் கலைஞர்களுடன் தொடர் உரையாடல்களை மேற்கொண்டுவருவதும் இவரின் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. கலைச் செயற்பாட்டினூடாக இசை வடிவிலான பாடல்களையும் இவர் தொடர்ந்து எழுதியும் வருகிறார்.

அவ்வகையில் பல்வேறு தாக்குதலால் உண்டான வலிகளுக்கான நம்பிக்கையாகவும், மருந்தாகவும் சி. ஜெயசங்கர் அவர்களின் கவிதைகள் இருக்கின்றன. இவரின் கவிதைகளைத், தமிழ் நிலவெளியில் பூத்த சொல்லாடல்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், தமிழ் நிலத்தின் குறியீடுகள் கவிதைகளில் இழையோடுகின்றன. மரபுசார் அறிவின் மெய்மைகளைக் கவிதைகளில் பதிவு செய்கிறார். இவரின் கவிதைகளும் தமிழ் மண்ணின் அடையாளக் குறியீடு. ஆதலால்தான் இவரின் கவிதைகள், அன்புவயப்பட்ட வளமைக்குறியீட்டுச் (fidelity) சொற்களாக விளங்குகின்றன. மனித வாழ்வின் நம்பிக்கை சார்ந்த வழமைக்கான பாதையை இக்கவிதைகள் அமைக்கின்றன.

“ஓடைப்போலாயினும் கோடையிலும் கொஞ்சம்’ எனும் கவிதை இயற்கை சார்ந்த இயங்கியலைப் பதிவு செய்வதுடன் கார்மேகத்திடம் வினவுவதாயும் அமைந்துள்ளது. கோடை வெயில் கொளுத்துவதால் இயற்கைத் தாவரங்களான மரம், செடி, கொடிகள் அனைத்தும் கருகிக் கொண்டு இருக்கின்றமையைக் கண்ட கவிஞர் கோடையில் மழை வந்து மனதையும் இயற்கையையும் குளிரச் செய்யாதா என ஏங்குகிறார். மேலும், ‘போற்றுதும்’ எனும் தலைப்பில் அமைந்த கவிதை, இயற்கையைப் போற்றிப் பாடுகிறது. அதனோடு இயற்கையைப் போற்றும் மனிதரைப் போற்றுவதோடு மனிதரை மனிதராக மதித்துப் போற்ற வேண்டுமென்பதையும் இக்கவிதை கூறி நிற்கிறது.

‘கருமேகங்காள் கருமேகங்காள்
தென்னங்குருத்தும் மஞ்சள் முருக்கும்
மல்லிகையும் மாவிலங்கும்
மாதுளையும் மலர்க்கன்றுகளும்
மா பலா வாழைகளும்
வாடி வதங்குவதில்
என்னதான் சுகம் கண்டாய்.
மழையிறங்கி,
கோடையிலும் கொஞ்சம்
ஓடை போலாயினும்
ஓடிப்போனால் என்னப்பா?
காற்றில் நெருப்பெறித்து
கற்றாழையில் நீர் பதித்து
வெக்கை தணிவிக்க
வெள்ளரியும் விளைவித்தாள் பூமித்தாயானவள்
வாழ்த்துகிறோம் ! வாழ்த்துகிறோம் !’

இயற்கையையும் பருவ மாற்றத்தினையும் இவ்வியற்கை தந்தாலும் அதற்கு ஏற்ப பூமித்தாய் மனிதர்களின் வாழ்வியலுக்கு உகந்தவைகளைத் தருகிறாள் என்பதை இக்கவிதை பதிவுசெய்துள்ளது. நிலத்தையும் பெண்ணையும் ஒப்புமைப்படுத்திய விதம் கவிதையில் வெளிப்பட்டுள்ளது. இதில் பெண்ணும் நிலமும் வளமைப் பண்பாட்டின் (Resource Culture) குறியீடுகளாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. நிலமும் பெண்ணும் சமூக விருத்திக்கான காரணமென்பதால்தான் ஆதிக்கச் சமூகம் பெண்ணையும் நிலத்தையும் உடைமைப்படுத்தியதை வரலாற்றில் நாம் பார்க்க முடிகிறது. நிலவுடமைச் சமூக உருவாக்கம் ஆணாதிக்க மனோபாவத்தினை உள்ளடக்கியிருப்பதால்தான் பெண் இனத்தினை அடிமைப்படுத்திப் பெண் வழியான நிலமானியத்தை ஆண் கையகப்படுத்தியமையை ‘விளைவித்தாள் பூமித்தாயானவள்’ எனும் கவிதை வரியின் வழியாக அறிய முடிகிறது. பாரதி, பாரதிதாசன் வழி ஜெயசங்கர் வரலாற்றைக் கற்பனை வழியாகப் புனைவாக்குகிறார். இவரது கவிதைப் படைப்பாக்கம் இவ்வழி நிகழ்கின்றது. பெண் ஆணுக்கு நிகரானவள் என்பதை ஆண்களின் பொதுப் புத்தி எப்போதும் மறுதலித்தே வருகின்றது. இது பிற்போக்குத்தனமாகும். வரலாற்றுப் பொருள்முதல்வாதப் பின்னணியில் இதனைப் புரிந்து கொண்ட சி. ஜெயசங்கர் நிலத்தைப் பெண்ணோடு ஒப்புமையாக்கம் செய்கிறார். அந்தவகையில் அவர் கவிதை வழி நிலத்தினைத் தாயாகப் பார்க்கிறார். நிலத்தினைத் தாயாகவும், தமது மூதாதையாகவும் பார்க்கும் தொன்மை சார்ந்த பார்வை இவரது கவிதைகளில் வெளிப்படுகின்றது.

‘இயற்கையின் நுண்துளிர்ப்பில்
வேகங்கெட்டு உலகமே அடக்கம்.
தனித்துக் கிடக்கின்றோம்
ஏது செய்வதென்று அறியாமல்!
நின்று போய்விட்ட ஓட்டத்தில்
வெளிப்பட்டது,
இலக்கற்ற ஓட்டம்,
பாதுகாப்பற்ற வாழ்வு.
வேகமாய் மிகவேகமாய்
விரைந்து வளர்கிறது உலகம்.
ஈடுக்கொடுத்துப் போகவில்லையெனில்,
இருப்பற்றுப் போய்விடுவீர்!
விற்பனர் எச்சரிப்பில்
விதிர் விதிர்த்தோம் வேகங்கொண்டோம்!’

> “கலைவழியான வாழ்வின் வாதைகளை மறந்து, விடுதலையையும் சமூக முன்னேற்றத்தையும் முன்வைக்கவேண்டிய தேவையை உணர்ந்து, பல கூட்டுச் செயற்பாடாடுகளை முன்னெடுப்பதும், சமகாலத்திற்குத் தேவையான கருத்தியலைக் கூத்துகளின் வழியாக முன்வைப்பதும், மறுவுருவாக்கம் செய்வதும், கூத்துக் கலைஞர்களுடன் தொடர் உரையாடல்களை மேற்கொண்டுவருவதும் சி. ஜெயசங்கர் அவர்களின் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது”

'மண்ணில் நல்லவண்ணம் வாழ' எனும் கவிதை மனிதர்கள் நோய்நொடியின்றி வாழும் சூழல் உருவாகவேண்டும். அதே நேரத்தில் எவ்வித தாக்குதலின்றி நல்லவண்ணமாக வாழும் காலத்தை நோக்கிப் பயணிக்கும் தன்மையைக் கவிதை பதிவுசெய்துள்ளது. இக்கவிதை, கூத்துருவாக் கத்தில் பாடலாகப் பயிலக்கூடிய வகையில் அமையப் பெற்றுள்ளது என்றே சொல்லலாம். வாசிக்கும்போதே இக்கவிதை இசைமையைக் கொண்டுள்ளதை அவதானிக் கலாம். நவீன உலகம் வேகமாக வளர்ந்து வருகிறது. இவ் வளர்ச்சி யாருக்கான வளர்ச்சி ஆக இருக்கின்றது என்பதைப் பேசிச்செல்கிறது. உலகமயச் சூழலில் நாம் எல்லோரும் நுகர்வியம் எனும் ஒரு வலைக்குள் அணியம் ஆக்கியுள்ளதை இக்கவிதை பேசுகின்றது. விற்பனர்களின் உச்சரிப்பில் விதிர்விதிர்த்து வேகம் கொண்டோம் என்று கூறுகிறார். வீடு, வாசல், தொழில், சொத்து, சேமிப்பு, காப்புறுதி, கட்டுப்பணம், சுற்றம், உறவுகள் அனைத்தும் சுழன்றடிக்கும் பேரலையில் வாழ்வின் கனவு விருத் திக்கான இவ்வுலகம் அளவில்லாத துன்பத்தில் சுழல் கின்றது என்பதை 'மண்ணில் நல்லவண்ணம் வாழ' கவிதைக் காட்டுகின்றது. நம்மிடம் எல்லாம் இருந்தும் தனித்து விடப்பட்டவர்களாக ஆக்கப்பட்டுள்ளதை இக்கவிதை பதிவு செய்கிறது. செய்வதென்று அறியாமல் நின்று போய்விட்டது வாழ்வின் ஓட்டம் என்பதையும், இலக் கற்ற ஓட்டம் பாதுகாப்பற்றது என்பதையும் இக்கவிதை கூறிநிற்கிறது. வாழ்க்கையில் அதிகாரம் நிலைத்து நிற்க அதலபாதாளம் தேடி எதிரிகளை இலக்கு வைக்கும் அதிநுட்ப ஆயுதங்கள், இருமலிலும் தும்மலிலும் தாக்கு கின்றன எனக் கவிதை வழியாக வாழ்வின் இருத்தலைக் கூறுகின்றார் கவிஞர். இன்றைய சூழலில் நோய்க் கிருமி கள்கூட மனிதர்களுக்கு அழிவினை விளைவிக்கும் போர் ஆயுதமாக விளங்குகின்றதை 'இக்கவிதையில் ஆழமாகக் கூறுகின்றார்.

'காலம் வாய்ப்பாக இருக்கிறது' எனும் கவிதை இறந் துபோன வாழ்க்கைக்கான இருத்தலில் நம்பிக்கை கொள் கிறது. தேர்வு மதிப்பெண்களுக்காக இளைய தலைமுறை யினர் பாடத்திட்ட வாசிப்பிலும் மூழ்கடிக்கப்பட்ட நெறிமு றைகளுக்குள் இயந்திரத்தனமாக மூழ்கியிருப்பதையும் சமூக அக்கறையற்ற கல்வியாளர்களின் நடத்தைசார் நடைமுறைகளால் கல்வி நிலை மாணவருக்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றாக மாறிச் செல்வதையும் இக்கவிதை எள்ளி நகையாடுகிறது. ஒவ்வொரு சமூக நிகழ்வையும் அதன் ஆழத்தையும் நுண்ணியல் நோக்கில் பார்ப்பதாக இன்றைய சூழல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இது நவீன முதலாளித்துவத்தின் வெற்றியாகும்.

*'முகவர்கள் செயலற்றுப் போயினர்*
*முகவர் நிலையங்கள் செயலிழந்து போயின.*
*நம்பிக்கையின் பிறப்பிடம்*
*மீளவும், துளிர்க்கவும், தளைக்கவும்*
*காலம் வாய்ப்பாகி இருக்கிறது.'*

இழந்தவைகளை மீட்டுத் தருவதற்கு வழியற்ற சூழலில், இன்று அனைத்து செயற்பாடுகளும் மக்களுக்கானதாக இல்லாமல் இருப்பதையும் ஏதுமற்றவர்களாக வாழும் சமூ கத்தில் மக்கள் விடிவு எனும் நம்பிக்கையோடு வாழ்க்கை நடத்துவதையும் 'காலம் வாய்ப்பாகி இருக்கிறது' கவிதை கூறிநிற்கிறது.

*'உணவே மருந்தாகிய அறிவுமுறை*
*காலனியம் புதைத்துவைத்த,*
*நவீன புதைகுழியில் இருந்து*
*மீண்டு எழுகிறது.*
*காலம்! வாய்ப்பாகி இருக்கிறது.'*

உணவே மருந்து என்று இருந்த தமிழ் மரபு காலனியாதிக் கத்தால் புதைகுழியானது என்று கூறுகிறார் கவிஞர். வாழ் வியலில் நவநாகரிகம் புகுந்து மக்களின் சுயத்தையும் பாரம்பரியத்தையும் அழித்ததைக் கூறுகின்றார். நவீன மருத்துவம், நவீன வாழ்வு, நவீன ஆடை, நவீன உணவு, நவீனத் தொழில்நுட்பம் எனும் நவீனப் பண்பாட்டுச் செயற் பாடுகள் அனைத்தையும் காலனியத்தின் 'நவீன புதைகு ழிகள்' எனக் கவிஞர் உருவகப்படுத்தியுள்ளார்.

*'உள்ளூர் என்பது*
*உலகம் தழுவிய ஊர்களின்*
*தொடர்பும் பகிவும்*
*வேற்றூர் வெறுப்பும் மறுப்புமன்று.'*

'கூடிவாழ்ந்தால் கோடி நன்மை' என்னும் பழமொழி பொதுமைச் சமூகமாக வாழும் வாழ்க்கையைக் கூறு கின்றது. ஆனால், முதலாளித்துவம் பரப்பிய நோய்த் தொற்று, கூடிவாழ்ந்த வீட்டிற்குள்ளேயே தீண்டாமையை ஏற்படுத்தியது. அச்சூழலிலும் மக்கள் ஒரே குடும்பமாய் வெறுப்பின்றி பகிர்ந்து உண்டு வாழ்ந்ததையும் கவிதை வழி காட்சிப்படுத்துகிறார். இதனை 'உணர்வால் இணை வோம் நாமெல்லாம்' எனும் கவிதையும் எடுத்தியம்புகிறது. உடலால் தனித்திருப்போம் ஒவ்வொரு கணமும் உணர்வால் இணைந்திடுவோம் எனும் கவிதை வரிகள் கவிதையின் அடிநாதமாய் ஒலிக்கின்றது, முதலாளித்துவம் தந்த தீ உயிரிழப்பாக மாறுகின்றது. இதன் காரணமாகக் கொத்துக் கொத்தாக நோய்த்தொற்றுள்ளோர் இறக்கின்றனர். சமூக மயமாக இருந்த கூட்டுணர்வு மெல்ல மெல்ல சிதைகிறது. கூட்டுச்செயற்பாடு, கூட்டு நடவடிக்கை எனும் கூட்டு இயங் கியலை நோய்த்தொற்றின் வழியாகப் பிரித்தாலும் நாம் உணர்வால் இணைந்தே வாழ்வோமென்பதை இக்கவிதை கூறுகின்றது.

'தாயினும் மேலான அன்புடையோராய்' நாம் இருக்க வேண்டும் என்பதையும் மனிதர் இயற்கை என்பதை உணர்ந்து வாழ வேண்டுமென்பதையும் 'தாயினும் மேலான அன்புடையோராய்' என்ற கவிதை கூறிச் செல்கிறது. இக்கவிதை கடவுளர்களின் பேரால் நடத்தப்படும் மோதல் களையும் முரண்பாடுகளையும் கேள்விக்குட்படுத்துகிறது. மானுட இயற்கை வாழ்வில் மனிதர்களிடத்தில் எந்த கடவு ளர்களும் ஏற்றத்தாழ்வுகளைச் சொல்லவில்லை. எவரையும் தீட்டு என்று ஒதுக்கவில்லை. எவரையும் பழிவாங்கச் சொல் லவில்லை அன்புடைய மனிதர்கள் இதை அறிந்து செயற் படவேண்டும் என்று இக்கவிதையில் கவிஞர் கூறுகிறார்.

‘விபத்தாக வந்துவிட்டது’ எனும் தலைப்பில் அமைந்த கவிதை பிரதான மாடங்களும் கோபுரங்களும் புராதனமாக இருந்தவை என்றும் ஆதியான நம்பிக்கைக்கான வாழ்க்கை விபத்தாக வாய்க்கப்பெற்றது என்றும் மனிதர்கள் ஒவ்வொருவரும் தேசத்தில் தனித்து விடப்பட்டவர்களாக ஆனார்கள் என்றும் கூறுகிறது. தனித்து விடப்பட்ட சூழலில் அச்சமும் மரண பயமும் கேள்விக்குறியாக மாறுகிறது. நாளைய வாழ்தலுக்கான தேவை மனதிலும் அறிவிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இக்கவிதையில் ஆதியான நம்பிக்கை கவிதைக்கான சொற்கள் ஆகின்றன.

‘தேவை ஆதிக்க நீக்கம்பெற்ற
சிந்தனைகளின் வாழ் நிலமான
இயற்கை நுண்ணறிவு’
அதற்கான பள்ளிகளை உருவாக்குவோம்.
மனித நுண்ணறிவை மழுங்கடிக்கும்
ஏமாற்றுகள் மீது விழிப்பாக இருப்போம்.’

இன்றைய சூழலில் கற்றலில் வழியான அறிவுருவாக்கம் செயற்கையையே நாடுகின்றது. இயற்கை சார்ந்த அறிவே வளமையை ஏற்படுத்தும் என்பதைக் கவிதை பதிவுசெய்கிறது.

‘இந்தநிலை இனியும் வேண்டாம்!
பழுத்த அனுபவமும்
ஆங்கில மேதைமையும்
வெளிநாட்டு
உயர் பல்கலைக்கழகங்களில்
உச்சப் படிப்பும்
பட்டமும் பெற்றவர்கள்
எழுபது (70) ஆண்டுகளுக்கும்
மேலாக சாதித்தவையே
இன்றைய மெது
வங்குரோத்து நிலை
இந்தநிலை இனியும் வேண்டுமா?’

நமக்குத் தேவையான மேதைமை எதுவாக இருக்கக்கூடும் என்பதை இக்கவிதை வினாவோடு முடிவினைப் பூடகமாகக் காட்டுகிறது. மேதையின் பழுத்த அறிவுக்கு எல்லையற்ற நிலையுண்டு என்பதைக் கவிதை வெளிப்படுத்துகிறது. ஒருபக்கம் அறிவுலகில் தமக்கு விஞ்சியவர்கள் எவருமில்லை என்கிற மனப்போக்குப் பலரிடத்தில் இருப்பது என்பது வங்குரோத்து நிலையாக உள்ளது என்பதைக் கவிதை புரியவைக்கிறது.

‘கருவறைக்குள் சிக்குண்ட மகவுகள்!’ எனும் கவிதை, தாய்சேய் மருத்துவமனைகள் இன்று இலாபத்திற்காக இயங்குவதை எடுத்துரைக்கின்றது. ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுக்கும் சந்தர்பத்தில் உள, உடல் ரீதியான நெருக்கடியை ஏற்படுத்தி அறுவைச் சிகிச்சையை மூலம் குழந்தையைப் பிரசவிக்கச் செய்து இலாப நோக்கிலே இயங்குவதை இக்கவிதை காரசாரமாகக் கண்டிக்கிறது.

‘நச்சு இரசாயனங்களில்
பழுக்க காய்ச்சி
காய்களைக் கனியாக்கும்
வணிகம்.
சந்தைகளில் சந்திகளில்
சந்தைப்படுத்தல்கள்
அதீத இலாபக்கெடு
கனிகளை அன்றி
காய்கறிகளையும்
நஞ்சில் துவைத்து
நாசகாரம்...’
தைத்தான்
ஏற்றினாலும் இறக்கினாலும்
ஆண்டையின் அடிமைகள்
அதிகாரம்...’

மனிதம் எனும் மாண்போடு அன்பு எங்கும் தழைத்தோங்கிட ஒவ்வொரு மொழிசார்ந்த இனத்திலும், ஒவ்வொரு நிலத்திலும் மகிழ்ச்சி நிறைந்திட விதைப்போம்; நடுவோம்; விளைவு செய்வோம் எனக் கவிதை வழியாக கூறி, மொழியாலும் இனத்தாலும் ஒன்றிணைந்த வாழ்வியலை, உலகெல்லாம் பேதமற்ற பொதுமை உணர்வால் நாம் இணைந்து வாழ்வோம் என்று பறைசாற்றுகிறார். தமிழக, இலங்கைச் சூழலில் கல்வி நிறுவனம் சார்ந்த திறனாய்வாளர்கள் அதிகமானோர் இருக்கிறார்கள். ஆனால், கவிதைப் படைப்பாளர்கள் மிகக் குறைவே. இலங்கைச் சூழலில் கல்வி நிறுவனம் சார்ந்த படைப்பாளர்களில் பேராசிரியர் சி. ஜெயசங்கர் குறிப்பிடத்தக்கவராக அடையாளப்படுகிறார்.

சி. ஜெயசங்கரின் கவிதையாக்கங்கள் சமூகத்தின் மேலுள்ள அக்கறையையும், மனித இனத்தின் மீதும், பல்லுயிர்களின் மீதும் கொண்ட பேரன்பையும் வெளிப்படுத்தி நிற்பதுடன் நிகழ்த்து வெளியில் தன்னின அடையாளத்தைத் தொடர்ந்து முன்வைக்கின்றன. கவிதை எழுதுவதும், நவீனக் கூத்திற்கான பாடல்களைப் படைப்பதுமான அவரது செயலூக்கம் வாழ்வில் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. இயற்கையின் மெய்ப்பொருளைக் காணுகின்ற வேட்கையும், இயற்கை நுண்ணறிவைப் பேணத்தவறி செயற்கை நுண்ணறிவை நாடிச் செல்லும் இன்றைய தலைமுறையின் போக்கினை எண்ணி வருந்தும் மனோநிலையும் இவரின் கவிதைகளின் மைய இழையாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தோமானால் இவரின் கவிதைகள் எளிமையான மொழிநடையில் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அவர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் பேசிச்செல்கின்றன.



Karunanidhi.M@thaiveedu.com

# ‘அன்பின் வழியது உயிர்நிலை’

## கதைத்தொகுப்பு ஒரு பார்வை

tg.theeban@gmail.com



– மைதிலி தயாநிதி

‘அன்பின் வழியது உயிர்நிலை... சமத்துவ இலக்கியத் தொகுப்பு 2025’ எனும் தலைப்பில் இலங்கை எழுத்தாளர்களால் எழுதப்பட்ட பத்துச் சிறுகதைகள் அடங்கிய நூலைக் கனடா சமஉரிமை இயக்கம் வெளியிட்டுள்ளது. ‘நவீன சமூகத்தில் இன்னமும் சமத்துவத்திற்கான குரலை அர்த்தபூர்வமாய் எழுப்பிக்கொண்டிருக்கும் அத்தனை தோழர்களுக்கும்’ இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில் இலக்கியச் செயற்பாட்டாளர்களான எழுத்தாளர்களையும் இது உள்ளடக்குகிறது என்று கருதலாம். 112 பக்கங்கள் கொண்ட இந்நூலின் தொடக்கத்தில் காணப்படும் ‘காலத்தின்மீது படர்ந்த பனி மூட்டங்களுக்குள்ளிருந்து’ எனும் தலைப்பிலான முன்னுரை இத்தொகுப்பை இலக்கிய-அரசியல் தளத்தில் நிலைநிறுத்துகிறது, மேலும், ‘மொழி, மனம், கலை’ என்ற தொகுப்புரை பொதுமைப்படுத்தப்பட்ட அழகியல் (Universalized aesthetics) மீதான அதிருப்தியை வெளிப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து காணப்படுபவை ‘வாங்கி வந்த பட்டாசு, மத்தாப்பு’, ‘நிலம் உடைத்து முளைக்கும் விதைகள்’, ‘சவக்குழி’, ‘பெண் வியர்வை’, ‘ஸீனியாவுக்குத் திருமணம்’, ‘மனமாற்றம்’, ‘மின்னும் சிறுதாரகையே’, ‘மல்லிகா-சுல்ஃபிகா’, ‘சுமக்கமுடியாத சுமைகள்’, ‘உடைக்கப்பட்ட சிறகுகள்’ எனும் பத்துச் சிறுகதைகள் ஆகும். சமத்துவ இலக்கியக்கோட்பாட்டுக்கு அணுக்கமான கதைகள் என்று முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இச்சிறுகதைகளில் சமத்துவம் என்ற கருத்தாக்கம் எவ்வாறு அடிநாதமாய் விளங்குகிறது என்பதைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கதைகள் சமூகப்பிரச்சினைகளைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் எடுத்துரைக்க முற்படுகின்றன. சமூகங்களிலே பொதுவாக மறைக்கப்படும், அல்லது பேச முடியாதபடி மௌனமாக்கப்படும் பிரச்சினைகளை நேரடி எடுத்துரைப்பு முறைகள் வழியாக அம்பலப்படுத்துகின்றன. அதன் மூலமாக, அவை சிந்தனை சார்ந்த வாசிப்பு முறையைத் தூண்டி, அந்தச் சிந்தனையை வாசகரின் அனுபவமாகவும், பங்கேற்பு வடிவமாகவும் மாற்றுகின்றன.

இந்தத் தொகுப்பு, பிரதானமாக, இரண்டு காரணங்களுக்காகக் குறிப்பிடத்தக்கது. முதலாவது, இது மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை வடிவமைக்கும் சமகால சமூக யதார்த்தங்களின் நுணுக்கமான சித்திரத்தை வழங்குகிறது. இரண்டாவது, இந்தக் கதைகள் ஒரு குறிப்பிடத்தக்க கருத்தியல் மாற்றத்தைப் பதிவுசெய்கின்றன. பாரம்பரியமாகப் பழமைவாத சமூக, மதச் சூழல்களில் வாழ்ந்து வந்த பெண்கள், ஆழமாக வேரூன்றிய ஆணாதிக்க விதிமுறைகள் தொடர்பாகக் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர் என்பது கவனத்தை ஈர்க்கும் விடயம். அதே சமயம், ஆண்கள் இப்புதிய விழிப்புணர்வை அங்கீகரித்து, புரிதலுடனும் ஆதரவுடனும் செயலாற்றல் வேண்டும் என்ற பெண்களின் எதிர்பார்ப்பும் முக்கியமானது. பெண்கள் வாழ்வில் மாற்றமானது ஆணின் மனமாற்றம், மற்றும் தார்மிக ஆதரவு வழியாகவே சாத்தியமாகிறது என்பதை இங்கு காணப்படும் பெண்மையக் கதைகள் காட்டுகின்றன.

இந்நூலின் முன்னுரை ‘நாகரிகம்’ என்பதை ‘சமத்துவம்’ என மீள் அர்த்தப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது: ‘மானுட சமூக வரலாற்றில் நாகரிகம் என்பதை அதிகார சக்திகள் எவ்வாறு எடுத்துக் கையாண்டன என்ற புரிதலை மனதிற் கொண்டு, அதனை மீள் அர்த்தப்படுத்தலாக சமத்துவமே நாகரிகம் எனத் தொடர்ந்தும் வலியுறுத்த வேண்டியுள்ளது.’

சமூகத்தில் அதிகாரம் படைத்தவர்கள் வரலாற்று ரீதியாக ‘நாகரிகம்’ என்ற கருத்தை ஏனையவர்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவல்ல கருவியாகப் பயன்படுத்தியுள்ளனர். சாதியப் படிநிலைகள், காலனித்துவ ஆட்சி முதலானவை, அவர்களின் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் கருவிகளாயின. அத்துடன், உழைப்புச் சுரண்டலையும், பொருளாதாரச் சுரண்டலையும் ‘முன்னேற்றம்’ என்ற பெயரில் அவர்கள் மறைத்தனர். எனவே, நாகரிகம் என்பது சமூக அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளப் பயன்படுத்தப்பட்ட ஒரு கருத்தியல் ஆயுதமாக மாறியது. ஆனால், நாகரிகத்தை சமத்துவமாக மீள் அர்த்தம் செய்யும்போது, அது செல்வத்தாலோ, பண்பாட்டுப் பெருமையாலோ, அதிகாரத்தாலோ அளவிடப்படுவதில்லை. மாறாக, ஒரு சமூகம் உடல், உள, பொருளாதார, சமூகநிலை முதலியவற்றால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களை எவ்வாறு நடத்துகிறது, பராமரிக்கிறது, பாதுகாக்கிறது என்பதன் மூலமே அளவிடப்படுகிறது.

சமத்துவம் என்ற சொல் முதன் முதலில் இந்திய தத்துவ இலக்கியத்தில் இடம்பெற்றது. அங்கு சுக துக்கங்கள் இன்ப துன்பம் எனும் இருமைகளினால் தாக்குறாது நடுநிலைமையுடன் மனதை வைத்திருத்தல் வேண்டும் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டது. புறநானூறு எனும் பழந்தமிழிலக்கிய நூலிலே 'மாட்சியிற் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' எனும் பாடலடிகள் உணர்த்தும் பெருமை, சிறுமைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் மனிதரை மதித்தல் என்பதைத் தமிழில் சமத்துவம் எனும் கருத்தாக்கத்தின் ஊற்றாகக் கருதலாம்.

இருப்பினும், இருபதாம் நூற்றாண்டில், இந்தச் சொல் குறிப்பிடத்தக்க சொற்பொருள் விரிவாக்கத்திற்கு உள்ளானது. ஜனநாயக இலட்சியங்கள், மனித உரிமைகள், தலித் இயக்கம் பெண்ணிய இயக்கங்களால் பரந்த சமூக-அரசியல் பொருள் பெற்றது. இக்கட்டுரையில் சமத்துவம் என்பது அனைத்து சமூக அடையாளங்களையும் கடந்து, தனிநபர்களின் கண்ணியத்தையும் நியாயத்தையும் உறுதிப்படுத்தும் கோட்பாடாகக் கொள்ளப்படுகிறது.

## கதைகளின் கருத்தாக்கங்கள்:

- **அரசநிர்வாகம்:**

இந்நூலின் முதலாவது கதையான முத்துப்பழநி ராமதாஸின் 'வாங்கி வந்த பட்டாசு, மத்தாப்பு' என்ற சிறுகதை, அரச நிர்வாகம் 'சமத்துவம்' என்ற கொள்கையை முறையாக உள்வாங்கி நடைமுறைப்படுத்தத் தவறும்போது, இளைஞரின் எதிர்காலக் கனவுகள் எவ்வாறு சிதைகின்றன என்பதைக் காட்டுகிறது. ஆசிரியப் பயிற்சி பெறல் வேண்டும் எனும் இலட்சியத்துடன் இருக்கும் இக்கதையின் பிரதான பாத்திரம், சம வாய்ப்பின்மை காரணமாக, கொழும்பில் மூட்டை தூக்கும் கூலித்தொழிலாளியாவதுடன், உளவியல் நெருக்கடிகளுக் கும் உள்ளாகிறது. பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்களுக்கு உயர்கல்வியும் வேலைவாய்ப்புகளும் ஏற்கனவே எட்டாக் கனியாக இருக் கும் சூழலில், சமத்துவ அடிப்படையற்ற அரச நடைமுறைகள், கல்வியே சமத்துவ சமூகத்தை உருவாக்கும் பாதை என்ற அடிப்படை நம்பிக்கையை மறுதலிக்கின் றன.



- **சாதியம்:**

இத்தலைப்பின் கீழ் இரண்டு கதைகளை உள்ளடக்கலாம். முதலாவது கதை ப. கனகேஸ்வரனின் 'நிலம் உடைத்து முளைக்கும் விதைகள்'. இச்சிறுகதையில் தூய்மைப்பணியாளர் ஒருவர் தன்னை நேர்காணல் செய்பவருடன் தனது ஆதங்கங்களைப் பகிர்ந்து கொள்கிறார். பசிக்காகவே இத்தொழிலில் ஈடுபடுவதாகக் கூறும் அவர் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட தன் சமூகத்தைச் சார்ந்தவர்கள் திட்டமிட்டே தாழ்த்தப்பட்டவர்கள்' என விளக்க, இளைய தலைமுறையைச் சேர்ந்த நேர்காணல் செய்பவர் தன்னைக் கல்வி கற்க வைத்து இத்தகைய தொழிலில் ஈடுபடாமல் சமூகத்தில் தன் நிலையை உயர்த்திய தந்தையை நன்றிப்பெருக்குடன் நினைக்கிறார். 'தடைகள், சவால்களைத் தாண்டி இந்த சமூகம் கல்வியைக் கற்றுக் கொண்டாற்போதும்; இத்தனை காலச் சாபம் ஒரே நாளில் மாறிப் போகும்' என்று எண்ணுகிறார். நிலம் உடைத்து முளைக்கும் விதைகள் என்பது அத்தகையோருக்கான குறியீடாகிறது. ஆனால், அவர், தானும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரே என்ற விடயத்தை அந்தத் தூய்மைப்பணியாளரிடமிருந்து மறைத்து விடுகிறார். இது சாதியின் உளவியல் சுமையை நுட்பமாகக் காட்டுகிறது. அதாவது, சாதி என்பது வெறும் சமூக அமைப்பு அல்ல; உளவியல் அமைப்பும் கூட. தன்னைக் கல்வியால் உயர்த்திக்கொண்டவர் தன் வேர்களை மறுப்பது சாதியத்தின் உளவியல் ஆழத்தைக் காட்டுகிறது எனலாம்.

இரண்டாவது கதை நிவேதாவின் 'சவக்குழி' ஆகும், இது சிவனொளிபாதமலைக்கு அண்மையில் இருக்கும் நல்ல தண்ணி என்ற தேயிலைத் தோட்டத்தில் நிலவும் சாதிப்பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. இது 1944-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வில்லூன்றி மயானப்படுகொலையையும் அது குறித்து அ.ந. கந்தசாமி எழுதிய 'நாட்டினர்நீர் அறிவீர் வில்லூன்றி தன்னில் நாம் கண்ட ஈமத்தீ வெறுந்தீ அன்று' என்ற கவிதையையும் நினைவுபடுத்துவது. சாதி வன்முறை இன்னமும் முடிவுறாத வரலாறு என்பதை இக்கதை காட்டுகிறது.

சமத்துவத்திற்குத் தடையாக இருப்பது பொருளாதார வேறுபாடு அல்ல, மாறாக சமத்துவமின்மையை நியாயப்படுத்தும் சாதியமே என்ற கருத்தை இக்கதை பிரதிபலிக்கிறது

- **சமூக அந்தஸ்து:**

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸின் 'ஸீனியாவுக்குத் திருமணம்' என்ற கதை சகோதரத்துவத்தை வலியுறுத்தும் இஸ்லாமிய சமூகத்துள் எவ்வாறு சமூக அந்தஸ்து ரீதியிலான வேறுபாடுகள் உருவாக்கப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது. சமூக அந்தஸ்து மிக்க பரம்பரை முஸ்லிங்களான 'லெப்ப' குடும்பத்திற் பிறந்த பெண்ணை புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய 'மௌலா இஸ்லாம்' குடும்பத்தைச் சேர்ந்த ஆடவனுக்குத் திருமணம் செய்து வைப்பதா என்ற பிரச்சினை எழுகிறது. 'மௌலா இஸ்லாம், பரம்பர இஸ்லாம் இஸ்லாத்தில் இல்ல. கலிமா சொன்ன எல்லாருமே முஸ்லிம் தான்' என்று கூறி மணமகளின் பெரியப்பா இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறார். அதாவது, 'சமூக அந்தஸ்து' என்பது இஸ்லாமிய மதக் கொள்கைகளின் மீறல் எனும் உள்ளக விமர்சனம் (internal criticism) மூலமாக, மதத்தின் உண்மையான சமத்துவக் கருத்துக்கும், சமூக அமைப்பு உருவாக்கும் அந்தஸ்து வேறுபாடுகளுக்கும் இடையிலான முரண்பாட்டை இக்கதை வெளிப்படுத்துகிறது.

- **பாலின சமத்துவம்:**

பெண்ணின் வாழ்வியற் பிரச்சினைகள், பாலின சமத்துவம் தொடர்பாக நான்கு கதைகள் காணப்படுகின்றன.

- சம்மாந்துறை மஷூறா எழுதிய 'சுமக்க முடியாத சுமைகள்' என்ற கதை மத வரையறைகளுக்குள் உட்பட்டு நின்று கொண்டு எவ்வாறு ஒரு பெண் தன் சுய மரியாதையைப் பேணக் கூடியதாயிருக்கிறது என்பதைச் சித்திரிக்கிறது. கணவனின் சொற்கேட்டு, 'அபய' அணிகிறாள், பிற ஆடவர் முன்னே வருதலைத் தவிர்க்கிறாள்; தன் வாழ்வாதாரமான ஆசிரியத் தொழிலையே கைவிட்டு வறுமையில் வாடுகிறாள். ஆனால் கணவன் இன்னொரு திருமணம் செய்தமையை மதக் கோட்பாடு மூலம் நியாயப்படுத்தியமையை அவள் சிறிதும் ஏற்கவில்லை. பிரிந்து சென்ற கணவன் விபத்தின் பின்னர் மீண்டும் அவளுடன் சேர்ந்து வாழ விரும்பும்போது, ஆணாதிக்க நியாயங்களை ஏற்றுக்கொள்ளாத இளைய தலைமுறையின் பிரதிநிதி எனக் கருதத்தக்க தன் மகனின் ஆதரவுடன் கணவனின் கோரிக்கையை நிராகரிக்கிறாள்.

- ஆ.லே. பாத்திமாவின் 'உடைக்கப்பட்ட சிறகுகள்' என்ற சிறுகதை ஆண், பெண் நடத்தை தொடர்பான சமூக மதிப்பீடுகளின் சமத்துவமின்மையைச் சுட்டிக்காட்டுகிறது. பாலியல் ஒழுக்க மீறல்களினால் பெண்கள் சமூகத்தினால் தண்டிக்கப்படும் அதே சமயம், ஆண்கள் எவ்வித களங்கத்தையும் எதிர்கொள்ளாது, தாம் விரும்பிய வாழ்வை வாழ்வதற்கான சூழல் இருப்பதை இக்கதை விமர்சிக்கிறது. பாதிக்கப்பட்ட பெண், விழிப்புணர்வுள்ள ஆணை விவாகம் செய்து, சமூக ஒழுக்க மதிப்பீடுகளின் சமச்சீரற்ற தன்மையைத் தனது சுயசரிதை மூலமாக அம்பலப்படுத்துகிறாள். நீதி, ஒழுக்கம் முதலானவை பாலினச் சார்பு இல்லாமல் செயற்படும் போதுதான் உண்மையான சமூக சமத்துவத்திற்கு அடி கோலுகின்றன என்பதை இக்கதை உணர்த்துகிறது.

- வஸீலா ஸாஹிர் எழுதிய 'பெண் வியர்வை' என்ற கதை பெண்களின் உழைப்பு எவ்வாறு சமூகத்தில் மதிப்பிழக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. வீட்டிலிருந்து வெளியே வந்து, தனியே மத்தியகிழக்கு நாடொன்றில் வேலை செய்வதாலேயே ஒழுக்க அடிப்படையில் தனது காதலனின் குடும்பத்தால் நிராகரிக்கப்பட்டு, தனக்கென வாழ்வை அமைத்துக் கொள்ளவியலாத அப்பெண்ணை ஒரு எந்திரமாகக் கருதி அவள் மூலமாகத் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள அவள் குடும்பம் முயல்கிறது. சமூக அங்கீகாரமில்லாமையால் மறைக்கப்பட்ட அல்லது சுரண்டப்படும் பெண் உழைப்பு சமத்துவத்தின் அடிப்படையை வேரறுக்கிறது என்பதை இக்கதை சுட்டுகிறது.

- I.S. ஹினாயா எழுதிய 'மனமாற்றம்' என்ற சிறுகதை வேலைக்கும் சென்று, வீட்டிலும் வேலை செய்யும் பெண்களின் இரட்டைச் சுமை பற்றிப் பேசுகிறது. முதலில் மனைவியின் முறைப்பாடுகளை உதாசீனம் செய்த கணவன், பின்னர் மனம் மாறி வீட்டு வேலைகளை அவளுடன் பகிர்ந்து கொள்கிறான். அத்துடன் குழந்தைகளையும் தாயின் வேலைச் சுமையைக் குறைப்பதற்காக தத்தமது வேலையைச் செய்யுமாறு அறிவுறுத்துகிறான். இத்தகைய மனமாற்றங்கள் குடும்ப அமைப்பில் உண்மையான பாலின சமத்துவத்தின் ஆரம்பம் எனக் கதை சுட்டிக்காட்டுகிறது. பாலின சமத்துவம் என்பது வீட்டுவேலை பெண்களுக்கு மட்டுமே உரியது என்ற காலங்காலமாக நிலவி வரும் கருத்தை உடைப்பதாகும்.

- **இன – மத பதற்றங்களிடையே உருவாகும் பெண் நட்பு:**

திக்குவல்லை கமாலின் மல்லிகா-சுல்ஃபிகா எனும் சிறுகதை, பதற்றமான உறவுகள் கொண்ட பெரும்பான்மை-சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த இருபெண்களுக்கிடையே முகிழ்த்த நட்புக் குறித்துப் பேசுகிறது. முதலில் தனிநபர்களுக்கிடையிலும், பின்னர், இரு குடும்பங்களுக்கிடையிலுமாக மலர்ந்த பெண் நட்பு பிளவுற்ற இரு சமூகங்களை இணைக்கும் பாலமாகச் செயற்படும் சாத்தியப்பாடு கொண்டதாகக் குறிப்பால் உணர்த்தப்படுகிறது. சமத்துவம் என்பது அரசியற் செயற்பாடுகளில் அல்லாது தனிநபர் உறவுகளிலேயே நிலைகொள்கிறது என்பதையும். மனிதநேயத்தின் அடிப்படை வடிவமான நட்பே சமத்துவத்தை நிலைநாட்டும் என்பதையும் இக்கதை உணர்த்துகிறது.

- **மாற்றுத் திறனாளி – Down syndrome:**

மின்னும் சிறு தாரகையே என்ற எம்.எம். நௌஷாத் எழுதிய சிறுகதை down syndrome-ஆல் பாதிக்கப்பட்ட குழந்தையைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள் பற்றிப் பேசுகிறது. குழந்தையை முழுமையாகத் தாய் ஏற்றுக்கொள்கிறாள். ஆனால், சமூகம் கற்பித்த இயல்புநிலை (normalcy), அழகு (beauty) முதலியவற்றின் வரையறைகளை உள்வாங்கிய தந்தை குழந்தையைப் புறக்கணிக்கிறான். கதையின் முடிவில் தந்தையின் மனமாற்றம், சமூக மதிப்பீடுகளை மீறும் மனித உறவின், அன்பின் வெற்றியைச் சுட்டுகிறது. சமத்துவம் என்பது மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் மனித மதிப்பை முழுமையாக ஏற்றுக்கொள்வது ஆகும் என்று இக்கதை வலியுறுத்துகிறது.

இத்தொகுப்பின் பத்துக் கதைகளும், வெவ்வேறு சமூக-அரசியல் தளங்களில் 'சமத்துவம்' எவ்வாறு சவாலுக்குள்ளாகிறது என்பதை நுட்பமாக சித்தரிக்கின்றன. சாதி, பாலினம், மதம், சமூக அந்தஸ்து, மாற்றுத் திறன், பொருளாதார நிலை போன்ற பல அடையாளங்களினால் சமத்துவம் முழுமையாக உணரப்படமுடியாததொன்றாக இருக்கிறது என்பதை இவை தெளிவு படுத்தி அமைப்பு ரீதியிலான அசமத்துவத்தைக் (structural inequality) கூட்டாக எதிர்கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இவ்வகையில் இலங்கையின் சமகால சமூக நிலைமைகளையும், சமத்துவம் பற்றிய விரிவான நவீன புரிதல்களையும் இணைக்கும் ஒரு இலக்கியப் பாலமாக இத்தொகுதி விளங்குகிறது.



maithilithayanithy@thaiveedu.com

குழந்தை ம. சண்முகலிங்கத்தின்

# இடுக்கண் வருங்கால்...

- யசோதரா சாந்தகுமார்



குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் 'இடுக்கண் வருங்கால்...' சிறுவர் நாடகம் பதிப்பாசிரியர் நாகேந்திரம் நவராஜ் அவர்களின் முயற்சியால் நூலுருப்பெற்று, ஜீவநதி வெளியீடாக எம் கைகளில் இன்று தவழ்கின்றது. இந்நூல் எனது மானசீகக் குருக்களில் ஒருவராகத் திகழும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுடைய காலத்தில் நாம் வாழ்ந்ததையும், அவருடன் கூடித்திரிந்து, நாடக ஆற்று கைகள் பலவற்றில் பங்கேற்றதையும் மீள நினைத்து அவரை நன்றியுடன் நினைவுகூரச் செய்திருக் கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கி யலும் சிறப்புக் கலை வகுப்பில் கற்கும் மாணவர் களாக இருந்த தருணங்கள் மனதை நெருடுகின்றன. செய்முறை யாகவும் அறிமுறையாகவும் நாடகம் கற்பிக்கப் பட்டது. அறிமுறையிலேயே அதிக கவனம் எடுத்துக் கொள்ளப் பட்டது. செய்முறை குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் நெறியாள்கை செய்யும் நாடகங்களில் பங்கு பற்றுவதன் மூலம் கிடைக்கும் அனுபவங்களில் இருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டது. இதற்காக குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் பங்குகொள்ளும் கருத்தரங்குகளிலும், களப் பயிற்சிகளிலும் நாடக ஒத்திகைகளிலும் அவருடன் பங்கேற்பது என்பது எமது பிரதான வேலையாக அமைந்தி ருந்தது. இந்நிகழ்வுகளில் நாம் மிகவும் விருப்பத்துடன் ஈடுபடுவோம். அக்காலங்களை எனது பெரும் பாக்கிய மாகவே நான் கருதுகின்றேன்.

சித்திரத்தில் இருந்த ஈடுபாடு காரணமாக சித்திர ஆசிரியர்களான கலாகேசரி தம்பிதுரை, திரு. நா. சுந்தரலிங்கம், திரு. இராஜரத்தினம், திரு. சிவப்பிரகாசம், திரு. துரைவீரசிங்கம், திரு. ரமணி போன்ற பலரிடம் ஆசிரியர் தரத்துக்கான சித்திரத்தைக் கற்று, வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்பட்ட ஆசிரியர் தர பரீட்சையில் சித்தி அடைந்திருந்தேன். அத்துடன் ஒப்பனையும் ஏனைய நுண்கலை வடிவமைப்புகளிலும் டிப்ளோமா பட்டமும் பெற்றிருந்தேன். இந்த அறிவையும் நுட்பங்களையும் பயன்படுத்த நாடகத்தில் எனக்கு ஒரு களத்தை அமைத்துக் கொடுத்திருந்தார் நாடக ஆசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள். அவரே இந்நாடகத்தின் நெறியாளராகவும் இருந்ததினால் நாடக த்தில் நடிகராக இருந்த எனக்கு காட்சி விதானிப்பு, வேட உடை வடிவமைப்பு, ஒப்பனை பேன்ற பல்வேறு பொறுப்பு களையும் வழங்கியிருந்தார். சிறுவர் காட்சி அமைப்புகள் எவ்வகையில் அமைய வேண்டும் என்று விளக்கி ஆற்றுகையை மெருகூட்டுவதற்கான வழி வகைகளைச் செய்வதற்கு என்னை வழிப்படுத்தினார்.

அக்காலத்தில் சிறுவர் சித்திரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி தம்பிதுரை ஆசிரியர் அவர்கள் நூல் ஒன்றினை வெளியிட்டிருந்தார். அதன் உதவியுடனும் பல்கலைக்கழகக் காலம் ஆதலால், தற்போது நுண் கலைத் துறையின் தலைவராக இருக்கும் சனாதனன் அவர்களின் ஆலோசனைகளுடனும் வழிப்படுத்தலுடனும் காட்சி அமைப்பிற்கான திரை, மரம், செடிகள் என்பன சிறுவர்களுக்கு ஏற்ற வகையிலான வர்ணங்களுடன் கீறப்பட்டன. ஆடல் பாடல்கள் சிறுவர்களுக்குப் பிடிக்கும் என்பது போல சித்திரம் கீறவும் வர்ணங்கள் பூசவும் சிறுவர்களுக்குப் பிடித்திருந்தது. பெரியவர்களும் சித்திரங்கள் கீறுவதற்கு தயாராக இருந்தனர். அவர்களை வழிப்படுத்தி அவர்களின் உதவியுடன் ஒவ்வொன்றும் வெள்ளைத் தாளில் கீறப்பட்டு அவற்றிற்கு வர்ணம் தீட்டி,

கோடுகள், அளவுப் பிரமாணங்கள், வர்ண ஒத்திசைவுகள் எனப் பல வழிகளிலும் காட்சி அமைப்பு செம்மையுற மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்பாட்டில் அன்று அரங்க செயற்பாட்டு குழுவினருடன் இணைந்து செயற்பட்டிருந்த சுபாசினி என்பவர் முக்கியமானவர். அதன் பின்னர் செய்து முடித்த இப்பெரிய வேலைத்திட்டத்தினை அரங்க வடிவமாக் குவதற்கு நா. சுந்தரலிங்கம் ஆசிரியர் அவர்களின் கற்பித்தல் முறைகள் துணை செய்தன. இதைவிட நாடக எழுத்துருவில் அமைந்த விடயங்களும் அரங்க காட்சி விதானிப்புக்கும் எமக்குக் கைகொடுத்தன.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் மிகவும் எளிமையான மனிதர், இது அவரது நாடகங்களிலும் வெளிப்படும். இந்நாடகத்திலும் அது வெளிப்படுவதை நாம் நன்கு அறிந்து கொண்டோம். எனவே காட்சி அமைப்பிற்கான காட்டுத்திரையை உரப்பைகளைக் கொண்டு ஆக்குவது என முடிவு செய்ததுடன் மரங்கள், செடிகள், புதர்கள், வீடுகள் என்பவற்றிற்கு மரங்களையும் 'சிப்போட்டு'களையும் (Zip board) பயன்படுத்தினோம். இன்று நிறையவே பணத்தை விரயமாக்கி நாடகத்தை செய்வது பெருமையான விடயமாக அமைந்துவிட்டது. குழந்தை சேருடன் சேர்ந்து நாடகங்களை ஆற்றுகை செய்ததினால் எளிமையில் செம்மை என்பதையே இன்றும் எனது மனம் விரும்புகின்றது.

அரங்கச் செயற்பாட்டுக் குழு இயங்குமிடத்திலேயே இதற்கான வேலைகள் நடைபெற்றது. திரு சிதம்பரநாதன் அவர்கள், இதன் பொறுப்பாளராக இருந்தபோதிலும் அக்காலங்களில் அவர் மேற்படிப்பிற்காக சென்றிருந்த மையால் திரு. தே. தேவானந்த் அவர்கள் அக்குழுவை வழிநடத்தி வந்தார். இக்காலப்பகுதியில்தான் 'துணிவு' என்ற அவரது நாடக ஆற்றுகையும் நடந்திருந்தது. அந் நாடகத்திற்கான காட்சி அமைப்பு, ஒப்பனை, வேடஉடை வடிவமைப்பு வேலைகளில் ஈடுபட்ட அனுபவமும் இடுக்கண் வருங்கால் நாடகத்தை மெருகூட்டுவதற்கும் அதில் முழுமனதோடு திறமையாக ஈடுபடவும் என்னைத் தூண்டியது. இத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபடும் என்னை இனங்கண்டு, குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் பொறுப்புகளைத் தந்து தானும் எம்முடன் நின்று, ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் எமக்கு அளித்து, எம்மை அவர் உயிருடன் உள்ளவரையில் இத் துறையில் முன்னேற வழி அமைத்த பெருந் தகையாக இருந்ததை நான் நன்றியுடன் இவ்விடத்தில் நினைவு கூர்கின்றேன்.

நாடகத்தை நடிப்பதற்கும் அரங்க வேலைகளைச் செய்வதற்கும் அன்று பலர் ஆர்வமாக இருந்தனர். அவர்கள் தமக்குரிய வேலைகளை முடித்துக் கொண்டு வந்து நாடக வேலைக்காகத் தம்மை அர்ப்பணித்தனர். நாடகம் என்பது கூட்டு முயற்சியின் விளைவு என்பதை அக் காலங்களில் எமக்கு உணர்த்தி எம்மை வழிப்படுத்தி வந்த குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் அதிகம் தேவை யில்லாமல் கதைக்கமாட்டார். யாரையும் புண்படுத்த மாட்டார். தனக்குப் பிடிக்காத விடயங்களை அல்லது பிழையான செயல்களைச் செய்யும்போது கண்டிப்பு மிகுதியுடன் காணப்படுவார். அவர் 'வழமைக்கு மாறாக இருக்கிறார்' என்றால் எமக்குத் தெரியும் ஏதோ ஒன்று நடந்துவிட்டது என்று. 'நாம் வழிப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்' என்று எம்மை சிந்திக்க தூண்டும் வண்ணம் அவரால் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் மரியாதையுடனும் நாம் வழிநடத்தப்பட்டோம்.

நாடக ஒத்திகைகளுக்காக ஒன்று கூடும் நேரங்களில் ஒழுங்கு கட்டுப்பாடு என்பன அதிகம் இருக்கும். அச் சமயங்களில் அவர் ஒரு பாதுகாப்பு அரணாக இருந்து எம்மை வழி நடத்துவார். அவருக்கென்று சமூகத்தில் தனி அங்கீகாரம் இருந்தது. இந்தச் சிந்தனையில் நின்றுகொண்டு பதிப்பாசிரியர் நாகேந்திரம் நவராஜ் அவர்களின் சீரிய முயற் சியால் நூலுருப்பெற்றிருகிறது 'இடுக்கண் வருங்கால்..' என்ற நாடக நூல். அதன் அட்டையின் வடிவமைப்பு மிகுந்த கவனத்தைப் பெறுகிறது அதன் வர்ணம் மற்றும் அதனுள் அமைந்திருக்கும் உருவம் ஆகியவை ஒரு நிறைவைத் தரு கின்றன. இடுக்கண்வருங்கால்... சிறுவர்களுக்காக எழுதப்பட்ட நாடகமாக அமைந்திருந்த போதும் வளர்ந்தவர் களும் சிறுவர்களும் இணைந்து ஆற்றுகை செய்யும் வகையிலேயே இதன் எழுத்துரு எழுதப்பட்டுள்ளது.

இடுக்கண்ணிலிருந்து மீண்டவர் வாழ்வில் திரும்பத் திரும்ப வரும் சிக்கல்களில் சிக்கி தவிக்கமாட்டார்கள். சிக்கலை அவிழ்க்க அவர்கள் கற்றுக் கொள்வார்கள் என்பதை உணர்த்துவதாக நாடகக் கதை பின்னப்பட்டு இருக்கும் முறை அருமையானது. மாஷாவின் கதையை அருமையான நாடகமாகப் பின்னி குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் நாடக எழுத்துருவாக ஆக்கித் தந்திருக்கிறார் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள். இழப்பின் வடிவங்கள் மாறிக் கொண்டு செல்கிறது, கால மாற்றத்திற்கு ஏற்ப அவற்றி லிருந்து மீள வேண்டும் என்பது நாடக ஆசிரியரின் எண்ணமாக இருக்கிறது போலும்.

போரின் விளைவால் 'குடும்பங்கள்' சின்னா பின்னமாக்கப்படுகின்றன. குடும்ப அமைப்புகள் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. இதனால், முதியவராக இருப்போர் பிள்ளைகளைப் பிரிந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம். அதனால் ஏற்படும் ஏக்கம் இந்த நாடகத்தின் ஆரம்பத்தில் இழையோடிக் காணப்படு கின்றது. பிள்ளைகளின் உரையாடல் மூலம் கதையை எடுத்துச் சொல்லி குழந்தைக ளுக்கான உத்திகளைக் கையாண்டு சிறுவர்களுக்கான உளவியல் நாடக வகைக்குள் இட்டுச் செல்கிறார் நாடக ஆசிரியர்.



யுத்தத்தின் பயங்கரத்தால் யாழ். மக்களுக்கு வந்த அவலங்களில் இருந்து அவர்கள் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று உளவியலாளர்கள் செயற்பட்ட அக்காலகட்டத்தில் கல்வி யியலாளர்களும் கலைஞர் களும் அதை உணர்ந்தவர் களாக அவர்களுடன் செயற்பட்டு மக்களை மீட்டெடுத்தனர்.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் இக்காலத்தை நன்குணர்ந்தவராக இருந்ததினால் அவர் இந்நாடகத்தை மூன்று காட்சிகளாகப் பகுத்து எழுதி, நெறியாள்கை செய்து ஆற்றுகையும் செய்துள்ளார். இதன்மூலம் இந்நாடகம் ஆற்றுகையில் பங்கேற்றவருக்கும் பார்வையாளர்களுக்கும் ஓர் உளச்சிகிச்சைக்குரிய நாடகமாக அமைந்திருந்தது.

பதிப்பாசிரியர், நாடகம் எழுந்த வரலாற்றை மிக சிறப்பாகப் பதிவிட்டுள்ளார். 1995-இல் நடந்த பாரிய இடப்பெயர்வின் பின்னர் யாழ்ப்பாணத்து மக்கள் 1996-களில் யாழ்பாணத்தில் மீளக்குடியமர்ந்து வாழ்வைத் தொடங்கும் காலத்தில் நாடக அரங்கக் கல்லூரியால் கருத்தரங்கும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் களப்பயிற்சியும் இந்நாடகத் திற்கான அடித்தளமாக அமைந்ததும், இக்காலத்தினை அண்டிய காலப்பலகுதியில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவிற்காக தே. தேவானந்தின் துணிவு நாடக ஆற்றுகையும் பின்புலங்களாக அமைந்திருந்ததும் குறிப் பிடத்தக்கது.

நாடகத்தை நடித்தவர்களில் பலர் பல்கலைக்கழக மாணவர்கள். சிலர் நாடகப் பாடத்தை ஒரு பாடமாக எடுத்து, பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள். சிலர் உயர்தர மாணவர்கள். சிறுவர்கள் சைவப் பிரகாச வித்யாசாலை மாணவர்கள். இந்நாடகத்திற்கான இசை றொபோட் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவர் நாடகத்திற்கு புதியவர், இந்த நாடகத்திற்குப் பின்னர் குழந்தை சேரின் நாடகங்கள் பலவற்றிற்கு இசையமைத்து, நாடக வரலாற்றில் தனது தடத்தைப் பதிக்கும் நிலைக்கு உயர்ந்தார் இங்கு என்பதும் குறிப்பிடத்தக்கது.

'இடுக்கண் வருங்கால்' என்ற இந்நூலின் இறுதிப் பகுதியில் 'நாடகம் என்பது ஆற்றுகைக் கலை' என்ற வகையில் நாட கத்தின் ஆற்றுகையின் போது பார்வையாளராக இரசித்த வர்களது குறிப்புகள் இந்நூலின் பின்னே இணைக்க ப்பட்டுள்ளமை மிகவும் சிறப்பான அம்சமாகும். இது பதிப் பாசிரியர் ஆற்றுகைக் கலைகளின் மேல் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக அமைவதுடன் நாடகக் கலையைப் பதிவு செய்யும் முயற்சிக்கு உரமிடுவதாகவே கருதுகின்றேன். அந்த நினைவுகளை மீட்டுப் பார்க்க இவையே எனக்குத் தூண்டுதல் அளித்தன. மேலும், அவ்விமர்சனக் குறிப்புகளில் கூறியவாறு 'காட்சிகள்' நன்கு வடிவமைக்கப்பட்டு இருந்ததற்கு 'பல பின்புலங்கள் இருந்தன'. அது உண்மையும் கூட! நாடக ஆசிரியர் பல உளவியல் நாடகங்களை ஆக்கியவர். இது போன்றே சிறுவர்களுக்கான உளவியல் நாடகத்தையும் அவர்களது மொழியிலேயே ஆடல், பாடல், நடிப்பு, அரங்கு, ஆற்றுகை நுட்பம் என்பவற்றை மனதில் வைத்து எழுதி உள்ளமையும் எமக்கு நன்கு புலப்படுகின்றது.

வேட உடை தேர்வு செய்யும் போதும், வடிவமைக்கும் போதும் கூட எளிமையாகக் கிடைக்கக்கூடியவற்றைக் கொண்டே திட்டமிடப்படும். அதனால், வேட உடைகளைத் தெரிவு செய்யும்போது ஆற்றுகையில் பங்குபற்றுபவர்களிடம் உள்ளவற்றையே தெரிவு செய்வோம். எல்லா வீட்டாருடைய உடைகளும் தேவையானவையாக மாறின. இதில் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் வீடும் விதிவிலக்கானது அல்ல. அவர் வீட்டில் இருந்த உடைகள் பலவும் எமக்கு வேட உடைகள் ஆயின.

மிருகங்களின் உரோமத்துக்காக (கரடி) உரப்பைகளைக் கீலங்களாக வெட்டி அவற்றிற்கிடையே ஓடும் பின்னல்களை அவிட்டு உரோமங்களுக்கு ஏற்ற நிறம் தடவி அவற்றை ஆடைகளாகக் கட்டிவிட்டோம். மனிதர்கள் மிருகங்களாக மாற்றப்பட வேண்டும் அல்லவா?, அவை அக்காலத்தில் எமக்கு புதுமையான முயற்சியாகவும் இருந்தது.

விமர்சனத்தில் நரி, மயில், மான், யானை போன்ற பாத்திரங்களுக்கு 'வேடவாக்கத்திலும் கவனம் செலுத்தி யிருக்கலாம். துணைச்சாதனங்களின் உதவி போதவில்லை' எனச் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது. இப்பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் வேறு பாத்திரங்களை ஏற்று நடித்ததினால் அவர்கள் சில குறியீட்டு உத்திகளை வைத்துக்கொண்டு நடிப்பில் ஈடுபடுவதாகத் திட்டமிடப் பட்டிருந்தது. பாத்திரம் ஏற்பேரின் எண்ணிக்கை கூடியிருந்தால் நெறியாளருடைய எண்ணம் நிறைவேற்ற ப்பட்டிருக்கும். பிள்ளைகளாக நடித்தவர்கள் மிருகப் பாத்திரங்களை ஏற்கும்போது மிருகத்தினுடைய சில குறியீடுகளையும் அசைவுகளையும் பயன்படுத்தினர். எனவே நடிப்பு மகிழ்வைத் தந்ததாக விமர்சனத்தில் கூறப்பட்டதை ஏற்கக் கூடியதாக உள்ளது.

இவற்றுடன் மாஷாவின் 'கரடியின் கதை' தமிழிலும் ஆங்கிலத்திலும் இணைக்கப்பட்டுள்ளது. இது பதிப்பாசிரியரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இன்று நாடகம் கல்வியாக வளர்ந்துவிட்டது. இதில் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் பெரும்பங்கு உள்ளது என்பதை உணர்ந்ததாலும் எமக்கும் எமது மாணவர்க ளுக்கும் கதை ஒன்று எவ்வாறு நாடகமாக்கப்பட்டுள்ளது என்பதைப் படித்து அறிவதற்கு உதவுவதாகவும் அதனை அவர் இங்கு பதிப்பித்துள்ளார். அத்துடன் பிற மொழிகளில் உள்ள கதைகள் மூலம் அவர்களுடைய அனுபவத்தை உணர்த்துவதாகவும் அது எமக்கு அமைந்துள்ளதுடன் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் சிறுவர் நாடகங்கள் சிலவற்றைத் தொகுத்துப் பட்டியற்படுத்தி யிருப்பதும் சிறப்பானது. கற்றலுக்கு எம்மவருக்கு இம்முயற்சி உதவுவதுடன் வரலாற்றுப் பதிவாகவும் இருக்கும். இறுதியில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆற்றுகை செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப் படங்கள் ஆற்றுகையின் செம்மையை உறுதிப்படுத்துவதாக உணர்கின்றேன். என்னால் சேகரிக்கப்பட்ட அந்நாடகப் படங்களின் பயன்பாடு எனக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

புத்தகத்தின் பின் பக்க அட்டைப்படத்தில் உள்ள குழந்தை சேரின் தோற்றம் அவரை மீண்டும் ஒருமுறை பார்க்க இயலாதா என்ற மனப் பிரேமையை தருவதுடன், அவர் சிறுவர் நாடகம் பற்றி எழுதும்போது 'நான் என்றும் எதற்கும் எவருக்கும் பிதாமகராக இருந்ததில்லை சிறுவர் நாடகம் சோமசுந்தரப் புலவர் காலத்திலேயே எம்மிடம் இருந்து ள்ளது. அரங்கு பற்றிய அறிவை ஆசிரியர்களுக்கு கொடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்' எனக் குழந்தை சேர் குறிப்பிடுவது நாடகத்தின் அவசியத்தையும் சிறப்பையும் உணர்த்துவதாகவும் தற்புகழ்ச்சியை விரும்பாமல், உள்ளதை உள்ளவாறு கூறுபவராக அவர் உள்ளார் என்பதை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இறுதியாகப் பதிப்பாசிரியரின் குறிப்புகள், நாடகம் பற்றிய சில தகவல்களையும் நாடகம் பற்றிய தெளிவையும் ஏற்படுத்த உதவுகின்றன. பதிப்பாசிரியர், குழந்தை சேரின் மேற்கொண்டுள்ள மதிப்பால் இந்நூலை செம்மையாகத் தந்துள்ளமைக்காக நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Yasotha.S@thaiveedu.com

# மொழியியலாளர் பேராசிரியர் சு. இராசாராம் அவர்களின் 'நோம் சோம்ஸ்கி' எனும் நூல்

கந்தையா சண்முகலிங்கம்

புகழ்பெற்ற மொழியியலாளர் நோம் சோம்ஸ்கியின் மொழியியலை மையப்படுத்திப் பத்து அத்தியாயங்கள் கொண்டதும் 427 பக்கங்களில் விரிவதுமான நூலை பேராசிரியர் சு. இராசாராம் அவர்கள் எழுதியுள்ளார். இந்நூலைக் காலச்சுவடு பதிப்பகம் 2019-இல் வெளியிட்டுள்ளது. இராசாராம் அவர்களின் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் கி. அரங்கன் 'இந்த அறிவுழைப்பு தமிழுக்குப் புதிது' என விதந்து பாராட்டுகிறார். அவரது அணிந்துரை ஓர் ஆய்வுக் கட்டுரையின் தரத்தினை உடையதாய் நூலுக்கு அணிசெய்கிறது. இராசாராம் அவர்களின் என்னுரை 'உலகமே உற்று நோக்கும் ஆளுமை' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. என்னுரையில் இராசாராம் அவர்கள் 1964 - 1970 காலப்பகுதியில் தாம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் மாணவனாக இருந்த காலத்தில் சோம்ஸ்கியின் கோட்பாடுகளுடன் தமக்குப் பரிச்சயம் ஏற்பட்டதைக் குறிப்பிடுகிறார். 'சோம்ஸ்கியின் ஆக்கமுறை மாற்றிலக்கணம் குறித்துப் பேராசிரியர்கள் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், ச. அகத்தியலிங்கனார் ஆகியோர் நடத்திய மாலை நேர வகுப்புகளும், ஆய்வுநெறியாளர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கனாரோடு நிகழ்த்திய விவாதங்களும், பேராசிரியர்கள் இ. அண்ணாமலை (சிகாகோ பல்கலைக்கழகம், அமெரிக்கா), ஹாமநாயக் (உலகக் கன்னட ஆராய்ச்சி நிறுவனம், மைசூர்), கி. அரங்கன் (தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) போன்ற பலருடன் ஏற்பட்ட தொடர்புகளும், அவர்களுடன் நடத்திய உரையாடல்களும் தமது மொழியியல் அறிவை ஆழப்படுத்த உதவியதைக் குறிப்பிடுகிறார். சு. இராசாராம் தரும் தன்வரலாற்றுத் தகவல்கள் தமிழக அறிவுச் சூழலில் மொழியியல் என்னும் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் நோம்ஸ் சோம்ஸ்கியின் கோட்பாடுகள் தமிழ்ச்சூழலில் புகுந்தமையையும், அறிந்துகொள்ள உதவுவனவாய் உள்ளன.

1942-இல் நாகர்கோவிலில் பிறந்த சு. இராசராம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றவர், மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிலையம், தமிழ்ப் பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்) ஆகியவற்றில் பணியாற்றியவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகள் பள்ளியில் மொழியியல் முதுநிலைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஆங்கிலத்திலும் தமிழிலுமாக பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 'இலக்கணவியல் - மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்', 'மொழியும் மொழியியலும்', 'செருமன் - தமிழ் - அகராதி', 'வீரசோழிய இலக்கணக் கோட்பாடு' என்பன இவரது ஏனைய சில நூல்களாகும்.

### மேலோட்டமாக மொழியியலைப் பேசுதல்:

தமிழ் மொழிக் கல்வி, தமிழை வழுவின்றி எழுதுதல், தமிழில் மொழிபெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம் போன்ற விடயங்கள் குறித்து இன்று தமிழ்ச் சூழலில் கல்வியாளர்களின் உரையாடல்கள் இடம்பெறுகின்றன. இவ்வுரையாடல்களில் 'மேலோட்டமாக மொழியியலைப் பேசுதலே' இடம்பெறுவதைக் காணலாம். இந்த உரையாடல்களை அவதானிக்கும் போது மொழியியல் பற்றிய சில அடிப்படைக் கோட்பாடுகளின் புரிதலோடு இவ்வுரையாடல்கள் நடத்தப்படுவதில்லை என்பதையும், சலிப்பூட்டும் சர்ச்சைகளாகவும் விவாதங்களாகவும் இவை முடிவதையும் காணலாம். நவீன மொழியியல் அறிவின் தேவையை இந்நூலின் அணிந்துரையில் பேராசிரியர் கி. அரங்கன் தெளிவுறுத்துகிறார்.




'அறிவுத்துறைகள் பற்றிய அனைத்துச் செய்திகளும் தமிழில் கிடைக்க வேண்டும் என்பது அடிப்படையான சமூகத் தேவை. இச்செய்திகள் அடங்கிய நூல்கள் ஆங்கிலத்தில் உள்ள மூலநூல்களைப் புரிந்துகொள்வதில் பெரும்பங்காற்றும்; குறிப்பாக மொழியியல் மாணவர்களுக்கு இத்தகைய நூல்கள் மிகவும் தேவை. மொழியியலைப் புரிந்து கொள்ளும் காலமும் மிகக்குறையும். பேராசிரியர் எம்.என். பாஹ்க் போன்றோரின் நூல்கள் வெளிவந்த பிறகு தான் தொடரியலைப் (Syntax) புரிந்து கொள்வது மொழியியல் மாணவர்களுக்கு எளிதானது. அதேபோல் பிற மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் புரிந்துகொள்ளப் பல நூல்கள் ஆங்கிலத்தில் வெளி வந்தன. அவை அனைத்தும் மொழியி

tg.theeban@gmail.com

யலைக் குறுகிய காலத்தில் புரிந்துகொள்ள மிகவும் உதவின. இதன் விளைவாக மேலோட்டமாக மொழியியலைப் பேசுகின்ற சூழல்கள் போய்ச் சில அடிப்படையான கோட்பாடுகளைத் தமிழில் விவாதிக்கும் சூழலுக்கு இன்று வந்திருக்கின்றோம்'. இத்தகைய முயற்சிகளுள் ஒன்றுதான் பேராசிரியர் இராசாராமின் நூலாக்க முயற்சி. இராசாராம் அவர்களின் நண்பரான கி. அரங்கன் அவர்களும் நோம் சோம்ஸ்கியின் மொழியியல் பற்றிய நூல்களான மாற்று இலக்கண மொழியியல், மாற்றிலக்கணமும் அதன் கோட்பாடுகளும் (1975), தொடரியல், மாற்றிலக்கண அணுகுமுறை (1985), நோம் சோம்ஸ்கி: பன்முக அறிமுகம் (2013) ஆகியவற்றை எழுதிப் பிரசுரித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### நோம் சோம்ஸ்கியும் மொழியியலும்:

மொழியியல் வரலாற்றில் 'சோம்ஸ்கியப் புரட்சி' (Chomskyan Revolution) ஒரு தனி அத்தியாயம். இம்மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் நோம் சோம்ஸ்கி (பக். 32) என்கிறார் சு. இராசாராம். சோம்ஸ்கியின் புரட்சிகரக் கருத்துகளின் அடிப்படைக் கூறுகள் சிலவற்றை அடுத்துப் பார்ப்போம். மொழியியல் குறித்த படைப்பாற்றல் சாதாரணமாக மக்களிடம் காணப்படுகிறது.

பேச்சுச் சமுதாயத்தைச் (Speech Community) சேர்ந்த ஒரு மனிதர் எவ்வளவு நேர்த்தியாகப் பேசுகிறார், முன்னர் எப்பொழுதும் பேசியிராத புதிய புதிய வாக்கியங்களைப் பயன்படுத்திச் சமூகச் சூழல்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் எவ்வளவு லாவகமாக அவற்றைப் புரிந்து கொண்டு பேசுகிறார்.

இக்கருத்துகளைக் கேட்கின்றவர், எவ்வளவு இலாவகமாக அவற்றைப் புரிந்துகொண்டு பேசுபவரைப் போலவே இதுவரை பேசியிராத புதிய புதிய வாக்கியங்களை உரையாடுகிறார் (பக். 32)

அதாவது சாதாரண மனிதர்களிடம் மொழி குறித்த படைப்பாற்றல் திறன் உள்ளது. அவர்களது பேச்சை நீங்கள் அவதானித்தால் அவர்கள் இலக்கண வழுவின்றி உரையாடுவதைக் காண்பீர்கள். அவர்கள் இலக்கணத்தைப் படித்துவிட்டு உரையாடுவதில்லை. அவர்களுக்கு இந்தப் படைப்பாற்றல் எப்படிக் கிடைத்தது? இந்த வினாவிற்கு சோம்ஸ்கி கண்ட விடை, மனிதர்கள் மொழியைக் கையாள்வதற்கான உள்ளாற்றலைப் பிறப்பிலேயே பெற்றவர்களாக உள்ளார்கள் என்பதற்கும் அவரது இம்முடிவு மொழி ஈட்டலிலும் (Language Acquisition) மொழியியல் பற்றிய கருத்தியல்களிலும் புரட்சியை ஏற்படுத்தும் கருத்துகளை முன்வைப்பதற்கும் காரணமாயிற்று.

### குழந்தை மொழி:

'ஒவ்வொரு குழந்தையும் ஒரு மொழியைக் கற்கும் திறனோடு பிறக்கிறது. பல மொழிகள் பேசப்படும் இந்த யதார்த்த உலகத்தில் எந்த ஒரு மொழியையும் கற்கும் ஆற்றல் உடையது குழந்தை. இது உண்மையானால் குறைந்தபட்சம் கொஞ்சமாவது எல்லா மொழிகளுக்கும் பொதுவான மொழியமைப்புகள் இயல்பாய் அமைந்திருத்தல் வேண்டும். சோம்ஸ்கி இதனை ஏற்றுக் கொள்கிறார். நிச்சயமாக எல்லா மொழிகளுக்கும் பொதுவான பொது இலக்கணம் (Universal Grammar) இருக்க வேண்டும். அதுவே தனியொரு மொழியைக் கற்க உதவும் இலக்கண ஆற்றலைக் கட்டமைக்கிறது' (பக். 32).

மேலே தரப்பட்ட மேற்கோளில் இருந்து முக்கிய அடிப்படைக் கருத்தாக்கங்கள் இரண்டு எமக்குக் கிடைக்கின்றன.

- உள்ளுறை அறிவுசார் கருதுகோள் (Innate Knowledge Hypothesis)
- எல்லா மொழிகளுக்கும் பொதுவான பொதுமை இலக்கணம் (Universal Grammar)

### சோம்ஸ்கியின் 1957–ஆம் ஆண்டு நூல்:

'1957-இல் சோம்ஸ்கி தொடரியல் அமைப்புகள் (Syntactic Structures) என்னும் நூலை வெளியிட்டார். சோம்ஸ்கியப் புரட்சி இந்நூலுடன் ஆரம்பித்தது. இந்நூல் வெளியானபோது முந்தைய மொழியியல் கோட்பாடுகள் அனைத்தும் கேள்விக்குறியாயின. மனித மொழியை விவரிப்பதில் இக்கோட்பாடுகளின் போதாமைகள் இந்நூலில் சோம்ஸ்கியால் நிருபிக்கப்பட்டன. தத்துவம், தருக்கம், மானிடவியல், சமூகவியல், நரம்பியல், உளவியல், புலனுணர்வு உளவியல் (Cognitive Psychology), கணினி அறிவியல் போன்ற தளங்களில் சோம்ஸ்கி மொழியை விபரித்த பாங்கை அன்றைய மொழியியலாளர்கள் உள்வாங்கிக் கொள்வதற்கே சில காலம் ஆயிற்று. வேடிக்கையாகக் குறிப்பிட வேண்டும் என்றால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளின் ஆரம்பத்தில் அவரது முதலாவது நூலான 'தொடரியல் அமைப்புகள்' பார்வையற்றவர்கள் தடவிப் பார்த்த யானைக் குட்டியாகவே எங்கள் வாசிப்பைக் கடந்து கொண்டிருந்தது. அதன் உண்மையான உருவத்தை ஆசிரியர்கள் உட்பட யாருமே முழுமையாக எங்களுக்கு அடையாளம் காட்டியதில்லை. பிற்காலத்தில் சோம்ஸ்கியின் எல்லாச் சிந்தனைகளுக்கும் மூல ஊற்றாக இந்நூல் (தொடரியல் அமைப்புகள் - 1957) அமைந்தது (என்னுரை - பக். 26-27)'. 1957-இன் பின்னர் சோம்ஸ்கி தனது கோட்பாட்டை விளக்கும் ஆய்வுகளைத் தொடர்ந்து எழுதினார். அவர் மொழியியல் கல்வியில் ஏற்படுத்திய புரட்சியை தோமஸ் கூனின் 'அறிவியல் புரட்சி' என்னும் கருத்தாக்கத்தின் துணை கொண்டு விளக்கலாம் என இராசாராம் குறிப்பிடுகிறார். '1957-இல் வெளிவந்த தொடரியல் அமைப்புகள் என்ற இந்நூல் இவ்வறிவியல் புரட்சிக்கு விதையாக விழுந்தது. அந்நூலுக்குப் பதிப்புரை எழுதிய வோகலின் என்பார் கோபநிக்ஸ் புரட்சியின் தன்மையைப் பெற்றது இந்நூல் எனக் குறிப்பிடுகிறார் (பக். 27).

### மொழியியல் போர்கள்:

'1957-இல் சோம்ஸ்கி வெளியிட்ட தொடரியல் அமைப்புகள் என்னும் நூல் மொழியியலாளர்களிடையே விவாதப் போரை ஆரம்பித்தது. இவ்விவாதப் போர்கள் மொழியியல் வரலாற்றில், 'மொழியியல் போர்கள்' (Linguistic Wars) என அழைக்கப்படுகின்றன என இராசாராம் அவர்கள் குறிப்பிடுகின்றார், (பக். 27). இப்போர்களின் போது சோமஸ்கி தமது ஆக்க முறையியல்வாத நிலைப்பாட்டை அமெரிக்க அறிவுச் சூழலில் அரசோச்சிய 'அமைப்பு மொழியியலிற்கு' (Structural Linguistics) எதிராக நிலைநிறுத்த வேண்டிப் பெரு முயற்சி செய்யவேண்டியிருந்தது. அவரது பெருமுயற்சியின்

விளைவாக மொழியியல் வரலாற்றில் இரண்டாவது கருத்தியல் வாய்ப்பாட்டுத்தாவல் (Paradigm Shift) ஏற்பட்டது எனக் கூறுகிறார். தோமஸ் கூனின் எண்ணக்கருவான கருத்தியல் வாய்ப்பாட்டுத்தாவல் என்பதன் துணையுடன் சோம்ஸ்கிய புரட்சியை நூலின் 5-ஆம் அத்தியாயம் விளக்குவதாக அமைந்துள்ளது. இவ்விடயம் பற்றி கி. அரங்கன் அவர்கள் குறிப்பிடும்போது ‘மொழியியல் அறிவியலில் நிகழ்ந்த இப்புரட்சியை மிகச் சிறப்பாக தோமஸ் கூன் எழுதிய ‘The Structure of Scientific Revolution’ என்ற நூலை அடியொட்டி அமைப்பு மொழியியல் கோட்பாட்டு வரலாற்றையும் ஆக்கமுறை இலக்கணக் கோட்பாட்டு வரலாற்றையும் மிக நன்றாக இராசாராம் விளக்கியுள்ளார். நான் இதை இந்நூலின் மிக முக்கிய பகுதியாகக் கருதுகிறேன்’ (அணிந்துரை - பக். 16) என்கிறார்.

### சோம்ஸ்கிய மொழியியலின் அடிப்படைக் கருத்தியல்கள்:

நூலின் 193-ஆம் பக்கத்தில் சோம்ஸ்கிய மொழியியல் கோட்பாட்டுக் கருத்துருவாக்கப் பின்னணிக் கருத்தியல்களாக 15 விடயப் பொருட்களை இராசாராம் குறிப்பிடுகிறார். அவற்றுள் முக்கியமான கருத்தியல்களை வாசகர்கள் கவனத்திற்காகத் தருகின்றேன்.

- பகுத்தறிவுவாதமும் அனுபவவாதமும் (Rationalism and Empiricism)
- மொழி உள்ளுணர்வுகள்
- உள்ளுறை ஆற்றல்
- மொழி ஈட்டல் பொறிநுட்பம்
- மொழிப் பொதுமைகள்
- மொழி அறிதிறன் - மொழிச் செயலறிதிறன்
- மொழி விளக்கம்
- புதைநிலை அமைப்பும் புறநிலை அமைப்பும்

மேற்படி கருத்தியல்கள் இராசாராம் அவர்களால் நூலின் மையப் பொருளோடு தொடர்பான 6-ஆம், 7-ஆம், 8-ஆம் அத்தியாங்களில் விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் ஒவ்வொரு அத்தியாயத்தினதும் உள்ளடக்கத்தை விரிவாகப் பக்க எண்களைக் குறிப்பிட்டு உள்ளடக்கப் பகுதியில் நிரற்படுத்தித் தந்துள்ளார். இதனால், மேற்குறித்த கருத்தியல்கள் பற்றிய விளக்கத்தைத் தரும் பக்கங்களை வாசகர்கள் இலகுவில் அடையாளம் கண்டு படித்தறியலாம். ‘கருத்தியல்கள்’ என்ற சொல்லை நூலாசிரியர் எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் (Concepts and Theories) என்ற பொருளிலேயே உபயோகிக்கின்றார் எனக் கருதலாம். நூலில் ஏராளமான புதிய புதிய கலைச் சொற்களை இராசாராம் அவர்கள் அறிமுகப்படுத்துகிறார். அக்கலைச்சொற்களுக்குரிய ஆங்கிலக் கலைச்சொற்கள் பல தரப்படவில்லை. ஆங்காங்கே ஓரிரு இடங்களில் மட்டும் முக்கிய கலைச்சொற்கள் அடைப்புக் குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ளன. ஆயினும் இதனை இந்நூலின் ஒரு குறையாகக் கருத வேண்டியதில்லை. இந்நூலின் முக்கிய எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் (கருத்தியல்கள்) அடுத்துவரும் இதழ்களில் விளக்கிக் கூறப்படும்.



shanmugalingam@thaiveedu.com



# ஊர்திரும்பல்

## சிறுகதைத் தொகுதி

## சமூக உளவியல் பார்வை




- சுல்பிகா இஸ்மாயில் -

இச்சிறுகதைத் தொகுதி தொடர் சந்ததிகளைச் சேர்ந்த இரு எழுத்தாளர்களின் ஏழு சிறுகதைகளைக் கொண்டது. என்னைப் பொறுத் தவரை இது ஒரு அரிதான நிகழ்வு. போருக்குள்ளும் போருக்கு பின்னரும் நிகழ்ந்த, நிகழ்கின்ற மனித அவலங்களையும் சவால்க ளையும் அவற்றி லிருந்து மீள்வதற்கான முயற்சிகளையும் வெளிப்படுத் துகின்ற இச்சிறுகதைத் தொகுதி எவ்வாறு தனிமனிதர்கள் (வெவ்வேறு சந்ததிகளைச் சேர்ந்தவர்கள்) போருக்குள் இருந்து கொண்டும், போருக்கு வெளியே வாழ்வினை நிலைப்படுத்த முயற்சித்துக்கொண் டும் இருந்துள்ளார்கள் என்பதை சித்தரிக்கின்றது. இத்தொகுப்பில் உள்ள ஏழு சிறுகதைகளைப் பற்றிய எனது பார்வையாகவே இந்தச் சிறு கட்டுரை அமைகிறது.

இச்சிறுகதைத் தொகுதி சந்ததிகளுக்கிடையே உள்ள பார்வை களிலுள்ள (perception) வித்தியாசங்களையும் வேறுபாடுகளையும் இடைவெளிகளையும் கூட முன்வைக்கின்றது என்று நான் கருதுகிறேன். தாயும் மகளுமாக இருந்தபோதும் சம்பவங்களைப் பற்றிய அவர்களது புரிதல்கள், அது குறித்த அவர்களது பதிவுகள், நினைவுகள், ஏக் கங்கள், தீர்வுகள் வேறுபட்டவை. அவை மனித அவலங்களினதும் வாழ் வியலினதும் வெவ்வேறு பரிமாணங்களைக்கூடப் பேசுபவையாக உள்ளன. உதாரணமாக ஒரு குடும்பஸ்தனின் இழப்பு, தாய்க்கு அல் லது மனைவிக்கு வேறுபட்ட உணர்வலைகளையும் சவால்களையும் உருவாக்குகின்றது. அதேவேளை, ஒரு மகளுக்கு அவள் தந்தையின் இழப்பும் அவரது அருகாமையின் தேவையும் ஏக்கமும் வேறுபட்ட வையாக இருக்கும்.

எனது கருத்துகள் மேற்குறித்த விடயங்களை, மையப்படுத்தியதாகவே அமையும். இவ்விரு எழுத்தாளர்களும் ஒரு பொதுவான சமூகப் பின்ன ணியில் இருந்து வந்தவர்கள் என்ற போதிலும் அவர்கள் இக்கதைகளை எழுதும் காலகட்டத்தில் தனித்துவமான சமூகவியல் பின்னணியில் வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் புலம்பெயர் வாழ்தலுக்குள் இரு வேறுபட்ட சந்ததிகளுக்குரிய பார்வைகளையும் உள்வாங்கிக் கொண்ட வர்கள். மேற்குறித்த அம்சங்கள் அவர்களின் புரிதல்களையும் பார்வை களையும் கட்டமைப்பதில் பங்களிக்கின்றன எனலாம். முடிந்தவரைக் கும் அவர்களது கண்ணோட்டங்களை அவர்களின் கதைகளின் ஊடாக நேர்மையாக எடுத்துச் சொல்ல விளைகிறேன்.

ஶ்ரீரஞ்சனி இலங்கையில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, தொழில் புரிந்து அதன் சமூக சூழ்நிலைமைகளுக்குள் தனது நம்பிக்கை களையும், விழுமியங்களையும், மதிப்பீடுகளையும் பண்பாடுகளையும் அதன்பாற்பட்ட தனது கண்ணோட்டங்களையும் உருவாக்கிக் கொண்ட வர். இலங்கை உள்நாட்டு போரின் ஆரம்ப காலத்துக்குள் வாழ்ந்து அங் கிருந்து வெளியேற நிர்பந்திக்கப்பட்டவர். நான் அறிந்தவரை அவர் உக் கிரமான போர்க்காலங்களின் கெடுபிடிகள், அவலங்களுக்குள் வாழ வில்லை. போரின் அழிவுகள், அவலங்கள், அதன் தாக்கங்கள், வாழ்வியல் சவால்கள் போன்றவற்றைப் பாதுகாப்பான வெளி ஒன்றி லிருந்து அறிந்து கொண்டு, திகிலுடன் செய்வதறியாதும், தனது கையாலாகாத் தன்மையை நொந்துகொண்டும், உள் மனதுக்குள் உழன்று குமுறுகின்ற சந்ததிக்குரியவர். ‘எப்படியிருந்தோம் இப்படி யாயிற்றே’ என்பதை முன்னனுபவத்தின் அடிப்படையில் அனுமானிக் கும் ஒருவர். அதேவேளை, புலம்பெயர்வுக்குப் பின் புதிய சமூகச் சூழலில் வாய்ப்புகளுக்கும் சவால்களுக்கும் இடையில் போராடி வாழ்வை மீண்டும் கட்டமைக்கவும் நிலைப்படுத்தவும் அல்லாடியவர்.

tg.theeban@gmail.com

மறுபுறத்தில், சிவகாமி சிறு குழந்தையாகத் தாயுடன் போருக்குள் இருந்து வெளியேறினாலும் எப்படி இருந்தோம், என்ன நிகழ்கிறது, ஏன் வெளியேறுகின்றோம், எங்கு செல்கிறோம் என்று தெரியாத நிலையில், புதிய சமூகப் பின்னணிக்குள் வலிந்து விடப்பட்டவர். தாயினதும், தான் சார்ந்த சமூகத்தினதும் கண்ணோட்டங்களிலிருந்தும், தான் புதிய சூழலில் கட்டமைத்துக்கொண்ட கண்ணோட்டங்களுக்கூடாகவும் போர் நிகழ்வுகளையும், துயரங்களையும் புரிந்து கொள்ளவும், அதன் ஊடாகத் தனது சமூகப் பொறுப்புகளை வடிவமைத்துக் கொள்ளவும் முயல்கின்ற ஒரு இளம் தாயாகக் காணப்படுபவர். குறிப்பாக, புதிய சூழலில் குழந்தையாக வளர்ந்து, அவர் குறிப்பிடுவது போல், ‘குடிபெயர்ந்த நிறத்தவர்’ என்ற அடையாளத்துடன் பெரும்பான்மைக்குள் வாழவும் கற்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டவர். கனேடிய சமூக விழுமியங்களுக்குள் அதன் பண்பாடுகள், நிலைப்பாடுகள் சார்ந்து தனது தனித்துவமான சார்பு நிலைப்பாடுகளையும் உருவாக்கிக் கொண்டவர்.

இவ்வாறான பின்னணியில் இவ்விரு எழுத்தாளர்களையும் நாம் இரண்டு வகையான சமூகஉளவியல் கண்ணோட்ட வகைப்பாட்டுக்குள் நிறுத்திப் பார்க்க முடியும். மேற்குறிப்பிட்ட சமூகப் பின்னணியின் அடிப்படையில் நோக்கும்போது ஸ்ரீரஞ்சனியை கூட்டு உணர்வுகள் சார் சமூகக் கண்ணோட்டத்தின் பிரதிநிதியாகவும் (a representative of collective social perspective), சிவகாமியைத் தனியாள் சமூகக் கண்ணோட்டத்தின் பிரதிநிதியாகவும் (a representative of individual social perspective) வகைப்படுத்திப் பார்க்க முடியும்.

கூட்டுணர்வு சார் சமூகக் கண்ணோட்டம் சமூகத்தின் மீதான (கருக் குடும்பத்துக்கும் அப்பால்) அக்கறைகளையும், அதன் பரஸ்பரம் தங்கி வாழ்தல் நிலைக்கும் (interdependance) அதன் கூட்டு உணர்வுக்கும் (corporation) அதன் ஊடாக ஏற்படுகின்ற சமூக நல்லிணக்கம் (harmony) மற்றும் ஒற்றுமைக்கும் (solidarity) முன்னுரிமையையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கின்றது. இதுதான் ஸ்ரீரஞ்சனிக்கு எப்படி வாழ்ந்தோம், எவ்வாறு குடும்பத்துக்குள்ளும் சமூகத்துக்குள்ளும் இணக்கப்பட்டவராக, ஒருமைப்பாட்டு உணர்வுடன் நிம்மதியாகவும் (contentment) மன நிறைவாகவும் வாழ்ந்தோம்? என்று நினைவுகளை அசை போட வைக்கிறது. அவை திரும்பி வராதா என்ற ஏக்கத்தையும் (nostalgia) உருவாக்குகிறது. ஸ்ரீரஞ்சனி அவரது கனேடிய வாழ்வியலுக்கும் அதன்பாற்பட்ட விழுமியங்களுக்கும் பார்வைகளுக்கும் இசைந்து போக முயற்சி செய்பவராகவும் அவர் கதைகளில் ஊடாடுகிறார். இவ்வகையில் ஸ்ரீரஞ்சனி இரு தலைமுறைகளின் கண்ணோட்டங்களுக்கு இடையில் ஒரு சமநிலையைப் பேண முயற்சிக்கிற ஒருவராகவும் அவர் கதைகளில் பிரதிபலிக்கிறார்.

மறுபுறத்தில் தனியாள் சமூகக் கண்ணோட்டம், தனியார் தேவை, சுதந்திரம் போன்ற அக்கறைகளுக்கும் தற்சார்பு நிலைக்கும் (self-reliance) அது சார்ந்த திருப்தி மற்றும் அடைவுகளுக்கும் முன்னுரிமையும் முக்கியத்துவம் வழங்குவதாக அமைகிறது. சிவகாமி தனியாள் சமூகக் கண்ணோட்டத்தில் தனது இருப்பை உறுதிப்படுத்திக்கொண்டு தனது விழுமியங்களையும் கரிசனைகளையும் தக்கவைத்துக் கொண்டு மற்றைய கண்ணோட்டத்துக்குரிய (சமூக கூட்டு உணர்வுசார்) கரிசனைகளையும் விழுமியங்களையும் புரிந்து கொள்ள முற்படுகின்றார் என்றே அவர் கதைகள் எடுத்துக் கூறுகின்றன. அவர் ஸ்ரீரஞ்சனி போன்று ‘எப்படி வாழ்ந்தோம் எமது ஊர் இப்படி ஆகிவிட்டதே’ என்று அங்கலாய்க்காத போதும் தனது குடும்பத்தினரின் நலனை உறுதிப்படுத்திக் கொண்டு சமூகக் கூட்டுணர்வையும் ஊர் மக்களிடையேயான நல்லிணக்கத்தையும் அவர் உணர்கின்ற கணங்களையும் அவர் தனது கதைகளில் நல்லெண்ணத்துடன் வெளிப்படுத்துகிறார். இது தலைமுறைகளுக்கூடாக நிகழ்கின்ற சாதகமான பண்பாட்டு நகர்வினை சுட்டி நிற்கின்றது எனலாம்.

இச்சிறுகதைத் தொகுதி நகலாகவும் மொழியாக்கமாகவும் இருந்த போதிலும் நான் இதனை இரு மொழிச் சிறுகதைத் தொகுதி என எடுத்துக் கொண்டு இரு எழுத்தாளர்களினதும் நகல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எனது கருத்துகளைப் பிரதானமாக முன்வைக்க விரும்புகிறேன். எனினும், மொழிபெயர்ப்பிலுள்ள கருத்தியல் வேறுபாடுகளை மட்டும் மொழியாக்கங்களுக்கூடாகவும் எடுத்துரைக்க முயல்வேன். இவ்வகையில், வேறுபாடுகளை மொழிபெயர்ப்புப் பிழையாகவோ, மாறுபாடாகவோ, குறைபாடாகவோ நான் நோக்கவில்லை. அதாவது, இரு வேறு கண்ணோட்டங்களைக் குறிப்பாக பிரதிபலிக்கும் சொற்பிரயோகங்கள், செய்திகள், கதையாடல்கள், சொல்லாடல்கள், கருத்தாக்கங்களை மட்டுமே நான் பகுப்பாய்வு செய்து பார்க்க விழைகின்றேன். இப்போது இவ்விருவரினதும் கதைகளுக்கும் அதன் கதைக்களங்களுக்கும் வருவோம்.

இத்தொகுதியில் ஸ்ரீரஞ்சனி, ‘பேசலின்றிக் கிளி ஒன்று’, ‘இழை ஒன்று அறுந்து போகின்றதா ?’, ‘முகிலிட்டில்’, ‘நிழலில் நிஜம் தேடி’ போன்ற நான்கு கதைகளையும் சிவகாமி, ‘Homecoming’, ‘Sister stars’, ‘Reunion’ ஆகிய மூன்று கதைகளையும் எழுதியுள்ளனர். மொழிமாற்றத்தில் ‘Homecoming’, என்பது ‘ஊர்திரும்பல்’ என்றும், ‘Sister stars’, என்பது ‘கார்த்திகைப் பெண்கள்’ என்றும், ‘Reunion’ என்பது ‘மீளிணைவு’ என்றும், கருத்தாக்கம் பெற்றிருக்கின்றன. மறுபுறத்தில் ‘பேசலின்றிக் கிளி ஒன்று’ என்பது ‘songless bird’ என்றும், ‘இழை ஒன்று அறுந்து போகின்றதா’, என்பது ‘Disintegration’ என்றும் ‘முகிலிட்டில்’ என்பது ‘A passing black cloud’ என்றும், ‘நிழலில் நிஜம் தேடி’ என்பது ‘Hidden within the shadow’ என்றும் உருவாகியிருக்கின்றது.

நான் முன்னர் குறிப்பிட்டது போல மொழிமாற்றம் இவ்விரு எழுத்தாளர்களினதும் கண்ணோட்டத்திலுள்ள வேறுபட்ட புரிதல்களைச் சுட்டி நிற்கின்றன. உதாரணமாக சிவகாமி எழுதிய ‘Homecoming’ என்ற சிறுகதை இடம்பெயர்ந்த ஒருவர் நீண்டகால இடைவெளிக்குப் பின் அவரது வீட்டையும் குடும்பத்தவர்களையும் சந்திக்கிற ஒரு நிகழ்வைக் களமாகக் கொண்டது. சிவகாமி அவர் எழுத்தின் ஊடாக இதனைத் தெளிவாக முன் வைக்கின்றார். அங்கு சென்றடைந்த பின் அவருக்கு வியப்பாக இருக்கும் விடயம் என்னவென்றால், ஊரவர்கள் அங்கு அவர்களைச் சந்திக்க வருவதும், கரிசனையுடன் உறவாடுவதும் தான். இது அவரது தனியாள் சமூகப் பார்வைக்கு அப்பாற்பட்டது. எனினும், அதனைக் கண்டு கொள்ளவதும், புரிந்து கொள்ள முயல்வதும் அவரது பார்வையை விரிவடையச் செய்து சமூக கூட்டுணர்வுக்குள் இழுத்துச் செல்வதையும் காண முடிகிறது.

ஸ்ரீரஞ்சனி இக்கதையை மொழியாக்கம் செய்யும்போது சிவகாமியின் Homecoming என்பதை ஊர்திரும்பல் என்றுதான் கருத்தாக்கம் செய்கிறார். அது தன் வீட்டுக்கு வருவதாக அவருக்குத் தென்படவில்லை. மாறாக, அவரது சமூக கூட்டுணர்வுக் கண்ணோட்டம் வீட்டுக்கு அப்பால் விரிவுபட்டுள்ளதாக, ஊர் என்று சமூக வெளிக்குள் அமைக்கப்பட்டதாக இருப்பதால் அதனை மையப்படுத்தியே அவரது தலைப்பு அமைந்திருக்கிறது. அவருக்கு ஊரவர்களைக் காண்பதும் சுகம் விசாரிப்பதும், ஊர் திரும்புதலின் ஒரு பகுதியாக உள்ளதை அவர் இத்தலைப்பின் ஊடாக நமக்கு காட்சிப் படுத்துகிறார்.

ஸ்ரீரஞ்சனி எழுதிய மற்றொரு கதை, 'இழை ஒன்று அறுந்து போகின்றதா?' இதன் தலைப்பே 'தம் மக்களிடையே இருந்த தொடர்பும் ஒருங்கிணைப்பும் அறுந்து போகின்றதா? என்ற ஏக்கத்துடனும் கேள்விக்குறியுடனும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் கண்ணோட்டத்தில் கருக்குடும்பத்துக்கு அப்பால் சுற்றயல் குடும்பத்துடனுடனான உறவும் முக்கியமானது. ஸ்ரீரஞ்சனி, கதைத்தலைப்பை இழை ஒன்று அறுந்து போகின்றதா? என்ற கேள்விக்குறியாக முன்வைக்கிற போதிலும் அங்கு புதிய உறவு உருவாவதையும், உறவு நீட்சி நிகழ்வதையும் கதையில் கொண்டு வருகிறார். தகப்பனின் இரண்டாவது மனைவி (யசோ), முதல் மனைவியின் மகளை (பிரியா) அரவணைப்பதாகவும் அவள் அதற்கு இசைந்து கொள்ளவதாகவுமே அவர் கதையை முடித்திருக்கிறார்.

'இது அம்மான்ர வீடில்ல என்றால் என்ர வீடும் இல்லை. கேவிக்கேவி அழுகிறேன் நான். பிரியா இது எப்போதும் உன்ர வீடாத்தான் இருக்கும் என்னருகே வந்து தோளைத் தொட்டு யசோ மென்மையாக சொல்கிறா. அழுதபடி என் தலையை ஆட்டுகிறேன். பிரியா நான் உன்னோட கொஞ்சம் கதைக்கலாமோ? இன்னும் மென்மையாக யசோவின் குரல் ஒலிக்கிறது. என்னையும் அறியாமல் என் தலை மேலும் கீழும் ஆடுகிறது.'

சிவகாமியின் கதைத் தலைப்பினுள் இந்த அம்சம் உள்வாங்கப்படவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. இச்சிறுகதை சிவகாமியின் மொழியாக்கத்தில் Disintegration என தலைப்பிடப்பட்டிருக்கிறது. கதையின் உள்ளடக்கம் எதுவாக இருந்தபோதிலும் இத்தலைப்பு தனியாள்சார் சமூகக் கண்ணோட்டத்தில், கதைக்களத்தினதும் கதைக்கருவினது அம்சங்களையும் நோக்குவதாக அமைந்திருக்கிறது எனலாம். இக்கண்ணோட்டத்தில் உறவுகளின் தொடர்ச்சியைக் கருக்குடும்பத்துக்கு அப்பால் உருவாக்குவது குறைந்த முக்கியத்துவமுடையதாகும். மேலும் உறவுகள் உருவாவதும் அறுந்து போவதும் இயல்பான நிகழ்வாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தொடர்பறும் நிலை (Disintegration), இக்கதையில் வரும் தகப்பன் மறுமணம் செய்யும் போது முதல் மனைவிக்குப் பிறந்த மகளின் உறவு அறுந்துபோகும் நிலையைக் குறிக்கின்றது. அவர் அந்த உறவு அறுந்துவிட்டதாகவே முடிவு செய்வதாகவே எனக்குப்படுகிறது.

'Sister stars' என்ற சிறுகதை சிவகாமியால் எழுதப்பட்ட கதை. ஒரு வகையில் இது ஒரு சுயவிசாரணையாகவும் அமைகிறது. மூன்று சகோதரிகளின் அடையாள உருவாக்கம் பற்றிய ஒரு அலசல் ஆகவும் சிவகாமி இதனை உருவாக்கி இருக்கின்றார். குடிப்பெயர் வாழ்வியல், குடிபெயர்ந்தோரில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகிறது. தொடர்பற்றுப் போதல் (disconnection), பற்றற்ற நிலை (detachment) உரிம உணர்வு (belonging) அற்றிருத்தல் அல்லது குறைவாக இருத்தல், அடையாள நெருக்கடி போன்றவை. இவை ஒவ்வொரு தலைமுறைகளிலும் வேறுபட்டதாகவும் அமைகின்றன. இங்கு மூன்று சகோதரிகளும் ஒருதாய் வயிற்றில் பிறந்திருந்தும் அவர்களின் அனுபவங்களும், கடந்துவந்த சமூக சூழ்நிலைகளும் வேறுபட்டதாக அமைந்ததால் மேற்குறித்த விடயங்களும் வேறுபட்ட வகையில் சகோதரிகளால் எடுத்துக்கொள்ளப்படுவதாக அவர் கூறுகிறார்.

இந்நிலைமைக்கான பின்னணியை நோக்கும்போது சிவகாமி இருவேறுபட்ட சமூக நிலைமைகளுக்கூடாக வளர்ந்து வந்திருக்கிறார். எனினும், இலங்கை சூழ்நிலையும் அனுபவமும் தாக்கமும் சிறிதாயினும் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவமுடையதாக அவர் கருதுகிறார். குறிப்பாக குடிபெயர்வுப் பின்னணியில் ஒருவரது அடையாளத்தைக் கட்டமைப்பது ஒரு நெருக்கடி நிலைமையை (identity crisis) உருவாக்குகிறது என்கிறார். மிகத் தெளிவாக இளைய சகோதரியுடனும் மூத்த சகோதரியுடனும் ஒப்பிடும்போது தான் இரண்டுக்கும் நடுவில் சிக்கியது போல் உணர்வதாக குறிப்பிடுகிறார். ஒருவரின் அடையாளக் கட்டமைப்பில் அல்லது அதன் உருவாக்கத்தில் சமூக சூழ்நிலைக் காரணிகளின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஒருவரது தனித்துவமான ஆளுமைக்கு அப்பால் சமூக விழுமியங்கள், பண்பாடுகள், கலாசாரம், மொழி, இனக்குழுமம், சமயம் போன்ற இன்னோரன்ன காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அந்த வகையில் இரட்டை அடையாளத்தை சமரசத்துடன் ஏற்றுக் கொள்வதில் தயக்கமும் விருப்பமும் இருப்பதையும் அவர் வெளிப்படுத்துகின்றார்.

'நாங்கள் இலங்கையை விட்டு வெளியேறியபோது ஜனுஜாவுக்கு ஒரு வயது. எனக்கு ஐந்து வயது. ஆனால், ஜனனிக்கு ஒன்பது வயது. ஞாபகங்களையும் அடையாளங்களையும் நினைவு வைத்திருக்க கூடிய வயது அவளுக்கு. இரு அடையாளங்களும் அவளுக்கு இயல்பான விடயங்களாகிறது. தமிழ், கனடிய அடையாளங்களில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு சுலபமாக மாறிவிட அவளால் முடிகிறது. ஆனால் எனக்கோ இரண்டுக்கும் நடுவில் சிக்கியது போல் இருக்கின்றது.'

அடையாள உருவாக்கம் குழந்தைகளின் 7-வது வயதிலிருந்தே ஆரம்பிக்கிறது. எனினும் அது கட்டிளமைப் பருவத்துக்குப் பின்னர் தான் ஸ்திரம் அடைகிறது. இது ஒவ்வொரு தனியாளினதும் சூழ்நிலை, ஆளுமையைப் பொறுத்தும் மாற்றமடையலாம். ஒன்பது வயதான ஜனனிக்கு அடையாளத்தை உருவாக்கும் நிலை, ஒரு திரவத்தன்மை (fluid) நிலையிருந்ததால் அவளுக்கு இரட்டை அடையாளங்களைத் தனதாக்கிக் கொள்வதில் அவ்வளவு சிரமம் இருந்திருக்காது. கதைசொல்லிக்கு / ஜயந்திக்கு ஐந்து வயது, அடையாளம்

பற்றிய பிரக்ஞை / விழிப்புணர்வு அவ்வளவாக இருந்திருக்காது. எனவே புதிய அடையாளங்களை உருவாக்கிக் கொள்வதில், சிரமங்கள் நெருக்கடிகள் இருப்பதற்கு இயல்பாக எந்த சிக்கல்களும் தடைகளும் இருக்க வாய்ப்பில்லை. எனினும், முற்றிலும் வேறுபட்ட சமூகத்திற்கு குடிபெயரும்போது, அது முதலாவது சந்ததியினரை (குழந்தைகளின் தாய் / பெற்றோர், சமூகம்) சிக்கலான நிலைமைக்குத் தள்ளி விடுகிறது. தங்களது அடையாளம், குடிபெயர்வு என்னும் சாகரத்தினுள் மறைந்து போய் விடுமோ என்ற அச்சமும் கவலையும் குழந்தைகள் மீதான அடையாளத் திணிப்பை மேற்கொள்ள வைத்து விடுகிறது. ஜனனிக்கு இருந்த இயல்பான அடையாள உருவாக்கச் செயல்முறை ஜயந்திக்கு இருந்திருக்காது. ஜயந்திக்கு சூழலில் காண்கின்ற அடையாளத்துக்கும் குடும்பம் / சமூகம் திணிக்கின்ற அடையாளத்திற்கும் இடையில் ஒரு திணறல் ஏற்படுகிறது. புதிய சூழலில் எதை அடையாளமாக தேர்வு செய்வது என்பது குறித்து வயது வந்த பின்பு கூட ஜயந்தி தடுமாறுவதையும் குற்றயுணர்வுக்குள்ளாவதையும் சிவகாமி முன்வைக்கிறார்.

'Janani was nine, old enough to be sure of her memories and her identity. She's always slid elegantly along the hyphen between Tamil and Canadian, while I've felt trapped in the middle. ...always feeling like a fraud whenever I've tried. But it became exhausting to constantly, consciously fight that thing that we've been taught to call 'the system,' to walk around with deliberate, parading self-assurance against constant doubts. Janani carries her identity within herself, poised and easy; Januja seems to wear hers like heavy, awkward armour'.




இச்சிறுகதையின் தமிழ்மொழியாக்கத்தின் தலைப்பு 'கார்த்திகைப் பெண்கள்'. ஸ்ரீரஞ்சனிக்கு இது மிகவும் பரிச்சயமானது. அவரது சமயக் கலாசாரப் பின்னணியில், இத்தொகுதி நட்சத்திரங்கள் கார்த்திகைப் பெண்கள் எனப்படுகின்றன. அவை முருகனின் வளர்ப்பு தாய்மார்கள். பார்வதியின் அம்சம். தைரியமும் பாசமும் இவர்களது பண்புகள். ஸ்ரீரஞ்சினி அதையே தலைப்பாக இட்டிருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம். அந்த நட்சத்திரப் பெண்களை ஒத்த இயல்புடைய பெண்கள் குழுவாகவே எடுத்துக் கொள்வதாகத் தெரிகிறது. சிவகாமிக்கு அவை ஒரு குழுவாக இருந்த போதிலும், அவை தனித் தனி அடையாளம் கொண்ட நட்சத்திரங்களாகத் தெரிகின்றன. இது அவர்களின் வேறுபட்ட கண்ணோட்டங்களின் பிரதிபலிப்பாகவே எனக்குப்படுகிறது.

முகிலிருட்டில் என்ற கதை சிவகாமியினால் 'A passing black cloud' என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. சிவகாமி 'In the dark cloud or In the black cloud' என மொழியாக்கம் செய்யவில்லை. இது எமது தலைமுறையின் சிந்தனைப்பாங்கையும் கண்ணோட்டத்தையும் காட்டுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவது எனக்கு சற்றுக் கவலையாக இருக்கிறது. எமது தலைமுறையைச் சார்ந்தவர்கள் பிரச்சினைக்குள் இருந்துகொண்டு அவற்றை அலசி ஆராய்வதில் கூடிய கவனம் செலுத்துகிறோம். ஆனால், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் கூட்டுச் சமூகத்துக்கு பல வேளைகளில் விட்டு விடுகிறோம். இது கூட்டுணர்வு சமூகக் கண்ணோட்டத்தின் ஒரு அம்சமே. எனினும், தனியாள்சார் சிந்தனையாளர்கள் பிரச்சினைகளையும் தீர்வுகளையும் அதனை தீர்ப்பதற்கான வாய்ப்புகளையும் தாமே கண்டு கொள்ள வேண்டும் என்ற பொறுப்பை அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள். எனவே தீர்வுக்கான வாய்ப்பு என்பது சிவகாமிக்கு, இந்த இருட்டு (கதையில் உளப்பிரச்சினைக்குள்ளான ஒரு பெண்ணின் துன்ப நிலைமை) கடந்து போகக் கூடியது என்பதாகப் பட்டிருக்கிறது. எனவே, அவர் அதை 'A passing black cloud' என்கிறார்.

சிவகாமியின் 'Reunion' என்ற கதையும் ஸ்ரீரஞ்சனியின் 'நிழலில் நிஜம் தேடி' என்ற கதையும் ஒரே விடயத்தை இரு தலைமுறைக்குரியவர் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதற்கான மற்றொரு சாட்சியாக இருக்கிறது. இக்கதையில் தகப்பனை இழந்த ஒரு குழந்தைக்குத் தன்னோடு தகப்பன் இருந்திருந்தால் எதுவெல்லாம் அதன் தேவையாக, விருப்பமாக இருந்திருக்கும் என்பதைச் சிவகாமி தனது கண்ணோட்டத்துக்கு ஊடாகக் காட்சிப்படுத்த முனைகிறார்.

ஆனால், கணவரைப் பறிகொடுத்த ஒரு மனைவிக்கும், குழந்தைகளின் தாய்க்கும், அச்சமூகத்தில் அவரைப் போல் பலர் உள்ளனர் என்பதைப் பிரக்ஞையுடன் பார்க்கும் ஒரு சமூக உறுப்பினருக்கும், எதுவெல்லாம் தேவையாகவும் தேடலாகவும் சவாலாகவும் துயரங்களாகவும் இருக்கும் என்பதைச் சிவகாமி தன் தாயின் பார்வைக்கூடாக விவரிப்பது தான் இங்குள்ள வியக்கத்தக்க விடயமாகும். அப்பாவைக் கண்டுகொள்ளும் போது அவரிடம் எதைப் பேசுவது என்பது சிவகாமியின் சொற்களில் சிந்துவின் உணர்வுகளாக பின்வரு மாறு அமைகின்றன.

'It was impossible. How could she even begin to describe who she was now? She had become a stranger to her former seven-year-old self, a stranger to the father who had known her then. ...Her mother was once again smaller, older, and frailer in her arms. ...Sinthu's father hadn't aged the way her mother had; he hadn't known the decade of struggle they had undergone alone in a foreign and frigid land. How lonely those days and nights were, her mother working eight hours at a coffee shop and then six hours

in a sari store while Sinthu made her meals and finished her homework by herself.'

ஸ்ரீரஞ்சனி தனது நிழலில் நிஜம் தேடி கதையில் அதே விட யத்தைப் பின்வருமாறு கூறுகிறார்.' எந்தக் குற்றமும் செய்திருக்காத அப்பாவின் இழப்பு அம்மாவுக்கு அளவற்ற துயரத்தை கொடுத்துள்ளது என்பது ராகவிக்கு தெரியும். அந்த நினைவு அவளின் கண்களைக் கலங்க வைத்தது. அம்மாவைப் பார்த்து அவள் கனிவாகச் சிரித்தாள்,.'

மேலும், இந்தக் கதையில் கணவர் அவர்களிடமிருந்து பறிக் கப்பட்டதை துன்பத்தின் இழையோட்டத்தில் நினைவுகொண் டபோதும், அதற்கப்பால் உறவுகளின் நிழல்களில் அவரின் நிஜத்தைக் கண்டு ஆறுதலடைவதாக ஸ்ரீரஞ்சனி தெளிவாக முன்வைக்கிறார். இது அவரின் கூட்டுச் சமூகக் கண்ணோட் டத்திலிருந்து வருவதையும் அதன் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது.

'அவர்களைக் கண்ட பெரியம்மா ஓடிவந்து அவர்கள் இரு வரையும் இறுக அணைத்துக் கொண்டார். ...ராகவி சிறிய பிள்ளையாக இருந்தபோது அவளுடன் கூடி விளையாடிய தோழியான பவனின் அக்கா சௌந்தரியும் பெரியம்மாவுக் குப் பக்கத்தில் நின்றிருந்தாள். 'அம்மா யார் வந்திருக்கிற தெண்டு பாருங்கோ!'... சுருக்கங்கள் நிறைந்திருந்த அம்மம் மாவின் விழிகள் அவர்களைக் கண்டதும் அகன்றன. ராகவி யின் முகவாயை வாஞ்சையுடன் தடவினார். ...இத்தனை பேருடன் சந்தோஷமாக இங்கிருக்க முடியாமல் ரொறன்ரோ வில் தானும் அம்மாவும் மட்டும் தனித்து வாழவேண்டி யிருக்கே என்ற சோகத்தில் ராகவிக்குத் தொண்டை அடைத்தது.'

வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்துக்கும் மதிப்பும் பெறு மானமும் முக்கியத்துவமும் உள்ளது. அவற்றை அக்கணங் களை நினைவு கொள்ளும் போது மட்டுமே உணர்ந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது கல்லடிபட்டால் அந்தக் கல் அக்கு ழந்தையின் முழு வாழ்க்கையையும் தீர்மானிக்கும் கணமாக மாறிவிடக் கூடும். அதேபோல். ஒரு குழந்தைக்கு எதிர் பாராத விதமாக நல்லாசிரியர்களும் சூழ்நிலைகளும் அமை யும்போது அதன் வாழ்தல் வியப்பூட்டக்கூடிய வகையில் மாறக்கூடும். இவ்வாறு ஒவ்வொரு கணமும் வாழ்வில் முக் கியத்துவமானது என்பதை அந்தக் கணத்துடன் இணைந்து நினைவுகொள்ளும்போது மாத்திரமே எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். அக்கணத்தைப் பற்றிய, அது உருவான பின்னணியைப் பற்றிய நமக்கு பிரக்ஞை இல்லாதிருந்தால் அக்கணத்தின் பெறுமானம் பற்றியோ முக்கியத்துவம் பற் றியோ நமக்கு அர்த்தம் எதுவும் புரியாது.

அவ்வாறுதான் இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள ஏழு கதைகளும் ஸ்ரீரஞ்சனி, சிவகாமி என்ற தனி மனிதர்களின் வாழ்வில் குறுக்கிட்ட, பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த கணங்களை முன்வைக்கின்றன. இக்கணங்களை கதையாசி ரியர்கள் அதன் பெறுமானத்துடன் கூடிய முக்கியத்துவதுடன் நமக்கு முன்வைக்கின்றனர். ஒரு சமூகமாக இலங்கையில் வாழும் அல்லது இடம்பெயர்ந்து வாழும் அல்லது மண்ணிலி ருந்து மறைந்துபோன, மறைக்கப்பட்டவர்களுக்கு அவை பெறுமானமிக்க, முக்கியத்துவத்துவமுடைய கணங்களாக இருந்திருக்கிறது; இருந்திருக்கும். முக்கியத்துவம் (importance) என்பதும் பெறுமானம் (value) என்பதும் அதன் தாக் கத்தைப் பொறுத்து சாதகமானதாகவோ (positive) பாதக மானதாகவோ (negative) இருக்கலாம். இக்கணங்களைப் பதிவு செய்கின்றபோது ஸ்ரீரஞ்சனியும், சிவகாமியும் வாழ்பவர் களுக்கு அவற்றை நினைவூட்டி, அவர்களுக்குள் உறைந் துபோய் இருக்கின்ற பல நூற்றுக்கணக்கான கணங்களை உயிர்ப்பித்து உணர்வளிக்கின்றனர். உண்மையில் இது என்னுள்ளே நிகழ்கின்றது என்பதுதான் நிஜம். அந்த வகையில் இக்கதைத் தொகுதி அதன் பிரதான நோக்கினை அடைந்திருக்கிறது எனலாம். மனிதர்களுக்குள் கேள்வி களையும் செயற்பாடுகளையும் தூண்டியிருக்கிறது என்பது தான் அது.

முடிவாக, தாயும் மகளும் என்ற உறவுக்குள் இருந்து ஸ்ரீரஞ் சனியும் சிவகாமியும் இச்சிறுகதைத் தொகுதியை எழுதி யிருக்கின்ற போதிலும் அவர்கள் இரு வேறுபட்ட சந்ததிக்கு உரிய கண்ணோட்டங்களையும் தந்திருக்கிறார்கள். இரு வேறுபட்ட சூழலில் தாங்கள் உருவாக்கிக்கொண்ட பார்வை வில்லைகளுக்கூடாக இந்தக் கதைகளை எழுதியிருக்கின் றனர். இருந்தபோதிலும், அக்கண்ணோட்டங்களில் உள்ள இடைவெளிகளையும் முரண்களையும் அவர்கள் சமரசம் செய்கின்ற நிலைமைகளையும், ஒரே விடயத்தை வேறுபட்ட கண்ணோட்டத்தில் புரிதலோடு, பெருமளவில் முரண்படு கின்ற நிலைமைகள் இல்லாது முன்னெடுப்பதையும் நாம் காணலாம். இந்த விடயம் முக்கியமானது. ஏனெனில், புலம் பெயர் சூழலில் சந்ததிகளின் இடைவெளியும் அவர்களின் கண்ணோட்டங்களின் இடைவெளியும், புலம்பெயர் வாழ்விய லின் சவால்களுக்கு அப்பால் உறவுகளில் மிகப் பெரிய தாக் கங்களை ஏற்படுத்துவதை யாரும் மறுக்கமுடியாது. இந்நி லைமையில் புரிதலும் சமரசம்செய்து கொள்ளலும் முக்கி யமான விடயங்களாக உள்ளன. சந்ததிகளுக்கு இடை யிலான உறவுகளைப் பராமரிப்பதிலும் அவற்றைப் புனர மைப்பதிலும் இந்த உத்திகள் மிக முக்கியமானவை. இவ்வ கையில் ஸ்ரீரஞ்சனியும் சிவகாமியும் ஒரு சமூகக் கடமையாக அவர்களது எழுத்துகளை முன்வைத்திருப்பது இந்தச் சிறு நூலின் வெற்றிக்குச் சாட்சியமாக உள்ளது. மேலும், இரு சந் ததிகளின் தேவைகள், கரிசனைகள், புரிதல்கள், கருத்தாக் கங்கள் வேறுபட்டவையாக இருக்கும் பட்சத்திலும் அவை ஒரேயளவு முக்கியத்துவம் உள்ளவை. எனவே, ஒரேயளவு பெறுமானத்துடனும் மதிப்புடனும் அணுகப்பட வேண்டி யவை. சமரசம் உடன்பாடுகள் எய்தப்படாத, முடியாத சந் தர்ப்பங்களிலும்கூட முரண்பாடுகள் இல்லாது ஏற்றுக்கொள் ளும் நிலைமைகளுக்கு இவ்வணுகுமுறை வழிவகுக்கும் என்று இக்கதைகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

zulfika.ismail@thaiveedu.com



ஆரோக்கியம் பிரான்ஸிஸ்



'சாகித்ய ரத்னா'

# தெளிவத்தை ஜோசப்:

## மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்

ஈழத்து இலக்கிய உலகுக்கு தான் சார்ந்த மலையக இலக்கியம் சார்ந்தும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் சார்ந்தும் தனது பங்களிப்பை வழங்கி வளம் சேர்த்த அமரர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பதுளை, எல்ல 'குறிஞ்சிப் பேரவை' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 2025.11.16 அன்று நடைபெற்றது.

குறிஞ்சிப் பேரவையின் தலைவர் சுப்ராயன் ராஜமாணிக்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை நிவ்பேர்க் தமிழ் மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபர் கே. இளையராஜா வழங்கினார். வருகை தந்த இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட அனைவரும் தெளிவத்தை ஜோசப் அவர்களின் உருவப்படத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

பதுளை தெளிவத்தை மண்ணை மலையக இலக்கியத்தின் அடையாளமாக முன்னிறுத்திய தெளிவத்தை ஜோசப் அவர்கள் வாழும்போதே அவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவித்த பெருமை குறிஞ்சிப்பேரவைக்கு உண்டு. இன்று அவர் மறைந்து மூன்றாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை நடத்தி அவரது நினைவுகளை மீட்பதிலும் தாம் பெருமை அடைவதாக குறிஞ்சிப்பேரவையின் தலைவர் ராஜமாணிக்கம் தனது தலைமையுரையிலே தெரிவித்தார்.

தெளிவத்தை ஜோசப் இறுதியாக எழுதி தாய்வீடு பதிப்பக வெளியீடாக வெளிவந்த 'மாறுதல்கள்' எனும் நாவலும், அக்கரைப்பற்று பேஜஸ் பதிப்பகம் வெளியிட்ட 'பாட்டி சொன்ன கதை' - 'எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்' எனும் 'இரு கதை' பிரசுரம் என்பன விழா மேடையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு சிறப்புப் பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

'தெளிவத்தை ஜோசப் எனும் நாவலாசிரியர்' எனும் தலைப்பில் கொட்டகலை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் ஆ. கலையரசு உரையாற்றினார். தெளிவத்தை ஜோசப் எழுதிய நாவல் இலக்கியங்களின் சிறப்புகளை எடுத்துக் கூறிய அவர் தாய்வீடு பதிப்பக வெளியீடான அவரது 'மாறுதல்கள்' எனும் நாவல் குறித்தும் உரையாற்றினார்.

'தெளிவத்தை எனும் சிறுகதையாசிரியர்' எனும் தலைப்பில் விரிவுரையாளர் ஜே. சற்குருநாதன் உரையாற்றினார். சமூகப் பொதுப்பிரச்சினைகளை முன்னிறுத்துவதைவிட உதிரிகளான தனிப்பட்டவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களை அழகியல் உணர்வுடன் புனைவுகளாக்குவதே தெளிவத்தை ஜோசப் அவர்களின் பாணியாக இருந்தது எனும் விமர்சனத்தை அவர் தனது உரையில் முன்வைத்தார்.

'தெளிவத்தை ஜோசப் எனும் ஆவணக் காப்பாளரும் ஆய்வாளரும்' எனும் தலைப்பில் தெளிவத்தை ஆவணக் காப்பகத்தின் நிறுவுநரும் பாக்யா பதிப்பக நிறுவுநருமான எழுத்தாளர் மல்லியப்புசந்தி திலகர் சிறப்புரையாற்றினார். தனது புனைவு எழுத்துகளால் தெளிவத்தை ஜோசப் புகழ் பெற்றவராக அறியப்பட்டாலும் அவரது மலையக சிறுகதைகள், நாவல்கள் குறித்த வரலாற்றாய்வும் மலையகச்



சிறுகதைகள், உழைக்கப் பிறந் தவர்கள் முதலான தொகுப்பு களும் மலையக இலக்கியம் சார்ந்த ஆய்வு முயற்சிகளில் வரலாற்று சாதனையாகும். தெளிவத்தையின் இந்த முய ற்சிகள் நிகழாதுபோயின் பல எழுத்தாளர்களின் பெயர்களே இருட்டிப்பு செய்யப்பட்டதாக இருக்கும். அதேபோல இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழி யலும் இலக்கியமும் எனும் இதழியல் வரலாறு குறித்த தொடர் ஆய்வுக் கட்டுரை ஈழத்து இலக்கிய உலகுக்கு அவர் வழங்கிய அருங்கொ டையாகும். இந்த ஆய்வு களைச் செய்வதற்கு தெளிவத்தை ஜோசப் அவர்களின் ஆவணச் சேகரிப்பு எனும் அர்ப்பணிப்பு மிக்க பணியே கைகொ டுத்தது. இன்று இணைய வழியாக இயங்கும் நூலகத் துக்கு ஆதாரமாக அமைந் தவை அவரது ஆவணச் சேகரிப்பேயாகும். எனவேதான் மலையக மக்கள் இலக்கியம் குறித்த ஆவணக் காப்பகம் ஆய்வு. இலக்கிய முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் தெளிவத்தை ஜோசப் நினைவாக ஆண்டு தோறும் விருதுகளை வழங்கி வருவதாகவும் அந்தவ கையில் 2023-ஆம் ஆண்டு கூடலூர் மு.சி. கந்தையா அவர்களுக்கும், 2024-ஆம் ஆண்டு வட்டகொடை சுப்பையா இராஜசேகரன் அவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டதோடு 2025-ஆம் ஆண்டு தெளிவத்தை நினைவு விருது, ஆவணக் காப்பாளர் பத்தனையைச் சேர்ந்த T.S. டேவிட் அவர்களுக்கும் வழங்கி வைக்கப் பட்டது. மலையகத்துக்கு என பொதுவான ஆவணக் காப்பகமோ, அருங்காட்சியகமோ இல்லாத நிலையில் தனிப்பட்டவர்களின் இந்த முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு தோறும் இத்தகைய விருது வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார்.



### ஆவணக்காப்பாளர் T.S. டேவிட்:

2025-ஆம் ஆண்டுக்கான தெளிவத்தை ஜோசப் நினைவாக வழங்கப்பட்டுள்ள ஆவணக் காப்பாளர் விரு துக்குரியவரான T.S. டேவிட், பத்தனை, தங்காப்பூ தோட் டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தலவாக்கலை பத் திரிசியார் கல்லூரியில் கல்வி கற்ற இவர் சிறுவயதுமுதல் வாசிப்பில் அதிக ஆர்வம் காட்டி வந்துள்ளார். மலையக தியாகி சிவனு லட்சுமணன் காணி உரிமைப் போராட் டத்தில் உயிர் நீத்தவர். இந்த உரிமைப்போராட்டத்தை நேரில்கண்ட சாட்சிகளில் ஒருவராக விளங்கிய T.S. டேவிட், மாணவப்பருவ காலத்தில் அது சார்ந்த ஆவணங் களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளார். அந்த ஆர்வம் காலப்போக்கில் வீட்டிலேயே ஒரு நூலகத்தை உரு வாக்கும் எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது. தந்தையார் தோட்ட உத்தியோகத்தர். தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட சிறு வீட்டிலேயே இவரது ஆவண சேகரிப்பு ஆரம்பமானது. காலப் போக்கில் பத்தனை பகுதியில் அவர்களது சொந்த வீட்டில் அமையப்பெற்ற ஆணவச் சேகரிப்பு பல ஆய்வாளர்களுக்கும் மாண வர்களுக்கும் பயனுடையதாக அமைந்தது. பின்னாளில் மலையக அரசியல் கட்சியின் செயற்பாட்டா ளராக மாறிய பின்னர் இவரது ஆவண சேகரிப்புகள் மலையக அரசியல் பரப்புக்கும் பெரிதும் உதவியுள்ளது. அதேநேரம் அந்த அரசியல் கட்சியின் தலைவர் உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது தானும் சிறை செல்ல நேரும். எனவே தனது சேகரிப்பில் உள்ள ஆவ ணங்கள் பாதிப்புக்கு உள்ளா கலாம் எனும் அச்சத்தில் தனது ஆவணச் சேகரிப்புகளை நண்பர் ஒருவரின் வீட்டிற்கு மாற்றல் செய்ய, அவை பாதுகாப்பற்ற முறையில் அழிந்துபோயுள்ளன. எனினும் தனது விடாமு யற்சியினால் தொடர்ந்தும் ஆவணச் சேகரிப்பிலும் அதனைப் பலருக்கும் பயனுடைய வகையில் வழங்கி வரு வதிலும் T.S. டேவிட் தொடர்ந்து இயங்கி வருகிறார். இன்றும் அவரது ஆவணச் சேகரிப்பானது பல்கலைக் கழக மாணவர்களுக்கும் சுயாதீன ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படுகின்றது. அரசாங்க பாடசாலையில் வரலாறு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக பணி புரிந்த T.S. டேவிட் தற்போது ஓய்வு பெற்ற நிலையில் முழுநேர ஆவணக்காப்பாளராக இயங்கிவருகிறார்.

இவரது ஆவணச்சேகரிப்பு பணியை பாராட்டி கௌர விக்கும் மேற்படி குறிஞ்சிப் பேரவையினது நிகழ்வில் நல் லாசிரியர் பணிக்காக ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. அகிலாண்டேஸ்வரியும் வாழ்நாள் இலக்கிய பங்களிப் புக்காக கவிஞர் இராதை மணாளனும் கௌரவிக்கப்பட் டனர். மேற்படி நிகழ்ச்சிகளை ஆசிரிய ஆலோசகர் என். மனோகரன் தொகுத்தளிக்க ஆசிரியர் புண்ணியராஜ் நன்றியுரை வழங்கினார். கவிஞர் இராதா மணாளன் கவி வாழ்த்து வழங்கினார். நிவ்பேர்க் தமிழ் மகாவித்தியாலய மாணவர்களின் கண்கவர் நடனங்கள் சபையோரை மிகவும் ஆகர்சிப்பதாக அமைந்ததுடன் தெளிவத்தை ஜோசப் அவர்களை நிறைவாக மனதில் கொண்ட நினை வேந்தலாக அமைந்த நிகழ்வானது இனிதே



Francis.A@thaiveedu.com



# ‘முதல் மூவர்’ நூல் வெளியீட்டரங்கம்





தாய்வீடு பத்திரிகையின் புதிய வெளியீடான ‘முதல் மூவர்’ நூல் வெளியீட்டரங்கம், டிசம்பர் ஆறாம் நாள், ஸ்காபரோ விலேஜ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

நூலாசிரியர் பேராசிரியர் சொர்ணவேல் மிச்சிகன் நகரிலிருந்து வந்து நேரடியாகக் கலந்துகொண்டார். நிகழ்ச்சி, கனடாவின் முதற்குடிகளின் நிலத்தில் நடைபெறுகின்றது எனும் நிலவு டைமையை ஏற்போடு, நிகழ்வு ஆரம்பமானது. பேராசிரியர் சொர்ணவேலின் ஆசிரியரும் புனே திரைப்படக் கல்லூரியில் பேராசிரியராகக் கடமையாற்றி பல திரைப்பட மேதைகளை உருவாக்கியவருமான சதீஸ் பகதூரை நினைவுகூர்ந்து, அவையோர் அனைவரும் எழுந்து நின்று அந்த வணக்கம் செலுத்தினார்கள். 2025 நவம்பர் 26 அவரது நூறாவது பிறந்தநாள் நினைவு.

அதன் பின்னர் எழுத்தாளர் பொன்னையா விவேகானந்தன் ஆரம்ப உரையை நிகழ்த்தினார். நூலின் முக்கியத்துவத்தையும், தாய்வீட்டின் தொடர்ச்சியான பங்களிப்பையும் பொன்னையா விவேகானந்தன் எடுத்துரைத்தார். இது வரையில் இவ்வாறு ஆழமான கருத்துகளை உள்ளடக்கிய சினிமா மேதைகள் பற்றிய ஆய்வு நூல் தமிழில் வெளிவரவில்லை என்பதனையும் எடுத்துரைத்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த ரதன், ‘முதல் மூவரி’ல் பேராசிரியர் குறிப்பிட்ட லூயிஸ் புனுவெல் பற்றி விரிவாகக் கூறினார். அரசியல் இயக்குநர் விம் வெண்டர்ஸ் பற்றியும் உரையாற்றினார்.

இறுதியாக பேராசிரியர் சொர்ணவேல் முதல் மூவரான லூயிஸ் புனுவெல், ராபர்ட் ப்ரெஸ்ஸோன், யஸ்சீரோ ஓசு பற்றியும் விம் வெண்டர்ஸ் பற்றியும் விரிவாகவும், சுவாரஸ்யமாகவும் உரையாற்றினார். அவர்களின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அவர்களது படங்களைப் பார்க்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் தெரிவித்தார்.

பேராசிரியர் சொர்ணவேலின் உரை மிகவும் பயனுள்ளதாகவிருந்தது. சுமார் 90 நிமிடங்களில் ஒரு சீரிய நூல் வெளியீடாக முதல் மூவர் நூல் வெளியீடு அமைந்திருந்தது.







# ஈழ–புலம்பெயர் திரைப்படைப்பாளிகளுடன் ஒரு கலந்துரையாடல்

டிசம்பர் 6, 2025 அன்று மிச்சிகன் பல்கலைக்கழக ஊடகவியல், சினிமாக் கோட்பாட்டுக் கற்கைநெறிப் பேராசிரியர் சொர்ணவேல் ஈஸ்வரன் அவர்களுடனான றொறன்ரோவாழ் தமிழ்த் திரைப்படப் படைப்பாளிகள், இயக்குநர்கள், விமர்சகர்கள், ஆர்வலர்களின் சந்திப்பொன்று நடைபெற்றது.

இன்றைய சுயாதீன தமிழ்த் திரைத்துறை பற்றிய கலந்துரையாடலாகவே ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு, ஈழத் தமிழ்த் திரைத்துறை வளர்ச்சியில் உள்ள தடைக்கற்கள், சிக்கல்கள் பற்றிய ஆய்வாகவும் அமைந்தது. ஈழத்தில் தமிழ்த் திரைப்படங்கள் எடுப்பதற்காக அனுமதி பெறுவதில் உள்ள சிக்கல்களும் முன்வைக்கப்பட்டன. திரைக்கதை சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுத் தரப்படவேண்டும் என்ற நிபந்தனையை இலங்கையில் அனுமதி வழங்கும் அரச நிறுவனமான இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் முன்வைத்துள்ளது.

திரைக்கதையில் தங்களுக்கு ஒவ்வாத விடயங்கள் சேர்க்கப்பட்டுவிடுமோ எனும் ஐயமிருந்தால், படப்பிடிப்பின்போது, திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பப்படும் ஒரு சிங்கள இயக்குநரும் பிரசன்னமாவார். அவர் மொனிட்டருக்கு அருகில் அமர்ந்து காட்சிகளை உன்னிப்பாகக் கவனிப்பார். ஒவ்வொரு காட்சியும் அவருக்கு விளங்கப்படுத்தப்படவேண்டும் என்ற கட்டாயம் உண்டு. இதன் பின்னரும் தணிக்கைக் கட்டுப்பாடுகளும் உண்டு என்று தெரிவிக்கப்பட்டது.

தாய்வீடு பத்திரிகை சார்பாக நடைபெற்ற இந்த இரண்டு மணி நேரக் கலந்துரையாடலில், ‘புலம்பெயர் படைப்புகளுக்கான பார்வையாளர்கள் யார்?’ என்ற கேள்வியும் எழுந்தது. சீரிய படங்களைப் புலம்பெயர் மக்கள் பார்க்கத் தயங்குகின்றனர். அதே சமயம் இப்படங்களுக்கான வெளியாக சர்வதேசத் திரைப்பட விழாக்களே உள்ளன. பிரதான சர்வதேசத் திரைப்பட விழாக்கள், தமிழ்த் தேசியம் சார்ந்த, விடுதலைப் போராட்டம், போராளிகள் சார்பான படங்களைத் திரையிட மறுக்கின்றன என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. தேசியத்தை மறுத்து, சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவுக் குரல் எழுப்பிய அசோக ஹந்தகமவின், ‘இனி அவன்’ என்ற தமிழ்த் திரைப்படம் றொறன்ரோ சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அதே சமயம் வெளிவந்த பிரசன்ன விதானகேயின், ‘பிறகு’ என்ற இரு மொழிப்படம் அதே விழாவில் திரையிடப்படவில்லை. இப்படம் தமிழ் மக்களுக்குச் சார்பானது என்பது குறிப்பிடத்தக்கது.

2024-ஆம் ஆண்டு றொறன்ரோ சர்வதேசத் திரைப்பட விழாவில் ‘ஜப்னா போய்’ (Jaffna Boy) என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. இப்படம் பிரான்ஸ்வாழ் விடுதலைப்புலிகள் சார்ந்தோரை மோசமாகச் சித்தரித்து விமர்சித்திருந்தது.

சர்வதேசத் திரைப்பட விழாவின் அளவுகோல் புலம்பெயர், ஈழ திரைத்துறைகளைப் பொறுத்தவரை விளங்கிக்கொள்ள முடியாததாகவேயுள்ளது. இலங்கையில் இன்று தயாரிக்கும் திரைப்படங்கள் இந்திய வணிக சினிமாவின் மறுவடிவமாகவேயுள்ளன. படைப்பாளிகளுள் பலர் சிறந்த நாவல்களை வாசிப்பதில்லை. ஒரு சீரிய திரைத்துறையை நோக்கி அவர்கள் நகர முயலவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. வெகுசன மக்களைக் கவருவதற்கு வெவ்வேறு வகை பாணிகளை அவர்கள் கையாளலாம் என்றும் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

புலம்பெயர் படைப்பாளிகள் பலர் தங்களுக்குக் கிடைக்கும் திரைப்படக் கல்வி வசதியைப் பயன்படுத்துவதில்லை. அதனால் பலரது படங்கள் பார்க்கக்கூடிய நிலையில் இல்லை. இதனால் உண்மையில் சீரிய படங்களை இயக்கும் படைப்பாளிகள் தங்களது படங்களை மக்களிடம் கொண்டு செல்லமுடியாத நிலையில் உள்ளார்கள்.

மறுபுறத்தில் எங்களது கதைகளுக்கு நிகரான அல்லது நெருக்கமான படங்களாக இலத்தீன் அமெரிக்கப் படங்கள் உள்ளன. அவற்றை நாங்கள் பார்ப்பதில்லை. வோல்ற்றர் சலஸின், ‘ஐ ஆம் ஸ்ரில் ஹியர்’ (I’m still here) போன்ற படங்களை உதாரணமாகவும் கூறப்பட்டது. ஆர்மேனிய இனப்படுகொலைகளுக்குப் பின்னான மூன்றாம் தலைமுறை ஆர்மேனியரான அற்றம் எகோயன், துருக்கியரால் (உதுமானியப் பேரரசால்) ஆர்மேனியர் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைகள் பற்றிப் பல படங்களை இயக்கியுள்ளார். அவர் ஒரு கனடியர்.

மிகச் சிறந்த போர் பற்றிய படங்களுள், இன்சென்டிஸ் (Incendies) என்ற படமும் உள்ளது. இதுவும் டெனிஸ் வில்நோவ் எனும் ஒரு பிரெஞ்சுக் கனடியரால் இயக்கப்பட்ட படமாகும்.

இன்று கனடாவில் எம்மத்தியில் பல இயக்குநர்கள், திரைக்கதாசிரியர்கள் உள்ளனர். அவர்கள் பல கதைகளைக் கூறக் காத்திருக்கின்றார்கள். நாங்கள் ஆரோக்கியமாக, ‘திரைப் படம்’ என்ற ஊடகத்தை நகர்த்துவோமாயின் எம்மால் உலகுக்கு எமது வலிகளை உணர்த்தமுடியும்.





சொல்லின் செல்வர்

# செல்லையா இராசதுரை

## சர்ச்சைகளின் நிழலும் வரலாற்றின் நிஜமும்

**பிரசாத் சொக்கலிங்கம்**

செல்லையா இராசதுரை ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் தனித்துவமான ஆளுமையாக நினைவுகூரப்படுகிறார். மட்டக்களப்பின் 'முடிசூடா மன்னன்' எனப் புகழ்பெற்ற இவர், சாதாரண அரசியல்வாதியிலிருந்து அமைச்சராகப் பதவி வகித்தவர். பின்னர் ஆன்மீகப் பயணத்தில் அமைதி தேடியவர். அவரது வாழ்க்கை வரலாறு, ஈழத்தமிழரின் அரசியல் எழுச்சியும், அதனோடு கூடியுள்ள உட்புல முரண்பாடுகளும் சேர்ந்து ஒரு வரலாற்று ஆவணமாகின்றது.

### ஆரம்ப காலம் – ஆளுமை உருவாக்கம்:

1927 ஜூலை 27 அன்று மட்டக்களப்பு புளியந்தீவில் பிறந்த இராசதுரை, மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலம், மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆகிய நிறுவனங்களில் கல்வி பயின்றார். சிறுவயதில் இருந்து தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் காட்டிய இவர், பள்ளி மாணவப் பருவத்தில் இலக்கியப் படைப்புகளிலும் ஈடுபாடு காட்டிவந்தார். இளம் வயதிலேயே திராவிடர் கழகம், பொதுவுடமைக் கட்சிக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட ஒருவராக இராசதுரை இருந்திருக்கின்றார். மூடநம்பிக்கைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றுக்கு எதிராகப் போராடிய இளைய சமுதாயத்தின் முன்னத்தி ஏராகவும் இருந்திருக்கிறார். பாடசாலைக் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் மீதான ஆர்வமும் நாடக ஈடுபாடும் அவருக்குள் பேச்சாற்றலை உருவாக்கின. அதன் காரணமாகவோ என்னவோ பிற்காலத்தில் அவர் 'சொல்லின் செல்வர்' என்று அழைக்கப்பட்டார். இது தவிர, தமிழரசுக்கட்சியின் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இணைந்ததனால், செய்தி சேகரிப்பிலும், தகவலைப் பொதுமக்களிடம் தெளிவாகப் பகிர்வதிலும் தனது திறமையை வளர்த்துக்கொண்டார்.

### நீண்ட அரசியல் பயணம் (1952–1989):

தந்தை செல்வா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறி, 'இனி என்ன செய்வது ?' என்ற நிலையில், இராசதுரையைப் பற்றிக் கேள்விப்படுகின்றார். தொடர்பு கொண்டார். சந்தித்தார். புதிய கட்சி தொடங்குவது என்று முடிவெடுக்கப்பட, அந்தக் கட்சிக்கான கொள்கைகளை வகுப்பதிலும் தந்தை செல்வாவுக்கு உறுதுணையாக இருந்தார் இராசதுரை. 1952-ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் புதிய, தமிழரசுக் கட்சி போட்டியிட்டது. தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு மட்டக்களப்பில் யாரும் தயாராக இல்லை. இராசதுரை கேட்டதற்காகப் போட்டியிட முன்வந்தவர்களும் கடைசி நேரத்தில் ஒதுங்கிக்கொண்டனர்.

திருகோணமலையில் நடந்த தமிழரசுக் கட்சியின் முதலா வது பரப்புரைக் கூட்டத்துக்குக் கல்லெறி விழுந்தது. ஆனால் இராச துரையின் நாவன்மையும் மனவுறுதியும் திருகோணமலை மக்களின் கவனத்தைக் கவர்ந்தன. 1952 பொதுத்தேர்தலில் திரு கோணமலையில் என்.ஆர். இராஜவரோதயமும் கோப்பாயில் வன் னியசிங்கமும் மட்டுமே வெற்றி பெற்றார்கள். தந்தை செல்வாகூட, காங்கேசன்துறையில் தோற்றுப்போனார்.

'உன் தீந்தமிழ்ப் பேச்சாலேதான் நாம் திருமலையை வென்றோம்,' என்று தந்தை செல்வாவால் பாராட்டப்பெற்றார் இராசதுரை.

1956 பொதுத்தேர்தலில், மட்டக்களப்புத் தொகுதியில், அதற்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த இரண்டு வேட் பாளர்களைத் தோற்கடித்ததன் மூலம் தமிழரசுக் கட்சிக்கு, நான் காண்டுக்கு முன் வேட்பாளரே கிடைக்காத மட்டக்களப்பு மாவட் டத்தில் முதலாவது வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார் இராசதுரை.

1960 மார்ச், 1960 ஜூலை, 1965, 1970, பொதுத்தேர்தல்களில் தமிழரசுக்கட்சி சார்பில் வீட்டுச் சின்னத்திலும் 1977-இல் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்திலும் போட்டியிட்டு தொடர்ச்சியான ஆறு தேர்தல்களில் ஒரே தொகு தியிலேயே வென்றார் இராசதுரை.

சாதி-மத வேறுபாடுகளை மீறி மக்களுடனான நேரடி இணைப்பும் நியாயவாத அரசியல் அணுகுமுறையும் அவருடைய தொடர்வெற்றிகளுக்கான காரணங்கள் என்பர்.

இராசதுரை சுமார் 34 ஆண்டுகள் மட்டக்களப்பு மண்டலத்தை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தார். மட்டக்களப்பு நகரசபை, மாநகர சபையான பின்னர், 1967/68-இல், கொஞ்சக் காலம் மாநகர சபையின் முதலாவது முதல்வராகப் பணியாற்றி நகரத்தின் அடிப்படை உட்கட்டமைப்புகளை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியனார்.

1973-இல் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மல்லாகம் மாநாட்டில், கட்சித் தலைமைப் பொறுப்புக்கு இராசதுரை அவர்கள் தகுதியானவராகக் கருதப்பட்ட போதும், அ. அமிர்த லிங்கம் அவர்களே அப்பதவிக்கு முன்னிறுத்தப்பட்டார். இதனை இராசதுரை அவர்கள் 'வடக்கு - கிழக்கு பிராந்தியப் பாகுபாடு' என்றே கருதினார். அவரது அந்த எண்ணப்பாட்டை மெய்ப்பிக்கும் வகையிலேயே அடுத்தடுத்து நடந்த அரசியல் நிகழ்வுகளும் அமைந்திருந்தன.

தொடர்ந்தும் கட்சிக்குள் ஏற்பட்ட அதிகாரப் போட்டிகளால் அவர் மன அழுத்தத்தில் இருந்தார். அதேவேளை 1977 பொதுத் தேர்தலில் இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக் களப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் காசி ஆனந்தனையும் கபட நோக்கத்தோடு நிறுத்தினார் அமிர்தலிங்கம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் உதயசூரியன் சின் னத்தில் போட்டியிட்ட இராசதுரையின் தேர்தல் பரப்புரை களைத் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்கள் பலர் திட்டமிட்டுப் புறக்க ணித்தனர். அதேவேளை, வீட்டுச் சின்னத்தில் களம் கண்ட காசி ஆனந்தனின் மேடைகளில் அவர்கள் எழுச்சியுடன் காட்சியளித் தனர். இத்தகைய கடும் உள்வீட்டு நெருக்கடிகளையும் முட்டுக் கட்டைகளையும் தகர்த்தெறிந்து, இராசதுரை தனது வெற்றி யைப் பதிவு செய்தார்

## தமிழரசுக் கட்சி முரண்பாடுகள்: அதிகாரப் போராட்டம்:

"மட்டக்களப்புத் தொகுதியில் இராசதுரை அவர்கள் வெற்றி பெற்றிருந்த போதிலும், கட்சிக்குள் உட்கட்சிப் பூசல்கள் புகைந்து கொண்டே இருந்தன. இதன் விளைவாக, 1979 பிப்ரவரி மாதம் அவர் தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அந்த இக்கட்டான சூழலை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அணுகாமல், 'விலகினேனா ? விலக்கப்பட்டேனா ?' எனும் தனது நூலின் வாயிலாக மக்கள் மன்றத்தில் தெளிவான விளக்கத்தை முன்வைத்தார். அதன் மூலம், தனது அரசியல் பயணத்தை ஒரு சிறந்த அரசியல் நாகரிகத்துடன் அவர் அடையாளப்படுத்தினார்

## அமைச்சுப் பணிகளும் சாதனைகளும்: அபிவிருத்தி அரசியல்:

1979 மார்ச்சில், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அமைச் சராக இராசதுரை பொறுப்பேற்றார். பாகுபாடான அரசியல் விமர்சனங்களுக்கு முகங்கொடுத்த போதும், அவர் அந்தப் பதவியைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான கருவியாகப் பயன்படுத்தினார்.

இந்நிலையில், தமிழ் மொழியை அரச கரும மொழியாக நடை முறைப்படுத்துதல், கலை - கலாசாரம் - இசை வளர்ச்சிக்கு உதவும் சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை (இப்போது, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்) நிறுவல், இந்து சமய நிர்வாகம், ஆலயப் புனரமைப்பு வழியிலான சமய அடையாளத்தைக் காக்கும் முயற்சிகள் என, தமிழ்மொழி, கலாசார வளர்ச்சிக்கான நிர்வாக முன்னெடுப் புகளை அவர் உறுதியாகச் செயற்படுத்தினார்.

## இலக்கிய முயற்சிகள்:

இராசதுரை சில இலக்கியப் படைப்புகளை உருவாக்கி யுள்ளார். அவற்றுள், 'ராசாத்தி', 'மிஸ் கனகம்' போன்ற புதி னங்கள், சிறுகதைகள் சமூகப் பரிணாமக் கருத்துகளை எதிரொ லிக்கின்றன. இராசதுரை அரசியலுக்கு வராதிருந்தால், ஈழத்து இலக்கியத்தில் இன்னும் பல படைப்புகளை உருவாக்கியி ருப்பார் என்பர்.

## சர்ச்சைகளின் நிழலும் இறுதி அமைதியும்:

வாழ்க்கையின் இறுதியில் அரசியற் செயற்பாட்டிலிருந்து விலகி, அவர் சத்யசாயி பாபாவின் வழியைப் பின்பற்றி ஆன்மீ கத்தில் அமைதி கண்டார். இது ஒரு நீண்ட கால அரசியல் போராட்டத்தின் பின்னடைவு - அமைதி தேடல் எனப் பார்க் கலாம்.

## அவரைப் பற்றிய இரண்டு வாதங்கள் உள்ளன:

'விடுதலைப் போராட்ட காலத்தில் அரசோடு இணைந்தது; போராட்டத்தைப் பலவீனப்படுத்தியது.'

'போராட்டங்களால் சாதிக்க முடியாததை, அதிகாரத்தில் இருந்து அபிவிருத்தியின் வழியே சாதித்தார்.'

இவ்விரு பக்கமும் அவரது செயல்களைப் போதுமான அளவில் விளக்குகின்றன. அவர் முழுமையான நாயகனும் அல்ல, முழுமையான வில்லனும் அல்ல. காலத்தின் பிரதிபலிப்பாகவே அவரை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

கிழக்கு மண்ணின் கலை, பண்பாடு மற்றும் அரசியல் அடையா ளங்களைத் தேசியத் தளத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்த செல்லையா இராசதுரை மட்டக்களப்பு மக்களின் நெஞ்சங் களில் பெருந்தலைவராகவே நிலைத்துவிட்டார்.



prasath.s@thaiveedu.com



# கலா: வலிகளற்ற உலகில் அமைதியாகத் தூங்குங்கள்!

**மு. நித்தியானந்தன்**

லண்டனில் இலக்கியக் கூட்டங்களில் தனி எழிலுடன் ஒய்யாரமாக உலா வந்த பூங்கோதை என்னும் கலா ஸ்ரீரஞ்சன் மறைந்த செய்தி இலக்கிய உலகினை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

முகநூலிலும் மிகப்பெரும் நண்பர் வட்டத்தைக் கொண்டிருந்தவர். அவருடைய முகநூல் குறிப்புகள் சுவையானவை; எதனையும் எளிதாக எடுத்துக்கொள்பவர்.

ஒரு நான்காண்டு கால உறவு. இந்த நான்கு ஆண்டு காலத்திற்குள்தான் கலா, லண்டன் இலக்கிய உலகினை ஆக்கிரமிக்கத்தொடங்கியிருந்தார். சகல இலக்கிய மேடைகளிலும் அவர் தோற்றம் தந்திருந்தார். குரோய்டன் வூட்சைட் ஆங்கில ஆரம்பப் பள்ளியில் (Woodside Primary School, Croydon) நீண்ட காலம் ஆசிரியையாக இருந்த அனுபவத்தை அவரது இலக்கியப் பேச்சில் உணர முடியும். கூட்டத்திற்கு சரியான நேரத்திற்கு வருவதிலிருந்து, கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் ஒழுங்காகப் பேச்சினைத் தயாரித்து வந்து உரையாற்றுவதிலிருந்து, அவையோருடன் புன்னகை சிந்தி, நேசத்துடன் கலந்துரையாடுவது வரை அனைத்திலும் ஒரு நேர்த்தியிருக்கும். 'குந்தவை கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டின்போது எனது தலைமையில், கலா ஸ்ரீரஞ்சன் ஆற்றிய உரையே அவர் இறுதியாக ஆற்றிய உரை என்பதைத் துயரத்தோடு நினைவு மீட்கிறேன்.

லண்டனில் 2022-ஆம் ஆண்டில் நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில், பதுளை சேனாதிராஜா எழுதிய 'குதிரைகளும் பறக்கும்' என்ற நூலினை ஆய்வு செய்து உரையாற்றியதிலிருந்து, அவர் மலையக இலக்கிய முயற்சிகள் மீது பெரும் ஆர்வம் கொண்டவராக இருந்துள்ளார். 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்' என்ற எனது நூலினையும் அவர் ஆய்விற்கெடுத்து, அழகிய

உரையினைத் தந்திருந்தார். சட்ட வல்லுநர் கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற நூல் விழாவில், சி.வி. வேலுப்பிள்ளையின் ‘எல்லைப்புறம்’ நாவலினை கலா ஸ்ரீரஞ்சனே ஆய்வு செய்திருந்தார்.

வீரகேசரியில் அந்த நாவல் பற்றி அவர் எழுதியிருந்த கட்டுரையில் ‘மலையக இலக்கியத்திற்குச் செழுமையும் புதுப் பரிமாணமும் தந்த நூல்’ என்று சிலாகித்திருந்தார்.

‘மறுநிர்மாணம்’ அமைப்பினர் அ. கௌரிகாந்தனின் ‘இளநிலைத்தேசியமும் முதுநிலைச் சாதியமும்’ என்ற அரசியல் நூலின் விமர்சனக்கூட்டத்திற்கு கலா ஸ்ரீரஞ்சனே தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். அந்த நூல் குறித்த விமர்சன உரையினை நான் ஆற்றியிருந்தேன். பவா செல்லத்துரை அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலான ‘Land-scapes’ என்ற நூல் குறித்து அவர் ஆற்றிய உரை நயம்மிக்கதாகவிருந்தது. கனடாவிலிருந்து மந்தாகினி குமரேஷ் எழுதிய ‘புரிதல்’ என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு நிறைவான விமர்சனம் தந்திருந்தார்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் கலா ஸ்ரீரஞ்சன் மார்பகப் புற்று நோயினால் பீடிக்கப்பட்டு, மூன்றாவது கட்டத்தை அடைந்திருக்கிறார் என்ற செய்தி எங்கள் அனைவரையும் துயரில் ஆழ்த்தியிருந்தது. கிளாசைக் கையில் எடுக்க முடியாமல், மாடியி லிருந்து இறங்க முடியாமல், விரல் நகங்கள் கழன்ற நிலையில், தலைமுடி உதிர்ந்த நிலையில், ஒன்றரை ஆண்டுகள் தொடர்ந்த புற்றுநோய்ச் சிகிச்சையின் பின், போராடி அந்த நோயிலிருந்து சிங்கப் பெண்ணாக அவர் மீண்டெழுந்தார். அபாரமான மன வலிமையுடன் அந்த நோயை அவர் எதிர்கொண்டார்.

தனது நோய் அனுபவங்களை The Other Side of the World - Light in the darkness of Cancer என்ற நூல் வடிவில் 2024-ஆம் ஆண்டு வெளியிட்டார்.

புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்ட அந்த நூலில், ‘எந்நோய் வந்தாலும் ஒளித்து வைக்கத் தூண்டும் எமது சமூகத்தின் சாபக்கேட்டிலிருந்து தப்பி வருவது என்பது, ஒரு நோயோடு போராடுவதைக் காட்டிலும் கடினமானது என்பதை, எனக்கு முன்னே நான் நடந்து கொண்டிருக்கும் பாதையில் ஏற்கனவே நடந்தவர்கள் கூறக்கேட்டு மலைத்துப் போயிருந்திருக்கிறேன். அவ்வகையில் இந்நூல் வெறுமனே நோய் பற்றித் தெரிவிக்கும் நூல் என்பதை விட, நோய்க்காலத்தை எவ்வாறு கடந்து வரக்கூடியதாய் இருந்தது. என்கின்ற அனுபவங்களைப் பகிரும் பக்குவமான நூலாய், குறுநூலாய், வாசிப்பதற்கு இலகுவான விழிப்புணர்வைத் தரும் கையே டாய் இருக்க வேண்டும் என்பதில் விளைந்த அக்கறையைக் கூறும் நூல் என்பேன்’ என்று கலா ஸ்ரீரஞ்சன் குறிப்பிடுகிறார்.

‘எப்போதும் நம்பிக்கையோடு இருங்கள்’ என்பதுதான் கலா இந்த நூலில் வலியுறுத்தும் ஒரே மந்திரம். ‘முடிந்தவரை கொண்டாடுங்கள்; தினமொரு கொண்டாட்டம்தான்’ என்று எழுதினார் கலா.

இந்த நூலில் நகைச்சுவை தோய கலா எழுதியிருக்கும் இடங்கள் சிறப்பானவை. புற்றுநோய்ச் சிகிச்சை பெறுவோருக்காக, மருத்துவமனைக்கு வெளியில் இயங்கும் Maggie's Centre என்ற வசதிகள் நிறைந்த நிலையத்தில் எண்பத்துமூன்று வயதான மூதாட்டியைச் சந்திக்கிறார் கலா.

‘தினமும் ஒரு கிளாஸ் ரெட்வைன் குடி’ என்று அப் பெண்மணி கலாவிற்கு அறிவுரை வழங்கியிருக்கிறார். ‘வைன் குடிப்பது தடுக்கப்பட்டிருக்கிறதே’ என்று கலா பதில் சொல்லியிருக்கிறார். ‘அதை எல்லாம் ஏன் போய் டாக்டரிடம் சொல்லிக்கொண்டிருக்கிறாய்?’ என்று மீளவும் அம்மூதாட்டி அறிவுரை கூறியிருக்கிறார். வாழ்க்கையில் எதனையும் கூர்மையாக அவதானிக்கும் பண்பு கலாவிடம் குடிகொண்டிருந்தது.

லண்டனில் அந்த நூல் வெளியீட்டினைச் சிறப்புற நடத்தி, புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதில் அயராது உழைத்தார். சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் இந்த நூலை அறிமுகப்படுத்தி, இந்நோய் பற்றிய விழிப்புணர்வை இலங்கையிலும் ஏற்படுத்தும் பணியில் உற்சாகத்தோடு இயங்கியிருந்தார். ‘தமிழ்ச்சமூகத்தில் பேசாப் பொருளாயிருந்த இந்த நோயைப் பேசுபொருளாக மாற்றியது’ பற்றி கலா அந்த நூலகத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

ஓர் ஆங்கில ஆசிரியையாக, ஸ்டெம் கல்வித் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்காக, நூற்றுக்கணக்கான மலையக, வட-கிழக்குத் தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிக்கும் அரிய பணியினையும் அவர் மேற்கொண்டிருந்தார். ‘துளிர் விடும் தளிர்களுக்குக் கைகொடுக்கவென’ FACE (UK) என்ற சிறுவருக்கான அமைப்பிற்காக, சிறுவருக்கான முன்பள்ளிக் கல்விக்காகவும் உழைத்திருக்கிறார்.

சிறுவர் இலக்கியத்தில் அக்கறை மிகுந்த கலா சிறுவருக்கான கதைகளைத் தொடர்ந்து எழுதியிருக்கிறார். சத்தியமனை நூலகத்திலிருந்து வெளியாகும் ‘சிறுபொறி’ என்ற சிறுவர் சஞ்சிகையிலும் கலா எழுதி வந்திருக்கிறார். ஜேர்மனியிலிருந்து வெளியாகும் ‘வெற்றிமணி’, லண்டனிலிருந்து வெளியாகும் ‘சிறுகதை மஞ்சரி’, ‘ஆவநாழி’, கனடாவிலிருந்து வெளியான ‘அபத்தம்’ ஆகிய இதழ்களில் அவர் எழுதி வந்திருக்கிறார். ‘தலையிடி கொடுக்காத எளிமையான எழுத்து’ என்று பிரான்சிலிருந்து எழுதும் எழுத்தாளர் க. கலாமோகன் கலாவின் எழுத்திற்குச் சான்று தருகிறார்.

ஆங்கிலக் கவி தம்பிமுத்து தொகுத்த வங்காள மொழிக் கவிதைகளில் ஒமார் அலி என்ற கவிஞரின் கவிதையை ஆங்கிலத்திலிருந்து அழகாக மொழிபெயர்த்திருக்கிறார்.

சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ‘ஐரோப்பிய நாடுகளில் உங்கள் ஆரோக்கியம்’ என்ற நூலினை கலா 2004-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டிருக்கிறார். இருபது ஆண்டுகால எழுத்துப் பயணத்தை அவர் கொண்டிருந்தாலும் கடந்த நான்கு ஆண்டு காலப்பகுதியிலேயே அவர் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறார்.

ஷோபா பீரிஸ் என்ற பிரபல இலங்கைச் சிறார் இலக்கிய எழுத்தாளரின் ஆக்கத்தை 'ஒரு குட்டிக் குரங்கின் கதை' என்ற தலைப்பில் கலா மொழிபெயர்த்தமை பரந்த அளவில் பாராட்டைப் பெற்றிருக்கிறது.

'லூக்கியின் கவின்கூண்டு' என்று 'ஆவநாழி' இதழில் அவர் எழுதிய சிறுகதை நலிந்தோர் நலன்களைப் பாதுகாக்க அரசு ஒருபுறம் நல்ல சட்டங்களை ஆக்கிக்கொண்டிருந் தாலும், மறுபுறம் சமூகம் நலிந்தோரைப் பார்ப்பதே பாவம் என்று நினைக்கும்சூழலில், சட்டமும் சமூகமும் மோதிக் கொள்ளும் முரண்பாட்டை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

புற்றுநோயிலிருந்து அவர் முதல்முறை வெற்றிகரமாக மீண்டதிலிருந்து அவர் மிகுந்த உற்சாகத்தோடு செயற் பட்டு வந்திருக்கிறார்.

'நாளை மற்றுமொரு நாளே' என்பது அவரின் துணிபாக இருந்தது. மலேசியா, அந்தமான், மெக்சிக்கோ, போர்த் துக்கல், லித்துவேனியா என்று நாடுகளைச் சுற்றிப்பார்த்து மகிழ்ந்திருக்கிறார். தான் சென்ற இடங்களைப் பற்றி அவர் சுவையான தகவல்களைத் தனது முகநூலில் பதிவு செய்தி ருக்கிறார். 'அன்றைய போர்த்துக்கேயப் பேரரசின் இன் றைய காலம்' என்று 'அபத்தம்' இதழில் கலா எழுதிய கட்டுரை சுவை பயக்க எழுதப்பட்ட ஒன்றாகும்.

தென்மராட்சியில் கச்சாய் கிராமத்தில் பிறந்த கலா, சாவ கச்சேரி இந்துக்கல்லூரியில் பயின்றிருக்கிறார். தான் ஆரம் பத்தில் பயின்ற தனது கிராமப்பள்ளியை ஆதூரத்தோடு நினைவுகூர்பவர் அவர். தனது வேர்களைத் தேடிப் பய ணிப்பதில் அலாதியான மகிழ்ச்சி காண்பவர்.

1989-இல் லண்டனுக்குப் புலம்பெயர்ந்தவர் South Bank University-யில் சுகாதாரம், சமூக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளில் B.Sc (Hons) பட்டத்தையும், பின்னர் Metropolitan University-யில் கலைமாணிப் பட்டத்தையும், தொடர்ந்து Roehamton University-யில் கல்விக் கொள்கை சார்ந்தும் கல்வி மேற்கொண்டு, தனது கல்விப் புலமையை வளர்த்துக்கொண்டிருக்கிறார்.

என்றும் இனிய புன்னகையோடு உலா வரும் கலா வாழ்க்கையை ரசித்து அனுபவிப்பவர். அழகிய ஆடை களில் அவர் தோற்றம் தருபவர். எந்த உடைகளிலும் அவர் அழகாகத் தெரிவார். கார் ஓடுவது அவருக்குப் பிரியமான ஒன்று. நாய்கள் அவரது செல்லப்பிராணிகள். நேசத்தோடு எல்லோருடனும் அவர் ஒட்டிக்கொண்டு விடுவார்.

புற்றுநோயிலிருந்து மீண்டு உற்சாகத்துடன் இயங்கிய சிங் கப்பெண் கலா, இரண்டாம் முறை அந்த நோய் தாக்கி யபோது, தோற்க நேர்ந்தது.

அவருடைய பள்ளியில் நிதி மேலாளராக இருந்த ஜுட்டோ என்ற ஜேர்மனியப் பெண்மணி, புற்று நோய்க்காளாகி, அண்மையில் மறைந்தபோது அவருக்கான அஞ்சலிக் குறிப்பை கலா முகநூலில் எழுதியபோது, 'வலிகளற்ற உலகில் அமைதியாகத் தூங்குங்கள்' என்று எழுதியி ருந்தார். கலா காலனின் கைகளில் வீழ்ந்தபோது அவரது மகன் சாய் கூறினார், 'அம்மா, வலிகள் இல்லாமல் இப்போது அமைதியாகத் தூங்குவார்' என்று.

ஆம். சகோதரி, வலிகளற்ற உலகில் அமைதியாகத் தூங் குங்கள்!



nithiyananthan.m@thaiveedu.com



பேரறிஞர்

# கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸின்

## சமூகவியலும் தற்கால இயங்குநிலையும்

இக்பால் அலி



### அறிமுகம்:

இலங்கையில் இஸ்லாமிய சமூகவியல், கல்வியியல் அரசியல் வளர்ச்சியில் ஏ.எம்.ஏ. அஸீஸுக்கு ஒரு தனியான இடமுண்டு. இன்னும் அவருடைய சிந்தனைகள் மற்றும் கருத்துகள் பொது வெளிகளில் ஓயாமல் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. அதுவும், 20 நூற்றாண்டு காலத்தில் முஸ்லிம்களது கல்வி மறுமலர்ச்சிக்காக அஸீஸ் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது எனலாம். 1935-களில் முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கி யிருந்தனர். இதனால், முஸ்லிம்களின் கல்விக்காக உழைத்தார். தம் சமூகம் சார்ந்த விடயங்களில் காணப்பட்ட சிக்கல்க ளினையும் அவற்றினால் அடைந்த வலிகளினையும் அவர்கள் எதிர்நோக்கிய புதிய பண்பாட்டு மாறுதல்களையும் தனது எழுத்தின் மூலம் வெளியே கொண்டுவந்து பேச முனைந்தார். அவருடைய செயற்பாடுகள், சிந்தனைகள் இஸ்லாமிய பண் பாட்டின் மையங்களில் இருந்து எழுந்தவை. அரச நிர்வாகம், கல்வி, அரசியல், இஸ்லாமிய பண்பாட்டியல் என அஸீஸ் சமூகத்தின்பாற் பற்றுறுதி கொண்டு ஆற்றிய பணிகள் அளப்பெரியன.

அஸீஸ் ஒரு பன்முக ஆளுமை மிக்கவர். இவர் வாழ்ந்த காலத்தில் இவரெழுதி எட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. இந்த எட்டு நூல்களுள் நான்கு பிரயாண அனுபவங்கள் பற்றியவை. ஏனைய நான்கு நூல்களும் அவர் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்புக்கள்.

இலங்கையில் இஸ்லாம் (அரச சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்), மிஸ்றின் வசியம் (1967), The West Re-appraised (1964), மொழிபெயர்ப்புக் கலை (1965), கிழக்காபிரிக்க காட்சிகள் (1967), 'தமிழ் யாத்திரை' (1968), ஆபிரிக்க அனுபவங்கள் (1969), அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் முதலான நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்வகையில் அஸீஸின் ஆளுமைகளை வெளிப் படுத்தும் நோக்கில் ஏ. நஹியா எழுதிய அஸீஸும் தமிழும் (1997) என்ற நூலும் முக்கியமானது. இந்த நூல்களில் பொதிந்துள்ள எண்ணக்கருக்களும் சிந்தனைகளும் இலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்வியலோடும் பண்பாட் டோடும் இரண்டறக் கலந்தவை. எதிர் காலச் சந்ததியினர் வாழ்வாதார நெருக் கடிகளையும், இனவாதச் சூழலால் இளைஞர்கள் பல்வேறு சவால்க ளையும் எதிர்கொள்ளும் இக்காலகட் டத்தில், அவர்கள் தலைகுனியாமல் நிமிர்ந்து நிற்பதற்குத் தேவையான வழி காட்டல்களை இவை வழங்குகின்றன.

ஒரு பண்பாட்டுப் பாதுகாவலராக அஸீஸ் அவர்கள் மறைந்த பின்னரும் இச்சிந்தனைகளின் மூலம் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதற்கு இந்நூல்களே சான்றாகும்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் இலங்கை முஸ்லிம்களின் மனோநிலையை உருவாக்கியவர்களில் ஒருவர். சித்திலெப்பைக்குப் பின்பு முஸ்லிம் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தியவர். மரபுடன் நவீனத்துவத்தையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளை மேற் கொண்டவர். முஸ்லிம் சமூகம் எழுச்சி பெற நவீன கல்வி முறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து முஸ்லிம் சமூகம், அரசியல் பொருளாதாரம் கல்வியின் பால் ஈர்ப்பினைக் கொள்வதற்கு அஸீஸ் தான் வாழ்ந்த கால கட்டத்தில் 39 வருடங்களினைக் கல்வி, சமூகம், இலக்கியம், அரசியல் பணிகளுக்காக முழுமையாக அர்ப்பணித்தவர். கொழும்பு ஸாஹிறாவின் அதிபராக 13 வருடங்கள் கல்விச் சேவையாற்றினார். 13 வருடங்கள் பொதுச் சேவையிலும் இலக்கியப் பணிகளிலும் சேவையாற்றினார். இன்னும் 13 வருடங்கள் அரச பணிகளிலும் சேவையாற்றினார். அரசியலில் சில காலம் அக்கறை கொண்டு மூதவை உறுப்பினராகவும் கடமை யாற்றினார். (1952-1963) அவருடைய 63 வருட வாழ்வில் 39 வருடங்களில் பல்வேறு தளங்களில் பணிகள் செய்து இந்நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர்.

“21-ஆம் நூற்றாண்டிலும் அஸீஸ் அவர்கள் விட்டுச்சென்ற சமய சீர்திருத்தக் கருத்துகள், நவீனத்து சிந்தனைகள், இயக்கப்பாடுகள் என்பன தனித்துவமான தன்மையுடன் இன்றும் இருக்கக் காண்கிறோம். அஸீஸ் அவர்களது சிந்தனைகளின் பேசுபொருளும், உத்திகளும் பன்முகத்தன்மை வாய்ந்தவை”

எச்.எம்.பி. முஹிதீன், ஏ.ஆர்.ஏ. நூர் அமீன், எஸ்.எச்.எம். ஜெமீல், எம்.எஸ். அனஸ், ஏ.எம். நஹியா, மரினா இஸ்மாயில், அலி அஸீஸ், பேராசிரியர் எம். சொர்ணராஜா, பேராசிரியர் ஏ.சி.எல். அமீர் அலி, பேராசிரியர் கார்த்திக்கேசு சிவத்தம்பி, சுசில் சிறிவர்தன, கலாநிதி மன்சூர் ஆலம், பேராசிரியர் ஹஸைன்மியா போன்ற அறிஞர் பெருமகான்கள் பேரறிஞர் அஸீஸ் அவர்களின் இஸ்லாமிய அறிவியல் உலகின் விரிவையும், இஸ்லாமிய தமிழ் இலக்கிய முகங்களையும் எடுத்தாய்வு செய்து நூல்களாக வெளிக்கொணர்ந்துள்ளார்கள். முஸ்லிம் சமூகத்தில் மாற்றத்தை உருவாக்க உயரிய பங்களிப்பினை நல்கி நவீன உலகின் இயங்கு நிலைக்கு முஸ்லிம் இளைஞர்களை கொண்டுவந்து பெரும் சாதனைகள் விளைவித்த நிகழ் நிலைப் புதுமையாளர்.

21-ஆம் நூற்றாண்டிலும் அஸீஸ் அவர்கள் விட்டுச்சென்ற சமய சீர்திருத்தக் கருத்துகள், நவீனத்து சிந்தனைகள், இயக்கப்பாடுகள் என்பன தனித்துவமான தன்மையுடன் இன்றும் இருக்கக் காண்கிறோம். அஸீஸ் அவர்களது சிந்தனைகளின் பேசுபொருளும், உத்திகளும் பன்முகத் தன்மை வாய்ந்தவை.

அவர் அரச நிர்வாக ரீதியாக கற்றுக் கொண்டதையும் வெளிநாடுகளுக்கு சென்று அங்கு தான் கண்ட சமூக அனுபவங்களையுமே நூல்களாக வடித்தார். தான் அதிபராகக் கடமையாற்றிய ஸாஹிறாக் கல்லூரியை இலங்கையில் தலைசிறந்த கல்லூரியாக மாற்றுவதில் அதிக அக்கறை காட்டினார். இக்காலப்பகுதியில் பேருவளை ஜமிய்யா நளீமிய்யாவின் வழிகாட்டியாகவும் விளங்கினார். அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கத்தின் தந்தையாகவும் முஸ்லிம் கல்வி சகாய நிதியத்தின் தாபகராகவும் இருந்து முஸ்லிம் கல்வி, மற்றும் சமூக எழுச்சியில் மாற்றங்களையும் கொண்டு வந்தார். சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளிலும் புதிய வரலாற்றைக் கட்டமைத்துள்ளார். பிரதானமாகப் பார்த்தால் இலங்கையில் சமகாலத்தில் ஏற்பட்ட நெருக் கடியான நிலையில் இளைஞர்களுக்கான பாதுகாப்பு பண்பாட்டுப் பயிற்சியினை இவர் தோற்றுவித்த அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கத்தினரே வழங்கினர்.

குறிப்பாக, இளைஞர்கள் நெருக்கடியான காலகட்டத்தில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு பயந்து வீட்டின் மூலை முடுக்குகளுக்குள் முடங்கிக் கிடந்தார்கள். இந்த இளைஞர்களை ஒருங்கிணைத்து, பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் அனுசரணையுடன், உள வள அதிகாரிகளையும் சட்ட ஆலோசகர்களையும் வளவாளர்களாகக் கொண்டு, குறித்த காலத்தில் செயலமர்வுகள் நடத்தி, சோர்ந்து போன மனங்களுக்கு தைரியத்தை ஊட்டி, ஆற்றுப்படுத்தல் பணிகளில் இந்த வாலிப இயக்கத்தினரே ஈடுபட்டனர். இப்படி முக்கியமான நிகழ்வுகளும் நன்மைகளும் அஸீஸின் நாமத்துக்குப் புகழ் சூட்டக் கூடியதாக இருக்கின்றன.

### வாழ்வும் பணியும்:

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி முஹம்மது அபூபக்கர். சுல்தான் முகைதீன் நாச்சியா தம்பதிகளுக்கு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை என்ற இடத்தில் ஏ.எம்.ஏ. அஸீஸ் 1911-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4-ஆம் திகதி பிறந்தார். தந்தை முகம்மது அபூபக்கர் புகழ்பெற்ற சட்டத்தரணி. யாழ்ப்பாண மாவட்டக் காதி நீதவானாகவும் கடமை யாற்றினார். பல வருடங்கள் யாழ்ப்பாண நகர சபையின் உறுப்பினராய் இருந்ததோடு, 1941-இல் அதன் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டவர். 1946-ஆம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். இவ்வியக்கத்தின் தலைவராக கொழும்புக்கு வெளியே ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

அபூபக்கர் மற்றும் நாச்சியா தம்பதிகளுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. மூத்தவர் அஸீஸ், இரண்டாவது தாஹா. தாஹா எனும் குழந்தை பிறந்து, சில நாட்களுள் தாயார் சுல்தான் முகைதீன் நாச்சியார் காலமாகிவிட்டார். அப்பொழுது அஸீஸுக்கு வயது ஏழு. தாஹாவும் இளம் வயதிலேயே இறந்துவிட்டார். தன் மனைவியாரின்

மரணத்தை அடுத்து தந்தை அபூபக்கர் இரண்டாந் தாரமாக ஆயிஷா உம்மா என்பவரை மணம் முடித்தார். இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஷரீபா, அபுல்ஹஸன், றஹீமா, அப்துல் ஸலாம், முகம்மது அஷ்ரப், முஹம்து தாஹா, பௌஸியா என்போர் ஆவார். அபுல் ஹஸனை அடுத்துப் பிறந்த ஒரு குழந்தை இளம் வயதிலேயே காலமாகிவிட்டது. ஷரீபா யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வராகக் கடமையாற்றிய சுல்தான் அவர்களின் மனைவியாவார். அபுல்ஹஸன் சட்டத்தரணியாக இருந்தவர். அஸீஸின் கூடப் பிறந்த காலஞ் சென்ற சகோதரர் தாஹாவின் நினைவாகவே பின்னர் பிறந்த குழந்தைக்குத் தாஹா எனத் தந்தை அபூபக்கர் பெயரிட்டார். தனது தாயாரின் பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்து வந்த அஸீஸ் மிக ஒழுக்கமுடையராக வளர்க்கப்பட்டார். ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் அல்லாபிச்சை பள்ளியில் பயின்ற இவர் தன் இடைநிலைக் கல்வியை, யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயின்றார். 1929-இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்று இளங்கலைப் பட்டம் பெற்றார். 1933-ஆம் ஆண்டில், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் இளமாணிப் பட்டத்தையும் பெற்றார். 1933-இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தன் பட்டப் படிப்பினைப் பயின்றார். பல்வேறுபட்ட அரச உயர் பதவிகளையும் சமூகப் பணிகளையும் மேற்கொண்டவர். 1973-இல் அவர் மரணம் எய்தினார்.



**சமூகவியல்:**

Y.M.M.A இந்நாட்டிலுள்ள முஸ்லிம் அமைப்புக்களில் மிகப் பழைமை வாய்ந்த, முதன்மையான இயக்கம். 1917-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. அந்த இயக்கம் நாடளாவிய ரீதியில் 17 இடங்களில் அமைந்திருந்தன. 1947-இல் எகிப்துக்குச் சென்ற அஸீஸ் இளைஞர் நிறுவனங்களைப் பற்றி கற்றுக்கொண்டதன் விளைவாக 1950-களில் வை.எம்.எம்.ஏ.-யினரை ஒன்றுசேர்த்து அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை என்ற இயக்கத்தை ஸ்தாபித்தார். 1968-இல் பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இயக்கமிது. அன்று முதல் இன்றுவரையுள்ள இவ்வியக்கத்தின் செயற்பாட்டு வடிவத்தையும் சவால்களையும் அதேபோல் சமூகம் பெற்றுக் கொண்ட நன்மைகளையும் குறிப்பிட்டு ஆய்வு செய்வோமாயின் அஸீஸின் தனித்துவமான அடையாளத்தையும் காணலாம். அத்துடன், இவ்வியக்கம் கடந்த 75 வருட காலமாக ஆற்றி வந்த மனிதாபிமானப் பணிகளையும் நியாயப் பிரச்சாரங்களையும் தெளிவுற அறிந்து கொள்ளலாம்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் 1944-ல் 'இலங்கை முஸ்லிம் யூனியன்' என்ற அமைப்பை நிறுவி, அதன் உருவாக்கத் தலைவராக ஆற்றிய உரையில், 'சோனகர்' என்ற பதம் இனவாதத்தைத் தோற்றுவிக்கின்றது என்பதால், மத அடிப்படையிலான 'முஸ்லிம்' என்ற பெயர் உபயோகிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். தற்போது இந்தப் பதம் சில அரச ஆவணங்களில் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது. 1952-இல் இலங்கை செனட் சபை உறுப்பினராக இருந்தபோது நிகழ்த்திய பேருரைகள் புகழ் பெற்றவை. பிரபல நிர்வாகியும், கல்விமானுமாகிய சுசில் சிறிவர்தன, அஸீஸ் பற்றிய தன்னுடைய ஆக்கம் ஒன்றில், அஸீஸின் கருத்துகளும், செயல்களும் நம்முடைய தேசம், பல்லின, பல்மத பல்மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற நாடாகக் கட்டி எழுப்பப்பட வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருந்தமையால், அஸீஸ் ஒரு 'தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற திலகம்' எனச் சரியா

> "அஸீஸின் கருத்துகளும், செயல்களும் நம்முடைய தேசம், பல்லின, பல்மத பல்மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற நாடாகக் கட்டி எழுப்பப்பட வேண்டு மென்ற நோக்கத்தைக் கொண்டிருந்தமையால், அஸீஸ் ஒரு 'தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற திலகம்"

கவே குறிப்பிட்டுள்ளார். சமூகங்களின் ஒன்றிணைப்பை வளர்ப்பதற்கு ஏனைய சமூகத் தலைவர்கள், அறிவாளிகள், தொழில் வல்லுநர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு அவருக்கு அநேக சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதை சரியாகவே பயன்படுத்திக்கொண்டார்.

பின்தங்கி வாழ்ந்த முஸ்லிம் சமூகம் எழுச்சி பெற்று முன்செல்வதற்கும், சமூகத்தில் முன்நகர்வுகளை அடைவதற்கும் ஒரே வழிமுறை நவீன கல்வி முறைமைகளை மேற்கொள்ளல் என்ற எண்ணக்கருவைச் செயற்படுத்துவதற்குத் தீவிரமாகச் சிந்தித்தார். இதைச் செயற்படுத்திய முதற்படியாக 1942-இல் தாம் கல்முனையில் உதவி அரசாங்க அதிபராகச் சேவையாற்றியபோது, தோற்றுவிக்கப்பட்ட கல்முனை முஸ்லிம் கல்விச்சபை, 1945-இல் இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியம் என்ற பெயரில் பரிமளித்தது. இந்நிதியம் வசதி குன்றிய ஆயிரக் கணக்கிலான முஸ்லிம் மாணவர்கள், தங்களுடைய உயர் கல்வியைத் தொடர நிதி உதவிகள் செய்ததுடன், இன்றும் இப்பணி தொடரப்பட்டு வருகின்றது.

வை.எம்.எம்.ஏ. பேரவையின் முதலாவது தலைவராக ஏ.எம்.ஏ. அஸீஸ் தெரிவானார். 1950/51, 1951/52, 1952/53-களில் அதன் தலைவராகவும் மரண பரியந்தயம் வரை அதன் காப்பாளராகவும் பணி செய்தார். முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டியாகவும், இளைஞர் தலைமைத்துவத்தின் செயற்பாட்டு வடிவமைப்பாளராகவும் அஸீஸ் விளங்கினார். 1956 பெப்பிரவரியில் கொழும்பு, தெமட்டகொட வீதியில், அதன் தலைமைக் காரியாலயம் அமையும் வரை பாண்ஸ் பிளேஸில் அமைந்துள்ள அஸீஸின் இல்லமே வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைமைக் காரியாலயமாக விளங்கியது.

'அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை ஒரு மத சார்ந்த அமைப்பாக இருந்த போதும், ஏனைய மதத்தவர்களும் பொதுவான மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகின்றனர். சமூகப் பணியில் பகைமை உணர்வு துளியளவும் தென்படாத அமைப்பாக இவ்வமைப்பு காணப்படுவதோடு, இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் ஏற்படுத்தி வருகின்றது' என்று இக்பால் அலி எழுதிய நூலுக்கு ஆசியுரை வழங்கிய தினகரன் பிரதம ஆசிரியர் ரீ. செந்தில்வேலவர் குறிப்பிடுகிறன்றார்.

வை.எம்.எம்.ஏ பேரவை இனங்களுக்கிடையிலான தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்காக அளப்பரிய சேவையினை ஆற்றி வருவதுடன் சிவில் அமைப்புகளின் பங்களிப்புடன் தேசிய பாதுகாப்புக்கும் தன்னால் முடிந்த பணிகளை ஆற்றி வருகின்றது. இளைஞர் மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்காகப் பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்படுத்தி, போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கான உளவியல் ஆலோசனைகளை, நிபுணர்களைக் கொண்டும் வழங்குகின்றது.

அஸீஸின் சிந்தனையும் கருத்துகளும், அஸீஸுக்கு பின்பு வந்த வை.எம்.எம்.ஏ. பேரவையின் புதிய தலைமைத்துவங்களுக்குத் தெளிவான பார்வையையும் பரந்துபட்ட அறிவையும் ஏற்படுத்தின. தற்போதைய தலைவர் அம்ஹர் ஷரீப் வரையிலும் அஸீஸின் நெறிப்படுத்தலும் வழிகாட்டுதலும் அவருக்குப் பின் வந்த அத்தனை தலைமைத்துவங்களுக்கும் கைகொடுத்துதவிற்று. குறிப்பாக அவருக்குப் பின் வந்த தலைமைத்துவங்கள் எல்லோரும் வை.எம்.எம்.ஏ. பேரவையினை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் சென்றுள்ளார்கள்.

இலங்கையின் பட்டி தொட்டி எல்லாம் அவர் புகழை மக்கள் உச்சரிப்பதற்கும் நாடளாவிய ரீதியில் அஸீஸின் புகழ் பரவிப் பேசப்படுவதற்கும், அஸீஸின் சிந்தனைகளும், கருத்துகளும் பரந்தளவில் சென்றடைவதற்கும் உண்மையிலேயே அஸீஸுக்கு ஒப்பற்ற புகழைத் தேடிக் கொள்வதற்கும், வை.எம்.எம்.ஏ. பேரவையே காரணம் எனலாம். இந்த வை.எம்.எம்.ஏ. பேரவை இயக்கம் சமூக நலன்நாடி எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுகின்றதோ அந்தளவுக்கு அவருடைய நாமமும் சிந்தனைகளும், வாழ்வும் பணியும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுதான் வரும் என்பதில் ஐயமில்லை.

அஸீஸுக்குப் பிறகு வந்த வை.எம்.எம்.ஏ. பேரவை இயக்கத்தின் ஒவ்வொரு தலைவர்களின் பணிகளிலும் அஸீஸின் பங்கு காணப்படுகிறது. கல்வி, சமூகவியல், அரசியல் என்ற வகையில், கடந்த காலங்களில் செயற்பட்ட ஒவ்வொரு தலைவர்களும் எழுச்சிமிக்க பங்களிப்பினை வழங்கி வந்துள்ளார்கள். இனி வரும் காலங்களிலும் அஸீஸின் சிந்தனைக் கோட்பாடு கருத்துகள் அழியா வண்ணம் காப்பதாகவும் காலத்துக்கு ஏற்ப புதுவகையிலான இளம் தலைமைத்துவங்களை உருவாக்குவதாகவும் இப் பேரவை தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பது எமது அவாகும்.

'நன்றே செய்வோம்: அதனை, அன்றே செய்வோம்' என்ற கூற்றிற்கிணங்க அஸீஸ் உருவாக்கிய வை.எம்.எம்.ஏ. பேரவை, ஏ.எம்.ஏ. அஸீஸ் பவுண்டேசன், முஸ்லிம் சகாய நிதியம் மற்றும் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் முதலானவைகளுக்கூடாக தற்காலத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள், இயங்குநிலைகள் யாவும் அஸீஸின் சிந்தனைகள் மேலும் உயிர்பெறுவதற்கு வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.



Iqbal.ali@thaiveedu.com



tg.theeban@gmail.com

# எட்டுத் திக்கிலிருந்து
# ஏழு கதைகள்

**– சு. வேணுகோபால் –**

யதார்த்த தளத்தில் நின்றுகொண்டே புனையப்பட்ட இரண்டு கதைகள் வாழ்வை விசாரணைக்கு உட்படுத்தும் விதம் பல தெளிவுகளைத் தருகின்றன. நதீன் கோ(ர்)டிமரின் 'தந்தையின் கடிதம்' காஃப்காவின் (தந்தை மீதான) குற்றச் சாட்டுகளுக்கு மிகப்பரந்த தளத்தில் பிரச்சினைகளை விளக்கிக் காட்டுகிறார். 'மகனைப் புரிந்து கொள்ளாத ஹெர்மன் காஃப்கா' என்பதை கடிதங்களாகவும், சிறுகதை களாகவும் எழுதித் தன் வெறுப்பைத் தீர்த்துக் கொண்டிருப் பதைப் படித்திருக்கிறோம். பிரான்ஸிஸ் காஃப்கா பார்வை யில் வெறுக்கப்படவேண்டிய தந்தை என்பதை வாசகன் உடனே தெரிந்துகொள்வான்.

நதின் கோர்டிமர் மூன்று குற்றச்சாட்டுகளை மறுக்கிற விதம் மிக முக்கியமான புள்ளிகள். தந்தையின் படுக்கையறையை வெறுக்கிற காஃப்காவிற்கு 'காமத்தில் நாங்கள் ஆட்பட்டி ருந்த சமயத்தில் அந்த ஆடைகளைக் கண்டு நீ தூற்றி எழுதி பெரிய எழுத்தாளனாகக் காட்டுகிறாய். அந்தப் படுக் கையறையில்தான் நானும் உன் அம்மாவும் கூடி உன்னை உண்டாக்கினோம். இதை நீ கேவலமாக எழுதலாமா? உண்மையில் காமம் என்பது கேவலமா?' என்று தந்தை முன் வைக்கும் கேள்வியில் தனித்த பதிலும் இருக்கிறது. இரண் டாவது இடம் 'உன் புத்தகங்களை நான் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை என்கிறாய். என் மேஜையில் திறக்கப் படாமலே இருந்தது என்கிறாய். நான் சில தாள்கள்கள் படித்தேன். உண்மையில் உன் எழுத்து எனக்குப்பிடிக்க வில்லை. குறிப்பாக நீ எழுதுவது விளங்கவில்லை. புரியாத

ஒன்றுக்கு எதற்கு இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறான் என்றே தோன்றியது. உன் எழுத்தைப் படிக்கவில்லை என்பதற்காக வருத்தப்படுகிறாய். நான் அதிலிருந்து எதையும் புரிந்து கொள்ள முடியாது என்பதால் படிக்கவில்லை. என் மனோ உலகத்தை வசீகரிக்கவில்லை உன் எழுத்து' என்ற நிர்தாட்சண்யமாக முன்வைக்கும் விமர்சனம் - ஒரு மனிதரின் எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. காஃப்கா என்ன குற்றச்சாட்டை வைத்தாலும் தந்தையின் இந்தப் புரிதல் விவகாரத்திற்கு பதில் அளித்துவிட முடியாது. மூன்றாவது 'உன் கதையில் உன் சார்பாகப் பேசி - எந்த இடத்திலும் என் சார்பாகப் பேசாமல் உனக்கு உகந்த தீர்ப்புகளை வழங்கிக் கொண்டு வந்துள்ளாய் என்பதை மறந்துவிடாதே' என்கிறார்.

மகன் என்றால் என்ன, பேரன் பேத்தி என்றால் என்ன எதிராளியின் எண்ணங்களுக்கு வாய்ப்பளித்திருக்கவேண்டும் என்ற அறத்தைத் தந்தை வாயிலாக நாதின் முன்வைக்கிறார். மிகச்சிறந்த கதைதான். பல பல இடங்களில் பிரான்ஸ் காஃப்கா வைத்த குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் தந்தையின் பார்வையில் பதில்களை முன்வைக்கிறார். தந்தை மற்றும் மகனுக்கான நேரடி யுத்தமாக கதை மாறிப்போனது. தந்தை மற்றும் மகன் வாழ்வில் நடக்காத புதிய சம்பவங்களை இக்கதையில் நதின் புனைந்திருக்கலாம். அப்படிப் புனைந்திருந்தால் படைப்பு மிகப்பெரிய சாகசத்தை நிகழ்த்தியிருக்கும். அந்த வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டார்.

நீச்சல் குளத்தில் சிறுவன் பிரான்ஸ் காஃப்காவோடு கழித்த நாளை நினைவுபடுத்துவது உன்னதமான இடம். இருவருக்கும் அது மறக்கமுடியாத இனிய நிகழ்வு. அதற்குகந்த இனிய நிகழ்வுகளை இருவரும் கையாண்டிருக்க முடியும். ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளவில்லை. புரிந்துகொள்வதை இருவரும் தவறவிட்டுவிட்டோம் என்ற தொனி எழுதப்படாமலே கதை மேல் மிதக்கிறது.

ஆல்பர்ட் காயுவின் 'மதத் துரோகி' மிக முக்கியமான கதை. அதை இறுதியில் பார்க்கலாம். அதற்கு முன்பாகச் சில கதைகள்: கேப்ரியேல் கார்சியா மார்க்வெய்ஸின் 'நான் தொலைபேசியை உபயோகிக்க மட்டுமே வந்தேன்' கதை யதார்த்தத் தளத்தில் எழுதப்பட்ட கதை. எந்தச் சிக்கலும் இல்லாமல் வாசிக்க முடிகிறது.

மந்திரவாதி சாட்டர்சீனா மனைவி மரியா. சாட்டர்னோ மேஜிக் நிகழ்ச்சி நிகழ்த்துபவன். அவனுடைய கலைகளுக்கு உதவி புரிபவள் மரியா. ஒருநாள் தன் குடும்ப நபர்களைப் பார்க்கச் சென்று திரும்பிய மரியாவின் கார் இடைவெளியில் ரிப்பேர் ஆகிவிடுகிறது. அன்று மாலை கணவன் நடத்தும் மேஜிக் நிகழ்ச்சிக்கு எப்படியும் போய்விடவேண்டும் என்று துடிக்கிறாள். யாரும் உதவ முன்வராத அந்த இடைக்காட்டுப் பகுதியில் லாரிக்காரன் நிறுத்தி உதவுகிறான். அங்கு மனநிலை பாதிக்கப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். மனநலக் காப்பகத்தில் மாட்டிக் கொள்கிறாள். 'தொலைபேசியை உபயோகிக்க மட்டுமே வந்தேன்' என்று திரும்பத் திரும்பச் சொல்கிறாள். இது முற்றிப்போன நோய் என உள்ளே தள்ளிவிடுகிறார்கள். வராதுபோன மரியாவை சாட்டர்னோ தவறாக எண்ணத் தொடங்குகிறான். அவளுடைய பழைய அந்தரங்க வாழ்க்கையையும் புதிதாக அந்த இளைஞனோடு ஓடியிருக்கலாமா? எனத் தனிமையில் சாடத் தொடங்குகிறான். இறுதியில் மனநோய் விடுதியில் சந்திக்கிறான். டாக்டரின் அறிவுரைப்படி அவள் பயங்கர நோய்க்காரியாகிவிட்டாள் என வெளியேறிவிடுகிறான் இது கதை.

மனநல மருத்துவர்கள் எல்லாவற்றையும் நோயாகப் பார்க்கும் மனநோய்காரர்கள் என்று திருப்பி அடிக்கும் கதை இது. இந்தக் கதைக்குள் வீடு வந்து சேராத மனைவியை ஒரு கணவன் எப்படியெல்லாம் அழுக்குகளைக் கட்டிஎழுப்பிக் காட்டுவான் என்ற ஆண் உலகத்தையும் உள் இழுத்துக் கொண்டு விடுகிறார். இந்த உலகம் சகஜமற்ற உலகமாக மாறிவிட்டது என்பதையும் பகிர்ந்துகொள்ளுதல் என்பதனைத் தூக்கி எறிந்துவிட்ட மனிதர்களாக மாறிவருகிறோம் என்பதையும் நம்முன் வைக்கிறது.

எர்னஸ்ட் ஹெமிங்வேயின் 'மழையில் பூனை' குறித்து விமர்சகர்கள் ஆ.ஓ. என்று தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்வதாக திலகவதி குறிப்புரையில் சொல்கிறார். பூனை ஒரு குறியீடு என்பதாக...! என் வாசிப்பில் பூனையை அவள் திரும்பத் திரும்ப விரும்புவதாக வருகிறது. பூனையைப் போன்ற ஒரு மிருதுவான வாழ்க்கைக்காக அவள் ஏங்குவதாகத்தான் தெரிகிறது. நீண்ட கூந்தல் வளர்க்க ஆசைப்படும் அவளுக்கு கணவன் ஜார்ஜ் 'கிராப் வைத்திருப்பதுதான் அழகாக இருக்கிறது' என கட்டுத்திட்டம் போடுகிறான். அவளுடைய ஏக்கங்களைப் புரிந்துகொள்ளும் கணவனாக அரவணைக்கும் கணவனாக இல்லை என்பதற்குத்தான் மழையில் பூனை என ஹெமிங்வே தலைப்பு வைத்திருக்கக் கூடும். ஏனெனில் அந்த ஹோட்டல் முதலாளி இவளுக்காக அந்தப் பூனையைப் பிடித்துப் பணிப்பெண்ணிடம் கொடுத்து அனுப்புவதென்பது விருப்பத்தை நிறைவேற்றுவதில்தான் வாழ்வின் இனிமை துலங்கும் என்ற குறிப்பை வெளிப்படுத்துவதற்காகத்தான்.

ஐஸக் பாஷெவில் ஸிங்கரின் 'முட்டாள் கிம்பெல்' ஒரு ஏமாளியைப் பற்றிய கதை. பல ஆண்களோடு தொடர்புடைய எல்காவை நண்பர்கள் ஏமாற்றிக் கல்யாணம் செய்து வைக்கிறார்கள். நான்கு மாதத்திலேயே ஒரு ஆண் குழந்தை பிறந்துவிடுகிறது. அவள் படுக்கையில் ஒரு முரடனை ஒரு சமயமும் ரொட்டிக்கடை வாலிபனை ஒரு சமயமும் பார்த்து விடுகிறான். மதகுருவிடம் விவாகரத்திற்கு விண்ணப்பித்தும் திரும்பப் பெறுவதும் நடக்கிறது. அவள் தன் குற்றங்களை சாவின் சந்நிதியில் சொல்லிவிடுகிறாள். ஜெயகாந்தன் இதிலிருந்து 'யாருக்காக அழுதான்' கதையை உண்டாக்கி இருக்கலாம்.

முட்டாள் கிம்பெல் உண்மையில் முட்டாளாக இல்லை. தெளிவாகத்தான் இருக்கிறாள். முட்டாள்தனத்திற்குரிய வெகுளித்தனமோ மந்தபுத்தியோ கிம்பெலிடம் கிடையாது. அப்படியிருக்க இவை எல்லாவற்றையும் சகித்துக்கொள்பவனாக ஸிங்கரை உருவாக்கியிருக்கிறார். எல்காவை ஒரு ஏமாற்றுக்காரிக்குரிய வாய்ஜாலக்காரியாகப் படைத்திருப்பது எப்படி நம்பும்படியாக இருக்கிறதோ அப்படி கிம்பெல் விபரங்கெட்ட

வெகுளியாகப் படைக்கப்படவில்லை. ஸிங்கர் தன் மன வண்ணத்தால் கிம்பெலை உன்னத நாயகனாக ஆக்கியிருக்கிறார். எல்லாத் தவறுகளையும் மன்னிக்கக்கூடியவனாக உருவாக்குவதுதான் ஸிங்கரின் வேலை. 'உன்னை ஏமாற்றும் உலகத்தை நீ திரும்ப ஏமாற்று' என கனவில் சொன்ன கெட்ட ஆவிப்படி நுரைத்த ரொட்டி மாவில் மூத்திரத்தைப் பெய்வதாக ஓர் இடம் வருகிறது. இந்த வன்மம் எல்காவிடம் இவனுக்கு எழவில்லை. சண்டை சச்சரவில்லாமல் கிம்பெலைத் தள்ளி நிறுத்திவைப்பது என்பது உன்னதப் பாத்திரமாக ஆக்கிக்காட்டத்தானே தவிர வேறில்லை.

கதையின் பிற்பகுதி உண்மையில் படைப்பின் - படைப்பாளியின் ஆளுமையைக் காட்டுகிறது. கனவில் எல்கா 'நான் செய்த தவறுகளுக்கெல்லாம் இங்கு கிடந்து அவதிப்படுவதை நீ அறிவாயா? நீ தவறு செய்யத் துணியலாமா?' என்று கேட்கும் இடங்கள். ஆவி, அசரீரி, கனவு என மாறிமாறி வரும் சம்பாசணைகளில்தான் கதை உயிர்பெறுகிறது (கடைசி 5, 6 பக்கங்களில்). முதல் 25 பக்கங்கள் பாத்திர உருவாக்கம்தான்.

அலெக்சாண்டர் சோல்லெனிட்சின் ரஷ்யாவை விட்டு நாடு கடத்தப்பட்டவர். ரஷ்யப் புரட்சியை வரவேற்றவர். ஆனால் ஸ்டாலினின் எதேச்சதிகாரத்தைக் கடுமையாக விமர்சித்ததால் நாடு கடத்தப்பட்டவர். அவர் எழுதிய 'மேட்ரியோனாவின் வீடு' என்ற கதை யதார்த்த தளத்தில் எழுதப்பட்டுள்ளது. 80 பக்கம் உள்ள கதை. பொதுவுடைமை என்ற கொள்கை ரஷ்யாவில் எப்படி நீர்த்துப்போனது என்பதை முதல் 40 பக்கங்களில் கதையோட்டத்தில், கருத்துக்கு அழுத்தம் தராமலே எழுதிச் சென்றிருக்கிறார். கதை எடுத்துக் கொண்ட காலம், வடிவம் அப்படி.

மேட்ரியோனா என்ற ஏழைக்குடியான பெண் வாழ்வுள் புகுந்த பொதுவுடைமைப் பரவல் / பொதுவுடைமை சீர்திருத்த அமைப்புக்குள் இருக்கும் ஆட்சியாளர்கள் எப்படிப் பொது ஜனங்களின் வாழ்வைச் சுரண்டுகின்றனர் என்பதை மேட்ரியோனாவின் வாழ்க்கையிலிருந்து காட்டுகிறார்.

கூட்டுப்பண்ணையின் நிர்வாகக் குழறுபடிகளால் மேட்ரியோனாவின் வாழ்வு எப்படியெல்லாம் சுரண்டப்படுகிறது? வயதாகிப்போனவர்களுக்கு உரிய பென்சன் தொகை கொடுக்கப்படாமல் துரத்தப்படுகின்றனர். கணவர் இல்லை என்பதையும் கூட்டுப்பண்ணையில் குறிப்பிட்ட காலத்தை அவர் கணவன் பூர்த்தி செய்யவில்லை என்றும் நிராகரிக்கப்படுகிறாள். வயதானவர்களுக்குப் பண்ணையிலிருந்து விடுதலை உண்டு. ஆனால் பண்ணை ஊழியர்களின் வேலை நிறுத்த காலங்களில் பழைய கிழடிகளை மிரட்டி வேலைக்கு அழைத்துச் சென்று கூலி தராமல் அனுப்பும் கொடுமையில் மேட்ரியோனாவும் சிக்கிக்கொள்கிறாள். இரண்டாம் உலகப் போரில் கலந்துகொள்ளச் சென்ற கணவன் திரும்பாதது கண்டு மேட்ரியோனா விதவையாகிறாள். ராணுவப் பென்சனுக்காக 30 ஆண்டுகள் அலைந்து கிட்டாமலே போய்கிறது. ஆனாலும் மேட்ரியோனா முயன்றுகொண்டே இருக்கிறாள். குடியிருப்பதற்கான பகுதிகளை ஒதுக்குவதில் கூட்டுப் பண்ணை நிர்வாகி தனக்குத் தேவையானவர்களுக்கு அதிக இடம் ஒதுக்குவதும், வேண்டப்படாதவர்களுக்குக் குறைந்த இடம் ஒதுக்குவதுமான தில்லுமுல்லில் மேட்ரியோனாவும் பலியாகிறாள். காடுகளை அழிப்பது, அரசுக்குத் தெரியாமல் நிலங்களை விற்பது என அதிகாரிகளின் ஆணவம் தலைவிரித்து ஆடுகிறது. ரஷ்ய சோசலிச உலகத்தை புத்தகத்தின் வாயிலாகப் படித்திருந்ததற்கும் சோல்லெனிட்சின் இந்தக் கதை வழி பார்ப்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது.

அரசுதான் அப்படியென்றால் கணவனின் அண்ணன் (மேட்ரியோனாவின் காதலன்) வளர்ப்புப் பிள்ளை, மருமகள், மேட்ரியோனாவின் சகோதரிகளின் காதலனின் மகள்கள், மகன்கள், மருமகள் எனப் பெரும்படையே அந்தச் சிறிய வீட்டை தனக்குத்தான் என முற்றுகையிடுகின்றன. கெஸ்ட் ஹவுஸ மரச்சாமான்கள் பிரிக்கப்படுகின்றன. அவள் வளர்த்த ஆட்டை ஒருத்தி பெற்றுக் கொள்கிறாள். மிக அந்தரங்கத் தோழியாக இருந்தவள்கூட அவளின் சால்வையைக் கேட்டுப் பெறுகிறாள். அவள் வாழ்ந்த குடிசையை ஒருத்தி எடுத்துக் கொள்கிறாள். மேட்ரியோனாவின் வீடு என்பதைப் பொதுவுடைமை தத்துவத்தின் வீடு எனக் கொள்ளலாமா? அப்படிக் கொண்டால் கதை அபாரமாகிவிடும். ஆளாளுக்குப் பங்குபோட்டு குட்டிச்சுவராக்கிவிட்டுப் போய்விடுகின்றனர் சுரண்டல் ஏகமாக நடக்கிறது. மேட்ரியோனாவுக்குத் தெரிந்துதான் இருக்கிறது. கிழட்டுக் காதலன் முதற்கொண்டு தத்துப்பிள்ளைவரை சுரண்டுகிறார்கள் என்று ஆனால் அவள் இருப்பதையெல்லாம் ஏன் தாராளமாகக் கொடுக்கிறாள்? தனக்கு அன்பு செலுத்தும் கூட்டம் வேண்டும். சொந்த பந்தங்கள் வேண்டும். அதற்காகத்தான் ஓடி ஓடிச் செய்கிறாள். தனக்கொரு ஆதரவு வேண்டும் என்ற உட்கிடைக்கையும்தான்.

வீட்டுச் சாமான்களை ஏற்றிக்கொண்டு ட்ராக்டர் (இரண்டு தொடுக்கு) போனபின் கதவற்ற லெவல்கிராசிங் பகுதிக்கு இரவு ஏன் போனாள்? அது வாசகர்களின் ஊகங்களுக்கு ஆசிரியரால் விடப்பட்டிருக்கும் சவால். எனது பார்வையில் அவள் தற்கொலை செய்துகொள்ளப் போகவில்லை. விருந்தினர்கள் பாதுகாப்பாக சென்றுசேரவேண்டும் என்ற ஆசையால் போகிறாள். ஏதோ அவளுக்கு ஒரு உள்ளுணர்வு. லெவல்கிராசிங்கைக் கடத்திவிட்டு வரலாம் எனத் தோன்றியிருக்கிறது. ரயிலில் மாட்டிக்கொள்கின்றனர். ஒளியில்லாது பின் வந்த ரயிலில் மோதி நொறுங்குகிறது. ஒளி இல்லாது ரயிலை ஓட்டி வருவது என்பது அதிகாரிகளின் மெத்தனம். இதை மறைக்க அதிகாரிகள் மேட்ரியோனாவின் வீட்டைச் சோதனை இடுவது. (விருந்தினர்களில் ட்ரைவர் - மருமகன் குடித்துவிட்டு வந்திருக்கிறார்களா என மோப்பமிடுவது) ஒளியற்ற மிகப்பெரிய ரயில்தான் ரஷ்யாவுக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதற்குத்தான் அப்படி எழுதினாரா? இல்லைத்தான். அப்படியும் கற்பனை பண்ணலாம். கதையின் பின்பகுதி (40 பக்கம்) மேட்ரியான வாழ்வைச் சுற்றிச் சுற்றி நகர்கிறது. முன் பகுதியில் இருந்த புற உலகின் மீதான நுட்பம் பின்பகுதியில் இல்லாமல் போய்விட்டது. மேட்ரியோனா என்ற பெண்ணுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டார். முன் பகுதியில் நவீன யுகத்தின் புதிய புதிய வருகைக்குள் மேட்ரியோனா எப்போதும் போல் ஏழையாக, சுரண்டப்படுகிறவளாக, அழுத்தத்தைப் பெரிதுபடுத்தாமலே நகர்

வதாகப் பிரிக்கமுடியாத அம்சத்தோடு பதிவாகிறாள். பின் பகுதி என்பது கதை சொல்லலாக மாறிவிட்டது. ஜீ. நாகரா ஜனின் 'தீராக்குறை' கதை இதன் பின் பகுதியை அப்படியே பிட்டு வைப்பதாக இருக்கிறது. சுந்தரராமசாமி இக்கதையை மிக முக்கியமான கதையாகப் புகழ்ந்திருக்கிறார். 'மேட்ரியோ னாவின் வீடு' கதையை ஜி. நாகராஜன் படித்திருக்கமாட்டார் என்று சொல்வதற்கில்லை. இக்கதை 1950-களில் எழுதப்பட் டிருக்கிறது.

இலக்கியம் என்பது மிகப்பெரிய ஆவணம் என்பதற்கு இக்கதை ஒரு சான்று. அரசின் நலத்திட்டங்கள், சீர்திருத்தத் திட்டங்கள் என்பவை அரசியல்வாதிகளுக்கும், ஆட்சியாளர் களுக்குமே, குடியானவர்களுக்கானது அல்ல, என்ற நிர்தாட் சண்யமற்ற பதிவு முன்பகுதியில் இருக்கிறது. பொது வுடைமை என்ற வார்த்தைக்குள் இருக்கும் மகிமை. அதன் கொள்கையிலிருந்த இலட்சியக்கனவு பயன்பாட்டுத் தளத் தில் - யதார்த்தத்தில் உரியவர்களுக்கு இல்லாது போன சோகம் இக்கதைக்குள் ஒலிக்கிறது. இதை ரஷ்யாவின் ஆன்மா எனலாம். தூர தேசங்களிலிலிருந்து 1950-களிலான ரஷ்யாவைப் பார்த்துப் பெருமைப்பட்ட தலைமுறையினர் களுக்கு இக்கதை அதே காலகட்டத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தால் செயற்பாட்டுத் தளத்தில் வீழ்ந்துகிடக்கும் தத் துவத்தைப் புரிந்திருப்பர்.

ஆல்பர்ட் காம்யூவின் 'மதத்துரோகி' மிகச்செறிவான மொழி நடையைக் கொண்டிருக்கும் கதை. திலகவதி மிகப் பொறுமை யுடனே இக்காரியத்தை செய்திருப்பதை எந்த வாசகனும் உணர்வான். இக்கதையில் யார் மதத்துரோகி என்ற வாசகம் எழுதப்படாமலே கதையின் ஊடாக ஒரு நிழலைப்போல அசைகிறது. கறுப்பு இனத்தவர்கள் வாழும் பாலைவனப் பகுதியில் (அல்ஜீரியாவுக்கு கீழே) கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப இவனைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் ஃபாதர் திட்டமிட் டுத்தான் செய்தாரா? என்ற சந்தேகம் எழும். ஃபாதர் ஒரு மதத்துரோகி. அதாவது இவனை இதில் சிக்கவைத்துவிட்டு தான் சொகுசாக இருக்கலாம் என்ற எண்ணமுடையவராக அவரை அணுகுவதற்கும் இடம் உண்டு. இவன்தான் அந்தக் கறுப்பு இனத்தவர்களின் கர்ணகொடூரமான தீமையின் கடவுளைத் தன் கடவுளாக ஏற்பதால் மதத்துரோகி ஆகி றானா? என்றும் அணுகிப்பார்க்க இடம் உண்டு.

கறுப்பு இனத்தவர்களின் உரிமையைப் பறிக்க மதப்பிரச் சாரம் என்ற போர்வையில் நுழைந்து, வெள்ளையர்களின் ஆட்சி அதிகாரப் பீடத்தில் ஏற்றப்பட்டு கறுப்பு இனத்த வர்களை அடிமையாக்கும் சதி என்ற கோணத்தில் 'மதத்து ரோகியாக' அவர்களைப் பிளப்பதாகவும் பார்க்கலாம்.

தன்னை இம்சிக்கும் கூட்டத்தை விரும்பி ஏற்று அவர்களை கிறிஸ்துவில் சேர்த்துவிடத்தான் செல்கிறான். இம்சைகளின் கற்பனைகளைத் தன் மீது செலுத்திப்பார்த்து, இன்னும் இன்னும் செய்துபார்த்து - அவர்கள் வாயாலயே பாவங் களைத் தாங்கியவன் இவன் எனப் பாராட்டை வாங்கிவிட மனமுவந்து கற்பனை செய்கிறான். கதையில் அவன் கற் பனையாக நினைத்ததைவிட இம்சைகள் மிகக் கொடூரமான தாகவே வந்தடைகின்றன. சிறுகச்சிறுக அந்தத் தீமையின் கடவுள் மீது இருந்த வெறுப்பு அவனுள் அன்பாக மாறுகிறது. இருபதாம் நூற்றாண்டில் யேசு கிறித்துவுக்கு இடம் கிடை யாது. தீமையின் கடவுளுக்குத்தான் இடம் உண்டு. உலக மெங்கும் தீமைகளே கோலோச்சும் போது தீமைகளை வெல்ல அதைவிட தீமையான கருவிகளோடு மோதினால் தான் நிலைத்திருக்க முடியும் என்ற குரூரமான தர்சனம் இக் கதையில் வெளிப்படுகிறது. எனவே கறுப்பு இனத்தவர்கள் வெளிநாட்டவர்களை - மதப்பிரசங்கிகளை இம்சித்துத் துரத் துவது மிகச்சரியே! ஏனெனில் வெள்ளையர்கள் அன்பு என மிகத் தந்திரமாகப் போதித்துக் கறுப்பு இனத்தவர்களை அடிமையாக்கியே தீருவர். பின் கறுப்பு இனத்தவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க முடியாது. அன்பு வடிவான பிரசங் கிகளுக்கு இம்மாபெரும் திட்டம் இருந்துகொண்டே இருப்ப தான ஒரு கோணத்தை கதாபாத்திரம் காட்டுவதால், கிறிஸ் தவர்களின் பார்வையில் அவன் மதத் துரோகியாகக் கணிக் கப்படலாம் என கதையைப் பின்னியுள்ளார். இறுதியில் இவனுக்கு மாற்றாக மதப்பிரச்சாரத்திற்கு வரும் வெள்ளை யனை எதிர்பார்த்தும் காத்திருக்கிறான். அவனைச் சுட்டு வீழ்த்தி கறுப்பு இனத்தவர்களின் கடவுளுக்கு மூடுதிரை செய்யாதபடி இருக்கக் காத்திருக்கிறான்.

இவ்வளவு பார்வைகளுக்குப் பின் தப்பித்துவந்து காத்திருக் கும் இவனைக் கறுப்பு இனத்தவர்கள் கூட்டம் காணாது தேடி வரலாம் என பதட்டத்தோடு இருக்கிறான். ஒருபுறம் வெள்ளை மதபோதகன் வருவதாகவும் எதிர்ப்புறம் கறுப்பு இனத்தவர்களின் கூட்டம் வெறியோடு தேடி ஓடிவருவதா கவும் நெருக்கடி வருகிறது. அவனின் துப்பாக்கி சுடுகிறது. குண்டு பட்டு வீழ்ந்து கிடப்பவன் ஒரு கறுப்பு இனத்தவர். ஒருவேளை இவ்வளவு விரிந்த பார்வைகளுக்குப் பின் அவனுள்ளும் வெள்ளை ஆதிக்கம்தான் தூங்கிக்கொண்டி ருந்திருக்கிறது என இருண்ட உண்மை தெறிக்கிறது. கறுப்பு இனத்தவர்களின் கடவுளைத் தன் கடவுளாக ஏற்றுக்கொண்ட வெள்ளையன் அக்கடவுளுக்கு இழைக்கும் துரோகமாக இதைக் கொள்ளலாமா? இல்லை தன்னைத் தற்காத்துக் கொள்ள வேறு வழியில்லாமல் செய்கிறானா? என பல்வேறு கோணங்களில் கதையின் முடிவிலிருந்து விரிகிறது. தீமையைக் கொண்டாடுவதென்பது தீமையால் கும்மாள மிடும் உலகத்தைத் தீமையாலே வெல்ல முடியும் என்று மூர்க்கத்தனமாகக் கதை வற்புறுத்தினாலும் அடியிலே அன்பை நீங்கள் தொலைத்து விட்டீர்களே எனத் தவிக்கும் தவிப்பு கதையின் வரிகளுக்கு அப்பால் தொடர்ந்தபடியே வருகிறது. சவால் நிறைந்த மொழிபெயர்ப்புக் கதை இது. மொழிபெயர்ப்புக்குச் சவால்விடும் கதையை திலகவதி நன்றாகவே செய்திருக்கிறார்.



venugopal@thaiveedu.com

# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

8

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

## கிரேக்கம் (Greece):

கிரேக்க நாடு ஐரோப்பியக் கண்டத்தில் உள்ளது. இது மூன்று பக்கம் கடலால் சூழப்பட்ட தீபகற்ப நாடாகும். கிழக்கில் துருக்கியும், மேற்கில் யவனக்கடலும், தெற்கில் பால்கன் மூவலத்தீவும், வடக்கில் அல்பேனியாவும், மாசிடோனியாவும், பல்கேரியாவும் எல்லைகளாக அமைந்த நாடாகும். இந்த நாட்டின் ஆட்சி மொழி கிரேக்க மொழியாகும். மேற்கத்தேய நாடுகளின் நாகரிகத்தின் பிறப்பிடமாக கிரேக்கம் பார்க்கப்படுகிறது. கிரேக்க நாட்டின் தேசிய விலங்கு டொல்பின் மீன் ஆகும். பீனிக்ஸ் பறவையின் உருவமானது கிரேக்க நாட்டில் மிகமுக்கிய ஒன்றாக மதிக்கப்படுகிறது. சில கிரேக்க நாணயங்களில் இந்தப் பறவையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1896-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் திகதி கிரேக்கத்தின் தலைநகரான ஏதென்ஸ் நகரில் உலகின் முதல் கோடைகால ஒலிம்பிக் போட்டி ‘பனாதினைக்கோ’ எனும் மைதானத்தில் நடைபெற்றது.

பண்டைக்கால கிரேக்கப் பண்பாடு மேற்கத்தேய நாகரிகத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. மொழி, அரசியல், கல்வி, தத்துவம், அறிவியல் ஆகியவற்றில் அதன் செல்வாக்கு ரோமானியப் பேரரசின் மூலம் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கும் பரவியது. கிரேக்க வரலாறு என்பது, இடைக்கற்காலம் தொடங்கி, வேளாண் சமுதாயம் உருவான புதிய கற்காலம், பண்டைய கிரேக்க நாகரிகத்தின் பொற்காலங்கள் என நீண்டு சென்றது குறிப்பிடத்தக்கது. ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டா ஆகியவை இதற்கு சக்திவாய்ந்த நகர அரசுகளாக இருந்தன.

ஐரோப்பாவின் தென் கிழக்கு நாடான கிரீஸ், பண்டைய நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை பெற்றது. தான் வாழ்ந்த குறுகிய காலத்தில் இந்தியா வரை ஊடுருவி கிரேக்க சாம்ராஜ்யத்தை விரிவடையச் செய்ய முயற்சித்த அலெக்சாண்டரின் வீரம் உலகம் அறியும். சாக்கிரடீஸ் (Socrates), பிளேட்டோ (plato), அரிஸ்டாட்டில் (Aristotle) போன்ற மூதறிஞர்கள் வாழ்ந்த கிரேக்க நாட்டினை மேற்கத்தேய சித்தாந்தங்களின் பிறப்பிடம் என்று கூறுவார்கள். பைதகரஸ் (Pythagoras), ஆர்க்கிமிடீஸ் (Archimedes) போன்ற கிரேக்க கணித மேதைகளின் புதிய கண்டுபிடிப்புகள் விஞ்ஞான உலகிற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

tg.theeban@gmail.com

கிரேக்க நாடு அதன் செழுமையான வரலாறு, கலாசாரம் மற்றும் கிரேக்க தத்துவத்திற்கு பெயர்பெற்ற நாடாகப் பார்க்கப்படுகின்றது. உலக வரலாற்றில் கிரேக்கர் மிகப் பழைமையான நாகரிகம் கொண்டவர்கள். இதன் தலை நகரம் ஏதென்ஸ். பொ.ஆ.மு. 1821-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் திகதி கிரேக்க நாடு துருக்கிய பல்மத அரசான ஆட்டோமன் பேரரசிடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்துக் கொண்டது. குடியாட்சி (Democracy) தத்துவத்தினை கிரேக்கர்கள்தான் உலகிற்கு அறிமுகப்படுத்தினர்.

இது, ஏறக்குறைய 6,746 ஆண்டு வரலாறு கொண்ட தொன்மையான மொழி. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த கிரேக்க மொழியானது உலகின் மிகப் பழைமையான மொழிகளில் நாகரிகத்துடன் கூடிய ஒரு மொழியாகும். வாழும் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலேயே மிக நெடிய வரலாறு கொண்ட மொழியும் கிரேக்க மொழியேயாகும். கிரேக்க மொழி அல்லது கிரேக்கு அல்லது எல்லினிக்கா என்பது கிரீஸ் நாட்டிற்கும் கிழக்கு மத்தியதரைக் கடலின் மற்றப் பகுதிகளுக்கும் சொந்தமான இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலுள்ள தற்சார்புடைய ஒரு கிளை மொழியாகும். உலகின் மனிதர் தோன்றிய ஆபிரிக்கக் கண்டத்தில் மாந்தர் பேசிய முதல் மொழி கிரேக்கம் என்று கூறப்படுகிறது.

இம்மொழியில் 74 நூற்றாண்டுகளாக எழுதப்பட்ட ஆவணங்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. மாபெரும் தத்துவ ஞானிகளான சாக்ரடீஸின் கருத்துகளை வெளிப்படுத்தும் விதமாக பிளேட்டோ எழுதிய ‘குடியரசு’, ‘அரசியல்’ ஆகிய நூல்கள் உலகப் புகழ் பெற்றவையாகக் காணப்படுகின்றன. கிரேக்க எழுத்துகள் பினீசிய எழுத்துகளிலிருந்து உருவானவையாகும். கிரேக்க மொழியை எழுத 24 எழுத்துகளைக் கொண்ட ஒரு தனித்துவமான எழுத்துமுறை பயன்படுத்தப்படுகிறது. இது பொ.ஆ.மு. 9-ஆம் அல்லது 8-ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு உயிரெழுத்திற்கும், மெய்யெழுத்திற்கும் தனித்தனி எழுத்துகளைப் பயன்படுத்தும் எழுத்துமுறை என்ற அளவில் இதுவே உலகின் மிகப்பழைமையான எழுத்து முறையாகும். அது மட்டுமல்ல




> **“ஏறக்குறைய 6,746 ஆண்டு வரலாறு கொண்ட தொன்மையான மொழி. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த கிரேக்க மொழியானது உலகின் மிகப் பழைமையான மொழிகளில் நாகரிகத்துடன் கூடிய ஒரு மொழியாகும். வாழும் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலேயே மிக நெடிய வரலாறு கொண்ட மொழியும் கிரேக்க மொழியேயாகும்.”**

இந்த எழுத்துமுறை இன்றுவரை நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டில் இருந்து கிரேக்க எண்களைக் குறிக்கும் எழுத்துகள் பயன்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலத்தீன், சிரிலிக், ஆர்மீனியன், காப்டிக், கோதிக் மற்றும் இதுபோன்ற பல எழுத்து முறை எழுத்தமைப்புகளுக்கும் இதுவே அடிப்படையாக அமைந்தது. மேற்கத்தேய உலகம் மற்றும் கிறீஸ்தவம் ஆகியவற்றின் வரலாற்றில் கிரேக்க மொழி ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. கிறீஸ்தவ பைபிளின் புதிய ஏற்பாடு கிரேக்கத் திப்கொய்யென் மொழியில் எழுதப்பட்டுள்ளது. கிரேக்க மொழியின் வேர்கள் பெரும்பாலும் பிறமொழிகளுக்கு புதிய சொற்களைத் தருகின்றன. கிரேக்கமும் இலத்தீனும் சர்வதேச அறிவியல் சொற்களுக்கு முக்கிய ஆதாரங்களாக இருக்கின்றன.

கிரீசு, சைப்ரசு ஆகிய இரண்டு நாடுகளுக்கு கிரேக்க மொழி அதன் நவீன வடிவத்தில் அலுவலக மொழியாக விளங்குகிறது. ஏழு நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறுபான்மை மொழியாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 24 அதிகாரபூர்வ மொழிகளில்ஒன்றாக இடம்பிடித்தும் சிறப்புப் பெற்றுள்ளது. கிரேக்க மொழி உலக அளவில் சைப்ரசு, இத்தாலி, அல்பேனியா, துருக்கி போன்ற நாடுகளில் வாழும் மக்கள் மற்றும் கிரேக்க புலம்பெயர்ந்தோர் என இன்று 13.2 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது.

உலகில் மூத்த மொழி தமிழ் மொழி என்று கூறிக் கொள்ளும் எம்மால் எமது மொழியின் தொன்மையை ஆவணங்களின் சான்றுகளுடன் அத்துணை பழைமையானது என்று நிறுவக் கூடிய நிலை இன்னும் வரவில்லை. பொ.ஆ.மு. 711-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் தொல்காப்பியம், தமிழர் சமூகம், மொழியியல் வளர்ச்சியில் மிக உன்னதமான நிலையில் இருந்த ஒரு காலப்பகுதியில் எழுந்திருக்கவேண்டும். அதாவது இலக்கியம், இலக்கணம் முற்றாக வளர்ந்த ஒரு நிலையைத் தொல்காப்பியம் காட்டி நிற்கிறது. ஆனால் தொல்காப்பியத்திற்கு முன்னைய இலக்கண, இலக்கியங்கள் என்று சுட்டிக் காட்டுவதற்குரிய ஆவணங்கள் பெரிதாக ஒன்றும் அற்ற நிலையில் தொல்காப்பியம் என்னும் ஒரு இலக்கணத்தை உருவாக்குவதற்கு எத்தனை நூற்றாண்டுகள் ஆகியிருக்கலாம் என்று நுண்ணறிவு நோக்கில் கணிக்கலாம்.

## கிரேக்க நாட்டுப் பழைமைப் பண்புகளும் சமய வாழ்வும்:

கிரேக்க மக்களின் சமய வழிபாட்டினை சற்றுப் பார்க்கும் போது அது சமய வழிபாடாக இருந்தாலும் சரி அதனோடு தொடர்புள்ள சகுனம் போன்றவையாக இருந்தாலும்சரி பல்வேறு இடங்களில் நம் தமிழ்ப் பண்பாட்டுடன் பொருந்தி நிற்பதனைக் காணலாம். கிரேக்கர் போற்றும் தெய்வங்களில் முக்கியமாக ஸீயஸ் (Zeus) எனும் தெய்வமே பெரிதாக போற்றப்படுகின்ற தெய்வமாகும். எமது மன்மதனை இந்த தெய்வத்திற்கு ஒப்பாகக் குறிப்பிடலாம். அதுமட்டுமல்ல திராட்சைச் சாற்றினைப் பருகும் கடவுளாக பேக்கஸ் (Bacchus) எனும் தெய்வம் மதுரை வீரனுக்கு ஒப்பிடக்கூடியதாகப் பார்க்கப்படுகின்றது.

சகுனம், கனா முதலிய கொள்கைகளில் கிரேக்கர்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டவர்கள். நம் தமிழர்களும் சகுனம் பார்ப்பதிலும், கனவு பலன் பார்ப்பதிலும் சளைத்தவர்கள் அல்லர். சகுனத்தினை விருச்சி என்று கூறினர். போருக்குப் போகும் போது விருச்சி பார்த்து சென்ற வரலாறு புறப்பொருள்வெண்பாமாலையில் ஒவ்வொரு நிலத்திற்கேற்ப கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சகுனத்தினையே விருச்சி பார்ப்பது என்று கூறினர். சகுனம் பார்ப்பது போன்று கனவின் பயன் என்பதனையும் மிக முக்கியமாகப் பார்த்தனர். சிலப்பதிகாரத்துக் கனாத்திறம் உரைத்த காதையில் கனவின் பலன் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதோடு மட்டுமல்லாமல் பல்வேறுபட்ட இலக்கியங்களில் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதனையும் காணலாம்.

கிரேக்கர்களும் சகுனம் பார்ப்பதில் மிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். தாங்கள் புதிதாகத் தொழில் தொடங்கும்போது அல்லது ஏதாவது புதிய செயலில் ஈடுபடும்போது

> “ உலக வரலாற்றிலே கிரேக்கம் மிகப் பழைமையான நாகரிக வளர்ச்சியும், மெய் விளக்க முதிர்ச்சியும் கொண்ட நாடு. முற்காலத்திலேயே கலை, பண்பாடு, மெய்விளக்கம், தர்க்கம், இலக்கியம், இலக்கணம் ஆகிய அனைத்தும் வளர்ந்து பரிணமித்ததும் இந்நாட்டில் என்பது குறிப்பிடத்தக்கது. ”

சகுனம் பிழைத்தால் அது தீங்கு விளையும் என்று தீர்மானித்து அதனை செய்யாது தவிர்ப்பவர்கள். அவர்கள் சகுனத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள் என்பதற்கு எதினியர்களின் போர்க்கப்பல் சிசிலியோடு போர்புரியப் புறப்பட ஆயத்தமாக இருந்த நிலையில் அன்று இரவு அவர்களின் தெய்வ உருவங்கள் யாவும் முகத்தைத் திருப்பிக்கொண்டு இருப்பதாகக் கனவு கண்டதனால் தீங்கு நிகழும் என்று எண்ணிப் பயணத்தை நிறுத்திக்கொண்டனர். இதன்மூலம் அவர்கள் கனவு, சகுனம், சமயம் என்பவற்றில் தமிழர்களைப் போல மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது தெளிவாக தெரிகின்றன.

### கிரேக்கமும் தமிழும்:

பொ.ஆ.மு. 5-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் தமிழ்நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டனர். இவ்வணிகத் தொடர்பு மூலம் தமிழ் வார்த்தைகள் கிரேக்கத்தில் பல இடம்பெறத் தொடங்கின. அரிஸ்டாஃபனீஸ் (Aristophanes), சோஃபொகிளீஸ் (Sophocles) போன்ற பண்டைய கிரேக்க நாடக ஆசிரியர்களின் நூல்களில் காணக்கூடியதாக உள்ளன. ‘அரிசி’ என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் ‘அரிஸா’ எனவும் கறுவா அதாவது இலவங்கம் எனும் தமிழ்ச்சொல் ‘கார்ப்பியன்’ என்றும், ‘இஞ்சிவேர்’ ‘சின்ஙஞி பேராஸ்’ என்றும் வியாபார நிமித்தம் பல தமிழ்ச் சொற்களைக் கிரேக்க மொழி தனதாக்கிக் கொண்டது.

கிரேக்க மொழியும், தமிழ், சமஸ்கிருத மொழிகள் போல ‘அ’-வில் தொடங்கி ‘ஒ’-வில் முடிகின்றன. முதல் எழுத்து ‘அல்பா’ கடைசி எழுத்து ‘ஒமேகா’. தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பெரிய புலவர்களுக்கு தெய்வ என்ற அடைமொழியைக் கொடுப்பார்கள். இலக்கண மாமேதை பாணிணியை பகவான் என்ற அடைமொழி போட்டு பதஞ்சலி அழைக்கிறார். நாமும் தெய்வப் புலவன் என்று வள்ளுவனை அழைக்கிறோம். தமி ழிலும் சமஸ்கிருதத்திலும் வலது பக்கத்தைப் புனிதமாகக் கருதுவார்கள். கோவிலை வலமாகச் சுற்றவேண்டும். வலது காலை எடுத்துவைத்து வீட்டுக்குள் நுழைய வேண்டும். வலப்பக்கம் விழுந்த உணவைத்தான் புலிசாப்பிடும், இடப்பக்கம் விழுந்தால் சாப்பிடாது என்று சங்க இலக்கியத்தில் ஏராளமான இடங்களில் படிக்கிறோம். காளிதாசனும் தீ வலப்பக்கமாகச் சுழித்து எரிந்தது நல்ல சகுனம் என்று பாடுகிறான். ஹோமர் எழுதிய ஆடிசியிலும் வலது பக்கம் புனிதம் என்று உள்ளது. லத்தீன் மொழியில் சினிஸ்டர் Sinister (இடது) என்றாலே தீயது என்று பொருள்.



உலக வரலாற்றிலே கிரேக்கம் மிகப் பழைமையான நாகரிக வளர்ச்சியும், மெய் விளக்க முதிர்ச்சியும் கொண்ட நாடு. முற்காலத்திலேயே கலை, பண்பாடு, மெய்விளக்கம், தர்க்கம், இலக்கியம், இலக்கணம் ஆகிய அனைத்தும் வளர்ந்து பரிணமித்ததும் இந்நாட்டில் என்பது குறிப்பிடத்தக்கது. மேலைத்தேயத்தில் சமய தத்துவ நோக்கில் மொழி பற்றி முதன் முதலாக ஆராய்ந்தவர்கள் கிரேக்கர்களே. அனைத்துத் துறைகளிலும், ஏன், எதற்காக, எப்படி என்று கேள்விகளை எழுப்பி விடைகாணும் போக்கை மேற்கொண்டவர்கள் இவர்களே. மெய்விளக்கத்தில் காலடி எடுத்து வைத்த கிரேக்க அறிஞர்கள் அதனோடு சேர்த்து மொழி பற்றிய சிந்தனையிலும் நடைபோட்டனர். மெய்விளக்க அடிப்படையில் பிளேட்டோவும் (plato), அரிஸ்டாட்டிலும் (Aristotle) மெய்யினை ஆராய்ந்த காரணத்தால் இவர்களது மொழி பற்றிய சிந்தனையும் மெய்விளக்க அடிப்படையில் அமைந்து காணப்படுகின்றன.

மொழியியலின் தொடக்கப் பயணம் மேற்கத்தேய உலகத்தில்தான் தோன்றியது என்பது மொழியியலாளர்கள் கருத்தாகும். அந்த வரிசையில், மொழியாராய்ச்சியில் பெரும் சிரத்தையோடு ஈடுபட்டவர்களில் முதன்மையானவர்கள் கிரேக்கர் என்பது வரலாறு. பொ.ஆ.மு. 500-ஆம் ஆண்டளவில் ஸபார்த்தன் என்று வழங்கப்படும் சிறு நிலத்தை சார்ந்த மக்களின் தொடர் முயற்சியினால் உருவானது மெசடோனியா எனும் நிலம். இந்நிலம் கிரேக்கரின் பூர்வீக நிலமாகக் கருதப்பட்டது. போர் புரிவதும் தத்துவம் பயில்வதும் இவர்களது முக்கிய தொழிலாகக் காணப்பட்டாலும் சிந்திக்கத் தெரிந்த அறிஞர்களைக் கொண்டிருந்த ஒரு சமுதாயமாக காணப்பட்டதனால் தத்துவம் பேசுவதிலும் அது தொடர்பான செய்தி களை ஆராய்வதிலும் பெரிதும் ஈடுபட்டனர். இதனாலேயே இவர்கள் காலத்து மொழியியல் ஆய்வும் தத்துவார்த்த அடிப்படையிலேயே அமைந்திருந்தது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது கிரேக்கர்கள் தமது மொழி வளச்சிக்கு பெரும் பங்காற்றியமை புலப்படும். வரும் தொடர்களில் மொழியிலுக்கு கிரேக்க அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஆற்றிய பங்கினை விரிவாகப் பார்க்கலாம்.

(தொடரும்...)



nageswary@thaiveedu.com

# தமிழர் வணிகம் — நடராசா சிறீரஞ்சன்

மனிதர்களின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள். இவற்றில் தலையாயது உணவு. ‘பசி வந்தால் பத்தும் பறந்திடும்’ என்பது பழமொழி. ஆப்ரகாம் மாஸ்லோவின் தேவைப் படியமைப்புக் கோட்பாட்டிலும் உணவுத் தேவைதான் அடிப்படைத் தேவையாகக் குறிப்பிடப்படுகிறது.

உணவுப்பொருள் வணிகத்தில் முன்னணியில் இருந்தவர்கள் தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள். கொழும்பு புறக்கோட்டையில் உணவு வணிகத்தில் அவர்கள் கொடிகட்டிப் பறந்தனர். சீனி, உருளைக்கிழங்கு போன்ற உணவுப்பொருட்களை கப்பல் கப்பலாக இறக்குமதி செய்பவர்களாக இருந்தனர். அதாவது ஒரு கப்பலில் வரும் சீனி முழுவதையும் ஒரு வணிகர் கொள்வனவு செய்யுமளவிற்கு பெரும் வணிகர்களாக அவர்களில் சிலர் இருந்தனர். அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கு பாரிய களஞ்சியசாலைகளும் அவர்களிடம் இருந்தன. இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் ஒரு தொகுதி, அவை துறைமுகத்தில் இறங்கிக் களஞ்சியத்துக்கு வருவதற்கு முன்னரே விற்பனையாகிவிடும். எனவே அவை துறைமுகத்திலிருந்து நேரடியாகக் கொள்வனவு செய்தவரின் களஞ்சியத்துக்கே அனுப்பப்பட்டுவிடும்.

ஆனால் இப்போது உணவு வணிகத்தில் தமிழர்களின் பங்கு வெகுவாகக் குறைந்து விட்டது. அதற்குப் பல காரணிகளைக் குறிப்பிடலாம். முதலாவது காரணம் 83 இனக்கலவரம் எனப்படுகிறது. இரண்டாவது காரணம் தொழில்கள் பற்றி எம்மவர்களிடையே காணப்படும் மனப்பாங்கு.

படித்தவர்கள் உத்தியோகம் பார்ப்பது, படிக்காதவர்கள் வணிகம், வேளாண்மை, மீன்பிடி போன்ற ஏனைய தொழில்களைச் செய்வது என்பது எம்மிடையே காணப்பட்ட எழுதப்படாத விதி. அது இப்போதும் கூட எம்மிடையே இருக்கிறது எனலாம்.

நாங்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். கல்வி கற்று நல்ல உத்தியோகம் பார்ப்பதுதான் எம்மவர்களின் முக்கியமான இலக்கு. இது படிக்கும் பிள்ளைகளின் இலக்கு என்பதிலும் பார்க்க அவர்களின் பெற்றோர்களது கனவு என்று கூறலாம். குறிப்பாகப் படித்து மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, கணக்காளராகவோ அல்லது அரச உத்தியோகத்தராக வருவதுதான் பெருமளவானவர்களின் நோக்கமாக இருந்தது, இப்போதும் இருக்கிறது எனலாம்.

அக்காலத்தில் பெரும் வணிகர்களாக இருந்த எம்மவர்கள் கணிசமான கல்வியறிவு கொண்டவர்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்களில் கணிசமானவர்கள் தங்கள் அனுபவ அறிவால் கொஞ்சம் கொஞ்சமாக தங்களின் வணிகத்தைப் பெருப்பித்து மாபெரும் வணிக நிறுவனங்களை உருவாக்கினார்கள். அவர்களது வணிக நிறுவனங்கள், அவற்றின் விற்பனைப்புரள்வு, பெறுமதி போன்றவற்றின் அடிப்படையில் நாட்டின் பாரிய நிறுவனங்கள் என்று வகைப்படுத்தக்கூடியவையாக இருந்தன. அளவில் அவை பாரிய நிறுவனங்களாக இருந்தபோதும் அவை வணிகக் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றவர்களாலன்றி அனுபவ அறிவு கொண்டவர்களாலேயே கொண்டுநடத்தப்பட்டன. குறிப்பாக, அவ்வணிக நிறுவனங்களின் உரிமையாளரும் கணக்குப்பிள்ளையும்தான் நிறுவனத்தின் முதுகெலும்பாக இருந்தனர்.

வணிகக் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றவர்களை வேலைக்கமர்த்த அவர்கள் முயன்றதாகத் தெரியவில்லை. அவர்கள் அப்படி முயன்றிருந்தாலும் உத்தியோக ஆசையில் இருக்கும் படித்த நம்மவர்கள், மூட்டை தூக்கும் நாட்டாண்மைகளாலும் வியாபாரிகளாலும் நிறைந்திருக்கும் கொழும்பு புறக்கோட்டையில், பார்ப்பதற்கு கடைபோல் தோன்றுமொரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்திருப்பார்களா என்பதும் சந்தேகம்தான். அவர்கள் முழுக்காற்சட்டை, சப்பாத்து, கழுத்துப்பட்டி அணிந்து பணியாற்றக்கூடிய அலுவலகத்தில் வேலை செய்வதற்குத்தானே ஆசைப்பட்டிருப்பார்கள். அப்போதுதானே ரௌசர் போட்ட மாப்பிளை என்று கொழுத்த சீதனத்துடன் திருமணம் செய்யலாம்.

நிறுவன உரிமையாளர்களில் பெரும்பாலானவர்கள், தங்கள் பிள்ளைகள் பெரும் படிப்பு என்று எம்மவர்களால் கொண்டாடப்படும் துறைகளில் படித்து உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்களே ஒழிய, அவர்கள் தமது நிறுவனங்களைமுகாமை செய்து, பின்னர் அவற்றின் உரிமையாளர்களாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. பெண் பிள்ளைகள் உயர் படிப்புப் படித்தாலென்ன படிக்காவிட்டாலென்ன கொழும்புக் கறுவாத் தோட்டத்தில் வீடும், காரும் கொழுத்த சீதனமும் கொடுத்து ஒரு பொறியியலாளரையோ, மருத்துவரையோ அல்லது கணக்காளரையோ மாப்பிள்ளையாக்கி விடலாம்தானே என்று அவர்கள் நினைத்திருப்பார்கள்.

இவ்வணிகர்கள் ஊரவர்களால் ‘முதலாளி’ என்றே அறியப்பட்டார்கள். சமூகத்தில் இவர்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. இந்த மரியாதைக்கு முக்கிய காரணம், அவர்களிடம் இருந்து ஊர்ப்பொது விடயங்களுக்குப் பண உதவி பெறலாம் என்பதுடன், உரியளவு கல்வி கற்காத தமது ஆண் பிள்ளைகளை அவர்களது கடையில் வேலைக்குச் சேர்த்து விடலாம் என்பதற்குமாகவே இருந்தது. ஆனால், கல்வி கற்று உத்தியோகம் பார்த்தவர்கள் மீது எந்த எதிர்பார்ப்பும் இல்லாத சிறந்த மதிப்பும் மரியாதையும் இருந்தது.

இந்தக் கோடீஸ்வர முதலாளிகளின் பிள்ளைகள் கொழும்பில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் கல்வி கற்றார்கள். கணிசமானவர்கள் சர்வதேசப் பாடசாலைகளில் கல்வி பயின்றனர். அவர்கள் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்றதுடன் அங்கு வெளிநாட்டுத் தூதராலயங்களில் வேலையாற்றும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகள் முதலியோர் கல்வி கற்றதால் நன்றாக ஆங்கிலம் பேசக்கூடியவர்களாக

இருந்தனர். பெருமளவுக்கு ஆங்கில அறிவு இல்லாத இந்த முதலாளிகளுக்கு அது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. பெரும் பணப்பலம் இருந்ததால் பிள்ளைகள் ஆடம்பர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டார்கள்.

அவர்களில் சிலர் நன்றாகப் படித்தார்கள் என்ற போதும் மற்றவர்கள் அக்கறையாகப் படிக்க வில்லை. இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநா டுகளுக்குச் சென்று மேற்படிப்புப் படித்தனர். அவர் களில் கணிசமானவர்கள் வணிக முகாமைத்துவ மன்றி எம்மவர்களிடையே பிரபல்யமான துறைகளான பொறியியல், மருத்துவம், கணக்கியல் போன்றவற்றைத்தான் கற்றனர். படிப்பு முடிந்ததும், அவர்களில் ஒரு தொகையினர் வெளிநாடுகளிலேயே வசிக்கத் தொடங்கினர். நாட்டுக்குத் திரும்பியவர் களில் பெரும்பாலானவர்கள் உத்தியோகம் பார்த் தார்கள். இவர்கள் தமது பெற்றோரின் வணிக நிறு வனங்களில் வேலை செய்யவோ, முகாமை செய்யவோ அதிகம் விரும்பவில்லை. பெற்றோரும் தமது பிள்ளைகள் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பதையே விரும்பினர்.

நிறுவனமொன்றின் வெற்றிகரமான இயக்கத்திற்கு ஊழியர்கள் முக்கிய காரணம் என்ற போதும் அதிலும் பார்க்க முக்கியமானது அங்கு காணப்படும் முறைமை (system). சிறந்ததொரு முறைமை இருக் கும்போது நிறுவனம் சீரான முறையில் செயற்படும். அவ்வாறானதொரு சிறந்த முறைமையை எமது வணி கர்கள் தங்கள் நிறுவனங்களில் உருவாக்கவில்லை. அவ்வாறு உருவாக்கியிருப்பின் அவர்கள் இல்லாத விடத்து அவர்களது பிள்ளைகளால் அந்நிறு வனங்களை இலகுவாகக் கொண்டு நடத்தியிருக்கக் கூடும். மறுபுறத்தில் தங்கள் பிள்ளைகளை, அவர்கள் தமது நிறுவனங்களைத் தமக்குப் பின்னர் கொண்டுநடத்தக்கூடியவர்களாக உருவாக்கவும் இல்லை.

பெரும் வணிகர்களாக இருந்த எம்மவர்கள் தாம் வணிகம் செய்யும் குறிப்பிட்ட துறையில் நல்ல அறிவு பெற்றவர்களாக இருதனரேயன்றி, ஏனைய வணிகங்கள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் உரிய அறிவு மற்றும் அனுபவங்களைக் கொண்டிருக்க வில்லை. இதனால் இவர்களால் அரச பிணை, திறைசேரி உண்டியல், தொகுதிக் கடன், பங்குச் சந்தை, கிளையுரிமை வணிகம் (francise) போன்ற வற்றில் முதலீடு செய்ய முடியவில்லை. பதிலாக அவர்கள் தமது வணிக இலாபத்தை மீண்டும் மீண்டும் தமது வணிகத்திலேயே முதலிட்டதுடன், வீடுகள், காணிகள், களஞ்சியசாலைகள், அரிசி ஆலைகள் என்று வாங்கினர். அத்தகைய சொத்துகள் எங்கே இருக்கின்றன என்பது அவர் களது பிள்ளைகளுக்குத் தெரிந்திருந்தனவா என்பதும் சந்தேகமே.

இவர்களில் சிலரிடம் வங்கியொன்றைக் கொள்வனவு செய்யக்கூடியளவு சொத்துகள் இருந்தன. வங்கி யொன்றின் பங்குகளில் குறிப்பிட்ட வீதத்துக்கு மேல் (15%) ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் கொள்வனவு செய்ய முடியாது. அந்தவகையில் ஒருவரால் வாங் கக்கூடிய ஆகக்கூடிய பங்குகளை வாங்கி வைத்தி ருப்பவர் அதன் தலைவராக வருவதற்கு வாய்ப் புண்டு. அதே போன்று பங்குச் சந்தையில் பட்டியலி டப்பட்ட நிறுவனத்தின் பங்குகளில் அதிகமான பங்குகளை வைத்திருப்பவாகள் அந்நிறுவனத்தின் இயக்குநர் சபையில் அங்கம் வகிக்க முடியும். எம்ம வர்களுக்கு அவ்வாறான முதலீடுகள் இருந்தி ருந்தால் அவர்களது படித்த பிள்ளைகள் போட்டி போட்டுக்கொண்டு அந்நிறுவனங்களில் இயக்குநர் களாகி இருப்பார்களல்லவா!

மறுபுறத்தில் எம்மவர்களின் நிறுவனங்கள் சில, பங் குச்சந்தையில் நிரற்படுத்தக்கூடியளவு பாரிய நிறு வனங்களாக இருந்தன. எவ்வாறெனினும் அதுபற்றிய அறிவு நிறுவன உரிமையாளர்களுக்கு இருந்திருக்க வாய்ப்பில்லை. அத்துடன் பங்குச் சந்தையில் நிரற்ப டுத்தக்கூடிய தரத்தில் கணக்கு வழக்குகள், நிர்வாகக் கட்டமைப்புகள், செயல்முறைகள், கணக் காய்வு முறைமைகள் போன்றவை அந்நிறுவனங் களில் இருந்திருக்குமா என்பதும் சந்தேகம்தான்.

அபான்ஸ் நிறுவனக் குழுமத்தைத் தோற்றுவித்த பெண்மணியின் முதல் வணிக முயற்சி, வெளி நாட்டில் இருந்து வருவோர் கொண்டுவரும் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களினால் ஏலத்தில் விற்கப் படும் பயன்படுத்திய மின்சாரச் சாதனங்களை வாங்கி அவற்றைப் பழுதுபார்த்து, தனது கார் டிக்கியில் காட்சிப்படுத்தி விற்பனை செய்தமை யாகும். நவலோகா நிறுவனக் குழுமத்தினைத் தோற் றுவித்தவரின் முதல் வணிக முயற்சி கொழும்பு பேலி யாகொடவில் தேநீர் வியாபாரம் செய்தமையாகும். இவர்களது பேரப்பிள்ளைகள் இன்று பல்தரப்பட்ட வணிக நடவடிக்கைகளில் கொடிகட்டிப்பறக்கும் பாரிய நிறுவனங்களின் இயக்குநர்களாக உள்ளனர். ஆனால் உணவு வணிகத்தில் கொடிகட்டிப் பறந்து பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்தவர்களின் பேரப் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் மத்தியதர வர்க் கத்தினராக வாழ்வதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இவ்வாறான முதலீடுகள் மற்றும் வணிக நடவடிக் கைகள் தொடர்பில் கற்றுத் தேர்ந்தவர்கள் எம்மிடையே இருக்கவில்லை என்று கூற முடியாது. அவ்வாறெனில் அவர்களுக்கும் புறக்கோட்டை வணி கர்களுக்கும் இடையில் உரிய அறிவுப்பரிமாற்றம் நிகழவில்லை என்ற முடிவுக்குத்தானே வரவேண்டும்.

இன்றுகூட கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்குமி டையில் வணிகம் தொடர்பில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் அறிவுப்பரிமாற்றம் கல்வி நிறுவனங் களைத் தாண்டி நிகழ்கிறதா என்பதும் சந்தேகமே. ஒவ்வொரு துறையிலும் இவ்வாறு காணப்படக்கூடிய இடைவெளிகள், குறைபாடுகள் என்பன கண்டறியப் பட்டு அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அறிவைத் தேடுவது எவ்வளவு முக்கியமோ அதேபோல் அதை உரியவர் களுக்குப் பகிர்வதும் முக்கியமானது.



Nadarasa.sriranjan@thaiveedu.com



# தமிழுக்கு அமுதென்று பெயர்

சந்திரகௌரி சிவபாலன்

அமுது என்றால் என்ன ? அது இறவா மருந்து. இங்கு தமிழுக்கும் அமுதென்று பேர் (பெயர்) என்று பாரதிதாசன் பாடியிருக்கின்றார். அமிர்தம் உண்பவர்கள் இறக்கமாட்டார் கள். அதேபோல தமிழ் அமிர்தம் உண்டவர்களுக்கும் இறப்பு இல்லை. பாரதியும், இளங்கோவும், விபுலானந்த அடிகளும் இன்னும் தமிழை அருந்தியவர்கள் அனைவரும் இறவாப் புகழுடன் இன்னும் வாழ்ந்துகொண்டேதான் இருக்கின்றார்கள்.

தமிழ் மொழியும் இறவாப் புகழோடுதான் வாழ்கின்றது. ஏறக் குறைய 6800 மொழிகள் உலகப்பரப்பிலே வழக்கில் இருக் கின்றன. அவற்றில் 2300 மொழிகள் மட்டுமே எழுத்துருவில் இருக்கின்றன. அதிகமான மக்களால், எழுதவும் பேசவும் கூடிய மொழிகள் ஆங்கிலம், சீனம், இந்தி, தமிழ். இவற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அன்றும் இன்றும் இளமையோடு இருக்கும் மொழி தமிழ்மொழி.

இயல்பாகத் தோன்றிய மொழிக்கு பதினாறு பண்புகள் இருக்க வேண்டும்.

***'தொன்மை இயன்மை தூய்மை தாய்மை***
***முன்மை வியன்மை வளமை மறைமை***
***எண்மை இளமை இனிமை தனிமை***
***ஒண்மை இறைமை அம்மை செம்மை***
***எனும் பதினாறும் இன்றமிழ் இயல்பெனப்***
***பன்னுவர் மொழிவலர் பாவாணர் தாமே'***

தொன்மை மொழிகளாக ஆறு மொழிகள் உள்ளன. அவை தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், கிரேக்கம், இப்ரூ ஆகியனவாகும். இவற்றில் சமஸ கிருதம் பேச்சுமொழி அல்ல. இலத்தீன், இப்ரூ மொழிகள் வழக்கொழிந்துவிட்டன. ஆனால் தேவ நேயப்பாவாணர் கூறியதுபோல் இன்றும் இலக்கியச் செம்மை, இலக்கண வரம்பு, பழைமை, நிறைந்த சொல்வளம் மிக்கு என்றும் கன்னியாக அமிர்தமாக விளங்குவது தமிழ்மொழியே. எங்கு சென்றாலும் தமிழ் வாழும். இன்று ஏறக்குறைய 77 மில்லியன் தமிழர்கள் உலக நாடுகள் எல்லாவற்றிலும் வாழுகின்றார் கள். புலம்பெயர் தேசங்களில் நாம் பல மொழிகள் பேசுகின்ற மக்களுடன் வாழுகின்றோம். தமிழ் எங்களோடும் வந்து கோலோச்சுகின்றது.

அமிர்தம் போல தமிழும் சுவையானது. அதனாலேயே அதனை விரும்புக்கின்றோம். அது எவ்வாறான சுவை என்பதனை விளக்கமாக எடுத்துக் கூறுகின்றேன்.

எம்வசம் கிடைக்கும் சிருஷ்டிகளின் உயிரோட்டம் சங்கம் தொட்டு இன்றுவரை அவ்வக்கால மொழிநடை, இலக்கிய மாற்றங்களுக்கேற்ப வெவ்வேறு பாணியில் பரிமளித்துக் கொண்டிருக்கின்றன. வாய்மொழிப் பாடலிலே தொடங்கி இன்று ஹைக்கூ, தம்முனைக் கவிதை போன்ற பல்வேறு வடி வங்களில் மிளிர்கின்றது.

எண்ணங்களிலே வண்ணக் கலவைகளைக் கலக்குகின்ற சங்கப் பாடல்களிலே அழகான கற்பனை நயங்கள் காணப் படுகின்றன. கம்பர் கவித்திறத்தில் காதினுக்கும் ஓசைநயம் ஒளிந்திருக்கின்றது, அருணகிரிநாதர் பாடல்களில் சந்தம் பல சிந்திக்கிடக்கின்றன, திருக்குறளிலே சொல் லின்பம் சொக்க வைக்கின்றது, வாழ் வியல், தத்துவக் கருத்துகள் வியப்படைய வைக்கின்றது. காளமேகம் பொழிந்த கவி மழையிலே ஆங்காங்கே பகுத்தறிவு சிலே டையாகக் காட்டப்படுகின்றது. இவ்வாறு காலம் காலமாக கையாளப்பட்ட இலக் கியச் சுவைகளிலே இனிமையும் இருந்தது, பொருளும் புதைத்திருந்தது.

இவ்வாறான இலக்கியக் கடலுள் மூழ்கிய பலரும் எடுத்த முத்துகள் போல் இலக் கியக் கடலின் கரையில் நின்று நான் பெற்ற அற்புத இலக்கிய அலைக்கரங்களை சிறிது அலசுகின்றேன். சுவைத்துச் சுவைத்து இன்புறத்தக்க இனிமை மாறாத தமிழ்க் கவிச்சுரங்கத்தில் சிலவற்றை காட்சிப்படுத் துகின்றேன்.

> **“அதிகமான மக்களால், எழுதவும் பேசவும் கூடிய மொழிகள் ஆங்கிலம், சீனம், இந்தி, தமிழ். இவற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அன்றும் இன்றும் இளமையோடு இருக்கும் மொழி தமிழ்மொழி.”**

tg.theeban@gmail.com

கவிச்சுவை பற்றிக் கம்பரும் ‘தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்’ என்றார். மகாகவி பாரதி கூட,

***‘கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்’***

என்று பாடியிருக்கின்றார்.

இலக்கியக் கல்வியை பயன் நோக்கிக் கற்காது. இரசனை இன்பம் கருதிக் கற்கும்போதே பயன்பெறலாம். உழைப்பைக் கருதி இலக்கியம் கற்போர், உள்ளத்துணர்ச்சிக்கு இடம்தர முடியாது போவர். இலக்கியம் சிறுகச்சிறுக மனித மனத்தைப் பாதிக்கின்றது. உள்ளத்தைப் பண்படுத்துகின்றது. மேம்படுத்துகின்றது. அவற்றைத் தொடருகின்ற படைப்பாளிகள் அவ்வப்போது பகிர்ந்தளிக்கும்போது மறைந்து, ஒழிந்து வாழும் இவற்றின் சுவையைப் பலரும் பெற வாய்ப்பிருக்கின்றது.

வள்ளுவப் பெருந்தகை அளித்த குறளமுதத்தைச் சுவைக்கும்போது அதில் பல்வகை சுவை பரந்து காணப்படுகின்றது. அதில் புதைந்து கிடக்கும் சுவை கருதிக் கற்கும்போது பொருள் இன்பம் மனத்துள் பதிந்து வாழ்நாள் முழுதும் யாம் ஆற்றும் காரியங்களுக்கு எச்சரிக்கை ஆற்றி எம்மை வழிப்படுத்துகின்றது.

***‘தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும்’***

என்னும் போது தீயவை செய்வதற்கு மனம் அஞ்சுகின்றது. ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும் என்பார்கள். இவ்வாறேதான் இலக்கியச்சுவை ததும்பும் இலக்கியங்கள் மனித உள்ளங்களை ஆட்சி புரிவதைக் காணக்கூடியதாக இருக்கின்றன. மனித மனங்களை ஆட்சி செய்கின்றபோது அது பிறிதோர் இடத்தில் வேறு விதமாகப் வெளிப்படுகின்றது. பேச்சாளர்கள் தமது பேச்சிலே அப்படியே பயன்படுத்துகின்றனர். எழுத்தாளர்கள் அதன் பாதிப்பிலே வேறு விதமாக அப்பொருளை அல்லது ஓசையைப் பயன்படுத்துகின்றனர்.

ஒரு சொல்லைச் சொல்லும்போது அந்தச் சொல்லைவிட வேறு ஒரு சொல் அதன் கருத்தை வெளிப்படுத்த இல்லை என்பதை அறிந்து பொருத்தமான சொல்லைச் சொல்ல வேண்டும் எனச் சொல் பற்றி வள்ளுவர் ஒரு குறளிலே விளக்குகின்றார்.

***‘சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து’***

இதனையே வெற்றிவேற்கை எனப்படும் நறுந்தொகையிலே அரசனும் புலவனும் ஆகிய அதிவீரராமபாண்டியன்,

***‘பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே
மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே’***

என ஒருவர் சொல்லுகின்ற சொல்லைத் தனது சொல் ஆற்றலினாலும் சொல்லைக் கையாளுகின்ற தன்மையினாலும் பொய்யை மெய்யாக்கி விடுகின்றார் என எடுத்துக் கூறுகின்றார்.

இவ்வாறு ஒருவர் பாடிய பாடலின் இலக்கியப் பாதிப்பு இக்காலப் பாடலாசிரியர்களிடையேயும் காணப்படுகின்றது. அக்கால கண்ணதாசனிடமும் காணப்பட்டது. புகழேந்தி,

***‘மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வான்முகத்தைப்
பங்கயம் என்றெண்ணிப் படிவண்டைச் - செங்கையால்
காத்தாள்அக் கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து’***

எனக் கையாண்ட கற்பனையை. கவிஞர் கண்ணதாசன்,

***‘பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத - நான்
வளைகொண்ட கையாலே மெதுவாக மூட’***

என வரி தொடுத்துள்ளார்.

இலக்கிய ஓசைச்சுவையிலே உள்ளம் பதிக்கும்போது இராமனால் சோர்வுற்று இராவணன் கலங்கி நிற்கும் வேளையிலே உலகை மறந்து கும்பகர்ணன் உறங்கிக் கொண்டிருக்கின்றான். அவ்வுறக்கம் நீக்க உள்ளங் கொந்தளிக்கும் தூதுவர்கள் கும்பகர்ணனைத் துயில் எழுப்புகின்றனர்.

***‘உறங்கு கின்ற கும்பகர்ண
உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்றுகாணெ
ழுந்தி ராயெழுந் திராய்
கறங்கு போல விற்பிடித்த
கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்குவாயி
னிக்கி டந்து றங்குவாய்’***

படிக்கும்போதே நா தாளம் போடுகின்ற ஓசையினைத் தன் சொல்லாட்சியினால் கம்பர் தந்திருக்கும் சுவை மெச்சத்தக்கது. இவ்வாறே திரிகூடராசப்பக் கவிராஜரும் திருக்குற்றாலக் குறவஞ்சியிலே பந்தடிக்கும் காட்சியிலே,

***‘செங்கையில் வண்டு கலின்கலின் என்று
ஜெயம்ஜெயம் என்றாட - இடை
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு
தண்டை கலந்தாட - இரு
கொங்கை கொடும்பகை வென்றன மென்று
குழைந்து குழைந்தாட - மணிப்
பைங்கொடி மங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றனளே’***

என்று எம்முடைய மனதுள் பூம்பந்தடிக்கும் சொல்லாட்சியினைத் தன் வரிகளில் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறே காளமேகம் தூது பற்றி எழுதிய ஒரு பாடலிலே,

***‘தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே - தாதொத்த
துத்தித்த தாதே துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி’***

தோழியின் தூதோ தீதானது. கிளி தூதுபோய்க் கூறாது. பாங்கியின் தூதானது நாட்களைக் கடத்தி வைக்கப்படும் தூதாகும். இறையை தொழுது தொடர்ந்தால், நல்ல பயன ளிக்காமல் வீணாகப் போகும். பூந்தாதையொத்த தேமல் என் மீது விரைவாகப் பாய்ந்து மேலும் அதிகமாகாமல் சுவையான காதலனுடைய பெயரைக் கூறி என்னைக் காப்பாற்றி வைப் பாயாக. என ஓசைச்சுவைமிக்க பாடலிலே சொல்லை ஆட்சி செய்திருக்கும் பாங்கு மெச்சத்தக்கது.

அதேபோல் கற்பனை நயம் மிக்க பாடல்களை நம் முன் னோர் படைத்துள்ள பாங்கை நோக்கும்போது சீவகசிந்தா மணியில் ஏமாங்கத நாட்டின் சிறப்பைக் கூறும் ஓரிடத்தில் திருத்தக்க தேவர், தென்னை மரத்திலேயிருந்து பழுத்த தேங்காய் பக்கத்திலே இருந்த கமுக மரத்தின் தலையிலே விழுகிறது. அப்போது அம்மரத்தின் உச்சியிலே கட்டியிருந்த தேன்கூடு உடைந்து போகத் தேன் வதை கொட்டுகின்றது. அப்படியே தொடர்ந்து விழும் அத்தேங்காய் கமுகு மரத்தின் கீழே வளர்ந்திருந்த பலாப்பழத்தைக் கீறிவிழ அதனடியில் இருக்கும் மாமரத்தில் வீழ்ந்து மாம்பழங்கள் சிதறுகின்றன. தொடர்ந்து அதன் அடியில் இருந்த வாழை மரத்தில் வீழ்ந்து வாழைப்பழங்கள் சிந்துகின்றன. இப்போதுதான் தேங்காய் தரைபடுகின்றது. இவ்வாறு நாட்டுவளம் கற்பனையில் அழகு றுகின்றது.

***'காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்***
***கமுகின் நெற்றிப்***
***பூமாண்ட தீந்தேன் தொடைகீறி***
***வருக்கை போழ்ந்து***
***தேமாங் கனிசிதறி வாழைப்***
***பழங்கள் சிந்தும்***
***ஏமாங் கதமென் றிசையால்***
***திசைபோய துண்டு'***

திருக்குற்றாலக் குறவஞ்சியிலே திருகூடராசப்ப கவிராயர் திருகூடமலையை வர்ணிக்கும் பாடலிலே,

***'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்***
***மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்***
***கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்***
***கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்***
***தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்***
***செங்கதிரோன் பரிகாலும் தேர்க்காலும் ஒழுகும்***
***கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்***
***குற்றாலத் திரிகூட மலையலங் காரர்***
***குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே'***

எனத் தன் கற்பனையை மிக எளிய வரிகளில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இதுவே எழுத்தால் மனத்துள் படம் வரைதலா கின்றது.

கற்பனை சுவைமிக்க கம்பராமாயணத்திலே பல தித்திக்கும் சுவைகள் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றில் ஒரு எளிமை யான உவமை, 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்'

இதேபோல் அற்புதமான பொருள் புதைந்த ஒரு தனிப்பாட லைச் சீர்காழி அருணாசலக்கவிராயர் தந்திருக்கின்றார்.

***'வெண்ணெயுற்று நெய்தேட வேண்டுமா தீபமுற்று***
***நண்ணு கனறேட னன்றாமோ - என்மனத்தை***
***நாடிச் சிவனிருக்க நாடாம னூர்தோறும்***
***தேடித் திரிவதென்ன செப்பு'***

உள்ளமே! உனக்கு என்ன பேதைமை? வெண்ணெய் கையி லிருக்கும் போது நெய் தேடவேண்டிய அவசியமென்ன? விளக்கு இருக்கும்போது அனலைத் தேடிப்பிடிப்பான் ஏன்? என் மனத்தை நாடிச் சிவன் இருக்கும்போது அவனை அகத்துள் நோக்காமல் ஊரூராய்ச் சென்று கோயிலுக்குள் நுழைந்து பார்ப்பது ஏன்?

படிக்கும்போதே சிந்தனைக்கு வித்திடுகின்றார் அல்லவா!

இதுபோலவே பாடல் மூலம் மழை பொழியும் மகத்துவத்தை அறிவியல் கண்கொண்டு நோக்கி இலகுவான முறையில் மாயூரம் வேதநாயகம் அவர்கள்,

***'காரேயுன் னீரையெல்லாங் கள்ளன் கவர்ந்தானோ***
***நீரே யுதவாய் நெறியாமோ – நேரேதான்***
***வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு***
***பேரிகொண்டு நீதிரண்டு பெய்'***

எனப் பாடியுள்ளார். இனி விளக்கத்தைப் பாருங்கள்.

'மேகமே நீ தேக்கி வைத்திருக்கின்ற நீரையெல்லாம் கள்வன் கவர்ந்து கொண்டு போய்விட்டானோ? நீரை உதவாமல் வைத்து இருப்பது நெறியாகுமா? உனக்கு நேராகத்தானே கடல் உள்ளது. எனவே கடல் நீரை மொண்டு அள்ளி அள் ளிக் குடித்து வானத்து வழியாகச் சென்று, கருமுகிலாக மாறி, இடிமுழக்கம் செய்து ஒன்று திரண்டு சோ... வெனப் பெய்' எனச் சொற்சுவை சொட்டப் பாடியிருக்கும் பாங்கு இனிமை பயக்கின்றது.

இவ்வாறு நாம் வாழும் காலத்தில் எழுதப்பட்டு சேகரிக்கப் படும் நற்றமிழ் பாடல்களும் மனத்துக்குள் புகுந்து மெல்லிய மயிற்தூரிகையால் மனத்தை வருடிவிடுவதுடன் சுவைத்தின் புறும் கற்பனையைக் கலந்துவிடுகின்றன. பாசமலர் படத் துக்காக கவியரசு கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்ட தாலாட்டுப் பாடலிலே சில வரிகள்,

***'நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி***
***நடந்த இளந்தென்றலே***
***வளர் பொதிகை மலைதோன்றி***
***மதுரை நகர் கண்டு***
***பொழிந்த தமிழ்மன்றமே'***

ஒரு குழந்தையைத் தாலாட்டும்போது தென்றலின் வருகை யையும், தமிழ் மன்றத்தின் தோற்ற வளர்ச்சியையும் எடுத்துக் காட்டி சொல்லவரும் செய்தியைச் சந்தர்ப்பத்தைப் பயன்ப டுத்திப் புகுத்திவிடும் கவி வல்லமையை கண்ணதாசனில் காணக்கூடியதாக இருக்கின்றது.

நீலவானிலே நித்தம் காணும் நிகழ்வை கவிப்பேரரசு வைர முத்து அவர்கள் இளையநிலா பொழிகிறது என்னும் பாட லிலே நிலாவானது,

*‘முகிலெடுத்து முகம் புதைத்து விடியும் வரை தினம் நனையும்’*

முகிலுக்குள் முகம் புதைப்பதனால், முகிலுக்குள் நிறைந் திருக்கும் மழைத்துளிகளில் தினமும் நனைகிறது என அருமையாக வர்ணிக்கின்றார். அப்பாடலிலேயே,

*‘வானவீதியில் மேக ஊர்வலம்*
*காணும் போதிலே ஆறுதல் தரும்*
*பருவமகள் விழிகளிலே கனவு வரும்’*

எனப் பருவப் பெண்கள் நிலாப்பொழியும் நேரம் மேக ஊர்வ லக்காட்சியில் தமை மறந்து நிற்பதுடன் தம் உள்ளக் காதலுக்கு உருக்கொடுத்து இன்புறும் வேளையையும் இத மாக உலகுக்குக் கொண்டுசேர்க்கின்றார். மேகம் உலாப் போகும் காட்சியை,

*‘முகிலினங்கள் அலைகிறதே*
*முகவரிகள் தொலைந்தனவோ*
*முக வரிகள் தவறியதால்,*
*அழுதிடுமோ அது மழையோ’*

முகிலினங்கள் கடல் மோர்ந்து, நீர் சேர்த்து, உலக நன்மைக் காக மழையாகச் சொரியவில்லை. தமது முகவரிகளைத் தொலைத்துவிட்டன. அதனாலேயே மழையாக அழுகின்றன எனத் தற்குறிப்பேற்ற அணியைக் கையாண்டு அற்புதமாய்க் கற்பனையைக் கையாண்டுள்ள சுவை மெச்சத்தக்கது.

*‘நீலவானிலே வெள்ளிஓடைகள்*
*போடுகின்றதே என்ன ஜாடைகள்*
*விண்வெளியில் விதைத்தது*
*யார் நவமணிகள்’*

எனத் தன் பாடலுக்கு இலக்கிய இன்பம் ஊட்டியிருக்கும் கவியரசு வெளிப்படுத்திய இன்பச்சுவை எண்ண எண்ண இனிக்கின்றது. இதைவிட ஒரு இலக்கியச் சுவையாளனுக்கு சுவையுணவு தேவையா ?

இவ்வாறு எழுத எழுதக் குறையாத அட்சய பாத்திரம் போல் எங்கள் இலக்கியப் பரப்பிலே அமிர்தமாய்ப் பழந்தமிழ் இலக் கியங்களும் தற்கால இலக்கியங்களும் கொட்டிக்கிடக் கின்றன. அவற்றை அள்ளிப்பருகி இன்பம் பெற இத்தருணம் மட்டும் போதாது. இப்பதிவு மட்டும் தாங்காது. தொடரும் வாழ்வில் தொகையாய்ப் பெருகும், சுவையாய் தித்திக்கும், தீந்தமிழ் இன்பம் சுவைப்போம்.

**உசாத்துணை:**


• இலக்கியச் சரம், ஆசிரியர் - தமிழ்மணி அகளங்கன்





Chandragowry.Sivapalan@thaiveedu.com



ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

இணையவழிக் கலந்துரையாடல்

நாள் : 16 ஜனவரி வெள்ளிக்கிழமை 2026

நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 17 ஜனவரி சனிக்கிழமை 2026

நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 6:30 - 8:30 மணி (இலங்கை, இந்திய)
காலை 12:00 - 2:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)



“சமகாலத் தமிழியல் ஆய்வுகளில் சமூகவியல், சமூகமானிடவியல் அணுகுமுறைகளின் செல்வாக்கு”

உரை நிகழ்த்துபவர்: திரு. க. சண்முகலிங்கம்

Zoom ID: 84777257162 Passcode: 554268

# மின்சார நிழல்

## Electric Shadow என்ற சொல்லே ஒரு புதிய பின்நவீனச் சின்னமாகக் கருதப்படலாம்

**– ஏ. நஸ்புள்ளாஹ்**

மின்சார நிழல் Electric Shadow என்ற சொல்லே ஒரு புதிய பின்நவீனச் சின்னமாகக் கருதப்படலாம். பாரம்பரியக் கவிதைகளில் நிழல் என்பது உடல், சூரியன், நிலவு போன்ற இயற்கைச் சுடர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டது. ஆனால், மின்சார நிழல் என்பது மொபைல் திரை, எலக்ட்ரானிக் சாதனங்களின் வெளிச்சம் மூலம் உருவாகும் நிழல் என்ப தால் அது இயற்கை உலகிலிருந்து விலகிச் செல்கிறது. இதனால், பின்நவீனக் கவிதைகளில் இயற்கை மற்றும் செயற்கை இடையிலான முரண்பாடு புதிய வெளிப்பாடு களைப் பெறும்.

இது மனிதரின் காலநிலையையும் உறவுகளையும் பிரதிப லிக்கும். இயற்கை வெளிச்சம் மறைந்து மின் வெளிச்சம் ஆளும் காலத்தில், மின்சார நிழல் மனிதர் இயற்கையிலி ருந்து விலகிப்போன நிலையைச் சுட்டிக்காட்டும். கவிதை களில் இது செயற்கையான பாசம், பாசாங்கான உறவுகள், ஆழமான தனிமை ஆகியவற்றின் உருவகமாக மாறும்.

பின்நவீன சிந்தனையின் முக்கிய அம்சமான முரண்பாடும் மாயையும் இச்சொல்லில் உள்ளன. மின்சார நிழல் உண்மை யானதா, மாயையானதா என்பது கேள்வியாகும். ஒருபுறம் அது வெளிச்சம் தருகிறது, மறுபுறம் நம்மை இருட்டில் தள் ளுகிறது. இந்த இரட்டை நிலைமையே பின்நவீனத்தின் இயல்பை பிரதிபலிக்கிறது.

மொழியின் வளர்ச்சியிலும் இது தாக்கம் செலுத்தும். மின்சார நிழல் போன்ற சொற்கள் புதிய பின்நவீனத் தமிழ் சொற்படையை உருவாக்கும். இனி கவிதைகள் இயற் கையை மட்டும் சித்தரிக்காது, டிஜிட்டல் உலகின் உருவகங் களையும் அடையாளங்களையும் உள்வாங்கிக் கொள்ளும்.

எதிர்காலத்தில் மின்சார நிழல் என்பது தனிமை, உடைந்த உறவு, செயற்கை வெளிச்சத்தில் வாழும் மனிதரின் நிலை யின்மை ஆகியவற்றைக் குறிக்கும் அடையாளமாகக் கவி தைகளில் தோன்றும். இது ஒரு தலைமுறை உருவகமாக மாறி, பின்நவீனக் கவிதைகளில் மறுபடியும் பல கோணங் களில் விரித்து எழுதப்படும் வாய்ப்பு அதிகம்.

மின்சார நிழல் போன்ற உருவகங்களை digital shadow, light from screens, தனிமை, செயற்கை வெளிச்சம் போன்ற வற்றை பின்நவீனத்துவ கவிதைகளில் பயன்படுத்தும் / சாத் தியமான சமகால தமிழ் கவிஞர்கள் சிலரை இங்கு குறிப்பிடு கிறேன்.

சமகால தமிழ் கவிதை குறிப்பாக பின்நவீனத்துவப் பாதை யில் பயணித்த கவிதைகள், பழைய இயற்கை உருவகங் களையும் பாரம்பரியச் சின்னங்களையும் மீறி, டிஜிட்டல் உலகின் பிம்பங்களை உள்வாங்கத் தொடங்கியுள்ளன. இந் நிலையில், மின்சார நிழல் போன்ற உருவகங்கள், செயற்கை வெளிச்சத்தின் கீழ் வாழும் தனிமை, செயற்கை உறவுகள், அல்காரிதமாதல், கட்டுப்படும் சுதந்திரம், இணையத்தளத் தில் உருவாகும் அடையாளங்கள் போன்ற நவீன நிலை களைக் குறிக்கின்றன.

யுவன் சந்திரசேகர், நவீன தமிழ் கவிதையின் பிந்தைய கட்டத்தை போஸ்ட் மாடர்ன் அழகியல் எனச் சுட்டிக்காட்டிய வராகப் பார்க்கப்படுகிறார். அவரது கவிதைகளில் இணை யத்தளச் சின்னங்கள், நகர வாழ்க்கையின் செயற்கைத் தன்மை, தகவல் தொடர்பு ஆகியவை புதிய உருவகங் களாக நுழைகின்றன. சுகிர்தராணி, தலித் பெண் வாழ்வின் சிதைவுகளைப் பாசாங்கான உலகத்தின் செயற்கை வெளிச் சத்தில் வைத்துச் சொல்லும் கவிஞராக திகழ்கிறார். சல்மா தனிமையையும் பெண்ணியப் போராட்டம் இணையக் கலா சாரத்தோடு இணைக்கும் குரலாக உள்ளார். இவர்கள் கவி தைகளில் மின்சார நிழல் எனும் சொல் நேரடியாக வந்திருக் காவிட்டாலும், அதன் உணர்ச்சி டிஜிட்டல் வாழ்க்கையின் இருள் அடிக்கடி வெளிப்படுகிறது.

ஈழத்து பின்நவீனக் கவிஞர்கள் இந்த உருவகப் பரிமா ணத்தை மேலும் தனித்துவமாக்குகின்றனர். ரியாஸ் குரானா, ஏ. நஸ்புள்ளாஹ் போன்ற கவிஞர்கள் போரையும் இடம்பெ யர்ச்சியையும் நவீன வாழ்வின் சிதைவோடு ஒன்றிணைத்து, புதுமையான உருவகங்களை உருவாக்கியுள்ளனர். ஏ. நஸ் புள்ளாஹ் கவிதைகளில் வரும் வரிகள் அசைவற்ற ஆனால் கூர்மையான படிமங்கள், மின்சார நிழல் போன்ற சொல்லாட லுக்குத் துணையாகின்றன. குரானா கவிதைகளில் போர், நகரம், விளம்பரம், இரவு வண்டிகள் ஆகியவை, நிழலின் புதிய வடிவங்களை உருவாக்குகின்றன. இவை செயற்கை வெளிச்சத்தில் உற்பத்தியாகும் வாழ்க்கையைப் பின்நவீனத் தன்மையில் வெளிப்படுத்துகின்றன.

மேலும் சமீபத்திய ஈழத் தலைமுறைக் கவிஞர்களான வியன் சோய், அருண்குமார் நாவலர், முகிலன் ஆகியோர் இணைய உலகின் சிதைவுகளை வெளிநாட்டு இடம்பெயர்ச்சியின் பிள வுகளோடு இணைத்து கவிதைகளை எழுதி வருகின்றனர். இவர்களது கவிதைகளில் டிஜிட்டல் உருவகங்கள் ப்ளூ ஸ்க்ரீன், பிக்சல் நிலவு, ஆன்லைன் தனிமை அனைத்தும் மின்சார நிழல் என்னும் சின்னத்தைப் பல கோணங்களில் விரிவாக்குகின்றன.

மின்சார நிழல் என்பது, பாரம்பரியக் கவிதைகளில் இல்லாத செயற்கை வெளிச்ச நிழல். இது இயற்கை வெளிச்சத்தில்

tg.theeban@gmail.com

தோன்றும் நிழலைவிட வெப்பமற்றது உயிரற்றது. அதனால் இது மனிதரின் நவீன தனிமையைப் பாசாங்கான உறவுகளை உண்மையை மறைக்கும் செயற்கை உலகத்தைப் பிரதி பலிக்கிறது. இந்தியத் தமிழ் கவிஞர்களும், ஈழத்து தமிழ் கவி ஞர்களும் இந்த உருவகத்தை தங்களின் பின்நவீனச் சோதனைகளில் பயன்படுத்தும்போது, அது ஒரு தலைமுறை யின் அடையாளச் சொல்லாக மாறுகிறது.

மின்சார நிழல் என்ற சொல்லாடல், சமகால பின்நவீனத் தமிழ்க் கவிதைகளின் புதிய சின்னமாக மாறுவதற்கான அடித்தளத்தை ஏற்கனவே பெற்றுவிட்டது. இந்தியத் தமி ழிலும், ஈழத்து தமிழிலும் எழுதும் கவிஞர்கள், டிஜிட்டல் உலகம், செயற்கை வெளிச்சம், தனிமை, சிதைந்த அடை யாளம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு எழுதும் இடத் தில், இந்த உருவகம் மையச்சின்னமாகத் திகழப்போகிறது. பாரம்பரிய நிழலை இயற்கையுடன் இணைத்த கவிஞர் களைப் போல, இன்றைய கவிஞர்கள் நிழலை மின்சாரத் துடன் இணைத்து, மனித வாழ்வின் புதிய இருளை வெளிப் படுத்துகிறார்கள். இங்கு இரு கவிதைகள் குறித்து பேசலாம்.

பொன்முகலி கவிதை:
முன்பு ஒருமுறை யாரும் அதிகம் புழங்காத சாலையில்

***‘தீயாய் எரிந்த***
***சரக்கொன்றை மரத்தின் நிழலில் வண்டியை நிறுத்தி விட்டு***
***போவோர் வருவோர் என்னை வினோதமாய்ப் பார்ப் பதைப்***
***பொருட்படுத்தாது விம்மி விம்மி அழுதேன்.***

***இன்று அந்தச் சாலையில் இருந்து நெடுந்தொலைவு வந்துவிட்டேன்***
***நினைவுகளுக்கும் நரை கூடிவிட்டது.***
***ஆனால்,***
***பயணிக்கிற சாலைகளில் அபூர்வமாய் தென்படுகிற கொன்றைகள்***
***அன்று போலவே இன்றும் எரிகிறது***

***யாரேனும் எப்போதேனும்***
***அதனடியில் நின்று அழுகிறபோது***
***அது தன் மலர்களில் சிலதை அவர்கள் மேல் தூவி***

***‘ஞானம் என்பது ஆசைகளுக்கு அஞ்சுவதில்லை***
***அது கொடுக்கும் வலிகளுக்கு அஞ்சுவது’***

ஏ. நஸ்புள்ளாஹ் கவிதை:
இரவை வாகனமாக நினைத்து ஏறுகிறேன்

***‘இரவை வாகனமாக மாற்றி ஏறுகிறேன்***
***அதன் சக்கரங்கள் நட்சத்திரங்கள்***
***அதன் ஹெட்லைட்***
***ஒரு தவறான நிலவின் ஒளி.***

***இருட்டின் இருக்கைகளில்***
***நினைவுகள் பயணிகளாய் அமர்ந்திருக்கின்றன***
***சிலர் பெயர் சொல்ல மறுக்கின்றனர்***
***சிலர் முகம் மறைத்துக்கொள்கின்றனர்.***

***சாலைகள் தெரியவில்லை***
***ஆனால் இருளின் சத்தம்***
***வழிகாட்டியாக மாறுகிறது...***

***நான் இறங்கும் தருணத்தில்***
***இரவு என்னை நினைவில்லா பாதையில் தள்ளிவிடு கிறது***
***அங்கு***
***நான் தான் எனக்குத் தெரியாத***
***அந்நியனாய் நிற்கிறேன்.’***

மின்சார நிழல் பொன்முகலி மற்றும் ஏ. நஸ்புள்ளாஹ் கவி தைகளில் பின்நவீனத்துவ உருவாக்கம் நுட்பமாக வெளிப்ப டுகிறது. வழக்கமான நேர்முகக் கருத்தாக்கத்திலிருந்து விலகி காட்சிச்சூழலை மிகத் தெளிவாகக் காட்டும் அழகிய உருவகக் கவிதைகளாக இவை அமைகின்றன.

நிழல் என்ற சொல்லே தமிழ்க் கவிதைகளில் நீண்ட வரலாற் றைக் கொண்டது. சங்க இலக்கியத்தில் நிழல் என்பது இயற் கையுடன், உடலுடன், ஒற்றுமையுடனும் வாழ்வின் உடன் பிறப்பாகவும் திகழ்ந்தது. பின்னாளில் நிழல் தனிமை, வெறுமை, மரணம், காதல், ஒளியின் பக்கவிளைவு என பல்வேறு வடிவங்களில் மீண்டும் மீண்டும் கவிஞர்களின் கையிலே மாறியது ஆனால் இன்றைய காலத்தில் நிழல் இயற்கை வெளிச்சத்தில் மட்டும் உருவாகவில்லை. செயற்கை ஒளியின் வெடிப்பு, மொபைல் திரை, மின்விளக்கு, டிஜிட்டல் உலகின் பிக்சல்கள் இவையெல்லாம் மனித வாழ்வின் புதிய இருளையும், புதிய நிழலையும் உருவாக்குகின்றன. அதுவே மின்சார நிழல் எனப்படும்.

இந்த தேடல் அல்லது ஆய்வு பொன்முகலியின் கவிதை யையும் ஏ. நஸ்புள்ளாஹின் கவிதையையும் முக்கியமாகப் பார்க்கின்றது. இரண்டு கவிதைகளிலும் மின்சார நிழல் என்ற சொல்லாடல் வெளிப்படையாக வரவில்லை. ஆனால் அவற் றின் உள்ளமைப்பிலும், உருவகப் பரிமாணங்களிலும், காட் சித் திட்டங்களிலும் மின்சார நிழலின் உணர்வு ஆழமாகக் குடியிருக்கும். பொன்முகலியின் கவிதை இயற்கை வெளிச் சத்திலிருந்து செயற்கை நினைவுகளுக்கான பயணம்.

பொன்முகலி தனது கவிதையில் கொன்றை மரத்தின் கீழ் அழுதுகொண்டிருக்கும் ஒரு தனி மனிதரை சித்திரிக்கிறார். சரக்கொன்றை மரத்தின் நிழலில் வண்டியை நிறுத்திவிட்டு என்ற வரியில் இயற்கையின் அடையாளமாக நிழல் வரும். ஆனால் அது ஒரு சாதாரண நிழலல்ல. தீப்பொறி போல எரிகிற கொன்றை மலர்களின் சாயலில் உருவாகும் நிழல். இதன் வழியாக இயற்கை தானே மனிதரின் உள்ளுணர்வுக ளுடன் சதி செய்கிறது.

ஆனால் கவிதை முன்னேறும்போது, அந்த அனுபவம் நினை வாக மாறுகிறது. நினைவுகளுக்கும் நரை கூடிவிட்டது என்று கவிஞர் சொல்வதன் வழியாக நிழல் என்பது காலத்தால் பாதிக்கப்பட்ட நினைவின் சின்னமாகிறது.

நவீன வாழ்வில், நினைவு இயற்கையின் சுவடுகளில் மட்டு மல்லாமல், செயற்கை உலகின் பதிவு சாதனங்களிலும் புகைப்படம், வீடியோ, டிஜிட்டல் டைம் ஸ்டாம்ப் என அடை யாளம் பெறுகிறது. பொன்முகலியின் கொன்றை நிழல்,

இன்று நாம் எடுக்கும் புகைப்படங்களில் பிக்சல் நிழலாக மாறுகிறது. அழுகை, துக்கம், வெறுமை போன்றவை இனி கண்ணீரின் சுவடுகளில் மட்டுமல்ல, சேமிப்பு நினைவகத்தில் storage memory சிக்கிக்கொள்கின்றன. இங்கு இயற்கை நிழல், மின்சார நிழலின் முன்னோடியாகக் காணப்படுகிறது.

அதே சமயம், கவிதையின் முடிவில் ஞானம் என்பது ஆசைகளுக்கு அஞ்சுவதில்லை / அது கொடுக்கும் வலிகளுக்கு அஞ்சுவது என்ற வரிகள் வெளிப்படும் போது, நிழல் ஒரு கற்பித்தல், ஒரு அறிவுரை வழங்கும் சின்னமாகிறது. இந்த அறிவுரையே பின்நவீன வாசிப்பில் மின்சார நிழல் என்று விளங்குகிறது. ஏனெனில் டிஜிட்டல் யுகத்தில், நிழல் என்பதே மனிதரைத் தொடர்ந்து உலவிடும் அல்காரிதம் போலவும், அவரின் தனிமையைக் கற்றுக்கொடுக்கும் செயற்கை கருவியாகவும் இருக்கிறது.

ஏ. நஸ்புள்ளாஹ்வின் கவிதைத் தொடக்கமே அதிசயமானது, இரவை வாகனமாக மாற்றி ஏறுகிறேன். இங்கு இரவு ஒரு வாகனமாகிறது. அதற்கு சக்கரங்கள் நட்சத்திரங்கள், ஹெட்லைட் ஒரு தவறான நிலவின் ஒளி. இதுவே மின்சார நிழலின் மையக் காட்சி. ஏனெனில், வாகனம், சக்கரம், ஹெட்லைட் ஆகியவை அனைத்தும் செயற்கை பொருட்கள். ஆனால் அவை இங்கு இயற்கை உடன் கலந்து புதிய உருவகங்களை உருவாக்குகின்றன. நட்சத்திரங்கள் சக்கரங்களாக மாறும்போது, வானம் ஒரு சாலை ஆகிறது. நிலவு ஹெட்லைடாக மாறும்போது, இரவு முழுதும் செயற்கை வெளிச்சத்தால் வழிநடத்தப்படுகிறது. இதுவே மின்சார நிழல் உருவாக்கும் உலகம்.

கவிதையின் நடுப்பகுதியில் இருட்டின் இருக்கைகளில் நினைவுகள் பயணிகளாய் அமர்ந்திருக்கின்றன என்று வரும். இங்கு இருட்டு என்பது சாதாரண இயற்கை இருளல்ல அது ஒரு வாகனத்தின் உள்ளிருள். அந்த வாகனமே மனிதரின் மனசாட்சி. இங்கும் மின்சார நிழல் நுழைகிறது. இன்று நாம் பயணிக்கும் வாகனங்கள் அனைத்தும் GPS, திரை, விளக்கு, சத்தம் ஆகியவற்றால் நிரம்பியவை. அந்த வாகனத்தில் நம்முடைய நினைவுகள் பயணிகளாக அமர்கின்றன. சிலர் பெயரைச் சொல்ல மறுக்கின்றனர் சிலர் முகம் மறைக்கின்றனர். இதுவே டிஜிட்டல் வாழ்க்கையின் அவதார் தன்மை; பெயரற்ற, முகமற்ற இருப்புகள். நிழல் இங்கு ஒரு தரவாக data shadow-வாக மாறுகிறது.

கவிதையின் முடிவில் நான் இறங்கும் தருணத்தில் / இரவு என்னை நினைவில்லா பாதையில் தள்ளிவிடுகிறது என்று வரும். இது மின்சார நிழலின் உச்சகட்ட உருவகமாகும். டிஜிட்டல் உலகில் வாழும் மனிதர், எப்போதும் தம்மையே அறியாத அந்நியராகி நிற்கிறார். ஒவ்வொரு logout-இலும், ஒவ்வொரு password மறப்பிலும், அவர் நினைவில்லா பாதையில் தள்ளப்படுகிறார்.

இந்த இரண்டு கவிதைகளிலும் மின்சார நிழல் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. ஆனால் அதன் காட்சி அங்கே நிழல்போலவே தங்கியிருக்கிறது. பொன்முகலியின் கவிதையில், கொன்றை நிழல் ஒரு நினைவின் உருவமாகிறது. அந்த நினைவே இன்று டிஜிட்டல் நிழலாக மாறுகிறது. ஏ. நஸ்புள்ளாஹ்வின் கவிதையில், இரவு வாகனமாகிறது. அந்த வாகனத்தின் ஹெட்லைட், சக்கரம், கண்ணாடி ஆகியவை அனைத்தும் மின்சார நிழலின் உலகத்தைத் திறக்கின்றன.

பின்நவீன சிந்தனையில் உண்மை மற்றும் மாயை இடையிலான எல்லைகள் சிதைந்துவிடுகின்றன. நிழல் உண்மையா? அல்லது மின்சார நிழலா? எது இயற்கை, எது செயற்கை? என்பதைப் பற்றி கேள்விகள் எழுகின்றன. இக்கவிதைகள் அந்தக் கேள்விகளை நம்முள் கிளறுகின்றன.

இந்த இரு கவிதைகளையும் ஒப்பிடும்போது, ஈழத்துக் கவிஞர் ஏ. நஸ்புள்ளாஹ் மற்றும் இந்தியத் தமிழ் கவிஞர் பொன்முகலி இருவரும் ‘நிழல்’ என்பதை வேறு வேறு தளங்களில் தொடுகிறார்கள். ஆனால், இருவரும் பின்நவீன உலகின் செயற்கை விளக்குகளையும் நினைவுகளின் டிஜிட்டல் நிழல்களையும் தங்கள் சொற்களில் ஒளியடிக்கிறார்கள்.

மின்சார நிழல் என்ற சொல்லாடல் இன்னும் வெளிப்படையாக அதிகமாகப் பயன்படுத்தப்படவில்லையெனினும் அது ஏற்கனவே சமகால பின்நவீனக் கவிதைகளில் நுழைந்துவிட்டது. கொன்றை நிழல், இரவு வாகனம் இரண்டுமே இயற்கை நிழலைச் செயற்கை வெளிச்சத்தின் வழியே மறுபரிமாணம் செய்யும் முயற்சிகள். இந்த உருவகங்கள், இன்றைய கவிதைகளில் மின்சார நிழல் எவ்வாறு உருவாகிறது என்பதற்கான தெளிவான சான்றுகள்.

மனிதர்கள் இயற்கையை விட்டு விலகியபோதும், நிழல் அவர்களைத் தொடர்ந்து வருகிறது. அது சூரியனாலோ, நிலவினாலோ உருவாகும் நிழலல்ல. அது திரையின் ஒளி, ஹெட்லைட்டின் ஒளி, விளம்பரப் பதாகையின் ஒளி, பிக்சல் வெளிச்சம் உருவாக்கும் நிழல். அதுவே மின்சார நிழல் சமகால பின்நவீனக் கவிதையின் புதிய சின்னம்.

நிழல் என்பது தமிழ்க் கவிதைகளில் இயற்கையின் பக்கவிளைவாக மட்டும் இருந்ததல்ல. அது மனிதரின் உள்ளுணர்வுகளையும், சமூக அனுபவங்களையும் பிரதிபலித்துள்ளது. ஆனால், பின்நவீன உலகில் நிழல் செயற்கை ஒளியின் தாக்கத்தில் மின்சார நிழல் எனும் புதிய வடிவத்தை அடைகிறது. ‘சரக்கொன்றை மரத்தின் நிழல்’ கவிதையையும், ‘இரவை வாகனமாக நினைத்து ஏறுகிறேன்’ கவிதையையும் மையமாகக் கொண்டு, மின்சார நிழல் உருவகம் எவ்வாறு பின்நவீனக் கவிதைச் சிந்தனையில் வெளிப்படுகிறது என்பதை ஆராய்கிறது. இயற்கை நிழலின் சின்னங்கள் டிஜிட்டல் உலகின் பிக்சல் நிழல்களுடன் எவ்வாறு கலக்கின்றன மனித நினைவும் தனிமையும் எவ்வாறு டிஜிட்டல் சுவடுகளால் ஆக்கிரமிக்கப்படுகின்றன என்பதையும் விவாதிக்கிறது.

சங்க இலக்கியத்தில் நிழல் இயற்கையின் உடன்பிறப்பாக இருந்தது. ஆனால், நவீன வாழ்வில் நிழல் செயற்கை விளக்குகளின் கீழ் உருவாகிறது. மின்விளக்கு, டிஜிட்டல் திரை, ஹெட்லைட், விளம்பரப் பதாகை இவையெல்லாம் மனிதருக்கு புதிய நிழலை வழங்குகின்றன. இந்நிழல் உடலின் பின்புலமல்ல அது மனிதரை உளவுபார்க்கும், அவரது தரவுகளைப் பதிவுசெய்யும் அவரது தனிமையை பின்தொடரும் ஒரு செயற்கை நிலை. இதுவே மின்சார நிழல் என்று குறிப்பிடப்படுகிறது.

இரு கவிஞர்களின் படைப்புகளும் இந்த உருவகத்தைத் துல்லியமாகக் காட்டுகின்றன. ஒருவர் கொன்றை நிழலில்

அழுத அனுபவத்தை நினைவாக்குகிறார், மற்றொருவர் இரவை வாகனமாக மாற்றி அதில் பயணிக்கிறார். இரு வருமே நிழலை இயற்கை வெளிச்சத்தில் தொடங்கினாலும், அதை அவர்கள் செயற்கை உலகின் உருவமாக மாற்றுகின்றனர்.

பொன்முகலி கவிதையில் ‘கொன்றை நிழல்’ இயற்கையின் சின்னமாக வருகிறது. ஆனால், கவிதை முன்னேறும்போது அந்த நிழல் நினைவின் சின்னமாக மாறுகிறது. நினைவுக ளுக்கும் நரை கூடிவிட்டது என்ற வரி, நிழல் காலத்தால் சிதையும் நினைவு என்பதை உணர்த்துகிறது.

ஏ. நஸ்புள்ளாஹ்வின் கவிதை நேரடியாக மின்சார நிழலின் காட்சியை உருவாக்குகிறது. இரவை வாகனமாக மாற்றி ஏறு கிறேன் என்ற தொடக்கம், இரவு ஒரு செயற்கை வாகனமாக மாறுவதை சுட்டுகிறது. வாகனத்தின் சக்கரங்கள் நட்சத்திரங் களாகவும், ஹெட்லைட் நிலவாகவும் மாறுகின்றன. இயற்கை மற்றும் செயற்கை இங்கு கலந்துவிடுகின்றன.

கவிதையில் இருட்டின் இருக்கைகளில் நினைவுகள் பயணி களாய் அமர்ந்திருக்கின்றன என்று வரும் போது, நினைவு கள் முகமற்ற, பெயரற்ற பயணிகளாகத் தோன்றுகின்றன. இது டிஜிட்டல் உலகில் மனிதரின் அடையாளம் data shadow ஆகிப் போவதைக் காட்டுகிறது.

முடிவில் நான் இறங்கும் தருணத்தில் / இரவு என்னை நினை வில்லா பாதையில் தள்ளிவிடுகிறது என்ற வரிகள், டிஜிட்டல் வாழ்க்கையின் சிதைந்த அடையாளத்தைக் குறிக்கின்றன. ஒவ்வொரு logout-இலும் மனிதர் தம்மையே அறியாத அந்நி யராக மாறுகிறார். இதுவே மின்சார நிழலின் உச்ச நிலை.

இரு கவிதைகளிலும் மின்சார நிழல் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. ஆனால் அது சின்னமாக, உள்மொ ழியாக, மறைந்த குரலாக இருக்கிறது.

பின்நவீன சிந்தனையில், உண்மை மற்றும் மாயை இடை யிலான எல்லைகள் சிதைந்துவிடுகின்றன. நிழல் இயற் கையா? செயற்கையா? நினைவா? தரவா? இதைத் தீர்மா னிக்க இயலாத நிலையை இந்தக் கவிதைகள் திறக்கின்றன.

மின்சார நிழல் என்பது சமகாலப் பின்நவீனக் கவிதைகளில் புதிய உருவகமாக எழுந்துவருகிறது. பொன்முகலியின் கொன்றை நிழல் மற்றும் ஏ. நஸ்புள்ளாஹ்வின் இரவு வாக னம் இரண்டுமே இயற்கை நிழலை செயற்கை உலகின் உரு வங்களோடு கலந்துவிடச் செய்கின்றன.

மனிதர் இப்போது சூரியன், நிலவு தரும் நிழலில் மட்டுமல் லாமல், மொபைல் திரை, ஹெட்லைட், மின்விளக்கு, டிஜிட் டல் காட்சிகள் உருவாக்கும் நிழல்களிலும் வாழ்கிறனர். அந்த நிழலே அவரைப் பின்தொடர்கிறது, அந்நிழலே இயற் கையின் நிழலில் இருந்து அவரை அந்நியராக்குகிறது. அதுவே மின்சார நிழல் சமகாலத் தமிழ் பின்நவீனக் கவிதை யின் புதிய அடையாளம்.



Nasbullah.A@thaiveedu.com



ஜெயஸ்ரீ சதானந்தன்

# சோழர்களின் கடல் ஆட்சி

## வரலாற்றின் சிறப்புப் பக்கம்




### முன்னுரை:

*'தண்ணீரும் காவிரியே!*
*தார்வேந்தன் சோழனே!*
*மண்ணாவதும் சோழமண்டலமே!'*

எனச் சோழர் ஆட்சியில் வாழ்ந்த கம்பரின் பாடலில், சோழ மண்டலமே சிறந்தது என்று குறிப்பிடுவதற்கு சோழ மன்னர்களின் வேளாண்மை, நீர் மேலாண்மை, ஆட்சி நிர்வாகம், வாணிகச் சிறப்பு, கோயில் கட்டுமானங்கள், போர்ப்படை, கடல் கடந்தும் கண்டம் கடந்தும் ஆட்சி செய்தமையே காரணிகளாகின்றன. வரலாற்றில் சோழர்களை வியந்து பார்க்க வைத்ததில் தலையானதாக விளங்குவது இவர்களின் கடலாதிக்கமே என்றால் அது மிகையாகாது. சோழர்களின் கடல் வழி வணிகமும், களம் பல கண்ட கடல் ஆட்சிப் போர்களும் இக்கட்டுரையில் ஆய்ந்து நோக்கப்படுகின்றன.

### கரிகாலனின் கடல் வணிகம்:

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த முற்காலச் சோழர்களில் மிகவும் சிறப்புப் பெற்றவன் கரிகால் பெருவளத்தான் ஆவான். இவன் இமயம் வரை சென்று தன் புலிக்கொடியை நாட்டியவன். காவேரியாற்றின் கரைகளை உயர்த்திக் கட்டியவன். இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங் கண்ணனார் அவர்கள் 'பட்டினப்பாலை' என்ற நூலை இயற்றினார். சங்ககால மக்களின் வாழ்வியலைக் கூறும் காலத்தின் கண்ணாடி இந்நூல் என்பது சாலப் பொருந்தும். கடல் ஆதிக்கம் என்று நோக்கும்போது அதை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று கடல் வாணிகம் மற்றையது கடற்போர் ஆகும். இவ்விரண்டினையும் விரிவாகக் கூறும் நூலே 'பட்டினப்பாலை'. இந்த நூலில் சுங்கச் சாவடி அமைந்துள்ள கடற்கரைச் சிறப்பை, 'மாஅ காவிரி மணம் கூட்டும் தூஉ எக்கர்' என்ற தொடர் உணர்த்துகின்றது. சுங்கம் பெறுதல் சோழ நாட்டின் நீண்ட நெடுங்காலமாக நடந்து வரும் செயல் என்பதை 'தொல் இசைத் தொழில் மாக்கள்' என்ற தொடர் காட்டுகிறது. இத்தொடரானது தமிழர் கொண்டிருந்த கடல் வணிகத்தின் பழைமையை எமக்குப் புலப்படுத்துகின்றது.

***'நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,***
***காலின் வந்த கருங்கறி மூடையும்,***
***வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,***
***குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,***
***தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,***
***கங்கை வாரியும், காவிரிப் பயனும்,***
***ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,***
***அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி,***
***வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகின்'***

என்னும் பாடலில், மரக்கலங்களின் வழியே விலைமதிப்பு மிக்க குதிரைகள் வந்தன, வண்டிகளில் வந்த கரிய மிளகு மூடைகளும், வட மலையில் பிறந்த பொன்னும், குடகு மலையில் தோன்றிய சந்தனமும் அகிலும், தென் கடலின் முத்தும், கீழ்த்திசைக் கடலின் பவளமும், கங்கை ஆற்றினால் உண்டான பொருட்களும் அத்தெருவில் திரண்டு காணப்பட்டன. அத்துடன் ஈழத்து உணவும், காழகத்து (பர்மா, தாய்லாந்து) ஆக்கமும் அதாவது கடாரத்தில் இருந்து வந்த அந்நாட்டின் செல்வங்களும் அரியவகைப் பொருட்களும் பெரிய வகைப் பொருட்களும், சிறிய வகைப் பொருட்களும் என அரிய பொருட்களும் பெரிய பொருட்களும், நிலத்தை நெளிக்கும்படி திரண்டு ஒன்றோடொன்று கலந்து இருந்தன. பல நாடுகளில் இருந்து கடல் வழியாக இரவும் பகலும் கப்பல்கள் கடலுக்குள் வருகின்றன, செல்கின்றன. பொருட்கள் வருகின்றன, செல்கின்றன. பல மொழி பேசும் பல நாடுகளைச் சார்ந்தவர்கள் வந்து உறவாடும் நகரமாக புகார் நகரம் இருந்துள்ளது. சூரியன் போலச் சுங்கச் சாவடிகளோ, சுங்கம் பெறுவோரோ ஒரு போதும் ஓய்வு கொள்வதில்லை. நடுவு




நிலைமையுடன் நேர்மையாகச் சுங்கவரி வசூலிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*'புலி பொறித்து புறம்போக்கி*
*மதி நிறைந்த மணி மண்டபம்'*

என்ற அடிகளில் புலிச் சின்னமாகிய இலச்சினையைப் பொறித்தே சுங்கவரி அலுவலர்கள் வெளியே பொருட்களை அனுப்பி வைக்கின்றனர் என்று வருகின்றது. இவை யாவும் பட்டினப்பாலையிலும், ஊர்காண் காதை சிலப்பதிகாரத்திலும் செய்திகளாக உள்ளன. இவற்றை உறுதிப்படுத்தும் முகமாக 'கீழ்க்கரை'ஓரம் கிடைத்த அக்காலத்தைய ரோம நாணயங்களை நோக்கும் போது வெளிநாட்டு உள்நாட்டு வாணிகம் நடந்துள்ளமையை நன்குணரலாம். இவ்வாறாக, கரிகாலச் சோழனின் காலத்தில் கடல் வணிகம் மிகவும் சிறப்பித்து விளங்கியமையும், முறையான வணிகக் கோட்பாட்டையும் சோழநாடு கடைப்பிடித்து வந்திருக்கின்றது என்பதற்கு நமக்குப் பட்டினப்பாலை மிகப்பெருஞ் சான்றாக நிற்கின்றது. 'பெருவளத்தான்' என்ற அடைமொழி அவனுக்கு கிடைத்தது என்றால் அவன் நிர்வாக வளம், நில வளம், கடல் வணிக வளம் என்பவற்றைப் பெருக்கியவன் என்று புரிதல் வேண்டும்.

## சோழன் நலங்கிள்ளியின் கடற்படை:

கரிகால் பெருவளத்தான் வழி வந்த சோழன் நலங்கிள்ளியிடம் பெரும் கடற்படை இருந்ததாகப் புறநானூற்றின் 30-ஆவது பாடல் கூறுகின்றது. பாய்மரக் கப்பலில் உள்ள பாய்களைக் களையாது, சுமையைக் குறைக்காது பெருங்கலங்கள் வந்து செல்லக்கூடிய துறைமுகங்களை உடையவனே என சோழன் நலங்கிள்ளியைப் பார்த்து இப்பாடல் பாடப்படுகின்றது. அக்காலத்தில் பாய்மரக்கப்பல்கள் துறைமுகத்திற்கு அருகே வந்ததும் பாய்களை அகற்றி தமது விரைவினைக் குறைப்பது வழமை. ஆழம் குறைந்த துறைமுகங்களே அக்காலங்களில் இருந்தன. அதுபோல பொருட்களைக் குறைத்துக் கப்பலின் சுமையைக் குறைத்துக் கரைக்கு வருவார்கள். ஆனால், மிகப் பெரிய கப்பல்கள் எளிதாக வந்து செல்லக்கூடிய வகையில் சோழன் நலங்கிள்ளி புகார் துறைமுகத்தை வைத்திருந்தான் என்று கூறப்படுகிறது.

## பெரிப்பிளசின் செங்கடல் வழிகாட்டி:

'பெரிப்பிளசின் செங்கடல் வழிகாட்டி' (Periplus of the Eritrean Sea) எனும் கிரேக்க வரலாற்று ஆவணமானது புகார்த் துறைமுகம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. இதை உறுதிப்படுத்தும் வகையில் சிறிய படகுகளைக் கட்டி வைக்கும் முளைக்குச்சிகள் இருந்த சுற்றுப்புறக் கிராமமான பூம்புகாரிலுள்ள 'கிழார் வேலி' என்னும் இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பனை மரங்களாலான இவை, நீண்ட காலம் இருக்கும் இருப்பைக் கொண்டவை. பொ.ஆ.பி. முதலாம் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட Periplus of the Erithrean Sea' என்ற பயண வழிகாட்டியான இந்நூலானது சங்க காலத் துறைமுகங்கள் பற்றிப் பேசுகின்றது. மாலுமிகள் இவ்வழிகாட்டி நூலைப் பயன்படுத்தி கடற்பயணங்களை நிகழ்த்தினர். இந்த நூல் சோழர் குறித்து வெளிப்படையாகப் பேசாவிட்டாலும் முசிறி, தொண்டி, குமரி, கொற்கை ஆகிய சங்க காலத் துறைமுகங்களைப் பற்றிக் கூறுகின்றது. இவற்றை ஆட்சி செய்தவர்கள் சோழர்களே என்பது குறிப்பிடத்தக்கது. பொ.ஆ.பி. முதலாம் நூற்றாண்டில் ரோமானியர்கள், ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் மற்றும் சீனர்கள் தமிழ்நாட்டோடு வணிகம் செய்ததையும் இந்த நூல் குறிப்பிடுகின்றது. இக்காலகட்டத்தில் சோழப் பேரரசின் வணிகம் மற்றும் துறைமுக நகரங்களாக நாகப்பட்டினம், மாமல்லபுரம், வீரசோழப்பட்டினம், மயிலை போன்ற இடங்கள் திகழ்ந்தன.

இவ்வாறாக சங்க காலத்தில் முற்காலச் சோழர்கள் கடல் ஆதிக்கம் செய்தாலும் இரண்டாம் நூற்றாண்டிற்கு பின்னர், களப்பிரர் மற்றும் பல்லவர் காலம் வரை சோழர்களின் ஆட்சி வலிமை குன்றிக் காணப்பட்டது. பொ.ஆ.பி. 300-இலிருந்து பொ.ஆ.பி. 875 வரையான காலத்தில் ஏறக்குறைய 600 ஆண்டுகள் சிற்றரசர் நிலைக்கு சோழர்கள் தள்ளப்பட்டனர். இக்காலகட்டத்தில் சோழர்களின் கடல் ஆட்சி பெரிதாகப்

பேசப்படவில்லை. அதன்பின் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே சோழர்கள் மீண்டும் வலிமை பெற்றனர். 10-ஆம் 11-ஆம் நூற்றாண்டில் சோழர் காலம் பொற்காலமாக விளங்கியது. 13-ஆம் நூற்றாண்டு வரை சோழர் ஆட்சி நிலவியது. இடைக் காலச் சோழர்களில் பொ.ஆ.பி. 907-இலிருந்து 953-வரை ஆட்சி செய்த விஜயாலயச் சோழனின் பேரன், முதலாம் பராந்தச் சோழன் கடல் வழியாக ஈழம் சென்று போரிட்டு வெற்றி பெற்று 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்ற பெயரும் பெற்றான். இவன் காலத்தில் நெல்லூர் முதல் ஈழம் வரை சோழர் ஆட்சி பரவி இருந்தாலும் ஈழத்தில் ஆட்சி செய்ய முடியவில்லை.

## முதலாம் ராஜராஜன்:

சுந்தர சோழனின் மகன் இராஜராஜன் பொ.ஆ.பி. 985-இலிருந்து 1014 வரை 29 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இதுவே சோழர் வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. அடுத்து வந்த 100 ஆண்டுகளில் இந்தப் பேரரசு இதே வல்லமை பொருந்தியதாக இருந்திருக்கின்றது. கடல் கடந்து இவன் சென்றதனால் இவனின் கடற்படையின் வலிமையும் நன்குணரலாம். இந்துமாக் கடல் வணிகத் துறையை மேம்படுத்தினான். காவிரிப் பூம்பட்டினத்தைச் சிறந்த துறைமுகமாக ஆக்கினான். கடல் வணிகப் பாதையில் இருந்த ஸ்ரீ விஜய நாட்டுடன் நட்பு பாராட்டினான். அரபிய வணிகர் சுலைமானின் செய்தியில் ராஜராஜனின் கப்பற்படை, மாலைதீவுக் கலங்களைத் தோற்கடிக்க கூடிய திறன் மிக்க கலன்களை கொண்டிருந்தது எனக் கூறப்படுகின்றது.

இவன் பொ.ஆ.பி. 993 முதல் இலங்கை மீது படையெடுத்துச் சென்று ஈழத்தை வெற்றி கொண்டதை இவனது எட்டாம் ஆண்டு கல்வெட்டு சான்று பகிர்கின்றது. 5-ஆம் மகிந்தனுடன் போரிட்டு வெற்றி பெற்று 'மும்முடிச் சோழன்' என்ற பட்டம் பெற்றான். இலங்கைப் போரில் அநுராதபுரம் அழிக்கப்பட்டு பொலனறுவை என்ற நகரம் 'சனநாத மங்கலம்' எனப் பெயரிடப்பட்டு சோழரின் தலைநகரமாகக் கொள்ளப்பட்டது. இந்தப் படையெடுப்பைப் பற்றி திருவாலங்காட்டுச் செப்பேடு சான்று கூறுகின்றது. கொழும்பு மாநகரில் பொருட்காட்சிச்சாலையில் கருங்கற்பாறையில் உள்ள கல்வெட்டிலும் 'மும்முடிச் சோழ மண்டலம்' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொலனறுவையில் தாயின் பெயரால் 'வானவன் மாதேவி ஈச்சரம்' என்ற ஆலயத்தை நிறுவினான். தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஈழத்தில் உள்ள சில ஊர்களை நிவந்தமாக்கினான். (இது 'கோயில் சேவை' என்ற பொருளில் சோழர் காலத்தில் பயன் படுத்தப்பட்ட சொல்).

பாண்டி மண்டலம், சேர மண்டலம் அடங்கிய முழுப்பகுதியும் சோழர் வசம் இருந்தது. 'ராஜராஜ தென்னாடு' என இவை அழைக்கப்பட்டன. தொண்டை மண்டலம் என்பது 'ஜெயம் கொண்ட சோழ மண்டலம்' என அழைக்கப்பட்டது. கங்க மண்டலம் கொங்கு மண்டலம், நுளம்பாடி, கலிங்கம், ஈழம் அடங்கிய 'மும்முடிச் சோழ மண்டலம்' சோழர் வசம் இருந்தது. தன் முதுமை உணர்ந்து பொ.ஆ.பி. 1012-இல் மகன் இராஜேந்திரனுக்கு இளவரசர் பட்டம் சூட்டினான். தான் உயிரோடு இருக்கும் போதே மகனை அரசன் ஆக்கினான். பொ.ஆ.பி. 1014-இல் புகழுடன் மறைந்தான்.

## பேரரசன் ராஜேந்திரன்:

ராஜராஜன் கடல் கடந்து தெற்காசியா முழுவதும் சோழர் கொடியை நாட்டப் பெரும் பலமாக இருந்தவன் மகன் இராஜேந்திரன். இளவரசர் பட்டம் பெற்றுத் தந்தையின் காலத்திலேயே போர்க்களம் சென்று 'பஞ்சவன் மாராயன்' என்ற பெயரில் மாதண்ட நாயகனாக வலம் வந்தவன். இராஜேந்திர சோழன் தந்தையின் கப்பற்படையை மேம்படுத்தி படைக்குத் தலைமை ஏற்று 'மும்முடிச் சோழன்' என்ற பெருமையைத் தந்தை ராஜராஜனுக்கு வாங்கிக் கொடுத்தவன். உள்நாட்டிலும் கடல் கடந்த படையெடுப்பிலும் தந்தையுடன் இவன் பங்கு பற்றினான். இவன் முழுமையாக அரசுப் பொறுப்பு ஏற்கும்போது இவனுக்கு 48 வயது என ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். பொ.ஆ.பி. 1012-இல் ஆட்சிப் பொறுப்பேற்று ராஜேந்திரன் பொ.ஆ.பி. 1044 வரை 32 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் சிறப்பு என்னவெனில் பெரும்பாலான வெற்றி பெற்ற நாடுகளை தானே ஆட்சி செய்யாது அவர்களை இணைத்துக்கொண்டு தனக்கு அடங்கி ஆட்சி செய்ய அனுமதித்தான். அங்கு தனது கலாசார விழுமியங்களை விட்டுச் சென்றான்.

## இலங்கைப் போர்:

ராஜராஜன் காலத்தில் இலங்கையின் வட பகுதியில் சில பகுதிகளே சோழர் ஆட்சியில் இருந்தன. ஆனால், இராஜேந்திரன் இலங்கை முழுவதும் வெற்றி பெற்று இலங்கை அரசின் மணி முடியோடு, ராஜசிம்ம பாண்டியன் கொடுத்து வைத்திருந்த பாண்டிய மணி முடியையும், இந்திரன் ஆரத்தையும் செங்கோலையும் கைப்பற்றினான். ஏறக்குறைய சிங்கள தேசம் முழுமையும் இராஜேந்திரன் கரத்தில் வந்தது. தனது கட்டுப்பாட்டின் கீழ் 5-ஆம் மகிந்தனை அரசாளக் கேட்டும் மகிந்தன் பணிந்து வராததால் அவனைக் கங்கை கொண்ட சோழபுரம் கொண்டு வந்து 12-ஆண்டுகள் சிறை வைக்க



அவன் அங்கேயே இறந்தும் போனான். இதை இலங்கை வரலாறு கூறும் 'மகாவம்சம்' பதிவு செய்திருக்கின்றது.

*'பொருகடல் ஈழத்து அரசர் தம் முடியும்*
*ஆங்கவர் தேவியர் ஓங்கு எழில் முடியும்'*

என்ற மெய்க்கீர்த்தி வரிகள் இந்த போர் வெற்றியை எமக்கு எடுத்து இயம்புகின்றன. இராஜேந்திரனின் போர்க் கப்பல்கள் சிறப்பு வசதிகளுடன் உருவாக்கப்பட்டிருந்ததையும், ஆதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய இவர்களின் கப்பற் படை பற்றியும் அரேபியர்கள் பல குறிப்புகள் எழுதி வைத் திருக்கின்றனர். அரிக்கமேடு, மாமல்லபுரம், நாகப்பட்டினம், குளச்சல், கொற்கை, கடலூர், தூத்துக்குடி போன்ற துறை முகங்கள் இராஜேந்திரனின் கப்பற்படைக்குட்பட்டே காணப் பட்டது.

இராஜராஜன் போலவே இராஜேந்திரன் சீனாவோடும் அரேபிய நாடுகளுடனும் சிறந்த நட்பு பாராட்டினான். அதனால், சீனாவில் சோழர்களுக்கான முக்கியத்துவம் கூடியது. சோழர் தேசத்தில் பல்வேறு வணிகக் குழுக்கள் இருந்தன. ஐநூற்றுவர், அஞ்சு வண்ணத்தார், சித்திர மேழி - பெரிய நாடு, மணி கிராமத்தார், நானாதேசிகர், வளஞ்சியர் போன்ற சோழ வணிகக் குழுக்கள் சீனாவோடும் எகிப்து நாட்டோடும் கடாரம் எனப்பட்ட மலேசியாவுடனும் ஸ்ரீ விஜயம் என்ற சுமத்ரா தீவுடனும் வணிகம் செய்தனர். சீன, அரேபிய வாணிகம் பெருகியது. பிரான்மலை மற்றும் கோவில்பட்டி கல்வெட்டுகள் சோழமண்டலத்திலிருந்து ஏற்றுமதியான பொருட்களைப் பட்டியலிடுகின்றன. இராஜேந்திரனுக்காக அஞ்சு வண்ணத்தார் என்ற வணிகக் குழு விதவிதமான குதிரைகளை அரேபியாவில் இருந்து வரவழைத்தனர். இந்த வணிகத்தைக் குலைப்பதில் கடற் கொள்ளையர் ஈடுபட்டனர். இந்த நெருக்கடிகளுக்காக எதிரிகளை அடக்க முதலாவ தாக தனது தலைநகரை மாற்றிக் கங்கை கொண்ட சோழ புரம் சென்றான். உணவு உற்பத்திக்கு இடையூறு இல்லாத வகையில் ஒதுக்குப் புறத்தில் அமைந்தது கங்கை கொண்ட சோழபுரம். வடக்கில் மகிபாலனை அடக்கி கங்கையில் இருந்து நீர் கொண்டு வந்ததால் இப்பெயர் அமையப் பெற் றுள்ளது. சோழரின் ஆட்சி வீழ்ச்சி அடையும் வரை கங்கை கொண்ட சோழபுரமே தலைநகரமாக இருந்தது குறிப்பிடத் தக்கது. கிட்டத்தட்ட 250 வருடங்கள் சோழர் தலைநகரமாக இது விளங்கியது. ஸ்ரீ விஜய நாட்டார் நாளடைவில் ராஜேந் திர சோழனைச் சீண்டத் தொடங்கினர்.

## கடாரம் கொண்டான்:

ராஜராஜன் ஸ்ரீ விஜய நாட்டிற்கு எதிராக மாபெரும் கடற்போர் செய்ய ஆயத்தமாகி பொ.ஆ.பி. 1025 டிசம்பரில் தோப் புத்துறை, வேதாரண்யம் போன்ற துறைமுகங்களிலிருந்து புறப்படத் தொடங்கினான். இலட்சக்கணக்கான வீரர்களுடன் போர்க்கருவிகளும் கலங்களில் ஏற்றப்பட்டன. கடற்படை வீரர்கள் வங்காள விரிகுடாவின் அசைவுகளை நுணுக்கமாக அறிந்து வைத்திருந்தனர். நட்சத்திரங்களின் உயரங்களை கணக்கிட 'விரல் கணக்கு', கடலின் ஆழத்தை கணக்கிட 'நாழிகை வட்டில்', நட்சத்திரங்களை அடையாளம் காண 'இராப்பலகை', வேகத்தை அளவிட 'டப்புப் பலகை' போன்ற சாதனங்களைப் பயன்படுத்தினர். காற்று நிலைகள், நீரோட்ட நிலைகள் அவர்களுக்கு அத்துப்படியாக இருந்தன.

திருவாதிரை நாளில் ஒற்றை வெள்ளி தோன்ற கலங்களைக் கடலில் இறக்கி இலங்கையின் வடகரையை ஒட்டி தெற்கு நோக்கிச் சென்று பின் நேர் கிழக்காக சோழர் படை நகர்ந்தது. 12-15 நாட்களில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் மேற்குக் கரையை அடைந்த சோழர்கள் தமது தாக்கு தலைத் தொடங்கினர். சுமத்ரா தீவை ஆட்கொண்ட பின், சுண்டா நீரிணையில் பயணம் செய்து மலாக்கா நீரிணை யையும் பின் அந்தமான் கடலையும் அடைந்து மலேசி யாவின் மேற்கு கரையில் இருந்த துறைமுகங்களைப் பிடித் தனர். மலேசியாவின் தக்குவப்ப, டிராங், கடாரம், சாண்டோ விரிகுடாவில் இருந்து சையா, லிகோரி, பட்டாணி ஆகிய துறைமுகங்களும் இவர்கள் கைக்குள் வந்தன. ஸ்ரீ விஜய மன்னன் தன் வீரர்களை விட்டு விட்டு புறமுதுகிட்டு ஓட, அவனது மணி முடி, பட்டத்து யானை, பெரும் செல்வத்தை அள்ளிக்கொண்டு ஸ்ரீ விஜயத்தின் கீழ் இருந்த பண்ணை என்கின்ற பகுதியை சோழப்படை கைப்பற்றியது. அதே இடத்தில் இருந்த மற்றொரு ராஜ்ஜியமான மலையூர், மலேசி யாவின் நடுவில் இருந்த மாயிருடிங்கம், இலங்கா சோகம், இலிம்பகம், வளைப்பந்து ஆகியவற்றைத் தன்வசப்படுத் தியது. இலாமுரி தேசம், நிக்கோபார் தீவுகள் இவர்கள் பிடிக்குள் வந்தன. இறுதியாக மலேசிய தீபகற்பம், சுமத்ரா, நிக்கோபார் தீவுகள் உள்ளிட்ட 12 துறைமுக நகரங்கள் சோழர் பிடிக்குள் வந்தன. இந்தக் கடும் தாக்குதலால் நாகப் பட்டினம் முதல் ஸ்ரீ விஜயம் வரையிலான தாய்லாந்தின் சில பகுதிகள், இந்தோனேஷியாவின் முழுக் கடற்பரப்பு, அந்த மான் நிக்கோபார் தீவுகள் உட்பட இந்துமா கடலின் முழுப் பரப்பும் இராஜேந்திரன் கரத்தில் வந்தது. இந்தக் கடற் போரின் மாபெரும் வெற்றியைத் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு நமக்கு சான்று கூறுகின்றது.

*'அலை கடல் நடுவுட் பலகலம் செலுத்தி*
*சங்கிராம விசையோத் தூங்கவர்ம*
*னாகிய கடாரத்தரசனை வாகையும்'*

எனத் தொடங்கும் கல்வெட்டின் அடிகள் இதனைத் தெளிவு படுத்தி நிற்கிறது.

முதலாம் இராஜேந்திர சோழனின் பேரனும், முதலாம் இரா ஜாதிராஜனின் மகனுமான அதிராஜேந்திர சோழன் பொ. ஆ.பி. 1070-இல் மறைந்தவுடன், விஜயாலய சோழனால் தோற்றுவிக்கப்பட்ட நேரடி இடைக்காலச் சோழர் மரபு முடி வுக்கு வந்தது. அதன் பின் நேரடி வாரிசு இல்லாத படியால் சாளுக்கிய வம்சத்தை மணமுடித்த பெண் வழி வாரிசு ஆட்சியைக் கைப்பற்ற சாளுக்கிய சோழர் குலம் உருவா கின்றது. இன்னும் பல்லாயிரக்கணக்கான சான்றுகள் அகழ்ந்து எடுக்கப்படாமலும், படிக்கப்படாமலும் இருக்கும் போதே தனிப் பெரும் சோழர் கடலாட்சி மிகப் பிரமாண்டமாகத் தெளிவாகின்றது. மேலும் மேலும் கொட்டிக் கிடக்கும் வரலாற்று ஆவணங்கள் அறியப்பட்டால், செம்மாந்து ஆட்சி செய்த சோழரின் ஆளுமைகள் கடல் போல் ஆழ்ந்து விரிந்து காட்சி அளிக்கும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.



jeyasri@thaiveedu.com



வாழ்வியலோடு
பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

13

tg.theeban@gmail.com

ரதி திருமணத்தின் பின்னர் தேவர் சபையின் கோரிக்கையை ஏற்றுப் புறப்பட்ட மதன், சிவனின் தபசுக் களத்தை அண்மித்துவிட்டான். சிவனின் வாகன மாக நந்தி அறியப்படுகிறது. சிவாலயங்களில் சிவ பீடத்திற்கு முன்னால் வீற்றிருப்பது நந்தியின் உரு வமே. தமிழர்களின் வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்பை பசுக்களும் காளைகளும் பெற்றுள்ளன. உழவுத் தொழிலுக்கும் விவசாய நடவடிக்கைகளுக் கும் பெரிதும் துணை நிற்பவைகளாக மாடுகள் விளங் குகின்றன. மனிதர்களுக்குத் தேவையான போசாக் கினைத் தருவதில் பசுக்களின் பங்களிப்பு முக்கிய மானது. அவ்வாறே எருதுகள் போக்குவரத்துச் செயற் பாடுகளுக்கு பெரிதும் துணை நின்றுள்ளன. தமது வாழ்வியலுக்கு உறுதுணை புரியும் விலங்கு என்ற வகையில் மூலவருக்கு அருகிலும் அடுத்தும் வைத் துப் பசுவைப் பார்க்கும் வழக்கம் தமிழர்களிடத்தில் உள்ளது. இதனாலேயே, வாழ்க்கைப் பயணத்தில் மனிதருக்கு துணைநின்ற மாடுகளுக்கு நன்றி செலுத் தும் முகமாக மாட்டுப் பொங்கலைக் கொண்டாடு கிறோம்.

ஏகனாக விளங்கும் சிவனிற்கு மெய்ப்பாதுகாவலர், உதவியாளர் என்ற வகையில் நந்தி தேவர் சிறப்பிக் கப்படுகிறார். அவ்வகையில் முக்கியத்துவம் பெறும் நந்தியும் தேவனாக உயர்த்தப்பட்டு இக்கூத்தில் பாத் திரமாக்கப்பட்டுள்ளது. சிவனை நோக்கி வரும் மதனின் வேகத்தை வரையறுக்கும் பொறுப்பு நந்தி தேவனுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ‘நந்தியைப் போல குறுக்கே நிற்கக் கூடாது’ என்ற பிரயோகம் பொதுவாகவே பயன் படுத்தப்படுவது வழமையாகும். இப்பாத்திரத்தை ஏற்பவர் நந்தி முகத்துடன் களத்திற்கு வருகைத்தருவ துண்டு. இக்களத்தில் நந்திதேவர் வெள்ளை உடை யுடன் அலங்கரித்து, வாசற்படியிலுள்ள முக்காலியில் அமர்ந்திருப்பார். மன்மதனின் வரவின் பின்னர் இரு வரும் தமக்கிடையே வணக்கத்தைப் பரிமாறிக்கொள் கிறார்கள். தான் வந்த விடயத்தை நந்திதேவருக்கு எடுத்துச் சொல்லும் பணியை மதன் நிறைவேற்று கிறான். சிவனின் நிலைமையை மதனுக்கு எடுத்துரைக் கும் முனைப்பில் நந்திதேவரின் பிரயத்தனம் தொடர் கிறது. சாதாரணமாக தொடங்கிய உரையாடல் தர்க் கத்துடன் வக்கிரமடைகிறது. சிவனைப் பார்க்கும் வாய்ப்பு மதனுக்கு நந்திதேவரால் தடுக்கப்படுகிறது. இருப்பினும் தனது நிலையில் இருந்து மாறாத வகை யில் மதனின் உத்வேகம் அதிகரிக்கிறது. அமைதி யான தன்மையுடன் காட்சியளிக்கும் நந்திதேவர் கொடூர மான முறையில் ஆடுவதையும் அவதானிக்க முடியும். ‘ஆகாது மன்மதரே போகாதீர் ஈசனிடம் - வால் முடி மதன் துரையே வீண் பழி வந்து சூழும்’ என நந்நிதே வரின் வலியுறுத்தல் தொடரும். மதனைத் தடுக்கும் விடயத்தில் கடும் பிரயத்தனத்துடன் நந்திதேவர் முயன்ற போதும் அதனையும் தாண்டியே மதன் சிவனி டத்தே செல்கிறான். இந்நிலையில் ‘மதனை நந்தி தேவர் தடுத்திருக்கலாம்’ என்ற விமர்சனமும் எழுகிறது.

கைலாயத்தில் மதன், நந்திதேவரிடையேயான உரை யாடல் தொடரும் நிலையில் ஆரோக்கியபுரம் நோக்கி களம் நகர்த்தப்படுகிறது. ஆம் மதனும் ரதியும் இணைந்து துயின்ற பஞ்சணையில் நித்திரை கொள் கிறாள். நித்திரையின் இடையே சொப்பனம் கண்ட நிலையில் ரதி புலம்பத் தொடங்குகிறாள். அச்சந்தர்ப் பத்தைச் சித்தரிக்கும் வகையில் பின்வரும் பாடல் கவனத்தைப் பெறுகிறது.

***‘பாரை ரதிமாது பஞ்சணையில் மேல் துயின்று***
***தேவியவள் கண்ணயர்ந்து நித்திரை செய்தா ளேயன்று***
***பாதிராத்திரி வேளையிலே பத்தினி கனவு கண்டாள்***
***பக்க மதிலிடிந்து பாரில் விழவுங் கண்டாள் ...’***

என்றவாறு தொடர்கிறது. தொடரும் சித்திரிப்புகளில் பின் வருமாறு தீய சகுனங்கள் எனப்படுபவை எடுத்துரைக்கப்படு கின்றன. காவேரி நதி வெள்ளப்பெருக்கு எடுத்து ஓடுவது போலவும், மங்கையின் கூந்தல் கட்டுக்கடங்காமல் விரிந்து பறப்பது போலவும், மாங்கல்யம் அறுந்து வீழ்வது போலவும், கோர்த்திருந்த மலர்கள் வாடியிருப்பது போலவும், குமரிப் பெண்களது மார்புகள் செழுமை நிலையை இழந்திருப்பது போலவும் தீய சகுனங்கள் சூழ்ந்துள்ள இந்நிலையில் சோகத்தோடு மதன் நிற்கிறான். பின்னர், யானையின் மேல் மதன் தனியே ஊர்வலம் வருவது போலவும், கடைத் தெரு வில் வைக்கோல் போர் எரிவது போலவும், பாத்திரத்தில் இருந்து தண்ணீர் தானாக வெளியேறுவது போலவும் காட்சி களைத் தனது கனவில் கண்ட ரதியானவள் இறுதியாகச் சிவனுக்கு அருகிலேயே மதன் எரிவதையும் காண்கிறாள். இந்நிலையை உணர்ந்த ரதி கதறிப் புலம்புகிறாள். அருகிலி ருந்த தோழிகள் எழுந்து ரதியை ஆற்றுப்படுத்த முனைகி றார்கள்.

சிவனை அண்மித்த மதன் சிவனை நோக்கி

*‘போற்றி நான் விளம்புகிறேன்*
*இந்திரன் ஓலை தன்னை*
*ஏற்று வந்தேனையா*
*யுன் தபசழிக்கச் சொன்னான்*
*மாற்றவே றுரைக்க வென்னால்*
*வல்லமையில்லாததாலே*
*சாற்றுவேனுனது யிஸ்டம்*
*சாமியுன் பாதம் போற்றி*

*திங்கள் சிகாமணியே தேவ நாயக்கா போற்றி*
*அந்திகாரனே அதிகாரனே நீலகண்டனே அப்பனே*
*உந்தன் பாதம் போற்றி*
*போற்றி விளம்புகிறேன் புலேந்திரனே கேளாய்*
*ஏற்றுவேன் எனது வில்லை*
*சாத்துவேன் துஸ்டமுடன்*
*சாமி போற்றி சிவனே போற்றி’*

என மன்றாடிய நிலையில் சிவன் மீது வில்லைத் தொடுக் கிறான். இச்சந்தர்ப்பத்தைக் கதை சொல்லும் பாங்குடன் அமைத்திருப்பர். சபைக்கு காமன் மாஸ்ட்டரே கதையை முன்வைப்பார்.

விமலனார் தபசழிக்க வேகமாய் வெள்ளையங்கிரி மலைக் குச் சென்ற மதன், இறைவனின் முன்னே போய் நின்று, ஆண்டவனே உன் பாதம் காண அருள் புரியேன். உன் னோடு பலப்பரீட்சை மேற்கொள்ளும் இந்நிலைமை தவறானது தான். பெரும் மனங்கொண்டு இதை ஏற்க வேண்டும். ஆண், பெண் ரூபமெடுத்து தாவிய நிலையில் வில் வளைத்து ஐந்து மலர் பாணங்களைச் சிவன் மேல் தொடுக்க மதன் தயாரா கின்றான்.

இந்நிலையில் காமன் கூத்துக் களம் பின்வருமாறு அமையப் பெற்றிருக்கும். காமன் மாஸ்ட்டர்களின் பாடலுக்கு ஏற்ற வகையில் தப்பிசை ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும். மதனின் உக்கிரமான ஆட்டமும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும். மதனின் மருள் நிலையைக் கட்டுப்படுத்தும் முனைப்பில் மதனைச் சூழ்ந்து பலர் நின்றுக்கொண்டிருப்பார்கள். மதனின் ஆட்டம் கரும்பு வில்லைச் சுமந்த நிலையில் சிவன் வீற்றி ருக்கும் திசைக்கு எதிர் திசையில் இருந்தே இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இந்நேர ஆட்டத்தின்போது மதனுக்கு அடிக்கடி மருள் வருவதுண்டு. அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். இந்நிலையில் முக்கிய பாத்திரம் ஒன்றின் வருகை சபையின் கவனத்தைப் பெற்றி ருக்கும். ஆம் எமனின் வருகை இடம்பெறும்.

எமன், யமன், தருமன், தருமதேவன், எமராஜன், காலதேவன் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இறப்பின் கடவுள ராக அறியப்பட்டவர். சூரியனின் மகனாகவும் சனீஸ்வரனின் அண்ணனாகவும் புராணங்களில் சித்தரிக்கப்படுகின்றார். வேதத்தின்படி பூமியில் இறந்த முதல் மனிதர் யமன் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. இறப்பின் தெய்வமாகக் கருதப் படும் எமனை மக்கள் பயத்தோடே அணுகுகின்ற போக்கும்



நிலவுகிறது. எமனின் கணக்கு உதவியாளராக சித்திரகுப்தன் காணப்படுகின்ற நிலையில் எமனின் மனைவியாக சியாமளாவும் சித்திரிக்கப்படுகிறாள். யமனைக் கருப்பு நிறத்தில் அல்லது பச்சை நிறத்தில் அடையாளப்படுத்துவதுண்டு. தோட்டங்களில் பொதுவாகக் கருப்பு நிறத்தில் யமனை உருவகப்படுத்திய நிலையிலேயே காமன் கூத்தில் யமனின் வருகை இடம்பெறும். கருப்பு நிறத்திலான ஆடைகளுடன் பாசக்கயிறை ஏந்திய வண்ணம் கொடூரமான தோற்றத்தில் காமன் பொட்டலுக்குள் எமன் வருவதுண்டு. எருமை எமனின் வாகனமாக சித்திரிக்கப்படுகின்ற நிலையில் எருமையை உருவகப்படுத்தி அதன்மீது வருவதாகவும் காட்சி அமைப்பதுண்டு. எமனின் வருகை செயற்பாடுகள் தொடர்பில் பலவாறு பாடல்கள் உள்ளன. இந்நிலையில் பின்வரும் பாடல் அவதானத்தைப் பெறுகிறது. இது எமன் தாமாகவே பாடுவதாக அமைகிறது.

*'...பாசக் கயிறு தானெடுத்துமே*
*எமராஜன் எமராஜன் ஓடிவந்தேனே*
*கையிலே ஆயுதமுமே*
*எமராஜன் எமராஜன் கொண்டு வந்தேனே*
*ஏழேழு உயிர் பிடிக்கவே*
*எமராஜன் எமராஜன் ஓடிவந்தேனே...'*

என்றவாறு அமையும் இப்பாடல் மதனின் உயிர் பிரிவதற்கான களச் சூழலை அடையாளப்படுத்துவதாக அமைகிறது. தோட்டங்களில் சகுனம் தொடர்பான நம்பிக்கையும் எதிர்வு கூறல்களும் அவதானத்தைப் பெறுகின்றன பட்டுப்போன மரக்கிளையில் இருந்து காகம் கரைவது, அடுப்புச் சிதைதல், ஊமைக்கொட்டான் உறுமுதல் போன்ற சகுனங்களைத் தீய சகுனங்களாகப் பார்க்கின்ற நிலையும் காணப்படுகின்றன. இங்கு எமனின் ஆட்டத்திற்கான பாடல்கள், வாழ்வியில் யதார்த்தங்களை எடுத்துரைப்பதாகவும் எமனின் மேன்மையைப் பாடுவதாகவும் அமையப்பெறும். எமனும் களத்தில் இருக்கின்ற நிலையிலேயே மதனின் அடுத்தக்கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் அவதானிக்கப்படும்.

மதனை உருவகப்படுத்திய படம் திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கும். அதிலிருந்து திரைச்சேலை அகற்றப்பட்டு தற்போது மதனை உருவகப்டுத்தியுள்ள படத்தைச் சபையோர் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அப்படத்தைக் காமன் திண்ணையில் எடுத்து வைப்பார்கள். காமன் திண்ணையை எரிப்பதற்கு ஏற்றவாறான வடிவத்தில்தான் அது அமையப்பெற்றிருக்கும். அதற்கு மேலும் விறகுகள் சேர்க்கப்படும். பொதுவாகத் தேயிலை மரங்கள் கவ்வாத்து வெட்டுவதனாலேயே தேயிலைச் செடி என்ற வரையறைக்குள் மட்டுப்படுத்திப் பார்க்கப்படுகிறது. இவ்வாறு கவ்வாத்து வெட்டப்படுகின்ற நிலையில் உருவாகின்ற மிளாறுகள் கட்டுக்கட்டாகக் கட்டப்பட்ட நிலையில் இச்சுடலையோடு இணைக்கப்படும். இச்சுடலையைத் தீ மூட்டுவதற்கு ஏற்றவாறான களச் சூழல் அமையப்பெறும்.

பொதுவாகத், தூதர்கள் தொடர்பான அவதானம் வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டமைந்துள்ளன. தகவல்களைப் பரிமாற்றும் பணியில் தூதர்களின் வகிபங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இறைதூதர், எரிதூதர், ஜெய்தூதர் போன்றவாறு தூதர்களின் வகிபாகம் கவனத்திற்குரியது. கிறீஸ்தவக் கூத்துகளில் இறைதூதர் என்ற பாத்திரத்தின் வகிபங்கு முக்கியத்துவம் பெறுகிறது. காமன்கூத்தில் தொடக்கத்தில் ஓலை எடுத்துவரும் தூதன் பங்கேற்ற நிலையில் எரிதூதனுடைய வரவு தற்போது நிகழ இருக்கிறது. தீயோடு தொடர்புபடுகின்ற செய்தியை எடுத்துவரும் தூதுவனாக எரிதூதன் அனுகப்படுகிறான். நிறைய பந்தங்களைச் சுமந்த நிலையில் களத்திற்கு இப்பாத்திரம் வருகை தருவதுண்டு. மதன் எரியூட்டப்படப்போகிறான் என்ற செய்தியை எடுத்து வருவதாகவும் அமையப்பெறும். எரிதூதனை வாழ்த்தும் பாடல்கள் இசைக்கப்படும். அதற்கேற்ற தப்பிசை முழங்கப்படும். பாடலுக்கும் தப்பிசைக்கும் ஏற்றவாறான ஆட்டத்தை எரிதூதன் பாத்திரத்தை ஏற்பவர் ஆடுவார். இந்நிலையில் அக்கினி தேவனைத் தனியாக உருவகப்படுத்திக் காட்சிப்படுத்தும் முனைப்பும் இடம்பெறும். பொதுவாக இயற்கை தெய்வங்களுள் முக்கிய இடத்தை அக்கினியும் வகிக்கிறது. ஆகம முறையான கிரியைகளில் அக்கினி மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. வாழ்வியலுக்கு தீயின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கும் வகையில் இப்பாத்திரங்களின் பங்கேற்பு காணப்படுகின்றன.

எமனின் வருகை, எரிதூதனின் பிரசன்னம், அக்கினி தேவனின் வரவு என்பதெல்லாம் காமன் பொட்டலை விறுவிறுப்பாக்கிக்கொண்டிருக்கும். திறந்த வெளி என்ற போதிலும் இக்கூத்துடன் தொடர்புபட்ட அரங்க அமைப்பு கவனத்திற்குரியதாகும். ஒரு தலைமையின் வழிப்படுத்தலின் கீழ் பல்வேறு குழுக்கள் தொழிற்படுகின்றன. ஒவ்வொரு குழுக்களும் பொருத்தப்பாடுடனான சைகைகளுக்கு ஏற்றவாறு துலங்கலை மேற்கொள்ளும். நேரமுகாமை, பொருத்தமான சைகைமொழிகள் என்பதெல்லாம் இக்கூத்தை நகர்த்திச் செல்வதில் பெரிதும் துணை நிற்கின்றன. இவற்றைப் பிரயோகிக்கும் அணுகுமுறை கலந்த நுட்பங்கள் மிகுந்த அவதானத்தைப் பெறுகின்றன. இக்களச் சூழலில் மதனுக்கும் சிவனுக்கும் இடையிலான தொடர்புநிலை பற்றிய கவனம் இன்றியமையாததாகிறது. காமன் கூத்தின் உக்கிர தருவாயாக அடுத்த நகர்வு நிகழ இருக்கிறது. களத்தில் காமன் மாஸ்ட்டர் பின்வருமாறு பாடலினைத் தொடங்குவார். தப்பிசை அப்பாடலுக்கு ஏற்றவாறு இசைக்கப்பெறும்.

***'தாமரை மலரெடுத்து தானடித்தார் ஈஸ்பரன்மேல்***
***நந்திவட்டான் மலரெடுத்து நலமாகவே தொடுத்தார்***
***வாடா மல்லிகையால் மகாதேவன் மேல் அடித்தார்***
***செவ்வரலி மலரெடுத்து சிவன் மேலே விட்டடெறிந்தார்***
***முல்லை மலரெடுத்து மூக்கின்மேல் தானடித்தார்'***

எனப் பாடலிசைக்கும் வேளையில் சிவனை நோக்கி கணை தொடுக்கும் வகையில் மதனின் செயற்பாடுகள் அமையப்பெறும். மதனைச் சூழ பலர் பிடித்துக் கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம்.

***'அப்போது ஈஸ்பரனார் அங்கமெல்லாம் தான் பற்றி***
***மட்டுப்படா நெற்றி கண்ணைத் திட்டமுடன் தான் திறக்க***
***நெற்றிகண் பானமது மன்மதனை நெருப்பு தனலாக்***
***கியது...'***



என காமன் மாஸ்ட்டரின் பாடல் நிறைவுறுகிற நேரம் சிவன் அமர்ந்திருக்கும் இடத்தில் இருந்து தீப்பொறி வெளியாகும். கம்பி, வான வெடி ஆகியவற்றைப் பிரயோகித்து இச் செயற்பாடு திட்டமிடப்பட்டிருக்கும். இந்நிலையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுடலையை எரியூட்டும் நட வடிக்கை மேற்கொள்ளப்படும். சுடலை சுடர்விட்டு எரியத் தொடங்கும். மன்மதனுக்கு இந்நிலையில் கட்டுக்கடங்காத நிலையில் மருள் வருவதுண்டு. அம்மருள் நிலையைக் கட் டுக்குள் கொண்டு வருவதற்கு கூத்து ஏற்பாட்டாளர்கள் கடும் பிரயத்தனத்தை எதிர்கொள்வார்கள். அவ்வாறே கைலா யத்தை அடையாளப்படுத்தும் வகையில் உயர்வான இடத் தில், தனியாக மேடை அமைத்திருப்பார்கள். அம்மேடையில் சிவனின் தபசு நிலையைக் காட்சிப்படுத்தும் வகையில் அமையப்பெற்றிருக்கும். கூத்தின் தொடக்கத்தின் முதல் சிவன் பாத்திரத்தை ஏற்பவர் இவ்விடத்தில் வீற்றிருப்பார். சிவன் பாத்திரத்தை ஏற்பவருக்கும் அவ்வப்போது மருள் வரு வதுண்டு. மதன் பானம் தொடுக்கும் நிலையிலும் சுடலை எரி யூட்டப்பட்ட சந்தர்ப்பத்திலும் சிவன் பாத்திரத்தை ஏற்பவ ருக்கு கட்டுக்கடங்காத நிலையில் மருள் நிலை ஏற்படுவ துண்டு. அதனை கட்டுப்படுத்தும் முனைப்பும் மிகக் கடின மாக அமையப்பெறும். சுடலை சுடர்விட்டு எரிகின்ற நிலை யைக் கூத்தில் பங்கெடுப்போர், கூத்தை பார்த்தவர்கள் அனைவரும் ஒரு சேர அவதானிக்கும் சந்தர்ப்பம் முக்கியத் துவம் பெறுகிறது. இந்நிலையில் சூரியன் உதித்த நிலையில் பொழுது புலர்ந்திருக்கும்.

சுடலையைக் கட்டி அதை எரியூட்டி பார்த்து ரசிக்கும் வழக் கம் மலையக மக்களிடத்திதேயும் இருக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகள் சடங்கு முறை சார்ந்த அனுகுமுறையாக இருப்பினும் மக்களிடத்தே சந்தோசத்தை ஏற்படுத்துகின்ற தாகவும் அமைகிறது. தோட்டங்களில் கார்த்திகை தீபத்திரு நாளில் சுடலையைக் கட்டி இவ்வாறு எரியூட்டி பார்த்து மகிழும் சந்தர்ப்பமும் அவதானத்திற்குரியதாகும். கார்த்திகை தீபத்திருநாளில் சுடலை கட்டுதல், அதை பார்வையிடுவ தற்காக மக்களுக்கு அழைப்பு விடுத்தல், சுடலை எரித்தல், சுடலை கட்டுவதற்காக ஊன்றிய மரத்தூண்களை நெருப்பு எரியும் தருவாயிலேயே கழட்டுதல், பட்டக்கொச்சிக்காய் உப்பு சகிதம் தலையைச் சுற்றி அச்சுடலையில் போடுதல், முற்றாக எரிந்த பின்னர் அதிலிருந்து சாம்பலை எடுத்து எண்ணெய் கலந்து குழப்பி பொட்டு வைத்தல் போன்ற செயன்முறைகள் கவனத்திற்குரியவைகளாகும். இவ்விட யங்கள் ஒவ்வொன்றுக்கும் பின்னணியாக அமைந்த காரண காரியங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் முக்கியத் துவம் பெறுகின்றன.

புராண கதைகளில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் சிவனின் நெற்றிக்கண்ணுடன் தொடர்புபடுகின்றன. அவற்றில் ஒன்று மதன் எரியும் தருவாயாக அமைகிறது. மற்றுமொரு சந்தர்ப் பமாக தீப்பொறியில் முருகன் உருவாகும் விதம் காணப்படு கிறது. இவ்விரண்டு சந்தர்ப்பங்களையும் வருடந்தோறும் அனுட்டிக்கும் வழமை தோட்டங்களில் கட்டாய நிகழ்வாக அமைகின்றன. சிவனின் தீப்பொறிகள் சுடர்விடுவதன் அடை யாளமாக எரிக்கப்படும் சுடலைகளில் வெளியாகும் பொறி களைப் பார்த்து மகிழ்கிறார்கள். கார்த்திகை தீபத்தின் போது எரிக்கப்படும் சுடலையில் கொழுந்துக் கூடைகளும் இணைக்கப்பட்டிருக்கும். தற்போது தோட்டங்களில் கொழுந்து கூடைகளின் பிரயோகமே இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது.

தீ சுடர் விட்டு எரிந்துக்கொண்டிருக்கும் தருவாயில் மதன் வேடம் தரித்தவர் அவ்விடத்தை விட்டு அப்புறப்படுத்தப்ப டுவார். இந்நிலையில் ஜெய் தூதரின் வருகை காமன் பொட்ட லுக்குள் இடம்பெறும். இப்பாத்திரத்தின் வருகையின் நோக்கம் மதன் மடிந்து எரிந்த விடயத்தை ரதியானவளுக்கு அறிவிக்கும் பொருட்டாக அமைகிறது. இப்பாத்திரம் எரியும் தீ பந்தங்களை தனது உடம்பு முழுதும் பொருத்திய நிலை யில் காமன் பொட்டலுக்கு வந்து போவதுண்டு. இந்நிலை

யில் தூரத்தே ரதி அமர்ந்திருப்பதை அவதானிக்க முடியும். ஆரோக்கியபுரத்துக்கு ஜெய்தூதர் வருகை தந்து ரதியிடம் மதன் எரிந்து சாம்பலாகிய விடயத்தை எடுத்துக்கூறுவ தாகவே கூத்தின் கதையோட்டம் அமைந்துள்ளது. இந்நிலை யில் ஆரோக்கியபுரத்தில் தோழிப் பெண்கள் சகிதம் ரதி அமர்ந்திருப்பதாகவே சித்திரிக்கப்படுகிறது.

ரதி ஆரோக்கியபுரத்தில் இருக்கும் நிலையும் தூதுவர்கள் வந்து மதனின் இறப்புச் செய்தியை பின்வருமாறு எடுத் துரைப்பதைக் காணலாம். சக்கரையைப் போல் இனிமை யாகப் பேசுபவளும் மின்னல் கொடியுடையாள் என சிறப்பிக் கப்படுபவளுமான ரதியானவள் மதன் சென்றதன் பின்னர் மஞ்சத்திலேயே தலை வைத்திருக்கிறாள். உறக்கம் வராமல் மதனை நினைத்து ஏங்கியவளாகச் சாய்ந்திருக்கிறாள். அங்கு வந்த தூதுவர்கள் ரதியிடம் ஏதோ சொல்ல முயல் கிறார்கள். கைகட்டியவாறு பேசுவதற்கு முடியாமல் வாய் பின்னுகிறது. கண்களில் நீர் சொரிய ரதியைப் பார்த்து 'சோமசுந்தரன் விழியால் மதன் எரிந்துவிட்டான்' என்ற செய்தியைச் சொல்கிறார்கள். கண்டு பயந்தோடியே வந்து, உங்களுக்கு கொண்டு வந்தோம் செய்தியை என்கிறார்கள். செய்தியைக் கேட்ட நிலையில் ரதியானவள், துயரம் தாளா மல் அழுது புலம்பத் தொடங்குகிறாள். ரதியானவள் தோழிப் பெண்களைப் பார்த்து புலம்புகிறாள்.

***'என் சோட்டு பெண்டுகளா இள வாழைத் தண்டுகளா***
***வெற்றிவேர் கட்டுகளா அடி செப்பு முலை தாதிகளா***
***அடி அல்லவரும் வாருங்கடி என் தொல்***
***விளைவைக் கேளுங்கடி***
***என் கண்ணாளரும் மடிந்தார் என்னா நான் செய்வனடி***
***ஆனிமுத்து தாதிகளா நீங்கள் அல்லவரும்***
***கேளுமம்மா***
***அந்த ஆதிசிவன் என் தகப்பன் அநேகர் குடிகெ***
***டுத்தோன்***
***அணிந்திருக்கும் பாம்புகளும் துள்ள துள்ள***
***பிடுங்காதா***
***கஞ்சாகுடுக்கையது பஞ்சாய் உடையாதா***
***புலி தோல் ஆசனத்தை கடித்து போகாதா***
***இந்திரனார் லோகமது செந்தனலாய் வேகாதா***
***அது கண்டு என்னுடைய அங்கம் குளிராதோ'***

என ரதியின் வேதனையை எடுத்துரைப்பதாகக் காமன் மாஸ்ட்டரின் பாடல் அமையும். காமன் கூத்தில் தூதுவர் களின் வருகையின் பின்னரே திருப்பங்கள் ஏற்படுகின்றன. மதன் ரதி திருமண நிகழ்வின் பின்னர் இந்திரனின் செய் தியை மதனுக்கு எடுத்துவருவதில் தூதனின் பங்கேற்பு முக்கியம் பெறுகிறது. அவ்வாறே சிவனை மதன் அண்மித் ததன் பின்னர் எரிதூதனின் வருகை திருப்பத்தை ஏற்படுத்து கிறது. மதன் எரிந்த பின்னர் செய்தியை ரதிக்கு அறிவித் ததன் பின்னர் கதையம்சத்தில் திருப்பம் ஏற்படுகிறது. காமன் கூத்தில் இச்சந்தர்ப்பங்களில் தூதன் ஒருவரே பங் கேற்கும் நிலை காணப்படுகிறது. மாறாக இக்கூத்துப் பாடல் களில் தூதுவர்கள் பலர் இணைந்திருப்பதாகக் குறிப்பிடப் படுகிறது. பொதுவாக தூதுவர்களின் பிரசன்ன நேரங்களில் ஒருவர் மட்டுமே பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது. பாடல் களில் குறிப்பிடப்படும் சித்திரிப்பிற்கு அமைய தூதுவர் களுக்கான பங்கேற்பை அடையாளப்படுத்தும் வகையில் ஒரு பாத்திரத்தை மாத்திரம் அடையாளப்படுத்தும் முனைப்பு கவனத்திற்குரியதாகும்.

காமன்கூத்துப் பாடல்களில் தோழிகள் பற்றிய சித்திரிப்பு களும் முக்கியத்துவம் பெறுகின்றன. மதன் சிவனின் தபசை அழிக்க சென்றவுடன் தோழிப் பெண்களின் துணையுடனே ரதி ஓய்வெடுக்கிறாள். மதனின், பிரிவுத் துயரைத் தோழிகளு டனேயே சம்பாஷிக்கிறாள். மதனின் இறப்புச் செய்தி தரும் வேதனைகளைத் தோழிப் பெண்களிடமே பகிர்ந்துக்கொள் கிறாள். இச்சந்தர்ப்பங்கள் தோழிப் பெண்களின் பங்கேற் பின் அவசியத்தை உணர்த்துகின்றன. மாறாக இக்கூத்து அரங்கேற்றத்தின் போது தோழிகள் பாத்திரங்களாக இடம் பெறுவதில்லை. பொதுவாகக் காமன் மாஸ்ட்டர்கள் இவ்வி டயம் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவது கிடையாது. மலையக மக்களின் பயில் நிலைக்குரிய ஏனைய கூத்து களான பொன்னர் சங்கர், அருச்சுணன் தபசு ஆகிய கூத்து களில் தோழிப் பெண்களின் பங்கேற்பு மிகுந்த அவசியத் தோடு கையாளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தோழிப் பெண்களையும் அடையாளப்படுத்தும் பல பாடல்கள் காமன் கூத்தில் உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறான பாடல்களில் பின்வரும் வரியை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

***'மாமதுரை மீனாட்சி***
***கோமளமே காமாட்சி***
***மங்களமான வள்ளி***
***இங்கிதமிகுந்த செல்வி***
***மங்காத புஸ்பவேணி***
***செங்கம்பள கிருஸ்ணவேணி***
***மற்றுமுள்ள தாதியர்காள்***
***பொட்டெனவே வாருங்களடி'***

மதனின் பிரிவுத்துயரைத் தாங்க முடியாதவளாய் மதனை நினைத்து ரதி புலம்பத் தொடங்குகிறாள். 'மாமோக ரஞ்சிதனே தாமோதரன் புத்திரனே எனக்கு மையல் தரும் மன்மதனே, என்னை விட்டு சென்றுவிட்டாயே. என் மன்ன வனே இந்திரனின் சொல்கேட்டு அந்த ஆண்டவன் மீது பாணந்தொட்டு மாய்ந்து போனாயே. உன்னால் வாழும் சுகத்தை இழந்தேன். பாழாய்ப் போன பெண்ணாய் ஏன் பிறந்தேன்? வாசமிழந்தவளாய் ஆனேன். வாசனைத் திரவி யங்களைப் பூசும் வாய்ப்பை இழந்தேன். வாசமுள்ள பூக் களைச் சூடும் வாய்ப்பை இழந்தேன். என் முகம் மஞ்சள்ப் பொடியைக் காணாதே! செஞ்சந்தனத்தையும் குங்குமத் தையும் வைக்கும் வாய்ப்பை இழந்துவிட்டேனே? அவர் கட்டிய மாங்கல்யம் என்னில் இருந்து தூர செல்லப் போகி றதே! என்னோடு வளர்ந்த மலர்க்கூந்தலை விரித்து மார டித்து மண்ணில் புரண்டும் கதறும் நிலையாச்சே! மலை விழுந்த வீடானேன். அலைகடல் துரும்பானேன். வலை புகுந்த மானானேன். நிலை குலைந்திடலானேன். 'சிறு வய தில் துணையை இழந்தவள்' என எல்லோரும் பேசுவார் களே! கண்டவர்கள் ஏசுவார்களே! இனி என்னை வானவர் கள் எல்லோரும் அவமதிப்பார்கள். தானவர்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். என்னை மாய்த்துக்கொள்வேன். அக் கினியில் நான் குதித்து என்னை மாய்த்துக் கொள்வேன்' என்றவாறு ரதியானவள் புலம்புகிறாள்.



இல்லற பந்தத்தில் கணவன் மனைவியிடத்தே இருக்க வேண்டிய அந்நியோன்யமும் பரஸ்பர நம்பிக்கையும் எவ்வாறு கட்டமைக்கின்றது என்பதை ரதியின் வெளிப்படுத்தல்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. கணவனை இழந்த பெண்ணானவள் எவ்வாறு தனது தன்னம்பிக்கையை இழக்கிறாள் என்ற யதார்த்தத்தை இக்காட்சி வெளிப்படுத்திநிற்கின்றது.

இலங்கையில் மலையகத்தின் இயற்கை நிலக்கட்டமைப்பையும் மற்றும் சூழல் பாதுகாப்பையும் பேண மலையக மக்கள் கடும் உழைப்பைச் சிந்தியுள்ளனர். இதன் விளைவாக மன்மதனின் இழப்பைப் போல சிறு வயதில் உயிரை இழந்த ஆண் மக்களும் உள்ளார்கள். மலையகத்திலும் ரதியின் நிலைமையைப் பெற்ற பெண்களும் உள்ளார்கள். அவ்வாறான நிர்க்கதியான பெண்களின் அடையாளமாகவும் ரதி இம்மக்களால் நோக்கப்படுகிறாள். சரிவான மலைகள், பள்ளத்தாக்குகள், காடுகள், அதீத சுமை தூக்குதல், கடும் மழை, இடி, மின்னல் தாக்குதல், தொழிற்சாலை விபத்துகள், விஷப்பாம்புகள் மற்றும் விச ஜந்துக்களின் தாக்கம், நீர் நிலைகள் மற்றும் காடுகளில் ஏற்படும் பாதிப்பு நிலைகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் உயிராபத்துக்கள் ஏற்படுகின்றன. இச்சூழ்நிலைகள் இளவயது கணவனை இழந்த பெண்கள் உருவாவதற்கு காரணமாக அமைந்தன எனலாம். ரதியின் புலம்பல் வாழ்வியலின் யதார்த்தத்தை எடுத்துரைப்பதாக அமைகிறது. ரதியின் அடுத்தகட்ட தீர்மானங்கள் மிகுந்த முக்கியத்துவத்திற்குரியனவாக விளங்குகின்றன. இந்நிலையில் சிறுவயதிலேயே கணவனை இழந்த பெண்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் ரதியின் முனைப்பு சிறந்த வழிப்படுத்தல் ஆகிறது.

மலையக மக்களைப் பொறுத்த வரையில் போராட்டப் பொறிமுறைகளே உரிமை சார்ந்த உத்தரவாதங்களை ஏற்படுத்தியுள்ளன. அவ்வகையில் கொலைகளால் காவு கொள்ளப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இக்கொலைகள் ‘கொலைகள்தான்’ என சான்றுப்படுத்தாமலே மண்ணில் புதைக்கப்பட்ட சமபவங்களும் ஏராளம் இடம்பெற்றுள்ளன. மனித உரிமைகள் தொடர்பான அவதானம் துளியளவும் இல்லாத நிலையிலேயே பெருந்தோட்டப் பொறிமுறை கட்டமைக்கப்பட்டிருந்தது. இருநூறு வருட சமூகக் கட்டமைப்பில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இலங்கையில் தொழிற்சங்க உரிமை சாரந்த முன்னெடுப்புகளின் பின்னரான உயிர்ப்பலிகள் முல்லோயா கோவிந்தன் தொடக்கம் மலையகத்தில் நிகழ்ந்த வண்ணமுள்ளன. சிவனு லெட்சுமணன், பிரான்சிஸ் அய்யாவு, துரைசாமி, சென்னன், தங்கவேல் என நீளும் இப்பட்டியலில் இவர்களது தியாகம் போற்றுதற்குரியதாகும். எடுத்துக்காட்டாக இந்நிலைமையை எடுத்துரைக்கும் வீதிப்பாடல் ஒன்று பின்வருமாறு அமைகிறது.

***‘கூவியே நான் பாவி***
***குமுரிக் குமுரி அழுகவும்***
***கூடியே நான் பெற்ற***
***குழந்தைகளும் அழுகுதையோ***
***கட்சி கட்சி யென்ற***
***இட்சையால் வீணாக***
***காதலர் என்னருமை***
***கணவர் சொர்க்கம் சென்றதினால்***
***கழுத்து தாலி கேளம்மா... கழட்டிவிட***
***கருமக் காலமாச்சம்மா...’***

என்றவாறு தொடர்கிறது. இவ்வாறான நிலையில் பெண்களுக்கு அதைத் தாங்கும் மனபலத்தையும் அடுத்தகட்ட நம்பிக்கைக்குரிய நகர்வையும் ஏற்படுத்தும் வகையில் ரதி பாத்திரம் ஆதர்சனமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ரதி நிர்க்கதியான நிலையில் அடுத்தகட்டம் தொடர்பில் சிந்திக்கிறாள். இந்நகர்வு நம்பிக்கைக்குரிய முன்னெடுப்பாக அமைகிறது.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com

# வரலாற்றில் ‘ஊடல்’



## திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 5

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

### கடந்த இதழ்களில்,

தலைவன் தலைவியரிடையே ஏற்படும் பிணக்கு, பொய்ச்சினம், பகைத்தல், வெறுத்தல் முதலான செயல்களைக் குறிக்கும் ஒற்றைப் பதமான ‘ஊடல்’, காலம், இடம், இனம், மொழி, பண்பாடு முதலாய எல்லைகளைக் கடந்து, எவருக் கும் எக்காலத்திற்கும் ஏற்புடைத்தாக, இனிய வாழ்விற்குப் பொருந்தும் அன்பின் நுணுக்கங்களைப் படிப்பார் மனத்தில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அனைத்து இலக்கணங்களையும் விஞ்சி நிற்கிறது திருக்குறள் என்பது கருதுகோளாகும்.

திருக்குறளில், ஊடல் பற்றிக் குறிப்பிடும் கருத்துகள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரியனவாக அனைத்து இலக் கண இலக்கியங்களையும் விஞ்சி நிற்கிறது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

- முதலாம் இதழில் தொல்காப்பியத்தில் ஊடலும்
- இரண்டாம் இதழில் சங்கஇலக்கியங்களில் ஊடலும்
- மூன்றாம் இதழில் திருக்குறளில் ஊடல் - புலவி என்னும் அதிகாரத்தில் ஊடலும்
- நான்காம் இதழில் திருக்குறளில் ஊடல் - புலவி நுணுக்கம் என்னும் அதிகாரத்தில் ஊடலும்

பேசப்பட்டன.

தொடர்கிறது...

tg.theeban@gmail.com

### ஊடல் உவகை:

ஊடல் உவகை என்பது ஊடலில் ஏற்படும் மகிழ்ச்சியைக் குறிக்கும் சொற்பதம். இது உளவியல் அடிப்படையில் உருவாகியது.’ ‘நடத்தையியல்’ மேலைத்தேயங்களில் பொ.ஆ.பி. 19-ஆம் நூற்றாண்டளவில் தோன்றி வளர்ந்தது. தமிழ் நாட்டில் இந்த அறிவியல் கலை பொ.ஆ.மு. 7-ஆம் நூற்றாண்டளவில் தோன்றி வளர்ந்துவிட்டது. தொல்காப்பியர் இதனை மெய்ப்பாட்டியலில் விளக்கியிருக்கிறார். ஊடிப்பின் கூடித் தழுவிக்கொள்ளும்போது உடலுறவு வாழ்க்கையில் ஊடல் இன்பம் தரும். அதாவது, ஊடுதல் கூடுதலாகிய உடலுறவில் முடியவேண்டும்.

புலவி, ஊடல், துனி இந்தவகையான பிணக்கைக் குறிக்கும் படிநிலை வளர்ச்சிச் சொற்கள். இந்த மனப்பாங்கு ஆண்களிடமும் பெண்களிடமும் இருப்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

திருக்குறள் ‘ஊடல்’ பாங்கினை துனி, புலவி என்னும் சொற்களால் வேறுபடுத்திக் காட்டுகிறது. துனி என்பது ஊடலின் உச்சக்கட்டம். கனிந்த பழம் போன்றது. துன் என்னும் அடிச்சொல் துன்னி அதாவது நெருங்கி இருப்பதைக் குறிக்கும். ‘துனி’ கூடலில் இன்பமாக அமைந்திருக்கும். பொய்யை இட்டுக்கட்டிக்கொண்டு ஊடும் பாங்கு புலவி எனப்படும். இது பழுக்காமல் பிஞ்சு நிலையில் இருக்கும் கருக்காய் போன்றது. அதாவது ஊடலின் தோன்று நிலையே புலவி. தலைவன் தலைவியரிடையே ஏற்படும் செல்லச்சண்டை (ஊடல்), ஈற்றில் கூடிமகிழும்போது (ஊடல்தீரும்போது) அதன்மூலம் பெறும் இன்பம் அலாதியானது.

புலவிபற்றிப் பார்த்தோம். புலவியின் நுணுக்கம் பற்றியும் பார்த்தோம். இப்போது ‘ஊடல் உவகை’ பற்றித் திருவள்ளுவர் என்ன கூறுகிறார் என்று பார்க்கலாம்.

இருவர் மனப்பிணக்கு அடைகிறார்கள். அவ்வாறு ஏற்படும் பிணக்கில் எவ்வாறு மகிழ்ச்சி உண்டாகும் என்று வினாவிற்கு, ஊடலின் பின் விளைவு மகிழ்ச்சி என்பதைச் சம்பந்தப்பட்ட தலைவனும் தலைவியும் அறிந்தவர்களாதலால் அவர்கள் ஊடல் கொண்டு இன்பம் காண்கின்றனர் என்று கொள்ளலாம். எனவே, தலைவனும் தலைவியும் ஊடலில் உவத்தல் கொள்வது வெளிப்படை.

ஊடல் உவகைபற்றி தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுவதாவது -

‘ஊடல் உவகை’ என்பது, ‘ஊடலால் ஏற்படும் மகிழ்ச்சி.’ ஒரு வரை ஒருவர் புரிந்துகொள்வதும் ஒருவர் மற்றவரை ஆழமாக அறிந்து கொள்வதும், காதலர்கள் அவற்றை அடையாளம் கண்டதால் பெறும் பேரின்பமும் ஆகும். அதனால் முழுமை அடையும் உள்ளொளி பெறுகின்றனர். ‘

தொல்காப்பியரும், புலத்தலும் ஊடலும் காம இன்பத்திற்குச் சிறந்தவை என்றுகிறார். ஊடலின் படிநிலைகள் பற்றியும், ஊடலில் தலைவிக்குரிய மரபு, தோழிக்குரிய மரபு பற்றியும் தெளிவாகக் கூறுகிறார். புலவி, ஊடல், துனி பற்றியும் அவற்றின் வேறுபாடு பற்றியும் உரையாசிரியர்கள் விளக்கு கிறார்கள்.

அடுத்ததாக, திருவள்ளுவர் ஊடல் உவகை பற்றி என்ன கூறுகிறார் என்று பார்க்கலாம்.

***‘இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்***
***வல்லது அவர்அளிக்கு மாறு.’***

*குறள் 1321*

பரிமேலழகர் ஏனைய உரைகாரரிலும் வேறான ஒரு உரை தருகிறார். தலைவன் தவறு செய்யவில்லை, தலைவி காரணம் இல்லாமலே தலைவனிடம் புலக்கின்றாள். ஏன் அவ்வாறு செய்கின்றாய் என்னும் தோழியின் வினாவுக்கு, தலைவி, நகைத்தபடி, ‘அவரிடம் தவறில்லை. ஆனால், யான் எய்தற்பாலதாய இந்தத் தலையளி ஒழிந்தாரும் எய்துவர் எனக்கருதி அது பொறாமையால் வந்த ஊடல்’ என்றாள், என்கிறார்.

***‘ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி***
***வாடினும் பாடு பெறும்.’***

*குறள் 1322*

இக் குறள்பாவில், தலைவி, தான் ஊடுதலால் தலைவனிடம் உண்டாகியிருக்கும் நல்ல அன்பு வாடிவிடக் காரணமாக இருந்தாலும் பரவாயில்லை, அது பெருமை பெறும் என்கிறாள்.

***‘புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு***
***நீரியைந் தன்னா ரகத்து?’***

*குறள் 1323*

இந்த நிலத்தோடு நீர் கலந்திருப்பதுபோல அன்புடைய காத லரிடத்தில் ஊடுவதை விட இன்பம் தருகின்ற தேவருலம் இருக்கின்றதோ என்று ஐயுறுகிறாள். அதாவது, ஊடுதல் அத்துணை இன்பம் பயப்பது. ஊடுதல், தேவருலகைவிடச் சிறந்ததாகத் தலைவிக்குக் காணப்படுகிறது.

***புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்***
***உள்ளம் உடைக்கும் படை***

*குறள் 1324*

காதலரைத் தழுவிக்கொண்டு விடாமலிருப்பதற்கு காரண மான ஊடலுள், என்னுடைய உள்ளத்தையும் உறுதியையும் உடைக்க வல்ல படை தோன்றுகிறது என்கிறாள். இங்கு, உள்ளம் உடைக்கும் படைக்கலம் என்ற துவணக்கத்தையும் பணி மொழியையும் குறிக்கின்றது என்கிறார் பரிமேலழகர்.

***‘தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்றோள்***
***அகறலி னாங்கொன்று உடைத்து.’***

*குறள் 1325*

தவறே செய்யாத நிலையிலும்கூட தன்னுள்ளம் கொள்ளை கொண்டவளின் ஊடலுக்கு ஆளாகி அவளது மெல்லிய தோள்களைப் பிரிந்திருப்பதில் ஓர் இன்பம் இருக்கிறது என்பது இக்குறள்பாவின் பொருளாகும்.

***‘உணலினும் உண்டது அறல்இனிது; காமம்***
***புணர்தலின் ஊடல் இனிது’***

*குறள் 1326*

உண்ணுகின்றபோது உண்டாகின்ற இன்பத்தினைவிட, உண் டது சீரணிக்கின்றதால் உண்டாகும் இன்பம் சிறந்ததாகும். அது போல் காமத்திற்குப் புணர்தலைவிட ஊடலின்பம் சிறந்தாகும்.





*'ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமுன்னும்*
*கூடிலில் காணப் படும்.'*

*குறள் 1327*

காமம் நுகர்வதற்குரிய இருவருள் ஊடலில் தோற்றவர் வென்றவராவார். அது அப்போது அறியப்படாததேயானாலும் பின்னர் புணர்ச்சியின்போது அறியப்படும்.

*'ஊடுதல் காமத்திற்கு இன்பம், அதற்கின்பம்*
*கூடி முயங்கப் பெறின்.'*

*குறள் 1330*

கூடுதல், கருத்து ஒருமித்திருத்தல், தழுவுதல் போன்றவை காம இன்பத்திற்கு உரியவை. அத்தகைய காம இன்பத்திற்கு உரியவையான அனைத்துச் செயல்களும் ஊடல் நிலையில் இல்லை. இவை அற்றநிலை துன்பம் பயத்தலால் இரண்டிற்கும் இடைப்பட்ட புலவி நிலையை நீடிக்கவிடாது, அளவுடன் புலவியை நிறுத்திக்கொண்டு காதலர் இருவரும் தம்முள்கூடித் தழுவிஅளவற்ற இன்பம் பெறல் அரிதாகையால் 'கூடிமுயங்கப்பெறின்' என்றார். இது, திருக்குறளின் இறுதி நூற்பா.

## முடிவுரை:

இன்பத்தை மட்டுமே இடையறாது அனுபவித்துக்கொண்டிருந்தால் அவ்வின்பத்தில் சுவை குன்றிவிடும். கணவன் மனைவியர், காதலன் காதலியரிடையே இடையிடையே சிறு சிறு மன வேறுபாடுகள், சிறு சிறு பொய்க் கோபங்கள் முதலியன ஏற்பட்டுச் சமாதானமாகும்பொழுது ஏற்படும் கூடல் இன்பம் தனியானது. பொதுவாக, புலவி, தலைமகளாலேயே ஏற்படுத்தப்பட்டாலும், திருவள்ளுவர் இவ்வியலுக்கு 'புலவி' என்றே பெயர் சூட்டியிருக்கிறார். ஊடல், ஊடலுக்குக் காரணமானவள், ஊடலால் தலைவன்அடையும் துன்பம், அத்துன்பத்தைத் தலைவியும் தோழியும் கண்டு இரசிப்பது, ஊடல் மிக்கவழி அதனால் ஏற்படக்கூடிய விளைவு என்று இத்தகைய தகவல்களைப் 'புலவி' என்னும் அதிகாரம் எடுத்து வருகிறது.

தொடர்ந்துவரும் 'புலவி நுணுக்கம்', புலவி உண்டாவதற்குக் காட்டப்படும் காரணங்களை விதந்துகூறும் பகுதியாகும். புலவிக்குரிய காரணம் வெளிப்படையாகப் புலப்படாது. அதனால் மிகச்சிறிதாகக் காணப்படும் காரணத்தை பெரிதாக்கிப் புலவி மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய நிலையில் 'ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி' என்று சொல்லப்படுகிறதே, அதுபோன்றது. ஊடலில் காரணங்கள் மிகத்திறமையாகக் கற்பித்துக் கூறப்படுகின்றன, அவை இயல்பாகவும் இரசிக்கக்கூடியதாகவும் உள்ளன. கூடவே, ஊடலில் கண்ணீர், அழுகை, சினம் முதலிய மெய்ப்பாடுகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இங்கு கூறப்படும் ஒவ்வொரு காட்சியும், கவிஞர் மனத்திலிருந்து கிளர்ந்து எழுந்த கற்பனை வளம் மிக்க காட்சிகளாகும். காதலை முற்றாக அனுபவித்த ஒரு கலைஞரின் வெளிப்பாடாகவே இவை காணப்படுவது திருவள்ளுவரின் சிறப்பாகும். புலவி நுணுக்கம் என்பது திருக்குறளில் உள்ள முக்கியமான ஒரு கருத்து.

காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களுள்ளும் புலவி நுணுக்கத்தை ஒப்பது பிறிதில்லை என்று மிக உயர்வாய்ச் சொல்வார் வ.சுப. மாணிக்கம். மேலும் அவர் 'பரத்தயரை ஒதுக்கி ஊடல் அதிகாரங்களை நுணுக்கமாக யாத்த புதுப் பெருமையுடையவர் வள்ளுவர் எனினும் பரத்தமைக் குறிப்பை அவர் ஒதுக்கவில்லை. ஆடவன் நிறையாளன் எனினும் அந்நிறைவு குறைவாகவே பெண்ணுள்ளத்திற்குப் படும் போலும். இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற வரத்தை பெருமகன் இராமனிடங்கூடச் சீதை பெற்றாள் என்பர் கம்பர். ஆடவன் தவறுக்குச் சமுதாயத்தில் வாய்ப்பு உண்டு என்பதையும் அவள் அறிவாள். தன் கணவன் தவறிலன் என்பதையும் அறிவாள். அறிந்து வைத்தும் ஊடற்காலத்துத் தவறுடையான் போலச் சுட்டிப் புலவி மிகுப்பாள். பெண்ணினத்தின் உள்ளோட்டத்தைப் புலவி நுணுக்கத்திற்குப் பயன்படுத்துவர்' எனவும் இவ்வதிகாரம் பற்றிக் கூறியுள்ளார்.

திருக்குறள், ஒட்டுமொத்தமாக, எக்காலத்திற்கும் எம்மக்களுக்கும் பயன்தரும் வகையில் படைக்கப்பட்ட இலக்கியம் என்பதில்ஐயமில்லை. திருவள்ளுவர், தனது எல்லைக்குள், எடுத்துக்கொண்ட எந்தப் பகுதியையும் அதன் ஆளம், அகலம் காணத் தவறவில்லை. இவ்வகையில், வள்ளுவர், இன்பத்தைக் காணவிளையும் மனிதரின், உடல் இன்பத்துடன் உள்ளத்து இன்பத்தையும்கொண்ட 'ஊடல்' என்னும் வாழ்வியல் பகுதியை மிகநுட்பமாகக் கையாண்டிருக்கிறார். இந்நூல் பல்வேறு மொழிகளில் மொழிமாற்றம் செய்ததில் வியப்பு எதுவும் இல்லை.



selvanayaki.s@thaiveedu.com



# இனப்படுகொலையின் அரசியல் - 19

# பெயரிடப்படாத குற்றத்துக்குப் பெயரிடுதல்: இலங்கையும் இனப்படுகொலையும்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## தொடக்கக் குறிப்புகள்:

மே 18, 2009 அன்று, இலங்கையில் போர் ஒரு சமாதான ஒப்பந்தத்துடன் அல்லாமல் பயம், சோர்வு, அங்கீகரிக்கப்படாத மரணத்தின் எடையால் விதிக்கப்பட்ட மௌனம் ஆகியவற்றின் கலவையுடன் முடிந்தது. அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான வெற்றியை அறிவித்தது. மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆனால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு, முடிவு விடுதலை அல்ல; அது பேரழிவு. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் முல்லைத்தீவு கடற்கரையில் மிகக்குறுகிய நிலப்பரப்பில் சிக்கிக்கொண்டனர், வான்வழி, கடல்வழி, தரைவழிக் குண்டுவீச்சிற்கு உள்ளாக்கினர். மருத்துவமனைகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது, உணவுத் தொடரணிகள் தடுக்கப்பட்டன. சரணடைந்த விடுதலைப் புலிகள் காணாமல் போயினர். பின்னர் ஐக்கிய நாடுகள் சபை 'போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுகளை' விவரித்தது. இருப்பினும், துன்பத்தின் மிகப்பெரிய தன்மை இருந்த போதிலும், எந்த அதிகாரபூர்வ சர்வதேச அமைப்பும் இதுவரை நடந்ததை இனப்படுகொலை என்று பெயரிடவில்லை.

இந்தக் கட்டுரை அந்த மௌனத்துடனும், இனப்படுகொலை என்று பெயரிடுவதன் அல்லது பெயரிட மறுப்பதன் அரசியல், தார்மீக தாக்கங்களுடனும் தொடங்குகிறது. இலங்கையின் கதை ஒரு தொந்தரவான சந்திப்பில் உள்ளது. இனப்படுகொலையின் சட்டபூர்வமான நுழைவாயிலுக்கும் இனப்படுகொலை அழிவின் வாழ்ந்த அனுபவத்திற்கும் இடையில் அது ஊசலாடுகிறது. இது கூட்டுக் கொலைகளின் கதை மட்டுமல்ல, பொறுப்புணர்வைத் தவிர்க்க அரசுகள் சட்டம், வரலாறு, இராஜதந்திரத்தை எவ்வாறு கையாளுகின்றன என்பதையும் பற்றிய கதை. இது ஈழத் தமிழர்களின் அன்றாட வாழ்விலும் - வீட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் - உயிர்வாழ்வு, நினைவகம் மற்றும் வன்முறையின் நீண்ட பிற்கால வாழ்க்கை பற்றிய கதையாகும்.

tg.theeban@gmail.com

இனப்படுகொலை என்ற வார்த்தையை 1944-ஆம் ஆண்டு ரஃபேல் லெம்கின்; (Raphael Lemkin) 'ஒரு தேசத்தையோ ஒரு இனக்குழுவையோ அழிப்பதை' (the destruction of a nation or an ethnic group) விவரிக்க உருவாக்கினார். இனப்படுகொலை என்பது வெறும் கூட்டுக் கொலை அல்ல. மாறாக கூட்டு வாழ்க்கையின் அடித்தளங்களை - மொழி, கலாசாரம், தலைமை, சமூக நிறுவனங்கள் போன்றவற்றை - அழிக்கும் ஒரு செயல்முறை என்று லெம்கின் புரிந்து கொண்டார். 1948-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இனப்படுகொலை சமவாயத்தை ஏற்றுக்

கொண்டபோது, இனப்படுகொலை என்பது ஒரு தேசிய இன, இன அல்லது மதக் குழுவை முழுவதுமாகவோ பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட செயல்கள் என்று வரையறுத்தது. இந்தச் செயல்களில் கொலை, கடுமையான தீங்கு விளைவித்தல், அழிவுகரமான வாழ்க்கை நிலைமைகளை ஏற்படுத்துதல், பிறப்புகளைத் தடுப்பது, குழந்தைகளை வலுக்கட்டாயமாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல் ஆகியவை அடங்கும்.

ஆனால் நடைமுறையில், இனப்படுகொலை நிரூபிக்க மிகவும் கடினமான குற்றங்களில் ஒன்றாக மாறியுள்ளது. இதற்குப் பெரிய அளவிலான அட்டூழியங்களுக்கான சான்றுகள் மட்டுமல்ல, குறிப்பிட்ட நோக்கத்திற்கான ஆதாரமும் தேவைப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட ஒரு குழுவை அழிக்கும் நோக்கம். இந்தக் குறுகிய சட்டக் கட்டமைப்பானது, ‘இனப்படுகொலை’ என்ற லேபிளைத் தவிர்த்து, இனப்படுகொலைச் செயல்களைச் செய்ய அரசுகளை அனுமதித்துள்ளது. இனப்படுகொலை, அறிஞர் ஸ்காட் ஸ்ட்ராஸ் கவனிக்கிறபடி, ‘இனப்படுகொலை என்பது ஒரு அரசியல் வகையைப் போலவே சட்டபூர்வமானது. இனப்படுகொலை என்று கருதப்படுவது அதைப் பெயரிடும் அதிகாரம் யாருக்கு உள்ளது என்பதைப் பொறுத்தது.’

இலங்கையில், பெயரிடுதல் தொடர்பான போட்டி போருக்குப் பிந்தைய காலத்தை வரையறுத்துள்ளது. அடுத்தடுத்த அரசாங்கங்கள் தங்கள் இராணுவ நடவடிக்கை தமிழர்களுக்கு எதிரானது அல்ல, பயங்கரவாதத்திற்கு எதிரான ‘மனிதாபிமான நடவடிக்கை’ என்று வலியுறுத்தி வருகின்றன. சர்வதேச அரங்காடிகள் - மேற்குலகு, இந்தியா, சீனா உள்ளிட்டவை - பாரிய அட்டூழியங்களுக்குப் போதிய சான்றுகள் இருந்தபோதிலும், போரை ஒரு உள்நாட்டு விடயமாகக் கருதினர். ஐக்கிய நாடுகள் சபையின் சொந்த உள் மதிப்பாய்வு, வெகுஜன பொதுமக்கள் படுகொலைக்கான எச்சரிக்கை அறிகுறிகளின் மீது செயல்படத் தவறியதை இனங்கண்டது. அதன் ‘முறையான தோல்வியை’ ஒப்புக்கொண்டது. ஆயினும்கூட, எந்த அரச அல்லது சர்வதேச நீதிமன்றமும் இந்த நிகழ்வுகளை இனப்படுகொலை என்று முறையாக அங்கீகரிக்கவில்லை. அப்படியானால், என்ன நடந்தது என்பது மட்டுமல்ல, அது ஏன் பெயரிடப்படாமல் உள்ளது என்பதும் கேள்வியாகும்.

2009 வன்முறை எங்கிருந்தும் தோன்றவில்லை. 1948-இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டதன் உச்சகட்டமாகும். புதிதாகச் சுதந்திரம் பெற்ற அரசு, சிங்கள-பௌத்த தேசியம் என்ற பெரும்பான்மைவாத கற்பனையின் அடிப்படையில் அதன் அரசியல் சட்டபூர்வமான தன்மையைக் கட்டமைத்தது. இலங்கை குடியுரிமைச் சட்டம் (1948) கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தது. சிங்களம் மட்டும் சட்டம் (1956) மொழியியல் விலக்கு முறையை நிறுவனமயமாக்கியது, தமிழர்களை சம குடிமக்களாக இருந்து இரண்டாம் தர குடிமக்களாக மாற்றியது. 1956, 1958, 1977 என்று தொடங்கி மிகவும் கடுமையாக 1983-இல் நடந்த தொடர்ச்சியான படுகொலைகள் தன்னிச்சையான வெடிப்புகள் அல்ல, மாறாக அரசால் பொறுத்துக்கொள்ளப்பட்ட அல்லது தூண்டப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட பிரசாரங்கள்.

> “இலங்கை குடியுரிமைச் சட்டம் (1948) கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தது. சிங்களம் மட்டும் சட்டம் (1956) மொழியியல் விலக்கு முறையை நிறுவனமயமாக்கியது, தமிழர்களை சம குடிமக்களாக இருந்து இரண்டாம் தர குடிமக்களாக மாற்றியது.”

இந்த அரச வன்முறையின் ஒவ்வொரு அத்தியாயமும் குறைகள், தண்டனையிலிருந்து விலக்கு, இன துருவமுனைப்பு சுழற்சியை ஆழப்படுத்தியது. இனப்படுகொலை ஆய்வுகளின் மொழியில், இவை ‘பூர்வீக-இனப்படுகொலை தருணங்கள்’ (proto-genocidal moments). இந்தக் கூட்டு வன்முறை, தமிழர்களை ஒரு குழுவாக குறிவைக்கும் அரசின் விருப்பத்தை இயல்பாக்கியது. தமிழ் கலாசார பாரம்பரியத்தின் மிகப்பெரிய களஞ்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாண பொது நூலகம் 1981-இல் அழிக்கப்பட்டது. இது மக்கள் மீது மட்டுமல்ல, நினைவகம் மீதும் ஒரு தாக்குதலைக் குறிக்கிறது. இந்த நிகழ்வுகளை ஒன்றாக எடுத்துக்கொண்டால், இன ஆதிக்கத்தின் தொடர்ச்சியான செயல்முறையை உருவாக்கியது என்பதையும் 2009-ஆம் ஆண்டு படுகொலைகளுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே சட்டங்கள், கொள்கைகள் மற்றும் படுகொலைகள் மூலம் இயற்றப்பட்ட ‘மெதுவான இனப்படுகொலை’ என்று இதை இனங்காணலாம்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் (1983–2009) அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்ததாக வெளித்தோற்றத்தில் கூறப்பட்டது. ஆனால் அதன் விளைவுகள் தமிழ் பொதுமக்கள் மீது விகிதாசாரமற்ற முறையில் தாக்கின. வடக்கு கிழக்கில், அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை விதித்தது. உணவு மற்றும் மருந்தைக் கட்டுப்படுத்தியது, மேலும் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடத்தியது. பாடசாலைகள், கோயில்கள், மருத்துவமனைகள் இலக்குகளாக மாறின. புலிகள், கட்டாய ஆட்சேர்ப்பு, படுகொலைகள் உட்பட கடுமையான துஷ்பிரயோகங்களைச் செய்தனர். இருப்பினும், அதிகாரத்தின் சமச்சீரற்ற தன்மை சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தது: இலங்கை அரசு வானத்தையும், கடலையும் மட்டுமல்ல, உலகளாவிய கதையாடலையும் கட்டுப்படுத்தியது.

2000-களின் நடுப்பகுதியில், அரசாங்கத்தின் கிளர்ச்சி எதிர்ப்பு உத்தி முழுமையான போரின் பிரச்சாரமாக பரிணமித்தது. ‘மனிதாபிமான மீட்பு நடவடிக்கை’ என்ற போர்வையில், இராணுவம் இலட்சக்கணக்கான பொதுமக்களைப் பாதுகாப்பு வலயங்கள் என்று அழைக்கப்பட்ட பகுதிகளுக்குள் அடைத்து வைத்தது; பின்னர் அங்கு இடைவிடாமல் ஷெல் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன. செயற்கைக் கோள் படங்களும் சாட்சியங்களும் கூட்டுப் புதைகுழிகளையும் பொதுமக்கள் படுகொலைகளையும் ஆவணப்படுத்தின. சர்வதேச பத்திரிகையாளர்கள் தடை



செய்யப்பட்டனர். மனிதாபிமான அணுகல் மறுக்கப்பட்டது. ஐ.நா. ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

சாட்சிகளை முறையாக மூடுவது தற்செயலானதல்ல - இனப்படுகொலை அறிஞர் ஜாக் செமலின் (Jacques Sémelin) ‘அழிவின் கட்டடக்கலை’ (architecture of destruction) என்று அழைப்பதன் ஒரு பகுதியாகும். தகவல்களை ஏகபோகமாக்குவதன் மூலம், நம்பத்தகுந்த மறுப்பு என்ற போர்வையின் கீழ் பரந்தளவிலான அட்டூழியங்கள் வெளித்தெரியாமல் நிகழ்த்தப்படுவதை அரசு உறுதி செய்தது. போர் முடிந்ததும், அரசாங்கம் வெற்றியை வெற்றி அணிவகுப்புகள் மற்றும் பௌத்த சடங்குகளுடன் கொண்டாடியது. சமரசம் இல்லை, பழிவாங்கல் மட்டுமே இருந்தது.

## இனப்படுகொலை பற்றிய இலங்கையின் புதிர்:

இனப்படுகொலை ஆய்வுகளுக்குள், இலங்கை ஒரு பகுப்பாய்வு புதிரை முன்வைக்கிறது. ஐ.நா. நிபுணர் குழுவும் (2011) இலங்கை மீதான மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் அலுவலக விசாரணையும் போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கான நம்பகமான ஆதாரங்களைக் கண்டறிந்தன. ஆனால் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தன. நோக்கம் குறித்த நீதித்துறை தீர்மானம் இல்லாததே காரணம். இருப்பினும், அறிஞர்கள் பலர் நடத்தை முறைகளிலிருந்து பல இனப்படுகொலை நோக்கத்தை ஊகிக்க முடியும் என்று வாதிடுகின்றனர். இஸ்ரேலிய சட்ட நிபுணர் யோராம் டின்ஸ்டீன் குறிப்பிடுவது போல, ‘எந்தவொரு குற்றவாளியும் வானொலியில் இனப்படுகொலை நோக்கத்தை அறிவிப்பதில்லை.’ மருத்துவமனைகளை அழித்தல், மனிதாபிமான உதவி மறுப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்களை குறிவைத்தல் ஆகியவை இனப்படுகொலை நோக்கத்தின் சூழ்நிலை குறிகாட்டிகளாக செயற்பட முடியும்.

டேனியல் ஃபீயர்ஸ்டீன் (Daniel Feierstein) மற்றும் கிரிகோரி ஸ்டாண்டன் (Gregory Stanton) போன்ற அறிஞர்கள் இனப்படுகொலை என்பது ஒரு செயல்முறையாக மட்டுமே புரிந்துகொள்ளப்படுகிறது, வெறும் ஒரு நிகழ்வு அல்ல என்பதை வலியுறுத்தியுள்ளனர். ஸ்டாண்டனின் ‘பத்து நிலை இனப்படுகொலை’ - வகைப்பாடு, அடையாளப்படுத்தல், பாகுபாடு, மனிதாபிமானமற்ற தன்மை, அமைப்பு, துருவப்படுத்தல், தயாரிப்பு, துன்புறுத்தல், அழிப்பு மற்றும் மறுப்பு - இலங்கைக்கு தொந்தரவான துல்லியத்துடன் பயன்படுத்தப்படலாம். இங்கு நான்கு விடயங்கள் முக்கியமானவை.

- இனத்துவப் பாகுபாடுகள் சுதந்திரம் முதலே இருந்துள்ளன. குறிப்பாக குடியுரிமை பறிப்பு, தனிச்சிங்களச் சட்டம் என்பன திட்டமிட்ட ஒதுக்கலின் அடையாளப்படுத்தல்கள் ஆகும்.
- இனரீதியான பாகுபாடு, மனிதாபிமானமற்ற தன்மை ஆகியவை அரசு கொள்கை மற்றும் பிரசாரம் மூலம் நிறுவனமயமாக்கப்பட்டன.
- பாதுகாப்புத் தொடர்பான இனத்துவக் கதையாடல், தமிழருக்கெதிரான துருவமுனைப்பு தீவிரமடைதல், இராணுவத்தின் இனத்துவச் செயற்பாடுகள் என்பன போரின் போது எதிரொலித்தன.
- 2008-2009 காலப்பகுதியில் உச்சத்தை அடைந்த கொலைகள், சித்திரவதைகள், காணாமலாக்கப்படுதல்கள். அவை நிகழ்ந்ததை இலங்கை அரசு மறுப்பதும் இன்றுவரை தொடர்கிறது.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இலங்கை அரசின் நடத்தை ஓர் இனப்படுகொலை செயல்முறையை உருவாக்குகிறது. நோக்கத்திற்கான சட்டபூர்வ ஆதாரம் நீதிமன்றத்தில் சோதிக்கப்படாவிட்டாலும்கூட சட்டபூர்வ பின்னணியில் இனப்படுகொலை செயல்முறைக்கும் இனப்படுகொலை செயல்முறைக்கும் இடையிலான இந்த வேறுபாடு முக்கியமானது.

இனப்படுகொலை என்பது கொலை செய்வது மட்டுமல்ல. அது அழிப்பதும் பற்றியது. 2009-க்குப் பிறகு, இலங்கை அரசாங்கம் வரலாற்றை மீண்டும் எழுதும் பிரசாரத்தில் இறங்கியது. தமிழ் பொதுமக்களுக்கான நினைவுச்சின்னங்கள்

அழிக்கப்பட்டன. கல்லறைகள் புல்டோசர்களால் இடித்துத் தள்ளப்பட்டன. நினைவு நிகழ்வுகள் தடை செய்யப்பட்டன. வடக்கு கிழக்கில் கண்காணிப்பு பரவலாகியது. மேலும் உண்மையைத் தேடுவதற்காக காணாமல் போனவர்களின் குடும்பங்கள் துன்புறுத்தப்பட்டனர். இராணுவம் குடிமக்களின் வாழ்க்கையில் ஆழமாகப் பதிந்துள்ளது. நிலம், வணிகம், கல்வி என்பவற்றைக்கூட கட்டுப்படுத்தியது. இன்றும் பல வழிகளில் கட்டுப்படுத்துகிறது.

இம்முறை இனப்படுகொலையின் இறுதிக் கட்டத்தை பிரதிபலிக்கிறது - மறுப்பு - இதை ஸ்டாண்டன் அதன் உறுதியான குறிகாட்டியாக விவரிக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் கதைகள் அமைதியாக இருப்பதையும், குற்றவாளிகள் கொண்டாடப்படுவதையும் உறுதி செய்வதன் மூலம் மறுப்பு வெற்றியை ஒருங்கிணைக்கிறது. இலங்கையில், மறுப்பு வெளிப்படையானதும் நுட்பமானதுமான வடிவங்களை எடுத்துள்ளது: உத்தியோகபூர்வ வெற்றிவாதம், பாடப்புத்தகங்களை மீண்டும் எழுதுதல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் துக்கத்தை குற்றமாக்குதல் என்பன அவ்வடிவங்களுக்கான சில உதாரணங்கள். சர்வதேச அளவில், இராஜதந்திர கூட்டாண்மைகள், புவிசார் அரசியல் நலன்கள் இலங்கையை அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலில் இருந்து தனிமைப்படுத்தியுள்ளன. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீனாவும் ரஷ்யாவும் 'மேற்குலகத் தலையீடு' என் பதைக் காரணம் காட்டி இலங்கையைக் காப்பாற்றின. மேற்குலகத் தலையீடும் தமிழர்கள் நலன் சார்ந்ததாக இருக்கவில்லை. மாறாக தமது நலன்களுக்கு ஒவ்வாத இலங்கையின் ஆட்சியாளர்களைத் தண்டிப்பது பற்றியதாகவே இருந்தது. காலப்போக்கில் மேற்குலகிற்குச் சார்பான ஆட்சி இலங்கையில் அமைந்ததும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இலங்கை ஒரு விடயதானமாகவே இல்லை என்பதையும் நோக்க வேண்டியுள்ளது. இந்தக் குற்றங்கள் தொடர்பில் இந்தியாவும் தலையீட்டை விரும்பவில்லை, அதற்குச் சொந்தக் காரணிகள் இருந்தன. இலங்கையிலோ பிராந்தியத்திலோ ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் அமைவதை இந்தியா எதிர்த்தது. அது தனது நலன்களுக்குப் பாதகமாக அமையும் எனக் கருதியது. மேற்கத்தேய அரசாங்கங்கள் இலங்கையின் ஸ்திரத்தன்மையையும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பையும் முன்னுரிமைப்படுத்தின.

எனவே, போருக்குப் பிந்தைய மௌனம் தற்செயலானது அல்ல - அது கட்டமைப்பு ரீதியானது. இது அறிஞர் ஸ்டான்லி கோஹன் (Stanley Cohen) 'மறுப்பு நிலைகள்' (states of denial) என்று அழைப்பதைக் குறிக்கிறது, அங்கு சமூகங்கள் கூட்டாகத் தாங்கள் அறிந்ததைப் பார்க்க மறுக்கின்றன. இலங்கையர்களும் உலகமும் எதிர்கொள்ளும் கேள்வி, அத்தகைய மறுப்பிலிருந்து நீதி வெளிப்படுமா, அல்லது இலங்கை அங்கீகரிக்கப்படாமல் இனப்படுகொலையின் பாடப்புத்தக வழக்காகவே இருக்குமா என்பதுதான்.

> **“போர் முடிந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும், உண்மை மற்றும் நீதிக்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. தமிழ் ஆர்வலர்களும் உயிர் பிழைத்தவர்களும் இனப்படுகொலையை அங்கீகரிக்கக் கோருகின்றனர் - பழிவாங்கு வதற்காக அல்ல, மாறாக உண்மையை உறுதிப் படுத்துவதற்காக.”**

போர் முடிந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும், உண்மை மற்றும் நீதிக்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. தமிழ் ஆர்வலர்களும் உயிர் பிழைத்தவர்களும் இனப்படுகொலையை அங்கீகரிக்கக் கோருகின்றனர் - பழிவாங்குவதற்காக அல்ல, மாறாக உண்மையை உறுதிப்படுத்துவதற்காக. புலம்பெயர்ந்தோரில், இளைய தலைமுறையினர் காப்பகங்களை மீண்டும் கட்டமைத்து, சாட்சியங்களைச் சேகரித்து, அரசால் அழிக்கப்படுவதை எதிர்க்கும் வகையில் டிஜிட்டல் நினைவுச் சின்னங்களை உருவாக்குகின்றனர். இருப்பினும், இலங்கைக்குள், அரசியல் சூழல் பெருகிய முறையில் அடக்கு முறையாக வளர்ந்துள்ளது. 'தேசிய நல்லிணக்கம்' என்ற அரசாங்கத்தின் சொல்லாட்சி ஆழமான கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளையும் தமிழ் பகுதிகளின் தொடர்ச்சியான இராணுவ மயமாக்கலையும் மறைக்கிறது.

அதே நேரத்தில், உலகளாவிய அரசியல் மாறி வருகிறது. மியான்மர் மற்றும் காம்பியா மீதான சர்வதேச நீதிமன்றத்தின் வழக்குகள், யாசிதிகளுக்கும் ரோஹிங்கியாக்களுக்கும் எதிரான இனப்படுகொலைகளை அங்கீகரிப்பது, உலகளாவிய அதிகார வரம்பை அதிகரித்து வருவது ஆகியவை பொறுப்புக் கூறலுக்கான புதிய முன்னுதாரணங்களை உருவாக்கியுள்ளன. கடுமையான புலமைத்துவ, மூலோபாய ஒருங்கிணைப்பை அடிப்படையாகக் கொண்டால், இந்த முன்னேற்றங்கள் இலங்கையின் மீது புதுப்பிக்கப்பட்ட வாதத்திற்கு இடமளிக்கின்றன. ஆனால் அதை வினைத்திறனுடன் சாத்தியமாக்க நாம் தயாராக இருக்கிறோமா என்பதுதான் முக்கியமான வினாவாகும்.

இந்தக்கட்டுரை மூன்று தலையீடுகளைச் செய்ய முயல்கிறது. முதலாவதாக, இலங்கை வழக்கு இனப்படுகொலை ஆய்வுகளுக்குள் நேரடியாக அமைந்திருக்க வேண்டும் என்று அது வாதிடுகிறது; ஒரு சுய-பொது சிவில் மோதலாகவோ பயங்கரவாத எதிர்ப்பு பிரசாரமாகவோ கருதப்படக் கூடாது. அவ்வாறு செய்வது, உரிமை பறிப்பு, மொழியியல் தேசியவாதம் போன்றவற்றுடன் தொடங்கி வெகுசன அழிப்பில் உச்சத்தை அடைந்த அழிவின் தொடர்ச்சியை அங்கீகரிக்க அனுமதிக்கிறது. இரண்டாவதாக, சட்டபூர்வ இனப்படுகொலைக்கும் இனப்படுகொலை செயல்முறைகளுக்கும் இடையிலான கருத்தியல் வேறுபாட்டை இது தெளிவுபடுத்துகிறது. முந்தையது நோக்கத்தை நீதித்துறை தீர்மானிப்பதைக் கோருகிறது. பிந்தையது, கொலை தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே கட்டமைப்புகள், சித்தாந்தங்கள், தண்டனையின்மை மூலம் இனப்படுகொலை தர்க்கம் எவ்வாறு செயற்படுகிறது என்பதைப் பார்க்க நம்மை அழைக்கிறது. துல்லியமாகச் சொன்னால் உலகின் முழு பார்வையில் மெதுவாக உருவான ஓர் இனப்படுகொலை, பல தசாப்தங்களாக அரசு வன்முறையால் இயல்பாக்கப்பட்டது என்பதே இலங்கையின் சோகம். மூன்றாவதாக, இலங்கைக்குள்ளும் புலம்பெயர்ந்தோர் முழுவதும் உள்ள தமிழ் ஆர்வலர்கள் - அங்கீகாரம், பொறுப்புக்கூறல், நினைவாற்றலைக் கட்டியெழுப்புவதற்கு என்ன செய்ய முடியும்



என்பதை இது ஆராய்கிறது. இது நிலைத்தன்மையின் அரசியலுக்காக வாதிடுகிறது: ஆவணப்படுத்தலில் முதலீடு செய்தல், சர்வதேச கூட்டணிகளை உருவாக்குதல், இடைக்கால நீதி வழிமுறைகளில் ஈடுபடுதல் மற்றும் பிற உயிர் பிழைத்த சமூகங்களுடன் நாடுகடந்த ஒற்றுமையை வளர்ப்பது பற்றிப் பேசுகிறது.

## நீதிக்கான கட்டமைப்பை நோக்கி:

முன்னோக்கி செல்லும் பாதை சிக்கலானது. இனப்படுகொலையை சட்டபூர்வமாக அங்கீகரிப்பது என்பது ஒரு முடிவல்ல. அது உண்மைக்கும் இழப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்கும் இதே குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குமான ஒரு வழியாகும். ஆனால் முறையான தீர்ப்பு இல்லாவிட்டாலும், இனப்படுகொலைச் செயல்களுக்கும் நோக்கத்திற்குமான சான்றுகள் தார்மீகக் கணக்கீட்டை கட்டாயப்படுத்துகின்றன. சர்வதேசச் சட்டம் மெதுவாக நகரலாம், ஆனால் வரலாறு வேகமாக நகரும். போருக்குப் பிந்தைய இலங்கையின் சட்டபூர்வமான தன்மை அதன் குற்றங்களை அழிப்பதில் அல்ல, எதிர்கொள்வதில் சார்ந்துள்ளது.

அந்த நோக்கத்திற்காக, இந்தக் கட்டுரை ஈழத்தமிழர் அனுபவத்தைப் புரிந்துகொள்வதற்கான மூன்று அடுக்கு கட்டமைப்பை ஏற்றுக்கொள்கிறது:

- வரலாற்று இனப்படுகொலை: சுதந்திரத்திற்குப் பிந்தைய பாகுபாடு, தமிழர்களின் அரசியல், கலாசார - பொருளாதார வாழ்க்கையை அரித்த படுகொலைகளின் ஒட்டுமொத்த விளைவுகள்.
- நிகழ்வு இனப்படுகொலை: போரின் இறுதி மாதங்களில் (2008-2009) கூட்டுப் படுகொலைகளும் அழிவின் செறிவான கட்டமும்.
- கட்டமைப்பு இனப்படுகொலை: இன்று தமிழர் ஓரங்கட்டப்படுவதைத் தக்கவைத்து வரும் தொடர்ச்சியான அடக்குமுறையும் கலாசார அழிப்பும் மறுப்பும்.

இந்த அடுக்குகளை ஒன்றாகப் பார்ப்பதன் மூலம், இனப்படுகொலையை ஒரு தருணமாக அல்ல, மாறாக ஓர் அமைப்பாகப் பார்க்கிறோம். இது சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் சித்தாந்தத்தில் வேரூன்றி அரசு நிறுவனங்கள் மூலம் நிலைநிறுத்தப்படும் ஆதிக்கக் கட்டமைப்பாகும். இந்தக் கட்டமைப்பை நல்லிணக்க ஆணையங்கள் அல்லது மேம்பாட்டுத் திட்டங்களால் மட்டும் அகற்ற முடியாது. இது அரசியல் கற்பனையின் மாற்றத்தைக் கோருகிறது.

இனப்படுகொலை என்று பெயரிடுவது, அதைத் தக்கவைத்துக்கொள்ளும் மௌனத்தை உடைப்பதாகும். இலங்கை அரசின் வெற்றிக் கதை, தமிழர் துன்பத்தை அழித்து, போரை மனிதாபிமான வெற்றியாக மீண்டும் எழுதுவதைச் சார்ந்துள்ளது. புவிசார் அரசியல் வசதிக்காக அந்தக் கதையை ஏற்றுக்கொள்வதில் சர்வதேச சமூகத்தின் உடந்தை உள்ளது. ஆயினும்கூட, மறுப்புக்கு எதிரான உண்மையை அது வலியுறுத்துவதால் தமிழ்ப் போராட்டத்தின் தார்மீக சக்தி துல்லியமாக நீடிக்கிறது.

இலங்கையின் போர் வெறும் ஒரு துயரமான மோதல் அல்ல, மாறாக ஒரு இனப்படுகொலைத் திட்டம் - ஆக்கிரமிப்பு, மறுப்பு, மறதி மூலம் முடக்கப்பட்ட வடிவத்தில் தொடர்கிறது - என்று வாதிடுவதற்கு சட்ட சான்றுகள், கல்வி ஆராய்ச்சி மற்றும் உயிர் பிழைத்தவர்களின் நினைவைப் பயன்படுத்துவது அவசியம். அதை வினைத்திறனுடன் நாம் செய்துள்ளோமா என்ற கேள்வியை நாம் எழுப்பியாக வேண்டும். இந்த உண்மையை எதிர்கொள்வது என்பது காயங்களை மீண்டும் உருவாக்குவது அல்ல, மாறாக குணப்படுத்துதல், ஒப்புக்கொள்வதன் மூலம் தொடங்குகிறது என்பதை வலியுறுத்துவதாகும். ஒரு நவீன ஜனநாயகம் என்று அறியப்பட்ட இலங்கை, எவ்வாறு தன்னை ஓர் இனவெறி அரசாக மாற்றியது. அழிவுகரமான வன்முறையை உருவாக்க தண்டனையின்மையும் சித்தாந்தமும் எவ்வாறு பின்னிப் பிணைந்தன போன்றவற்றை நோக்குவது அவசியம். இலங்கை இனப்படுகொலையைச் செய்ததா என்பது மட்டுமல்ல, உலகம் அதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதற்கு எப்போதாவது தைரியத்தைக் காணுமா என்பதும் இறுதிக் கேள்வி.

## துன்புறுத்தலின் வரலாற்று வரைபடம் (1948 – 1983):

2009 பேரழிவை நோக்கிய இலங்கை அரசின் பாதை போரின் விபத்தோ வெறுமனே ஒரு கொடூரமான எதிர் கிளர்ச்சியின் அதிகப்படியானதோ அல்ல. இது சிங்கள-பௌத்த பெரும்பான்மைவாதத்தில் நங்கூரமிடப்பட்ட நீண்ட அரசு உருவாக்கத்தின் உச்சகட்டமாகும். 1948-இல் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து விலத்திவைத்தல், பொருளாதார ஓரங்கட்டல்,

கலாசார ஆதிக்கம் ஆகியவற்றின் கொள்கைகள் தீவின் அரசியல் புவியியலை மறுவடிவமைத்தன. வடக்கிலும் கிழக்கிலும் குவிந்திருந்த இலங்கைத் தமிழ் மக்கள், கொழும்பிலும் மத்திய மலைநாட்டின் தோட்டங்களிலும் குறிப்பிடத்தக்க சிறுபான்மையினருடன், படிப்படியாக ஒரு தேசியத் தொகுதியிலிருந்து உள் 'மற்றொரு' தொகுதியாக மாற்றப்பட்டனர்.

இந்தப் பகுதி அந்த மாற்றத்தைப் பதிவுசெய்கின்றது. மூன்றரை தசாப்தங்களாக, இனப்படுகொலைக்கான சமூக, கருத்தியல் உள்கட்டமைப்பை உருவாக்கிய அரசால் அனுமதிக்கப்பட்ட பாகுபாட்டினதும் வன்முறையினதும் கதையை இது எடுத்துக்காட்டுகின்றது. இனப்படுகொலை ஆய்வுகளின் கருத்தியல் மொழியைப் பயன்படுத்துகையில், இந்த தசாப்தங்களில் வகைப்படுத்தல், பாகுபடுத்தல், துன்புறுத்தல் ஆகியன ஆயத்த நிலைகளில் இருந்தமையைக் காட்டுகின்றன. இதன் மூலம் அரசு தமிழ் மக்களை இலக்குக்குரிய மக்களாகக் கட்டமைத்தது என்ற வாதம் வலுவடைகிறது.

1948-இல் பிரித்தானியாவிலிருந்து சிலோன் சுதந்திரம் பெற்ற போது, அதன் தலைவர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் பாணி நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் ஆழமான சமத்துவமற்ற சமூக அமைப்பையும் பெற்றனர். பிரித்தானியக் காலனித்துவம் இனப் பிரிவினையை நம்பியிருந்தது. நிர்வாக, கல்விப் பணிகளுக்கு சில குழுக்களுக்கு சலுகை அளித்து, மற்றவற்றை தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கியது. காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பு, அதன் கடுமையான இன வகைகளுடன், காலனித்துவத்திற்குப் பிந்தைய தேசியவாதத்திற்கு அதன் மூலப்பொருளைக் கொடுத்தது. சுதந்திரம் ஒரு பன்மை அரசியலைக் கட்டியெழுப்புவதற்கான தயாரிப்பை வழங்கியது, ஆனால் அதற்குப் பதிலாக, சிங்கள-பௌத்த உயரடுக்கு தேசத்தை ஓர் ஒற்றையாட்சிச் சிங்கள அரசாக மறுகற்பனை செய்தது.

தமிழ் அரசியல் மற்றும் குடிமை உரிமைகளுக்கு முதல் அடி விரைவாக வந்தது. 1948-ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்ட மும் 1949-ஆம் ஆண்டின் இந்திய, பாகிஸ்தான் குடியாளர் சட்டமும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இந்திய வம்சாவளி தமிழர்களின் உரிமையைப் பறித்தன. பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் பிரித்தானிய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டனர். ஒரே இரவில், அவர்கள் நாடற்றவர்களாக மாறினர். இந்த நடவடிக்கை அதிகாரத்துவ மொழியில் நியாயப்படுத்தப்பட்டது. இருப்பினும் இது நாட்டின் முதல் சட்டபூர்வ இன விலக்கல் செயலைக் குறித்தது. இது பொருளாதார, குறியீட்டு நோக்கங்களுக்கு உதவியது; நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை பல வீனப்படுத்துவதுடன் புதிய தேசத்தில் முழுமையான உரிமை சிங்கள இனம் அல்லது பரம்பரையைப் பொறுத்தது என்றும் வலியுறுத்தியது.

இது வழக்கமான அர்த்தத்தில் இனப்படுகொலை அல்ல; இது வெகுஜனக் கொலை அல்ல - இது ஒரு வகையான கட்டமைப்பு அழிவு. இது ஒரு சமூகத்தை அரசியல் வாழ்க்கையிலிருந்தும் குடியுரிமையின் பாதுகாப்பிலிருந்தும் துண்டித்தது. இனப்படுகொலை ஆய்வுகள் இத்தகைய செயல்களை தொடர்ச்சியான அழிவின் ஒரு பகுதியாக அதிகளவில் அங்கீகரிக்கின்றன. ஒரு குழுவின் குடிமை அடையாளத்தை சட்டபூர்வமாக அழிப்பது பெரும்பாலும் உடல் ரீதியான ஒழிப்புக்கு முன்னோடியாகும். இலங்கையில், காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசு அதன் தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தைத் தொடங்கியது. தமிழர்களை தேசத்திலிருந்து வெளியே வரையறுப்பதன் மூலம் அதன் முதற்படியை எடுத்து வைத்தது.

மொழி ஆதிக்கம் இதன் அடுத்த நிலப்பரப்பாக மாறியது. 1956-ஆம் ஆண்டில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம், சிங்களத்தை ஒரே அதிகாரபூர்வ மொழியாக மாற்றும் வகையில் அதிகாரபூர்வ மொழிச் சட்டத்தை நிறைவேற்றியது. மக்கள் தொகையில் சுமார் கால் பகுதியினரால் பேசப்படும் தமிழ், அரச நிர்வாகம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றிலிருந்து விலக்கப்பட்டது. '24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும்' என்ற முழக்கம் பிரசாரத்தின் வெற்றிக் குரலைக் கைப்பற்றியது. இந்தச் சட்டம் ஒரு திருப்புமுனையைக் குறித்தது. இது இன அடையாளத்தை ஒரு நிறுவனப் படிநிலையாக மாற்றியது. மேல்நோக்கிய இயக்கத்தின் தூண்களான அரச அதிகாரத்துவம், நீதித்துறை, கல்விமுறை போன்றன இப்போது முதன்மையாக சிங்கள மொழி பேசுபவர்களுக்கு அணுகக்கூடியதாக மாறின. அதிக ஆங்கிலக் கல்வி விகிதங்கள் காரணமாக காலனித்துவ ஆட்சியின் கீழ் சிவில் சேவையில் விகிதாசாரமற்ற முறையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தமிழர்கள், கிட்டத்தட்ட ஒரே இரவில் நிலையில்லாத்தன்மைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

> ***1958-ஆம் ஆண்டில், தமிழர் பழிவாங்கல்கள் பற்றிய வதந்திகளுக்குப் பிறகு கொழும்பிலும் தெற்கு முழுவதிலும் கும்பல்கள் வன்முறையில் ஈடுபட்டு நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றன. அரசாங்கம் அவசரகால நிலையை அறிவித்தது, ஆனால் குற்றவாளிகளைத் தண்டிக்க சிறிதும் செய்யவில்லை.***

இலங்கையில் மொழிக் கொள்கை இவ்வாறு கலாசார பொறியியலாகச் செயற்பட்டது. இது வெறும் நிர்வாகத் திறனை மட்டுமல்லாமல் அரசின் குறியீட்டு சுத்திகரிப்பையும் நாடியது. இனப்படுகொலைக் கோட்பாட்டாளர்கள் நீண்ட காலமாக மொழியியலும் கலாசார ஒருமைப்பாடும் இனப்படுகொலை நோக்கத்தின் ஆரம்பகால குறிகாட்டிகள் என்று குறிப்பிட்டுள்ளனர்; அவர்கள் 'தேசம்' என்பதை மேலாதிக்க இனத்துடன் இணைந்ததாகக் கட்டமைத்து, சிறுபான்மையினரை அதற்குள் மாசுபடுத்திகளாகச் சித்தரிக்கின்றனர். இலங்கையில், 1956 சட்டம், அரசு சிங்கள-பௌத்த பெரும்பான்மையினருக்கு மட்டுமே சொந்தமானது என்று அறிவித்தது.

மொழிக் கொள்கை பாகுபாட்டை நிறுவனமயமாக்கியிருந்ததால், தமிழர் எதிர்ப்புக் கலவரங்கள் அதை பொதுக் காட்சியாக மாற்றியது. 1956 மற்றும் 1983-க்கு இடையில், தொடர்ச்சியான கும்பல் வன்முறையின் அலைகள் தண்டனையின்றி தமிழ் பொது மக்களைக் குறிவைத்தன. ஒவ்வொரு படுகொலையும் ஒரு பழக்கமான அமைப்பைப் பின்பற்றியது: ஒரு அரசியல் தூண்டுதல் -

பெரும்பாலும் சிறியதாகவோ தயாரிக்கப்பட்டதாகவோ - அதைத் தொடர்ந்து தமிழ் வணிகங்கள், வீடுகள், கோயில்கள் மீது திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் நடைபெற்றதுடன் இவை பெரும்பாலும் காவல்துறை அல்லது உள்ளூர் அதிகாரிகளால் தூண்டப்பட்டனவாகவும் இருந்தன.

1956-ஆம் ஆண்டு மொழிச் சட்டத்திற்கு எதிரான அமைதியான தமிழர் போராட்டங்களின் போது வன்முறை வெடித்தது. 1958-ஆம் ஆண்டில், தமிழர் பழிவாங்கல்கள் பற்றிய வதந்திகளுக்குப் பிறகு கொழும்பிலும் தெற்கு முழுவதிலும் கும்பல்கள் வன்முறையில் ஈடுபட்டு நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றன. அரசாங்கம் அவசரகால நிலையை அறிவித்தது, ஆனால் குற்றவாளிகளைத் தண்டிக்க சிறிதும் செய்யவில்லை. 1977-ஆம் ஆண்டில், நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி தனிநாட்டுக்கான ஆணையை வென்றாகச் சொன்னது. இதேகாலத்தில் வன்முறை மீண்டும் வெடித்தது.

ஜுலை 1983-இல், புலிகள் ஓர் இராணுவ வாகனத்தைத் தாக்கிப் பதின்மூன்று வீரர்களைக் கொன்ற பிறகு, இவ்வன்முறை அதன் உச்சத்தை அடைந்தது. பழிவாங்கும் விதமாக, கொழும்பிலும் பிற நகரங்களிலும் தமிழர் விரோதப் படுகொலைகள் நடந்தன. பல நாட்களாக, கும்பல்கள் இராணுவத்தினதும் காவல்துறையினதும் உடந்தையுடன் தமிழர்களுக்கு எதிராக சூறையாடல்களிலும் எரித்தலிலும் கொலை களிலும் ஈடுபட்டன. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாண பொது நூலகம் அரச ஆதரவுக் காடையர்களால் எரிக்கப்பட்டது. இது தமிழ் கலாசார நினைவகம் மீதான தாக்குதலைக் குறிக்கிறது.

இவை தன்னிச்சையான கலவரங்கள் அல்ல, அறிஞர்கள் இவற்றை ‘இனப்படுகொலை நோக்கிலான படுகொலைகள்’ என்று அழைக்கிறார்கள் - சிறுபான்மையினரை பயமுறுத்தும் மற்றும் தண்டனையின் வரம்புகளை சோதிக்கும் வன்முறையின் அவ்வப்போது வெடிப்புகள் நிகழ்ந்தன. ஒவ்வொரு படுகொலையும் தமிழர்களின் உயிர்கள் இழக்கத்தக்கவை, அரசின் பாதுகாப்பு நிபந்தனைக்குட்பட்டது என்ற செய்தியை வலுப்படுத்தியது. வன்முறையின் செயற்திறன் நிரூபிக்கப்பட்டதாகவும் சிங்கள மேலாதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு சடங்காக இவ்வன்முறைகள் அமையப்போகின்றன என்பதையும் இவை எடுத்துக்காட்டின.

இந்த வன்முறைச் சுழற்சிக்கு இணையாக, தமிழ் அரசியல் வெளிப்பாட்டிற்கான ஜனநாயகப் பாதைகள் அமைப்புரீதியாகப் பாதிக்கப்பட்டன. பிராந்திய சுயாட்சிக்கான மிதமான முன்மொழிவுகளான பண்டா-செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி-செல்வா ஒப்பந்தம் (1965)ஆகிய இரண்டும் சிங்கள தேசியவாத அழுத்தத்தின் கீழ் இரத்து செய்யப்பட்டன. 1970-களின் முற்பகுதியில், அரசியலமைப்பு மாற்றங்கள் பெரும்பான்மை வாதத்தை மேலும் வேரூன்றச் செய்தன. 1972 அரசியலமைப்பு சோல்பரி அரசியலமைப்பின் பாதுகாப்புப் பாதுகாப்புகளை நீக்கியது, பௌத்தத்தை ‘முக்கிய இடம்’ கொண்டதாக அறிவித்ததுடன் ஒற்றையாட்சி அரசின் கீழ் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தையும் அறிவித்தது. 1978 அரசியலமைப்பு ஜே.ஆர். ஜெயவர்தனாவின் கீழ் இந்தக் கட்டமைப்பை ஆழப்படுத்தியது. அதிகாரத்தைக் குவித்ததுடன் அரசு அவசரகால அதிகாரங்களை சிறிய பொறுப்புக்கூறலுடன் பயன்படுத்தவும் அனுமதித்தது.

“
***அரசியலமைப்பின் அரசியலில் பயனற்ற தன்மையைக் கண்ட தமிழ் இளைஞர்கள், அதிகளவில் போர்க்குணத்திற்கு மாறினர். 1970-களின் நடுப்பகுதியில் தமிழ் இளைஞர்கள் ஆயதமேந்தி அமைப்புகளை உருவாக்கினர்.***
”



அரசியலமைப்பின் அரசியலில் பயனற்ற தன்மையைக் கண்ட தமிழ் இளைஞர்கள், அதிகளவில் போர்க்குணத்திற்கு மாறினர். 1970-களின் நடுப்பகுதியில் தமிழ் இளைஞர்கள் ஆயதமேந்தி அமைப்புகளை உருவாக்கினர். சித்திரவதை, விசாரணையின்றி தடுத்து வைத்தல், கட்டாயமாக காணாமல் போதல் ஆகியவற்றை இயல்பாக்கும் ஒரு சட்டக் கருவியான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (1979) கீழ் அரசு கடுமையான பாதுகாப்புச் சட்டங்களையும் தன்னிச்சையான கைதுகளையும் மேற்கொண்டது. அரசு தமிழர்களின் எதிர்ப்பைக் குற்றமாக்கியது, இதனைத் தொடர்ந்து வன்முறை என்பது அரசுக் கொள்கையின் மொழியாகவும், தமிழர்களின் உயிர்வாழ்வின் இலக்கணமாகவும் மாறியது.

இனப்படுகொலைச் செயல்முறைகளின் அடிப்படையில் நோக்கும்போது இந்தக் காலம் துருவ முனைப்பு நிலையைக் குறிக்கிறது. மிதமான குரல்கள் மௌனமாக் கப்படும்போது, சமரசம் சாத்தியமற்றதாகிவிடும், மேலும் முழு மக்களும் இருத் தலியல் மோதலுக்குத் தள்ளப்படும்போது நிச்சமின்மை சூழ்ந்துகொள்ளும். ஈழத்தமிழர்களுக்கும் அதுவே நிகழ்ந்தது.

இந்தக் காலகட்டத்தில் அரசியலுக்கும் சட்டத்திற்கும் அப்பால், கலாசார அழிப்பு ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தது. நீர்ப்பாசன மேம்பாடு, மக்கள் தொகையை மாற்றியமைத்தல், பிராந்திய கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துதல் என்ற போர்வை யில் தமிழர் பெரும்பான்மையாக உள்ள வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சிங்கள மக்களை அரசு சார்ந்த காலனித்துவத் திட்டங்கள் மீள்குடியேற்றின. பௌத்த சின் னங்கள், ஸ்தூபங்கள், கோவில்கள், சிலைகள் போன்றன தமிழ்க் கிராமங்களில், பெரும்பாலும் இந்து கோவில்களின் இடிபாடுகளில் அமைக்கப்பட்டன. இந்தச் செயல்கள் வெறும் கலாசார கையகப்படுத்தல் மட்டுமல்ல, வேண்டுமென்றே குறியீட்டு ஆக்கிரமிப்பாக இருந்தன. இவை நிலப்பரப்பை சிங்கள-பௌத்த இடமாக மீண்டும் எழுது தலை நோக்காகக் கொண்டவை.

1981-இல் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டது இந்தப் போக்கை தனித் துக்காட்டும் ஒரு தருணமாக நிற்கிறது. தெற்காசியாவின் சிறந்த தமிழ் கையெ முத்துப் பிரதிகளின் களஞ்சியங்களில் ஒன்றினை அழித்தமை அறிவுக்கும் நினை வகத்துக்கும் அடையாளத்துக்கும் எதிரான தாக்குதலாகும். உயிர் பிழைத்தவர் கள் அதை 'ஈழத்தமிழ் நாகரிகம் எரிக்கப்பட்ட' இரவு என்று விவரித்தனர். இனப் படுகொலை பற்றிய புலமைத்துவச் சொல்லாடல்களில் அத்தகைய கலாசார அழிவு - காப்பகங்கள், கோயில்கள், மொழியைக் கவனத்தில் வைத்து - 'கலாசார இனப்படுகொலை' என்று அழைக்கப்படுகிறது. 1948 இனப்படுகொலை சமவாயத்தில் சேர்க்கப்படவில்லை என்றாலும், லெம்கின் தானே அதை மக் களின் மனப்பான்மையை அழிப்பதற்கான மையமாகக் கண்டார்.

இலங்கையில் இந்தக் கலாசார அழிப்பு உடல் ரீதியான வன்முறைக்கு இணை யாக அமைந்ததுடன் கற்பனை செய்யப்பட்ட சிங்கள தாயகத்திற்குள் தமிழர் இருப்பு அந்நியமானதும் மாசுபடுத்துவதும் கூட என்ற உலகக் கண்ணோட் டத்தை வலுப்படுத்தியது. 'வெளிநாட்டு' தாக்கங்களிலிருந்து தீவைத் தூய்மைப் படுத்தும் சுத்திகரிப்புத் திட்டம், மதத்தாலும் வரலாற் றாலும் புனிதப்படுத்தப்பட்ட ஒரு தார்மீக பணியாக மாறியது.



> **பௌத்த சின்னங்கள், ஸ்தூபங்கள், கோவில்கள், சிலைகள் போன்றன தமிழ்க் கிராமங்களில், பெரும்பாலும் இந்து கோவில்களின் இடிபாடுகளில் அமைக்கப்பட்டன. இந்தச் செயல்கள் வெறும் கலாசார கையகப்படுத்தல் மட்டுமல்ல, வேண்டுமென்றே குறியீட்டு ஆக்கிரமிப்பாக இருந்தன.**

1983-ஆம் ஆண்டு நடந்த கறுப்பு ஜூலை வன்செயல் கள், இனத்துவ பாகுபாட்டிலிருந்து ஒழுங்கமைக்கப் பட்ட அழிவுக்கு ஒரு தீர்க்கமான மாற்றத்தைக் குறித் தது. அரசு இவற்றுக்கு உடந்தையாக இருந்தது சந் தேகத்திற்கு இடமின்றி நிரூபணமானது. தமிழர் வீடுகளை அடையாளம் காண வாக்காளர் பதிவேடு கள் பயன்படுத்தப்பட்டன. பாதுகாப்புப் படையினர் தாக்குதல்களில் ஈடுபட்டனர் அல்லது பங்கேற்றனர்; அரசு காவலில் இருந்த கைதிகள் படுகொலை செய் யப்பட்டனர். அதன் பின்னர், அரசாங்கம் ஆறாவது திருத்தத்தை நிறைவேற்றியது, தனி அரசுக்கான ஆதரவை குற்றச்செயலாக்கி அரச ஊழியர்களை 'ஒற்றை இலங்கை'க்கு விசுவாசமாக சத்தியம் செய்ய கட்டாயப்படுத்தியது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடி, உலகளாவிய புலம்பெயர்ந்தோரின் மைய மாக உருவெடுத்தனர். மற்றவர்கள் ஆயுதப் போராட் டம் மட்டுமே உயிர் வாழ்வதற்கான ஒரே வழி என்று நம்பி, போராளிக் குழுக்களில் இணைந்தனர். அதைத் தொடர்ந்து வந்த உள்நாட்டுப் போர் 100,000-க்கும்

மேற்பட்ட உயிர்களைக் கொன்றதுடன் தீவை உலகின் மிகவும் இராணுவமயமாக்கப்பட்ட ஜனநாயக நாடுகளில் ஒன்றாக மாற்றியது.

இனப்படுகொலை - ஆய்வுகளின் பார்வையில், 1983-ஆம் ஆண்டு தீவிரமயமாக்கலின் தருணமாகப் புரிந்து கொள்ளப் படலாம் - அரசு வன்முறை அவ்வப்போது நிகழாமல் திட்டமி டப்பட்ட முறையானதாக மாறியது. அது துன்புறுத்தலுக்கும் அழிப்புக்கும் இடையிலான நுழைவாயிலாக இருந்தது. சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் தர்க்கம் அதன் தவிர்க்க முடியாத முடிவை எட்டியிருந்தது: படிநிலை இல்லாமல் சகவாழ்வை கற்பனை செய்ய முடியாத ஒரு அரசாக இலங்கை உருவெடுத்திருந்தது என்பதை அது காட்டுகிறது.

இனப்படுகொலை ஆய்வுகளின் மூலம் இந்தக் கடந்தகால கட்டத்தைப் படிக்கலாம். 1948-1983 காலகட்டத்தை ஸ்டாண் டனின் இனப்படுகொலை நிலைகளில் நாம் வரைபடமாக் கினால், ஒன்று தெளிவாகத் தெரியும்:

- வகைப்பாடு: பிந்தைய காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பும் அரசியல் கதையாடல்களும் குடிமக் களை சிங்களவர், தமிழர் என்கிற வகைகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் தார்மீக, வரலாற்றுப் படிநிலைகளை இணைத்தது.
- குறியீட்டுமயமாக்கல்: மொழிச் சட்டங்கள், மதச் சின்னங் கள், இடஞ்சார்ந்த கொள்கைகள் இன அடையாளத்தை அன்றாட வாழ்க்கையில் குறியாக்கம் செய்தன.
- பாகுபாடு: குடியுரிமை, மொழிச் சட்டங்கள் போன்றன அரசியல், பொருளாதார பங்கேற்பிலிருந்து விலக்கப்படு வதை நிறுவனமயமாக்கின.
- மனிதாபிமானமற்ற தன்மை: தமிழர்களுக்கு எதிரான பிர சாரங்கள் அவர்களைச் சலுகை பெற்ற காலனித்துவ ஒத் துழைப்பாளர்களாகவும் தேசத்திற்கு இருத்தலியல் அச்சு றுத்தல்களைத் தருபவர்களாகவும் சித்தரித்தது.
- அமைப்பும் துருவமுனைப்பும்: படுகொலைகளும் அவசர காலச் சட்டங்களும் சமூகத்தை இராணுவமயமாக்கின, அதே நேரத்தில் மிதமான குரல்கள் அமைதியாகிவிட்டன.
- தயாரிப்பு: 1983 வாக்கில், அடக்குமுறையின் இயந்திரங் கள் - பாதுகாப்பு எந்திரம், பிரசார வலையமைப்புகள் மற்றும் சட்ட கருவிகள் - முழுமையாகச் செயற்பட்டன.

2009-இல் உச்சத்தை அடைந்த அடுத்தடுத்த தசாப்தங்கள், மீதமுள்ள கட்டங்களை (துன்புறுத்தல், அழிப்பு மற்றும் மறுப்பு) நிறைவு செய்தன. எனவே, இலங்கைத் தமிழர்களின் இனப்படுகொலையை போரின் இறுதி மாதங்களுடன் மட்டுப் படுத்த முடியாது. இது தலைமுறைகள் நீடிக்கும் ஒரு செயல் முறையாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்; அரசின் உரு வாக்கத்திலேயே பொதிந்துள்ள மெதுவான, ஒட்டுமொத்த இனப்படுகொலையாகவே இது அமைகின்றது.

1980-களின் முற்பகுதியில், இலங்கை ஓர் ஆழமான உரு மாற்றத்திற்கு உட்பட்டது. காலனித்துவத்திற்குப் பிந்தைய ஜனநாயகமாகத் தொடங்கியது ஓர் இனவெறி அரசாக பரிண மித்தது. குடியுரிமை, பாதுகாப்பு, உரித்து சொந்தம் ஆகி யவை இனத்தாலும் மதத்தாலும் தீர்மானிக்கப்படும் ஓர் அமைப்பாக மாறியது. ஒவ்வொரு சட்டச் சீர்திருத்தமும், ஒவ் வொரு படுகொலையும், கலாசார அழிப்புக்கான ஒவ்வொரு செயலும் ஆதிக்கத்தின் பின்னலை இறுக்கியது. தமிழ் மக்க ளிடமிருந்து அரசியல் உரிமைகள், பிராந்திய சுயாட்சி மற்றும் குறியீட்டு இருப்பு கூட முறையாகப் பறிக்கப்பட்டது.

இது இனப்படுகொலைக்கு முந்தைய கட்டமைப்பு என அடையாளப்படுத்தப்படலாம். ஓர் உள் எதிரிக்கு எதிராகத் தன்னை வரையறுத்துக் கொண்ட ஓர் அரசு, தண்டனையின் மையை இயல்பாக்கியது; விலக்குரிமையை புனிதப்படுத் தியது. எனவே 2009 இனப்படுகொலை ஒரு பிறழ்ச்சி அல்ல, மாறாக இந்தப் பாதையின் தர்க்கரீதியான இறுதிப் புள்ளி. எந்தவொரு எதிர்கால நீதிச் செயல்முறைக்கும் இந்த வரலாற் றைப் புரிந்துகொள்வது அவசியம். இனப்படுகொலையை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட வன்முறை வெடிப்பாக அல்லா மல் கொலைக்களங்களுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே சட் டத்தினதும் மொழியினதும் துணையுடன் தொடங்கும் ஒரு நிர்வாக வடிவமாகப் பார்க்க இது நம்மைக் கட்டாயப்படுத்து கிறது. உள்நாட்டுப் போரின் பல தசாப்தங்களில், கிளர்ச்சி எதிர்ப்பு சித்தாந்தத்துடன் ஒன்றிணைந்து அழிப்புப் போர் என்று மட்டுமே விவரிக்கக்கூடிய ஒன்றை உருவாக்கிய போது, இந்தக் கட்டமைப்பு எவ்வாறு இராணுவமயமாக்கப் பட்ட அழிவின் முழு எந்திரமாக வலுவடைந்தது என்பதை அடுத்த பகுதியில் பார்க்கலாம்.



meenilankco@thaiveedu.com



# 1948 சுதந்திர இலங்கையின் முதலாவது சங்காரம்!

## குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான கொடக்கன் பிள்ளையின் வழக்கு!



என். சரவணன்

tg.theeban@gmail.com

> **“1948-இன் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம், கடவுச்சீட்டு (Passport) கட்டாயம் என்ற விதியைக் கொண்டு வந்ததன் மூலம், நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட இத்தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவோ தமது உறவினர்களைப் பார்க்க இந்தியா செல்லவோ முடியாமல் தோட்டங்களுக்குள்ளேயே முடக்கப்பட்டனர்.”**

இலங்கை 1948-இல் சுதந்திரம் பெற்ற உடனேயே இந்திய வம்சாவளித் தமிழ் மக்களுக்கு எதிரான 1948-ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டத்தையும் 1949-ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தையும் கொண்டு வந்தது சேனநாயக்க அரசாங்கம். இலட்சக்கணக்கான மக்களின் குடியுரிமை, வாக்குரிமை ஆகிய இரண்டையும் ஒரே இரவில் பறிப்பதற்காகப் பின்னப்பட்ட ஒரு மாபெரும் சதி அது. அதன் விளைவாக, சுமார் ஒரு மில்லியன் மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டதுடன், அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் முழுமையாகச் சிதைக்கப்பட்டது.

குடியுரிமைப் பிரச்சினை சுதந்திரத்திற்கு முன்பிருந்தே ஒரு முக்கிய விவாதப் பொருளாக இருந்தது. 1931-ஆம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் இலங்கையில் சர்வஜன வாக்குரிமை (Universal Adult Suffrage) அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில், வாக்களிக்க ஐந்து ஆண்டுகள் வசிப்பிடம் தேவை எனப் பரிந்துரைக்கப்பட்டாலும், பின்னர் இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு, ‘வாழிடத் தகுதி’ (Domicile) அல்லது ‘நிரந்தர குடியிருப்புச் சான்றிதழ்’ (certificate of permanent settlement) மூலம் இந்திய வம்சாவளியினர் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர்.

இருப்பினும், 1938-ஆம் ஆண்டளவில், இந்திய வாக்காளர்களைப் பதிவுசெய்யும் போது முறையான பரிசோதனை இன்றி மேற்கொள்ளப்படுவதாக சிங்கள தரப்பினரிடமிருந்து புகார்கள் எழுந்தன. இதைக் கட்டுப்படுத்த, ஆளுநர் கல்டேகோட் (Andrew Caldecott) 1940-ஆம் ஆண்டு, வாழிடத் தகுதியைக் கோரும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ‘வாய்மூல விசாரணையைக்’ (oral examination) கட்டாயமாக்கினார். இந்தச் சோதனை மிகவும் கடுமையானதாக இருந்தது; இதன்படி 1941-43-இல் பதிவு செய்த 108,382 இந்தியர்களில், 21.8% பேர் மட்டுமே தகுதி பெற்றனர்.

இந்தத் தடைகள் இருந்தபோதிலும், 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், ‘இலங்கை இந்தியன் காங்கிரஸ்’ (The Ceylon Indian Congress) 85.7% வெற்றி விகிதத்துடன் 6 இடங்களைக் கைப்பற்றியது. 21.8% வீத வாக்குரிமை பெற்றிருந்தவர்களில் வாக்களித்தோரின் எண்ணிக்கை அதைவிட குறைவானவர்களே. அப்படி இருந்தும் புதிதாக சுதந்திரம் பெற்ற நாட்டின் நாடாளுமன்றத்துக்கு குறைந்தளவு வாக்களிப்பைக் கொண்டு 6 ஆசனங்கள் கைப்பற்றப்பட்டபோது; அது பெரும்பான்மை சிங்களத் தலைவர்களால் ஓர் அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. அது மட்டுமன்றி இதுவே 1948 மற்றும் 1949-ஆம் ஆண்டுச் சட்டங்களை இயற்றுவதற்கான உடனடி அரசியல் தூண்டுதலாக அமைந்தது.

இந்தியத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்த நான்கு சட்டங்களைக் கொண்ட முக்கிய ‘சட்ட வலை’ சேனநாயக்கவால் பிரயோகிக்கப்பட்டது.

அவர்களின் அரசியல் பலத்தை நசுக்க நான்கு முக்கிய சட்டங்கள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. முதலாவதாக, 1948-இன் குடியுரிமைச் சட்டம், ஒருவர் இலங்கைக் குடிமகனாகத் தன்னை நிரூபிக்க மூன்று தலைமுறை ஆவணங்களைக் கோரியது. அடுத்தது இதனைச் சரிசெய்ய வருவது போலத் தோற்றமளித்த 1949-இன் இந்திய மற்றும் பாகிஸ்தானிய குடியிருப்பாளர்கள் சட்டம், நடைமுறையில் மிகவும் கடினமான நிபந்தனைகளையும் ஆவணங்களையும் கோரியதால், விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலோர் நிராகரிக்கப்பட்டு ஒரு ‘பதிவுப் பொறி’யாக மாறியது.

இந்தச் சட்டங்களின் தொடர்ச்சியாக, அவர்களின் அரசியல் அதிகாரத்தைப் பறிக்க 1949-இன் நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி,

இலங்கைக் குடிமகனாக இருப்பவர் மட்டுமே வாக்களிக்க முடியும் என்ற விதி உருவாக்கப்பட்டதால், இந்திய வம்சாவளித் தமிழர்கள் தங்களின் வாக்குரிமையை இழந்தனர். இறுதியாக, 1948-இன் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம், கடவுச்சீட்டு (Passport) கட்டாயம் என்ற விதியைக் கொண்டு வந்ததன் மூலம், நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட இத்தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவோ தமது உறவினர்களைப் பார்க்க இந்தியா செல்லவோ முடியாமல் தோட்டங்களுக்குள்ளேயே முடக்கப்பட்டனர். இவ்வாறு இந்த நான்கு சட்டங்களும் ஒரு வலையைப் போலச் செயற்பட்டு, உழைக்கும் வர்க்கமான ஒரு சமூகத்தின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை முழுமையாகப் பறித்தன.


PARLIAMENT OF CEYLON
2nd Session 1948

Citizenship Act, No. 18
of 1948

Date of Assent : September 21, 1948

Printed on the Orders of Government



### அந்த இரு கொடுமைமிகு குடியுரிமைச் சட்டங்கள்:

சுதந்திர இலங்கையின் முதல் நாடாளுமன்றம் இந்திய வம்சாவளியினரை அரசியல் அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காக இரண்டு சட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக இயற்றியது.

### குடியுரிமைச் சட்டம் (The Ceylon Citizenship Act, No. 18 of 1948):

சுதந்திரம் அடைந்து ஒரு சில மாதங்களில் கொண்டுவரப்பட்ட இச்சட்டத்தின் மூலம் குடியுரிமையைப் பெறுவதற்கான அடிப்படையாக 'வம்சாவளியின் மூலம் குடியுரிமை' (jus sanguinis) என்ற கடுமையான கோட்பாட்டை நிறுவியது.

இந்தச் சட்டத்தின்படி, ஒரு நபர் குடியுரிமை பெற வேண்டுமானால், அவரது தந்தை இலங்கையில் பிறந்திருக்க வேண்டும், அல்லது அவரது தந்தைவழித் தாத்தா மற்றும் கொள்ளுத் தாத்தா ஆகியோர் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும். பல தலைமுறைகளாக இலங்கையில் வசித்திருந்தாலும், அவர்களால் இந்தக் கடுமையான வம்சாவளி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் காணப்பட்டனர்.

> **“இந்தச் சட்டத்தின்படி, ஒரு நபர் குடியுரிமை பெற வேண்டுமானால், அவரது தந்தை இலங்கையில் பிறந்திருக்க வேண்டும், அல்லது அவரது தந்தைவழித் தாத்தா மற்றும் கொள்ளுத் தாத்தா ஆகியோர் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும்.”**

### சட்ட விதிகள்:

குடியுரிமைச் சட்டம், 1948 (Citizenship Act, No. 18 of 1948), வம்சாவளியின் மூலம் இலங்கைக் குடிமகனாக ஆவதற்குப் பல நிபந்தனைகளை விதித்தது. வம்சாவளி மூலம் குடியுரிமை பெறும் நிலை நவம்பர் 15, 1948 அன்று நடைமுறைக்கு வந்தது.

இந்தச் சட்டத்தின் 4 மற்றும் 5 பிரிவுகள் வம்சாவளி மூலம் குடியுரிமை பெறுவதற்கான முக்கிய நிபந்தனைகளை உள்ளடக்கியிருந்தன.

- நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் (நவம்பர் 15, 1948-க்கு முன்னர்) பிறந்தவர்களுக்கான நிபந்தனைகள்:

வம்சாவளி மூலம் குடியுரிமை பெற, நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பிறந்த ஒரு நபர் பின்வரும் நிபந்தனைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

- இலங்கையில் பிறந்தவர் எனில்:

  அவருடைய தந்தை இலங்கையில் பிறந்திருக்க வேண்டும். அல்லது

  அவருடைய தந்தைவழித் தாத்தாவும் மற்றும் தந்தைவழிக் கொள்ளுத் தாத்தாவும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும்.

- இலங்கைக்கு வெளியே பிறந்தவர் எனில்:

  அவருடைய தந்தையும் மற்றும் தந்தைவழித் தாத்தாவும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும். அல்லது

  அவருடைய தந்தைவழித் தாத்தாவும் மற்றும் தந்தை வழிக் கொள்ளுத் தாத்தாவும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும்.

- நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் (நவம்பர் 15, 1948 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ) பிறந்தவர்களுக்கான நிபந்தனைகள்:

வம்சாவளி மூலம் குடியுரிமை பெற, நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் பிறந்த ஒரு நபர் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

- இலங்கையில் பிறந்தவர் எனில்:

  அவர் பிறந்த நேரத்தில் அவருடைய தந்தை இலங்கைக் குடிமகனாக இருக்க வேண்டும்.

- இலங்கைக்கு வெளியே பிறந்தவர் எனில்:

  அவர் பிறந்த நேரத்தில் அவருடைய தந்தை இலங்கைக் குடிமகனாக இருக்க வேண்டும்.

- மேலும், குழந்தை பிறந்த ஒரு வருடத்திற்குள் பரிந்துரைக்கப்பட்ட முறையில், அக்குழந்தை பிறந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரியின் அலுவலகத்திலோ அமைச்சரின் அலுவலகத்திலோ பிறப்பு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இந்தச் சட்டப் பிரிவுகள் மூலம், நீண்ட காலமாக நாட்டின் மீது ஏதோ ஒரு வகையில் ஆழமான தொடர்பைக் கொண்டிருந்தவர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்படும் என்றது.

இந்தச் சட்டம், நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 12% ஆக இருந்த இந்திய வம்சாவளியினரில் (கிட்டத்தட்ட 974,098 பேர்) பெரும்பான்மையானவர்களைச் சட்டபூர்வமாக 'நாடற்றவர்கள்' (statelessness) என்ற நிலைக்குத் தள்ளியது. இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மை சமூகமாக அவர்கள் அதுவரை இருந்தார்கள்.

## நாடாமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் (The Parliamentary Elections (Amendment) Act, No. 48 of 1949):

குடியுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து தொடர்ந்து, 1949-ஆம் ஆண்டு இந்தத் தேர்தல் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.

- இந்தச் சட்டத்தின் பிரிவு 3, 'இலங்கைக் குடிமக்கள்' (citizen of Ceylon) மட்டுமே வாக்காளர் பதிவேட்டில் இடம்பெற முடியும் என்று மிகத் தெளிவாகக் கூறியது.
- 1948-ஆம் ஆண்டுச் சட்டம் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையைப் பறித்தது; 1949-ஆம் ஆண்டுச் சட்டம், அவர்கள் இப்போது 'குடிமக்கள் அல்ல' என்ற தகுதியின் அடிப்படையில், டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் அவர்கள் அதுவரை அனுபவித்து வந்த வாக்களிக்கும் உரிமையையும் பறித்தது.
- இந்த இரண்டு சட்டங்களின் ஒருங்கிணைந்த விளைவால், கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இந்திய வம்சாவளியினர் வாக்களிக்கும் உரிமையிலிருந்தும் முற்றிலுமாக விலக்கப்பட்டனர். இன்னொரு வகையில் சொல்லப்போனால் இலங்கையின் ஒட்டுமொத்த தமிழர்களின் வாக்களிக்கும் பலத்தில் பாதியைக் குறைத்தது.

இந்தச் சட்டங்கள் வெறும் அரசியல் உரிமைகளைப் பறிப்பதோடு நிற்கவில்லை; அவை இந்திய வம்சாவளியினரின் அன்றாட வாழ்வின் மீது மிகக் கடுமையான நிர்வாகச் சுமைகளையும், சமூக அழுத்தங்களையும் ஏற்படுத்தின.

## நாடற்ற நிலையாலான சட்ட சிக்கல்கள்:

1948 மற்றும் 1949-ஆம் ஆண்டுச் சட்டங்களின் விளைவாக, பெரும்பாலான இந்தியத் தமிழர்கள் இலங்கை குடியுரிமையைப் பெற முடியவில்லை. அதே நேரத்தில், அவர்கள் நீண்ட காலமாக இலங்கையில் வசித்துவிட்டதால், இந்திய அரசாங்கமும் அவர்களுக்குக் குடியுரிமை வழங்க மறுத்தது. இதனால் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் 'நாடற்றவர்களாக' (statelessness) ஆக்கப்பட்டனர். குடியுரிமை விண்ணப்பங்கள் மீதான முடிவுகள் வெளிப்படைத்தன்மையற்றவையாக இருந்தன. விண்ணப்பதாரர்கள் விசாரணைகள் பற்றியோ முடிவுகள் பற்றியோ அறியாத நிலையில் இருந்தனர். நீதித்துறை நடைமுறைகள் 'எவரும் அறியாத அதிகாரியின் தன்னிஸ்டத்தைப்' பொறுத்து அமைந்திருந்தன.

## ஆவணச் சுமை எனும் பெருஞ்சுவர்:

குடியுரிமைப் பதிவுச் சட்டத்தின் (IPRA, 1949) கீழ் விண்ணப்பித்தவர்கள், 'தடையில்லா குடியிருப்புக்கு' (uninterrupted residence) ஆதாரமாக, 1946 ஜனவரி 1-ஆம் தேதிக்கு முன்னர் குறைந்தது ஏழு ஆண்டுகள் இலங்கையில் இருந்ததை நிரூபிக்க வேண்டியிருந்தது. இந்த ஆவணச் சுமை மிக அதிகமாக இருந்தது. தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் வசிப்பிடத்தை நிரூபிக்கத் தேவையான ஊதியப் பட்டியல்கள் (pay stubs) அல்லது வருகைப் பதிவுகள் (check rolls) போன்ற ஆவணங்களைப் பெற, தோட்ட முகாமையாளர்களையே (estate managers) முழுமையாக நம்பியிருக்க வேண்டியிருந்தது. அவர்கள் இம்மக்களை மிக அலட்சியமாக நடத்தினார்கள்.

## தனிப்பட்ட விவரங்கள் எதிரிகளாதல்:

மிகவும் அதிர்ச்சியூட்டும் விதமாக, விண்ணப்பதாரர்கள் வழங்கிய தனிப்பட்ட விபரங்களும் கலாசார நடவடிக்கைகள் பற்றிய விபரங்களும், அவர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்க எண்ணம் இல்லை என்பதற்குச் சான்றாக அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்டன. உதாரணத்துக்கு,

- இந்தியாவில் உள்ள உறவினர்களுக்குப் பணம் அனுப்புவது (remittance).
- தங்கள் பூர்வீக கிராமத்தில் நடக்கும் ஊர்த்திருவிழா, 'தைப்பொங்கல்' போன்ற மத விழாவுக்குச் சென்று வருவது.

இவை அனைத்தும் அவர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்க விரும்பவில்லை என்பதற்கான ஆதாரங்களாக அதிகாரிகளால் கருதப்பட்டன. உதாரணமாக, கந்தசாமி




முத்தையா என்ற தொழிலாளியின் விண்ணப்பம், அவர் தாய் லாந்தில் (தவறாகப் பதியப்பட்டுள்ளது) பொங்கல் திருவிழா விற்குச் சென்றது நிரந்தரக் குடியிருப்பு நிபந்தனையை மீறிய தாகக் கூறி நிராகரிக்கப்பட்டது.

## கந்தசாமி முத்தையாவின் கதை!

கந்தசாமி முத்தையா (Kandaswamy Muthiah) இந்திய வம் சாவளியைச் சேர்ந்த ஒரு தோட்டத் தொழிலாளி. அவர் குடியு ரிமைச் சட்டங்களால் (Citizenship Acts) சந்தித்த சவால் களைப் பற்றிய விபரங்களை கல்யாணி ராம்நாத் எழுதிய (Kalyani Ramnath) Boats In a Storm என்கிற நூலில் விரிவான தகவல்களுடன் பதிவு செய்திருக்கிறார்.

கந்தசாமி முத்தையா, இலங்கையின் மத்திய மாகாணத்தில் உள்ள கந்தபொலவில் சுயமாக சிறு தொழிலை மேற் கொண்டு வந்தார். 1942-ஆம் ஆண்டு வியாபாரத் தோல்வி காரணமாகவும் போர் அச்சுறுத்தல் காரணமாகவும் தனது வியாபாரத்தை விட்டுவிட்டு, பூண்டலோயா எஸ்டேட்டில் ஒரு தோட்டத் தொழிலாளியாக (plantation laborer) வேலைக்குச் சேர்ந்தார். இவர் விரைவிலேயே அந்த எஸ்டேட்டில் கங்கா ணியாகவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மேற்பார்வை யாளராகவும் பின்னர் ஆள் சேர்க்கும் முகவராகவும் பதவிக்கு உயர்ந்தார்.

முத்தையா தனது ஐந்து அல்லது ஆறு வயதில், 1911-ஆம் ஆண்டில், தனது பெற்றோருடனும் மற்றவர்களுடனும் மெட் ராஸிலிருந்து இலங்கையின் மன்னார் கடற்கரைக்கு ஊடாக வந்து சேர்ந்தவர்.

இவர் 1942-ஆம் ஆண்டில் கருப்பாயி என்பவரை மணந்தார். 1945-ஆம் ஆண்டில் இவர்களின் முதல் குழந்தை, சரஸ்வதி (Saraspathy) பிறந்தார், இவரும் இவரது மனைவி கருப்பா யியும் 1950-ஆம் ஆண்டில் குடியுரிமைக்கு விண்ணப்பித் தனர். இவரது மனைவி இலங்கையில் பிறந்தவர் என்று முத்தையா தெரிவித்திருக்கிறார்.

1948-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட் டத்தின் (Ceylon Citizenship Act of 1948) கீழ் இவர் குடியுரிமை பெற தகுதியற்றவராகக் கருதப்பட்டு நிராகரிக் கப்பட்டார்.

இதையடுத்து, 1949-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய, பாகிஸ்தான் குடியுரிமை சட்டம் (Indian and Pakistani Residents (Citizenship) Act of 1949 - IPRA) இன் கீழ், முத்தையா, கருப்பாயி, இவர்களின் ஐந்து வயது மகள் சரஸ்வதி மற்றும் ஒரு வயது மகன் பாலகிருஷ்ணன் ஆகி யோர் ஓகஸ்ட் 26, 1950 அன்று குடியுரிமைக்கு விண்ணப்பித் தனர்.

## விண்ணப்பம் நிராகரிப்புக்கான வேடிக்கையான காரணங்கள்:

முத்தையா ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நாடற்றவர் என் கின்ற சிக்கலில் தொடர்ந்து இருந்தார். ஒக்ரோபர் 3, 1955 அன்று, இவரது விண்ணப்பம் துணை ஆணையரால் (Deputy Commissioner) மறுக்கப்பட்டது.

விசாரணையின்போது, முத்தையா தனக்கு இந்தியாவில் எந்தவித தொடர்பும் இல்லை, பணம் அனுப்பியது இல்லை, உறவினர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

ஆனால் முத்தையாவின் விண்ணப்பத்தை விசாரித்த துணை ஆணையர் ஜி.டபிள்யூ. எதிரிவீர (G.W. Ediriwara), முத்தையா சமர்ப்பித்த ஆவண ஆதாரங்களை ('artificial and unconvincing') ஏற்க மறுத்தார்.

இவர் தனது முந்தைய தொழிலான வியாபாரத்தின்போது கந்தபொலயில் இருந்தபோது, அருகில் உள்ள நுவரெலியா

அல்லது ரம்பொடவுக்குச் செல்லாமல், தொலைவில் உள்ள டிக்கோயாவில் (Dickoya) சரக்குகளை ஏன் வாங்கினார் என்று ஆணையர் வேடிக்கையான சந்தேகத்தைத் தெரி வித்தார்.

முத்தையா சமர்ப்பித்த இரண்டு கடை ரசீதுகள் (shop receipts) முறையே ஒரு ரூபாய் மற்றும் மூன்று ரூபாய் மதிப் புள்ளவை. இந்த அற்பமான தொகைகளுக்கான ரசீதுகளை பதினாறு ஆண்டுகளாக அவர் ஏன் வைத்திருந்தார் என்று ஆணையர் கேள்வி எழுப்பினார். இது முத்தையாவின் விண் ணப்பத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தார்.

முத்தையாவின் விண்ணப்பத்தில், நிரந்தரக் குடியிருப்புக் கான நிபந்தனையை மீறியதாகக் கருதப்பட்ட மற்றொரு சம்பவம்: இவர் தைப்பொங்கல் திருவிழாவிற்குச் சென்றது (Thaipongal) நிரந்தரக் குடியிருப்புக்கான நிபந்தனையை மீறியதாக நிராகரிக்கப்பட்டது.

ஈற்றில் துணை ஆணையரின் முடிவை எதிர்த்து முத்தையா உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

அப்போது, இவர் வியாபாரியாக இருந்தபோது 'சாதாரண வேலைகளைச்' (odd jobs as a cooly) செய்ததாக விசா ரணை அறிக்கையில் தெரிவித்திருந்தாலும், விண்ணப்பப் படிவத்தில் 'வியாபாரி' (hawker) என்று குறிப்பிட்டிருந்த முரண்பாடுகளை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

1955-ஆம் ஆண்டு முத்தையாவும் அவரது குடும்பத்தினதும் குடியுரிமைக் கனவுகள் முடிவுக்கு வந்தன. ஆறு வருடகால போராட்டத்திற்குப் பிறகு, அவர்களுக்கான குடியுரிமை இறுதியில் மறுக்கப்பட்டது.

இறுதியில், சுமார் 800,000 IPRA விண்ணப்பதாரர்களில், 445,588 பேர் 1960-களுக்குள் தென்னிந்தியாவுக்குத் திரும்பி அனுப்பப்பட்டனர். முத்தையாவும் அவரது குடும்பமும் அவர் களில் ஒருவராக இருக்கலாம் என்று கருத முடிகிறது.

கந்தசாமி முத்தையா போன்ற தொழிலாளர்கள், இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளாலும் குடியுரிமை மறுக்கப் பட்டு நாடற்றவர்களாக (statelessness) ஆக்கப்பட்டனர்.

கந்தசாமி முத்தையாவின் வழக்கு, குடியுரிமைச் சட்டங்கள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர் களின் தனிப்பட்ட வாழ்க்கைப் பதிவுகளும் ஆவணங்களும் எவ்வாறு அச்சுறுத்தலாகவும் எதிராகவும் சான்றுகளாக பயன் படுத்தப்பட்டன என்பதற்கு ஒரு சான்றுகளில் ஒன்றாகும்.

இதேபோல், வர்த்தகர்கள், இலங்கையில் உள்ள குடும்ப உறுப்பினர்களுக்குப் பணம் அனுப்புவதற்காக பணப் பரி வர்த்தனைப் படிவங்களில் (exchange control forms) தங்களை 'தற்காலிக வதிவாளர்' (temporary resident) என்று அறிவித்திருந்தால், அந்தக் கூற்று அவர்களின் 'நிரந்தரக் குடியிருப்பு' கோரிக்கைகளை நிராகரிப்பதற்காகப் பயன்ப டுத்தப்பட்டது.

## சமூக, பொருளாதார விளைவுகள்:

இந்தச் சட்டங்கள், இந்திய வம்சாவளியினரைக் 'சட்டவி ரோதக் குடியேறிகள்' (illegal immigrants) என்று முத்திரை குத்தும் ஒரு சமூகச் சூழலை உருவாக்கின. இதன் நீட்சியாக சிங்கள தேசியவாதிகள் மத்தியில் அவர்கள் 'வெளியார்', 'அந்நியர்கள்', 'கள்ளத்தோணிகள்' போன்ற கருத்தாக்கம் வலுப்பெற்றது.

பொருளாதார ரீதியாக, சையத் அப்துல் காதர் போன்ற வர்த் தகர்கள், இரு நாடுகளிலும் (இந்தியா மற்றும் இலங்கை) குடியுரிமை நிலை இல்லாததால், இரு நாடுகளிலும் வருமான வரிச் சிக்கல்களை (Double Taxation) எதிர்கொண்டனர். சட் டங்கள் குடும்ப உறவுகளைக் கணிப்பதைப் புறக்கணித் ததால், இந்தியாவில் வீட்டைக் கொண்டிருந்த வர்த்தகர்கள், இலங்கையில் ஈட்டிய வருமானத்துக்கு இந்தியாவிலும் வரி செலுத்த வேண்டியிருந்தது.

அரசியல் ரீதியாக, தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலை வர்களும் 'கம்யூனிஸ்டுகள்' அல்லது 'கிளர்ச்சியாளர்கள்' என்று முத்திரை குத்தப்பட்டு, பொதுப் பாதுகாப்புச் சட்டங் களின் கீழ் நாடுகடத்தப்பட்டனர். அவர்கள் தங்களுக்குச் சம் பந்தமில்லாத தேசத்துக்கு (இந்தியாவுக்கு) வலுக்கட்டாய மாக அனுப்பப்பட்டனர்.

## மாபெரும் சட்ட சவால்: கொடக்கன் பிள்ளை வழக்கு:

இந்த அநீதியான சட்டங்களுக்கு எதிராக ஒரு மாபெரும் சட்டப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தேர்தல் திருத்தச் சட்டத்தை எதிர்த்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு வாக்காளரால் தொடுக்கப்பட்ட மிக முக்கியமான சவா லாகும். கொடக்கன் பிள்ளை வழக்கு வரலாற்று முக்கியதத் துவம் பெற்ற ஒரு வழக்கு. இந்த வழக்கு இலங்கையின் உச்ச நீதிமன்றத்தில் முதநாயக்க எதிர் சிவஞானசுந்தரம் (Mudanayake v. Sivagnanasunderam) என்றும், பின்னர் லண்டனில் உள்ள பிரிவிக் கவுன்சிலுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டபோது, கொடக்கன் பிள்ளை எதிர் முதநாயக்க (Kodakan Pillai v. Mudanayake) என்றும் அழைக்கப்பட்டது.

கோவிந்தன் செல்லப்பா நாயர் கொடக்கன் பிள்ளை என்ப வரால் தொடுக்கப்பட்ட இந்த வழக்கு, 1948-ஆம் ஆண்டின் குடி யுரிமைச் சட்டம் (Citizenship Act, No. 18 of 1948) மற்றும் 1949-ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் (Parliamentary Elections Amendment Act, No. 48 of 1949) ஆகியவை அரசியலமைப்பின் 29-ஆம் பிரிவை மீறுகின்றனவா என்ற முக்கியமான அரசியலமைப்புச் சவாலை எழுப்பியது.

இந்த வழக்கு, 1948-இன் குடியுரிமைச் சட்டம் மற்றும் 1949-இன் நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் ஆகியவற் றுக்கு எதிராக எழுப்பப்பட்ட அரசியலமைப்பு ரீதியான சவால். 1949-இன் நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம், எண் 48-இன் பிரிவு 3(1)(a) ஆனது, வாக்காளராகப் பதிவு செய்வதற்கான ஒரு அடிப்படைத் தகுதியாக, ஒரு நபர் இலங்கைக் குடிமகனாக இருக்க வேண்டும் என்ற நிபந் தனையை விதித்தது. இந்தச் சட்டம், 1948-இன் குடியுரிமைச் சட்டம், எண் 18-இன் பிரிவுகள் 4 மற்றும் 5 உடன் சேர்த்துப் பார்க்கப்பட்டது.

கொடக்கன்பிள்ளை, ருவன்வெல்ல (Ruwanwella) தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் பதிவேட்டில் தனது பெயரைச் சேர்க்கக் கோரி மனுத் தாக்கல் செய்தார். உதவிப் பதிவு அதிகாரி கொடக்கன் பிள்ளை, 1948-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின்படி, இலங்கைக் குடிமகன் அல்ல என்று கூறி அவரது கோரிக்கையை நிராகரித்தார்.

கொடக்கன் பிள்ளை, திருத்தம் செய்யும் அதிகாரியிடம் (Revising Officer - முதல் பிரதிவாதி) மேல்முறையீடு செய்தார். அவ்வதிகாரி விசாரித்து வழங்கிய தீர்ப்பில்,

இலங்கைக் குடிமகன் ஆவது வாக்காளருக்கான அவசியமான தகுதி என்று நிர்ணயித்த 1949-ஆம் ஆண்டுப் நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம், எண் 48, மற்றும் 1948-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம், எண் 18 ஆகியவை செல்லாதவை என்று தீர்ப்பளித்தார்,




1948 மற்றும் 1949-ஆம் ஆண்டுச் சட்டங்கள், இன அல்லது மத அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்த சோல்பரி அரசியலமைப்பின் 29(2)(b) மற்றும் (c) பிரிவுகளை மீறுகின்றனவா? என்பதே வழக்கின் மையப் புள்ளி.

## வழக்கின் தரப்பினரும் வழக்கறிஞர்களும்:

- அரசாங்கத் தரப்பு (மனுதாரர்கள்): பி.பி. முதநாயக்க (P.B. Mudanayake), ருவன்வெல்ல தேர்தல் தொகுதியின் உதவிப் பதிவு அதிகாரி, மற்றும் வி.எல். வீரசிங்க (V.L. Wirasingha), நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான ஆணையாளர்.
- அரசாங்கத்தின் வழக்கறிஞர்: அட்டர்னி-ஜெனரல் சர் ஆலன் ரோஸ் (Sir Alan Rose, K.C.).
- குடிமக்கள் தரப்பு (பிரதிவாதிகள்): ஜி.எஸ்.என். கொடக்கன் பிள்ளை (G.S.N. Kodakan Pillai), வாக்காளர் பதிவேட்டில் தனது பெயரைச் சேர்க்கக் கோரியவர்
- குடிமக்கள் தரப்பு வழக்கறிஞர்கள்: எஸ்.ஜே.வி. செல்வநாயகம் (S.J.V. Chelvanayakam, K.C.), எஸ். நடேசன், சி. வன்னியசிங்கம், எஸ். கனகராயர், இ.ஆர்.எஸ்.ஆர். குமாரசுவாமி உட்பட இன்னும் பலர்.

## திருத்தம் செய்யும் அதிகாரியின் துணிச்சலான தீர்ப்பு (ஜூலை 2, 1951):

இந்த வழக்கின் முதல் கட்டமாக, கேகாலை மாவட்ட நீதிபதி என். சிவஞானசுந்தரம் (N. Sivagnanasunderam) முன்பு விசாரணைக்கு வந்தது. 1951-ஆம் ஆண்டு ஜூலை 2-ஆம் தேதி, அவர் ஒரு துணிச்சலான தீர்ப்பை வழங்கினார். குடியுரிமைச் சட்டம் (1948), தேர்தல் திருத்தச் சட்டம் (1949) ஆகிய இரண்டும் அரசியலமைப்பின் 29-வது பிரிவை மீறுவதாகவும், அவை சட்டப்படி செல்லாது (ultra vires) என்றும் அவர் தீர்ப்பளித்தார். குடியுரிமை மறுக்கப்பட்டதன் விளைவாக, வாக்களிக்கத் தகுதியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் நாடற்றவர்களாக (stateless) மாற்றப்பட்டு, வாக்களிக்கும் உரிமையைப் பறித்தது அரசியலமைப்பை மீறுவதாகும் என்று தீர்ப்பளித்த அவர், கொடக்கன் பிள்ளையின் பெயரை வாக்காளர் பதிவேட்டில் சேர்க்குமாறு உத்தரவிட்டார். அத்தோடு அவர் முறையீட்டு மனுவில் ஒட்டிய ஐந்து ரூபா முத்திரைக் கட்டணத்தையும் கொடக்கன் பிள்ளைக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. அரசாங்கம் இந்தத் தீர்ப்பால் ஆடிப்போனது. டி.எஸ். சேனநாயக்கவின் ஒரே கனவு வெறும் ஐம்பதினாயிரம் இந்தியத் தமிழர்களை மட்டுமே இலங்கையில் வைத்துக்கொண்டு ஏனைய அனைவரையும் நாட்டை விட்டுத் துரத்தி விடுவதே.

இந்தத் தீர்ப்பை எதிர்த்துத்தான் அரசாங்கம் (முதநாயக்க சார்பில்) உச்ச நீதிமன்றத்தில் ‘செர்டியோராரி’ (Certiorari) ஆணை கோரி மனு தாக்கல் செய்தது.

## அரசாங்கத் தரப்பு வாதங்கள் (சேர் ஆலன் ரோஸ்):

உச்ச நீதிமன்றத்தில், அட்டர்னி-ஜெனரல் சர் ஆலன் ரோஸ், அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வலுவாக முன்வைத்தார்.

- சட்டத்தின் மொழி மட்டுமே முக்கியம்: ஒரு சட்டத்தின் மொழி தெளிவாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் இருக்கும்போது, அதன் ‘நடைமுறை விளைவு’ (practical effect) மற்றும் அதை இயற்றுவதற்கான ‘நோக்கம்’ (motive) ஆகியவை தேவையற்றவை (irrelevant).
- புள்ளிவிவரங்கள் தேவையற்றவை: ஒரு சட்டம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது கடுமையாகச் செயற்பட்டாலும், அதன் மொழி பாகுபாடு காட்டவில்லை என்றால், புள்ளிவிவரங்கள் பொருத்தமற்றவை.
- சட்டம் பொதுவானது: குடியுரிமைக்கான அளவுகோல்கள் (பிறந்த இடம், மூதாதையரின் பிறந்த இடம்) எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்தையும் இலக்கு வைக்கவில்லை; அவை ‘எந்தவொரு சமூகத்திற்கும்’ பொதுவானவை.
- இறையாண்மை அதிகாரம்: யார் குடிமக்கள் என்பதைத் தீர்மானிப்பது ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் சட்டமன்றத்தின் ‘இயற்கையான மற்றும் நியாயமான செயற்பாடு’ (natural and legitimate function) ஆகும்.

## எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தரப்பு வாதங்கள்:

கொடக்கன் பிள்ளைக்காக வாதாடிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம், சட்டத்தின் வெளிப்படையான வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள உண்மையான நோக்கத்தையும் விளைவையும் அம்பலப்படுத்த முயன்றார்.

- சோல்பரி யாப்பின் 29-ஆம் பிரிவின் நோக்கத்தையும் அதன் வரம்புகளையும் முழுமையாகப் புரிந்துகொள்ள, அரசியலமைப்பை ஒரு முழுமையான அமைப்பாகப் பார்க்க வேண்டியது அவசியம்.

- சட்டத்தின் மொழியை மட்டும் பார்க்காமல், அதன் உண்மையான நோக்கத்தைப் புரிந்துகொள்ள, 29-ஆம் சரத்தின் வரலாற்றைப் பார்க்க வேண்டியது அவசியம் என்றும், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டங்கள் சிறுபான்மையினர் மீது கட்டுப்பாடுகள் விதிக்கக்கூடிய வகையில் பாகுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

- 29-வது சரத்து சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கவே வடிவமைக்கப்பட்டது என்றும், நாடாளுமன்றம் வாக்குரிமையை விரிவுபடுத்தவோ குறைக்கவோ வேண்டுமானால், அது 29-ஆம் சரத்துக்கு இணங்க இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

- ஒரு சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையைத் தீர்மானிக்க, சட்டம் ‘என்ன சொல்கிறது’ (what it says) என்பதைவிட ‘என்ன செய்கிறது’ (what it does) என்பதே முக்கியம்.

- மறைமுக விளைவு: இந்தச் சட்டங்கள் வெளிப்படையாகப் பாகுபாடு காட்டாவிட்டாலும், அவை ‘மறைமுக விளைவுகளைக்’ கொண்டுள்ளன. எனவே, நீதிமன்றம் சட்டத்தின் உள்ளடக்கத்தை மட்டும் பார்க்காமல், அதன் ‘சட்டபூர்வ விளைவை’ (legal effect) கருத்தில் கொள்ள வேண்டும்.

- புறச் சான்றுகளின் தேவை: சட்டத்தின் உண்மையான நோக்கத்தை அறிய, ‘அரசியல் வரலாறு, அரசியல் உரிமைகள், அரசியல் தகராறுகள்’ போன்ற ‘அரசியல் உண்மைகளைக்’ கருத்தில் கொள்வது அவசியம். இதற்காக டொனமூர் மற்றும் சோல்பரி கமிஷன் அறிக்கைகள் போன்ற ஆவணங்களைப் பார்க்க நீதிமன்றத்திற்கு பொறுப்பு உண்டு.

- குடியுரிமைச் சட்டம் ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் மட்டுமே குடிமகனாக முடியும் என்று கூறுவது பாகுபாடு காட்டுவதாகும் (discriminatory).

- செல்வநாயகமும் அவரது குழுவினரும், சட்டத்தின் நடைமுறை விளைவை நிரூபிக்க, பெரி சுந்தரம், எஸ். தொண்டமான் மற்றும் எஸ்.எம். சுப்பையா ஆகியோரால் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்கள் அடங்கிய மூன்று ‘ஆணைப்பத்திரங்களை’ (affidavits) சமர்ப்பிக்க முயன்றனர்.

- குடியுரிமைச் சட்டம் குறிப்பிட்ட ஒரு திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் மட்டுமே குடிமக்களாக முடியும் என்று கூறுவது பாகுபாடு கொண்டது என்றும், குடியுரிமைச் சட்டம் அல்ட்ரா வைர்ஸ் ஆக இருந்தாலும் இல்லாவிட்டாலும், தேர்தல் திருத்தச் சட்டம் இன்னும் அல்ட்ரா வைர்ஸ் தான் என்றும் வாதிட்டது. ஏனெனில் அது ‘ஒரு சமூகத்தின் ஒரு பெரிய பகுதியின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கிறது, இந்தச் சட்டம் இந்தியச் சமூகத்தின் பெரும்பகுதியினரின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கிறது என்றும், வேறு எந்த சமூகத்தின் உரிமையையும் இது பறிக்கவில்லை என்றும் அவர் வாதிட்டார்.

### உச்ச நீதிமன்ற மற்றும் பிரிவி கவுன்சில் தீர்ப்புகள்:

இலங்கை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு (செப்ரெம்பர் 28, 1951):

இறுதியில் உச்ச நீதிமன்றம், செல்வநாயகத்தின் வாதங்களை நிராகரித்தது. சர் ஆலன் ரோஸின் வாதத்தை ஏற்றுக்கொண்டது.

- சட்டத்தின் மொழி தெளிவாக இருப்பதால், அதன் நடைமுறை விளைவோ நோக்கமோ பொருத்தமற்றது என்று தீர்ப்பளித்தது.

- செல்வநாயகம் சமர்ப்பிக்க முயன்ற புள்ளிவிவரங்கள் அடங்கிய உறுதிமொழிக் கூற்றுகளை ஏற்க மறுத்தது.

- திருத்தம் செய்யும் அதிகாரியான சிவஞானசுந்தரத்தின் தீர்ப்பை ரத்து செய்து, சவாலுக்கு உள்ளாக்கப்பட்ட சட்டங்கள் செல்லுபடியாகும் (valid) என்று அறிவித்தது.

### பிரிவி கவுன்சில் இறுதித் தீர்ப்பு (மே 11, 1953):

மீண்டும் இந்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து கொடக்கன் பிள்ளை லண்டனில் உள்ள பிரிவிக் கவுன்சிலில் மேல் முறையீடு செய்தார். 1953-ஆம் ஆண்டு மே 11-ஆம் திகதி, பிரிவிக் கவுன்சில் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தது.

- ஓக்ஸி பிரபு (Lord Oaksey) வழங்கிய இந்தத் தீர்ப்பில், இந்தச் சட்டங்கள் இலங்கையின் சட்டமன்ற அதிகாரத்திற்கு உட்பட்டவை (intra vires) என்று அறிவிக்கப்பட்டது.

- மிக முக்கியமாக, பாகுபாடு குறித்த வாதத்தை நிராகரித்த பிரிவிக் கவுன்சில், சட்டம் பயன்படுத்திய அளவுகோல்களானது ‘இனம்’ (race) என்பதை மையப்படுத்தவில்லை என்றும், மாறாக ‘கல்வியறிவு, சொத்து, பிறப்பு அல்லது குடியிருப்பு’ (residence) போன்ற பொதுவான தரநிலைகளே கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கிறது எனக் கூறியது.

- தீர்ப்பின் மிகவும் சர்ச்சைக்குரிய பகுதி: இந்தியத் தமிழர்களின் ‘இடம்பெயர்வுப் பழக்கவழக்கங்கள்’ (migratory habits), அவர்கள் இலங்கைக் குடிமக்களாக மாறுவதற்கான தகுதிக்கு (suitability as citizens) நேரடியாகத் தொடர்புடைய உண்மைகள் என்றும், இது அவர்களின் இனம் அல்லது மதத்துடன் சம்பந்தப்பட்டதல்ல என்றும் பிரிவிக் கவுன்சில் முடிவு செய்தது.

> “ ***இலங்கையின் 1948 குடியுரிமைச் சட்டமும் 1949 தேர்தல் திருத்தச் சட்டமும் இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரத்தை முடக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நுட்பமான இனவாத சட்ட நகர்வு ஆகும்.*** ”



## பிரிவு 5: தீர்ப்பின் தாக்கமும் விளைவுகளும்:

கொடக்கன் பிள்ளை வழக்கின் இறுதித் தீர்ப்பு, இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் சட்டப் போராட்டத்திற்கு ஒரு மரண அடியாக அமைந்தது.

- இதன் மூலம் வாக்குரிமைப் பறிப்பு சட்டபூர்வமாக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பின் விளைவாக, கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இந்திய வம்சாவளி மக்கள் குடியுரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டவர்களாக சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டனர்.
- அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்படுவதாக சொல்லப்பட்ட சிறுபான்மைக் காப்பீடு செல்லுபடியற்றதாக ஆனது. சோல்பரி அரசியலமைப்பின் 29-வது பிரிவு, சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முக்கிய பாதுகாப்பு அரணாகக் கருதப்பட்டது. ஆனால் இந்த வழக்கு, அந்தப் பிரிவு ஒரு பெரும்பான்மை நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக நிற்கத் தவறிவிட்டது என்பதை நிரூபித்தது.
- இந்த மாபெரும் வாக்குரிமைப் பறிப்புச் செயல், ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் எதிரான முதல் படியாகக் கருதப்பட்டது. இதுவே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற தலைவர்கள் 'தமிழரசுக் கட்சியை' (Federal Party) உருவாக்கவும் பலப்படுத்தவும் தூண்டியது.
- இந்தச் சட்ட மோதல்கள் பல தசாப்தங்களாக நீடித்தன. நாடற்றவர்களாக அறிவிக்கப்பட்ட பல இலட்சம் பேர் பின்னர் பல்வேறு ஒப்பந்தங்களின் கீழ் இந்தியாவுக்குத் 'திரும்பி அனுப்பப்பட்டனர்' (repatriated).

இலங்கையின் 1948 குடியுரிமைச் சட்டமும் 1949 தேர்தல் திருத்தச் சட்டமும் இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரத்தை முடக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நுட்பமான இனவாத சட்ட நகர்வு ஆகும். கொடக்கன் பிள்ளை வழக்கானது, சட்டத்தின் வெளிப்படையான மொழிக்கும் (language of the statute) அதன் கொடூரமான நடைமுறை சமூக விளைவுக்கும் (practical social effect) இடையிலான போராட்டமாக அமைந்தது.

நீதிமன்றங்கள், சட்டத்தின் வெளிப்படையான மொழியை மட்டுமே ஏற்றுக்கொண்டு, அந்த சமூகத்தின் 'இடம்பெயர்வுப் பழக்கவழக்கங்களை' காரணம் காட்டி, அவர்களின் உரிமைகளைப் பறிப்பதைச் சட்டபூர்வமாக்கியது. இந்தச் சட்டங்களும், அதைத் தொடர்ந்த தீர்ப்பும், இலங்கையில் ஒரு பாரிய நாடற்ற சமூகத்தை உருவாக்கியது மட்டுமல்லாமல், நாட்டின் இனப் பிளவுகளுக்கு ஆழமான சட்ட அடித்தளத்தை இட்டது. இது, அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட சட்டப் பாதுகாப்புகள் கூட, அரசியல் நோக்கங்களால் எவ்வாறு தோற்கடிக்கப்படலாம் என்பதற்கான ஒரு வேதனையான வரலாற்றுச் சான்றாக இன்றும் நிரூபித்து நிற்கிறது.

குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் தவணை 1949 ஒகஸ்ட் 5-ஆம் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் வழங்கப்பட்டிருந்தன. பின்னர் அது மேலும் ஓராண்டு நீடிக்கப்பட்டது. ஆனால் பின்னர் இந்த 1953-ஆம் ஆண்டு யூலை தீர்ப்பு பலரை குடியுரிமை இழந்தவர்களாக, நாடற்றவர்களாக, வாக்குரிமை இழந்தவர்களாக ஆக்கியதுடன் நம்பிக்கை இழந்த மக்கள் கூட்டமாக ஆனார்கள். இந்தியாவும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இலங்கையிலேயே தங்கிவிட்டவர்கள் வலுக்கட்டாயமாக பிடித்து அனுப்பப்பட்டுக்கொண்டிருந்த செய்திகள் அப்போது பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டே இருந்தன.

ஜனாப் ஏ. அஸீஸ் எம்.பி அப்போது இத்தீர்ப்பு பற்றி குறிப்பிடுகையில் 'இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்துகொள்வதானால் செய்துகொள்ளலாம். ஆனால் அதுவரை வாக்காளர் பட்டியலில் இந்தியர் பெயர்கள் இருக்க வேண்டும். அப்பீலின் முடிவு தெரியும்வரை அடுத்த பொதுத் தேர்தலையும் நிறுத்தி வைக்கவேண்டும். அப்படியில்லாமல் பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அவை செல்லுபடியாகாது' என்றார். ஆனால் மேன்முறையீட்டு வழக்கை பிரிவிக் கவுன்சில் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே 1952-ஆம் ஆண்டு தேர்தலை நடத்தி முடித்தது அரசாங்கம்.

குடியுரிமை, வாக்குரிமை, சோல்பரி யாப்பின் 29-வது சிறுபான்மை காப்பீட்டு சரத்து போன்றவற்றை கேள்விக்குட்படுத்தும் பிந்திய வழக்குகளையெல்லாம் தோல்வியடையச் செய்ய மேற்படி கொடக்கன் வழக்கு ஒரு முன்னுதாரண வழக்காகவும், தீர்ப்பாகவும் பின்னர் பலரால் பயன்படுத்தப்பட்டது.

1947-ஆம் ஆண்டு (அதுவும் சுதந்திரத்துக்கு முன்) சோல்பரி யாப்பின் கீழ் இடம்பெற்ற தேர்தலில் 7 இந்திய வம்சாவளியினர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால் இந்த வழக்குகளின் மூலம் பிரஜாவுரிமை சட்டமும், தேர்தல் திருத்த சட்டமும் முழு அதிகார வலுவைப் பெற்றுவிட்ட நிலையில் 1952-ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது.

அந்தத் தேர்தலில் ஒரு இந்திய வம்சாவளி அங்கத்தவரும் தெரிவாகவில்லை.

சுதந்திர இலங்கையின் சட்டபூர்வமான இன சங்காரம் அங்கிருந்து ஆரம்பித்தது.



sarawanan.n@thaiveedu.com

**கிருங்கை சேதுபதி**

# பாரதி வகித்த பாத்திரம்

எழுதப்பட்ட கதையோ, கவிதையோ சொல்லும் செய்தியைப் போலவே, அது எழுதப்பட்ட விதம் குறித்தும், எழுந்த பின்னணி குறித்தும் தனிக் கதை இருக்கத்தான் செய்கிறது. அது எழுதப்பட்ட படைப்பின் செய்தியை விடவும் சுவாரசியமிக்கதாய் அமையும். அப்படிப்பட்ட தன்மை, பாரதி யாரின் படைப்புகளுக்கு உண்டு.

ஒரு படைப்பு அச்சு வாகனம் ஏறி, வாசக மனம் சென்று அடையும் முன் குறைந்தபட்சம் அது மூன்று பரிணாமங் களைக் கடந்து வருகிறது.

- அது கருக்கொண்ட நிலையில் இருந்து உருக்கொண்ட நிலை வரையிலானது முதற்பரிணாமம்.
- உருப்பெற்ற படைப்பினை உருவாக்கியவரே உரைக் கவோ, இசைக்கவோ அமைவது அடுத்தது.
- அச்சேற்றும் விதமாக எழுதப்பெற்று முழுமை பெற்ற நிலை மூன்றாவது.

அதன் பின்னர் அச்சேறும் காலத்திலும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பெறலாம். தனிப் பிரதியாகவோ, இதழ்களிலோ அச்சேற்றம் பெற்ற பிறகு, அது ஆசிரியரின் பெயரில் வரும் தொகுப்பு நூலில் இடம்பெறும்போது மாற்றம் கொள்ள நேர லாம். இந்த ஐந்து நிலைகளுக்கும் பிறகே அப்படைப்பானது முழுமையாக வாசகரை முறையாகச் சென்று சேருகிறது.

முன் சொல்லப்பெற்ற மூன்று நிலைகளில் முதல் நிலையாக அமைவதனை, அப்படைப்பே முழுமையாக உணர்த்தி விடும். அடுத்த நிலையினை நேருறக் கண்டும் செவிம டுத்தும் துய்த் தோர் சொல்ல, எழுத அறிவது. மூன்றாம் நிலை, அதனைக் கையெழுத்துப் படியாகக் கண்டு அறிவது. பின்வரும் இரு நிலைகளும் பாடபேதங்களோடு நுணுகிக் கண்டு பதிவிட்டால் அறிய நேரலாம்.

இந்தப் படிநிலைகளில் பார்க்கக் கிடைக்கும் பாரதியார் பாடல்களில் ஒன்று, ‘யோகசித்தி’ அல்லது ‘வரங்கேட்டல்’ பாடல்.



இது பராசக்தியை நோக்கிப் பாடி வரம் கேட்கும் பாடல். இது பிறந்த ஆண்டு, 1913. இதனைப் பாடிய பாரதிக்கு வயது அப்போது, 31. புதுவையில் புகுந்து ஐந்து ஆண்டுகள் முடிந்த நிலை. அதாவது பாரதியாரது புதுவை வாழ்நாளின் மையப்பகுதி. அப்போதைய அவர்தம் மனநிலையையும், வாழ்வியல் நெருக்கடிகளையும் அடிநாதமாகக் கொண்டு எழுந்த பாடல் இது. படைப்பாக்க மனநிலை உச்சம் கொண்ட உன்மத்த நிலை. அதனைச் சற்றே விரிவுறப் பார்க்கலாம்.

•

பிரிட்டிஷ் அரசின் நெருக்கடிகளுக்குத் தப்பிப் புதுவை புகுந்த பாரதி குழுவினரால், அசுர வேகத்தில் நடந்த அரசியல் சார்ந்த இதழியல் பணிகள் அனைத்தும் ஆஷ் கொலைக்குப் பிறகு நிலைகுலைந்தன. அப்போது, 'பிரிட்டிஷ் - பிரெஞ்ச் ரகசிய உடன்படிக்கையின் விளைவால் பாரதி குழுவினர் பட்ட இன்னல்களுக்குக் கணக்கே இல்லை' என்று எழுதுகிறார் சீனி. விசுவநாதன். 'அத்துமீறி சூழ்ச்சிகளைக் கையாண்டு போலீஸார் இழைத்த கொடுமைகளையெல்லாம் சகித்துக்கொண்டும், தாங்கிக் கொண்டும் புதுவையில் வாடிய பாரதியின் நிலையையும், அவரைப் போன்ற நண்பர்களின் நிலைமைகளையும் எண்ணிப் பார்ப்பதற்கே நம்மால் இயலவில்லை. கற்பனைக்கு எட்டாத கொடுமைகளையெல்லாம் அனுபவித்து, அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிப் பார்த்தால் கல்லும் கரையும். தேசத்தின் பொருட்டு, மக்களின் சுதந்திர வாழ்வின் பொருட்டு, அவர்கள் துன்ப வாழ்க்கை வாழ்ந்தார்கள். பழிமொழிகளை ஏற்றார்கள். சிறைவாசத்திலும் கொடிய வாசத்தை அவர்கள் அனுபவித்தார்கள். ஆம். புதுவை தேச பக்தர்கள் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டார்கள். தபால் கிடைப்பதும், பண வரவு வருவதும் நிறுத்தப்பட்டன. உள்ளூர் மக்கள் ஒருவித பயத்தோடு பார்த்தார்கள். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களும் பழக, பேசப் பயந்தார்கள். இப்படிப்பட்ட நிலையில், பாரதி உள்ளிட்டவர்களுக்கு உதவக்கூடிய பரோபகாரிகள் இருக்கத்தான் செய்தார்கள்' என்று அக்கால நிலையையும் பாரதி அங்கிருந்த சூழலையும் விவரிக்கிறார் சீனி. விசுவநாதன்.



இந்தக் காலக்கட்டத்தில்தான், சுப்பிரமணிய சிவா, 1913-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 'ஞானபாநு' என்கிற பெயரில் மாத இதழ் ஒன்றினைத் தொடங்கி, சென்னையில் இருந்து வெளியிட்டுவரத் தொடங்கினார்.

***அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்***
***என்னுடைய ரேனும் இலர்***

என்ற திருக்குறளைத் தன் முழக்க நோக்கமாகக் கொண்டு வெளிவந்த ஞானபாநு, பத்திரிகைத் தொடர்பே இல்லாது தவித்த பாரதிக்குத் தகுகளம் விரித்தது. அனைத்தும் இழந்த நிலையிலும் அனைத்து உடைமைகளுக்கும் உரிமையதாக்கும் அறிவுடைமையின் ஆற்றலை வெளிக்கொணரக் களம் அமைத்தது.

அதன்வழி உலகிற்கு உண்மை உரைக்க, அறிவாற்றலைப் பயன்படுத்திக்கொள்ளப் பாரதி இயங்குகிறார். அரசியல் நெருக்கடியோ, ஆன்ம விளைவோ தெரியவில்லை, சொந்தப் பெயரை ஒளித்து, சாவித்திரி, நித்திய தீரர், உத்தம தேசாபிமானி ஆகிய புனைபெயர்களில் தன் படைப்புகளை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் பாரதிக்கு வந்திருக்கிறது. இந்தப் பெயர்களுக்குப் பின்னாலும் ஒருவித நோக்கம் இருந்திருக்கிறது.

•

தன் எட்டயபுர இளமை வாழ்க்கையை, 'சின்னச் சங்கரன் கதை'யாக எழுதியபோது, 'சாவித்திரி' ஆகவும், போகியும், யோகியும், ஞானியும் பாடுவதாக அமையும், 'மது' கவிதையை, 'நித்திய தீர'ராகவும் இருந்து எழுதிய பாரதி, 'யோக சித்தி' பாடலை எழுதியபோது, 'ஓர் உத்தம தேசாபிமானி' ஆகியிருக்கிறார்.

கவிதைக்குத் தலைப்பு வைப்பது போலவே, கவிதை எழுதிய தனக்கும் ஒரு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார் பாரதி. இதிலும் ஓர் நுட்பம் புலப்படுகிறது. சின்னச் சங்கரனாக இருந்த சுப்பிரமணியனைப் பாரறிய, பாரதி ஆக்கிய எட்டயபுரத்தில் இருந்த காலத்தை மனத்திற்கொண்டு எழுதப்பட்ட தன் வரலாறு தழுவிய அக்கதை, காலத்தை வெல்லும் வேட்கையை உள்ளடக்கியது. அதனால்தான் பாரதி, காலனை வென்ற காரிகையாகிய சாவித்திரி பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டார்போலும். (சாவித்திரி என்றொரு காவியம் படைத்த அரவிந்தரின் தோழமையையும் இணைத்துக் கருத்தில் கொள்ளலாம்.)

மதுவுக்கும் போதைக்கும் அடிமையாகியவராக, அவர்தம் வாழ்வியல் சூழலை அவதானித்துப் பழி சொல்பவர்களுக்குப் பதில் தருவதாக அமைவது 'மது' கவிதை. அது அற்பப் போதைகளைக் கடந்த அற்புத மது என்பதை உணர்ந்த பாரதி, உலகிற்கு அதனை உணர்த்தப் பாடிய கணத்தில்,

தான் எதற்கும் எப்போதும் அடிமையாகாத நித்திய தீரராக நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறார் என்பதன் புலப்பாடு, அந் தப் புதுப் பெயர்.

அந்த வரிசையில், பாரதி பாடிய அடுத்த பாடல், 'யோக சித்தி', நித்திய யோகத்தில் தம்மை இருத்திக் கருதியதை எல்லாம் கைக்கொள்ள விழையும் தேசபக்தர்களின் தீரத் திற்கு அமுதூட்டும் அழகிய பாடல் அது. உலகில் எந்த நாட்டில் பிறந்தாலும், அந்தந்த நாட்டிற்கு உரிய உத்தம தேசாபிமானியாக இருக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்தப் பாடல் பொருந்தும் நிலையில் பாரதி இசைத்தது.

நாட்டு விடுதலையில் நாட்டம் கொள்ளும் எவருக்கும் ஊட் டம் தருகிற உண(ர்)வாக அமையும் இப்பாடலைத் தன் னொத்த அன்பர்களை முன்வைத்து அதிகநேரம் எடுத்து, ஆன்மா குழையக் குழைய இசைத்துக் கொடுத்திருக்கிறார் பாரதி.

●

புதுவை நகருக்கு வெளியில் நண்பர் ஒருவரின் பங்களாவில் தன் சகாக்களைக் கூட்டி, விருந்து உண்ண ஏற்பாடு செய்த பாரதி, அது வரும் வரையில் வெட்டிக் கதை பேசிப் பொழு தினைப் போக்காமல், வீரவுணர்வு ஊட்டி, தேசபக்தர்களின் உள்ளாற்றலை ஒருங்கு குவிக்க முனைகிறார். தன் ஆற்றலை முழுதாக ஒருமுகப்படுத்திக் கொண்டு, தமிழறிந்த அனை வருக்கும் தாய்ப்பால் போல் பாடலாகப் பருக ஊட்டுகிறார். ஆரப்பருகிய அன்பரான குவளைக் கண்ணன் மீள நினைந்து அதைச் சொல்லுகிறார்.

'விருந்து சாப்பாடு வருவதற்கும் சாப்பிடுவதற்கும் இடையே உள்ள நேரத்தை வீணாக்காமல், ஸ்ரீ பாரதியார் தாம் அப் போதுதான் புனைந்த காளிப்பாட்டை, '(விண்ணும் மண்ணும் தனியாளும்' என்று ஆரம்பிப்பது) தமது முழு ஆவேசத்துடன் தம்மைச் சூழ்ந்திருந்த நண்பர்களுக்கு பக்தி அர்த்தம் உருக் கமாக ஏற்படும்படி சுமார் அரை மணி காலம் பாடிக் கொண் டிருந்தார். அந்தச் சமயத்தில் முதன்முதலாக கம்பீரமான குரலில் பாரதியார் பாடியதைக் கேட்ட அதிர்ஷ்டமுள்ள நேயர்களில் அடியேன் ஒருவன்.'

●

சுமார் அரைமணி நேரம் பாடிய பாட்டு அது. ஒரு பாட்டு அல்ல, அது ஒருமையை முன்னிறுத்தி, ஒரு தலைப்பின்கீழ் பாடிய பத்துப்பாட்டின் திரட்டு. பதிகம் போல் என்றும் கொள்ளலாம். (இந்தப் பின்புலத்தில், அக்காலத்தில் சமய எழுச்சியைத் தமிழின் வாயிலாக, அன்பர்களுக்குப் பரவசத் துடன் பாடி உணர்த்திய திருநாவுக்கரசரை, திருஞானசம் பந்தரை, ஆழ்வாராதிகளை நினைவில் கொள்ளலாம்.) மாணிக்கவாசகர் சிவபுராணத்தின் நிறைவில் பாடியதுபோல், 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து' உணர்த்தப் பாடிய நிலை அது.

பாரதி, எப்படிப் பாடினாரோ, அப்படி, கி.வா.ஜ. முன்னி லையில் அப்படியே பாடும் ஆசையில் குவளைக் கண்ணன் பாடியும் காட்டியிருக்கிறார். அதனை மூலவரும் பின்னவரும் எப்படிப் பாடினார்கள் என்பதை எப்படிக் காட்டுவது? காண் பது? கேட்பது? இந்த இடத்தில்தான் எழுத்துக் குறிப்பு ஓரளவு உதவுகிறது.

இந்த நேரத்தில் இன்னொன்றினையும் சொல்ல வேண்டி இருக்கிறது. காளியை முன்னிறுத்திப் பாடப்பெற்ற இப் பாடல், கையில் சூலமும் கருத்த மேனியும் எலுமிச்சைக் கனி மாலையும் தரித்துக் கோயிலில் எழுந்தருளும் காளியை அவ தானித்துப் பாடிய பாடல்தானா? பாரதியைப் பக்திச் சிமிழுக் குள் அடைக்கலாமா? அவர் தேசபக்தர் அல்லவா? என்று நண்பர்களுள் சிலர் கேட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் விளக்கம் தருகிற வகையில்தான், இப்பாடலை அரங்கேற் றினார் பாரதி. நேருற இருந்து கேட்க முடியாதவர்களுக்கு, குறிப்பாக, இராக விளக்கத்தையும் பாடுபொருள் நோக்கத் தையும் தந்த அவர், தன்னை ஓர் உத்தமதேசாபிமானி என்ற பெயரில் நிறுத்தி இருக்கிறார்.

●

***'பேசுவது மானம் இடை பேணுவது காமம்***
***கூசுவது மானிடரை நன்று நம் கொற்றம்'***

என்று கம்பராமாயணத்தில், கும்பகருணன் தன் அண்ணன் இராவணனிடம் பேசுகிறான். உண்மையில், இவ்வாறு பேசு பவன் கம்பன். ஆனால், உரிமைக்கு உரியவன் கும்பன். கும்பன், கம்பனுக்குள் அடக்கம். கம்பனின் கவி விசுவரூபம், கும்பனை விடப் பல மடங்கு பெரிது என்பதை, கவிநேயர்கள் எவ்வாறு உணர்வார்களோ, அவ்வாறு பாரதியன்பர்களும், இப்பாடலைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

●

இப்பாடல் பாரதி பாடினாலும், அவர் உத்தம தேசாபிமானி என்னும் பாத்திரம் ஆகிப் பாடியது என்பதை நுட்பமாய் உணர்த்தும் குறிப்புகள் பின்வருமாறு.

- குறிப்பு: இப்பாடல்களில் வரும் காளி, சக்தி, மாரி முதலி யன உலகத்தின் மூலசக்தியைக் குறிக்கும் பெயர்களாம்.
- குறிப்பு: இப்பாடலை ஹனும தோடி மேளத்தில் ஆதி தாளத்தில்

***மாமா - காக - ரிரி - ஸாஸாநிதி***
***ஸகா- காககா - கம - கமபா - மம***
***மாமா - காக - ரிரி - ஸாஸா***

என்ற இசையில் சமயோசிதமாக மாற்றிப் பாடுக.

இசை மரபும் நுணுக்கமும் அறிந்தவர்கள் இந்தப் பாடல் குறித்த இசைக்குறிப்புக் கொண்டு எவ்வாறு பாடிப் பயன் பெறுவார்களோ, அவ்வாறே ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணத் தெரிந்தவர்கள், இப்பாடலில் இடம்பெறும் காளி முத லான பெயர்ச்சொற்கள் உணர்த்தும் இயற்கைப் பேராற்ற லான மூல சக்தியினை உணர்ந்து கொள்வார்கள்.

பேரண்டத்தில் ஒரு பந்தாய்ச் சுழலும் இந்தப் பூமி எப்படி அதன் உறுப்பாக விளங்குகிறதோ அதுபோல், அதன் ஒரு அணுக் கூறாய்த் திகழும் மனிதரும் பேரண்டத்தின் அங்கத் தினர் ஆவார். அணுவுக்குள் நிறைந்த பிரபஞ்ச ஆற்றலைத் தன் செயலாற்றலாக மாற்றிக்கொண்டு பேருருக் கொள்ள உதவும் கருவியாக இப்பாடல் அமைகிறது.

வ.உ.சி., அரவிந்தர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களைப் போல், ஆங்கிலேயச் சிறைச்சாலைகளில் அடைபடும்

வாய்ப்பினைத் தவிர்த்து, தன்னையே சுய சிறைக்குள் அடைத்துக் கொண்டவராக பாரதி, புதுவையில் இருக்கிறார். தன் போலவே இயங்கும் சக தோழர்களை உடன் இருத்திக் கொள்கிறார். அங்கே வாழும் தமிழன்பர்களையும் இணைத்துக் கொள்கிறார். நான்கு திசைகளிலும் எல்லை கட்டிக் கண்காணிக்கிறது, பிரிட்டிஷ் அரசு. பிரெஞ்சு ஆதிக்கத்திற்குரிய நிலப்பரப்பில் மட்டும் பாரதி இருக்கலாம். இயங்கலாம் என்கிற நிலை. அறைக்குள் முடக்கப்பட்டவர்கள் சிறைக்கைதிகள் என்றால், விசாலமான நிலப்பரப்பில் அடைக்கப்பட்டவர் பாரதி. நான்கு சுவர்கள் சிறையாளர்களுக்கு. பாரதிக்கோ, நாற்புறத்தும் சற்றே பரந்த திசை எல்லை. ஆனால், அவரவர்க்கு இருக்கும் நிலமும் தலைக்கு மேலே உள்ள வானமும் சொந்தமானவை. இருக்க, இயங்க உரிமை உடையவை.

மண்ணுக்கும் விண்ணுக்கும் இடைப்பட்ட இடத்தில் இருந்து ஓங்கி எழுந்தால் அது பேருரு. (விசுவரூபம்). அங்கு சூட்சுமமாக நிறைந்த மூலப் பேராற்றலை, சக்தி, காளி முதலான பாமர பக்தர்களுக்கு அருளும் தெய்வ நாமங்களைச் சூட்டி நிலை நிறுத்திக் காட்டுகிறார் பாரதி. உணர்வும் உணர்ச்சியும் ததும்பத் ததும்பப் பாடுகிறார்.

•

***'விண்ணும் மண்ணும் தனியாளும் - எங்கள்***
***வீரை சக்தி'***

இது விளி. அதாவது சக்தியை அழைத்துப் பேசுவது. அவளாகிய அது, எங்களுடையது. எங்களுக்கே உரிமையானது என்பது உணர்த்த, 'எங்கள் வீரை சக்தியானவள் விண்ணையும் மண்ணையும் தனித்து நிரந்தரமாக ஆளக் கூடியவள்' என்று பாடுகிறார். வணிகம் புரிய வந்து, இடைக்காலத்தில் வஞ்சமாக ஆட்சி செய்கிறவர்கள் பிரிட்டிஷார். (பிரெஞ்சு தேசத்தாரும் பிற தேசத்தார் தாமே.) அது இடைக்காலத்தில் நேர்ந்த இன்னல். அதனை வெல்ல நிரந்தர ஆட்சியாளியாகிய பாரதமாதாவை, வீரை சக்தியாக நிறுத்தி, விளி (அழை)த்து, அவளது அருளையே தன்னுடைய கண்ணும் கருத்துமாகக் கொண்டு, அன்பு கசிந்து கசிந்து கசிந்து உருகிப் பாடுகிறார் - இது கவியின் உருக்கம்.

முதலில் ஏற்படும் உணர்வு, அன்பின் கசிவு. அடுத்தும் அது தொடர்வதால் அது பெருக்கம். அடுக்குத் தொடராக அதனை இசைக்க, எழுத இலக்கணம் அனுமதிக்கிறது. அதற்கு மேலும் ஏற்படுகிற அதீத உணர்வின் வெளிப்பாடு, பாரதியின் புதுவேகமாக அமைகிறது. மும்முறை கசிந்து என்ற சொல்லாக அது வெளிப்படுகிறது.

கசிந்து கசிந்து கசிந்து -

இந்த இடத்தில், பிஜித் தீவில் இத்தேசத்து மக்கள் படும் துயரை வெளிப்படுத்த, 'விம்மி விம்மி விம்மி அழுங்குரல் கேட்டிருப்பாய் காற்றே' என்ற பாடல் வரிகளில் பாரதி அழுத்தி உரைப்பதை நினைவில் கொள்ளலாம். புலம்பெயர்ந்து வாழ்தலின் பெருங்கொடுமை அது. இந்தியாவுக்குள் இருந்தாலும், தமிழ்நாடும், புதுச்சேரியும் அப்போது அயலகங்கள் தாமே.

இந்த உண்மையை உணர்ந்து இப்பாடலைச் சிந்தித்து அடுத்த அடிக்குள் புகலாம்.

நான் பண்ணும் பூசனைகள் எல்லாம் -

பாரதி என்ன காளி கோயில் பூசாரியா? - ஆம். அக்காளி பாரதமாதா - இல்லை, இப்பாருக்கெல்லாம் விடுதலை அளிக்கும் சுதந்திர தேவி. விடுதலைக்கான பணிகளே அவளுக்குப் பண்ணும் பூசனை. (இந்த இடத்தில் சரஸ்வதி பூசை குறித்து, பாரதி பாடிய பிறிதொரு பாடலையும் இணைத்துச் சிந்திக்கலாம்.) உரிய வண்ணம் கோயிலில் வீற்றிருக்கும் தேவிக்கு உளம் குளிரப் பூசனைகள் பண்ண முடியாவிட்டாலும் ஆத்மார்த்தமாக, அடியவர்கள் பண்ணும் பூசனை எத்தனை மகத்தானது தெரியுமா? பெரிய புராணத்துப் பூசலார் நாயனாரைப் பொருத்தம் கருதி இந்த இடத்தில் நினைவில் கொள்ளலாம். அப்படிப் பண்ணிய அல்ல - பண்ணுகிற மட்டுமல்ல - நேற்றும் இன்றும் நாளையும் 'நான் பண்ணும் பூசனைகள் எல்லாம் பாலைவனத்தில் இட்ட நீரோ?' என்ற தொடருக்கு இடையில் வெறும் என்ற தனிச் சொல்லை இடுகிறார். பாலையே வெறுமையானதுதான். அதைவிடவும் வெறுமையானது இந்தத் தனிச்சிறையாகிய கொடுமை. அதனால்தான், வெறும் பாலைவனத்தில் இட்ட நீரோ? என்று வினவுகிறார்.

தாய் அறிவாள் தன் மகவை. மகவும் தன் தாயை நன்கு அறியும். மந்தையில் நிறைந்திருக்கும் ஆடுகள் பொதுவாகத் தோன்றிடினும் தன் தாய் எதுவென்று குட்டியும், தன் மகவு எதுவென்று தாய் ஆடும் அறிவதுபோல், பிரபஞ்சப் பேராற்றல் தன்னை உள்வாங்கும் தகுதியாளனை மறக்குமா? மறக்க நியாயமா? அது கருதியே பாரதி வினவுகிறார்.

உனக்கு (இவற்றை) எண்ணும் சிந்தை ஒன்று இ(ல்)லையோ - இத்துடன் நிறுத்தவில்லை பாரதி, 'அறிவு இல்லாமல் இந்த அகிலத்தை நீ அளிப்பாயோ?' என்றும் அடுத்துக் கேட்கிறார்.

இனி, தடைவிளக்கம் தரத் தேவையன்றி, நேருறக் கேட்பதாக, வளர்கிறது பாரதி பாடல்.

***நீயே சரண(ம்) என்று கூவி - என்றன்***
***நெஞ்சில் பேருறுதி கொண்டு - அடி***
***தாயே எனக்குமிக நிதியும் - அறம்***
***தன்னைக் காக்கு(ம்)ஒரு திறனும் - தரு***
***வாயே என்றுபணிந்(து)ஏத்திப் - பல***
***வா(று) நினது புகழ் பாடி - வாய்***
***ஓயே(ன்) ஆவ(து)உண ராயோ? - நின(து)***
***உண்மை தவறுவதோர் அழகோ?***

(பாடல் - 2)

***காளீ வலியசா முண்டி - ஓங்***
***காரத் தலைவிஎன் இராணி - பல***
***நாள்(இ)ங் (கு)எனை அலைக்க லாமோ? - உள்ளம்***
***நாடும் பொரு(ள்)அடைதற்(கு) அன்றோ - மலர்த்***
***தாளில் விழுந்(து) அபயம் கேட்டேன் - அது***
***தாராய் எனி(ல்)உயிரைத் தீராய் - துன்பம்***
***நீளில் உயிர்தரிக்க மாட்டேன் - கரு***
***நீலிஎன் இயல்(பு)அறி யாயோ?***

(பாடல் - 3)

பாமர மக்கள் பயந்து பணியும் காளியைப் பயமுறுத்துகிறது பாரதியின் பக்தியுள்ளம். ‘கருநீலி என் இயல்பு அறியாயோ ?’ என்று கேட்கிற பாரதிக்குள் பக்தி வைராக்கிய நிலை ஓங்கி உயர்ந்திருப்பதை மூன்றாம் பாடல் முழுதாய் உணர்த்து கிறது. ‘இதனைத் தாராய் அல்லது உயிரைத் தீராய். தர மாட்டாய் எனில் நானே என்னை மாய்த்துக் கொள்வேன்’ என்று கேட்கிற அழுத்தம் இருக்கிறதே, அதுதான் பக்தியின் மகத்துவம். பக்தியில் தெய்வ பக்திவேறு, தேச பக்தி வேறா ? பக்தி என்பது பழுத்த மனத்தின் புலப்பாடு அல்லவா ? அதனைப் பண்ணவிடாமல் தடுப்பது எது ?

பட்டினித் துயர். பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் பாரில் வாழும் உயிர்களுக்கெல்லாம் உணவு படைத்தது இயற்கை. எந்த உயிரினமும் பட்டினியால் சாக விடாது பரிமளிக்கிறது இயற்கை. ஆனால், மனிதம் ? சோற்றுக்கு அலையும் கொடுமை, மனிதனைத் தவிர மற்ற எவ்வுயிர் அனுபவிக் கிறது ?

அந்த ஆத்திரத்தில் விரிகிறது அடுத்த பாடல். ஞானாபாநு ‘பத்திரிகையில் வெளியான நான்காம் செய்யுளான ‘தேடிச் சோறு நிதந்தின்று’ என்பது கையெழுத்துப் பிரதியில் இல்லை’ என்கிறார் மூலப் பிரதி கண்டு கால வரிசையில் பாரதி பாடல் களைப் பதிப்பித்த சீனி. விசுவநாதன். அப்படியானால், இந்தப் பாடல், முன்னர் எழுந்த பாடல்களின் வரிசையில் வந்த பாடல் இல்லை. குவளைக் கண்ணன் முதலான அன் பர்கள் முன்னிலையில், அந்தக் கணத்தில் இசைத்த பாட லாக இருந்திருக்க வேண்டும். பின்னர், பிரதியெடுத்து, அச்சிற்கு அனுப்பிய நேரத்தில் இடையில் சேர்க்கப்பெற்று இருந்திருக்க வேண்டும்.

இதுவும் சற்றே விரித்துச் சிந்திக்க வேண்டிய இடம்.

•

மீளவும் இந்தப் பாடல் அரங்கேறிய இடத்தினை, சூழலைக் கவனத்தில் கொண்டு வருவோம். அன்பர்கள் அனைவரும் அந்தப் பங்களாவின் முன்பு உள்ள குளத்தில் நீராடி மகிழ்ந்து, களைத்து உணவுக்காகக் காத்திருக்கிறார்கள். புதுவையில் இருந்து உணவு வரும் வரைக்கும் வெறும் வாயை மென்றுகொண்டிராமல், ஊர்க்கதைகளைப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். வெட்டிப் பேச்சு. வெறும் கதைகள் - குட்டிக் கதைகள். அதன்வழி வெளிப்பட்ட தனிமனித விரோத குரோதங்கள் - விளைவு, மனவாட்டம். அதுவே துன்பமாக உள்நின்று உழற்றும் கொடுமை. திரும்ப விரோ தித்துப் பழி வாங்கத் தூண்டும் செயலூக்கம் தருகிற கொடுமை. உள்நின்று உழற்றும் பசியோடு, இந்தத் துன்ப மும் சேர்ந்து உழற்றினால், என்னவாகும் ? இப்படிப் பேசிப் பேசியே, பிறர் வாடும்படியான பல செயல்கள் செய்வதி லேயே வயதும் வாழ்வும் முடிந்துவிடுகிறது. நரைகூடிக் கிழப் பருவத்தைக் கொண்டு வந்துசேர்த்துவிடுகிறது. நரையும் மூப்பும் எமனின் எச்சரிக்கைச் சமிக்ஞைகள். இரை தேடும் மிருகமாய் அலையும் கூற்றுவனுக்கு உணவாகும் வேடிக்கை மனிதர்கள் நிறைந்த அவையில், ஞானக் கதிரவனாக பாரதி தோற்றம் கொள்கிறார்.

வெற்றுக் கதைகளுக்கும், வீண் பேச்சுகளுக்கும் இடையில் பசித்துக் களைத்த யாரோ ஒருவர், வாசலின் வெறுமையைப் பார்த்துக் குரல் கொடுத்திருக்க வேண்டும்.

‘எங்கே இன்னும் சோற்றைக் காணோம் ?’

‘வாங்கி வரப் போனவர் இன்னும் வரலே.’

‘கிடைக்காம(ல்) இன்னமும் தேடித் திரிகிறாரோ ?’

‘ஒரு கடை இல்லையின்னா, இன்னொரு கடை.’

‘அதைத் தான் தேடிக்கிட்டுத்திரிகிறார் போல’

இது கற்பனை உரையாடல்தான். இதற்குக் களம் அமைக் கிறது. பாரதியின் நான்காம் செய்யுளின் தொடக்கம்.

‘தேடிச் சோறு நிதம் தின்று’ இது எழுத்துவடிவம்.

வேண்டும் அளவிற்கு நீட்டிச் சொல்ல மொழி இடம் கொடுக் குமே.

‘தே...டிச் சோ...று நிதம் தின்று’ என்ற வகையில் இந்தப் பாடலை அவரவர் சொந்த முறையில் இசைத்துப் பார்க் கலாம். மனம் வா...டி, பிறர் வா...ட, நரை கூ...டி’ என் றெல்லாம் நீள வருகிறது பாடல்.

***தேடிச் சோறுநிதந் தின்று - பல***
***சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்***
***வாடித் துன்பமிக உழன்று - பிறர்***
***வாடப் பலசெயல்கள் செய்து - நரை***
***கூடிக் கிழப்பருவ(ம்)எய்தி - கொடுங்***
***கூற்றுக் கிரைஎனப் பின்மாயும் - பல***
***வேடிக்கை மனிதரைப் போலே - நான்***
***வீழ்வேன் என்றுநினைத் தாயோ?***

(பாடல் - 4)

அதுவரையில் வேடிக்கை மனிதர்களைப் போலே இருந்த அவர்கள் இந்தப் பாடலைக் கேட்ட பிறகு, வீரர்களாகிவிட் டார்கள், காளியின் சந்நிதியில் கவனத்தைக் கொண்டு நிறுத் திவிட்டார்கள். அவள்தான் யாதுமாகி எங்கும் நிறைந்து இருக்கிறாளே!

அனைவரையும் தன் வயப்படுத்தி, பாரதி வரம் கேட்கத் தொடங்குகிறார். உத்தம தேசாபிமானியெனும் பாத்திரம் வகித்த பாரதி, யோக சித்தியில் ஆழ்ந்து மூல சக்தியிடம் கேட்கும் வரங்கள் முற்றிலும் புதுமையானவை. அது தனி அத்தியாயமாக மேலும் விரித்து விளங்கிக் கொள்ள வேண்டி யதாக இருக்கிறது.



sethupathi@thaiveedu.com

சி. ரமேஷ்

# ஈழத்துப் பெண்ணிலைவாதக் கவிதைகளில் உவமை



மனிதரின் அனுபவத்தையும் அவர்களின் உணர்ச்சியையும் மொழியாக மாற்றும் கலையே கவிதை என்பர். கவிஞர் தான் கூறவந்த விடயத்தைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் கூறுவதற்கும் மொழியை அதீதசக்தி கொண்டதாக மாற்றுவதற்கும் படைப்பின் சூட்சுமத்தை வாசகர் உணர்ந்து கொள்வதற்கும் கவிதை அழகியலாகப் பரிணமிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கவிதை தன் பொருட் தன்மையை உணர்த்துவதற்கும் புதிய அர்த்த பொருண்மையைத் துலக்குவதற்கும் கவிதைக்கு அழகியல் அவசியமாகின்றது. உவமை, கவிதையின் அழகியலை உருவாக்கும் முக்கிய கருவிகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. உணர்வினை நேரடியாகத் தொற்ற வைப்பதற்கும் கருத்தினைக் கவிஞர் கட்டிறுக்கமாக வெளிப்படுத்துவதற்கும் உவமை உதவுகிறது.

உவமை ஓர் அனுபவத்தை பரிச்சயமான பொருள் ஒன்றுடன் தொடர்புபடுத்தி வெளிப்படுத்துவது. மனதின் அகவெளிப்பாட்டை நினைவில் நிலைக்கச் செய்யும் காட்சியாக மாற்றும் உருக்காட்டியாய் உவமை வெளிப்படுகிறது. உவமையை அரிஸ்டோட்டில் மேதைமையின் அடையாளமாகக் காண்கிறார். உவமை வெறும் அலங்காரமன்று அர்த்த உற்பத்தி. கவிதையை வாசகருடன் இணைக்கும் ஆதார சுருதி. சிந்தனையின் மையத்தில் கிளர்ந்தெழும் உவமை கவிதையை அர்த்த புஷ்டி கொண்டதாக மாற்றுகிறது. இதனாலேயே பால் ரிக்கூர் (Paul Ricoeur) உவமை புதிய அர்த்தத்தை உருவாக்குகிறது என்பார். அர்த்தங்களின் இடைச் செயலாகக் கருதப்படும் உவமை மனித சிந்தனையின் அடிப்படை அமைப்பு. யதார்த்தத்தை மறுபடி வடிவமைக்கும் அர்த்த உற்பத்தி. உவமை, கவிதையில் யதார்த்தத்தைப் பேசும் மொழி, நிற்காது யதார்த்தத்தை உருவாக்கும் மொழியாகச் செயற்படுகிறது.

கவிஞர் தான் பிறருக்குக் கூறக் கருதிய பொருளை அவருக்கு நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்கும்போது உவமை பிறக்கிறது. அகத்தை புலவன் பண்பு, தொழில், பயன் என்பவற்றின் அடிப்படையில் ஒரு பொருளுடன் ஒப்பிட்டுக் காட்டித் தெளிவுறுத்த உவமை உதவுகின்றது.

*'பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்*
*ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து*
*ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை'*

என்ற தண்டியாசிரியரின் கூற்று இதனைத் தெளிவுறுத்தி நிற்கிறது. பொருள் அணிகள் முப்பத்தைந்தில் தலைமை அணியாக உவமை அணி அமைகிறது. பிற அணிகளின் தோற்றத்துக்கும் கால்கோளாக உவமை அமைவதால் இதனைத் தாயணியாகவும் கொள்வர்.

பெண் அனுபவத்தின் செயற்பாட்டைத் தத்ரூபமாக வெளிப்படுத்த உவமை உதவுகிறது. பெண்ணைப் பார்வைப் பொருளாகச் சித்திரிக்கின்ற உவமைகளை வெறுக்கும் பெண்ணிலைவாதிகள், ஆண்மையமான, உடல்மயமாக்கும், ரோமான்டிஸ் உவமைகளைத் தீவிரமாக மறுபரிசீலனை செய்கின்றனர். வீடு, சமையலறை, தொழில், ஆண் மையவாத எதிர்ப்பு, மாதவிடாய், சூல் கொள்ளல் என்னும் அனுபவத் தளங்களில் இருந்து உருவாகும் உவமைகள் ஈழத்துக் கவிதையைப் பொருளாற்றல் கொண்டவையாக மாற்றத் துணை செய்கின்றன.

*'...தொலைவில்*
*ஏதோ தவிப்புடன் துடித்துக் கொண்டிருந்த*
*ஒற்றை வெள்ளி*
*அடுத்த வீட்டு நிழல் மூக்குக்கூறை முகட்டில்*
*மூக்குத்தி என ஜொலிப்பதைப் பார்த்திருந்தோம்...'*

*உடல் பச்சை வானம் - பக். 12*

அனாரின் கவிதையில் வெளிப்படும் இவ்வுவமை நேரடியான பொருண்மைக்கூடாகத் தன்னை வெளிப்படுத்தாது படிமமாற்

றுக்கூடாகத் தன்னை வெளிப்படுத்துகிறது. பெண்ணின் தனிமையையும் வெறுமையையும் அவள் மனதின் சலனத்தையும் ஒற்றை நட்சத்திரக்கூடாகக் காட்சிப்படுத்தும் அனார் 'அடுத்த வீட்டு நிழல் மூக்குக்கூரை முகட்டில் மூக்குத்தி என ஜொலிப்பதாக' கூறி இயற்கையை பெண்ணுடலின் அழகியல் குறியீடாய் மாற்றுகிறார். இங்கு இயற்கையின் ஒளி பெண்ணின் அழகாக உருமாறுகிறது. பெண் உடல் பொருளாக்காத அனார் அண்டமே பெண் அனுபவத்தின் மொழியாக மாற்றுகிறார். பிரகடனமின்றி அலங்காரச் சொல்லற்று பிரபஞ்ச அழகியலை மனித உடலோடு இணைத்து நிற்கிறது கவிதை.

*'என் மீது*
*சிறிதளவேனும் அன்பைக் காட்டாத*
*ஒரு காட்டு மிருகம் போலவே*
*இன்று வரை நீ வாழ்ந்து கழித்தாய்...'*

*என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை! - பக். 32*

எதிர்ப்பின் குரலை வெளிப்படுத்தும் பெண்ணியாவின் கவிதையில் வெளிப்படும் உவமை, அழகியல் சார்ந்தது அல்ல. சிறிதளவேனும் அன்பைக் காட்டாத சமூக உறவின் மீதான வெறுப்பின் வெளிப்பாடு. வன்முறையாளரை மனித நேய எல்லைக்கு வெளியே தள்ளும் பெண்ணிலைவாதக் கவிதையாய் ஒலிக்கிறது.

இளந்தலைமுறையை சேர்ந்த ஆளுமைமிக்க கவிஞர்களில் ஒருவரான ஃபஹீமா ஜஹான் சமூகப் பிரக்ஞை மிக்கவர். தன் சிந்தனை வட்டத்தை இனம், மொழி, மதம் என்ற வட்டத்துக்குள் சுருக்கிக் கொள்ளாது மனிதநேயத்தோடு பன்முக சமூகத்தை அணுகியவர். மனித அவலத்தை தான் நிலை கொண்ட புலத்தின் வாயிலாகச் சித்திரிக்க முயன்றவர். அதில் வெற்றியும் கண்டவர்.

*'வெயில்*
*மிகப் பெருந் தண்டனையை*
*வழிநீளப் பரவ விட்டுள்ளது*
*வேட்டை நாய் போல*
*அவள் முன்னே*
*ஓடிச் செல்கிறது நிழல்...'*

*ஆதித்துயர் - பக். 29*

யுத்தம், வறுமை, இடப்பெயர்வு போன்ற சமூக - வரலாற்று வன்முறைகளால் தலைமுறை தலைமுறையாக மனிதரைத் தொடரும் ஆதித்துயரை வெயிலில் அவியும் மூதாட்டியின் துயருக்கூடாக வெளிப்படுத்தும் இக்கவிதை யுத்தத்தின், அரசியல் வன்முறையை, அதிகாரத்தின் கொடுமையை வெளிப்படுத்த ஆதார சக்தியாய் சூரியனைக் கொள்கிறது. இக்கவிதையில் உவமைதான் கவிதையின் மைய அர்த்தத்தைத் தாங்குகின்றது. 'வெயில் / மிகப்பெருந் தண்டனையை / வழிநீளப் பரவ விட்டுள்ளது' என்ற வரி உருவக உவமையாய்க் கருக் கொள்கிறது. மனிதர் விதிக்கும் கொடூரத்தின் பிரதிபலிப்பே தண்டனை. அதாவது வெயில் யுத்தத்தின் விளைவு போல, அல்லது அதிகாரத்தின் தண்டனை போல மனிதரைச் சுடுகிறது. யுத்தசூழலில் மனிதருக்கு கிடைக்கவேண்டிய நிம்மதி, பாதுகாப்பு என்பன கிடைக்காது எட்டா தூரத்துக்குச் செல்வதை 'வேட்டை நாய் போல / அவள் முன்னே / ஓடிச் செல்கிறது நிழல்' என்றவுவமை துலக்கமாய் விளக்கி நிற்கிறது. உயிர் தப்பிய பின் மீதமிருக்கும் மெலிந்த இருப்பினை இக்கவிதை ஆழமாய் விளக்கி நிற்கிறது.

கிழக்கிலங்கை கவிஞர்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்களில் ஒருவர் அஷ்ரபா நூர்தீன். வேலியாய் மரபை வரித்துக் கொண்டு நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்வுக்குள் தன்னைத் தக்க வைத்துக் கொண்டு எழுச்சி மிக்க கவிதைகளைத் தந்த அஷ்ரபா நூர்தீன் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான கவிதைகளை எழுதியவர். மனிதர்களை சக மனிதர்களே ஒடுக்கி வாழ்ந்த 1996 காலப்பகுதியில் வடபுலத்தில் மக்கள் பட்ட இன்னல்களை அவரது கவிதைகள் பல சித்திரித்து நிற்கின்றன. தான் கண்டுணர்ந்த அனுபவ நிலையை, உணர்வை, அதற்கு ஒத்த மற்றொரு அனுபவத்துடன் உணர்வுடன் ஒப்பிட்டுக் கூறும் கவிதையே 'தேசிய விருது'. தினமும் அச்சத்துடனும் காயம்பட்ட வலிகளுடனும் யாருமே உதவிக்கு வராத யாழ்ப்பாணத்தில் கழிக்கும் வாழ்வை இவர் கையாண்ட உவமைகள் விளக்கி நிற்கின்றன.

*'முட்களின் மேல் நடப்பதுபோலவும்*
*வெறிச்சோடிய மண்டபத்திற்குள் இருப்பது போலவும்*
*விநாடிகள் ஒவ்வொன்றும்*
*ஒரு பயங்கரம் வந்து நகர்வது போலவும் ஆன*
*வடபுல வாழ்க்கை'*

1996 காலப்பகுதியில் வடபுலத்தில் முஸ்லிம் மக்கள் ஒடுக்கப்பட்டபோது மக்களின் அச்சத்தையும் மன உளைச்சலையும் பாதுகாப்பின்மையையும் உவமைகளின் மூலம் இக்கவிதை தீவிரமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

வரலாற்றின் வலியையும் அவலத்தின் சிதைவுகளையும் துயர அனுபவத்தின் மனக் காயங்களையும் வெளிப்படுத்தும் உருத்திராவின் கவிதைகள் உணர்வின் மொழியாகப் பரிணமிக்கிறது. உருத்திராவின் கவிதைகளில் யதார்த்தம் கருத்தாக வெளிப்படாமல், உவமைகளின் வழியாக உடலில் பதிந்த அனுபவமாக உருமாற்றம் பெறுகிறது. இந்த உவமைகள் தனிப்பட்ட வலியை மட்டுமல்ல, வரலாற்றரசியல் வன்முறையால் உருவான கூட்டு துயர அனுபவத்தையும் ஒரே நேரத்தில் தரவல்லது. இதனை 'அஞ்சலிக் குறிப்புகள்' என்ற கவிதை தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

*'சடலங்களின் முன்னே*
*இயலாமையைப் பற்றிய மனிதர்களைப் போல்*
*தலைகவிழ்ந்திருக்கும் மெழுகுவர்த்திகளிடம்*
*வாசிக்கவிடப்படுகின்றது*
*பேரன்புகளோடு செய்யப்பட்ட ஜீவிதத்தின் சரிதம்'*

இக்கவிதையின் மொழி பிரகடனமல்ல. உணர்வின் மொழி.

வழமையாக மெழுகுதிரியையே கவிஞர்கள் உவமையாகக் கொள்ள, உருத்திரா, இயலாமையால் வருந்தும் மனிதர்களை உவமையாகக் கொள்கிறார். மனித அவலத்தை உயிரற்ற பொருளின் உடலுக்குள் மாற்றி வைத்துப் பேசுகிற இக்கவிதை உடலை தனிமனித உடலாகக் கொள்ளாமல் அதிகாரம் தாக்கும் இடமாகவும் அரசியல் எழுதப்படும் நிலமாகவும் மாறுகிறது. இங்கு உவமை அலங்காரமாக அல்ல, யதார்த்தத்தைச் சாட்சியமாக்கும் மொழி. பேசாத ஒன்றின் வழியாகப் பேச முடியாததைச் சொல்லும் உருத்திராவின் இக்கவிதையில் உவமை மௌனத்துடன் இயங்குகின்றது.

தனக்கான அதிகாரங்களை நிலைநிறுத்துவதற்காகத் தன் மக்களையே காவு கொண்ட அரசை விமர்சிக்கின்ற கற்பகம் யசோதரவின் கவிதைகள் மனித வாழ்வின் சிதைவுகளைப் பேசுகின்றன. மேலைத்தேசத்தவரால் ஒடுக்கப்படும் சிறுபான்மையினரின் கவிதைகளுடன் ஈழமக்களின் வலிகளைப் பேசும் இக்

கவிதைகள் அவலத்தில் வாழும் மனித மனதின் சிதைந்த இருப்புகளை மொழியாக்குகின்றன. பழைய யதார்த்தம் உடைந்து, புதிய அர்த்தத்தை உருவாக்கும் இவருடைய உவமைகள் யதார்த்தத்தை புதிய சிந்தனைகளின் வாயிலாக மறுவடிவமைக்கிறது. நவீன உலகில் இவர் கையாளும் உவமைகள் புதிய அறிதலை உருவாக்கும் அறிவாற்றலாகவும் துலங்குகிறது.

*‘நேற்றைய குறிப்பிலிருந்து*
*கத்திகளும் வீழ்ச்சிகளும் உயிர்பெற*
*மீளவும்*
*ஃபிரீடாவின் உடலில் ஆணிகள் போல*
*கத்தியால் உறுப்பெங்கும்*
*கண்களிலும் புண்களிலும் கூட*
*குத்தி*
*நானிந்த*
*நீத்தவர் குரலிலிருந்து உறங்க விரும்புகிறேன்’*

இக்கவிதையில் கற்பகம் யசோதர அழிவின் சிதைவை நேரடியாகக் காட்சிப்படுத்தாது ஈழமக்கள் போருக்குப் பின்னரும் உணரும் உளச் சிதைவை - வன்முறையின் ஆறாத ரணத்தை அது தரும் வலியை ஃபிரீடாவின் உடல் என்னும் குறியீட்டுக்கூடாக வெளிப்படுத்துகிறார். மெக்ஸிகோவின் ஓவியக் கலைஞரான Frida Kahlo இளம் வயதில் பேருந்து விபத்தில் சிக்கி கடுமையாகப் பாதிக்கப்பட்டு உடலில் இருந்து கம்பிகளும் ஆணிகளும் அகற்றப்படாத நிலையில் வாழ்நாள் முழுவதும் உடல் வலியோடு காலத்தைக் கழித்தவர். Frida Kahlo-வின் உடல் பற்றிய குறியீடு அனுபவத்தின் மொழியை அழிவின் சாட்சியமாக்குகின்றது. மக்களின் பாடுகளை உலகளாவிய உடல் வலியாக வெளிப்படுத்தும் இக்கவிதை உடலை வரலாற்றுக்களமாகவும் மாற்றுகிறது. உறுப்பெங்கும் கத்தியால் குத்தி நீத்தவர் குரலிலிருந்து உறங்க விரும்புகிறேன் என்ற வரி இதனை உறுதிசெய்கிறது. ஃபிரீடாவின் உடல் வலியை கற்பகம் யசோதர, மனதை விட்டு அகலாத ஈழத்தின் வலியாக உணர்கிறார். அவ்வலி இக்கவிதையில் கவிஞரின் உடல் வலியாக உருப்பெறுகின்றது. ஈழத்தின் வன்முறை மனித உடல்களுக்குள் தொடரும் பிந்தைய காய அனுபவமாக மாறுவதை இக்கவிதை பதிவுசெய்கிறது. படிமத்தில் சொல்ல முடியாததை இக்கவிதை உவமையில் சாத்தியமாக்கியுள்ளது.

ஆன்மாவின் ஆழத்திலிருந்து எழும் மென்மையான காதலைக் கூறும் தான்யாவின் கவிதைகள் உள்ளத்தை உலுப்பிச் செல்லும் ஆற்றல் கொண்டவை. காதல் பொய்த்துப் போன நிலையில் மொழிநிலை உணர்வுகளுக்கூடாக இக்கவிதை வெளிப்படுகிறது.

*‘உனது கவிதையின்*
*கடைசி வரிகளைப் போல*
*அடிபட்டுச் சாய்கின்ற*
*ஆன்மாவைக் கொல்கின்றேன்..*
*சேர்ந்தே இருந்தாலும்*
*பிரிந்து உணர்கின்ற வலிகளைப் போல*
*வாழ்வு தனித்தன்மையானது*
*கனவுகளின் கண்ணீரைப்*
*படுக்கை விரிப்புகளைப் போல*
*யாரும் உணரப்போவதில்லை...’*

*சாகசக்காரி பற்றியவை - பக். 60*

காதலால் உண்டான பிரிவும் புறக்கணிப்பும் நுட்பமாகக் கவிதையில் வெளிப்படுகிறது. பாரம்பரிய உவமையணியில் இருந்து இக்கவிதை வேறுபடுகிறது. உவமை விளக்கத்துக்காக அன்றி வலியை உணர்த்தவே கையாளப்படுகிறது. மனக்காயங்களின் வலியை உணர்வின் மொழி விளக்கிச் செல்லும்போது இக்கவிதை Post-trauma poetry ஆகத் தன்னைத் தக்க வைத்துக் கொள்கிறது. மௌனம், தனிமை, ஆன்ம சிதைவு என வெளிப்படும் இக்கவிதை காயத்தை விவரிக்காது காயம் நிகழ்ந்த பின் ஆன்மா பேசும் முறையையே மொழியாக்குகிறது. மனித மனம் உடைந்த பின் எஞ்சும் சிதைவின் சாட்சியமாக விளங்கும் இக்கவிதை காதலால் நிகழும் ஆன்மச் சாவைச் சாட்சியமாக்குகிறது.

நில அரசியல், சமூக ஒடுக்குமுறை, ஆண் மைய எதிர்ப்புவாதம், காதல் என எழும் தில்லையின் கவிதைகள் நுண்ணிய மன இழைகளால் ஆக்கப்பட்டவை. வாசகரின் ஆன்மாவைத் தொடும் இவருடைய காதல் கவிதைகள் உடல் சார்ந்த காதலைப் பேசுபவை. உள் உணர்வுகளின் வலி, விரகதாபம், ஏக்கம், தனிமை, நினைவு என ஆழமான அனுபவங்களை முன்னிறுத்துகின்றன.

*‘ஒற்றைச் சிறகால் வருடுகிறாற்போல்*
*உன் உதட்டின் ஸ்பரிசம்*
*இன்னும் என்னில் ஒட்டியிருக்கிறது...’*

*விடாய் - பக். 74*

பறக்க முடியாத, நிலைபெறாத, முழுமையற்ற காதலை உணர்த்தும் ஒற்றைச் சிறகை உவமானமாக்கி ஒரு கணத்துக்கான, நினைவில் மிச்சமிருக்கும் உணர்வின் வெளிப்பாடான ஸ்பரிசத்தை உவமேயமாக்கி எழுதப்பட்ட கவிதையே இது. ஒற்றைச் சிறகால் வருடுகிறாற்போல் இருக்கும் இதமான மென்மையான உடல் அனுபவத்தை இது போல யாராலும் கூற முடியாது. கணப்பொழுதில் நிகழ்ந்த அவ்வனுபவம் மின்னலெனத் தோன்றி மறைந்தாலும் அதன் அதிர்வு என்றும் மனத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதை மிகை அலங்காரமற்று நுண்ணிய மனவுணர்வுக்கூடாக இக்கவிதை விளக்கி நிற்கிறது. ‘அவர் எனக்கு கடவுள்களுக்கு சமமாகத் தெரிகிறார்’ (He seems to me equal to gods) தொடுதல் இல்லை கணநேரத்தில் எழும் சலனம் உடலையே நடுங்கச் செய்கிறது.

‘...for when I look at you, even for a moment,
no speaking is left in me;
my tongue breaks,
and thin fire is racing under my skin...’

சப்போவின் வரிகள் இதனை நினைவூட்டிச் செல்கின்றது. ஸ்பரிசம் இல்லாமலேயே உடலில் ஒட்டிக் கிடக்கும் இதமான உணர்வை இக்கவிதை மென்னுணர்வுத்தளத்தில் பதிவு செய்கிறது.

கவிஞரின் அனுபவத்தை, கருத்தை துலக்கமாகக் காட்டும் உவமை வெறும் அலங்காரத்துக்கு மாத்திரம் கையாளப்படுவதல்ல. அது கவிதையைச் சிந்திக்கும் இடமாகவும், மனதில் பதிய வைக்கும் ஊடகமாகவும் மாற்றுகிறது. உணர்வின் புலத்தைக் காட்சிப்படுத்தும் உவமை, சொல்ல முடியாத உண்மைகளை ஒரு வடிவிற்குள் இடமாற்றி வாசகருக்கு உணரச் செய்கிறது. தனிமனிதத்தின் உடலில் பதிந்த அனுபவத்தை சமூக-அரசியல் உண்மைகளோடு இணைக்கும் உவமை தனிப்பட்ட வலியை கூட்டு நினைவாக மாற்றும் தன்மை கொண்டு காலத்தால் அழியாத அணியாகத் திகழ்கிறது.



ramesh.s@thaiveedu.com



16

# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

tg.theeban@gmail.com

## இதுவரை...

மகாவம்சம் பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில், பாளி மொழியில், மகாநாமதேரர் என்னும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

இக்காலத்தில், சில சரித்திர நாயகர்களைப் போற்றி, அவர்கள் பற்றி இலக்கியங்கள் படைக்கும் வழக்கம் இருந்து வருவதுபோல, பண்டைக்காலத்தில் மன்னர்களின் புகழ்பாடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. அவ்வாறான கதைகள் நாட்டார் பாடல்முறையில் பாடப்பட்டு, பல தலைமுறைகளைத் தாண்டி எடுத்துவரப்பட்டிருக்கிறது.

இலங்கையில் பௌத்தம் தோன்றி நிலைபெற்ற பின், தேவநம்பியதீசனால் கட்டப்பட்ட மகாவிகாரையில், பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து கூடிய பௌத்த பிக்குகள் ஒன்றிணைந்து, பௌத்தம் இந்தியாவில் தோன்றி வளர்ந்த வரலாறு (மகாவம்சத்தின் பெரும்பாலான முற்பகுதி கூறுவது), பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வரலாறு, பல்லாயிரக்கணக்கான மக்கள் மதம் மாறியமையையும், பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான, (நம்பகத்தன்மை அற்ற) செவிவழிக் கதைகளையும் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள். இது, பின் ஒருகாலத்தில், காலவரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.

அட்டகதா-மகாவம்சம் என்னும் பெயரில் தொகுக்கப்பட்ட இந்த நாட்டார் பாடல் தொகுப்பின் துணையுடன், பொ.ஆ.பி. 4-ஆம் நூற்றாண்டளவில் 'தீபவம்சமும்' பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில் மகாவம்சமும் தொகுக்கப்பட்டன. மகாவம்சத்தைத் தொகுத்தவர் மகாநாமதேரர் என்று அறியப்படுகிறது.

இந்தப் பின்னணியில் -

***மஹிந்ததேரர்தான் ஈழத்திற்கு பௌத்த மதத்தைக் கொண்டுவந்தாரா?***

- இலங்கைப் பண்டைய வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இரு நூல்களிலும் மகிந்தர் இலங்கைக்குப் பயணம் செய்தது, தேவநம்பியதீசன் என்ற மன்னனை பௌத்தனாக மதம் மாற்றியது குறித்து தகவல்கள் தரப்பட்டுள்ளன.

  இவை இரண்டுமே மகிந்தர் பற்றிய முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.
- அசோகரின் மகன் மகிந்தன் இலங்கைக்கு வந்ததாகவும் அசோகரின் மகள் சங்கமித்தை பௌத்த துறவியாகி இலங்கைக்குப் போதிமரத்தைக் கொண்டுவந்ததாகவும் மகாவம்சம் கூறும் தகவலை அசோகர் குறிப்பிடவில்லை.
- பிற்கால ஆய்வாளர்களும் இதுபற்றிச் சார்பாகக் குறிப்பிடவில்லை.
- தன்மகன் மகிந்தனை பௌத்த மதம் பரப்புவதற்காக கோவிலுக்கு அர்ப்பணிப்பது பற்றியும் இலங்கை அரசரை மதம்மாற்றுவதில் மகிந்தனின் பங்குபற்றியும் அசோகரின் கல்வெட்டுகளில் கூறப்படவில்லை.

ஈழத்தில் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் பௌத்தம் பரவியது பற்றிய சந்தேகம் இல்லை. ஆனால் மகிந்ததேரர் நேரடியாக வந்து பௌத்த மதத்தை ஈழத்தில் பரப்பினார் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை.

அதே போல் சங்கமித்தை வெள்ளரசம் கிளை கொண்டு வந்தாள் என்பதற்கும் தக்க சான்று கிடையாது. ஆனால் வெள்ளரச மரக்கிளை ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டதற்கும் நடப்பட்டதற்கும் இன்றுவரை நின்று நிலவுவதற்கும் வெள்ளரசமரமே சான்றாகும்.

யார் கொண்டுவந்தால் என்ன? பௌத்தம் கொண்டுவரப்பட்டது, வெள்ளரசுமரக்கிளையும் கொண்டுவரப்பட்டது என்பதில் ஐயமில்லை.

.

**தொடர்கிறது ...**

### 15-ஆம் அத்தியாயம்:

**மகாவிகாரை:**

இராணி அனுலாதேவி ஐந்நூறு பெண்களுடன் வந்து தமக்குத் தீட்சை செய்துவைக்கும்படி அரசனிடம் கேட்டாள். அரசனும், அவர்களுக்குத் தீட்சை செய்துவைக்கும்படி தேரரிடம் கேட்டான். அதற்குத் தேரர், 'பெண்களுக்குத்



தீட்சை செய்துவைப்பதற்கு எமக்கு அனுமதி கிடையாது. பாடலிபுரத்தில் எனது சகோதரி சங்கமித்திரை என்னும் தேரி இருக்கிறாள். அவள் முதிர்ந்த அனுபவசாலி. புத்தர் ஞானம் பெற்ற புனித போதி மரத்தின் தென்பகுதிக்கிளையுடன் இங்கே வருவாள். அவளுடன் வேறும் புகழ்பெற்ற பிக்குணிகளும் வருவார்கள். இதுகுறித்து என் தந்தையான அரசனுக்குச் செய்தி அனுப்புங்கள். தேரி வந்ததும் இந்தப்பெண்களுக் குத் தீட்சை செய்து வைப்பார்கள்.' என்றார்.

தேவநம்பியதீசன், 'இந்த மகாமேகவனத்தைப் பிக்கு சங்கத் திற்கு அளிக்கிறேன்' என்று கூறி, கலசத்திலிருந்த நீரை மகிந்ததேரர் கையில் வார்த்து, மகாமேகவனத்தைப் பிக்கு சங்கத்திற்குக் கொடுத்தான். தேரர், அதனை ஏற்றுக்கொண்ட போது எமது திருமணங்களில் பெண்ணை, நீர்ஊற்றி (தாரை வார்த்து), இன்றுமுதல் இவள் உன்னுடையவள் என்னும் பொருள்பட மணமகன் கையில் கொடுப்பது என்று ஒரு வழக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதுவும் நமது பண்டைய மரபுகளில் ஒன்று. இம்மரபு காலத்தோடு ஒட்டி வளர்ந்துவந்திருக்கிறது,

அரசன் தாரைவார்த்துக்கொடுத்தபோது பூமி அதிர்ந்தது. காரணம் கேட்ட அரசனுக்குத் தேரர், 'தீவில் இப்போது முதல் தருமம் வேரூன்றிவிட்டது' என்றார். தருமம் வேரூன்றியதன் அறிகுறியாகப் பூமி அதிர்ந்தது.

மகிந்ததேரர், தென்புறம் இருந்த பிகுலமரத்தைச் சுற்றி மலர் தூவி வழிபட்டபோது மீண்டும் பூமி அதிர்ந்தது. அதற்குரிய காரணமாக, தேரர் கூறியதாவது, ஏற்கனவே மூன்று பிக்கு களின் வாழ்நாளில் இங்கே பிக்குகளின் கடமைகள் செய்வ தற்காக ஒரு மாலகம் இருந்தது என்பதாகும். மாலகம் என்பது புனித சடங்குகள் செய்வதற்காக உள்ள இடம். பின்தேரர் மகாமுகாலமாலகத்துக்குச் சென்று அங்கும் மலர் களைத் தூவி அர்ச்சித்தார். இப்போது மீண்டும் பூமி அதிர்ந் தது. இவ்வாறு தேரரின் ஒவ்வொரு வழிபாட்டின்போதும் பூமி அதிர்ந்தது. இந்த அதிர்வுக்குரிய காரணம், 'பிக்குகளின் உபோசத மண்டபம் இங்கு இருக்கும்' என்று கூறினார்.
பின்னர் தேரர் பனம்பமாலகத்துக்குச் சென்றார். தோட்டக் காரன், வாசனைமிக்க பெரிய மாங்கனி ஒன்றை அரசனிடம் கொடுத்தான். பின்னர், தேரர் தாம் ஓய்வுகொள்ள விரும்பு வதாக அரசனிடம் கூறவே அரசன், தேரருக்குக் கம்பளம் விரித்து அமரச்செய்தார். தேரர் அமர்ந்ததும், அரசன் தன் கையில் வைத்திருந்த மாங்கனியைத் தேரரிடம் கொடுத் தான். தேரர் மாம்பழத்தை உண்டபின் கொட்டையை மன்ன னிடம் கொடுத்தான். அரசன் அக்கொட்டையைத் தன் கையாலேயே நட்டான். அது வளர்வதற்காக, தேரர் அவ்வி டத்தில் தன் கைகளைக் கழுவினார். உடனே கொட்டை முளைவிட்டுச் செடி முளைத்தது, செடி சிறிது சிறிதாக வளர்ந்து இலைகளும் கனிகளும் நிரம்பிய பெரிய மர மாகியது. இந்த அதிசயத்தைக் கண்ட மக்களும் மன்னனும் மயிர்க்கூச்செறியத் தேரரை வணங்கினர். இவ்வாறு தேரர் மலர்தூவி வழிபட்டபோதெல்லாம் பூமி அதிர்ந்தது.

**தேவநம்பியதீசன் காலத்தில் மகிந்தர் வருவதற்கு முன்பே இங்கு பௌத்தம் கொண்டுவரப்பட்டிருந்ததா?**

**மூன்று பிக்குகளின் வாழ்நாளில் இங்கு பிக்குகளின் கடமையைச் செய்வதற்காக ஒரு மாலகம் இருந்ததாகக் கூறப்படுவதன்பொருள் என்ன?**

பண்டைய தமிழ் இலக்கியங்களில் புராணக்கதைகள் புகுத் தியிருப்பதுபோல பௌத்த மதத்தின் தெய்வீகத் தன்மையை மேலோங்கச் செய்வதற்காக இவ்வாறு கதைகள் கூறப்பட் டிருப்பது என்று கொள்வது பொருந்துவதாக உள்ளது. அதுவே வரலாற்றுடனும் ஒத்துப்போகிறது. கௌதம புத்தர் என்பவர் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த பௌத்தம் என்னும் 'நம்பிக்கை, ஒழுக்கம்', பொ.ஆ.மு. 6-ஆம் நூற் றாண்டளவில் தோன்றியது. அதன் பின், அசோகச் சக்கர வர்த்தி காலத்தில், பொ.ஆ.மு. 3 -ஆம் நூற்றாண்டளவில், அசோகனது தூதுவர்களால் பௌத்தம் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இவற்றை உறுதி செய்யும் வரலாற்று, சாசன, இலக்கியச் சான்றுகள் உறுதி யாக உள்ளன.
கல்வெட்டுச் சான்றுகள் - அசோகச்சக்கரவர்த்தியின் (பொ.

**“இரண்டாயிரம் ஆண்டு பழைமையான வெள்ளரசுமரம் அமைந்திருக்கும் இடம், தேவநம்பிய தீசன் மகிந்ததேரரை முதன் முதலாகச் சந்தித்த மிகுந்தலை மலையிலிருந்து சுமார் 6 மைல் தூரத்தில் இருக்கிறது என்பது வரலாற்றின் தொடர்பு காணக்கூடியதாக உள்ளது.”**

ஆ.மு. 273 - 232) இரு கல்வெட்டுக்கள், சௌராஷ்டிர தேசத்திலுள்ள கிர்னார் நகரத்துக்கு அருகில் உள்ள பாறையொன்றில் எழுதப்பட்ட அசோக சாசனம் ஒன்று, பெஷாவர் நகரத்துக்கருகில் காணப்படுகின்ற பாறைச்சாசனம், மற்றொன்று. இவ்விரு சாசனங்கள் வழி பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் பௌத்த மதம் தமிழ் நாட்டிற்கும் தாமரபரணி என்று அழைக்கப்படும் ஈழத்திற்கும் எடுத்து வரப்பட்டது என்று அறியப்படுகிறது.

**இலக்கியச்சான்றுகள்** - சங்கமருவியகாலத்து இலக்கியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பௌத்தம் தமிழ் நாட்டில் பரவிப் பெருநிலை அடைந்த காலத்தில், ஏறக்குறைய பொ.ஆ.பி. 2-ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாக அறியப்படுகிறது.

**மூன்று புத்தர்கள் பற்றிய புராணச் செய்தி** - வரலாற்றுக் காலப் புத்தருக்கு முன் இந்த யுகத்தில், காகசந்தர், கோநாகமனர், காசியபர் ஆகிய மூன்று புத்தர்கள் கௌதமபுத்தரைப் போலவே இலங்கைக்கு விஜயம் செய்ததாகக் கூறப்படுவதும் வரலாற்றுடன் ஒத்துப்போவதாக இல்லை.

தேரர் நினைத்த மாத்திரத்திலேயே, தேரி (சங்கமித்தை), அரசன் உதவியுடன் வெள்ளரசு மரத்தின் தென்பக்கக் கிளையைத்தங்கப் பேழையில் வைத்து எடுத்துக்கொண்டு தன்னுடன், மேலும், ஐந்நூறு பிக்குணிகளையும் அழைத்துக் கொண்டு, தனதுஅற்புத சக்தியால் குடாநாட்டில் வந்து இறங்கினாள். சங்கமித்தை தான் கொண்டுவந்த வெள்ளரசம் கிளையைத் தேரரிடம் கொடுத்தாள். தேரர் அதனை அரசனிடம் கொடுத்தார். அரசன் அதனை மகாசாகரவனத்தில் நட்டான். தேரர், மக்களுக்குப் பல உபதேசங்கள் செய்தார். அதன் பின்னர் ஆகாய மார்க்கமாகப் புறப்பட்டு ஜம்புத்வீபத்துக்குத் திரும்பினார்.

தற்போது, இரண்டாயிரம் ஆண்டு பழைமையான வெள்ளரசு மரம், இலங்கைத் தீவின் மத்திய பகுதியில், அனுராதபுரி என்னும் நகரில் காட்சியளிக்கிறது. இவ்வெள்ளரசுமரம் அமைந்திருக்கும் இடம், தேவநம்பியதீசன் மகிந்ததேரரை முதன் முதலாகச் சந்தித்த மிகுந்தலை மலையிலிருந்து சுமார் 6 மைல் தூரத்தில் இருக்கிறது என்பது வரலாற்றின் தொடர்பு காணக்கூடியதாக உள்ளது.

ஆனால், சங்கமித்தை வெள்ளரசுக் கிளையுடன் வந்து இறங்கியதாகக் கூறப்படும் இடம் இலங்கையின் வடபகுதியில், தமிழர் தாயகமாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரம். இவ்விறங்குதுறையிலிருந்து அனுரதபுரி ஏறக்குறைய 190 கிலோமீற்றர் தொலைவிலுள்ளது.

இந்த இடம், முன்னர் ஜம்புகோளத்துறை என்றும் இன்று சம்புத்துறை என்றும் அழைக்கப்படுகிறது. இத்துறைமுகம் யாழ்ப்பாணத்தில் உள்ள திருவடிநிலைக்குச் சிறிது தூரத்தில் இருக்கின்றது. இத்துறைமுகம் சிறந்த வாணிப நிலையமாக விளங்கியது. இது மாதகல் எனும் இடத்திற்கு அருகில் உள்ளது.
மக்கள் அவரைக் காணவந்து கூடினார்கள். ஏராளமான உயர் குடும்பப் பெண்களும் வந்திருந்தார்கள். அவர்களுக்குத் தேரர் பாலபண்டித சித்தாந்தத்தை உபதேசித்தார். கௌதமருடைய மூன்று பிறப்புகள் பற்றி மகாவம்சம் கூறும் கதை - கௌதமர் முதல்முறை இலங்கைக்கு வந்தபோது அவர், யக்ஷர்களை இலங்கையிலிருந்து விரட்டினார் என்றும் இரண்டாவது முறை மீண்டும் வந்தபோது நாகர்களை அடக்கினார்என்றும், மூன்றாவது முறையாக மீண்டும் வந்தபோது அவர் பிக்குகளுடன் அங்கு உணவருந்தினார் என்றும் புத்தருடைய முதல் மூன்று ‘இலங்கை விஜயம்’ பற்றிய கதையைத் தேரர் அரசனுக்குக் கூறினார்.

அத்துடன், இந்த இடத்தில் புத்தருடைய உடல் தாது வைத்த தூபம் இருக்கவேண்டும். அது நூற்றிஇருபது முழம் உயரமுள்ளதாக இருக்கும்! ஹேமமாலி என்று பெயர் பெறும் என்றார். அரசன், அதனை நானே கட்டுவேன் என்றான். அதற்குத் தேரர், அரசே, உனக்கு இங்கு ஆற்றவேண்டிய வேலைகள் வேறு பல உள. நீ அவற்றைச் செய். உன் வழிவந்த ஒருவன் அதனைச் செய்வான் என்று கூறினார்.

இந்த அரசனைத் தொடர்ந்து அரசனாக வரவுள்ளவர்கள் வரிசையைத் தேரர் எடுத்துரைத்தார்.

- அடுத்ததாக, உன் சகோதரனும் உப ராஜனுமான மகாநாமனுடைய மைந்தன் யத்தாலயகதீசன் என்பவன் அரசனாவான்.
- அவனை அடுத்து, அவன் மகன், கோதஅபயன் அரசனாவான்.
- அடுத்து அவன் மகன் காகவனதீசன், அவன் மகன் அபயன் என்பவன் துட்டகாமினி என்ற பெயரால் புகழ் பெற்று விளங்குவான். அவன் இந்த இடத்தில் தூபம் கட்டுவான் என்று தேரர் எதிர்காலம் பற்றிக் கூறினார்.
- அரசன், அவ்விடத்தில் ஒரு கல் நாட்டி அதில் தேரர் கூறியவற்றைப் பதிவுசெய்தார். முன்னமேயே, மும்முறை, கௌதம புத்தர் இலங்கைக்கு வந்திருந்தார் என்று கூறப்படும் தகவல் கதையேயானாலும் இக்கதையில் கூறப்படும் ‘இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றிய தகவலைப் புறம்தள்ளிவிட முடியாது. இக்கதைகளிலிருந்துதான் இலங்கையின் ஆதிக்குடிகள் அல்லது பழங்குடிகள் இயக்கர், நாகர் என்னும் கருத்து நிலைபெற்றது.

சங்கமித்திரை கொண்டுவந்ததாகக் கூறப்படும் வெள்ளரசுக்கிளை, 2300 ஆண்டுப் பழைமையான மரம். உலகிலேயே மிகப் பழைமையான மரம் என்றும் அறியப்படுகிறது.

அடுத்த இதழில் சங்கமித்தையும் வெள்ளரசுக்கிளையும் சார்ந்தத கவல்கள் எடுத்துவரப்படும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com




> **"இராவணன் அணிந்திருக்கின்ற அணிகலன்களின் தொகுதி ஏழுலகங்களிலும், எண்திசைகளிலும் ஒளிவீசி இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றது என வருணித்த கம்பர் 'இருளின்றுஎன்னவே' என அவனது ஆட்சியும் இருளற்ற, ஒளிமயமான ஆட்சியாக இருந்தது என்பதையும் இதனால் குறியீடாகக் காட்டுகிறார் எனலாம்."**

சென்ற மாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணம், ஆரணிய காண்டத்தின் ஆறாவது படலமாகிய கரன் வதைப் படலத்தின் இரண்டாவது பகுதியில் இராமனை எதிர்த்துப் போரிடவந்த அரக்கர் படைகளும் அவற்றின் தலைவர்கள் பதினால்வர் உட்படக்கரனும் இறந்துபட்டதும், அதனைத் தொடர்ந்து தனது வாய்மொழியால் அவர்களுடைய வாழ்க் கையையும், வாழ்நாளையும் ஒழித்துவிட்ட கொடியவளானேன் என்று தன்னை நொந்தபடி சூர்ப்பணகை அங்கிருந்து சென்ற தையும் கூறும் செய்திகளை அறிந்துகொண்டோம். இவ் விதழில் 7-ஆவது படலமாகிய மாரீசன் வதைப்படலத்தில் வரும் செய்திகளுடன் கம்பரின் கவிநயத்தையும் சுவைத்து மகிழ்வோம்.

மாரீசன் வதைப்படலத்தில் 252 செய்யுள்கள் இருக்கின்றன. சில பிரதிகளில் முதல் 160 செய்யுள்களும் சூர்பணகை சூழ்ச்சிப் படலம் என்றும், அதன் பின் பகுதி மாரீசன் வதைப் படலம் என்றும் காணப்பெறுகின்றன. மாரீசன் என்பவன் மாயையில் வல்ல ஓர் அரக்கன், இவன் தாடகைக்கும், சுந்தன் என்னும் இயக்கர் தலைவனுக்கும் மகனாகப் பிறந் தவன், சுபாகு என்பவனின் உடன்பிறந்தவன், இராவணனுக்கு மாமன் முறையானவன் என்ற பிறப்பு வரலாறும், அகத்திய முனிவனின் சாபத்தால் தாடகையும், அவளது மக்கள் இருவரும் அரக்கர் ஆனார்கள் என்பதும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள். மாரீசன் வதைப்படலத்தில் முதல் 22 செய்யுள்களும் இராவணன் கொலுவீற்றிருக்கும் காட்சியை வருணிப்பதாகவும், பின்னர் வரும் 81 செய்யுள்களும் சூர்ப் பணகை இராவணனது அவையைச் சென்றடைவதை வரு ணிப்பதாகவும் உள்ளன. இராமாயணத்தில் இந்தப் படலத் தில்தான் இராவணன் முதன் முதலாக நேரடியாக அறிமுகம் செய்யப்படுகின்றான்.

***இரைக்கும்நெடுங் கடல்அரக்கர் இறந்ததனை***
***மறந்தனள்போர் இராமன், துங்க***
***வரைப்புயத்தின் இடைகிடந்த பேராசை***
***மனங்கவற்றஆற்றாளாகித்***
***திரைப்பரவைப் பேரகழித் திண்நகரில்***
***கடிதோடிச் 'சீதைதன்மை***
***உரைப்பன்' எனச் சூர்ப்பணகை வரவிருந்தான்***
***இருந்தபரிசு உரைத்தும் மன்னோ!***

*கம்ப. ஆரணிய. 560*

சூர்ப்பணகை இரைக்கும் நெடுங்கடல் அரக்கர் இறந்ததனை மறந்தனள் - சூர்ப்பணகை ஆரவாரம் செய்கின்ற பெரிய கடல்போல் காணப்பட்ட கரன் முதலான அரக்கர் படை இறந் தொழிந்துவிட்டார்கள் என்பதையும் மறந்தவளாகி, போர் இராமன் துங்கவரைப்புயத்தின் இடைகிடந்த பேராசை - போரில் வல்லவனும், உயர்ந்த மலைகள்போன்ற தோள்க ளையுடையவனுமாகிய இராமன்மீது தான்கொண்ட பேராசை, மனங்கவற்ற ஆற்றாளாகி - மனத்தை வருத்துகின்ற துன்பத் தைப் தாங்கமாட்டாதவளாக, திரைப்பரவைப் பேரகழித் திண் நகரில் - அலைகளையுடைய பெருங்கடலையே அகழியாகக் கொண்டு அரண் படைத்த இலங்கைக்கு, கடிதோடிச் 'சீதை தன்மைஉரைப்பன்' எனச் சூர்ப்பணகை வர - விரைவாக ஓடிச் சென்று சேர்ந்து சீதை யினுடைய பேரழகின் இயல்பை இராவ ணனுக்குக் கூறுவேன் எனக் கருதிவருகையில், இருந்தான் இருந்தபரிசு உரைத்தும் மன்னோ- அங்கே இராவணன் அரசு வீற்றிருந்த காட்சியைச் சொல்வோம் என்று புலவரின் கூற்றாக இந்தச் செய்யுள் அமைந்துள்ளது. மன்னோ என்பது அசைச் சொல்.

உடன் பிறந்தவனாகிய கரன் முதலிய வலிய, பெரிய அரக்கர் படை ஒன்றாக இறந்துபடவும், அதனாலான சோகம் சிறிது மின்றி, இராமனிடத்தில் கொண்ட காதல் வேட்கை நோயி னால் ஏற்பட்ட துன்பத்தைப் பொறுக்கமாட்டாது, அவனைச்



சேர்வதற்கு ஒருவழியாக, 'சீதை இராமனுடன் இருக்கும்வரை அவன் ஒருபோதும் தன்னை விரும்பமாட்டான் ஆதலால், எப்படியாவது சீதையைஅவனிடமிருந்து அகற்றிவிட வேண்டும்' என்னும் எண்ணம் கொண்டிருந்த சூர்ப்பணகை இலங்கையை நோக்கி ஓடிவருகையில் இராவணன் அரசு வீற்றிருந்த காட்சியைக் கூறுவோம் என்னும் கவிக்கூற்றான இச்செய்யுளோடு கம்பர் இப்படலத்தைத் தொடங்குகிறார்.

இயற்கையும் செயற்கையுமான நீர் அரண், நில அரண், மலை அரண், காட்டரண் என்னும் நால்வகை அரண்களுள் பகைவரால் கடக்கமுடியாத அரியநீர் அரணாகிய பெருங்கடல் இலங்கைக்கு இயற்கையாகவே வாய்த்துள்ளதைக் கம்பர் திரைப் பரவைப் பேரகழித் திண்நகர் என்னும் அடைமொழியில் கூறியுள்ள சிறப்பைக் காண்கிறோம். திண் நகர் என்பதில் மலை அரண், மதில் அரண், படை அரண் ஆகியனவும் அங்கே அமைந்து பெருவலிமைகொண்ட நாடாக இலங்கை இருப்பதையும் கூறியுள்ளார். இச்செய்யுளின் தொடக்கத்துடன் தொடர்ந்து 22 செய்யுள்களில் இராவணன் அரசு வீற்றிருந்த அரண்மனைக் காட்சிகளைக்கம்பர் வருணித்துள்ள சிறப்பைக் காணலாம். இவ்வாறு தொடர் செய்யுள்களாக வருவதைக் குளகச் செய்யுள்கள் என்பர். இந்த 22 செய்யுள்களுமே முத்துமுத்தானவை. அவற்றுள் எதை எடுப்பது, எதைவிடுப்பது என்ற மயக்கத்துடன் சில செய்யுள்களை மட்டும் இங்கே தருகின்றேன். தேவதச்சனால் அளவிடற்கரியதாக, படைத்தற் கடவுளாகிய பிரமனாலேயே கட்டமுடியாதவாறு இராவணனின் விருப்புக்கேற்பக் கட்டப்பட்ட அழகிய மணிமண்டபத்தில் இராவணன் வீற்றிருந்தான்.

***வண்டலங்கு நுதல்திசைய வயக்களிற்றின்***
***மருப்பொடியஅடர்ந்தபொற்றோள்***
***விண்தலங்கள் உறவீங்கிஓங்குதய***
***மால்வரையின் விளங்கமீதில்***
***குண்டலங்கள் குலவரையைவலம்வருவான்***
***இரவிகொழுங் கதிர்சூழ் கற்றை***
***மண்டலங்கள் பன்னிரண்டுநாலைந்தாய்ப்***
***பொலிந்தவெனவயங்கமன்னோ***

*கம்ப. ஆரணிய. 562*

வண்டலங்குநுதல் - வண்டுகள் மொய்க்கின்ற நெற்றியைக் கொண்டனவும், திசையவயக்களிற்றின் - எட்டுத் திசைகளிலும் நிற்பனவுமாகிய யானைகளின், மருப்பொடிய அடர்ந்த பொற்றோள் - தந்தங்கள் முறியும்படி வலிமையோடு தாக்கி அடக்கிய அழகிய தோள்கள், விண்தலங்கள் உறவீங்கி - விண்ணிலுள்ள இடங்களைத் தொடுவதாக, ஓங்கு தயமால் வரையின் விளங்க - உயர்ந்த பெரிய மலைபோல ஒளிவீசவும், மீதில் குண்டலங்கள் - அத்தோள்களின்மேல் தொங்குகின்ற குண்டலங்கள் இருபதும், கொழுங் கதிர்சூழ் கற்றை - செழுமையான ஒளிக்கதிர்களின் கூட்டத்தால் சூழப்பெற்ற, குலவரையை வலம்வருவான் - மேருமலையை வலம்வருகின்ற, இரவி மண்டலங்கள் பன்னிரண்டும் - சூரிய மண்டலங்கள் பன்னிரண்டும், நாலைந்தாய்ப் பொலிந்தவென வயங்கமன்னோ - இருபதாய் விளங்கியனபோல் காட்சியளித்தன என்பது பொருள்.

இராவணனது ஒவ்வொரு தோளுக்கும், கதிரவன் உதிக்கின்ற ஒளிவீசும் மலையையும், அவனது தோற்றத்துக்கு மகா மேரு மலையையும் உவமையாக்கி உவமை அணிநயத்தைக் கொடுத்த கம்பர், அவனது காதில் தொங்கிய குண்டலங்கள் பன்னிரு சூரிய மண்டலங்களும் இருபது வடிவங்கொண்டு அந்த மேரு மலையைச் சூழ்ந்து நிற்கின்றன என்னும் தற்குறிப்பேற்ற அணி நயத்தையும் வைத்து இராவணனது தோற்றத்தை வருணித்துள்ள சிறப்பை இச்செய்யுளில் காண்கின்றோம்.

***புலியின்அதள் உடையானும்பொன்னாடை***
***புனைந்தானும் பூவினானும்***
***நலியும்வலத் தார்அல்லர் தேவரின்,இங்கு***
***யாவரினிநாட்டல் ஆவார்***
***மெலியுமிடைதடிக்குமுலைவேயிளந்தோள்***
***சேயரிக்கண் வென்றிமாதர்***
***வலியநெடும் புலவியினும் வணங்காத***
***மகுடநிரைவயங்கமன்னோ***

*கம்ப. ஆரணிய. 563*

புலியின் அதள் உடையானும் - புலியின் தோலை ஆடை யாக உடுக்கும் சிவபிரானும், பொன்னாடை புனைந்தானும் - பொன்னாலான ஆடையை உடுத்திருக்கும் திருமாலும், பூவி னானும் - தாமரை மலரில் தோன்றிய பிரம்மனும், நலியும் வலத்தார்அல்லர் - இராவணனை வருத்தத்தக்க வலிமை உடையவர்களாக இல்லாதபோது, தேவரின் இங்குயாவர் இனிநாட்டல் ஆவார் - அவனை வருத்தக்கூடியவர் தேவரில் இனி இங்கே யார் இருக்கின்றார்கள், மெலியுமிடைதடிக் குமுலை - மெல்லியதாய் ஒடிவதுபோன்ற இடையையும் பூரிப் புடைய பெரிய மார்பகங்களையும் கொண்ட, வேய் இளந் தோள் சேயரிக்கண் வென்றிமாதர் - மூங்கில் போன்ற இளமை யான தோள்களையும், சிவந்த வரிகளையும் உடைய கண்க ளையும் கொண்ட வெல்லும் தன்மையுடைய மகளிரது, வலிய நெடும் புலவியினும் - தணித்தற்கு அரிய நீண்ட ஊடலிலும், வணங்காத மகுடநிரைவயங்கமன்னோ - வணங்காத மணி முடிகளின் வரிசை விளங்க வீற்றிருந்தான் என்பது பொருள்.

சிவன், திருமால், பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளுமே இராவ ணனை வெல்லும் ஆற்றல் இல்லாதவராக, வரத்தினால் வல் லமைபெற்றவனாக இருக்கையில், வேறெவருக்கும் அவனை வெல்லும் ஆற்றல் இல்லை என்பதைக் கூறிய கம்பர், மகளிர் நெடுநேரம் ஊடியிருக்கின்றபோது அதனைத் தணித்தற்குக் கூட இராவணன் தலைவணங்கானென்று அவன் வணங்கா முடியன் என்பதை விளக்குதற்கு நயமான, புதுமையான பொருண்மையை எடுத்தாண்டிருக்கின்றார். அகவாழ்க்கை யில் தலைவனும் தலைவியும் ஊடல் கொள்வதும், ஊடலைத் தணிப்பதற்கு தலைவன் இனிய சொற்களைக் கூறித் தலைவியின் காலில் விழுவதும் இயல்பாக இருந்தாலும் இராவணன் அவ்வாறு ஊடலைத் தணிப்பதற்குக்கூட மகளிரையே வணங்காதவன் என்கிறார்.

இராவணனது ஒளிவீசும் தோற்றத்தையும், அதற்கு மேலும் ஒளியேற்றும் வகையில் அவன் அணிந்திருந்த ஆடை அணி கலன் களையும் கம்பர் இன்னும் பலவாறு வருணிக்கின்றார். அரசவையில் வீற்றிருக்கும் இராவணனைப் பார்ப்பதற்காக வருகின்றவர்களைப் பற்றிக் கம்பர் கூறுகிறார். அரக்கர் தலை வர்கள் வந்து தங்கள் மணிமுடிகளைக் கழற்றாமலே அவனது காலில் பணிந்து வணங்கவும், அம்மணிமுடிகளி லுள்ள இரத்தினங்கள் அவனது காலிலுள்ள அணிகலன் களைத் தேய்ப்பதால் மேலும் ஒளி வீசுகின்றன. இராவணனின் ஆட்சியிலுள்ள மூவுலகங்களிலுமுள்ள அரசர்கள் காணிக் கையுடன் வந்து வணங்குகிறார்கள். அத்துடன் தேவர்களும் அசுரர்களும் வந்து மலர் சொரிந்து வணங்குகிறார்கள். அத னால் அவனது அரண்மனையிலே காணிக்கைப் பொருள் களும், மலர்களும் மலைபோல் குவிந்து காணப்படுகின்றன. அங்கே வந்துள்ள தேவர்களுக்கு இணையான வித்யாத ரர்கள், கின்னரர்கள், சித்தர் தலைவர்கள் எல்லோரும் இராவ ணனின் பார்வை தங்கள்மீது படும்போதுதாங்கள் அவனை வணங்காமல் நிற்கக்கூடாதே என்று அஞ்சி நடுங்கியபடியே தாங்கள் அணிந்துள்ள மகுடங்களுக்கு மேலாகக் கைகளைக் குவித்தபடியே நிற்கிறார்கள்.

***திசையுறுகரிகளைச் செற்றுத் தேவனும்***
***வசையுறக் கைலையைமறித்துவானெலாம்***
***அசைவுறப் புரந்தரன் அடர்த்ததோள்களின்***
***இசையினைத் தும்புரு இசையின் ஏத்தவே***

*கம்ப. ஆரணிய. 571*

திசையுறுகரிகளைச்செற்று - எட்டுத்திசையையும் காவல் செய் யும் யானைகளுடன் போரிட்டுவென்று, தேவனும் வசையுறக் கைலையை மறித்து - சிவபிரானும் பழியடையும்படி கைலாய மலையைப் பெயர்த்தெடுத்து, வானெலாம்அசைவுற - விண்ணு லகத்தோரெல்லாம் நடுங்கும்படி, புரந்தரன் அடர்த்த தோள் களின் இசையினை - இந்திரனை நெருக்கிப் போர்செய்த இருபதுதோள்களின் புகழையும், தும்புரு இசையின் ஏத்தவே - தும்புரு என்பவன் தனது வீணையின் நரம்புகளில் இசைத் துப் பாடவும் இராவணன் வீற்றிருந்தான் என்பது பொருள்.

இராவணன் திசை யானைகளை அடக்கி வெற்றி பெற்ற தையும், வெள்ளிமலையை வெற்பெடுத்த வெற்றியையும், இந்



tg.theeban@gmail.com

திரனைவென்ற கொற்றத்தையும் இசைபாடுவதில் வல்ல தேவ முனிவனான தும்புருவீணையில் இசைமீட்டி இராவணனை ஏத் திப்பாடுகிறான். இச்செய்யுளில் இசை என்னும் சொல் புகழையும், ஓசையையும் குறித்து வெவ்வேறு பொருள்களில் இருமுறை வந்ததால் சொற்பொருட்பின்வருநிலையணிநயம் அமைந்துவந்துள்ள சிறப்பைக் காணலாம். தும்புருவோடு இன்னொரு பக்கம் சாமவேதத்தை நாரதர் தனது வீணையில் இசைத்துக்கொண்டிருக்கின்றார். நீர்க்கடவுளாகிய வருணன், தேவலோக மலர்களிருந்துவந்த தேனையும், நாகலோக மலர் களிலிருந்து வந்த தேனையும் அங்குள்ள பெண்களின் துகில்கள் நீரில் கரைத்துநனைந்து விடாவண்ணம் சிறிய திவலைகளாகத் தெளித்துக்கெண்டிருக்கிறான். வாயுதேவன் அவ்விடத்தைத் துடைத்துத் தூய்மை செய்துகொண்டிருக் கிறான். தேவகுருக்களான பிரகஸ்பதி, சுக்கிரன் ஆகி யோரும், இயமனும், அக்கினிதேவனும், பலரும் அங்கே பணி விடை செய்துகொண்டிருக்கின்றார்கள். அத்துடன் கற்பகத் தருவும், காமதேனுவும் வந்து முறைமுறையாக அன்பளிப்பு களை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கின்றன என்றவாறு கம்பரின் வருணனை நீள்கிறது.

***குண்டலம் முதலியகுலங்கொள் பேரணி***
***மண்டியபேரொளிமயங்கவீசலால்***
***உண்டுகொல் இரவுஇனிஉலகம் ஏழினும்***
***எண்திசைமருங்கினும் இருள், இன்றுஎன்னவே***

*கம்ப. ஆரணிய. 579*

குண்டலம் முதலிய குலங்கொள் பேரணி - குண்டலம் முத லான சிறப்பைக் கொண்ட பெரிய அணிகலன்கள், மண்டிய பேரொளி மயங்கவீசலால் - அடர்ந்த பேரொளியை எங்கும் வீசிக்கொண்டிருப்பதால், உண்டுகொல் இரவு, இனிஉலகம் ஏழினும் - ஏழு உலகங்களிலும் இனி இரவு என்று ஒன்று இருக் கப்போகிறதா ? எண்திசை மருங்கினும் இருளின்று என்னவே - எட்டுத் திசை களிலும் இருள் என்று ஒன்றையே காணமுடி யாதபடி இருக்கிறது என்பது பொருள்.

இராவணன் அணிந்திருக்கின்ற அணிகலன்களின் தொகுதி ஏழுலகங்களிலும், எண்திசைகளிலும் ஒளிவீசி இரவைப் பக லாக்கிக்கொண்டிருக்கின்றது என வருணித்த கம்பர் ‘இரு ளின்றுஎன்னவே’ என அவனது ஆட்சியும் இருளற்ற, ஒளிம யமான ஆட்சியாக இருந்தது என்பதையும் இதனால் குறியீடா கக் காட்டுகிறார் எனலாம். இவ்வாறு இராவணனது அர சவையிலே காணப்படும் சிறப்புகளை ஒவ்வொன்றாகக் கூறிவந்த கம்பர் இப்படலத்தின் 23-ஆவது செய்யுளிலே இராவணன் அங்கே கொலுவிருந்த தோற்றத்தை வருணிக் கின்றார்.

***இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும்தன்***
***அருந்தவமுடைமையின் அளவில் ஆற்றலில்***
***பொருந்திய இராவணன் புருவக் கார்முகக்***
***கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே,***

*கம்ப. ஆரணிய. 582*

தன்அருந்தவமுடைமையின் அளவில் ஆற்றலில் - பிறரால் செய்தற்கரிய தவத்தைச் செய்ததனால் தான் உடைமையாக் கிக்கொண்ட அளவில்லாத ஆற்றலால், உலகங்கள் இரண் டும் ஒன்றும் பொருந்திய இராவணன் - மூன்று உலகங்களும் அவனிடம் அடங்கியிருக்கப்பெற்ற இராவணன், புருவக் கார் முகக்கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே இருந் தனன் - புருவங்களாகிய விற்களையுடைய கரிய நீண்ட கண் களைக்கொண்ட மகளிரின் பார்வையாகிய வெள்ளத்தி னிடையே வீற்றிருந்தான் என இச்செய்யுள் பொருள்படுகிறது.

தனது அரிய தவத்தினால் பெற்ற வரம்பில்லாத பேராற்றலால் மண்ணுலகு, விண்ணுலகு, பாதாள உலகு என்னும் மூவு லகும் அடங்கிநிற்கப்பெற்றவன் இராவணன். அந்தப் பெருமி தத்தோடு, அவனைச் சூழ்ந்திருந்த அழகிய கண்களை உடைய மகளிரினதும் அவர்களது வசப்பட்ட பார்வை வெள் ளத்தினதும் நடுவே வீற்றிருந்தான் என்கிறார் கம்பர். புருவங் களாகிய விற்கணைகள் எனமகளிரின் புருவங்களை உருவ கப்படுத்திய கம்பர் கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள் ளத்தே என்று அவர்களது அழகிய நீண்டகரியகண்களிலி ருந்து பார்வையாகிய அம்புகள் பாய்ந்து அவனைச் வெள்ள மாகச் சூழந்து கொண்டிருக்கின்றன என்றும் கற்பனைநயம் பட வருணித்திருப்பது சிறப்பாகும்.

இவ்வாறு சொல்லிலடங்காத சிறப்புகளுடன் இராவணன் அர சவையில் வீற்றிருக்கையிலே இராவணனின் அரண்மனைக் குச் சூர்ப்பணகை வருகிறாள்.

***தங்கையும் அவ்வழித் தலையில் தாங்கிய***
***செங்கையள் சோரியின் தாரைசேந்திழி***
***கொங்கையள் மூக்கிலள் குழையில் காதிலள்***
***மங்குலின் ஒலிபடத் திறந்தவாயினள்***

*கம்ப. ஆரணிய. 583*

அவ்வழி - அப்போது அவ்விடத்துக்கு, தங்கையும் - இராவ ணனின் தங்கையாகிய சூர்ப்பணகையும், தலையில் தாங்கிய செங்கையள் - தனது சிவந்த கைகளைத் தலைமேல் வைத்தபடி, சோரியின் தாரைசேந்திழிகொங்கையள் - மார்பி லிருந்து செங்குருதி தாரையாகப் பெருகவும், மூக்கிலள் குழையில் காதிலள் - மூக்கு அறுபட்டவளாகவும் குழை என்னும் அணிகலன் இல்லாது காது அறுபட்டவளாகவும், மங்குலின் ஒலிபடத் திறந்தவாயினள் - முகில்கூட்டத்தின் இடி யொலிபோல முழங்கும் வாயை உடையவளாகவும் அங்கே வருகிறாள் என்பது பொருள்.

தண்டகாரணியத்திலிருந்து புறப்பட்ட சூர்ப்பணகை சோகத் தின் குறியாகத் தலையில் கையை வைத்தபடி, அறுக்கப் பட்ட மார்பிலிருந்தும், மூக்கு மற்றும் காதிலிருந்தும் குருதி பெருகவும் தலைவிரி கோலத்தோடு இடியோசை போன்று பேரொலியோடுவாயைத் திறந்தபடி இராவணனின் அரண் மனையின் வடக்கு வாசலை வந்தடைவதைக் கம்பர் காட்சிப் படுத்துகிறார். அடுத்து நிகழப்போகின்றவற்றை மாரீசன் வதைப்படலத்தின் அடுத்த பகுதியில் கம்பனின் கவிநயத் தோடு சுவைத்து அறிய அடுத்த இதழ்வரை பொறுத்திருப் போம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 123

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-123 வினா

### இடமிருந்து வலம்

1 மத்திய கிழக்கில் பேர் போன ஒரு மாநகரம்
3 நோய்
5 பாரதம்
6 கோயில்களில் வழங்கப்படும் நறுமண மஞ்சள் பசை
7 ஆழிப்பேரலை
8 பேர்போன சிங்கள அரசவைக் கோமாளி
11 உலகின் மிகப்பெரிய அருவி
13 பனை ஓலைப் பை
14 தமிழகத்தில் ஒரு தொல்லியல் களம்
16 ஒரு செய்யுள் இலக்கணக் கூறு

### மேலிருந்து கீழ்

1 வழிபடு
2 ஓர் இனிய சிற்றுண்டி
4 வலிந்து உட்புகுத்து
5 வன்முறை புரியாமை
9 கூரையைத் தாங்கும் குறுக்கு மரம்
10 உடற் போர் புரிபவர்
12 இலங்கை பேருந்துப் பயண சேவைத் தாபனம்
13 யாக்கை
14 ஒரு பாரிய விலங்கு
15 அணி


விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**


## தமிழ்வலை-122-க்கான விடைகள்



## தமிழ்வலை-122 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

உமா கதிர், ஏஜக்ஸ்.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்,
குமாரசாமி ரூபிகா, கிளிநொச்சி.
மேரி கெலன் தேவதாஸ்,நோத்யோர்க்.
த.செ. நடராசா, ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**விசுவநாதன் தாமரை,**
**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# முலையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை – 11

மா. சித்திவினாயகம்



இராமேஸ்வரத்து இறங்கு துறையில் வறுமையிலகப்பட்ட அப்பாவிகளை கூலி அடிமைக ளாக்கி, அவர்களைக் கூலியென்ற றியாமலே காவிக்கொண்டு செல்லப் பல கப்பல்கள் வெள்ளையக் கொடியோடு தரித்து நின்றன. நாடு நாடாக அன்னியக் கப்பல்கள் ஏழைகளைப் பிடித்து மதம் பரப்பவும், கூலி அடிமைகளாக் கவும் இந்த நாட்களில்தான் முடுக்கி விடப்பட்டிருந்தன. உலகெங்கும் தேயிலை, றப்பர், கொக்கோ, தெங்கு, கரும்புத் தோட்டங்களுக்காக கண்காணாத் தீவுகளுக்கு அடிமைகள் கொண்டு செல்லப் பட்ட காலம்.

இந்துத்துவ பார்ப்பனியச் சாதியத்தால் ஒடுக்கப்பட்ட இந்தியச் சனங்களை, நாங்கள் சாதி பார்க்கமாட்டோமென அனைத்துக் கபட வேடதாரிகளும் கவர்ந்து கொள்ள வலை விரித் திருந்த பொழுது அது.

அந்தத் துறைமுகத்துக் கரையோரம் கணேசன் கையைப் பிடித்தபடி செம்பகம் நடந்து வந்து கொண்டிருந்தாள். துறைமுகமெங்கும் கப் பல்கள். இந்த அடிமைகளைச் சுமக்கும் கப்பல் களிடையே பௌத்தக் கொடிசுமந்து நின்றது ஓர் அழகான படகு.

அது கேர்னல் ஹென்றி ஒல்கொட் உடையது. அமெரிக்கரான ஒல்கொட் பௌத்தக் கொள்கைகளோடு ஆசியாவெங்கும் அலைந்து கொண்டிருந்த காலமது. தன்னை வருத்தி முழு நேரமாக மற்றையோரின் நன்மைக்காக உழைக்கின்ற மகோன்னதமிக்க திறந்த புத்தகமாக ஒல்கொட் விளங்கினார். கிறிஸ்துவ பாதிரிகளாக அமெரிக்கர் மாறிச் சலுகை பெற்ற காலத்தில் பௌத்த ஞானத்தோடு மற்றவர்க்காகத் தன்னை இழந்த தனித்துவம்மிக்க ஞானவானாக, இருந்தவர் அவர்.

ஒல்கொட் தான் இலங்கை அரசிடம் புத்தரின் பிறந்தநாளை முதன்முதல் விடுமுறை தினமாக அறிவிக்க வற்புறுத்தி வெற்றி பெற்றவர். அவர்தான் பௌத்தக் கொடியை இலங்கைக்கு முதன் முதலில் அறிமுகமாக்கியவர்.

அதனால்தான் சாதியக்கொடுமையிலிருந்து தலித்துகள் தப்பவென அயோத்திதாசப்பண்டிதர் உட்பட பலர் அவரை நம்பி இலங்கைக்கு வந்தனர். இலங்கையில் பல தெருக்க ளுக்கு ஒல்கொட்டின் பெயர்களும், சிலைகளும் இன்னமும் உண்டு. அவரது நினைவு நாளில் இன்றும் பௌத்தர்கள் பெருங் கொண்டாட்ட நினைவாக மெழுகுவர்த்திகளை

ஏற்றி வைக்கின்றனர், சிக்காக்கோ மத மாநாட்டிற்கு அனுப்பப்பட்ட அநகாரிக தர்மபாலவிற்குக் குருவாக இருந்தவர் இந்த ஒல்கொட். அது மட்டுமன்றி அவருக்குப் பாலி மொழி கற்பிக்க துணைநின்ற பெருமகனும் அவர்தான். இத்தனைக்கும் இலங்கையின் சிங்கள இனவாதப் பௌத்தபிதா என்றழைக்கப்படுகின்ற அநகாரிக தர்மபால அவர்கள் கிறிஸ்தவராகப் பிறந்து கிறிஸ்தவப் பள்ளியில் படித்து ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். அவரது உண்மையான பெயர் டேவிட் ஹேவாவிதாரண.

‘அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தந் நோய்போல் போற்றாக் கடை’ என்பார் வள்ளுவர். அதாவது பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதிக் காப்பாற்ற முனையாதவர்களுக்கு அறிவு இருந்தும் அதனால் எந்தப் பயனுமில்லை என்கிற குறளினைத் தன் தவமாக்கிக் கொண்டவர் ஒல்கொட்.

குறள் என்றதும் தான் ஞாபகம் வருகிறது. சில தசாப்தங்க ளுக்கு முன்னர் தான் அயோத்திதாச பண்டிதரின் பேரனான பட்லர் கந்தப்பன் அவர்கள் கறையான் அரித்து நைந்துபோன ஓலைச்சுவடிகளை அடுப்பெரிக்கக் கொணர்ந்த சமயம் அதற்குள் தற்செயலாக தலைநிமிர்த்திய திருக்குறள் பனுவல்களை எல்லீஸ் துரையிடம்கொடுத்துப் பின் அவர் அதனை முதன்முதலாக 1812-இல் அச்சிட்ட வரலாற்றை அயோத்திதாசர் ஒல்கொட்டிடமும் சொல்லியிருந்தார். அயோத்திதாசர் திருக்குறளிற்கு உரையெழுதும் முயற்சியில் கூட இறங்கி அதன் 55 அதிகாரங்களுக்கு உரையெழுதி யுமிருந்தார்.

சாதிய வெறி கொடூரத் தாண்டவமாடிய அந்த நாளையில் அயோத்திதாசர் ஒல்கொட்டிற்கு நீண்ட கடிதம் எழுதி இங்கு வரச் செய்திருந்தார். இந்துத்துவ சாதிய வெறியிலிருந்து பௌத்தம் மட்டுமே தலித்துக்களைக் காக்குமென அயோத்திதாசர் நம்பினார்.

அது மட்டுமன்றித் தென்னிந்தியாவின் ஆதி மக்கள் பறையர் சமூகத்தினர், அவர்கள் பௌத்தர்களே எனும் முக்கிய கருத்தியல்களை முன்வைத்து தியோசோபிகல் சொசைட்டியினால் பஞ்சமர் இலவசப் பள்ளிகள் என்ற நூலைத் தொகுத்து தலித்துகளுக்கு கல்வியளிக்கும் பணிகளை ஒல்கொட்டின் உதவியோடு அவர் தொடங்கியு மிருந்தார். தலித் கல்வி குறித்த முக்கியமான புத்தகமது.

அதில் பள்ளிக் கல்வியோடு, ஆசிரியர் பயிற்சி எப்படி இருக்க வேண்டும் என்பதும் விரிவாக விளக்கப்பட்டிருந்தது. அத்தோடு ஒல்கொட் அவர்கள் எழுதிய ‘ஏழைப் பறையர் (The Poor Pariah) மற்றும் பறையரை எங்ஙனம் பயிற்று விக்கிறோம் (How We Teach Pariah) உள்ளிட்ட பல முக்கிய ஆவணங்கள் தலித் மறுமலர்ச்சிக்கான எழுச்சிமிகு எழுத்துகள். ஒல்கொட் 300-இற்குமதிகமான பௌத்தப் பள்ளிகளை உருவாக்கினார்.

மாங்கூர்க் கிழார் சொல்வது போல பறையர் சமூகத்தினர்தான் இங்கு மூத்த குடி என்பதை விதந்தோதிய எழுத்துகள் ஒல் கொட்டினுடையவை. ‘பஞ்சமர் இலவச பள்ளிகள்’ பற்றிய இந்த அறிவித்தல் நூல்களையும் ஒல்கொட் எழுதிய பௌத்த வினாவிடைகளையும் இராமேஸ்வரக் கரையெங்கும் சிரித்தபடியே விநியோகித்துக்கொண்டிருந்தார் அயோத்தி தாசர்.

அவரின் கண்களில் கணேசனும் செம்பகமும் தென்படவே அவர்களுக்கும் அவர் அந்த ஆவணங்களைக் கொடுத்தார். நமது துன்பங்களுக்கான காரணத்தையும், அவற்றிலிருந்து தப்பிக்கும் வழியையும் கண்டறிய பௌத்தம் மட்டுமே திறவுகோல் என்றார் அயோத்திதாசர். பேரிருளெனும் அறியாமையில் அமிழ்ந்து அவலமெய்தி ஞானமறியா வாழ்க்கை வாழப் பெண் பிறந்தவளல்ல. அவள் தான் இந்த மண்ணின் மகா சக்தி என்றார் செம்பகத்தைப் பார்த்து.

இல்லாத பரசுராமர், கடலில் இருந்து கேரளாவை மீட்டெடுத்ததாகக் கூறும் புராணமான ‘கேரளோற்பத்தி’ போன்ற கட்டுக்கதைதான் இந்தப் பௌத்தமா என்றான் கணேசன். பார்ப்பனத்தின் புது மதமோ இது ? அவனது குரலில் எரிச்சல் மிகுந்திருந்தது. சாதி பிரித்த நம்பூதிரி களின் நயவஞ்சகங்கள் கண்ணெதிரே வந்தன. அவன் சந்தேகங்களைத் தீர்க்க முற்பட்டார் அயோத்திதாசர்.

‘மதம்’ என்ற சொல்லை பௌத்தத்திற்குப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமற்றது. இது ஒரு மதம் அல்ல, இது ஒரு தார்மீக தத்துவம். புத்தர் கடவுள் அல்ல, புத்தரின் சிந்தனை களும் போதனைகளும் உருவ வழிபாடு, ஜோதிடம் மற்றும் சகுனங்கள் பார்க்கும் சகல சித்து வேலைகளையும் எதிர்ப்பவை. ஆனால் இங்கோ பௌத்தத்தின் பெயரால் மதவெறி பிடித்தவர்களும், அறியாமை கொண்ட அடியாட்களும் வளர்க்கப்படுவதை நாம் காண்கிறோம் அதனால்தான் உனக்கு இத்தகைய கேள்வி எழுகின்றது என்றார் அயோத்திதாசர்.

‘புத்தர் என்பது தான் அவரது பெயரா’ என்றான் கணேசன். இல்லை, அது ஒரு நிலை அல்லது மனநிலையின் பெயர். அதன் பொருள் ஞானம் பெற்றவர் அல்லது, சரியான ஞானம் கொண்டவர் என்று அர்த்தமாகும். கபிலவஸ்துவின் இளவரசரான அவரது உண்மையான பெயர் சித்தார்த்த கௌதமர் என்றார் அயோத்திதாசர்! அப்போ பார்ப்பனியம் உங்களைச் சும்மா விட்டிருக்காதே என்றான் கணேசன்.

உண்மைதான் புத்தர் ஞானம் பெற்ற இடமான புத்தகயாவின் மகாபோதி கூட தங்களுக்குச் சொந்தமென இந்துப் பார்ப் பனியம் பௌத்தர்களோடு மல்லுக்கட்டி நிற்கின்றது. இத்தகு புத்தகயாவில்தான் அநகாரிக தர்மபால போராடிப் போராடி இறுதியில் இறந்தும் போனார் என்றார் அயோத்தி தாசர்.

இனிக்கும் மொழியில் அயோத்திதாசர் பேசப்பேச கணேசனும் செம்பகமும் அவரின் பேச்சிலும், பௌத்த தத்துவத்திலும் கட்டுண்டு தம்மை மறந்தனர். இவரிடம் நாம் இலங்கை போக வந்திருக்கிற விவகாரத்தை சொல்லி விடலாமா ? கணேசன் அதனைச் சொல்ல எத்தனித்த வேளை எங்கிருந்தோ வந்த கங்காணி கணேசன் கையைப் பிடித்தான். ‘இவர்களிடமிருந்து விலகி நில்லுங்கள். இவர்கள் மதம் பரப்பும் பேய்கள். இவர்களினால் இலங்கை போவதற்கு மட்டுமல்ல, உங்களுக்கும் ஆபத்து’ என்ற

கங்காணியைப் பின்தொடர்ந்து பயத்தோடு நடந்தார்கள் அவர்கள்.

இலங்கைக்குப் போகவிருந்த கப்பலின் தளத்திற்குக் கங்காணி அவர்களைக் கூட்டிச் சென்று உட்கார வைத்தான். கேரளாவிலிருந்து முன்பு இலங்கை போன அகதியின் பாடல் ஒன்று காகிதக் குப்பையாய்ச் செம்பகத்தின் காலடியில் நசிகிறது.

*நல்ல பெருநாடாம் கேரளா*
*நம்பூதிரிகளால் நாசமாய் அழிய*
*எல்லாம் இழந்து ஏதிலி ஆனது*
*எங்களின் பொல்லாத காலம்...*

*தொல்லை தந்து கொல்லும்*
*கொலைஞரை விட்டுத் தொலைத்தோம்*
*வீடற்ற அகதிகளாய்...*

*அடிமைக்குக் கூலி அந்தஸ்த்து...*
*மலையகம் அழைக்கிறது*
*வா என்கின்றான்... கங்காணி*
*வேறுவழியில்லை*
*நம்பினோம் அவனை...*

*தமிழர்க்கு முதுகுத்தோலையும்...*
*வேண்டும் போதெல்லாம் - அதில்*
*விளாசவென...*
*வெள்ளையன் கைகளில் சாட்டையையும்*
*கொடுத்துப் போயிற்று*
*உலகக் கடவுள்.*

*அந்தப் பசாசுகள்...*
*நிலவையுடைத்துச்*
*சூரியன்களைச் சிறைப்பிடித்தன.*
*கப்பலேற்றிக் கண்டிக்கனுப்பின*

*இருள் சூழ நிலம் தவித்தது!*
*பச்சைவயல்களும் பெருந்தோட்டமும்*
*எம் உடம்பில் எழுந்தன!*
*நிலங்களிருந்து நிறங்கள் சிதைந்தது !*
*எங்கும், எதிலும் குருதி மட்டுமே*
*சிவப்பாய் ஒளிர்ந்தது...*

*வழியெங்கும் பிணவாடை*
*மூக்கெரிக்கும் கரிப்புகை*
*பிணங்கள் இடறும்...*
*முண்டங்கள் முனகும்...*
*எலும்புகள் நொருங்கும்...*
*தேயிலையோ எழும் !*

*தேடுவாரின்றித் தெருவெங்கும்*
*சதைத்துண்டம்!*
*எங்கு திரும்பினும்*
*பிணம் !*
*பிணத்தினுள் நின்று*
*பணமெண்ணுவான்*
*வெள்ளையத் துரை!*

*உச்சி மலையில் தம்*
*குட்டிகளைக் காப்பாற்றத்*
*தங்களையே கவசமாக்கிப் பலியாகின*
*பாசத்தாய்மைகள்!*

*செத்துக்கிடக்கிற தாயைப்*
*புதைத்த மண்ணில் மீள முளைத்த*
*கொழுந்தை கிள்ளும் அவள் பிள்ளை!*

*மலைநாடென்னும்*
*துன்பச் சிறுக்கியின் கண்களோ*
*அருவியாய்கொட்டும்!*

*அம்மா, அப்பா, அண்ணன், தங்கை*
*சித்தப்பன், பெரியப்பன்*
*என்று திரும்புகிற*
*பக்கமெல்லாம் உறவுகள் விழவிழ*
*கொழுந்துகள் கோப்பியாய், தேயிலையாய்*
*இறப்பராய் உருமாறும்*

*மிஞ்சிக்கிடக்கிற அபலைகள்*
*‘உடரட்டமெனிக்கே’*
*ஓடத் தம் உடம்பால்த்*
*தெருப் போடும்...*

*லயன் எனும்*
*அச்சக்கூண்டிற்குள்*
*அசையாது உட்கார்ந்திருக்கிறது*
*மரத்துப்போன உடல்.*

*உழைப்பில் சோர்ந்து*
*உடல் நலிவுற்ற அப்பாவிச் சனங்களுள்,*
*தங்களின் விறைத்த குறியைப் புதைக்கத்*
*துடிக்கின்றனர்*
*இந்தக் கங்காணிகளும் துரைகளும்...*

காலடியில் நசிபட்ட முன்னோரின் இந்த மலையனுபவக் கவிதையை கப்பலில் இருந்தோர் எவரும் இதுவரை படிக்க வில்லை. போய் பட்ட பின்புதான் அவர்களுக்குப் புத்தி வரும். கப்பல் தளத்தில் நாற்காலியில் காலை நீட்டியபடி உட்கார்ந்திருந்த கங்காணி நாளை நாம் கண்டிச் சீமையெனும் சொர்க்கத்திற்குப் புறப்பட்டுவிடுவோம் என்றான். எல்லார் முகங்களும் ஆயிரம் சூரியன்களாய் ஒளிர்ந்தன.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

tg.theeban@gmail.com

2050-ஆம் ஆண்டு! பூமி சூனியமாய்க் கிடந்தது. ஒரு கொடிய வைரஸ் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் விழுங்கி, கோடிக்கணக்கான உயிர்களைக் காவுவாங்கி, பூமியையே ஒரு பெரிய கல்லறையாக்கிவிட்டது. எங்கும் அமைதி. அது மரணத்தின் அமைதி. வீதிகள் வெறிச்சோடி, கட்டடங்கள் அநாதையாக, பறவைகளின் ஒலிகூட மறைந்து மௌனமாய்ப் போன உலகம் அது!

இந்த மரணக் கடலில், அவன் மட்டும் தப்பிப் பிழைத்திருந்தான். அவன் - கடைசி மனிதன்! அவனது பெயர் இப்போது அவனுக்கே மறந்துவிட்டது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம், அவன் மட்டுமே மிஞ்சியிருக்கிறான் என்பதுதான். இது அதிர்ஷ்டமா, சாபமா? இந்தக் கேள்வி அவனது ஒவ்வொரு மூச்சிலும் ஒலித்தது.

அவனுடைய நாட்கள் வெறுமையாக நகர்ந்தன. காலையில் எழுந்து, வெறிச்சோடிய வீதிகளில் அலைந்து, ஒரு காலத்தில் பரபரப்பாய் இருந்த கடைகளில் எஞ்சிய உணவுப் பொருட்களைத் தேடி, இரவில் பாதுகாப்பாக ஒரு மூலையில் உறங்குவது. இதுவே அவனது வாழ்க்கை! தனிமையின் பாரம் அவனது இதயத்தைப் பெரும் பாறையாய் அழுத்தியது. ஒரு குரலைக் கேட்க, ஒரு முகத்தைப் பார்க்க, ஒரு தொடுதலை உணர அவன் ஏங்கினான்.

அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டான். வீதிக்கு வந்து அடிவானத்தில் உதிக்கும் சூரியனை ஒரு கணம் பார்த்து பெருமூச்சை உதிர்த்தான்.

தூரத்தில் தெரிந்த அந்தக் கண்ணாடிக் கூரையுடன் கூடிய ஆராய்ச்சி நிலையம் அன்று அவனை அழைக்காமல் அழைத்தது. 'போய்ப்பார்!' என்றது மனது.

அந்தப் பாழடைந்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தினுள் நுழைந்தான். ஒருவேளை, இங்கு ஏதேனும் உயிர் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைக்குமா என்ற ஒரு நப்பாசை. கணினிகள் செயலிழந்திருக்க, பேப்பரில் எழுதப்பட்ட குறிப்புகளும், மருத்துவக் கோப்புகளும் நிலத்தில் சிதறிக்கிடந்தன. அவன் தூசி படிந்த கோப்புகளைத் துழாவினான். சிகப்பு அட்டை போட்ட ஒரு கோப்பு அவனது கவனத்தை ஈர்த்தது. அதில், 'திட்டப் பொருள் X-7: பிறழ்வு பகுப்பாய்வு' என்று எழுதப்பட்டிருந்தது.

அவனது இதயத்துடிப்பு வேகமானது. படபடப்புடன் அதைத் திறந்தான். உள்ளே, விஞ்ஞானிகள் விவாதித்திருந்த கடிதங்கள், வைரஸின் உருவாக்கம், அதன் பரவல், மற்றும் மனித உடலில் அதன் தாக்கம் பற்றிய தகவல்கள் இருந்தன. உலக அழிவின் முழு வரலாற்றையும் அவன் வாசித்தான். வைரஸ் ஒரு குறிப்பிட்ட மரபணு வரிசை கொண்ட மனிதர்களை மட்டுமே தாக்கும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான மனிதர்கள் அந்த மரபணு வரிசையைக் கொண்டிருந்தனர்.

கிறிஸ்டி நல்லரெத்தினம்



christy.nallaratnam@thaiveedu.com

அடுத்த பக்கத்தில், ஒரு வரைபடமும், சில புள்ளிவிவரங்களும் இருந்தன. அங்கே, அவனது மரபணு வரிசை எண் குறிப்பிடப்பட்டிருந்தது. அவன் கைகள் நடுங்க, தொடர்ந்து படித்தான்.

அவன் அதிர்ச்சியில் உறைந்தான்!

அந்தக் கோப்பு தெளிவாகக் கூறியது: 'X-7 வைரஸ், குறிப்பிட்ட மரபணு வரிசையற்ற நபர்களைத் தாக்குவதில்லை. மாறாக, அத்தகைய தனிநபர்கள் அறிகுறியற்ற கடத்திகளாக (Asymptomatic Carriers) செயற்படுவார்கள். அவர்கள் வைரஸை எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் பரப்பக்கூடியவர்கள். இந்த நோய்த்தொற்றின் ஆரம்பப் பரவலுக்கு, இந்த தனிநபர்களே முக்கியக் காரணம்.'

மறந்து போன அவனது பெயர், அவனது தனிப்பட்ட மரபணு வரிசை, அவன் ஒரு அறிகுறியற்ற கடத்தி என்பதற்கான அத்தனை தகவல்களும் அந்தக் கோப்பில் இருந்தன. அவன் தப்பிப் பிழைத்ததற்குக் காரணம், வைரஸ் அவனது உடலைத் தாக்கவில்லை என்பதல்ல. மாறாக, அவன் தான் அந்த வைரஸை உலகமெங்கும் பரப்பியவன். அவன் தான் மரணத்தின் தூதுவன்!

கடைசி மனிதன், சுவரில் சாய்ந்து தரையில் சரிந்தான். அவனது கண்களில் நீர் திரண்டது. இது அதிர்ஷ்டம் அல்ல, அது ஒரு சாபம்! அவன் உயிர் பிழைத்த ஒவ்வொரு நொடியும், அவன் அறியாமலேயே அவன் கொன்ற கோடிக்கணக்கான உயிர்களின் அழுகுரல் அவனது செவிகளில் ஒலித்தது.

அவன் தனியன் அல்ல! அவன் இந்த உலகின் ஒவ்வொரு மரித்த ஆத்மாவையும் சுமந்தபடி, உயிருள்ள ஒரு கல்லறையாக வாழ்ந்து மடியப் போகிறான்.

தள்ளாடியபடி எழுந்து வீதிக்கு வந்து வானை நோக்கினான்.

தூரத்தே வானில் ஒரு முகில் கூட்டம் மிதந்து மறைந்தது!

# கடைசி மனிதன்!



# சாபமோட்சம்

## தேவகாந்தன்

இமயமலைச்சாரல் விடிந்தது. கௌதமன் கண்கள் விழித்தன. என்றுமில்லாதபடி மனதில் தவிப்பு. தன்னந்தனியாகிவிட்ட வாழ்வின் ஸ்திதி பிரக்ஞையாகிற்று.

அந்த துர்ப்பாக்கிய நாளின் பின், அந்த சம்பவத்தினதும் அவளதும் நினைப்பை அவன் அடைந்தே வந்திருந்தான். ஆனால்அவ்வாறான தீவிரத்திலல்ல.

அந்த நாளின் நிகழ்வு கணம் கணமாய் அவனுள் ஊறியது.

கோழி கூவுகிறது. கௌதமன் எழுந்து இன்னும் வெளிச்சக்கீறு அடிக்கத் துவங்கியிராத வைகறை இருளில் கால்வைக்கிறான். அந்த இருளும் வழமையான பனிமையற்றுக் கிடக்கிறது. மனதில் ஒரு இடையூற்றின் சமிக்ஞை. ஆனாலும் முனிவனாக இருப்பதாலேயே அந்தத் தயக்கத்தை அவன் வென்றாகவேண்டும். தன் தெளிவை நிரூபணமாக்க அவன் மேலே நடக்கிறான்.

நீராடி, அன்றைக்கு வேண்டிய ஹோமத்துக்கான தர்ப்பையும் சமித்துகளும் சேரித்துக்கொண்டு, மேலே சுணங்க மனதற்றவனாய் கௌதமன் ஓர் அவசரத்தில்போய் வருகிறான். இன்னும் விடிந்து விடாப் பிரபஞ்சம் ஒரு கெடுதியின் தவிர்க்க முடியாதமுன்னறிவிப்பை அவனுக்குச் செய்கிறதா? பன்னசாலை நெருங்குகிறது. அவன் வேகம் அடங்கவில்லை...

அந்தப்பொழுதில்தான் உள்ளிருந்தவர்களின் உச்சஸ்தான வெடிப்பு. இருவரும் சிதறிப்போய்க் கிடக்கிறார்கள். முதலில் தெளிவடையும் இந்திரன் அவளுடலிலிருந்து வழிந்து இறங்கு கிறான். அவளின் நிலாப்பிறை நெற்றியை ஆதரவாய் வருடுகிறது அவனது கரம். 'பாவம்!' என்று
வாய் முணுமுணுக்கிறான். அப்போதுதான் அவனாலும் இரங்கமுடிகிறது போலும்.

இன்னும் அடங்கிய புலன்கள் முழுதான மீட்சிபெற்றுவிடாத அகலிகை மெதுவாய்க் கண்விழிக்கிறாள்.

பன்னசாலையில் இன்னுமிருந்த நிறையிருளில் சடுதியாய்ப் பிரவேசிக்கிறான் கௌதமன்.



tg.theeban@gmail.com

தொலைந்தது!

கண்ட இந்திரன் நெஞ்சத்தில் இடியேறு வீழ்ந்தது. நேர்ந்துவிடக்கூடாதென எண்ணியிருந்த அவ்வாறான ஒரு தருணம், தான் சிலகணங்கள் தாமதமாகிவிட்டதில் பயங்கர உருவெடுத்து வந்திருப்பதை நேரில்கண்டு நடுங்கத் துவங்குகிறான். வந்திருக்கும் அதிபயங்கரத்தின் பெயர் கௌதமன். இந்திரன் கை வைத்திருப்பது அவனது பாரியாளில். அதிலிருந்து தப்பிக்க ஒரு வழியும் அவனுக்குப் புலப்படவில்லை. அறிவு மழுங்கிப் போயிருக்கிறான்.

அவனுக்கு ஆசை இருந்ததுதான். அந்த ஆசையும் அத்தனை நாளில் நாள் நாளாய் வளர்ந்து வந்த ஆசையாகயிருந்தது. அத்துடன் தன் பன்னியென கௌதம முனிவன் கொண்டிருந்த கர்வத்தை அழித்தொழிக்கும் வன்மமும் கூடவிருந்தது.

தேவரும் அசுரரும் வாசுகியை நாணாகவும் மந்தரமலையை மத்தாகவும்கொண்டு அமிர்தத்துக்காய் மா கடலைக் கடைந்தபோது திரண்டுவந்த ஆலகால விஷத்துடன் நிகழ்ந்தது மாபெரும் அழகுக் கன்னியான அகலிகையின் அவதாரம்.

அந்த அழகில் தேவரும் முனிவரும் இந்திரனும் மதிகெட்டுப் போயிருந்தார்கள். இந்திரன் பிரம்மனை அணுகி அவளை தனக்கு மணஞ்செய்துதரக் கேட்கிறான். நாரதருக்கு, அவளை கௌதம ரிஷிக்கு மனைவியாக்க எண்ணம். அது அகலிகையை கௌதமனுக்கு மனைவியாக்குகிறது.

இந்திரன் அந்த ஆசையை மறப்பானா? தன்னில் விழுந்த தோல்வியை மறப்பானா?

தன்னுள் சிதைந்துகொண்டிருந்த இந்திரன் இறுதியில் தானுமொரு சூழ்ச்சி புனைவதின் மூலம் அவளை அனுபவிக்கும் திருப்தி பெற தீர்மானிக்கிறான்.

ஒருநாள் நள்ளிரவில் வந்து கௌதமனின் செவியெட்ட கொக்கரக்கோ சொன்னான்.

விடிந்து விட்டதென விழித்தெழுந்த முனி ஆற்றுக்குப் புறப்பட்டான். வெளியிருளில் கால்வைக்கவே பனிகலக்காத காற்றில் இரவு இன்னும் விடியல் கொள்ளவில்லை என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனாலும் சந்தேகம் எதுவும் மனதில் கிளரவில்லை.

ஆறு நோக்கி நடந்துகொண்டிருந்த கௌதமன் நடையில் தயக்கத்தின் சிற்றசைவும் தென்படாத இந்திரன், அப்போதே தெரிந்து கொண்டான், அது தன் ஆசை நிறைவேற்றத்தின் அற்புத நாளாகிவிட்டதென்று. அவன் பன்னசாலையுள் நுழைந்தான். கௌதமன் படுக்கைக்கு சற்றுத் தள்ளியாக தன் புற்பாயில் கைகளை எறிந்துகொண்டு மதர்ப்புகள் கச்சைகளை மீறித் தெரியகிடக்கிறாள் அழகற்ற எதுவும் தன்னில் இல்லாத அழகியான அகலிகை. இடைத்துணி நெகிழ்ந்து கிடக்கிறது. துடை விரிசலில்இருள் இன்னும் அப்பியபடி. நெடுங்காலம் காத்திருந்த இந்திரனுக்கு தன் ஆசையை, கௌதமன் ஆற்றிலிருந்து திரும்புமுன் முடித்து விடுகிற அவசரம் இருந்திருந்தாலும், அவன் அவதானமாக அவளை அணுகவேண்டும்.

அவளுடம்பில் வியர்வைத் துளிர்ப்புகள் சீறி அடங்குவதுபோல் அவனுக்கு ஒரு தோற்றத்தின் உதயம். அது அவள் ஒரு கனலை தன் உடம்பின் உட்பொதிந்துள்ளாள் என்பதாக அவனுக்குத் தோன்றச்செய்கிறது. அவள் அறியாமல் அவன் அவளை எப்படி எப்படியெல்லாமோ கண்டிருக்கிறான். அக்காட்சிகள் தடைசொல்லும் சாத்தியத்தை அவளுடம்பு இழந்து விட்டிருந்ததின் சாட்சியங்களென அவனை நிச்சயிக்கச்செய்ய இந்திரன் மெதுவாய் நெருங்கி கௌதமன் படுக்கையில் சரிந்து உருண்ட படி அகலிகை படுத்திருந்த பாய்வரை நெருங்கி அவளருகு ஆனான்.

அப்போது ஓர் எண்ணம். கௌதமன், தானே அவளை அணுகாமல், 'ஹே, அஹல்யே!' என விளித்து தன் படுக்கைக்கு அவளை அழைப்பானோவென.

இடையிட்ட நிச்சலனப்பொழுது மனத்தைத் துணிவிக்கிறது.

அவன் கை அவள் மார்மேல் பதிந்தது.

அகலிகை அசைந்தாள். அப்போதுதான் விழித்தாளா?

அவன், அவளது ஒளிர்முகத்தைக் கூர்ந்து பார்த்தான். பார்வையின் உணர்வுறுத்தலில் அவள் சொண்டு நெளிந்து துடித்தது. உடம்புமுழுக்க தினவின் கெழுமுகை தெரிந்தது. அது, அவனை யாராக நினைந்திருந்தாலும், அவள் அக்கணம் அந்த அணுக்கத்தை அனுமதிப்பாளென உறுதியளித்தது.

அவன் தன் எண்ணம் தீர்த்தான்.

அப்போகம் ஒரு பெருங்காலத்திற்கு நீட்டித்திருந்ததாய், தவறவிட்ட காலங்களை ஈடுகட்டுவதாய், இருவருக்குமே தோன்றிப்போயிற்று. ஆயினும் களவு நீடித்த அந்த உபரி நேரமே அப்போது பாதகமாக அமைந்துவிட்டது.

இந்திரனின் உள்விளைந்த அச்சம் அவன் மேனியில் வியர்வையாய் வடிந்தது.

உள்ளெழுந்த பாத அதிர்வில் இன்னுமே கிடந்திருந்த அகலிகை திடுக்கிட்டு பாய்ந்தெழுந்தாள்.

கோபாக்கினியில் தகதகத்தபடி நின்றுகொண்டிருந்தான்

கௌதமமுனி.

யார் குற்றவாளியெனவோ, அது குற்றம்தானா எனவோ தேரும் அவசியம் அங்கே காணப்படவில்லை.

இந்திரனது நடுக்கம் அவன் குற்றம் செய்தானென்பதை ஐயமின்றிக் காட்டுகிறது.

‘நீ மேனியெங்கும் புண்ணாய்ப்போவா’யென இந்திரனுக்கான சாபம் கௌதமனிலிருந்து உருள்கிறது.

அவளில் பயமில்லை. ஆனாலும் குற்றவாளி தானும்தான் என்பதாக அவள் கருதுவதாய், அவன் முகம்பார்க்க கூசி நிலம் கவிழ்ந்த அவளது பார்வையால், முனி நிச்சயிக் கிறான்.

அது காலவரையான அவளது தொண்டெல்லாம் அவன் எண்ணிப் பார்ப்பானா ?

எதையும் ஒரும்திறன் எவருக்கும்போல் அவனுக்கும் அற்றிருந்த தருணம் அது.

அவன் தன்லோகம் முழுதுமறிந்த புகழ்மறப்பான்; தன்நீண்ட ஆயுசு மறப்பான்; தன் தபோபலம் மறப்பான்; ஆனால் தான் ஓர் ஆணென்ற எண்ணம் மறவான். அவள் அவனுக்குத் துரோகம் செய்தாள். அவன் சரியான ஆணில்லையென முப்பத்து முக்கோடி தேவர்க்கும் காட்டினாள். அதன்வழி இந்த உலகம் முழுவதற்கும் பிரசித்தம் பண்ணினாள். ஒரு முனிபன்னியின் எந்தக் குற்றமும் மன்னிக்கப்படலாம்; ஆனால் இந்தக் குற்றம் அப்படியானதல்ல அவனுலகத்தில்.

அடுத்தகணம் அவன் வாயிலிருந்து தெறிக்கிறது: ‘நீ ஆகுதி கல்!’

அதுவொரு சிறப்பான தண்டனைதான். எண்ணாமலே இட்டிருந்தாலும் அந்தச் சாபம் அவனுக்குத் திருப்தியாய் இருக்கிறது.

உடம்பின் அவயவமெல்லாம் கல்லாகும். ஆனால் உயிர்... ? உள்ளம்... ? அவை கல்லாகமாட்டா. அவள் தீச்செயலை நினைக்க அவைதிறன் கொண்டிருக்கும்.

அது கௌதமமுனியின் எண்ணம்.

ஆனால் அவை அவளது சொந்த இழப்புகளை எண்ணியும் உணர்ச்சி கொண்டு ஏங்கும்... உருகும்... அழும்... தாங்க முடியாதவலியில் தவிக்கும். ஒரு கணம் வாழ்ந்துவிட எவரையும் மன்றாட்டமிடும். அது கொடுமையான ஒரு சாபம்.

பொழுதூர்கிறது. அகலிகை இன்னும் கல்லாகவில்லை.

முனியின் மனதில் அதிர்ச்சி.

மாயத்தின் எது கூறு அவளைப் புரக்கிறது ?

ஆனால் சிறிதுபொழுது நகர, அந்தச் சாபத்தை மிகுந்த பிரியமுடன் ஏற்றுக்கொண்டதைப்போல அகலிகை முகத்தில் ஒரு மலர்ச்சி.

அந்த மலர்ச்சியோடு கௌதமனை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு கல்லாய் விழுகிறாள் அகலிகை. இந்தாபிடி சாபமென முனிவன் புகலுமுன்னமே, கொண்டுவா சாபத்தையென பறித்துக்கொண்டு அவள் கல்லானது போல்தான் அந்தச் சாப ஏற்பிருந்தது.

அகலிகை தன் மென் திசுக்களெல்லாம் கல்லாகி நிலத்தில் வீழ்ந்தமை, கௌதமனையே திகைக்க வைத்தது. ஆனாலும் அந்தச் சாப ஏற்பின் விதம் ‘சரி, பிழைத்தேன், கல்லாகிறேன்’ என அவள் ஏற்றுக்கொண்டதாய் அவன் தெளிந்து மேலும் சினமடைந்தான்.

பன்னசாலையைவிட்டு முனி வெளியேறினான். இமயமலைச் சாரலைநோக்கி அவன் பயணம் துவங்கிற்று.

தவமும் பூஜைகளும் எவ்வளவு நிம்மதியைக் கொடுத்து விடும், தன்பன்னியைக் கல்லாய்ச் சபித்துவிட்டு வந்த ஒரு முனிவனுக்கு ?

அவனுக்கும் அவ்வப்போது அவள் நினைவு எழத்தான் செய்தது. சிலவேளை துன்பமாக; சிலவேளை தேவையுடனாக.

அன்றைக்கு பன்னசாலை சென்று அந்தக் கல்லை, ஒரு காலத்தில் பாரியாளாய் இருந்த கல்லை, காணவேண்டுமென தீராப்பிரவாகத்துடன் ஓர் எண்ணம் அவனில் சுரக்கிறது.

மிதிலா நகருக்குச் சமீபமாகயிருக்கிறது கௌதமனின் பழைய பன்னசாலை. அவன் தன் நீள்பயணத்தைத் துவங்குகிறான். காலம், நாழிகைகளாய் நாள்களாய் தொடர்கிறது.

அதோ தெரிகிறது, காலங்கடந்த அழிமானத்தில் அகலிகை கல்லாய்க் கிடக்கும் அந்த பன்னசாலை.

நினைவில் எந்த உணர்வு தூக்கலாய் நின்றது அவனில் ? கோபம்... ? துக்கம்... ? ஏக்கம்... ?

சரியாகச் சொன்னால் அந்த மூன்றுமே.

கௌதமன் உள்ளே நுழைகிறான்.

குடில் வெறுமையாய்க் கிடக்கிறது.

முனி ஏங்கிப்போகிறான்.

அகலிகைக்கல் எங்கே?

அவன் வெளியேவந்து, அயல் முனிவர் பன்னசாலைகளை நோக்கி ஓடுகிறான். அவனை யாரென்று அறியாத ஒரு பெண் வெளியே வருகிறாள். கௌதமன் கேட்கிறான், 'அந்த பன்னசாலையில் கிடந்த கல் எங்கே?' என.

கல் எங்கேயென்று கேட்கும் முனிவனைப் பார்த்து, அவனது உக்கிரமான கோபகுணம் அறியாதவள், சிரிக்கிறாள்.

கௌதமன் அடுத்த பன்னசாலையைத் தேடிஓடுகிறான். அங்கே இருந்தவளிடம், 'நான் கல்லாக்கிவிட்டுச் சென்ற அகலிகைஎங்கே?' என உசாவுகிறான்.

பதில் அவனைத் திகைக்க வைக்கிறது.

'நீ கண்டாயா?'

'நான் கண்டேன். அவள் அங்கிருந்து கடினமாய் நடந்து போனாள்.'

'எங்கே?'

அவள் மேலே கையினால் சுட்டிவிட்டு அவனைத் தீர்க்க மாய்ப் பார்க்கிறாள்.

குழம்பிநின்றிருந்த கௌதமன் தன் பன்னசாலைக்குத் திரும்பினான்.

எப்படி நடந்தது அது? அவன் செய்த கடும் தவத்தின் உக்கிரம் தாளாமல் நேரில் தோன்றி கடவுள் அளித்த வரபலம் காலம் தாங்காது நீர்த்துப்போயிருக்கிறது.

எங்கோ தவறு நடந்திருக்கிறது. இல்லாவிடின் இவ்வாறெல்லாம் நடக்கச் சாத்தியமேயில்லை.

தேடிய அனுபவங்கள், பெற்ற ஞானம் எல்லாம் எதுவுமில் லையென ஆவது எவ்வளவு புதுமை! அவன் எதுவும் புரியாமல், 'கடவுளே...!' எனக் கூவுகிறான்.

இருண்டுவந்த வானில் மின்னல் அடிக்கிறது. சிரிப்பலைகள் முழங்குகின்றன. மழைத்துளிகள்போல் சொல்கள் உதிருகின்றன. 'தவங்களால் வரமகிமை அளிக்கும் ஒவ்வொரு தருணத்திலும் நான் தவறாமல் வற்புறுத்தும் செய்தியொன்றிருக்கிறது, கௌதமா. அதை நீ மறந்து விட்டாய்.'

மறந்தேனா, என்ன அது என தன்னை விசாரிக்கிறான் முனிவன்.

'மறந்தேதான் போனாய். இல்லையெனில் இந்நிலை உன்னில் ஏற்பட்டிருக்காது. ஒவ்வொரு சாபமும் அதன் இன்னொரு பகுதியாக விமோசனத்தைக் கொண்டிருக்க வேண்டும். நீ அகலிகை கல்லாகச் சாபமிட்ட அன்று, விமோசனத்தை அனுக்கிரகிக்க மறந்தாய். ஆனால் நீ மறந்ததை நான் நினைவில் கொண்டிருந்தேன். கல்லறைக்குள் சிறை வைக்கப்பட்ட தன்னை விடுவிக்க அகலிகையும் எனை நோக்கி சொல் அர்ச்சனைகள் புரிந்துகொண்டே இருந்தாள். கடைசியில் வென்றது அவளாயிற்று.

'அகலிகையின் அழகு நிகரற்றதாயிருந்தது. அதனாலேயே அதன் மீது பதியும் ஒவ்வொரு நோக்கும் அவள் மனத்தில் அழுக்கைச் சுமத்திக்கொண்டே இருந்தது. இந்திரனை அகலிகை விரும்பியதன் அல்லது ஏற்றுக்கொண்டதன் அறம் இங்கே இருக்கிறது. அவளுடலைக் கல்லாக்கிய உன் சாபம் விமோசனமற்றிருந்ததால் வலுக்குறைந்துபோக, மீதிக் கன்னிலை என்னால் இல்லாமல் ஆக்கப்பட்டது.

'புணர்ச்சியே மேலேழ் கீழேழ் உலகங்களினதும் நியாயம். அதன் மீது வரைபடும் ஒழுங்குகளே வாழ்வின் அறம். உயிர் கொள்ளும் புணர்ச்சி விதுப்புக்கு ஒழுங்குண்டு. ஆனாலும் தன்னிச்சையானது. தனக்கே தனக்காய் தான் எல்லைகளிடுவது. அது எந்தவொரு இணைக்கும் தனித்தவொரு வாழ்க்கையை அளிக்கிறது. அவ்வாறு இருமுனை வாழ்வு கொள்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் மண்ணில் வாழ்ந்தாலும் மோட்ச நிலையை உணர்வார்கள். அவர்களின் ஆன்ம விடுதலை என்னால் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். அதனால் அகலிகையின் கன்னிலை தீர்ந்தது; மோட்சம் சித்தித்தது.'

மழை தூறவாரம்பித்தது.

கௌதமன் பன்னசாலையுள் வந்தான்.

இன்னும் அவள் அங்கே கல்லாய் விழுந்திருப்பதான ஒரு பலகீன உணர்வு.

யோசிக்க, அவளின் அந்த நிலைக்கு தானேயாகிய காரணம் புலனானான் அவன்.

இல்லறத்துக்குத்தான் பெண்துணை; துறவறத்துக்கு அத்துணை அதீதம்.

அவனுக்கு எல்லாம் விளங்கிப்போயிற்று.

இனிஅவன் அங்கே நிற்கவேண்டியதில்லை. இமயமலைச் சாரலை நோக்கி பயணத்தைத் தொடங்கினான்.



devakanthan@thaiveedu.com

# பிப்போ

மிருணாள் பாண்டே
தமிழில்: என்.கே. மகாலிங்கம்



மிர்ணாள் பாண்டே,1946-இல் மத்திய பிரதேசத்தில் பிறந்தார். இந்திய இந்தித் தொலைக்காட்சி ஆளுமை. அத்துடன் நூலாசிரியர். சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள் எழுதியிருக்கிறார். வாமா என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்திருக்கிறார். ஹிந்துஸ்தான் என்ற இந்தி நாளிதழின் முதன்மை ஆசிரியராக 2001 தொடக்கம் 2009 வரை இருந்திருக்கிறார். பத்தி எழுத்தாளர். கட்டுரையாசிரியர். பல தொலைக்காட்சிகளில் செய்தித் தொகுப்பாளரா கவும் வேலை பார்த்திருக்கிறார். அலகபாத் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். அவருடைய ஊடகவியல் பங்களிப்புக்காக 2006-இல் பத்மஸ்ரீ விருது பெற்றார். பெண்கள் பற்றியும் பாலின அடையாளம், சமூக விலக்குகள் முதலான கருத்துகளையும் விமர்சித்து வருகிறார். இவரின் நூல்கள் The Subject is Woman, Daughter’s Daughter, That Which Ram Hath Ordained Devi, Tales of the Goddess in Our Time, Stepping Out: Life and Sexuality in Rural India, The Other Country: Dispatches from Mofussil, Sahele Re, My Own Witness.

இவருடைய தாயார் ஷிவானியும் புகழ்பெற்ற ஓர் இந்திய எழுத்தாளர். அவரும் பெண்களை மையமாக வைத்து புனைவுகள் எழுதியவர். அவரும் பத்மஸ்ரீ விருது பெற்றவர்.

இந்தியில் இந்தக் கதையை எழுதிய ஆசிரியரே ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருக்கிறார். இவர் ஓர் ஆங்கிலப் பேராசிரி யராகவும் சில காலம் இருந்தார். இந்தக் கதை The Little Magazine என்ற இந்திய ஆங்கில இலக்கியச் சஞ்சிகையில் வெளிவந்தது.



tg.theeban@gmail.com

ஒப்பனைக் கலையைப் பொறுத்தளவில், அந்த ஆண்டை முதியவர்களுக்கான சர்வதேச ஆண்டு என்று அழைக்கலாம். அதேபோல, அந்த ஆண்டு கொடுமையான மாதவிடாய் மாற்றத்தால் வளர்ந்த கன்ன மயிர் ஆண்டென்றும், புருவ மயிர்களைப் பிடுங்கி எறிந்த ஆண்டென்றும், தங்கத்தால் செய்யப்பட்ட மூக்கு கண்ணாடி ஆண்டென்றும் கூறலாம். உடைகள்கூட அவற்றின் வகை வேறுபாடுகளைப் பொறுத்தவரையில் அச்சமூட்டுகிற அளவு அதிகம்.

பொருத்தமற்ற பூப்போட்ட சட்டைகளையும், கறுத்த நிற கைத்தறிச் சேலைகளையும், அழுக்கான எண்ணெய் கறை படிந்த வெள்ளி நகைகளையும், கிழிந்த தலையணை உறை போன்ற குர்தாக்களையும் இறுக்கமான சுரிதார்களையும் அவர்கள் அணிந்திருந்தார்கள். கண் இமைகளுக்கு சுரி அல்லது கோல் என்ற கண்மை பூசுவது திரும்பவும் அலங்காரப் பொருளாக வந்திருந்தது. கடந்த ஆண்டுகளில் வந்த நீலமும் மெல் ஊதா உதட்டுச் சாயமும், பச்சையும் தங்க நிறமும் கலந்த கண்கீழ்ப் பூச்சும், மர்மமான முறையில் கரும் துளைகளால் உள்ளிழுக்கப்பட்டது போல பொய்க் கண்ணிமைகள் அவற்றின் மேல் ஒட்டப்பட்டு மினுங்கிக் கொண்டிருந்தன.

இந்த உயர்தர ஒப்பனை விசித்திரமானது. ஒன்று, உங்கள் கண்களை உங்களாலேயே நம்ப முடியாது. ‘இந்த ஒப்பனை உண்மையானதா, சாலா ?’ என்று கேட்டாள். நாங்கள் ஒன்றும் செய்யாமல் சும்மா இலையான்களை அடித்துக் கொண்டிருந்த போது, உண்மையான ஒப்பனைப் பாணிகள் வளர்ந்து கொண்டிருந்தன! இல்லையா ? அதன் பெயர் என்ன ? தூங்கி வழிந்து கொண்டிருக்கும் எங்கள் சிறிய நகரம், கடலடியில் உள்ள தாவரங்கள் போல ஆடி ஆடி அசைந்து கொண்டிருக்கும்போது, எல்லா உயர் ஒப்பனைப் பாணிகளும், வியப்பூட்டுகிற அளவு சடுதியாகத் தோன்றிவிட்டன!

முதலில் பயணப்பெட்டிகள் வந்து சேர்ந்தன. பல றக்குகளில் ஏற்றப்பட்டு வந்து சேர்ந்த பயணப் பெட்டிகள் உயரமாக அடுக்கப்பட்டிருந்தன. அதன் பின் பூந்தொட்டிகள் வந்தன. அவற்றில் உள்ள எல்லாப் பூக்களும் பச்சை இலைகளுடன் கவர்ச்சியாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. அதன் பின் நாய், பின் பொன் முலாமிட்ட கூண்டில் ஒரு கிளி. பின் கணவனும் மனைவியும் வந்தார்கள். கடைசியாக பிப்போ வந்தாள்.

கணவன் உயரமானவன். இன்முகம் கொண்டவன். நட்பார்ந்தவன். இளமையானவன். எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளவும் கூடியவன். அழகான கம்பளி குர்தாவும் அலிகார்கி பிஜாமாவும் அணிந்திருந்தான். அவற்றை உடற்பயிற்சியால் உண்டான உடம்பில் நிலப்பிரபுத்துக்குரிய கவலையின்மையுடன் அணிந்திருந்தான். எங்களுடைய சிறிய நகரத்தில் உள்ள புதுப்பணக்கார லாலாக்களின் கொழுத்த பானை வயிறு உள்ள வழித்தோன்றல்கள் போல அவர்கள் இருவரும் உடை அணிந்தவர்கள் அல்ல. அவர்களுடைய மதிப்புமிக்க உடைகள் கம்பீரமான உடல்களில் அழகாகப் பொருந்தியிருந்தன. புராதன கோவில்களில் உள்ள மதிப்புமிக்க சிலைகளில் பொருந்தி இருப்பது போல அவை பொருந்தி இருந்தன. கணவனின் தோள்களில் போட்டிருந்த அங்கவஸ்திரம் இளவரசர்கள் அணிந்திருப்பதைப் போல இல்லாமல் இருக்கலாம். இருந்தும் அப்படித்தான் அவனுடைய பிரசன்னம் இருந்தது. உயர்குடியினர்க்குரிய தன் நீண்ட கைளை நீட்டியபோது அது வெளிப்படையாகச் சொல்லாத நற்செய்தியைக் குறிப்பால் சொல்லின. அப்போது அவன் அணிந்திருந்த ஆடையின் மடிப்புகள் அலையலையாக தாளலயத்துடன் அலைந்தன.

அவனுடைய அழகான மனைவி உருவத்தில் சிறியவள். அதேவேளை மென்மையானவள். பொம்மை போன்றவள். அவள் போட்டிருந்த கொண்டை அழகற்றதாக இருந்தது. கிழவிகள் அணியும் தங்க விளிம்பு போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாள். மயிர் பிடுங்கப்பட்டு மெல்லிய மேலோட்டமான பிறைபோல வளைந்த புருவங்கள். அவை அவளுக்கு சிறுமியைப் போன்ற தோற்றத்தை அளித்தன. அவளுக்குத் தாடை சதுரமானது. அது அவளுக்கு ஒரு தீவிரத்தன்மையைக் கொடுத்தது. அது நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அனுபவித்து வந்த நிலப்பிரபுத்துவ அதிகாரத்தையும் காட்டியது. அவளுடைய குரல் மென்மையானது, பணிவானது. மென்மையான ஆங்கில ஸ்ஸ் உச்சரிப்பு அதற்குச் சுவை ஊட்டியது. பஞ்சாபி இனத்துக்கான அழகான மணி ஓசை போன்ற உச்சரிப்புடன் அது கலந்திருந்தது. சிறிய கூரான வசனங்களில் பேசினாள். அவை இதழ் ஓரங்களில் இசையுடன் சுருண்டன. அவளுடைய கைகள் பொம்மைகளின் கைகள் போல. அவள் பேசும்போது கவர்ச்சியான இன முத்திரைகளுடன் அவை சுற்றிப் பறந்தன. விரல்கள் சிறியவை. தடித்தவை. சதுர முனைகள் கொண்டவை.

பிப்போ வித்தியாசமானவள். அவளை அவனுடைய மனைவிக்கு தனிப்பட்ட பணிப்பெண்ணாக அழைத்து வந்திருந்தார்கள். அல்லது அவள் வந்திருந்தாள். அவளுடைய உடலமைப்பு பெயருக்குப் பொருத்தமானதாக இருந்தது. அவளுடைய வட்டமான உடல் பஞ்சாபியர்களுக்கே உரிய முழுத்திரட்சியையும் கொண்டிருந்தது. எசமானியால் தேவையற்றவை என்று கழித்து விடப்பட்ட கடந்த ஆண்டின் ஒப்பனைக் கலையின் ஆடைகளை அணிந்திருந்தாள். இருந்தும் ஒவ்வொரு ஆடைக்கும் அவளுடைய விசேஷ பண்பையும் அவள் சேர்த்திருந்தாள். குர்தாக்களின் கழுத்துகளை வெட்டி எறிந்துவிட்டு வி வடிவத்துடன் அதைத் தைத்து திருத்தியிருந்தாள். அதனால் அழகான, நன்கு வடிவமைக்கப்பட்ட அவளின் நெஞ்சின் பிளவைக் காண முடிந்தது. அந்தப் பிளவின் ஊடாக இரண்டு மார்புகள் மென்மையான, இனிமையாக மணக்கும் இனிப்புப் போலக் காட்சி அளித்தன. அவளுடைய இடை அகன்றது. இடுப்புகள் நிறைவானவை. உறுதியானவை. அவை சற்றுத் துருத்திக் கொண்டும் இருந்தன. அவளுடைய கண்கள் இரண்டு பெரிய காலியான துளைகளில் உணர்ச்சிகளைக் காட்டாத முகத்தில் இருந்தன. அவளுடைய நடை இன்னொரு விதமானது. விசித்திரமான முறையில் மயக்குவது. கோதுமை உண்ணும் இளம் விவசாயியின் சமநிலையற்ற ஒன்று அது. இளமையின் அமிர்தத்தை

உண்டவள் போன்றவள். நடக்கும்போது அங்குமிங்கும் தடு மாறும் நடை. அவளைப் பார்க்கும் ஒருத்தன் அவள் நடப்ப தற்கு எவராவது துணை போக வேண்டும் என்று நினைப்பான். அவள் நடந்து போகும்போது பலருடைய முகங்கள் அவள் பக்கம் இயல்பாகவே திரும்பிப் பார்க்கும். ஆச்சரியத்துடன் அவளைத் தொட அவர்கள் கைகள் விரும்பும். அவள் தொடைகளுக்கு துணை செய்ய முயலும்.

வீட்டின் எல்லா கழிவறைகளின் தரைகளில் பளிங்குக் கற்கள் பதித்திருந்தமையால் அவள் தன் உடுப்புகளை வெளியே புற் தரையின் மூலையில் உள்ள சிறிய குழாயில் கழுவிக் கொள் வாள். முதலில் அவள் துப்பட்டாக்களை புதர்களின்மேல் காயப் போடுவாள். சல்வார் கமிசுகளை மேலே இழுத்து விட்டுக் கொள்வாள். சட்டைக் கைகளை மேலே முழங்கை வரை இழுத்து விட்டுக் கொண்டு மரக் கொட்டனால் மெல்ல மெல்ல ஆனால் கவனமற்ற ஒழுங்குக் கிரமமாக உடுப் புகளை அடித்துத் தோய்ப்பாள். அந்தச் சத்தம் தொடங்கின வுடன் பக்கத்து வீடுகளில் வேலை செய்யும் வேலையாட்கள் தாங்கள் செய்து கொண்டிருந்த வேலைகளை அப்படியே விட்டு விட்டுப் பார்ப்பார்கள். வாயு அடுப்புகளில் வைத்தி ருந்த பானைகள் சட்டிகளை அப்படியே வைத்து விட்டு வேலிகளில் கூட்டமாக நின்று வாயில் எச்சில் ஊறப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். அவர்களுடன் அவள் ஒரு சொல்லுக்கூட கதைக்க மாட்டாள். அவர்களைப் பார்ப்பது கூட இல்லை. உடுப்புகளைத் தோய்த்த பின் தன் வலிமை யான கையை நீட்டி துப்பட்டாவை புதரில் இருந்து எடுப்பாள். தோய்த்து முறுகிய உடைகளை வாளியிலிருந்து தூக்கிக் கொண்டு ஆடி அசைந்து கொண்டு வீடு செல்வாள். அதன் பின் அந்தக் குடியிருப்புப் பகுதி மக்கள் அன்று பிற்பகல் முழுவதும் ஆடி ஆடிச் செல்லும் அவளுடைய பிருட்டங் களைப் பற்றியே பேசிக் கொள்வார்கள்.

ஒவ்வொரு நாளும் கணவன் தன் காரில் வேலைக்குப் போவான். மனைவி அவனை வழி அனுப்ப வாசலில் வந்து நிற்பாள். அவன் பிரிந்து செல்கையில் ஆங்கிலேயர்களைப் போல முத்தம் கொடுப்பாள். அதன் பின் பிப்போவை தன் மென்மையான உதடுகளால் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே செல்வாள். சரியாகப் பதினொன்றரை மணிக்கு பிப்போ பொருட்கள் வாங்கும் கவர்ச்சியான பிளாஸ்ரிக் பையுடன் வெளியே வந்து அசைந்து அசைந்து சந்தைக்குச் செல்வாள். சலவைத் தொழிலாளியான ரமணரேஷ் தன் வானொலிப் பெட்டியில் விவித பாரதி பாடல்களின் சத்தத்தை பெரிதாகத் தூண்டினால் சந்தையிலுள்ளவர் களுக்குத் தெரியும் பிப்போ தெரு மூலையால் இறங்கிக் கொண்டிருக்கிறாள் என்று. அதன் பின் சௌராசியா வெற்றிலைக் கடையில் சிரிப்புச் சத்தம் சடுதியாக உயரும். அவர்களின் எண்ணெய் படிந்த இடுப்புப் பைக்குள்ளிருந்த சிறிய பிளாஸ்ரிக் சீப்புகளை எடுத்து தங்கள் தலைமயிரை நெற்றிகளில் மேல் சேவல் கொண்டையைப் போல வைப்பார்கள்.

மெல்ல மெல்ல எசமானும் எசமானியும் உள்ளூரில் உள்ளவர் களுடன் நண்பர்களாகிக் கொண்டார்கள். நகரத்திலுள்ள ஆடம்பரமான குடியிருப்புப் பகுதியில் வசித்தார்கள். அங்கு வாழுபவர்கள் அனைவரும் முக்கியமான நபர்களின் மக்கள் அல்லது பேரர்கள் அல்லது கொள்ளுப் பேரர்கள். வேலைக் குப் போவது அவர்களுக்கு ஒருவகையான பொழுதுபோக்கு. அவர்களிடம் எவ்வளவோ பணமும் பொருளும் இருந்தன. அவை எவ்வளவு என்று அவர்கள் சொல்ல முடியாது. அந்த பங்களாக்களில் அவற்றுக்கே உரிய உலகம் இருந்தது. கொண்டாட்டங்கள், உல்லாசப் பயணங்கள் இருந்தன. விசே ஷமானதும் தந்திரமானதுமான பல நுட்பமான மற்றும் அவர்க ளுக்கே புரிந்த 'சில பகிடிகள்' இருந்தன. அங்குள்ள மக் களுக்கு புதிய அல்லது மினுமினுக்கும் பொருட்களில் ஒருவித ஒவ்வாமை இருந்தது. அந்த பங்களாக்களில் உள்ள குளிர்ச்சியான நீண்ட முன் மண்டபங்களில் பழைய மதிப் புள்ள தொல்பழம் பொருட்கள் போடப்பட்டிருந்தன. சற்று மங்கிப் போன வெல்வெற் துணி போட்ட மெத்தை இருக்கை கள் முதலானவை பல தலைமுறைகளாக சீர்குலையாமல் அப்படியே இருந்தன. அந்த பங்களாக்களில் குளிர்சாதனப் பெட்டிகள் சமையலறைகளில் அல்லது களஞ்சிய அறை களில் வைக்கப்பட்டிருந்தன. இசைக்கருவிகள் பக்கத்துச் சிற்றறைகளில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இங்கு வசிக் கும் ஆண்களும் பெண்களும் தூக்கமின்மையால் ஏற்பட்ட சோர்வுடன் நடந்தும் பேசியும் திரிவார்கள். அதையும் அவர் கள் இயல்பாகவே எடுத்துக் கொள்கிறார்கள். விசித்திரக் கதைகளில் வரும் ஆன்மாக்களின் எளிமையும் இளவரசர்கள் இளவரசிகளின் உலகமும் இங்கே காணப்படும்.

மனைவி சிறுமிக்கேயுரிய தன் குரலில் தன் தோழிகளிடம் பிப்போவை சனநாயக முறையில் சமமாக நடத்துகிறோம் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வாள். அது அழகானதொரு பரிசோதனை என்பாள். வேலையாட்களை மனிதாபிமான முறையில் நடத்தினால் உங்களுக்காக அவர்கள் எதுவும் செய்வார்கள் என்று சொல்வாள். என்னவாக இருந்தாலும் அவர்களும் உணர்ச்சிகளும் உயிரும் உள்ளவர்கள் தானே, இல்லையா? என்பாள்.

அவர்கள் சாப்பிடுவதையே பிப்போவும் சாப்பிட்டாள். வெண் ணெய், முட்டை, பழம், பால், பாலாடைக் கட்டி என்பன வற்றை. ஒவ்வொரு மாதமும் பழைய ஆடை ஒரு சோடியும், இரு வாரத்திற்கு ஒரு முறை வணிகப் பெயர் போட்ட நல்ல சவர்க்காரக் கட்டி ஒன்றும், அவ்வப்போது அரை போத்தல் ஷம்பூவும், ஒரு ரின் முகப்பவுடரும் கொடுத்தார்கள். 'அவற்றை அவள் என்ன செய்வாள் என்பது அவளைப் பொறுத்தது. அவளை நாங்கள் அழகாக மனிதாபிமான முறையில் நடத்துகிறோம். அவளுடன் நாங்கள் எசமானி - வேலையாள் என்ற முறையில் நடக்கவில்லை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் நடப்பது போலத்தான் நடக்கிறோம்.' ஏற்கனவே மென்மையான எசமானியின் குரல் இன்னும் மென்மையான குரலில் அவளை அழைப்பாள். 'பிப்போ, தய வுசெய்து இன்னும் இரண்டு கிளாஸ் எலுமிச்சைப்பழச்சாறு தருகிறாயா?' என்பாள். அப்பொழுது பிப்போ ராணி தன் உணர்ச்சியற்ற முகத்துடன் கைகளில் பாரமான வெள்ளித் தட்டுடன், கவர்ச்சியான றோபோ போல மெல்ல நடந்து வந்து, 'எலுமிச்சப் பழச்சாறு உப்புடனா அல்லது சீனியுடனா? என்று கேட்டாள். அவளுடைய பித்தளைக் குரல் அவளுடைய

உடம்பைப் போலவே அடிமட்ட மக்களின் குரல் போலவே ஒலித்தது. பண்பட்ட நயம் அதில் இருக்கவில்லை. எசமானி அவளிடம் மன்னிப்பு கேட்ட பின், விருந்தினரிடம் என்ன குடிக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டாள். அவள் தனிப்பட்ட முறையில் உப்பை விரும்பினாள். ஆனால் சீனி பிரச்சினை இல்லை! அவர்களுடைய ஆணை முறையாக நிறைவேற்றப் பட்டது. பிப்போ ராணி, பாவாடையிலுள்ள பழங்குடியினரின் மணிகள் ஓசை எழுப்ப அசைந்து அசைந்து உள்ளே சென்றாள்.

ஒரு கலையில் தேர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக பிப் போவை ஓர் ஒப்பனைக் கலைஞனிடம் பயிற்சி எடுப்பதற்காக அனுப்பியிருக்கிறார்கள் என்று அந்த நேரம் கணவனும் மனைவியும் தங்கள் நண்பர்களுக்குச் சொன்னார்கள். அவள் தட்டச்சு போன்ற வளர்ந்தோர்க்கான கல்வி பெற விரும்ப வில்லை என்றும் சொன்னார்கள். அவள் மிகச் சிறந்த முறையில் முக ஒப்பனை செய்கிறாள் என்று சொன்னார்கள். அவள் அப்படிச் செய்தால் முகம் பளிச்செனத் தோன்றும் என் றார்கள். 'அவள் எப்படி என் கைகளை சவரம் செய்திருக் கிறாள் என்று பாருங்கள்.' என்று சொல்லித் தன் வழுவழுப் பான அழகான கைகளை அவர்களுக்கு நீட்டிக் காட்டினாள்.

'அவள் பெண்களுக்கு மட்டுந்தானா முக ஒப்பனை செய்வாள்?'

'இல்லை, இல்லை!'

'பெண்களுக்கு மட்டுந்தானா ஒளிபொருந்திய முகம் இருக்கும் தனி உரிமை இருக்கிறது?'

'சரி, உங்களுக்கும் முக ஒப்பனை செய்ய விருப்பம் இருந் தால்...'

ஹா, ஹா, ஹா... பகிடிகள் விரசமாக இருந்தன. நீ முதலில், இல்லை, இல்லை, என்று இரட்டை அர்த்தம்பட பகிடிகள் விட்ட பின் பிப்போவை தொடர்ந்து தன்னிச்சையாக குலுங் கிக் குலுங்கிக் கொண்டு அவளுடைய சிறிய அறைக்கு ஒருத்தன் சென்றான். ஓர் அரை மணி நேரத்திற்குப் பின் வெளியே வந்தான். அவனுடைய முகம் சிவந்து ஒளிபொருந் தியதாக இருந்தது.

'உங்களுக்குத் தெரியுமா, அந்தத் தடிச்சிக்கு மந்திர சக்தி வாய்ந்த கைகள்!' என்றான்.

'அதுதான் என்னை உண்மையில் திகைக்க வைக்கிறது,' என்றாள் பொம்மை போன்ற மனைவி சிரித்துக் கொண்டே.

'அவள் வீட்டு வேலைகளை அலுங்கோலமாகச் செய்வாள். உண்மையில் எங்களுக்கொரு ஒரு சமையல்காரன் இல்லா விட்டால் இந்த வீட்டில் நாங்கள் சரியான உணவை உண்ண முடியாதிருந்திருக்கும். ஒரு கிழமையில் அவள் எத்தனை கிளாசுகளையும் கப்புகளையும் உடைப்பாள் என்று சொல்ல முடியாது. ஆனால் உண்மையில் அவள் முக ஒப்பனைக் கலையைத் துல்லியமாகமாகவும் சரியாகவும் செய்கிறாள்.'

'ஒவ்வொருவரும் ஒவ்வொரு கலையில் திறமை உள்ள வர்கள், ஹா, ஹா, ஹா.'

அதன் பின் அந்த வீட்டுக்கு சாதாரணமாக வருகிறவர்கள் சடுதியாக அதிகரித்தார்கள். அந்தப் பக்கத்தில் வசிக்கும் ஆண்கள் ஒன்பது முதல் ஐந்து மணிவரை வேலை செய்ப வர்கள் அல்ல. அவர்கள் வேலை செய்யும் நகரத்திலுள்ள அலுவலகங்களும் கட்டடங்களும் அவர்களுக்குச் சொந்த மானவை. கணவன் வீட்டுக்கு மதிய உணவுக்கு வரும்போது உணவு இன்னும் சமைத்து முடிந்திருக்காது. அதற்குள் வந்து விட்டாரே என்று மனைவி அடிக்கடி எரிச்சலுடன் முணுமு ணுப்பாள். அந்த நேரம் பிப்போ திரும்பவும் யாருக்காவது முக ஒப்பனை செய்து கொண்டிருப்பாள்.

அந்த நேரம் விசயங்கள் இக்கட்டானதாகப் போய்விட்டன. காரணம், வந்திருப்பவர்கள் அயலவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, விளிம்பிலுள்ளவர்களை சனநாயகப்படுத்தல் போன்ற அவர்கள் அளித்த அழகான உரைகளை எப்படி திரும்பப் பெற முடியும். பிப்போவைப் பார்த்துக் கத்தவா முடியும்? அல்லது அவளிடம் வரும் இந்த ஜனதா குடியிருப்பில் உள்ள மலிவானவர்களை பார்த்துக் கத்தவா முடியுமா? நல்லவர் களாக இருப்பதற்கு விலை கொடுக்க வேண்டி இருக்கிறது!

மறு பக்கம் பார்த்தால் பிப்போ தன் திறன்களில் மேலும் முன்னேறிக் கொண்டிருந்தாள். அவளுடைய பசிக்கு அளவு கணக்கில்லை. காலையில் ஆறு துண்டு பாணை இரண்டு பொரித்த முட்டையுடனும் ஒரு பெரிய கிளாஸ் நுரைக்கும் பாலுடனும் விழுங்கி விடுகிறாள். அதேநேரம் கணவனும் மனைவியும் மெலிவான முழுக் கோதுமை பாண் துண்டு களில், கொழுப்பற்ற மாஜரினைக் கொஞ்சம் பூசி சாப்பிட்டு கறுப்புக் கோப்பியை மெதுவாக அருந்துகிறார்கள். பிப்போ செய்வதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை மென்மையாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் இன்னும் மோசம் என்னவென்றால் இவர்கள் இப்படி மகிழ்ச்சியற்றுச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவள் அங்கே வந்து தன் இடுப்பை ஒரு பக்கம் திருப்பிய பின் நேற்றிரவு வைத்த உணவின் மீதியை தான் உண்பதாகப் பிரகடனப்படுத் துவாள். அவள் நாள் முழுவதும் சாப்பிட்டாள். குடித்தாள். அதனால் இப்போது எசமானியின் தேநீருக்கு பால் விடுவ தற்கு பால் அதிகம் இருக்காது.

பழங்கள் சில மணி நேரத்தில் முடிந்து விடுகின்றன. ஜாம் போத்தில்கள் சிறிது நேரத்திலேயே காலியாகி விடுகின்றன. ஊறுகாய் சாதாரணமாக முடிந்து விடுகின்றது. வீட்டுக்கா ரரின் மனைவியின் தாய் ஊரிலிருந்து மகளுக்கு பைகளில் உலர் பழங்கள் அனுப்புவாள். அவளுக்கு அது கிடைக்கும் போது அதில் பாதி அளவு குறைந்து போயிருக்கும். ஓர் எலு மிச்சம் பழத்தின் நிறம் மாறும்போது மற்ற எலுமிச்சம் பழங் களின் நிறமும் மாறி விடும் என்று சொல்வார்கள். இப் பொழுது சமையல்காரனின் பசியும் அதிகரித்துவிட்டது. மரபி சையைக் கேட்டுக் கொண்டு வீட்டுக்காரி தன் மெத்தையில் தன் அறையில் படுத்திருக்கும்போது சமையல்காரனும் பிப் போவும் நொறுக்குத் தீனி சாப்பிட்டுக்கொண்டே எசமானியின் இறக்குமதி செய்யப்பட்ட றான்சிஸ்ரரை உரக்கப் போட்டு

விட்டுப் பெரிதாகச் சிரிப்பார்கள்.

‘அன்பே, இவை அவர்களின் ஆதிகால உணர்வுகளைப் பிர திபலிப்பவை,’ என்று நண்பர்களிடையே இருக்கும்போது கணவன் அவளுக்குத் தேறுதல் சொல்லுவான். ‘இவர்களால் தங்களின் மிருகத்தனமான தூண்டுதல்களை கட்டுப்படுத்த முடியாது. பறவைகளைப் போல, தேனீக்களைப் போல அவர்களை உல்லாசமாக இருக்க விடு. அப்போ இரவுணவு நன்றாக இருக்கும், ஹா, ஹா, ஹா.’

‘இருந்து பாருங்கள், நல்லா இருக்கும்,’ மனைவி கோபத் துடன் சொல்லுவாள். ‘அவர்கள் இன்னும் என்னுடைய நல்ல கிளாசுகளை உடைத்து விடுவார்கள், இருந்து பாருங்கள்.’ அவளுடைய பொறுமை இப்பொழுது முற்றாக மறைந்து விட்டது.

‘ஒவ்வொரு நாளும் எனக்கு எட்டு மணிக்கு முதலாவது கப் கோப்பி கட்டிலில் கிடக்கும்போதே வேணும் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு ஒன்பது மணிவரை அவள் அதைக் கொண்டு வந்து தரவில்லை. நான் ஒன்பது மணிக்குப் போய் என்ன நடந்தது என்று விசாரித் தபோது அவள் நித்திரை கொள்ளுகிறாள் என்று சமையல் காரன் சொன்னான். சமையல்காரன்! எல்லாரும்... அவளைப் பற்றி அப்படிச் சொல்கிறார்கள்! அவளைப் பற்றி! எனக்கு!’ மேலெழுந்து வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

‘அப்போ நீ என்ன செய்தாய்?’ என்று கேட்டாள் அங்கே வந்தி ருந்த ஒரு சிநேகிதி. அவளுடைய கணவன் இந்த நாட்களில் பிப்போவிடம் பலமுறை முக ஒப்பனை செய்து கொள்கிறான்.

‘நான் கோபத்தால் கொதித்துப் போய், அவனைப் பேசினேன். இப்படித்தானா நீ உன் எசமானியிடம் கதைப்பாய்?’ என்றேன். அப்பொழுது நான் என்ன கண்டேன் தெரியுமா? அப்பொழுது அந்தப் பெரிய ராணி கண்களைக் கசக்கிக் கொண்டு வந்து அப்பாவித்தனமாக, ‘அம்மா, இப்போ நேரம் என்ன?’ என்று கேட்டாள். எனக்குப் பயங்கரக் கோபம். நான் அவ்விடத்தை விட்டு சடுதியாக அகன்று விட்டேன்.’

‘நான் சொல்லுவதைக் கேள், மகளே. இந்த விஷமிகளை வீட்டை விட்டு அனுப்பி விடு.’

‘நானும் அப்படித்தான் நினைக்கிறேன். அவளுக்குப் பதிலாக வேறொருத்தியை எங்கே தேடுவது? வேலைக்காரிகளை கண்டுபிடிப்பது கஷ்டம்.’

‘அது உண்மை.’

அப்படி கோடை காலம் சென்றது. குளிர் காலம் வந்தது. பிப்போவின் திடமான உடம்புக்குக் கம்பளிச் சால்வைகள் தேவைப் படவில்லை. ஆனால் அவளுடைய எசமானி காஷ்மீரி கம்பளியில் நெய்யப்பட்ட பாஷ்மினா சால்வையை அணிந்து கணப்புக்கு அருகில் இருந்து கொண்டிருந்தாள். இருந்தும் அவள் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தாள். பிப்போ நடுங்கவில்லை. அவள் எசமானிக்குப் பக்கத்தில் உணர்ச்சிகளை வெளிக்காட்டாத வேகவைத்த முட்டையின் முகத்துடன், சீனப் பொம்மை போன்ற கை கால்களைக் காட்டிக் கொண்டு இருந்தாள். களிம்பு பூசிய மயிர் மழித்த கைகள், கரும்புள்ளிகள் நீக்கப்பட்ட முகம். மேல் கன்னத்தை பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள். புருவ முடிகளையும் மேல் இதழ் மயிர்களையும் பிடுங்கி இருந்தாள். பருவ காலங்கள் எதுவும் பிப்போவைப் பாதிக்கவில்லை. அவளுடைய உடம்பு தன் தாராளமான வளைவுகளுடன் தெளிவான தாளங்களுடன் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. அவளுடைய நீண்ட பின்னலில் கட்டிய வண்ணமயமான பாட்டியாலா குஞ்சம் அவளுடைய கடினமான பின்பக்கத்தில் மெதுவாக மேலும் கீழும் ஆடிக் கொண்டிருந்தது.

‘வாசிப்பதை நிறுத்தி விட்டு தையல் மற்றும் நெசவு வேலை யைக் கற்றுக் கொள்ளச் சொல்லி அவளை வற்புறுத்திக் கொண்டே இருக்கிறேன்,’ என்று எசமானி சிநேகிதிகளுக்குச் சொல்லிக் கொண்டு றொத்மன் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தாள். அவள் பழைய கால விலை மதிப்புள்ள ஜமாவார் சால்வையில் செய்யப்பட்ட நீளமான காஷ்மீர் காஃப்டான் ஒன்றை அணிந்து கொண்டிருந்தாள்.

‘அவளுக்கு யார் கற்பிப்பது?’ என்று ஒருத்தி கேட்டாள். அவர்கள் எவருக்கும் அப்படியான கைவினைகளான பூத் தையலோ, பின்னலோ, சமையலோ செய்யத் தெரியாது. சரி, அவர்களுக்குத்தான் எதற்கு? அவை எல்லாவற்றையும் பயிற்சி பெற்றவர்கள் செய்து கொடுத்த கடைகளில் பெற லாமே? பணக்காரர்களே தங்களுக்கான சமையலைச் சமைக்க, உடுப்புகளைத் தைக்க வெளிக்கிட்டால் அந்தக் கடைக்காரர்கள் என்ன செய்வார்கள்? அந்த நாள் வரு வதைக் கடவுள் தடுக்கட்டும்! அப்படியானால் இந்த அழகான தையல் கடைகளுக்கு என்ன நடக்கும்?’

நகரத்திலுள்ள கீழ் நடுத்தர வர்க்க குடும்பத்திலுள்ளவர்கள் தங்கள் மணமாகாத மகள்மாரை வீட்டில் இருக்கப் பிடிக்காத மருமகள்மாருடன் அனுப்பும் ஓர் இடத்தை வீட்டு எசமானியே சொன்னார். சாரதி தான் வீட்டுக்குப் போகும்போது காரில் அவளை அழைத்துச் சென்று வகுப்பில் விடுவான். அவள் திரும்பி பஸ்ஸில் வருவாள். அது மட்டுந்தான் செய்ய வேண்டியது. ‘அவள் இருக்கும் நிலையில் அவள் மனநிலை யில் அவளுக்குத் தேவை இடைக்கிடை கொஞ்ச ஊக்கம் தான்.’ மனைவியின் பொம்மைக் கைகள் பட்டாம்பூச்சியைப் போல அசைந்து கொண்டிருந்தன. ‘அப்படி இல்லாவிட்டால், எங்கள் சிறு நகரங்க ளிலுள்ளவர்களின் சராசரி இந்திய பாலியல் உந்தல் மொத்தமாக அடக்கப்பட்டு விடும். அவர்கள் பாலின்பத்தைத் தவிர வேறெதையும் சிந்திக்க மாட் டார்கள்.’ அதன் பிறகு அவர்கள் தூய ஆங்கிலத்தில் கொஞ்ச நேரம் சராசரி இந்தியர்களைப் பற்றியும் பாலியல் பற்றிய அவர்களின் மனப்பாங்கு பற்றியும் கதைத்தார்கள். அவர்கள் அப்படியான குறிப்பிடத்தக்க விவாதங்களையும் ஒளிவு மறைவற்ற அர்த்தமுள்ள கலந்துரையாடல்களையும் நடத்துவார்கள். ஆனால் பிப்போவின் மனநிலை பற்றியோ சராசரி வேலைக்காரிகளின் மனநிலை பற்றியோ கதைக்க மாட்டார்கள். அவளுக்குத் தங்கள் தீர்மானத்தைச் சொன்ன போது அவள் அதற்கு தன் கிளர்ச்சியற்ற, தெளிவற்ற முறையில் முற்றாகவே மறுத்துவிட்டாள்.

‘முடியாது, அம்மா.’

‘ஆனால் உன்னுடைய உடைகளை நீயே தைக்க முடியும், அல்லவா,’ என்று அவர்கள் அதைத் தொடர்ந்து வலியுறுத்தி னார்கள்.

‘என்னிடம் பல உடைகள் ஏற்கெனவே இருக்கின்றன. தயார் செய்யப்பட்ட நிலையில் உங்களிடம் இருந்து எளிதில் அவை கிடைக்கின்றனவே, அம்மா.’

‘தேவையானபோது அவற்றின் ஓட்டைகளைத் தைக்கலாம். மூட்டுப் போடலாம், அல்லவா?’

‘அப்போ ஏன் தையல்காரர்கள் இருக்கிறார்கள், அம்மா?’ என்று சொல்லி விட்டு ஒரு கள்ளச் சிரிப்புச் சிரித்தாள்.

‘உனக்கு நாங்கள் ஒரு புதிய தையல் மெசின் வாங்கித் தருகிறோம். அதன் பெயர் என்ன, அன்பே? நாங்கள் குடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அந்த இந்தியா மாதிரி? அப் போது உனக்கே தைப்பதில் இன்பம் வரும்.’

‘அதில் என்ன பிரயோசனம், அம்மா? பிப்போ விவாதத்தை முடித்துக் கொண்டது போல தன் அகலமான முதுகைத் திருப்பிக் கொண்டு, முள்ளங்கியைக் குழாயில் கழுவ ஆரம் பித்தாள். அத்துடன் அவர்களின் பெருந்திட்டம் உடைந்து போனது.

‘அப்படி இல்லாவிட்டால் உன் நேரத்தை எப்படிச் செலவழிக் கப் போகிறாய்? பின் மதியத்தில் என்ன செய்யப் போகிறாய்?’

‘நான் நித்திரை கொள்வேன், அம்மா,’ என்று சொல்லி விட்டு சமையல்காரனைப் பார்த்து உரக்கச் சிரித்தாள்.

பிப்போ இப்போது ஒரு தலையிடியாகப் போனாள். அவள் காலையில் நேரம் சென்று எழும்பினாள். நன்றாகச் சாப் பிட்டாள். இடைக்கிடை நொறுக்குத் தீனிகள் கொறித்தாள். ஒரு முறையோ இரண்டு முறையோ எசமானியின் ஷம்பூ வையும் முகப்பொடியையும் திருடினாள். அதைக் கண்டு பிடித்தபோது அவள் வெட்கப்படவே இல்லை. அவளுடைய துணிச்சல் கூடிக் கொண்டே சென்றது. வீட்டுக்காரரின் நண்பர் ஒருவர் ஒருமுறை முக ஒப்பனை செய்ய அவளிடம் கேட்ட போது, முதலில் அவரை மேலும் கீழும் பார்த்து விட்டு, தன் மோவாயால் தன் அறைக்கு வா என்று சைகை செய்தாள். அவள் தன் கவர்ச்சியான இடுப்பைக் காட்டிக் கொண்டு வளைந்து வளைந்து அவன் வருகிறானா இல்லையா என்று திரும்பி பார்க்காமல் முன்னால் போய் கொண்டிருந்தாள். பல நேரம் அவர்கள் பின் தொடர்ந்தார்கள். அதுவல்ல பிரச்சினை.

ஒருநாள் பிப்போவின் அப்பாவிடம் இருந்து அவர்களுக் கொரு கடிதம் வந்தது. அதை அவருக்காக குடும்பத்தில் எழுத வாசிக்க தெரிந்த வேறொருவர் எழுதியிருந்தார். அதில் பிப்போவுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்திருப்பதாக எழுதியி ருந்தனர். அவன் இராணுவத்தில் கடமை புரிகின்றான். பார்ப் பதற்கு அழகாகவும் இருக்கிறான். அத்துடன் பிப்போவின் இளைய சகோதரி குக்கு பிப்போவின் இடத்தை நிரப்புவதற்கு ஆசைப்படுகிறாள் என்றும் அதில் எழுதியிருந்தார்கள். அப் படி அவளை எசமானனும் எசமானியும் விரும்பும் பட்சத்தில் உங்கள் கடிதம் கிடைத்தவுடனே அவளை அடுத்த புகை யிரத்திலேயே அங்கே அனுப்பிவிடக் காத்திருக்கிறோம் என்று எழுதியிருந்தார்கள்.

‘குக்குவோ புக்குவோ எவரும் வேண்டாம், இவளை அங்கே அனுப்பிவிடுங்கள். இது நல்லதொரு சாட்டு அவளை அனுப்பு வதற்கு,’ ஒரு தோடம்பழத்தைச் சாப்பிட்டுக்கொண்டே மனைவி சொன்னாள். பிப்போ அப்போது வெளியே உடுப்பு களைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவ ளைச் சுற்றி அடுத்த டுத்த வீட்டு வேலைக்காரிகள் வேலி களில் விட்டில் பூச்சி களைப் போல மொய்த்துக் கொண்டிருந்தார்கள்.

‘அப்படியானால் உனக்கு யார் பணிவிடை செய்வார்கள்?’ மனைவியின் மெலிந்த நொய்ம்மையான உருவத்தை அன்பா கவும் அக்கறையுடன் பார்த்து கணவன் கேட்டான்.

‘நான் உள்ளூரிலேயே ஒரு பெண்ணைப் பார்த்து எடுத்துக் கொள்வேன். அவளுக்கு நான் இரண்டு மடங்கு சம்பளம் கொடுத்தாலும் அதில் நான் சந்தோசப்படுவேன். அவளை உடனே அனுப்பிவிடுங்கள். அல்லது அவள் சமையல்கா ரனுடன் ஒருநாள் ஓடிப் போய் விடுவாள். அது பெரிய பிரச்சி னையாகி விடும்.’

‘அது உண்மை,’ என்றான் கணவன், முன்னாலோசனையுடன்.

ஒருநாள் பிப்போவின் உடைமைகள் எல்லாவற்றையும் இரண்டு றங்குப் பெட்டிகளில் அடைத்து நிரப்பினார்கள். மெத்தையை உருட்டிக் கட்டினார்கள். ஒரு மணி நேரம், வாழ்க்கை, திருமணம், திருமணத்தால் வரும் விடுதலை என்று பலவற்றையும் எசமானி பிப்போவுக்கு எடுத்துரைத் தாள். அவற்றை எல்லாம் பிப்போ வந்த கொட்டாவிகளை அடக்கிக் கொண்டு தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள். ஓம் மா, ஓம் மா,’ என்று சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தாள். எசமானி சொல்வதெல்லாவற்றுக்கும் அவளுடைய வருங்கால இராணுவ வீரனுக்கும் தொடர்பிருக்கிறது? என்று நினைத் தாள். கடைசியில், அவள் எசமானிக்கோ மற்றவர்களுக்கோ நன்றி சொல்லவில்லை. அதேபோல எந்தவித மகிழ்ச் சியையோ கவலையையோ காட்டிக் கொள்ளவும் இல்லை. அவர்களை விட்டுப் போனபோது அவள் அக்கம்பக்கத்தினர் எல்லோருக்கும் விசித்திரமானதொரு சிரிப்பை உதிர்த்து விட்டு காரில் ஏறிச் சென்றாள் என்று சிலர் சொன்னார்கள். ஆனால் அது அவர்களுடைய கற்பனையாக இருக்கலாம்.

அதன் பின் சில நாட்கள் அவர்கள் பிப்போவைப் பற்றிக் கதைத்தபோது அவளைப் பற்றி பகிடி பண்ணி சிரித்தார்கள். அதன் பின் வெகு கெதியில் அவளை மறந்து போனார்கள்.



mahalingam.k@thaiveedu.com



தொல்காப்பிய மன்றம் - கனடா
Association for Tolkappiyam - Canada
www.tolkappiyam.ca
2 ஆவது
உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு
கனடா 2026
நாள்: செப்டம்பர், 2026
(தேதி பின்னர் அறிவிக்கப்படும்)
இடம்: ஸ்கார்புரோ, டொரோண்டோ, கனடா.
மாநாட்டிற்கான நோக்கம்
தொல்காப்பியத்தின் பெருமையைத் தமிழினத்தோடு பிற சமூகத்தினரும் அறியும்படிச் செய்தல்.
தொல்காப்பியத்தின் அனைத்துச் சிறப்புகளையும் ஒருங்கே தொகுத்தல்.
இளைஞர்கள் மத்தியில் "தொல்காப்பியத்தை நாம் ஏன் கற்க வேண்டும்" என்று எழும் வினாவிற்குப் பரந்த விளக்கம் கொடுத்தல்.
தொல்காப்பியத்தைக் கற்க-கற்பிக்க, கொண்டாட-பரவலாக்கம் செய்வதற்கான காரணங்களை முழுமையாகத் தொகுத்தல்.
தொல்காப்பியத்தையும் உலகளாவியத் தொல்காப்பிய ஆய்வறிஞர்களையும் ஆய்வுகளையும் இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துதல்.
Supporting Partners
east FM 102.7
தாய்வீடு

மாநாட்டுக் கருப்பொருள்

# தொல்காப்பியத்தை நாம் ஏன் கற்க-கற்பிக்க, கொண்டாட-பரவலாக்க வேண்டும்?

| | |
|---|---|
| 1. | அகராதியியலுக்காக |
| 2. | அரசியலுக்காக |
| 3. | அறத்துக்காக |
| 4. | அறிவியலுக்காக |
| 5. | இசைக்காக |
| 6. | இலக்கண அறிவுக்காக |
| 7. | இலக்கியங்கள் படைப்பதற்காக |
| 8. | இலக்கியப் புரிதலுக்காக |
| 9. | உயிரினங்களுக்காக |
| 10. | உளவியலுக்காக |
| 11. | கட்டமைப்புக்காக |
| 12. | கலைக்காக |
| 13. | கோட்பாடுகளுக்காக |
| 14. | சமய, தத்துவ மரபுகளுக்காக |
| 15. | சமூகவியலுக்காக |
| 16. | சூழலியலுக்காக |
| 17. | தமிழ்-தமிழர் அடையாளத்திற்காக |
| 18. | தகவல் களஞ்சியத்திற்காக |
| 19. | தாவரவியலுக்காக |
| 20. | தொல்காப்பியரின் புலமைக்காக |
| 21. | தொன்மைக்காக |
| 22. | நாடகத்திற்காக |
| 23. | படைப்பிலக்கியத்திற்காக |
| 24. | பண்பாட்டுக்காக |
| 25. | புழங்குபொருள்களுக்காக |
| 26. | மானிடவியலுக்காக |
| 27. | மெய்யியலுக்காக |
| 28. | மொழி வளர்ச்சிக்காக |
| 29. | மொழிக் கற்பித்தலுக்காக |
| 30. | மொழியியலுக்காக |
| 31. | வரலாற்றுக்காக |
| 32. | வாழ்வியலுக்காக (அகம், புறம்) |
| 33. | மரபுக்காக (நம்பிக்கை, பழக்கவழக்கம், உணவு பிற) |
| அன்ன பிற... | |

கருப்பொருள் வினாவுக்கு (4 செயல்களுக்கு: கற்க-கற்பிக்க, கொண்டாட-பரவலாக்க) விடையளிக்கும் வகையில் மேற்சுட்டிய 33 தலைப்புகளைப் போன்று ஏதாவது ஒன்றில் தொல்காப்பியத்தின் சிறப்புகளை உரிய சான்றுகளுடன் ஆய்வுக் கட்டுரை வடிவில் அதற்குரிய தரத்தில் எழுதப்படுதல் வேண்டும்.

மாநாட்டுக் கருப்பொருள் தொடர்புடைய கட்டுரைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தொல்காப்பியம் குறித்துப் பொதுநிலையில் எழுதப்படும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

<u>பதிவுக் கட்டணம்</u>
எந்தக் கட்டணமும் இல்லை.

<u>ஆய்வுச் சுருக்கம்</u>
2 பக்கங்களுக்குள்.

<u>ஆய்வுக் கட்டுரை</u>
10-15 பக்கங்களுக்குள்.

<u>பக்கக் கட்டமைப்பும் கோப்பும்</u>
1.5 வரி இடைவெளி, 12 எழுத்துரு அளவு, தட்டச்சு ஒருங்குறி (Unicode), வோர்டு (Word) கோப்பு (File), நான்கு பக்கமும் Margin 1" கட்டுரையாளரின் பெயரும் சுருக்கமான தலைப்பும் கோப்பின் பெயராக இருக்க வேண்டும்.

ஆய்வுச் சுருக்கங்கள் அனுப்பக் கடைசிநாள்
**01-03-2026**

ஆய்வுச் சுருக்கம் தெரிவுசெய்யப்பட்ட முடிவு வெளியாகும் நாள்
**01-04-2026**

முழுக் கட்டுரை அனுப்பக் கடைசிநாள்
**01-06-2026**

முழுக் கட்டுரை தெரிவுசெய்யப்பட்ட முடிவு வெளியாகும் நாள்
**01-07-2026**

கட்டுரைச் சுருக்கம் மற்றும் முழுக் கட்டுரையைப் பின்வரும் இணைப்பு (Google form) அல்லது விரைவுத் துலங்கல் குறியீடு (QR) மூலம் மட்டுமே பதிவுசெய்து சமர்ப்பிக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் கூடாது.

https://forms.gle/QN63VR5v2KJAH5VA9

மேலும் விவரங்களுக்கு

**தலைவர்**
**+1 (647) 881-3613**

**செயலாளர்**
**+1 (647) 850-0152**

**ஒருங்கிணைப்பாளர்**
**+1 (437) 979-3006**

**conference@tolkappiyam.ca**


வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS
சமூக உளவளம் பேணும் தொடர் - 107
Psychosocial Educational Series-107
VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE
5 January 2026 (Monday)
Canada EST: 7:00pm - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)
Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588
மரபுத் திங்கள் நிகழ்ச்சிகள்
Heritage Month Programs
திருமந்திரம் கூறும் நல்வாழ்வுக்கான
மூச்சுப் பயிற்சிகள்
Dr. Sundar Balasubramanian
Cell Biology Researcher, Founder of
PranaScience Institute
Veena:
From Bridging Futures Canada Society (BFCS)
Cashvi Manivannan
HBSc Candidate, TMU),
BFCS Music Youth Lead
ஒவ்வொரு முதலாம் மூன்றாம்
திங்கட்கிழமைகளில்
எங்களுடைய சூம் தொடரில்
இணைந்துகொள்ளுங்கள்
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Hosted by
Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

## தாய்வீடு இதழ் இலங்கையில் கிடைக்குமிடங்கள்...

### மட்டக்களப்பில்...

பிரசாத் சொக்கலிங்கம்
ஆரையம்பதி
71 648 6666

வி. மைக்கல் கொலின்
மட்டக்களப்பு
77 433 8878

ஜிப்ரி ஹாசன்
ஓட்டமாவடி
76 973 5350

பாத்திமா புத்தக நிலையம்
ஏறாவூர்
77 080 7787

### அம்பாறையில்...

எம். ஐ. முஹம்மட் சாக்கீர்
சம்மாந்துறை
77 160 7490

நிரோஜன் சதாசிவம்
தம்பிலுவில்
77 785 0825

பேஜஸ் புத்தக நிலையம்
அக்கரைப்பற்று
74 239 7395

### யாழ்ப்பாணத்தில்...

எஸ். சத்தியதேவன்
யாழ்ப்பாணம்
77 729 4287

சஜீலன்
மல்லாகம்
77 669 8386

தானா விஷ்ணு
இமையாணன், வடமராட்சி
74 007 3200

புக் லாப்
சேர். பொன். இராமநாதன் வீதி
(யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு எதிரில்)
யாழ்ப்பாணம்
77 128 5749

எங்கட புத்தகங்கள்
18/2, திருவடி நிழல்
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
77 378 8795

குயின்சி புக் சொப்
271, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
77 226 8486

### கொழும்பில்...

மல்லியப்புசந்தி திலகர்
கொழும்பு
71 120 8061

### மலையகத்தில்...

அருணாசலம் லெட்சுமணன்
நாவலப்பிட்டி
77 165 4372

அருள்கார்க்கி
பண்டாரவளை
77 519 4817

### கிளிநொச்சியில்...

சிந்தனா ஓட்டோ பாட்ஸ்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
76 459 1459

கிளி மக்கள் அமைப்பு
கிளிநொச்சி
77 134 3832

### அஞ்சலில் பெறுவதற்கு...

பிரசாத் சொக்கலிங்கம்
71 648 6666

எஸ். சத்தியதேவன்
77 729 4287




உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com


Lower rates.
Exceptional service.
Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.
Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.
Senthooran Punithavel
Phone: 416-396-0707
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca
We've Moved
Our New Address
10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3
குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்
வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்
வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்
உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்
24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்
Home Auto Life Investments
Group Business Farm Travel
the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

**CSC Credit Solution Centre**
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
















HOMELIFE
GRAND MASTER CLUB

Chairman's Club Award Winner 2015

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

Chairman's Club Award Winner 2017

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8





STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272




- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion Lotion Capilar
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8




உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9853
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

